ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

ஆதாரசுருதி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், நேச் சரித்திரங்கள்,
ஐரோப்பிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள்
இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனுசாரம், இலௌகிக
வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின்
ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதனே
அல்லாமல் வேறொன் றறியேன்பராபரமே. தாயுமானவர்.

நம்பர் 1.	கலியுகாப்தஞ 5020. காளயுக்தினஞ புரட்டாசிமீ. கொல்லமாண்டு 1094, கன்னிமீ. கி. பி. 1918-ஞ செப்டம்பர்மீ.	மலர் 1.

காப்பு.

ஆனமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலத்தான்
ஞானகுரு வாணியுடன் நாயி. ஸ்ரீ முருகொழி.

சாக்ருண்டாம் கல்ல மனமுண்டாம் மாமலரான்
மோக்ருண்டாம் மேனி. தடங்காத—பூக்கொண்டு
தப்பாச் திருமேனித் தம்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு. ஔவையார்.

தோங்கு மெங்கள். திருஞ் சோகநர்த் தெய்வமெனப்
பேரோங்குஞ் சங்கர ராமேசர் தேவிபா சம்பிரியான்
கோரோங்கு மைந்தன் முகன்கார்த்தி கேய னிமலனெங்கோன்
கூரோங்கும் வேலுண் டெமக்கொரு நாளுங் குறைவில்லையே. ழ. கூ.

பெருந்திரு வஞ்சய மங்கையு மாயியென் பேதைநெஞ்சில்
இருந்தரு ளுஞ்செஞ்சொல் வஞ்சிஎப்போற்றினேல் வரவுயிர்ச்
சாருந்திய ஞானந் தருமின்ப மேசப் பொருளுந்தரும் [ரும்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே. கம்பர்.

சுந்தரப்பொன் தந்திமுகன் சோதிவைவேற் கந்தனெந்தி
சந்ததமென் சிந்தையுறை சாரதையும்—மும்மிச்
சதாவருவிச் சின்றவருள் தண்மை மழையே.
சதாவருவி ணிக்குற்ற காப்பு. [illegible]

16291

கடவுள் துணை.

கதாவருவினி.

முகவுரை.

பூந்தமிழ், நறுந்தமிழ், அமிழ்தத்தமிழ், இசைத்தமிழ், நுண்மைமிழ், என்றவாறு குறிக்கப்பெற்று மேம்பலன்களுக்கும் அற்புதமான இனிமையே பயக்குந் தன்மையதாய், அரிய சிறப்பெனவாகிய ஆராய்ச்சிகளால் அடையலாகும் கனிப்பெரும் பயனுகிய, வீடு எனவும் முத்தி எனவும் கிர்வாண நிலை எனவும் பேரின்பநிலை எனவும் கூறப்படுகிற ஒற்றுஉன்னதநிலைக்குஅதிஉத்தமமான சோபானராதனங்கள் அமைந்துள்ள தமிழ் மொழி, அத்தமிழ்மொழி யுலைந் தமிழகம், மும் அன்பு, அறம், ஆற்றல், அழகு, உறுதி, ஊக்கம், புனிதம் புகழ், செழுமை, செல்வம் என்பனவாகிய தமிழ் மயமான மனங்கள், யாவும் நினைநினை தோறும் இடமான அபிவிர்த்தியுற்று, முன்னேசிகரத்தில் தக்க மகோன்னத பதவிபெற்று ஒளிர்வதற்கு தெய்வத் திருவருள் சேர்க்கமே உற்றதாடி விசேஷித்து வியாபித்திருக்கிறதென்பது நமது அகத்தில் நன்கு பதிந்துள்ள நம்பிக்கை. அத்தெய்வத் திருவருளாலாய் இதப்பெருக்கத்தில் ஒரு சிறு துளியே, பழையதோர் தமிழ்த்துறையாகிய தூக்குத்தமிழில் "கதாவருவினி" என்ற மாதப் பத்திரிகையாகப் பிறந்திருக்கிறதென்பதும் நமது துணிபு. பெருங்கதைகள், கற்பனைக் கதைகள், நேர சரித்திரங்கள், நீதிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள், நிலவரர் மூலமாக, சன்மார்க்கம், ஞானாரம், நிலவரகளது சரித்திரங்கள், தமிழ்க்கலை, முதலியவற்றின் ஆராய்ச்சிகளையும் அறிவித்தலையும் அடங்கும் ஒரு மாதப்பத்திரிகை என்று, இதன் மேற்புறத்திலேயே, இதன் நோக்கங்கள் தொகுத்துக் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சற்று விரித்து விளக்குவோமாக:—

எல்லிகமான எற்றமும் இன்பமும் எப்பிறவும், எல்லிகமான இன்னல்கள் ஏதிலும், கடவுளிடம் உறுதியான நம்பிக்கையும் உருக்கமான பக்தியுஞ்சொன்னி, சத்தியம், தயை, சாந்தம்,

மை, பரகதி நோக்கு முதலிய பண்பல நற்குண நல்லொழுக்கங்களை உயிரினும் இனியனவாய்ப் போற்றிப் பற்றி, நீதிநெறிகளும், நீக்குணங்களும் சற்றும் அணுகவொட்டாத சுபாவமுற்று நற்கருமமுயற்சியிலேயே இருந்தொழுகும் வாழ்க்கையின் மேன்மையைத் துலக்கமாகக் காட்டி, குழந்தைகளுக்குத் தித்திப்புப் பதணங்களில் அவா எழுதல்போல, மெய்க்காதலிக்குத் தன் காதலன்பாற் காதல் பெருகுவதுபோல, மகான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ சுவாமிகள் மொழிந்தருளியபடி தண்ணீரில் அமிழ்க்கப் பெற்றவன் திணறித்திணறி, நீவிரபாசு, சுவாசிக்கக் காற்றை மிருப்புதல்போல, தமிழக மக்கட்கு முற்கூறிய உயரிய சுக வாழ்க்கையில் ஆசையுண்டாகி வளரச்செய்வது நமது வருவினியின் ஆசை.

காலத்திற்குக் காலம் மேருமும் பெரும் பெரும் நிகழ்ச்சிகளுக்கும் பலவகைப்பட்ட சுற்றர்ப்பங்களுக்கும் இயைந்தவாறு ஒரு சமூகத்து ஆசாரங்கள், கொள்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியன மாறுவது இயல்பு. அம்மாற்றமே சீர்திருத்தம் என வழங்கப் படுகிறது. நீதசுகமாகிய பலவகைச் சௌகரியங்கள் அமைத்துக் கொள்வதற்கு மாரிகாலம் பனிக்காலம் வேனிற்காலம் ஆகிய வருஷப் பருவங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறுபட்ட முறைகளை அநுசரிப்பதுபோல், கால வர்த்தமானங்களுக்குத் தக்கதாகச் சமூகத்திற்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளுதல் அத்தியாவசியகம். அல்லியேல், எரிகட்சத்திரங்களைப் போல, சமூகவாழ்க்கையின் சீர் நிலைதவறும். ஆனால் காகமுடையான் தண்ணீர் வேட்கையுறுதல்போல, சமூகத்திற்கு அவசியமாக வேண்டிய சீர்திருத்தங்களுக்கு அச்சமூகம் இயற்கையாகவே வேட்கை யுறுமாகையால் அவற்றை அகற்ற முயல்வது காலயில் குரியோதயத்தைத் தடுக்க முயற்சிப்பதையே பெரும் பாலும் ஒக்கும் என்னலாம்.

இப்பொழுது நமது தமிழ்ச் சமூகம் ஓர் மகத்தான சீர்திருத்தத் திசையினிருக்கிறது. நெடுங்காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கும் சமூகக்கட்டுகள், சடங்குகள், சமூகத்தில் பெண்கள் நிலைமை அவர்கள் உரிமைகள் கடமைகள், இவைகளில்

ஆலயத்துக் கோபுரம் எம்மை யழைப்பது போன்று தோன்றியது. உள் டியிலிருந்த யாவரும் அதனை வணங்கினர். நானும் வில்வனை கல்லூர் சமீபித்தது என்னுங் குதூகலங் கொண்டவளாக இருமடங்கு ஆர்வத்துடன் வணங்கி என் பிரார்த்தனையைச் செலுத்தினேன். இதற்குள் வில்வனை கல்லூர் 'ஸ்டேஷனும்' சமீபித்தது.

வில்வனை கல்லூரில் கோடையில் கல்லமழை. இரண்டு நாளாகக் கோடையிடி இடித்து, வெள்ளமாக மழை பெய்ததாம். இடிவிழுந்தது என்றுகூடச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது ஐயோ பொய்யோ, 'ஸ்டேஷன்' மேடையிலிருந்த பூவரசு மரம் ஒன்று கரிந்து கிடந்தது.

தரையெல்லாம் சேறு. சேவகன் ஒருவன் என்பெட்டியை எடுக்கவந் தான். நானே வாலிபச் செருக்குடன் வேண்டாமென்று சொல்லி நானே அப்பெட்டியை எடுக்க முயன்றேன்.

பெட்டியோ மிகவும் பளுவானது. அதை எடுக்க முயன்றதில் என் தலையிற் கட்டியிருந்த பேட்டா நழுவிக் கீழே சேற்றில் விழுந்து அலங்கோல மாயிற்று. நானும் கால் வழுக்கிக் கீழ்விழ வேண்டியவன் பெட்டியைப் பிடித்துச் சமாளித்துக் கொண்டு, மெள்ள, கீழ் வீழ்ந்த துப்பட்டாவைத் துடைத்துக் கொண்டே, பெட்டியைச் சேவகனைத் தூக்கி வரும்படி பணித்து என் வழி நடந்தேன். இதற்குள் கட கட வென்று என்னே எளனம் புரிந்த வண்ணமாக நகைசெய்த சப்த மொன்று புண்ணுலாம் பெரும் புழையிற் கனல் துழைந்தாலென என் செவியிற் புருந்தது.

நான் லஜ்ஜையுற்ற வண்ணமே திரும்பிப் பார்த்தேன். சுந்தரியைக் கண்டேன்.

"அடடா! சரிகைத் துப்பட்டா வீணாய் விட்டதே! என்னிடம் கொடுங் கள். அதைத் துவைத்துத் தருகிறேன்!" என்று அவள் பரிகாசமாகக் கழறினுள்.

அவளைப் பார்க்க விநோதமாயிருந்தது. கருகிய பூவரசு தளிர்த்ததென அதன் கிளைகள் மீது தன் பசிய கூந்தலைக் காற்றில் தவழ விட்டு தன் மலர் முகமும் வெற்றிலையிட்ட கனிவாயும் விகசிக்க விளங்க அவள் அந்த வீற்றிருந்தாள். வயது பதினேன்று. அழிலும் அவளை வீட்டு வியாபாரத்தி தனம் நீங்கவே யில்லை. மனக்கவலையின்றி பம்பரம்போல் திரிவள்.

என் மனத்திலோ கோபமும் சிரிப்பும் நாணமும் கலந்து வந்தது. "ரஞ்சனு! (இது நான் அவளுக்கிட்ட பெயர்) நீ எப்பொழுதும் இப்படித் தான்!" என்று சொல்லிக் கொண்டே என்வழி நடந்தேன்.

சிறிது தூரஞ் சென்றதும் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னையே நோக்கிக் கொண்டிருப்பதைக் கவனித்தேன்.

II

பத்து ரூபாய்க்கும் பதினேந்து ரூபாய்க்குமாகப் பாரமான புத்தகங்களை அபாரமாகப் படித்து அலுத்து வந்திருக்கிறான் என்தம்பி என்று சொல்லி என் அக்காள் எனக்குப் பாலுந் தயிருமாக ஊரிலுள்ளவற்றை யெல்லாம் வாங்கி அடுத்தகத் திருந்த பெண்டிர் களையும் அழைத்து எனக்குப் பெரிதாக ஓர்விருந்து பரிந்திட்டனள். சில நாட்கள் என் யோக க்ஷேமங்களைப் பற்றி விசாரிப்பதிலும் என் படிப்பு முறையைப் பற்றிக் கேட்பதிலுமே சென்றன. இதற்குள் என் தாய் தந்தையரும் வில்வனை கல்லூரில் சிலநாள் விருந்தாக வந்திறங்கினர். அவர்களுடன் வந்தது என் கலியாணப் பேச்சும்.

நான் கலியாணப் பேச்சு என்றாலே அவ்விடத்தில் நிற்பது கூட இல்லை. இதென்ன! பாவை கலியாணமா? எனக்கிப்பொழுதே கால்கட்டுக் கட்டி விட்டால் அப்புறம் நான் பிழைப்பதெப்படி!, என்று பலவிதஞ் சொல்லிப் பேசாது போய்விடுவேன். இவ்வருடமோ எது சொல்லியும் கேட்பாரில்லை. "உனகென்னடா? பீ. எ. கிளாவில் படிக்கிறாய். சிறு பெண்ணைப் பத்து வயதில் கலியாணம் பண்ணிவிட்டால் பதினெறு வய திற் கெல்லாம் பெரிதாகி வீட்டிற்கு வந்துவிடும். நீங்கள் அப்புறம் குழந்தை குட்டிகளோடு (திண்டாடி) இருக்க நாங்கள் கண்குளிரப் பார்ப்போம்," என்பது இப்பொழுது அவர்கள் காய்த்ரீ மந்திரமாக மாறியது.

நான்என்னசெய்வேன்! திடீரென்று என் சிந்தந்தான் மாறுபட்டதோ, அல்லது ஊழ்வலியின் கூறோ, அல்லது என் பெற்றோரின் வாய் மொழிகளாலோ அறியேன், நான் கலியாணம் என்பதின் பொருளைச் சரிவர அறியாமலே மணக்கச் சம்மதித்தேன். பெண்ணும் பொன்னும் சேமநிதியெனச் சேமித்து வைத்துத் தக்கவரன் தேடி வடகரை ராஜ மஹேந்திரவரத்திருந்து தென்கோடி யாழ்ப்பாணம் வரை ஸ்தல யாத்திரை செய்துவந்தலுத்த செல்வர்கள் வீட்டிற்கு விருந்து புகவாரம்பித்தேன்.

வில்வனை கல்லூரர் வடக்கு வீதியில் ராமகாதய்யர் என்பார் தனவந்தர். அவர் பெண் ராஜலட்சுமியை என்னைப் போய்ப் பார்த்துவரச் சொன் னார்கள். ஞாயிற்றுக்கிழமையன்று சாயங்காலம் நாலரை மணிக்கு மேல் ராகுவேளையில் அவர்கள் கோச்சு வண்டி எங்கள் வீட்டு வாயிலில் வந்து நின்றது. நானும் அதிலேறி அவர்கள் வீடு சேர்ந்தேன்.

அப்பா! அந்தச் சமயத்தில் என் மனத்தில் சேர்ந்த குழப்பத்தை என் னவென்று சொல்வேன். என்னுடைய கரிய அல்பாகா சட்டை என் பின்னல் பரந்து சூழ்ந்து வரும்படி சிறிது நேரம் சட்டைப் பொத்தான் களை நெகிழ்ப்பேன். இதற்குள் வெளுத்த என் கைக்குட்டை ஆம்பல் மலரென வெளிவந்து தெரியும்படி சற்றே என் சட்டைப் பையினுள்

வைப்போன். மறுபடியும் என்னுடைய 'சோல்ரி கோல்டு' கடிகாரச் சங்கிலியைக் கழற்றித்திருப்பியற்றலுஞ் மறுபடியும்மறுபடியும்மாட்டுவேன். எதோ திரம்ப வேலையுள்ளவன் போல் அடிக்கடி மணிபார்ப்பேன். என்காலிலிருந்த பிஞ்சுச் ஷூவிலிப்பரைத் தூக்கு நுல்லாது ரிமிட்டத்திற் கோர்முறை தடைத்துக் கொள்வேன். அடடா! இவைகளே ஒவ்வொரு மாப்பிள்ளைக்கும் வேண்டிய குணவிசயங்களென்னக் கருதினேன் போலும்.

கடையாக, பஞ்சாத்திலின்றும் விடுபட்ட ஜட்கோ யென, பரபரப்புடன் வண்டியிலிருந்து இறங்கினேன். ராமகாதய்யரும் தெருக்கோடியிலிருவண்டி கண்ணுக்குத். தென்றிய போதே பரபரப்புடன் காத்திருந்தவர் மந்தகாசத்துடன் "வா! அப்பா! சௌக்கியமா? பட்டணத்திலிருந்து எப்பொழுது வந்தாய்?" என்று விசாரித்தார்.

சிற்றுண்டியருந்தி நாங்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். கடையாக, "ராஜத்தைக்கூப்பிடு, ராஜம்!" என்று விளித்தார் ராமகாதய்யர். நானும் எனக்கென அவரிருத்துள்ள கன்னிகாரத்தினம் எப்படிப்பட்ட பூதமோ எனச் சிந்தையிலாழ்ந்தவனுய்ச் சிறிது ஆச்சரியத்துடன் ராஜலக்ஷ்மியின் வரவை எதிர்பார்த்தேன்.

சுமார் இரு மிநிடகாலம் சென்றது. கடையாக வைரக்கைகளினும், இருபத்தைந்து முழம் நீளமுள்ள பட்டுப்புடவையாலும் காற்று புகுக்கூட இடையில்லாது மன்று போர்க்கப் பட்டதோர் உருவம் பின்னிருந்து நான்கு சிறுமிகளால் தள்ளப் பட்டுப் பின்தங்கிய வண்ணமே முன்வந்தது.

தோழிமார் இருவர் அப்பெண்ணை என்முன் கமல்கனிக்கும்படி விட்டனர். சிறு குழந்தை என்காலில் வீழ்ந்தது. மறுபடியும் அவசரத்துடன் எழுந்திருந்து ஓர் மூலையில் போய் மறைந்து கொண்டது. ராமகாதய்யரும் "ராஜம்! ஹார்மோனியப்பெட்டியை எடுத்து ஒருபாட்டு பாடு!" என்று சொல்லிவிட்டு எங்களிருவரையும் தோழி மார்களையும் பரிகாசத்துவிட்டு விட்டு வெளியே சென்று விட்டார்.

ஆஹா! ஹார்மோனிய சிகம் எவ்வளவு அழகாயிருந்தது! இந்தப்பெட்டி வாத்தியமே இந்தஸ்தானி பாட்டுகளுக்கு மிகவும் உகந்தது. காட்டேச்சந்தம் போடும். இன்னிசை சொல்லத் தேவையாது. அதிலும் தமிழ்ப் பாட்டுகளுக்கு பிகவும் ஒய்யாரம். ஆதலால் ஒருவாரு அதை கம் பக்கத்துக்குடகத்தே. கம் சிறுமியர்க்கு இப்பொழுது இந்தஸ்தானி பாட்டிலும் நாட்டமிருந்தது கோட்டிலும் காசின பிரியம்.

சிற்க, ராஜலக்ஷ்மி பாட எடுத்தது ஒரு தமிழ்ப் பாட்டு. உபகாரியமோ சிச்சக்கிச்சென்னும் ஹார்மோனியப் பெட்டி. பந்துபோன்ற

இதயத்திலுற்ற நடுக்கம் தானம். அதோடு பயத்தினுலுற்றது விகல்பரம். இவ்வித சம்பிரமங்களுடன் நம் ராஜலக்ஷ்மி எப்படியோ பொறுமையில் தன்னிகராம் தாணீதேவியை நோக்கிக் கொண்டே ஒருபாட்டு பாடி முடித்தாள்.

பிற்பாடு பரீக்ஷையில் மறுவிஷயம் வந்தது. "குழந்தை! இங்கிலீஷ் தெரியுமா உனக்கு?", என்றேன். தோழிமார் தெரியு மென்றனர். நானும் புன்சிரிப்புடன் மேல் வினவ வாரம்பித்தேன்.

இதற்குள், "இதென்ன அதியாயம்! ஒன்றுங்கெரியாத பயந்த குழந்தையைப் போய் என் பயமுறுத்துகிறீர்கள்?" என்று கர்ச்சித்துக் கொண்டே என் தலையிலிருந்த பாகையைப் பிரித்தெடுத்துக் கொண்டோடினாள் ரஞ்சனு.

தோழிமார் யாவரும் ரஞ்சனுவைத் தொடர்ந்து பல திக்குகளிலும் பறந்தனர். விடுதலை யுற்ற கைதியென மறைந்தனள் மணம் புரியவென வந்த மக்கை. நானும் ரஞ்சனுவைப் பின்பற்ற எண்ணி, கோயிற் பக்கம் மெள்ளனச் சென்றேன்.

* * *

சாயங்காலம் மணி இந்தாமிருக்கும் நான் ரஞ்சனுவைத் தேடிக் கொண்டே கோயிலில் அலைந்தேன். திருக்குளத்தில் வேலியர் சந்தியாவந்தனஞ்செய்பவர் தம் கரத்தில் நீர்கொண்டு அர்க்கியம் வர்ஷி நின்றனர். கடையாகக் குளக்கரையில் ஓர்புறத்தில் ஓர் பாழ் மண்டபத்தில் ரஞ்சனுவைக் கண்டு பிடித்தேன். "ரஞ்சனு! என் ஓடி ஒளித்தாய்?" என்றேன்.

"என்! உங்களுக்கு என்னுலாக வேண்டிய தென்ன? நான் சாகப்போகிறேன்.—வேறென்ன இருக்கிறது எனக்கு?—"என, விம்மி விம்மி விழுநீர்வார அவள் பதில் சொன்னுள்.

"சாகப் போகிறவள் என் என் சிகைத் தப்பட்டையைத் தூக்கிப்போக வேண்டும்?"—நான் பரிகாசமாக வினவினேன்.

"உங்களை நான் அடையக் கூடாத போதிலும் உங்கள் பொருளாவது ஒன்று கூட இருக்கவேண்டுமென்று—ஞாபகார்த்தமாய்—"

அவள் மொழிகள் என் மனத்திற் பதிந்தன. என் மனத்துற்றகிளர்ச்சியை நான், இப்பொழுது அறியக் கூடவில்லை. "ரஞ்சனு! ரஞ்சனு! என்னைக் கலியாணஞ் செய்து கொள்வாயா?" என்று கண்ணீர் தளும்பக் கழறினேன்.

அவள் மறுமொழி எத்தாளில்லை. என் சட்டை முழுவதையும் கண்ணீரால் நனைத்து விட்டாள்.

அந்த ராகு காலத்தில் நங்கள் மனை விவாகம் நடந்தேறியது.

III

ரஞ்சனாவின் வீட்டாரை நாம் அறிந்தவர்கள்தாமே? சுந்தரியைப் போல் நாம் தந்தையர்களில்லை. அவள் தன் சகோதரரின் பராமரிப்பிலிருந்தாள். கலியாணசுந்தரம் ஐயரும் என் தந்தையாருக்கு நிரம்பவே நேசிதர். என் தந்தையாரின் உதவி யாற்றலால் அவர் வியாபாரத்திற்காரம்பித்ததும் அதிற் பெரு மையுற்றதும்.

அவர் என்னவோ, எங்களோடு சம்பந்தம் புரியக்கூடும் என்பதாக நினைத்தவரேயிலர். என் தந்தையாரோ, என் வாழ்க்கையைத் தட்டுவதில்லை. ஆகசந்தோஷமாகவே ஒரு சுபமுகூர்த்தத்திலேயே எங்கள் வெளி விவாகம் நடந்தேறியது.

இரண்டு வருடகாலம் சென்றது. இதற்குள் நான் பீ. எ. பரீக்ஷை கொடுத்துவிட்டு ஆராய்ச்சியாளர் சங்கத்தில் சேர்ந்து அலுவல் பார்த்துவந் தேன். ரஞ்சனாவும் இதற்குள் மற்றையச் சடங்குகள் யாவும் முடிந்து எங்களுடன் வந்தியும்படி வந்து தங்கினாள். வந்த சில தினங்களுக்குள்ளேயே விவாதம் கோர்த்தது.

ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள், என்பது பழையமொழி. முதலில் சுந்தரியிடமிருந்த பிடிவாதத்தை என் பெற்றோர் சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. ஆனால் நாளடைவில் அதை வெறுக்கலானார்கள். அது இவ்விதம் நேர்ந்தது.

ஓர்நாள் சாயங்காலம் சுந்தரி ஏதோ ஒரு ஒழுங்கினமான பாட்டுப் புத்த கத்தைப் படித்துக்கொண்டிருந்தாளாம். என் தாயார் கூப்பிட கூப்பிட ஏனென்றுகூடக் கேட்கவில்லையாம். என் தாயார் கோபங்கொண்டு அவள் கையிலிருந்த புத்தகத்தை வாங்கி அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டாள். சுந்தரியும் சாதுபோலிருந்து இருண்டவுடன் தன் ஊர் செல்லவென வாயி லிற் இளம்பிவிட்டாள்.

நற்பொழுதாய் நம் வீட்டில் விசுவாசராய் வேலைசெய்துகொண்டிருந்த பரசுராமன் எப்பவும் தன் அண்ணனைக் கண்டுகொண்டு வேலையில்லாத வேளை அவ்வழி வந்தாள். ரஞ்சனாவைக் கண்டவும் பரிகாசமாக "வண்டி யிலேறிக்கொள்ளுகிறீர்களா?" என, சுந்தரியும் கண்ணீர் கலங்க "பரசுராமா! என் அண்ணனிடம் என்னைக் கூட்டிப்போ!" எனக் கூறி வண்டியிலேறி னாள்.

அன்பர்களே! புதுவை புஷ்பவண்டிக்காரனைவிட யோக்கியன் ஒருவனும் கெடையாதென்று சொல்லலாம். சாதாரணமாக அவன் நிருபனே. எஜமான் விசுவாசம் அவனிடம் உண்டாவது அருமை. ஆனால் விசுவாசம் என்பது சிறிதே அவனகத்தைத் தோன்றிடின் தன் உயிரையும் கொடுத்துத்

தன் எஜமானனைக் காப்பான். இத்தகைய பக்தி விசேஷம் வாய்ந்தவர்களுள் ஒருவன் நம் பரசுராமன்.

பரசுராமன் கேட்டான் பதுமமுகி புகன்ற வசனங்களை. அவன் சற்று விழுங்கப்பிரியன். ஆச்சரியத்துடன் சரியென்று சொல்லிச் சுக்காளைப் பிடித்து இழுத்துச் செல்ல ஆரம்பித்தான்.

இரவு எட்டு மணி. வாயிற் பக்கம் நின்னையில் என் நண்பர் சிலருடன் பேசிக்கொண்டிருந்தேன். வாயிலில் வண்டி வந்து நின்றது. ரஞ்சனா அதினின்றும் இறங்கினாள். "ரஞ்சனா! எங்கு போய் வந்தாய்?" என்றேன்.

"அண்ணன் வீட்டிற்கு போகலாம் என்றார்கள். இராக்காலம் என்று திரும்ப இங்கேயே கொண்டுவந்து விட்டேன். நான் நடந்தது நாலுமைல் இருக்கும் சாமி!" என்றான் பரசுராமன்.

ரஞ்சனாவோ ஒருபதிலும் சொல்லவில்லை. நேராக ஓரறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டாள். "நான் இங்கே ஒருகணமும் தரிக்க வியலாது" என்று சொல்லிக் கொண்டே தன் புடவையை எடுத்து நூல் நூலாகக் கிழித் தெறிந்து அவற்றின் மத்தியில் பூசை முடிந்த துர்க்கா தேவிபோலக் கோபாக்கினி கண்களில் வீச அவ்விடம் விளங்கினாள்.

என் தாயாரோ என்னைப் பலவிதத்திலும் இடித்துக் கூற ஆரம்பித் தாள்.

இரவு பதினொறு மணியாகியும் ரஞ்சனா வெனென்று கேட்பவளில்லை. கடைசியாக நான் வாயிற் புறம் ஜன்னல்வண்டை போய் நின்று "ரஞ்சனா!" என்று இருமுறை கூவினேன்.

கண்ணீர் வடித்து நின்ற காரிகையும் "எனக்கு இவ்விடம் பிடிக்கவே யில்லை. இப்போழுதே என் அண்ணனிடம் சேர்ப்பியுங்கள்—" என்றாள்.

நானும், "நாளை சாயங்காலம் நான் பட்டணம் செல்கின்றேன். உன்னை அழைத்துக்கொண்டுபோய் வில்லுவன் கல்லூரில் விட்டுச் செல் லுகிறேன்—" என்றேன்.

சுந்தரியின் முகம் மலர்ந்தது. கதவைத்திறந்து வெளிவந்தனள்.

ரஞ்சனாவை நான் வாக்களித்தபடியே மறுநாள் வில்லுவன் கல்லூர் கொ ண்டு சேர்த்தேன். கலியாணசுந்தரையருக்கு எப்பொழுதுமே என் மீது மிகுந்த பிரியம். விருந்தும் களியுமாக அன்றையப்பொழுது கழிந்தது.

இரவு ஒன்பதரை மணி வண்டிக்கு நான் சென்னைக்குச் செல்லச் சித்தமானேன். ரஞ்சனாவிடம் விடை பெறுதற்கு அவளைத் தேடிச் தேடிக் கடைசியில் 'தாமரா' அறையில் ஓர் மூலையில் அவளைக் கண்டேன். நான் "ரஞ்சனா!" என்று கூப்பிடவும் அவள் முகத்தைத் தூக்க கைக்கலர

"கடையாகக் கண்ணும் பிழித்து விட்டீர்களே! என்ன செய்தோம்!" என்னள். கைகளொழி ஒப்ந்த பாடில்லை.

எனக்கோ இன்னது சொல்வதென்று புரியவில்லை. "அன்பே!—" என்றேன்.

அவள் சிரிப்பு ஒய்ந்த பாடிலில்லை. ஆக மறுபடியும் "அன்பே!—" என்றாரம்பித்தேன்.

"என்ன! அன்பு வெகு சீளமாயிருக்கிறதே! சொல்ல வேண்டியதைச் சொல்லிப் போகிறதானே!" என்றாள். மறுபடியும் அந்நூறாகை.

எனக்கு மனத்தில் கோபம் சுழன்றெழுந்தது. "ராஜலு! நான் உனக்குச் சொல்ல வேண்டிய தொன்று மில்லை. புத்திசாலித்தனமாக நடந்து கொள். உன்னை விரும்பி மணந்த எனக்கும் உனக்கும் கெட்டபேர் கொண்டு வராதிரு! வேறென்ன! நான் போய் வருகிறேன்—ஆதலில் ஒன்று. உன்னைப்பட்ட என்னோரைச் சொல்லி விதிதம் வந்தாலொழிய நான் இவ்விடம்—என்! எவ்விடமும் சென்னையை விட்டு வருவதில்லை—"எனச்சொல்லி அகன்றேன்.

அங்கயற்கண்ணி.

(அடுத்த சஞ்சிகையில் இக்கதை முடிவுபெறும். அன்றியும் அச்சஞ்சிகையில் "பாம்பின் காயம்" என்ற வியப்பிற் குரிய மற்றொரு கதை தொடங்கப் பெறும். ப—ர்.)

நாட்டுப்பெண் கும்மி.

முதல் அதிகாரம்.

நேய்வ வணக்கம்.

உண்டென் றுணர்தெய்வம் ஒன்றென் றுணர்ந்ததற்
கொப்புயர் வானதொன் றின்றென்றுணர்
கண்டவற் றுள்ளனைத்தும் உள்ளுயிர் தானுய்க்
கலந்திறை கின்ற கருப்பொருளே.

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்தவர்
எல்லாம் வல்லவர் நல்லவர்கான்
உள்ளும் புறமும் விளங்கொளி யாகிய
உத்தம னைக்கினம் சிந்திப்பமே!

கன்னைப் படைத்த பராபர வஸ்துவைக்
கண்ணைப் பரிபா லிக்குந்தெய்வை
நுண்ணிய தேதது தேத்தி வணங்கிடும்
இல்லையதே நல்ல காயகியாம்.

கர்த்தரைப் பத்தியாய்ப் போற்றிய மங்கையர்
காதலர் தம்மையும் போற்றிடுவார்:
கர்த்த னிடத்திலே அன்புள்ள மங்கையைக்
காதல னும்கனம் பண்ணுவனே.

தேவனுக் கஞ்சாத் பெண்டுகள் வீட்டில
திங்கொறும் ஓயாத சண்டையுண்டாம்
கோபங்க ளும்பல பாவங்களும் அக்கே
கூச்சலும் நித்தம் குடிகொளுமே.

பைகள் நிறையப் பணம்இருந்தும் நகை
பட்டாடை பூண்டிரு தாமிருந்தும்
தெய்வத்தின் மேற்பத்தி இல்லையென்றால் அவை
செல்வ மல்ல வெறுஞ் சீழிலே.

காலையிற் பூக்கள் மலர்ந்து சிறப்பது
கர்த்தரை வாழ்த்தென் றுரைப்பதொக்கும்
சால மரம்பயிர் தம்பயன் சவது
சாமிசெய் நன்றி யுணர்த்துமன்றே.

2-ம் அதிகாரம்.

தமிழ்நாட்டுப் பெண்மைநேர்.

கொண்டவ னல்லாமல் இந்த உலகத்தில்
நம்பிடு தெய்வம்வே றில்லையென்று
பெண்டீகள் கண்டு பணிவதற் காகவே
பேசினர் நூலிற் பெரியோர்கள்.

தெய்வம் தொழாது கணவனைக் கண்கண்ட
தெய்வம் எனத்தொழும் மாதுமழை
பெய்யென்று சொல்லவும் அந்நேரம் பெய்யுமாம்
பின்னென்ன பேசுவம் பெண்பெருமை.

மாசில் மடந்தையர் வள்ளுவர் இல்வாழ்
மனைவியைப் போலவே கன்வீட்டு
வாசற் படியும் கடவாரே மறு
மாந்தரைக் கண்கொண்டு பாராரே.

அரசனுக் கோர்மகள் ஆனலும் எந்த
ஆண்மகன் காணினும் அஞ்சிடுவாள்

புருஷனைக் கண்டால் எழுந்து வணங்குவள்
புத்திரர்க் கும்கால் மடக்குவளே.
அஞ்ச தினத்திற்குத் தன்வீட்டான்பின்னே
அடுத்த ஊருக்குப் போயிருந்தால்
மஞ்சட் குளியான் மயிர்வாரான் மலர்
வாசம் பட்டாடை நகைதரியான்.
மட்டி மடைச்சி முழுமா டென்றவன்
வைது சினமிஞ்சி மூர்க்கத்தினால்
கட்டை எடுத்துப் புடைத்தாலும் அவன்
'கா'வென்ற சத்தமும் காட்டாளே.
நற்சுவை யாக்கறி வர்க்கங்கள் எல்லாம்தன்
நாயக னுக்குமுன் னம்படைத்து
எச்சி லிலையுறும் மிச்ச மீதங்களே
எற்ற அமுதமென் றுண்பாளே.
கூடி இருவரும் போகையிலே அவள்
கூட நடப்பது கூடாதாம்.
வாடிஎன் பின்னாலே என்றுசொல்லி அவள்
மாப்பினாலே கைவீசிப் போவாளே.
கன்னியைக் கல்யாணம் பண்ணிய வாலிபன்
கற்பு நெறியைக் கடைப்பிடித்தால்
அன்னியர் பார்த்திடப் பெண்ணைத்தொடான் அவன்
யாரேனும் முன்னின்றுப் பேசாரே.
அடிசிற் கினியவன் கலவறங்கள் அன்னம்
ஆக்குவதுங் கறியாக்குவதும்
படிப்பு மடப்பள்ளிக் கூடத்திலாம் பெண்கள்
பண்டிதை யாவதற் கென்பாரே!
ஆடவர்க்குப்பெண் மடிமையாம் ஆதலின்
அடி! போடி வாடி என் றேயழைப்பார்
ஓட ஓடியுழைத் தூழியஞ் செய்வதே
உத்தமிக்குச் செல்வம் என்பாரே
பாத்தா வீழிக்குமுன் தான்எழுந் தேஇத்தன்
[illegible]

3-ம் அதிகாரம்.

கல்வி.

இந்திய மாதர்கள் பூர்வீக காலத்தில்
எற்ற படிசற் றுயர்ந்திருந்தார்
சந்திர மதிதமை யந்தி முதலான
தக்கவரே இங்கு சான்றுவார்.
பாதகண் டம்பர தேசிகள் கைப்பட்ட
பாவத்தி னற்பல பண்பிழந்து
சாத மகிமை யிழந்தது பெண்கல்வி
சற்றுமில் லாமற் பறந்ததுவே.
இந்த வரலா றுணர்ந் திடையிட்டோர்
ஏதேதோ தம்மனம் போனபடி
சிந்தைக்கெய் யாமலே செப்பினர் பற்பல
சீதை யனையார் செவிசுட்டே.
கல்வியி னல்அறி வண்டாஞற் பெண்கள்
கற்பு நெறிகடக் தேருவராம்:
சொல்லுக் கடங்காமற் போய்விடு வாரெனச்
சொல்லத் துணிந்தார் சிலபேர்கள்.
எண்ணறக் கற்றும் எழுத்தறி வுமும்
பெண்புத்தி பின்புத்தி யாருமென்பார்:
கண்ணற்றார் மூக்கின்மேற் கண்ணுடி போலும்
கணீதம் எழுத்துடன் பெண்ணுக்கென்பார்.
எண்ணுமலே அன்றே சொல்லிவிட் டார் தமக்
கேயிழி வென்றுணர்ந் தாரிலரே
மண்ணுக்தை போலும் விழிக்கின்ற பெண்ணுக்கு
மாப்பிள்ளோ யாதற்கோ கல்விகற்றார்?
தண்ணீ ரளவாகும் தாமரைத் தண்டகத்தத்
தண்ணீர்க்கு மேல்தலே நீட்டிநிற்கும்
பெண்ணறி வோங்கித் தழைக்குமாலுல் மாப்
பிள்ளைக் கதுபெரும் பாக்கியமே.
தோளுக் கிசைந்தவள் பெண்ணலல் நல்ல
சொல்லுக் கிசைந்தவன் பெண்ணுமே
ஆளுக் கிசைந்தவள்-பெண்ணலல் அறி
வுக்கும் இசைத்தவள் பெண்ணுமே.

மாதர்க் குயர்கலே போதிப்பது மிலே
மற்றவர்க் காவன செய்வதிலே
வேதோ கிலர்செய்த கோதை யெடுத்தெடுத்
தெல்லோரை யும்பழி பூணவைப்பார்.

சேலைகள் கட்டிய மாதரை நம்பினேர்
தெருவில் நின்று தவிப்பர்என்பார்!
வேலைகேர் கண்ணினை நம்பின பேரெல்லாம்
கோட்டைகா யாகிக் கழிவர்என்பார்.

பாட்டுப் படித்த கவிப்புலவர் செய்த
பாடல்கள் மெத்த அநியாயம்;
காட்டுப்பெண் மேற்பல தூஷணைகள் சொலி
காவுக்கூ சாமலே பாடிவைத்தார்.

காயைப் பழித்த பெருங்பாவம் வந்து
சாடாதோ பெண்ணைப் பழித்தாற்கால்?
காயைப் பழித்த பெருந்தோஷம் அதைக்
காய்த்த மரத்தையும் சாராதோ?

ஆய்தொடியா யாலோப் பழித்த கவிராயர்
அந்தரம் நின்று குதித்தாரோ?
தாய்தங்கை அக்கை யுடையவரேல் அவர்
தம்முடை மானம் மதித்திலரோ?

சுற்றிவர் செய்திடும் வாறிருக்க இந்தி
யாவெனும் நாய்செய் தவப்பயனால்
ஆங்கில மேலவர் ஆட்சிவரப் பெண்கட்
காதர வாய்க்கல்வி ஏற்பட்டதே.

இன்னமும் மாதர் அறிவுகா படித்திலர்
என்றுலகம் பெண்கல்விக் காமுயற்றி
மென்மேலும் ஒங்கிடைபெறு கின்றதால்
மேன்மைகுன் றாக் வளர்பிறையாம்.

ரு. பொ. சுவாமிநாதபிள்ளை.

(இக்கும்மி திருவனந்தபுரத்தில் கடைபெற்றுவந்த அமிர்தவசனிப் பத்திரிகையின் வாயிலாகப் பிரசுரமாய் வருகையில், முற்றப்பெறாமுன் அப்பத்திரிகை நின்றுவிட்டதால் அவ்வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நம் பத்திரிகைகேயர் பலர் பொருட்டு, இதன் ஆசிரியர் அதை மீண்டும் பெற்று, தெய்வ வணக்கமாகிய முதல் அதிகாரத்திலிருந்தே தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப்பட்டுவருகிறது. ப—ர்.)

சரித்திரத் துவக்கம்.

பற்பல கலைகளுள் சரித்திரமாவது இறந்தகாலத்தில் நடந்த விஷயங்களைக் கூறுவதும் அவ்விஷயங்களினுல் மானிடர்கள் கற்க வேண்டிய படிப்பினைகளைக் கூறுவதுமாகிய கலை. விஷயங்கள் நிதானப்பட்டுவிட்டால் படிப்பினைகளை அவரவர் புத்திக் கெட்டிய மட்டும் தேர்ந்துகொள்ளலாம். விஷயங்களை நிதானிப்பதிலே தான் சரித்திரமாராய்பவர்களுக்கு மிகுந்த சிரமம் உண்டாகிறது. ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயங்களை இன்று உள்ளபடியாக அறியவேண்டுமென்றால் ஏனதிருஷ்டி இருந்தாலொழிய முடியாது. ஆனலும் ஒருவாறு அறிந்துகொள்ள வேண்டிய பல சாதனங்கள் உள. அவற்றுள் முக்கியமானவை அவ்வக்காலங்களில் கிலரோ பலரோ எழுதிவைத்துள்ள சரித்திரப் புத்தகங்களை. அப்புத்தகங்களுக்கு இராஜாங்கப் பத்திரங்களும் பல வகைச் சாதனங்களுமே மூலமாகின்றன. அதன்றியும் புராணங்கள் இதிகாசங்கள் போன்ற பல நூல்களும், சித்திர, சிலா, நாணய, கட்டிட சாஸ்திரங்களும், பொருள்நூல் பாஷாசாஸ்திரம் முதலியனவும் சரித்திர விஷயங்களை ஆராய்ந்து நேர ஏற்ற கருவிகளாகின்றன. இவ்விதமான ஆராய்ச்சியில் ஒவ்வொரு நூலின் தகுதியையும் அவரவர் பகுத்தறிவினுலேயே நிர்மானஞ்செய்துகொள்ளல் வேண்டும். ஒரு நூலில் பிழை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள. தேச ஜாதி மத அபிமானங்களாலோ, பகுத்தறிவு, கவனம், கல்வி இவற்றின்குறைவாலோ, சார்புகோக்கம், பொய்மை, பொறுமை, தற்பெருமை முதலிய தூர்க்குணங்களினுலோ, ஒரு நூலுக்குக் குற்றங்கள் ஏற்படுகின்றன. ஆகவே குற்றங்களொன்று குணங்கள் கைக்கொள்ளவேண்டும்.

குற்றங் குறையவும், உண்மை மிகவும் எழுதுவதே சரித்திரப் பாங்காகும். அப்பாங்கு தங்களிடமே மிகுமென்று மேனுட்டார் கூறுவர். கீழ்நாட்டார் சரித்திர அம்சங்களுடன் கட்டுக்கதைகளைக் கலந்துவிடுகிறார்களென்றும் கூறுவர். அஃது எங்ஙனமாயினும் சரித்திர அம்சங்களாகிய வாழ்க்கையொழுங்கு, இராஜாங்கமுறைமை, யுத்தமுறைமை, மதப்பாகுபாடுகள், கலைஞா

னங்களின் நிலைமை, முகலியவற்றைக் குறித்துத் தெளிவாக அறி யவேண்டிய சாதனங்கள் பலவும் இந்தியாவிலே இருக்கின்றன. சமஸ்கிருத, தமிழ் மொழிகளுள் உள்ள பல நூல்களும், சிலைகள், சித்திரங்கள், சாசனங்கள், நாணயங்கள், கட்டிடங்கள் முதலிய யாவும் ஏராளமாகக் கிடக்கின்றன. அவைகளோடு ஒப்பு நோக்கித்து உண்மையான சரித்திரம் எழுதுவதிலேயே சிரமம் ஏற்படுகிறது. அதிலும் சரித்திரத்திற்கு இரு கண்கள் எனப்படும் காலம் தேசம் என இரண்டில் காலத்தைக் குறித்தே பல அபிப்பிராய பேதங்கள் ஏற்படுகின்றன.

உலக சிருஷ்டி ஆகி பல யுகங்கள் முடிவுபெற்றன என்பது இந்துக்களின் மதம். சிருஷ்டிகாலம் கிறிஸ்து பிறப்பிற்கு ஈராயிரம் வருடங்களுக்குமுன்பே என்பது கிறிஸ்தவர்களின் கொள்கை. அக்கொள்கைக் கிணங்க இந்துதேச சரித்திரம் எழுதும் ஆங்கில ஆசிரியர்கள் கங்களுக்குத் தோன்றிய காலவரை கூறி அதற்கு ஏற்ற சான்றுகள் மனப்போக்குப்படி எழுதுவார்கள். ஆகவே, இப்போது உலாவிவரும் சரித்திரப்புத்தகங்கள் முற்றும் நம்பத்தகுந்தனவாகக் கொள்ளற்பாலன வல்ல.

இதற்கு, சரித்திரத்துவக்கத்தில் மனிதன் விலங்கைப் போலவாழ்ந்தான் என்பது மேனாட்டார் துணிபு. ஆதியில் தூங் கும் சர்வ வல்லமையும் பெற்றிருந்தனவென்றும், மனிதன் அவைகளின் விளையாட்டுக் கருவி போன்றான் எனவும் அபிப்பி ராயம் கொள்வர்.

ஆதி மனிதன் நகங்களாலும் பற்களாலும் காய் கிழங்குகளை யும் மிருகங்களையும் பக்குவமின்றி புசித்துவந்தான். பிறகு, காலப்போக்கில் கற்களால் ஆகிய ஆயுதங்கள், உலோகங்களால் ஆகிய ஆயுதங்கள் முதலியவற்றைக் கண்டுபிடித்தார்கள். ஆறு, கடல், ஏரி முதலியவற்றின் அருகில் வசித்த மானிடர்கள் மச்சங் களைப் பிடித்து உண்டார்கள். மழை பெய்தே தவளைகள் பெரு குவதுபோல், ஆகாரம் இலகுவாகக்கிடைத்த இடத்தே மானி டர்கள் பெருகினார்கள். நதீரங்களாகிய எகிப்து, மெசபொ டோமியா, சீனா, இந்தியா முதலிய பிரதேசங்களே ஜனத்தொ கையில் மிகுந்து நாகரீகத்திற்கு இருப்பிடங்களாக விளங்கின.

ஆகவே, துவக்கத்தில் மனிதர்கள் வேட்டையாடிப் பிழைக்கிறார் கள். பிறகு உணவிற்கேற்ற மிருகங்களைப் பிடித்துப் பழக்கி வளர்க்கிறார்கள். ஓரிடத்தில் தங்கியிராமல் தங்கள் மிருகங்களுக்கு ஆகாரம் கிடைக்கும் இடங்கள்தோறும் மந்தைகளை ஓட்டிக் கொண்டு கூட்டமாகப் போவார்கள். அவ்வண்ணமே இன்றைக்கும் மத்திய ஆசியாவிலுள்ள மைதான வாசிகள் செய்துவருகிறார் கள். அதற்குப் பிறகே நிலத்தை உழுது பயிரிட்டு ஜீவனம் செய் யக்கூடிய பக்குவத்தை அடைகின்றார்கள். மலைவாழ்நிற்கும் மேலாக விளைபொருள்களைக் கைத்தொழில்களினால் பரஸ்பரம் மாற்றி வியாபாரம் செய்து பிழைத்துவரக்கூடிய நிலையை அடை கிறார்கள். ஆகவே படிப்படியாகத்தான் மனிதர்கள் முன்னேற்ற மடைகிறார்கள்.

(இன்னும் வரும்)

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

சுக வழி

ஓர் சம்பாஷணை.

கடவுள் துதி

பேருல கத்தினிற் பிறந்தபாலிடர்
தீரிய சுகத்துடன் நீடு வாழ்ந்திட
காரும மேனியெம காதற் காவலன்
பாரளந் திடதிருப் பாதம் பணிதுவாம்.

சுகத்தின் அருமையும் அதைப் பாதுகாக்கும் முறையும்.

தோட்டங்களடங்கிய ஒரு கிராமத்தின்கண் சுகாதாரம் பொருந்தியதோர் வீட்டில் சுந்தரம் தனது பழைய ஆசிரியரைக் கண்டு சம்பாஷிக்கின்றான்:—

சுந்.—சுவாமி! நமஸ்காரம்.

ஆசி.—வா அப்பா சுந்தரம். க்ஷேமந்தானே? உன்னைப் பார்த்து வெகுநாளாயிற்று. என்ன! நீ என்னிடம் வாசித்தபோது சுகதேகியாயிருந்தாயே. இப்போது அசௌக்கியமாயிருப்பது போல் காணப்படுவதின் காரணமென்ன?

சுந்.—கடவுள் கிருபையால் எனக்கோ ஜீவனுண்டு. என் தேகஸ்திதியைக் கவனித்தால் சுகமாயிருக்கிறதென்று சொல்ல நாவெழுகிறதில்லை.

ஆசி.—ஆம், அது உன் முகக் குறியினால் நீ சொல்லாமலே நன்கு விளங்குகிறது. இதோ இவ்விரண்டு படங்களையும் பார். ஒருவன் எவ்வளவு இரத்த புஷ்டியுடையவனும் உற்சாகத்தோடிருக்கிறான். அவனுடைய முகச் செழிப்பினாலேயே அவன் தேகாரோக்கியமும் மேனி வளர்ச்சியும் பலமுமுள்ளவனென்று எவ்வளவு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது பார். மற்றவன் முகத்தைப் பார்த்தாலோ, வெறுத்து, தேகங்குன்றி மன உற்சாகமும், முகக் குளிர்ச்சியும் கொஞ்சமேனுமின்றி, வியாதியால் பீடிக்கப்பட்டு அவன் பூமிக்குப் பாரமாகத்தானே உயிர் வாழ்ந்திருப்பவனைத் தோன்றுகிறானல்லவா!

சுந்.—என்னையும் இரண்டாவது படத்து மனிதனோடு சேர்க்கவேண்டியதுதான். தேக அசௌக்கியத்தினாலும், அது காரணமாயுண்டாகும் மனச்சஞ்சலத்தினாலும் நான் இவ்வுலக வாழ்க்கையில் பிரியமற்றவனாக இருக்கிறேன். ஆனால் என்னைப் பற்றிப் பேசும்பொழுது, பலரும் "அவனுக்கென்ன குறை! வீடு வாசல் நிலம்தோட்டம், பங்களா, எல்லாச் சம்பத்தும் இருக்கின்றன, அவன் பூர்வ ஜன்மத்தில் புண்ணியஞ் செய்தவன்." என்று சொல்லுகிறார்கள். உண்மையைக் கவனித்தாலோ, நான் பூர்வ ஜன்ம வினைவசத்தால் இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியில் இருக்கிறேனென்று சொல்லவேண்டும். எனக்கு என்ன சம்பத்து இருந்தும் என்ன பயன்!

ஆசி.—உன் நிலைமையைப் பார்க்க எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்றபடி இவ்வுலக இன்பங்களை அநுபவிப்பதற்குப் பொருள் ஒரு முக்கிய கருவியாக இருந்தபோதிலும், பொருள் இருந்தால் பாத்திரம் சுகமுண்டாகிவிடும் என்பதற்கில்லை. ஒருவன் வயோதிகராயிருந்தாலும் ரோகமின்றி நிடகாத்திரனும், தான் சுகமாயிருப்பதுடன் பிறருக்கும் உபகாரம் செய்யக்கூடிய நிலைமையிலிருப்பதுதான் பெரும் பாக்கியம். ஆனால் ஒன்று சொல்லுகிறேன். பூர்வ ஜன்ம புண்ணி

யப் பலனாகவே என்றபடி வெறுமனே வேதாந்தம் பேசிக்கொண்டு தூங்கிக் கொண்டிருப்பது நலமன்று. தேகசுகமில்லாத மனிதர்களது நிர்ப்பாக்கியத்திற்குக் காரணம் இந்த ஜன்மத்திலேயே அவர்கள் சரியாய்த் தங்கள் தேக சுகத்தைப் பேணிக்கொள்ளாததுதான்.

சுந்.—அப்படியானால், நல்ல சௌக்கியத்தோடிருக்க என்ன செய்ய வேண்டுமென்று தயைசெய்து சொல்லுங்கள்.

ஆசி.—ஒரு மனிதன் யாதொரு வியாதியுமின்றி தன் தேகத்தை எப்பொழுதும் ஆரோக்கியஸ்திதியில் வைத்திருப்பதற்குப் பகீரதப் பிரயத்தினம் ஒன்றுஞ் செய்ய வேண்டியதில்லை. சாதாரணமாய்க் கடவுள் கொடுத்திருக்கும் இயற்கை யறிவைக்கொண்டு தன்னைச் சுற்றியிருக்கும் பிரபஞ்ச இயல்களையும் தன் தேக அமைப்பையும், அவயவங்களின் தொழில்களையும் நன்குணர்ந்து அவற்றிற்குத் தக்கபடி நடந்துவந்தால் அவன் சுக ஜீவியாய் வாழலாம். கடவுள் சிருஷ்டித்திருக்கும் பொருள்களில் நமது சரீரமானது வெகு விசித்திரமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அது உபயோகமுள்ள பற்பல கருவிகளையும் நுட்பமான இயந்திரங்களையும் அடக்கியுள்ளது. அவற்றின் தன்மைகளை அறியாமல் சரீரத்தைப் போஷித்து உயிர்வாழ்க்கை செய்ய எத்தனிப்பது கடலிலே பார்த்திராத ஒருவன் கப்பலை நடத்தப் புகுவதோடொக்கும். ஆகவே ஒருவன் சரீர இயல்களைச் சற்று அறிந்து ஆரோக்கியசாஸ்திரப்படி ஆரோக்கியத்திற்கு ஆகாரமான நிலைமைகளையும் உணர்ந்து அவ்வாரோக்கியத்தைப் பேணும் முறைகளை அநுஷ்டித்துவருவானாகில், அவன் சுகதேகியாயும் தீர்க்காயுஷ்டையவனாயும் வாழ்வான் என்பதற்குச் சந்தேகமில்லை.

சுந்.—சரி; ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். மனிதன் ஆரோக்கிய சாஸ்திரவிதிகளை அனுசரித்து நடந்தால் வியாதியின்றி வாழலாமென்கிறீர்கள். நம்மைச் சுற்றியிருக்கும் பறவை மிருகாதி ஜீவன்கள் எந்த விதிகளைக் கவனித்து நடக்கின்றன! அவைகளுக்கு இருக்கும் சுகமும் சந்தோஷமும் மனிதனுக்கு ஏன் இல்லை? புத்திவிசாலமும் பகுத்தறிவும் தாகாரிகமும் உள்ள மனிதனுக்கு உண்டாகும் பலவித கொடிய ரோகங்கள் அவைகளுக்கு இல்லையே.

ஆசி.—வாஸ்தவந்தான். கடவுள் எல்லாவித உயிர்களுக்கும் தன்தன் பாதுகாப்பிற்குப் போதுமான இயற்கையறிவைக்கொடுத்திருக்கிறார். கேவலம் காகம் அடிக்கடி ஸ்நானஞ்செய்து தன் தேகத்தைச் சுத்திசெய்து கொள்ளுகிறதல்லவா. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதற்கு அத்தாட்சியாகத் தான் குஞ்சுபொறிக்குஞ் சமயத்தில் தன் குடியபத்திற்காகப் புதிதாய்ச் சுத்தமான கூடு கட்டிக்கொள்ளுகிறதல்லவா. நாய் பூனை முதலியன மலஜல விசர்ஜனம் செய்யும்போது ஒதுங்கின இடம் பார்த்து கால்களினாற் பறண்டி பள்ளந்தோண்டி அசுத்தத்தை மூடுகிறதைப் பார்க்கிறோமல்லவா. அவற்றைவிட மனிதனுக்கு இவ்விதமான இயற்கையறிவு அதிகமாகவே இருக்கிறதுந் தவிர, அதற்கு மிகவும் உயர்ந்ததான பகுத்தறிவு என்ற ஒன்றும் இருக்கிறது. ஆனால், அவன் சாதாரணமாகத் தன் அறிவிற்குத் தோன்றும் சுகாதார விதிகளை மீறி நடக்கிறான். திருஷ்டாந்தமாக ஆகார விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோமே. ஒரு மாடு அலலது குதிரை தனக்குத் தொன்றுதொட்டு ஏற்பட்டுள்ள புல் கொள்ளு முதலியவற்றைப் புசித்து வாயிற்றை நிரப்பிக் கொள்ளுகிறது. அதைவிட மேலான ஆகாரம் வேண்டுமென்று தேடுகிறதில்லை. தனக்குப் பசி தீர்ந்தபோதும் மேலுக்குமேல் தீனியைச் செலுத்தாமல், இரைப்பை நிறைந்ததும் ஜீரணக் கருவிகளுக்குப் போதுமான இளைப்பாறுதல் கொடுத்து மீண்டும் பசியுண்டான வுடன்தான் ஆகாரத்தை உட்கொள்ளுகிறது. ஆனால், மனிதனோ நாக்கோமும் ஔசுவரியமும் தனக்கு அதிகரிக்கவே, "முந்நிரிமேற் காணி நிமுத்தடிமேற் கீழதன்னே இந்நிரை யென்னிவிடும்" எனபதற்கு ஒப்ப மேலேயுந்திர மேற்கங்கள் அடைய விரும்பி, கடவுளின் இயற்கைப் பொருள்கள் போதாவென்று அவற்றுடன் நாவிற்குப் பலவித சுவைகளைக் கொடுக்குஞ் செயற்கைப் பொருள்களையும் சேர்த்துப் பக்குவஞ் செய்து புசிக்கின்றான். மேலும், தனக்கு விசேஷமாகக் கிடைத்திருக்கும் புத்தியையே மூலாதாரமாகக்கொண்டு பிரகிருதியின் தன்மைகளைக் கவனியாமல், இயற்கைக்குமீறி நடக்கவும், அதனால் வரும் கெடுதிகளைத் தடுக்க யும் உபாயங்களைத் தேடுகிறான். நமது முன்னோர்கள் நம்மைவிட [illegible]

நீடித்த ஆயுளுடையவர்களாய் இருந்துவந்தமைக்குக் காரணம் என்ன? அவர்கள் பரம்பரையாய் ஒரேவித உணவை ஒரே பக்குவமாய்ச் சமையல்செய்து மிதமாயும் காலக்கிரமமாயும் புசித்து வந்தார்கள். தற்காலத்திலோ மனிதன் தன் தேகத்தின் சுபாவத்தைக் கொஞ்சமும் கவனியாமல் அதற்கு ஒத்துக்கொள்ளாத உணவையுங்கூடப் பலவகைப் பக்குவஞ்செய்து புசிக்கிறான். அப்படி ஒத்துக்கொள்ளாது வியாதி மேனிட்டாலும் அதை பணி மந்திர ஔஷதங்களாற் கொண்டு குணப்படுத்திக்கொள்ளலாமென்று நினைக்கிறானே யன்றி அவ்விதம் உண்ணுமலிருப்பதைப்பற்றி எண்ணுகிறதில்லை. இவ்வாறு உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத போஜனத்தை முதலில் சற்று அருவருப்புடன் ஏற்றுக்கொள்ளும் நாவிற்கு அதனுடன் பழகப்பழக, இயற்கைச் சுவை மாறி விபரீதமான வழக்கச் சுவை ஏற்படுகின்றது. அன்றியும் மிருகங்களைப்போல் மனிதன் வயிறு நிரம்பிய பின்னும் உண்ணுமலிருப்பதில்லை. உருசியுள்ள ஆகாரங்கிடைத்தால் மிகமிஞ்சிப் புசிக்கவும், இருநாள் உணவை ஒருநாளைக்கு ஏற்கும்படி செய்பவும் பழகிய மனிதர் அநேகமுளர். கேவலம் நாய்கள் கூட வாரத்தில் ஒருதரம் இரண்டுதரம் உணவை வெறுத்துச் சும்மா கிடக்கின்றனவல்லவா? ஒரு இயந்திரத்தைச்சற்றும் ஓய்வு இல்லாமல் சதாகாலமும் வேலை செய்வித்தால் அதன் கருவிகள் சீக்கிரம் கெட்டுப்போகுமன்றோ! கடவுள் நமது தேகத்தையும் ஜீரணக் கருவிகளையும் இடைவிடாது உழைக்கும்படி அமைக்கவில்லை. மனிதன் எப்படிப் பகலில் பாடுபட்டு இரவில் இளைப்பாறிச் சரீரபரிகாரஞ் செய்துகொள்ளுகிறானோ அதுபோலவே அவனுடைய வயிறு குடல் முதலிய ஜீரணக் கருவிகளுக்கும் அடிக்கடி இளைப்பாறுதல் கொடுத்தால்தான் அவன் சுகமாய் வாழலாம். இதை உத்தேசித்தல்லவா நமது முன்னோர்கள் விரத நாட்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அன்றியும் மனித சுபாவத்தில் உண்டாயிருக்கும் தூர்க்குணங்களை மாற்றி நற்குணங்களை விர்த்திசெய்யவும் அவ்விரதங்கள் அநுகூலஞ்செய்கின்றன. உபவாசமிருந்து விரதங்களை அனுஷ்டிப்பதால் தேகத்திலுள்ள பல வித மலங்கள் நிவர்த்தியாய் நாடிகள் சுத்தப்படுவதால் மனோ

நிலைமை ஸ்திரப்பட, நன்மையான விஷயங்களே எற்றுக்கொள்ள மனம் பருவப்படுகிறது. ஆனால் தற்கால மனிதன் விரத நாட்களில் உபவாசமிருப்பதை அல்லது ஒருவேளைக்கு பாத்திரம் உணவு உட்கொள்ளுவதை, விட்டு அஜீரணத்தை உண்டாக்கும் பக்ஷணங்களால் வயிற்றை நிரப்பி விரத நாட்களை விருந்து நாட்களாகக் கொண்டாடுகிறான். இது நிற்க, கடந்த நெய்வப் புலமை திருவள்ளுவ நாயனர் "மருந்தென வேண்டாவாம் யாக்கை கருந்திய கற்றது பொற்றி யுணின்", என்று வெகு அற்புதமாய்க் கூறியிருக்கிறார். அதன் கருத்தென்ன? ஒருவன் முதலில் உட்கொண்ட ஆகாரம், நன்றும் ஜீரணமாயினபின் திரும்பவும் உண்பானானால் அவன் தேகத்துக்கு மருந்து என்ற காமதேயமே தேவையில்லை என்பதாம். காங்கள் முதலில் உட்கொண்ட ஆகாரம் ஜீரணமாகுமுன் அதை தக்க வாந்திபருந்தாவாது வேறு விதத்தாலாவது பிரயாசைப்பட்டு வாந்திபெடுத்துவிட்டு, திரும்பவும் வேறுஉணவு உட்கொள்ளப் புகுவதும் சில நாகரிகமான்களுக்கு வழக்கமென்றும் கேட்டிருக்கிறோம். சம்மில் அநேக குழந்தைகள் சிசுக்களாயிருக்கும்போதே அஜீரணவியாதியினால் பீடிக்கப்பட்டு அகால மரணமடைவதன் காரணமென்ன? இவ்விதியைக்கவனியாமல் நடந்துவரும் பெற்றோர்களின் விவேகமின்மையே அல்லவோ? குழந்தை அழுகிற பொழுதெல்லாம் அதற்குப் பதியென்றெண்ணிப் பால் கொடுத்து மட்டுக்கு மிஞ்சிய ஆகாரத்தை புசிக்கும்படி செய்து அஜீரண வியாதியை வருவித்து அவற்றைப் போக்கும்பொருட்டு உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத பல விதமருந்துமாயங்களைக் கொடுத்துச் சாகச் செய்கிறார்களே. இது எவ்வளவு பரிதாபமான காரியம்! ஆகவே, சுருக்கம்! நீ கேட்ட விஷயத்தில் மனிதனுக்கும் மிருகத்துக்கும் முக்கியபான பேதம் என்னவென்றால், மனிதன் தன் சுபாவ இயல்களை அடக்கியஞ்செய்து இயற்கை விரோதமாய் நடந்து அதன் தண்டனையாகக் கிடைக்கும் வியாதியை அனுபவிக்கிறான். மிருகமோ தன் சுபாவ நிலைமையைக் கைக்கொண்டு இயற்கை வழியில் நடப்பதினால் மனிதனை உபாதி செய்யும் பலவித ரோகங்களினின்று அநேகமாய் தப்பி, நீண்ட சுகத்துடன் காலத்தைக் கழிக்கின்றன.

கர்—தர்களின் செய்கையிலும் காரணங்களெல்லாம் நியாயமாகவே இருக்கின்றன. சரி—மனிதனுக்கு நியாயி வசாடல் தடுக்கக் கடிய முறைகளைச் சற்று விஸ்தாரமாகக் கரித்துக்காட்ட வேண்டுகிறேன்.

(தொடரும்)

கே. முத்துக்கிருஷ்ணபிள்ளை.

ஸ்ரீமத் மத்வாசாரிய சுவாமிகள் சரிதம்.

சத்தியமே யுலகுக்குத் தாய்கமான் சமயமெனச் சார்பொன்றின்றி நித்தியமாய்ச் சமரசமாய் நினைப்போர்க்கு கலம்பயக்கு நெறியாய் நிற்கு முத்தமமான் கொள்கைதனை யுலகதனி னிலைபெறவே யுரைத்த செம்ம மத்வமத வாசிரியர் திருவடியை மனத்திருத்தி வணங்கி வாழ்வோம்.

ஸ்ரீமத் அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய் விளங்கும் பரம்பொருள் பல்வேறு திருமேனிகொண்டு பல சமயங்களிலு முள்ள அடியார்களையும் ஈடேறச் செய்வதற்காக நம் முதுநூல்கள் முறையிடுகின்றனவாயினும், அவற்றுள் பேதமின்றி பொதுநோக்கமுடையதாக உள்ள ஒரு மதத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீ மத்வாசாரிய சுவாமிகளாவார். வாயுவின் அவதாரமென்று நம்மவர்களால் கொண்டாடப்பெறும் இப்பெரியார் சுமார் 750 வருடங்கட்குமுன்னர் உடுப்பி கேஷத்திரத்திற்கு அருகிலுள்ள பாஜக சேஷத்திரம் என்னும் கிராமத்தில் வந்தவதரித்த மத்யகேஹர் வேதவதி என்னும் உத்தம தம்பதிகளின் தவப்பயனாக உற்பவித்தனர். இறைவன் திருவருளால் அதியற்புத திருவிளையாடல் புரியத் தோன்றிய குழவியை மிகப் பாராட்டிப் போற்றி வளர்ப்பாராயினர். இளமையிலேயே சுவாமிகள் செய்த அற்புதங்களைக் கண்டு மகிழாதார்யில்லை. இவர் பள்ளியில் பயின்றுவருங்கால் உடன்பயிலும் மாணவனொருவன் தீராத் தலைவலியால் ஒருவராலும் நிவர்த்திக்கப்பெறாது வருந்துவதைக் கண்டு தமது வாயால் ஊதி ஆச்சரியப்படத்தக்க விதமாகத் தீர்த்ததுமன்றி, ஒரு சமயம் (மத்யகேஹரை) இவர் தகப்பனாரைக் கடன்காரன் வழிமறித்துத் தொந்தரை செய்ததைக் கண்டு அருகிலிருந்த புளியங்கொட்டைகளை வாரி அவன் கையில் போட்ட அவை அவனுக்குச் சேரவேண்டிய தொகையளவு பொன்னாக மாறிவிட்டது. சிறு குழவியாயிருக்குங்கால் பல சமயங்களில் காணமற்போய் அரியற்புதமாகப் பின்னர் தோற்றப்பட்டதால் இவரை ஒரு தெய்வீகக் குழந்தையென்றே எல்லோரும் மதித்து அன்புசெலுத்துவாராயினர்.

இவர் தமக்குக் கல்வி பயிற்றுவித்த குருவிற்கும் ஒரு சமயம் இரோய் உபதேசத்தின் ரகசியத்தை உபதேசித்துப் பக்தியின் சிறப்பை விளக்கினர்.

உபநயனமானபின்பு, உடுப்பியிலுள்ள அச்யுதப்ரேக்ஷர் என்ற ஓர் ஆசிரியரை யடைந்து அரிய ரகசியப்பொருள்களை ஆராயத் தொடங்கியதில் துறவறமே மேலானதென உணர்ந்து சந்நியாசக்கோலங்கொள்ளத் தணிந்தனர். அதையறிந்த இவர் தகப்பனார் (மத்யகேஹர்) மறுக்க, தமக்குச் சகோதரன் உற்பத்தியாகுமளவும் பொறுத்திருப்பதாக வாக்களித்து மறு சகோதரன் உதித்ததும், தமது தாயாருக்கு வேண்டிய ஆறுதல் கூறி விடை பெற்றுக் குருவிடம் சென்று சந்நியாசக்கோலம் தாங்கி, "பூர்ணபிரஜ்ஞர்" என்னும் திருநாமம் பூண்டு, தீர்த்த யாத்திரை புரிவாராயினர். வழியில் விஷ்ணுமங்கலம் என்னும் கிராமத்தில் வீமனைப்போல் பேருண்டி யுட் கொள்ளல், குறைந்த வஸ்துக்களை அதிகமாக்கல் முதலிய அற்புத சக்திக ளைப் பிறர் அறியக் காண்பித்ததுமன்றி, அங்கேகரோடு வாதஞ்செய்து வெற்றிபெற்று, திருவனந்தபுரம் அணுகி அவ்விடம் விஜயம் செய்திருந்த ஸ்ரீங்கேரி வித்தியா சங்காரைச் சந்தித்து இருவரும் நீண்டகாள் அரசன் சமுகத்தில் வாதபுரிய ஒருவரும் ஜயம் பெறுததால் நம் சுவாமிகள் உடுப் பிக்குத் திரும்பினர். உடுப்பி வந்து தாம் கொண்டிருக்கும் துவைத சித் தாந்தத்திற் கிசைய பகவத்கீதைக்கு ஒரு வியாக்கியானம் செய்தனர். பின் னர் மேரே ஹரித்துவாரம் போய், அங்கிருந்து பத்ரிகாச்ரமம் சென்று, ஆண்டு ஓரிடத்தில் தமது சிஷ்யர்களை நிறுத்திவிட்டு, பாறை பாறையா யாகத் தாண்டி மிக்க சிரமத்துடன் வேதவியாசர் ஆசிரமம் அடைந்து, அங்கு அவரிடம் உபதேசம் பெற்று பிரம்ம ஸூத்திரத்திற்கு வியாக்கி யானம் செய்தனர். பின் வங்காள தேசம் போய், அங்கே தமது மதத்தை ஸ்தாபித்து, ஜகந்நாதம் சேர்ந்தார். அவ்விடத்தில் சோபன்ன பட்டர், சாமி சாஸ்திரி என்னும் இருவர்கள் இவரிடம் தர்க்கம் செய்து முறையே சிஷ்யராயினர். இவர்களில் சாமி சாஸ்திரி என்பார் சந்நியாசம்பெற்று நர கரி தீர்த்தர் என்னும் திருநாமம் பெற்றனர். இவரால்தான் தெலுங்க நாடு முற்றும் மத்வ மதம் பரவியது. பின்பு கலிங்க தேசத்தில் அரசன் சிறுவனுக விருந்தபடியால், அரசாங்க காரியங்களை உடனிருந்து கவனிக்கும் வண்ணம் நரகரி தீர்த்தரை விடுத்து உடுப்பிவந்துசேர்ந்து தனது ஆசாரியரான அச் யுதப்ரேக்ஷரிடத்தில் வியாசரிடம் தாம் கேட்ட அற்புத விஷயத்தைக்கூறி, தாம் எழுதிய ஸூத்ர பாஷ்யத்தையும் அவருக்குக் காண்பித்து, தமது சித் தாந்தத்திற்கு இசைய வேண்டினர். அதன்படி அவரும் இசைந்து துவைத சித்தாந்தத்தை அனுசரிக்கலாயினர். இக்கொள்கையைப் பின் பற்றுவோர் அனைவரும் விஷ்ணுவின் ஆயுத முத்திரைகளைத் தமது தேகத் தில் அணிந்துகொள்ளவேண்டுமென ஓர் நிபந்தனை செய்தார்.

ஒருநாள் நமது சுவாமிகள் சமுத்திர ஸ்நானம்செய்துவிட்டுக் கரை யோரமாக இருந்து பகவத்தியானம் செய்துகொண்டிருக்கும்போது ஓர்

கப்பல் அலையின் வேகத்தால் தத்தளித்துக் கவிழ்ந்து விடும்போல் இருப்ப தைக் கண்டு தமது சிறு வஸ்திரத்தால் அக்கப்பலை அழைப்பது போல் சமிக் கைசெய்ய, கப்பல் யாதொரு அபாயமின்றி கரை சேர்ந்தது. அதிலிருந்த கப்பற்றலைவன் சுவாமிகளிடம் மனுகி அநேக பரிசுகள் கொடுத்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டியும் அதற்கு உடன்படாது. சில கோபிச்சந்தனக் கட்டிகள் மட்டில் பெற்றுக் கொண்டு, அதில் பெரிதாக விருந்த ஒன்றை உடைத்துப் பார்க்க கையில் மத்து தாங்கி நிற்பது போன்ற கிருஷ்ண விக் ரகம் ஒன்று இருந்தது. அதைக்கண்டு மத்வர் பக்தி பரவசமாய் கிருஷ்ணன் பேரில் துவாதச ஸ்தோத்திரம் என்னும் கிரந்தமும் இயற்றியருளினர். பின் உடுப்பியில் ஒரு ஆலயம் எற்படுத்தி அதில் அவ்விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து அதற்குப் பூஜை முதலியவைகள் குறைவிலாது நடைபெறுதற்காக எட்டு மடங்களை ஏற்படுத்தி, பூஜை முறைகளையும் ஏற்படுத்தினர். அடுத்த முறையும் பத்ரிகாச்ரமம் போகப்புறப்பட்டு வழியில் மகம்மதிய அரசர்க ளுடன் அவர்கள் பாஷையில் பேசி அவர்களோத் திருப்தி செய்வித்து வியாச ரிடத்திற்குச் சென்றார். அவரிடத்தில் எட்டுச் சாளக்கிராமங்களைப் பெற்றுக் கொண்டு, "மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்" என்று ஓர் நூல் இயற்றவும் அதுமதி பெற்றுக்கொண்டு, துவைதமத சித்தாந்தத்தையும் நிலைநிறுத்திக் கொண்டு உடுப்பி வந்துசேர்ந்தார்.

மத்வர் தமது மதத்தைப் பரவச்செய்து ஜயம்பெற்று வருவதையும், தமக்கு முன்னிருந்த வித்யாசங்கரருடன் திருவனந்தபுரத்தில் அரசனெதி ரில் வாதபுரிந்தாரென்பதையும் அப்போது ஸ்ரீங்கேரியில் இருந்த பத்ம தீர்த்தர் என்பார் அறிந்து அம்மதம் பரவாவண்ணம் மத்வ மதத்தைப்பற்றிக் குற்றங்கூறச் சில பிரசங்கிகளையும் ஏற்படுத்தி எங்கும் சென்றுபிரசங்கிக்க ஏற்பாடு செய்ததுமன்றி மத்வரது மத விஷயமான அரிய கிரந்தங்களை யும் தந்திரமாகக் கவர்ந்து கொள்ளவும் ஏற்பாடுசெய்தார். புஸ்தகங்கள் காணமற் போனதை யறிந்து மத்வர் அருகிலிருந்த ஜயசிம்மன் என்னும் அரசன் உதவியால் அவைகளைப் பெற்றுக்கொண்டு விஷ்ணுமங்கலம் என் னுங் கிராமத்தில் உபந்நியாசம் புரியச்சென்றனர். அவ்விடம் உபந்நியாசம் புரிகையில் திருவிக்கிரமர் என்ற ஓர் பெரிய பண்டிதர் இவருக்குச் சிஷ்ய ராஞர். அவரால் மத சித்தாந்தங்கள் மிகவும் பரவ அதைப்பலரும் அங்கீகரித் தனர். இவரது வேண்டுகோட் கிணங்கி மத்வர் பிரம்ம ஸூத்திரத்திற்கு ஓர்விஸ்தாரமான வியாக்கியானம்செய்தனர். திருவிக்கிரமரதுபிள்ளையாகிய நாராயணாசாரியார் என்பவர் பின்னர் மத்வரது சரித்திரத்தை 'மத்வவிஜயம்' என்ற காவியமாகச் செய்தார். ஸ்ரீ மத்வரது தந்தையும் தாயும் ஒருவர்பின் ஒருவராக இறைவன் திருவடி நிழலையடைய இவரது சகோதரர் பெற் றோர்கட்குச் செய்யவேண்டிய சமக்கடன்களை முடித்துவிட்டுத் தமது சகே

சேர்ட்டத்திலேயே சந்நியாசம் பெற்றுக்கொண்டு உபநிஷதங்களில் ஒருமடத்திற்குத் தலைவராக இருந்துகொண்டு சங்கியாச ஆசிரமத்தை எல்லோருக்கும் அனுஷ்டித்துக் காட்டினார். கலியுக தேசத்திலிருந்த ராகவ தீர்த்தர் வெகுகாலம் சென்றபின் அரசாங்கத்தை அரசனிடம் ஒப்புவித்து விட்டு அவனிட்டமிருந்த ஸ்ரீராம சீதா விக்ரகங்களைப் பரிசாகப் பெற்றுக் கொண்டு உடுப்பி வந்து மத்வர்பால் அளிக்க அதை அவர் தமது தோளையில் சிறிதுகாலம் வைத்துப் பூஜித்து வந்தார். பின்னர் 79-வது வயதில் தோளை முடிந்தவுடன் தமது சிஷ்யர்கட்கு நிதிரேய உபநிஷத்தை உபதேசம்செய்து கொண்டிருக்கையிலேயே தமது ஜீவபுலனும் ஒடுங்க மத்வர் நிறைவனது பாதாரவிந்த நிழலே யடைந்தனர். சுபம்.

. தீ. வடிவேலு முதலியார்.

தமிழ்ப்பெண்கள் தகைமை

ஓர் புதிய பாட்டு.

(குறிப்பு.—இப்பாட்டில் கூறப்படும் தகைமைகளோ, தற்காலத்துத் தமிழ்ப் பெண்களுக்கு அவசியமாக வேண்டியவைகள். இத்தகைமைகளோ பொதுத்தனவாகவே, மிகப் புராதன தமிழ் நாகரிகத்திலும் வேதங்கள் ஏற்பட்ட ஆதி ஆரிய நாகரிகத்திலும் பெண்மையிலும் இருந்தனவென்று, தக்க சாதனங்களைக்கொண்டு சரித்திர ஆராய்ச்சி செய்யின் தெற்றென விளங்கும். மத்திய காலங்களில்தான் பல நிமித்தியங்களால் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆகவே இப்பொழுது கூறும் பெண்கள் தகைமைகள் இந்நாட்டிற்குப் புதிதானவை என்றுஞ் சொல்லலாகாது. புதுமையோ, பழமையோ, அவை தற்கால உலகியலுக்கு இன்றியமையாதனவை.)

ஆதந்தக் களிப்பு மெட்டு.

1. சுத்தச் சொற்களை யூடிப்—எங்கள்
   சொந்தச் சுவைத்தமிழ்ச் சோலை துலங்க
   சத்தஞ் சாரதை யன்னை—நிறை
   கனியுறு கன்னெஞ்சி சார்ந்திரு நாடி

2. வென்றி மணிமுடி தாங்குப்—எங்கள்
   தேவர்தன் ஜியார்ஜு விழைந்து பதித்த
   தென்று நினைவிடு நாடு—எங்கள்
   நெஞ்சினில் நீங்கா நெய்ப்பிடி நாடு

3. முரண்வை பதுக்கிடு தாள்பாள்—அரி
   பாசனத் தேய்த்து கடாதகை டாதுப்
   சிவன்னி யரசு புரிந்தார்—என்ற
   சீரினிற் பிருந்து சீரிய நாடு

4. வந்நிறம் இன்பமிழ் நாடு—என்ற
   சுடன் செழும்பசுங் காப்பகைக் கொப்பில
   பூந்தடம் பொன்மணைப் பூக்கள்—என்னை
   பொங்கு புழுறும் பூவையர் நாங்கள்.

5. வாடாத மாமலர் ஒப்பு—என்றும்
   வண்ண வசிகரம் வாழ்முகத் தோடு
   பீடாருங் கம்பீரக் கன்னம்—எங்கள்
   பேச்சு கடைகளில் பேணிடிப் பெண்கள்

6. கல்விக் கடலிற் கனிந்தோர்—அந்தக்
   கல்விக் கடல்வினா யாடும் அரங்கம்
   கல்விக் கடல்எங்கள் காவல்—மற்று
   கல்மண் மனிக்களில் காவலொன் றில்லை.

7. தூவினைப் போல்வருஞ் சேலை—அதி
   தூய்மை யுவம்பெரு சோக்கும் திறத்த
   மாலியல் மங்கையர் என்றும்—உயர்
   மாண்புறு மக்களை மாதிலைத் தீவர்.

8. மோனைக் கருங்கடல் மூழ்கு—ஒரு
   முதலாயில் ஒன்றி முடங்கி பொதிக்குப்
   கோழைக் குறுங்கொள்கைப் பெண்கள்—எல்
   கூரிய மக்களைக் கொண்டிவ ரோ.

9. மங்கை மடந்தைப் பருவக்—கொடி
   மற்றதன் பின்னுப் மனைத்து மலர்ந்து
   பொங்குறு காதற் புனிதப்—கிளர்
   புன்னிய நாதனைப் போற்றி மணந்து.

10. பின்னுப் இரட்டைக் கொடிகள்—எலப்
    பேதமி லாத சமத்துவப் பேறு

மின்னி மிளிர்ந்திரு மெய்மை—உறும்
பீச்சுக வாழ்க்கையை மேவிடும் பெண்கள்.

11. நாதகள் பற்பல சென்று—டல்
நாக நிகங்களி லாதிகள் தேர்ந்து
தீதறு நல்வழி யுனைத்துட்—எங்கள்
தீகபக்தி தீகப்பதி திருந்த வமைப்போம்.

பொன்னம நலநாடி.

ரசிகை.

ஓர் நவீன தமிழ் நாடகம்.

காப்பு.

பரசிவம் பரிவொடு பயந்திடு புதல்வரும்
பிரசமார் மலர்வழி பெதும்பையு முளங்கொடி
முரசறைந் தெனவிசை முழக்குற வவனியி
லிரசிகை யெனுங்கதை யினிப்புற வியம்புவாம்.

அங்கம்-1. காட்சி-1.

(சரஸ்வதிபுரி என்ற நகரில் அரசனது மாளிகைக்குப் புறத்தேயுள்ள ஓர் வனம். மாலைப்பொழுது. ஓர் வைத்தகன் புத்திரனாகிய கண்ணன் வருகிறான். தனிமையிற் சிந்திக்கின்றான்.)

"ஹா! என்ன வேலையிது! நாங்கள் அகத்தைவிட் டகன்றோம்! என்சகோதரன் மீதேறித் தொடர்ந்தோடி நெடுதூரமாயிற்றே. அந்த வசிகர மான் அவனை எங்கே அழைத்துச் சென்றதோ! அவனுக்கு என்ன தீங்குற்றதோ! நான் அவனைப்பிரிந்ததே பெரும்பிழை. அவன் மானைப் பிரியாது தொடர்ந்தோடியவாறு காணும் அவனைப் பிரியாது ஒடியிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறுதானே இவ்வளவு தூரம் ஓடிவந்தேன். என் சகோதரன் என்னை நோக்கி, "கண்ணா! இனி என்னைநி ஓடிவருவதை விட்டு யான் வருமளவும் இவ்வசோக விருக்ஷத்தருகேயே இரு எனச் சொன்னமையாற்றான் நான் நின்றேன். அண்ணனது ஆணைப்படி ஒழுகுவதும் ஆவசியகமல்லவா? ஸ்ரீராமர் மாரீசனென்ற மாயமானைப் பின்தொடர்ந்தோடியபொழுது அவரது கட்டளைப்பிரகாரம் அவரது பிரிய சகோதரனும் பிரியாச் சகோதரனுமாகிய லக்ஷ்மணர் தன் அகத்திற் கினிய அண்ணலைப் பிரிந்து நின்று விடவில்லையா? ஆகையால் என் மீது பிழை யொன்று மில்லை. (சிறிது நேரம் மௌனம்.) ஹா! பாழும் மனமே! என்ன எண்ணம் எண்ணுகிறாய்! நீ உன் சகோதரனைப் பிரிந்தது நியாயமென்று ஸ்தா

பிக்க என்னென்ன நியாயங்கள் தேடுகின்றாய்? இளையபெருமாள் சீதா பிராட்டி தனிமையில் இராவண்ணம் ஸ்ரீராமர் கட்டளைப்படி அவரோடு மானைப் பின்தொடர்ந்தோடலை ஒழித்து நின்றார். நான் எந்தப் பிராட்டியைக்காப்பதற்கு நின்றேன்? தனிமையெனும் தையலைக் காப்பதற்கோ? அல்லது இவ்வசோகத் தருவாகிய அணங்கினைக் காப்பதற்கோ? அண்ணா! அண்ணா! எப்பொழுது திரும்பி வருவாய்? நாம் எப்பொழுது இல்லிற்குச் செல்வது? இந்த கணத்திலேயே நமது வீடுநோக்கிப் புறப்பட்டாலும் வீடு சேர்வதற்கு நள்ளிருளாகுமே. நாம் வழக்கம்போல் தீபமேற்றுவதற்கு முன்பு இன்று வீட்டிற்குத் திரும்பி வராமையால் நமது அன்னையும் தந்தையும் எவ்வாறு வருந்துவார்களோ? என் செய்வேன்! என் சகோதரன் சென்ற வழியே சென்றேனும் அவனைத் தேடுவேன். (சிறிது தூரம் நடக்கின்றான். பின்பு திடீரென நிற்கின்றான்.) என்னவேலை செய்கின்றேன்? "யான் வருமளவும் இவ்விடத்திற்றானே இரு" என்று என் சகோதரன் எனக்குக் கட்டளையிட்டிருக்க நான் அக்கட்டளையை மீறி இவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து சென்றால், அவன் ஒரு கால் வேறு வழியாய்க் குறித்த இடத்திற்கு வந்து என்னைக் காணாது தேடி அலைந்தாலும் அலைவனே. அவன் மானைத் தொடர்ந்தலைந்ததுமன்றி என்னையும் தேடி அலைவதற்கோ நான் குறித்த இடத்தைவிட் டகன்றேன்! (மீண்டும் அசோக மரத்தருகே வருகின்றான்.) அண்ணன் வரும் வரையில் இவ்விடத்திற்றானே இருப்பேன். (சிறிது நேரம் மௌனம்.) ஒரு கால் என் சகோதரன் எதேனும் இடருற்றிருந்தால் நான் இங்கிருப்பதிற் பயனென்ன? அவனைத் தேடியே செல்வேன். (சிறிது தூரம் சென்று நிற்கிறான்.) வீரலக்ஷ்மி சகுனியிருக்கும் எனது சகோதரனுக்கு என்ன தீங்கு நேரிடும்! அவன் வேறு வழியாய்த் திரும்பிவந்தால் என்னைக் காணாது எவ்வாறு வருந்துவான்! ஆகையால் நான் முன்பிருந்த இடத்திற்கே செல்வேன். (மீண்டும் தன் முன்பு நின்றுகொண்டிருந்த இடம் நோக்கிச் சிறிது தூரம் வந்து பின்பு மீண்டும் நிற்கின்றான்.) ஆனால் மானைத் தொடர்ந்தோடியவன் வேறு வழியாய் வருவன் என்பதற்கு நியாயமென்ன இருக்கிறது? அவன் சென்றவழியே அவனைத் தேடிச் செல்வதுதான் உசிதம்." (நிலத்தைப் பார்த்து ஆலோசித்துக்கொண்டே மறுபடியும் போகின்றான்.)

(அவனது சகோதரன் ராமணன் மெல்ல நடந்து அவன் முன்பு நிற்கின்றான்.)

கண்ணன்:—(புன்னகையுடன்) அண்ணா!

ராமணன் :—கண்ணா! நீ அவ்வசோக விருக்ஷத்தைப் பிரிந்து சென்றதையும், மீண்டும் அதனருகே சென்றதையும் மீண்டும் அதைநோக்கிச்

செல்வனையும் கண்ணுற்றவுடனே, ஸுராஜன் தன் காதலியைப் பிரியும் பொழுது "செல்லும் வெற்றியோடு செல்லக்காலெழு தொல்லையின் மீளும்" என்ற அரிவீரராம பாண்டியன் மொழிகள் என் ஞாபகத்திற்கு வந்தன.

கண்ணன்:—நீ எப்படி அண்ணை, நான் சென்றதையும் மீண்டதையும் அறிந்தாய்?

ரமணன்:—நான் வெகுதூரத்திலிருந்தே உன்னைப் பார்த்துக் கவனித்துக்கொண்டே வந்தேன். நீ உன் ஆலோசனையிலேயே கருத்தாயிருந்தபடியால் நான் எதிரே வருவதைக் கவனிக்கவில்லை.

கண்ணன்:—அந்த மான் எவ்வாறு பிற்றண்ணை?

ரமணன்:—உன்னைக்கண்டதும் மானை மறந்தேன். கண்ணை! நீ அம்மானைப்போன்ற அழகிய பிராணியை எப்பொழுதாவது பார்த்திருக்கின்றனையா? அதைப்பற்றி நினைக்கும்பொழுதே என் உள்ளம் எவ்வளவு குதூகலமடைகின்றது. அம்தோ! அது என்கைக்கப்படாமற் போயிற்றே. அதைக் கொல்ல எண்ணியிருந்தால் கூணத்திற் கொன்றிருப்பேன். ஆனால் அவ்வளவு சுந்தரம் வாய்ந்த ஜந்துவின் உயிரைப் போக்க எந்தப் பாதகனாவது துணிவான்! அதை உயிரோடு பிடித்து நமதகத்திற்குக் கொண்டுபோகவுமென்றெண்ணினேன். என் எண்ணம் நிறைவேறுமற் போயிற்றே. கண்ணை! நாம் அகத்திற்குச்சென்றதும் நீ அம்மானைப்போன்ற உருவத்தை எனக்குச் சித்திரித்துக் கொடுக்கவேண்டும்.

கண்ணன்:—அண்ணை! அந்த மானின் சௌந்தரியம் அற்புதமானதே. நான் உன்னைப்போல் அதை நன்றாய்க் கவனித்துப் பார்க்கவில்லை. கவனித்துப் பார்த்திருந்தபோதிலும் என்னால் அத்தகைய சௌந்தரிய ஜந்துவின் உருவத்தைச் சித்திரிக்க இயல்வது அருமை. அவ்வாறிருக்க, மின்னலைப்போல் கணத்தில் என் காட்சிக்குப் புலப்பட்டு கணத்தில் மறைந்த மானின் உருவத்தை நான் எவ்வாறு சித்திரிப்பேன்? ஆகையால், "கிட்டாதாயின் வெட்டென மற" எனநமது மூதாட்டி மொழிந்தவாறு மானை மறந்து நாம் மனைக்குச் செல்வதைப்பற்றி ஆலோசிப்போம். நாம் இப்போதே நமது வீடு நோக்கிச் சென்றாலும் ஆண்டெச்சேர அர்த்தராத்திரியாகும். ஆகையால் இவ்வனத்திலேயே இவ்விரவைக் கழித்து பொழுது புலர்ந்ததும் நமது நகர்க்குச் செல்வோமா? ஆனால் அவ்வாறு செய்யின் இவ்விரவு முழுதும் நமது பிரிவாற்றாது நமது அன்னையும் தந்தையும் அல்லலுறுவார்களே. ஆகையால் இப்பொழுதே புறப்படுவோமா?

ரமணன்:—என்ன கண்ணை! மானும் அகப்படவில்லை. நீயும் அதன் உருவத்தைச் சித்திரியேனென்றனை. நாம் வழக்கம்போல் [illegible]

முன் வீட்டுக்குத்திரும்பி வராமையால் நமதுமாதாபிதாக்கள் வருந்திக்கொண்டிருப்பார்கள். இவ்வனமோ நாம் என்றும் பார்த்திராத வனம். இன்றோ திருவோணபக்ஷச் சதுர்த்தசி நிதி. இப்பொழுதோ சூரியன் அஸ்தமிக்கிற சமயம். ஆகையால் நாம் எவ்வாறு இப்பொழுது வீடுநோக்கிச் செல்வது? இவ்விஷயங்களினால் என் உள்ளம் உழன்று கொண்டிருக்க, நாகவிஷம்போன்ற ஓர் கொடிய தாகம் என் நாவையும் மிடற்றையும் தகிக்கின்றது. வெகுதூரம் ஓடியதால் மிகக் களைப்புற்றிருக்கிறேன். ஆனால் அந்த மான் மாத்திரம் என் கைக்கப்பட்டிருந்தால் இந்தக் களைப்பையும் நாக்கையும் சகித்துக்கொண்டு அகமலர்ந்து முகமலர்ந்து நமதகநோக்கிப் புறப்பட்டிருப்பேன். அந்தோ! மான் மறைந்துவிட்டதால் என்மனம் மயக்குறுகின்றதே! கண்ணை! என் நாவுமுற்றும் வறண்டுவிட்டது. ஜலம்! ஜலம்! ஜலம்! ஜலம்! ஜலமிருக்கு மிடத்தைத் தேடவேண்டும்.

கண்ணன்:—சமீபத்தில் எங்கேனும் ஜலமிருக்கிறதா என்று பார்ப்போம். அண்ணை! மெல்ல மெல்ல நடந்துவா.

(இருவரும் சிறிது தூரம் போகிறார்கள்.)

(ஓர் விறகு வெட்டி வருகின்றான்.)

கண்ணன்:—அப்பா! சமீபத்தில் எங்கேனும் ஜலமிருக்கு மிடத்தைக் காட்டுவையா? நாங்கள் எங்கள் தாகத்தைத் தணித்துக்கொள்ளவேண்டும்.

விறகு வெட்டி:—சாமி! நீங்க யாரு? பெரிய எடத்துப் பிள்ளேக போலத் தோணுதே.

ரமணன்:—அப்பா! அந்தப்பேச்சு பிறகு பேசுவோம். என் தொண்டை வெந்து சாம்பலாய்விடும்போ லிருக்கிறது. ஜலமிருக்கு மிடத்தைக் காட்டுவாயானால் சுகிர்தம் பெறுவாய்.

விறகுவெட்டி:—இல்லீங்கசாமி! கோபம்வேண்டாம். அதோ தெரியுது பாருங்கோ ஒரு வேலி, அந்த வேலிக்கப்பாலே ஒரு கொளமிருக்கு, ஆனால் அந்த வேலிக்கப்பாலே ஒர்த்தரும் போகப்படாது.

கண்ணன்:—ஏன்?

விறகுவெட்டி:—ஏனெண்ணு, அந்தக் கொளமும் அதைச் சுத்தியிருக்கும் வேலியும் இந்த ஊரு ராசாத்தி யம்மாரு வீட்டோடை ராசா எற்படித்திருக்கார்.

கண்ணன்:—நாங்கள் தாகத்தைத் தணிப்பதற்கு ஜலமிருக்கு மிடத்தைக் காட்டென்றால் என்னென்னவோ கதைகள் சொல்லுகிறாயே. வேறெந்த இடத்தில் ஜலம் பெறலாம், சொல்.

விறகுவெட்டி:—ஊருக்குள்ளே ஒரு கொளமிருக்கு. என்னோடே வந்தா காட்டுறேன்.

கண்ணன்:—அண்ணா! இவ்வூரில் சென்று கம்பு கூழ் நிறைய ஜலம் கொண்டுவருகிறேன். கான்வருமளவும் இவ்விடத்திற்றானே இரு.

ரமணன்:—போய் விரைவில் மீண்டுவா.

(கண்ணன் போகின்றான். ரமணன் சிறிதுநேரம் மௌனமாய்க் காத்திருக்கின்றான். பின்பு தனக்குட் சிந்திக்கின்றான்:—)

ஹா! இக்கொடிய தாகம் எவ்வேயிருந்து என்மிடற்றிற் புகுந்ததோ? உடலைவத்தி யென்பது இதுதானோ? என் செய்வேன்! கண்ணன் இன்னும் வரவில்லையே. விறகுவெட்டி கூறிய தடாகம் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றதோ! அப்பேதை கூறியது உண்மைதானோ? அவன் பேசியதே வெறியன் பேச்சுப்போலிருந்ததே. கண்ணா! எப்பொழுதுவருகாய்? (தன்கழுத்தில் கைவைத்துக்கொண்டு தரையில் உட்காருகின்றான்.) ஐயோ! என் பிராணன் போய்விடும்போலிருக்கிறதே. என்பெற்றோர்கள் எவ்வாறு என் பிரிவைச்சகிப்பார்கள்! அனலிற்பட்ட புழுவாய்த் துடிப்பார்களே! கண்ணா! நீயும் எவ்வாறு வருந்துவை! ஹா! விறகுவெட்டி கூறியதை மறந்தேன். அதோ காணப்படுகிற வேலிக்கப்பால் ஓர் தடாகம் இருக்கிறது என்றானே. என்னை கேரிடினும் அத் தடாகத்திற்கே சென்று என் தாகத்தைத் தணிப்பேன்.

(வேலியை நோக்கி விரைந்து செல்லுகின்றான்.)

அங்கம்-1.

காட்சி-2.

(சாலிவாஹனபுரத்து அரசபுத்திரிகளது பூம்பொழில். அரசனது ஜேஷ்டபுத்திரியாகியவசிகை தன் காங்களில புஷ்பத் தட்டை ஏந்திக்கொண்டு வருகிறாள்.)

ரசிகை:—வசிகரி! நாழிகை யாகின்றதே. இவ்வளவு நேரமாகவா பூக் கொய்கிறாய்?

வசிகரி:—(மறைவிலிருந்தே) இதோ வந்துவிட்டேனக்கா! (தன் இடக்கையால் புஷ்பத் தட்டைத் தாங்கிக்கொண்டு வலக்கையில் ஓர் அழகிய மான்கனியோடு வருகிறாள். அவள் முகத்தில் விபர்வைத் துளிகள் காணப்படுகின்றன.)

ரசிகை:—இவ்வளவு நேரம் என்ன செய்தாயடி? உன் தட்டிலும் புஷ்பம் அதிகமாயில்லையே. உன் முகத்தில் ஏன் இவ்வளவு வியர்வை? காம்பதி வினோதிம்பொழுதுகூட இவ்வளவு வியர்வை உன் முகத்தில் காணப்பட்டதில்லையே. தமையனுக்கு ஓர் அன்னப்பறவை போதித்து விட்டதுபோல் உனக்கும் ஓர் அன்னப்பறவை ஏதேனும் உபதேசித்து விட்டதோ?

வசிகரி:—என் நம்பிள்ளை அக்கா. இம்மானினியைப் பிடிப்பதற்குத்தான் இவ்வளவு நேரமானதேன். இக்கனியைப் பார். இதைப் போன்ற அழகிய

கனியை நீ எப்பொழுதேனும் பார்த்திருக்கிறாயா? (வசிகரி மான்கனியைத் தன் சகோதரிக்குக் கொடுக்கிறாள்.)

ரசிகை:—(தன் கையிலுள்ள கனியைப் பார்த்துக்கொண்டே) எவ்வளவு சுந்தரம் வாய்ந்த கனி! என்ன நிறம்! என்னசாந்தி! என்ன திரட்சி! என்ன வசீகரம்! இதனுள் நிறைந்துள்ள தீஞ்சாறு என்கண்களுக்குப் புலப்படுவதுபோலவே தோற்றுகின்றதே. கற்பகநாட்டுக்கனிகளுக்கும் இவ்வளவு சோபிதமுண்டோ? காரைக்காலம்மையார் சிவபிரானருளாற் பெற்ற மாங்கனி வர்க்கத்தைச் சேர்ந்த கனியோ? என்னென்றியம்புவது! எந்த விருக்ஷத்திலிருந்தடி வசிகரி இதைப்பறித்தாய்?

வசிகரி:—கான் புஷ்பங்கொய்துகொண்டு 'அமிர்தான்' என்ற மாமரத்தருகே வந்தேன். அப்பொழுதுதான் ஒரு குயில் அமிர்தமாய்ப் பாட ஆரம்பித்தது. உடனே தலையை நிமிர்த்திப் பார்த்தேன். அமிர்தானது கிளைகளொன்றை உல்லாசமாய்த் தழுவிக்கொண்டிருந்த இக்கனியின்மீது அமர்ந்து அக்குயில் பாடிக்கொண்டிருந்தது. கனியைக் கண்டதும் அதன்மீதிருந்த பறவையையும் அதன் தீங்குரலையும் மறந்து கனியைப்பறிக்கக் கையை நீட்டித்தாவினேன். உடனே குயில் பறந்தோடிற்று. ஆனல் கனி கைக்கப்படவில்லை. பின்பு நெடுநேரங் குதித்துக் குதித்து அப்பழத்தைப் பறிக்க முயற்சித்தேன். அது என் கைக்கப்படாமல் என்னை நோக்கி கைத்துக் கொண்டேயிருந்தது. என் உள்ளத்தில் ஆத்திரமும் ஆசையும் பொங்கி எழுந்தது. ஆகையால் அவ்விருக்ஷத்தின்மீது ஏறியே இக்கனியைப் பறித்துக்கொண்டு வந்தேன்.

ரசிகை:—(புன்னகையுடன்) இந்த அற்பக் மாம்பழம் வசிகரியையும் வசிகரித்து அவளுக்கு மரமேறும் வித்தையும் கற்பித்து விட்டது. இப் பழத்தின் பெருமையே பெருமை!

(பழத்தை முத்தமிடுகின்றாள்)

வசிகரி:—அக்கா! இக்கனியை நமது அன்னைக்குக்காண சமர்ப்பிக்க வேண்டும்?

ரசிகை:—ஆமாம். இன்று நமது சாதாம்பதன் உன் கனியைப் பெற்று அகக்களித்து நீ விரும்பியவையனைத்தும் உனக்கு அளிப்பான். நீ என்ன விரும்புகிறாய் வசிகரி?

வசிகரி:—நான் என்ன விரும்புகிறேன்! நமது குருகுல வல்வழியில் ஒழுகி நமது தந்தையின் செங்கோல் நிலைபெற்றோங்குதலும் அவரது வீரமும் நமது நாட்டின் பெருமையும் சூரிய ஒளி போல் எங்கணும், பரவுதலுமே கான் விரும்பும் வரங்கள்.

ரசிகை:—இவ்வளவுதானே நீ விரும்புகின்றாய்! வேறென்றுமில்லையா?

வசிகரி:—வேறென்ன நமக்கு வேண்டுமக்கா?

ரசிகை:—(புன்னகையுடன்) வசிகரீ! நான் உன் சகோதரியல்லவா! என்னிடத்தில் என் உன் உள்ளத்தை ஒளிக்கிறாய்?

வசிகரி:—நான் எனக்கா உன்னிடத்தில் என் உள்ளத்தை ஒளிக்கிறேன்? நமது நாட்டின் பெருமையும் நமது தந்தையின் செங்கோலும் வளர்வதைத் தவிர நமக்கு என்ன வேண்டும்? நீதான் சொல்லேன்.

ரசிகை:—நமது தந்தையின் குணமும் ஒழுக்கமும் புகழும், இம்மாங்கனியைப்போன்ற சௌந்தரியமும், உன்னிடத்தில் இம்மாங்கனியின் சுவைபோன்ற அன்பும், உடைய கணவனைப் பெற நீ விரும்பவில்லையா?

வசிகரி:—என்னக்கா! நீயே என்னைப் பரிகசிக்கிறாய்!

ரசிகை:—வசிகரீ! நான் உன்னைப் பரிகசிக்கவில்லை. இன்று நாம் உள்ளங் கலந்துகொள்வோம். உன் மனத்தி லிருப்பவை யனைத்தும் நீ எனக்குச் சொல்வாய். என் உள்ளத்தி லிருப்பவை யனைத்தும் நான் உனக்குச் சொல்லுகிறேன்.

வசிகரி:—உன் இஷ்டப்படியே நீ கேட்ட விஷயத்தைப்பற்றி என் உள்ளத்திலிருப்பதை வெண்மையாகச் சொல்லிவிடுகிறேன்.

ரசிகை:—(புன்னகையோடு) அப்படிச் சொல்லடி என் கண்மணி! அப்பொழுதுதான் நாமிருவரும் மெய்ச்சகோதரிகளாவோம்.

(தன் தங்கையை அன்போடு தழுவி அவள் கன்னமொன்றை முத்தமிடுகின்றாள்.)

வசிகரி:—அக்கா! எனக்கு விவாகத்தில் விருப்பமேயில்லை.

(தொடரும்.) பத்திராதிபர்.

கண்ணம்மாள் கதை.

"கண்ணம்மாள் தங்கமான பெண்", என்று சுப்பிரமணியன் ஒரு முறை தன் மனைவி ஜானகிக்குச் சொன்னான். அப்பொழுது ஜானகிக்குச் சற்று வயிற்றெரிச்சலாயிருந்தது. யாருக்கு என்ன வயிற்றெரிச்சலாயிருந்தாற்றானென்ன! உண்மை உண்மையே. தங்கமான பெண் என்றால் கண்ணம்மாளுக்கு முற்றும் தகும். அவள் தஞ்சாவூரில் ஒரு பெருமை வாய்ந்த குடும்பத்திற் பிறந்தவள். அவள் அண்ணன் ருக்மாங்கதர் தஞ்சாவூரில் ஒரு பிரபல வக்கில். பன்னிரண்டு வயதுக்குமேல் அவள் தன் தாய்தந்தையரை இழந்துவிட்டாளெனினும், அவள் சகோதரர் ருக்மாங்கதர் அவரோ வளர்த்துவந்த அருமை பெருமையை எவ்வளவு அதிசயந்த புத்திர வாஞ்சையுள்ள பெற்றோர்களிடத்திலும் காண்ப தரிது. தமிழ் நாட்டுத் தற்கால வழக்கப் பிரகாரம், பதின்மூன்று வயதுக்குமேல் அவள் பாட

சாலைக்குப் போகவில்லை. ஒரு சிறந்த தமிழ்ப் பண்டிதரைக் கொண்டு அவளுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்பிக்கவும் சங்கீதத்தில் சமர்த்தியான ஒரு உபாத்தியாயினியைக் கொண்டு அவளுக்குச் சங்கீதம் பயிற்றுவிக்கும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றியும் ருக்மாங்கதர் தானே வெகு சிரத்தையுடன் ஆங்கில பாஷையும் அவளுக்குப் போதித்து வந்தார். படம் எழுதுவதில்கூட அவளுக்குச் சற்றுத் திறமை இருந்ததென்றால், கோலமிடல், பட்டு, ஜரிகை, மணி, முத்து இவைகளால்செய்யலாகும்விசித்திர விசித்திரமான சித்திரத் தொழில்களில் அவளுக்கிருந்த தேர்ச்சியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆனால், தமிழ் கொஞ்சம் எழுதப்படிக்கவும் ஹார்மோனியத்தில் சில கீர்த்தனைகளோ என்னவோ ஒருவிதமாக வாசிக்கவும் அறிந்துள்ள அரைக்காலிலும் அரைக்காற்படிப்புப் பெண்கள், சோற்றுக்கு உப்புப் போடுகிறதா, சுரைக்காய்க்கு உப்புப் போடுகிறதா, சாதம் வடிப்பதென்றால் என்ன, பொங்குவதென்றால் என்ன, உலக்கையைப் பிடித்தால் உள்ளங்கை சிவக்காதா, கையில் துடைப்பமெடுத்துப் பெருக்கினால் கழுத்தும் இடுப்பும் கடகடத்து நோகாதா, அடுப்பண்டை அவிந்து புழுங்குவதைப் புத்திகெட்ட பெண்கள் எப்படித்தான் சகிக்கிறார்களோ, என்பன வாதிய சந்தேகங்கள் விளங்கும் சிறந்த மூளைகளோடு வர்ணக்கட்டில் மெத்தையில் வாட்ட சாட்டமாய் வீற்றிருக்கும் நாகரீகப் பெண்களாக இருக்கிறார்களே, அந்த வர்க்கத்தில் சேர்ந்தவளல்ல நமது கண்ணம்மாள். நமது நாட்டில் வழங்கும் சமையல் பாகங்களுமன்றி வேறு பல நவநவமான விதங்களாக அன்னங்களும் பதார்த்தங்களும் பக்ஷணங்களும் ஆக்க அறிந்தவள். வெளித வீட்டுவேலையையும் பம்பரம்போற் சுழன்று, சுறு சுறுப்பாக, துரிதமாக, திருத்தமாக, அகமலர்ச்சியோடு முகமலர்ச்சியோடு செய்து முடிப்பாள். கூர்மையான புத்தியும் சோம்பலென்பதே இன்னதென்றறியாத வெகு தீவிரமான சுறுசுறுப்புமுடைய ஒரு பெண் தான் கைக்கொண்ட எந்தவேலையில்தான் முதன்மையாகத் துலங்காமலிருப்பாள்!

இத்தகைய பெண்மணி பதினேந்தாம் வயதில் பருவமடைந்தனள். பின்னரும் தமிழ்ப் பண்டிதர் சங்கீத உபாத்தியாயினி, ருக்மாங்கதர் இவர்கள் சிக்ஷையாகவே யிருந்தனள். முக்கியமாக ருக்மாங்கதர் எடுத்துக்கொண்ட விசேஷ சிரத்தையினால் அவளுக்கு ஆங்கில பாஷையில் விசேஷ அறிவு வளர்ந்தது. அதைப் பிழையற அழகாக எழுதவும், தமிழ்ப் புத்தகங்களைப் போலவே எந்த ஆங்கிலப் புத்தக்கத்தையும் வாசித்தறிந்து கொள்ளவும் கற்றுக்கொண்டாள். வீட்டுக்கணக்குகள் முதலிய யாவும் அவளிடம் ஒப்புக் கொடுக்கப் பட்டிருந்ததோடு அவள் சகோதரர் வக்கில் ருக்மாங்கதருக்கு வலக்கைபோன்ற ஒரு குமாஸ்தாவாகவும் ஆயினள். அவருடைய கக்ஷிக்காரர்கள் சம்பந்தமான முக்கியமான கடிதங்கள் பத்திரங்

கள் முதலியவற்றை ஒழுங்கொழுங்காக அடுக்கி வைத்திருப்பவள் கண்ணம்மாள். அவரது கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களைப்பற்றியும் முக்கியமான பல்வேறு விஷயங்களைப் பற்றியும் வேண்டும்போதெல்லாம் அவருக்கு அறிவிப்பதற்கும் கண்ணம்மாள். அவருடைய சட்டப் புத்தகங்களும் இதர புத்தகங்களை மடங்கிய புத்தகசாலைக் கதிபதியும் கண்ணம்மாள். அவருக்கு வேண்டிய எந்தப் புத்தகத்தையும் எடுத்துக் கொடுப்பதற்கும் கண்ணம்மாள்தான் வரவேண்டும். அது மாத்திரமல்ல, பல சமயங்களில் இன்ன சட்டப்புத்தகத்தில் இன்ன பாகத்தை இன்ன விஷயகாரத்திற்காகத் தனக்கு ஞாபகப் படுத்தும்படி வக்கீல் சொல்ல, அவ் விஷயத்தைத் தன் குறிப்புப் புத்தகத்திலேனும் ஞாபகத்திலேனும் குறித்துக்கொண்டு சந்தர்ப்பம் நேரும்போது தன் சகோதரருக்கு எடுத்துக் கூறுவதற்கும் கண்ணம்மாள். வக்கீலின் வீட்டுக் கணக்குகள், காரியஸ்தலக் கணக்குகள் முதலிய சகல கணக்குகளும் சரியாக வைத்திருப்பதோடு, அவருடைய ரொக்கம் இருப்புப் பெட்டிச்சாவி இவைகளைப் பத்தனமாகக் கொண்டிருக்கிறவளும் கண்ணம்மாள். அவரும் அவருடைய மனைவியும் தங்களுக்குப் பணம் வேண்டும் பொழுதெல்லாம் கண்ணம்மாளிடத்தான் கேட்கவேண்டும். வக்கீலுடைய காரியஸ்தல நிர்வாகத்தில் அவருக்கு மிக உதவியாக இருக்கும்போல, சமையல் வேலை, பண்டகசாலைப் பராமரிப்பு முதலிய வீட்டுக் குடித்தனநிர்வாகத்தில் வக்கீல் மனைவி மனோன்மணியம்மாளுக்கும் ஒரு வலக்கையாக இருந்தாள் கண்ணம்மாள். கைப்பெட்டி உடைப்பெட்டி இவைகளை வைத்திருப்பவளும் கண்ணம்மாள். மனோன்மணி யம்மாளுக்குக் கூந்தல் வாரிச்சீவிச் சிங்காரிப்பதற்கும் கண்ணம்மாள். அந்த அம்மாள் பந்து மித்திரர்கள் வீட்டு விவாகம் முதலிய சந்தர்ப்பங்களுக்காவது வேறெதற்காவது செல்லும்பொழுது, இன்ன உடையைக் கட்டிக் கொள்ளுங்கள், இன்னமாதிரிச் செல்லுங்கள் என்று ஆலோசனை சொல்வதற்கும் கண்ணம்மாள். வீட்டில் யாராவது அசௌகரிய முற்றால், வைத்தியரிடம் அசௌகரியங்களை எடுத்துக் கூறுவதற்கும் அவர் விரிக்கும் நோட்டணைக்குப் படி நோயாளிக்கு மருந்து கொடுப்பதற்கும் மற்றும் பத்தியங்கள் நிகழ்த்துவதற்கும் கண்ணம்மாள். சிலசமயம் வக்கீல் அவர் மனைவி இவர்கள் காலப்போக்கிற்காகப் பாடுவதற்கும் கண்ணம்மாள், வீணை வாசிப்பதற்கும், கண்ணம்மாள், பத்திரிகை வாசிப்பதற்கும் கண்ணம்மாள். இன்னும் கண்ணம்மாள் கவனிக்கவேண்டிய காரியங்களனைத்தையும் இங்கே கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

பதினேழு வயது வரையில்தான் முற்கூறியவாறு கண்ணம்மாள் தான் பிறந்த அகத்தில் வசித்துவந்தாள். பின்பு அவள் கடலூருக்குப் பிரயாணப் படுத்தப்பட்டாள். என்! அவளது நான்காம் வயதில் அவளுக்கு ஒரு மகிழ்ச்சி

மான விபத்து நேர்ந்திருந்ததால். அது என்ன அதிசயமான விபத்தம்மா! சொல்லுகிறேன். கவனியுங்கள்.

கண்ணம்மாள் தகப்பனாரைப் பெற்ற பாட்டியொருத்தி யிருந்தாள். அந்தப் பாட்டியாருடைய தாயாருடைய தகப்பனாருடைய சகோதரருக்கு என்னவோ நெருங்கிய சம்பந்தமுடைய குடும்பம் ஒன்று கூடலூரில் வாழ்ந்தது. அந்தக்குடும்பத்தில் உதித்த பிள்ளையாண்டான் ஒருவனுக்குத் தன் பெண்ணை கண்ணம்மாளைக் கலியாணஞ்செய்து கண்ணாற் பார்த்துவிட்டுத் தான் தான் சாகவேண்டுமென்று ஒரு பிடிவாதஞ் செய்தாள் கண்ணம்மாள் பாட்டி. அந்தப்பாட்டிக்குக் கண்கூடச் சரியாகத் தெரியாது. இருந்தாலும் தெரிந்தவரையில் கலியாணத்தைக் கண் குளிரப் பார்ப்பாளல்லவா!

கண்ணம்மாள் தகப்பனார் நரசிம்மர் என்பவர் பெருங்கோபி. தன் தாயாரைப்போல் தான் நினைத்த காரியத்தை முடித்தே தீருவார். அவர் மனைவி அவரோடு பேசுவதென்றாலும் வெகு ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். அவர் மகன் ருக்மாங்கதருக்கோ தன் தகப்பனார் முன்பு நிற்பதற்குக் கூடப் பயம். காலேஜில் செல்வாக்குள்ள பெரிய உபாத்தியாயர்களைக் கூட வுலட்சியம் செய்யக்கூடிய ருக்மாங்கதரைப் பார்த்து, ஒருகுழந்தை "உங்கள் தாயாரிடம் சொல்லுவேன்" என்றால் காலேஜ் மானேஜர் நெஞ்சம் துடிக்கும். மனைவி புத்திரன் இருவருக்கும் இந்த நிலைமையென்றால் வீட்டு வேலைக்காரர்களைப் பற்றிக் கேட்பானேன். ஆனால் சாகூத் நரசிம்மமூர்த்தியைச் சாந்தப்படுத்தக்கூடிய ஒரு ஜீவன் பிரகலாதனல்லவா! அதுபோல இந்த நரசிம்மருக்கு அஞ்சாத ஒருஜீவனும்உண்டு. யார் தெரியுமா? கண்ணம்மாள்தான், வேறெருவருமில்லை. என்ன கோபமிருந்தாலும், கண்ணம்மாள் சிரித்துக்கொண்டு மடியிலேறிவிட்டால் அவர் கோபமெல்லாம் பறந்துவிடும். கண்ணம்மாள் என்றால் அவர் உயிர். அவருக்கும் அவர் மனைவிக்கும் சில சமயம் மனஸ்தாபங்கள் விளைவதுண்டு. அவர்களை ராஜிப்படுத்துவது கண்ணம்மாள் என்ற குழந்தையே.

இத்தன்மையான குண விசேஷங்கள் அமைந்துள்ள நரசிம்மரோ, கண்ணம்மாள் பாட்டி கண்கெட்ட பிழையொருத்தி இருக்கிறாளே, அவள் முன்பு நடுங்கிநிற்பார். "அடநரசு" என்றுதான் அவள் அவரை அழைப்பாள். அவருக்குப் பிரியமிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, அந்தக்கிழவியின் விருப்பங்களில் எதையாவது நிறைவேற்றாதிருக்க அவரால் முடியாது. தலை நரைத்து, பல்லற்று, முகஞ்சுருங்கி, கண்மங்கி, தட்டித் தடுமாறி நடக்கும் இவ்விருத்தை நரசிம்மரை அடக்கியாண்டாள். இதுதான் தமிழ்நாட்டுக் குடும்பங்களில் காணப்படும் அச்சரியமான நிலைமைகளி லொன்று.

ஆனால் இவ்வளவு அதிகாரமுடைய கிழவிக்குக்கூடக் கண்ணம்மாள் அஞ்சமாட்டாள். அவள் வெள்ளைக் கூந்தலைப்பிடித்திழுப்பாள். "என் பாட்டி

உனக்கு முறுக்கு தின்ன முடியவில்லை? என் உன் உடம்பு மடிப்பு மடிப் பாயிருக்கிறது?" என்று பரிகசிப்பான். நான் உனக்குப் பல் தேய்க்கிறேன் என்று பற்பொடியைத் தன் சிறு விரல்களில் எடுத்துப் பாட்டியின் பல்லீறு கோணத் தலக்கி வாயில் வெந்நீர் ஊற்றிக் கொப்பளிக்கச் சொல்வான். தனக் குக் கிடைக்கும் பலகாரங்களையும் பாட்டிக்குக் கொடுப்பான். பாட்டி சொல் லுகிற பல கதைகளையும் கவனமாய்க் கேட்பான். இவ்வளவு பாசத்தாலும் பரிகாசத்தாலும் தன்னோடு சம்பந்தப் பட்டிருந்த கண்ணம்மாளைக் கூடவார் வாரனுக்கு மணஞ்செய்விக்கத் தீர்மானித்தான் கிழவி. அதற்கு நரசிம்மருக்கு ச்சம்மதமில்லை, அவர் மனைவிக்குச்சம்மதமில்லை, மகளுக்குச் சம்மதமில்லை. ஆனால்கிழவியின் முன்புதான் நரசிம்மர் அடங்கி நிற்பவராயிற்றே. முகையால் ஐந்தாவது வயதில் கண்ணம்மாளுக்குக் கலியாணம் நிச்சயமாயிற்று. நுக்மாங் தருக்குக் கடுங்கோபம். தன் பாட்டியை உதைத்து அவன் பிடிவாதத்தை அடக்கலாமா, என்று ஆத்திரங்கொண்டார். தன் தங்கையை எங்கேனும் கொண்டு போய் ஒளித்து வைக்கலாமா என்று எண்ணினார். ஆனால் நரசிம் மருக்குத் தன் தாயாரிடத்தில் எவ்வளவு பக்தியும் பயமும் உண்டோ, அதற்குமேல் பத்தப்பங்கு நுக்மாங்கருக்குத் தன்தகப்பனாரிடத்தில். முகை யால் கோபமும் ஆத்திரமும் எப்படிப் பொங்கினும் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகையால் கலியாணம் வெகு சோலாகலத்துடன் பெரும் பொருட்செலவில் நிறைவேறிற்று. கண்ணம்மாள் என்ற குழந்தை மணப்பெண்ணாகி, தன் பொருட்டு எவ்வளவோ சம்பிரமங்கள் நிகழ்வதைக் கண்டு, தனக்கு அச்சாரணமான அலங்காரம் செய்வதைக் கண்டு, ஒரு மகா ராணிக்கு நிகழ்வதுபோல் தனக்கு என்றுமில்லாத உபசாரமும் பராமரிப் பும் நடப்பதைக்கண்டு குதூகலத்தோடிருந்தாள். கலியாணமே என் றால் குழந்தைகளுக்கே கேளிக்கை. குழந்தையே மணப் பெண்ணாயிருந்தால், அதற்கிருக்கும் ஆனந்தத்தை எப்படி அளவிடுவது! கண்ணம்மாளுக்கிருந்த களிப்பு அவள் பாட்டிக்கிருந்த மகிழ்ச்சி இரண்டில் எது அதிகமென்று சொல்வதும் அசாத்தியம்.

இதுதான் கண்ணம்மாள் கலியாணக்கதை. இதுதான் ஐந்தாவது வய தில் கண்ணம்மாளுக்கு நேர்ந்த மங்களமான விபத்து. இதனைத்தொன் அவள் பதினேழாம் வயதில் கூடவார் சென்று உசிக்கும்படியாயிற்று. இனி அவள் கூடவார் வாழ்க்கையைக் கவனிப்போம்.

(தொடரும்,)

வாணீதாசன்.

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருவினி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள், தீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள் இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கவி முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்பராபரமே. தாயுமானவர்.

பருவம் 1.	கலியுகாப்தஞ 5020. காளயுக்திஞ அப்பிசிமீ. கொல்லமாண்டு 1094, துலாமீ. கி. பி. 1918-ஞ அக்டோபர்மீ.	மலர் 2.

நாட்டுப் பெண்குட்டி.

4-ம் அதிகாரம்.

மஞ்சட்குளித்தல்.

மக்கள் முகங்களில் மஞ்சளைப் பூசின்
மனது மகிழும்கண் ஒளிகளிக்கும்
துக்கம் அகன்றிடும் துர்க்குணம் போய்விடும்
சோபனத் துக்கும் குறியாமே.

பூமி னிறத்தில் சிறந்த நிறம்பசும்
பொன்னின் நிறமும் அதுவாகும்
தேவலோகத்தின் நிறமும் அதாகும் செஞ்
சோதியும் மஞ்சள் நிறந்தானே.

கொஞ்சமாய் மஞ்சளைப் பூசிக் குளிப்பது
கோதை முகத்துக் கொளிதருமே
மிஞ்சவே மஞ்சள் அரைத்தப்பிக் கொள்வது
வேஷந் தரிப்பதற் கொப்பாமே.

தீர்க்கோஷ மாற்றுமே கண்வலி போக்குமே
நோக மேல்வலி நீக்கிடுமே
சீர்க்குணங் கள்பல மஞ்சளுக் குண்டையை
செப்பி லிசிக்கும் இடம்இதன்றே.

மஞ்சள் அழகும் அழகல்ல என்றதால்
மஞ்சட் கழருண்டென் றேற்படிலும்
நெஞ்சம் நிறைதரு கல்விக் கிதசற்றும்
நேராகா தென்றறி நாட்டுப்பெண்ணே. ஐ

5-ம் அதிகாரம்.

நகையணிதல்.

மண்ணி லிருப்பவர்க் காசையுண் டவ்வாசை,
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை
பெண்ஆசை கொள்வ தெதன்மேலே அந்தப்
பீர்க்கம்பூ வின்நிறப் பொன்மேலே. க

ஆடை அகத்நியம் எல்லார்க்கும் அதன்
மேல்அணி பூண்பதும் ஓரழகே
கூடை அடிக்கெனக் கொண்டமட்டும் நகை
கோத்து விடுவது கோதாமே. உ

சுந்தர மான முகத்திற் கிரண்டொரு
சோதி மணிநகை சுந்தரமாம்
அந்தம் இலாதவட் காயிரம் பூண்டாலும்
அழகுண் டாகுமோ நாட்டுப்பெண்ணே. ங

இயற்கை அழகுள்ள பெண்மணிக்குச் சில
ஏற்ற நகைகள் எழில்தருமே
இயற்கை நலமே யிலையெனில் செய்யணி
எள்ளள வுங்குணஞ் செய்யாதே. ச

அழகு தராம லிருந்தும் நகைகளோ
ஆசையி னுற்சிலர் பூட்டிக்கொள்வார்
பிழவிக ளாகி நரைத்தவ ருங்கூடக்
கேட்டி ரவல்வாக்கி மாட்டிக்கொள்வார். ஞ

மருந்துக்குப் போறவள் உள்ள நகைகளெல்லாம்
மாட்டிக்கொண் டப்பால் வெளிப்படுவாள்
விருந்துக்குப் போற்வள் வீடுவீ டாகப்போய்
வேண்டாத தும்இர வல்கேட்பான். ட

மின்னினைற் போதும் எதுவேனும் வாங்கி
மேலிலும் காதிலும் போட்டுக்கொள்வார்
பொன்னென்று சொன்னலும் போதும்உள்ளே கரும்
பொன்னெனினும் சுமைக் கஞ்சாரே. ண

நின்னில் அழிந்துபோம் உண்ணில் அழிந்துபோம்
சேலை யுடுத்திக் கழிந்தழியும்
பொன்னழி யாத நகையழியா தந்தப்
பொன்னிற் பணமெல்லாம் போடுமென்பார். அ

சுப்பையைச் சீத்துப் பொறுக்கையிற் காலிலே
கோழி விலங்கிட்டுக் கொள்வதுபோல்
ஒப்புறுங் கால்களில் பாதசர முதல்
ஒய்யார மான விலங்கிடுவார். ஆ

கோச்சண மத்தியில் தொந்தரை செய்கின்ற
கொண்டிமாட் டைப்பிடித் தேயுருக்கி
மூக்கணத் தாம்பினைக் கோத்தது போலத்தம்
மூக்கைத் துளைத்துப் புலரக்கிடுவார். இ

செங்கதிர் வீசிடும் கெம்பு மாணிக்கங்கள்
சேர்த்திழைத் திட்ட பலநகைகள்
அங்கம் எல்லாம் அணிந்தென்பயன் உள்ள
அழகைக் கெடுத்திடு மாலுக்கால். ஈ

காது நகையைக் கழற்றுமே சிலர்
காணும் அழுக்கும் துடையாரே
ஊது பிணம்போலக் காதுகள் நாறிடும்
ஊத்தையைப் போக்க முயலாரே. உ

எப்போதும் காதில் கழுத்தில் கரத்தில்
இடைவிடா மல்நகை போடுவதால்
தப்பாமற் சேதமாம் ரத்தினக் கல்லுக்கும்
தங்கம்பொன் வெள்ளி பணத்துக்குமே. ஊ

தேய்ந்திடும் பாதி தெரிந்திடும் பாதி
தெருவில் அறுந்து விழும்பாதி
காய்ந்ததிற் பாதி உரைத்ததிற் பாதிபொற்
கம்பியர் கொள்வர்செம் பாதியுமே. எ

காதில் ஒன்றுங் கழுத்தில் ஒன்றும் முன்
கைகளில் ஒன்றுமாம் மூன்றணியே
போதும்என் பார்பெண்கள் கல்வி யணிகூர்ப்
பூரண மாய்நன்கு பூண்டிடினே. ஏ

6-ம் அதிகாரம்.

பூச்சூடல்.

பூவைப்போல் இந்தப்பூ லோகத்திலே ஒரு
பூண மான அழகில்லையே
தேவைப்பூ சித்தற்குச் சீருள்ள நற்பொருள்
தேடி எடுப்பது வும்பூவே.

பூவி லிருப்பவள் சிதேவி வெள்ளைப்
பூவி லிருப்பவள் வாணியென்பார்
பூவணம் பூக்குங் கொடிக்கழ காதலால்
பூச்சூடல் பூங்குழ லார்க்கழகாம்.

சரும்பே றும்தலை யிற்கலிக்கக் குளிப்
பின்றி உடல்அழுக் கால்நிறைய
சோனப் பூநிதம் சூடி அலங்காரஞ்
செய்து திரிவது பேதமையே.

சந்தனம் புஷ்பம் சவ்வாது கொழுந்துகள்
சந்தோஷ மான தினத்திற்கல்லால்
எந்த நாளும்பூவைக் கொண்டையிற் சூடி
இருப்பது பெண்ணுக் கிணக்கமன்றே.

மங்கல மாவதும் பூவாமே மண
மக்கள் அணிவதும் பூவாமே
பொங்காளி செய்வதும் பூவாமே நன்கு
பொழுதின் மலர்வதும் பூவாமே.

மு. பொ. சுகமூர்த்தியா பிள்ளை.

என் மனைவியை.

ஓர் சிறு கதை.

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆறு மாத காலம் சென்றது. சுந்தரிக்கு வில்வனல்லூரில் இனி இருப்பது அசாத்தியம் எனத்தோன்றியது. ஊரிலுள்ளவர்கள் யாவரும் பஞ்சனையைப்பற்றிப் பல வசை மொழிகளும் வழங்கி அவள் சமீகாதாரமும் அவரில்லாளையுந் தூறலானார்கள். கலியாணசுந்தரமையர் மனைவியும் சாதாரணமாக நல்லவளே. ஆனால் நாத்தி வெருவியாயிருந்தால் மன்னி தலையீடேறுமோ? அதோடும் அவள் குற்றமுள்ளவளோ யாவளானாலும்—

சுந்தரி எப்பொழுதுமே பிடிவாதமுள்ளவள் என்பது நம் நண்பர் அறிவர். இவர்கள் இவ்விதம் நிந்திப்பதை அவள் சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. தன் தோழிகளோ முன்போல் அவள் அதிகமாகத் தேடுவதில்லை. ஒருவரோடும் பேசாமல் ஆலயத்திற்குச் சென்று பிரகாரங்களில் சுற்றிக் கொண்டிருப்பள். கந்தவனத்திலும் அவளை எப்பொழுதும் காணலாம். இவற்றிற்கெல்லாம் காரணமென என்னையும் வெறுக்கலானாள்.

திடீரென்று அவள் மனம் மாற ஒரு காலம் வந்தது.

சுந்தரியின் தோழி செல்லம்மாள் என்பவள் ஒருவள். அவளை ஓர் நாள் சுந்தரி அழைத்தாள். அவள் ஏதோ கடிதம் எழுதிக்கொண்டிருந்ததில் வரக்கூடவில்லை. கம்பியில்லாத் தந்திமூலமாக சமாசாரம் எட்டியது, சில மாதங்களுக்கு முன் மணந்த தன் கணவனுக்கு அவள் கடிதம் எழுதினளென்று. "எங்கள் காலத்திலெல்லாம் இம்மாதிரி விந்தை இல்லையடி!" என்று பேசிக்கொண்டார்கள் பெண்டிர்கள் ஆற்றங்கரையில்.

சுந்தரியும் சென்று வினவினாள். "ஏனடி! கலியாணமே வேண்டாமென்று கதறினையே அப்படி! அதற்குள் என்ன இது? வாராத காலத்தில் வேம்பும், கண்டகாலே கரும்புமோ?"

செல்லம் சாற்றிய சரிதை சுந்தரியின் மனத்து ஓர் கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. "அப்படியா—?" என்று தலையை யசைத்து "நானென்ன இவ்வளவு அறிவற்றவளா?" என்று சிந்தாகுலியாய் அன்று வீடு சேர்ந்தனள்.

அன்று முதல் அவள் நடையே வேறுபட்டது. பிடிவாதமென்பது அவளை விட்டு மெள்ள அகன்றுகொண்டிருந்தது. முன்போல் வெளிச் செல்லுவதில்லை. பெரியோர்களைக் காணில் நாணமுறலானாள்.

சில தினங்களுக்குப் பின் பரதேசி ஒருவன் கிருவருட்பாப் பதிகங் களை ஓதிக்கொண்டே வீதிவழி வந்தனன்.

"விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கு
மேலாகு ணன்பருளம் மேவுபட ராஜன்
பண்படைத்த வெனையறியா வளம்பவருங் கனிலே
பரிந்தவந்து மாலேயிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெலா மவமதிக்கே வலது
பேதகின்றுர் கூசகின்றேன் பிச்சியென வானேன்
கண்படைத்தும் குழியில்விழுக் கண்களுமுண்டோ வவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனே கண்டாயென் றோழி!

பெண்ணணத்த னெல்லார்க்கு மிறைவனெல்லாம் வல்லா
னென்னகத்தும் புறத்துமுளா னின்ப நடராஜன்

பெண்குணத்தை யறியாத விளம்பருவந் தனிலே
பிச்சேற்றி மணம்புரிந்தான் பெரியதகளித் திருந்தேன்
வண்குணத்தா லநுபவஞா னறியாதின்ற பொழுதில்
வந்தறியா வின்பமொன்றும் தந்தறியா னவதிலும்
வெண்குணத்தா னல்லன்மிகு நல்லனெனப் பலகால்
விழித்தறிந்தும் விடுவேனே விளம்பாயென் றேழை!

இப்பாக்கள் அவளுக்குத் தனியே வேறொரு பொருள் காட்டி நின்றன. ஆர்வமுடன் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் அருட் பாக்களைப் பெற்றுப் பரிந்து படித்தனள். அப்பாக்கள் யாவும் இவள் மனத்திற்ற கிளர்ச்சிக்கு ஏற்றதொரு பொருள் பயந்தன.

இதற்குள் என் மீதுற்ற வெறுப்பும் நீங்கியது. "அன்பு வெகு நீளமே! என்ன பரிகாசமாகப் பேசி அவர் மனத்தைப் புண்படுத்திவிட்டோம்! "எனத் தனியே கோவாள். திடீரென்று ஒரு நாள் என் சபதம் அவள் நினைவிற்கு வந்தது. உட்கார்ந்தாள். எனக்கென ஓர் லிகிதம் வரைந்தாள்:—

'என்துரையே!

அறியாதவள் சொன்ன வார்த்தைகளை மனத்தில் வைக்காது உடனே வந்து என்னைப் பார்த்துப் போக வேண்டுகிறேன். நான் செய்ததெல்லாம் பிசகே. நீங்கள் என் பிழைகளைப் பொறுக்காவிட்டால் வேறு யார் பொறுக்கப் போகிறார்கள்? நான் உங்கள் ரஞ்சனவல்லவா? உங்கள் வார்த்தைகளே என் காதில் எப்பொழுதும் ஒலிக்கின்றன.

எனக்கு இப்பொழுது இறக்கைகள் முளைத்திருக்கின்றன. நீங்கள் வரமுடியாவிட்டால் உத்தரவு கொடுங்கள். நான் உங்களிடம் பறந்து ஓடி வந்துவிடுகிறேன்.

என் இன்பமே! நான் மேலே சொன்னது சுத்தப் பொய். நான் பறந்து வந்துவிடவேண்டும்போல் தோன்றியது. உண்மையில் எனக்கு இவ்வித விகாரங்கள் ஒன்றும் தோன்றவில்லை. நீங்கள் உடனே வரும்படி அநேக நமஸ்காரஞ்செய்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

உங்கள் சொந்த
ரஞ்சனை."

மனச்சிழுக்கு ஒரு வார்த்தையில் அடைவெய்தும் சுபாவமிடையென்று அவளுக்குத் தோன்றவில்லை. "ஸ்ரீமத் கிருஷ்ணமூர்த்தியர்" என்று பெயரை மாத்திரம் வரைந்தாள். மேல்விலாசம் எழுத அவளுக்குத் தோன்றவில்லை. விலாசமிட்டவரைத் தேடிப் பிடித்துக் கடிதத்தைச் சேர்ப்பிப்பது தபாற்காரன் கடமை என்று நினைத்தாள். பொதுவும்

"சென்னை" என்று பின்னர் ஊரின்பெயர் தீட்டினாள். தபாற்பெட்டியிற் போட்டுவிட்டாள்.

பின், அண்ணனிடம் ஓடினாள். "அண்ணா! நான் எவ்வளவோ அபராதம் செய்து விட்டேன்! அவர் வருவாரா? "என்றாள்.

கலியாணசுந்தரமையருக்குச் சில நாளாக இவன் நடத்தை யொன்றும் புரியவேயில்லை. திடீரெனப் பைத்தியம் பிடித்து விட்டது சுந்தரிக்கு எனக் கருதலானார்.—"யாரம்மா?—"

"அது கிடக்கட்டும்—என்னை என் மாமியார் வீட்டிற்குக் கொண்டு போய் விடுங்கள்! என் மாமியாரே என் தெய்வம்!"

* * *

என் தாய் தந்தையர் இம்மாறுதலைக்கண்டு மிகவும் மன மகிழ்ந்தனர். என்னைத் தீபாவளிக்கும் மற்றைய விழாக்களுக்கும் வந்து போம்படி விநிதம் விடுத்தனர். நானே என் சபதம் மேற்கொண்டவனும் ரஜா கிடைக்கவில்லை என்று சொல்லி, போகாது நின்று விட்டேன். கடைசியாகக் கிறிஸ்ட்மஸ்ஸைச் சேர ஒரு நாள் ரஞ்சனை என் அன்னை யிடஞ்சென்று என் சபதத்தைத் தெரிவித்தனள். தான் ஓர் லிகிதம் விடுத்ததாகவும் சாற்றினள்.

அவர்கள் மிகவும் ஆச்சரிய முற்றனர். அன்றிரவே என்னைக்காணச் சென்னைக்குப் புறப்பட்டனர்.

V

*என் அத்தம்பியார் என்னைத் தன் வீட்டிற்கு வந்து போகும்படி இரண்டு மூன்று நாட்களாய் மணிக்கொரு முறையாக வந்து என்னை வேண்டினார். ஒரு நாள் போய் வரலாமென்று புரசைக்குப் புறப்பட்டேன் அங்கு என் தாய் தந்தையரைக் கண்டு வணங்கினேன்.

அன்று முழுவதும் பேச்சு. ரஞ்சனைவைப்பற்றி யாதொரு செய்தியுங் கிடையாது.

அன்றே என்னிருப்பிடஞ் செல்ல ஆயத்தமானேன். என் அத்தம்பியார் என்னை மறுதினமும் தங்கிப் போம்படி வற்புறுத்தினர். "இன்று போயென்ன ஆகவேண்டியது? நாளை ஞாயிற்றுக்கிழமைதானே? "என்றார். அவர் இது சொல்லும்பொழுது ஏதோ புன்சிரிப்புடன் கூறியதாக எனக்குப் பட்டது.

---

* அக்காள் கணவரை அத்தம்பியார் என அழைப்பது பிராமணர் வழக்கு.

எனக்கென ஒரு சிறு அறை ஒழித்து விடப்பட்டது. நான் அவ்வறைக்குட் சென்று சோபாவின் மீது சாய்ந்தேன். என் ஞானரதம் எங்கெங்கோ வானத்து வட்டமிட்டுச் சென்றது.

திடீரென்று பெருமூச்செறியும் சப்தம் என் காதிற்பட்டது. பேதையெனத் தேம்பியழும் ரஞ்சனுவைக் கண்டேன்.

மறுகணம் சுந்தரி என்மடியில் உட்கார்ந்துகொண்டு கின்னமொழி பயின்றனள்.

நான் இதை யுரையும்போழ்து ரஞ்சனு என் பக்கலில் வீற்றிருந்தாள்.

"நான் இதை எழுதி அச்சுக்கனுப்பவா ரஞ்சனு?"

"என்! அனுப்புங்கள். நீங்கள்தான் என்னைக் காதலித்தது பிசகா? அல்லது நான்தான் உங்களைத் தெய்வமென்று கருதி வழி படுவது பிசகா? இழிவென்ன இதில்! உலகத்தில் இல்லாததா இது!" எனப் புன்சிரிப்புடன் புகன்று ஓடுகிறாள்.

அன்பர்களே! விடைகொடுங்கள். நான் இக்கணமே சென்று அவளை முத்தமிட்டுச் செலிக்க வேண்டும். போய் வருகின்றேன்.

அங்கயற்கண்ணி.

ரசிகை.

ஓர் சமூக நாடகம்.

(35-ம் பக்கத் தொடர்ச்சி)

ரசிகை:—ஹா! உனக்கு விலாசத்தில் விருப்பமே இல்லையா! பிறகு எதைத்தான் நீ விரும்புகிறாயடி?

வசிகரி:—நான் எதை விரும்புகிறேனென்று முன்னமே சொல்லி விட்டேனே.

ரசிகை:—நமது நாட்டின் க்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் நீ விரும்ப வில்லையா?

வசிகரி:—ஆமாம் அக்கா, நமது தேச க்ஷேம மொன்றைத்தான் நான் விரும்புகிறேன்.

ரசிகை:—நீ சொல்வது உண்மையானால், வசிகரி! உன்னைப்போன்ற சிறந்த தேசாபிமானி உலகத்திலிருப்பது அரிதென்னலாம். அன்றியும், உன்னை "ஆசை நிகளத்தினை நீர்த்தூளி பட உதறிய" நிகரற்ற பால சந்யாசினி என்றுங் கூறலாம்.

வசிகரி:—என்னக்கா என்னைப் பரிகசிக்கிறாய்! நீ இப்படிப் பரிகசிப்பதற்காகவா என் உள்ளத்தை உனக்குச் சொன்னேன்?

ரசிகை:—நான் பரிகசிக்கவேயில்லையடி, உண்மையைத்தான் சொன்னேன். நீ மாத்திரம் உண்மையைச் சொன்னாயோ என்னவோ வென்று சந்தேகிக்கிறேன்.

வசிகரி:—நீ உரைத்தது எப்படி உண்மையாகும் அக்கா? தேச க்ஷேமத்தைப் பற்றிய ஆசை என் அகத்தில் அமர்ந்திருக்க என்னை "ஆசை நிகளத்தினை நீர்த்தூளி பட உதறினவள்" என்றாயே. இது பரிகசப் பேச்சல்லவோ?

ரசிகை:—அல்லவேயல்ல வசிகரி! அது பரிகசப் பேச்சே யல்ல. "ஆசை நிகளத்தினை நீர்த்தூளிபட உதறி" என்ற அற்புத மொழிகளைத் திருவாய்மலர்ந்தருளியவரும், அவ்வாறு ஆசையனைத்தையும் உதறி அகந்தையென்றவருமாகிய மகான் தாயுமானவரும், "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்றனர். உலகக்ஷேமத்தை மாத்திரம் விரும்பி மற்றெல்லித அவாவையும் துறந்த ஆரிய தேசாபிமானிகளோ மெய்த்துறவிகளென்றே கூறலாம். ஆகையால், வசிகரி! நீ கூறிய யாவும் உண்மையானால் நீ ஒரு சந்யாசினியே யாவாய்.

வசிகரி.—அக்கா! நமது அம்மணி சாரதாம்பாள் உனக்குச் சிறந்த வாக்கு வல்லமை அளித்திருக்கிறாள். அவ்வல்லமையினால் நீ என்னென்னவோ நியாயங்களெடுத்துக் கூறி என்னைச் சந்யாசினி என்றழைத்துப் பரிகசிக்கிறாய். எனக்கு வெட்கமாயிருக்கிறது. சந்யாசத்திற்கு முக்கிய லக்ஷணம் அகந்தையை வெல்லுதலாம். ஆனால் அந்த அகந்தையே வசிகரி என்ற ஒரு பெண்ணுருவெடுத்ததெனச் சொல்லலாம். அவ்வாறிருக்க, நீ என்னைச் சந்யாசினி என்றாய். அகந்தையின் அவதாரப் பெண்ணைச் சந்யாசினி என்றழைப்பதுதான் சத்தியமாகுமோ?

ரசிகை:—சற்று யோசித்துப்பேசடி வசிகரி! முதல்முதல் நீ என்ன சொன்னாய்? தேச க்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் நீ விரும்பவில்லை என்றாய். ஆகையால் நான் உன்னைச் சந்யாசினி என்றேன். இப்பொழுதோ, அகந்தையின் அவதாரப்பெண் என்று நீயே உன்னை அழைத்துக் கொள்ளுகிறாய். பிரபஞ்ச நலத்தை விரும்புதலைத் தவிர சுயநல விருப்ப மொன்றுமில்லாதவள் எப்படி அகந்தையுடையவளா யிருப்பாள்? நீதான் உண்மையில் முரண்பட்டப் பேசுகிறாய்.

வசிகரி:—சரிதான். நீ சொல்லியது மெய்யே. நான் முரணுடனே பேசினேன். உண்மையில் நான் மிகுந்த அகந்தையுடையவள்தான். அவ்வகந்தையினுற்றுன் நான் சுயநல மனோபாவத்தையுத் துறந்து உலக நலத்தையே கருதும் உத்தமி என எண்ணிக்கொண்டேன். இப்பொழுதுதான் உன்னோடு சம்பாஷித்ததினால் நான் என்னியது தவறென்று உணர்ந்து கொண்டேனக்கா.

ரசிகை:—அப்படியானால் நீ சங்யாசினி யல்லவோ?

வசீகரி:—அல்ல.

ரசிகை:—நீ உலக சேமத்தை மாத்திரம் கருதுகின்றவரு மல்ல?

வசீகரி:—அல்ல, அல்ல.

ரசிகை:—சில சுயநலங்களையும் நீ விரும்புகின்றாய் போலும். அவ்வாறு விரும்புகிறவளாயிருந்தாற்றான் நீ அகந்தையுடையவளாவாய்.

வசீகரி:—ஆமாம், அக்கா, சுயநல அபேக்ஷையைத் துறந்த தூயவர் களோ அகந்தையை வென்றவர்கள். அவ்வாறு கென்றவர்களே மெய்ஞ் ஞானத்தை யுடையவர்கள். அந்த ஞானத்தை யடைவதற்கு நான் இன்னும் எத்தனை ஜன்மங்க ளெடுக்கவேண்டுமோ!

ரசிகை:—வசீகரி! இந்தக் கதைகளெல்லாம் எனக்கு வேண்டாம், நீ சுயநல விருப்பமுடையவளா இல்லையா?

வசீகரி:—ஆமாம் அக்கா, நான் சுயாபிமானமும் சுயநல விருப்பமும் உடையவள்தான்.

ரசிகை:—நீ விரும்பும் சுயநலங்கள் என்னவென்றுதான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

வசீகரி:—நான் விரும்பும் நலங்கள் எவையென எனக்கே கன்றாய்த் தெரியவில்லை.

ரசிகை:—கன்றாய்த் தெரியாவிட்டால் அக்கரையில்லை. தெரிந்த வரையில் சொல்.

வசீகரி:—என்மேல் கோபித்துக்கொள்ளாதே யக்கா. நீ கேட்கும் கேள்வியை நான் கன்றாய் உணர்ந்துகொள்ளவில்லை. அன்றியும் அதற்கு எப்படிப் பதிலுரைப்ப தென்றும் தெரியவில்லை. முதல்முதல் நீ விரும்பும் விஷயங்களைச் சொல். நீ சொல்லும் விஷயத்தை நான் நன்றாய்க் கவனித்துக் கொண்டிருந்து அவ்விஷயமாக நான் விரும்பும் விஷயங்களைச் சொல்லுகிறேன்.

ரசிகை:—நான் விரும்பும் விஷயங்களைத்தான் முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேன்.

வசீகரி:—நீ முன்பு சொன்ன விஷயங்கள் எனக்குச் சரியாக ஞாபகத்திலில்லை. எல்லாவற்றையும் இப்பொழுது தெளிவாகச் சொல்.

(ரசிகை சிறிதுநேரம் மௌனமாயிருக்கிறாள்.)

வசீகரி:—காமிருவரும் உயிர்ச்சகோதரிகள். என்னிடத்தில் உன் உள்ளத்தைச் சொல்ல என் இவ்வளவு தாமதப்படுகிறாய்?

ரசிகை:—(சிறிது நேரம் மௌனம். பின்பு தலை தாழ்த்திக்கொண்டு புன்முறுவலுடன் கூறுகின்றாள்.) கருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேனடி. நிறைந்த செளக்கியமும், சிறந்த கல்வியும், சகல கல்யாண குணங்களும்,

எல்லாவற்றிற்கும் மேலாக என் நெஞ்சத்தில் முதிர்ந்த அன்பையுமுடைய, என் அகத்திற் கினைந்த நாயகனை அடைவதே எனது போக்கு. (தலையை நிமிர்த்தித் தன் தங்கையின் முகத்தைப் பார்த்துக்கொண்டு) வசீகரி! என் உள்ளத் தாசையைச் சொல்லிவிட்டேன், இப்பொழுதேனும் உன் விருப்பத்தைச் சொல்வாய்.

வசீகரி:—என் எண்ணங்களெல்லாம் ஆகாசக் கோட்டைகளைக்கா. நிறைவேறக் கூடாத விஷயங்களை எண்ணியிருக்கிறேன்.

ரசிகை:—மனத்திற் பதிந்து நிலைத்திருக்கும் எவ்விதவாசையும் நிறைவேறாமற் போகாது. அஞ்சாதே.

வசீகரி:—இல்லையக்கா. என் விருப்பம் இந்த ஜன்மத்தில் நிறைவேறாதென்றே எண்ணுகிறேன்.

ரசிகை:—உன் விருப்பம் இன்னதென்றுதான் சொல்லேன். அது நிறைவேறும் நிறைவேறா தென்பதைப்பற்றிப் பின்பு ஆலோசிப்போம்.

வசீகரி:—(சிறிது நேரம் மௌனம்.) என் மீண் மஹாராஜ்யங்களை காவிரிநதிக் சொல்வதற்கும் எனக்கு வெட்கமாயிருக்கிறது. மற்றொருநாள் அவைகளை உனக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது காரியகையாகிறது. நமது அம்மணியைத் தியானிப்போம் வா.

ரசிகை:—வசீகரி! நீ உன் ரகசியத்தை இப்பொழுது எனக்குச் சொல்லாவிட்டால் என் மனம் தியானத்திற் செல்லாது. நாணப்படாதே என்று எனக்குமாத்திரம் சொன்னாயே. இப்பொழுது நீ என் இவ்வளவு நாணப் படுகிறாய்? சொல்லம்மா, நீ என் கண்மணிபல்லவா!

(அன்பினுற் பரவச மெய்திய அகத்தினாடு தன் ஆருயிர்த் தங்கையை ஆவிக்கனிந்துசெய்து அள்ளுறு கண்ணங்களை முத்தமிடுகிறாள். வசீகரியின் நெஞ்சமும் பரவசமுற்றுப் பதைக்கின்றது.)

வசீகரி:—(ரசிகையின் கண்ணமொன்றை முத்தமிட்டு முறுவலுற்று மொழிகின்றாள்) அக்கா! உன்னிடத்தில் என் அவலையைச் சொல்லாமல் வேறு யாரிடத்திற் சொல்வேன்! ஆகையால் கவலும் சருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். உலகத்துப் பெண்களிற் பெரும்பாலார்க்கு மாறுகத்திய கண்ணிகையாயிருப்பதே எனது முக்கிய விருப்பம்; அன்றியும், நம் நாட்டிற் காரியாகி, நமது அம்மணியின் பாற் தூய பக்தி பூண்டு, அவளது கடாக்ஷத்தினால், செழுமை, கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் அக்காடு மேம்பட்டுத் திலங்க உழைப்பதில் என் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணஞ் செய்வதே இப்பிறப்பில் எனக்குப் பேரானந்தமாகும்.

அக்கா! ஓர் நாட்டிலுள்ள உயிர்களுக்குத் தலைவியாதும் உன்னை பதவியை விரும்பி அரசியாகக் கருதினேனென்று எண்ணாதே. அந்த ஜீவர்கள் அனைவரது சுகத்திற்காக உழைக்கும் அடிமையாரும் பதவியையே

விரும்புகிறேன். அவ்வாறு பல்லாயிரம் ஜீவர்களின் நடுவருந் குழைப்ப தற்குத் தக்க பதவி அரச பதவி யென்றே எனக்குத் தோன்றுகிறது. அன் றியும் நான் பிறந்ததும் அரசகுலம். ஆகையினாற்றான் அந்தப் பதவியைக் கோரினேன். மற்றொரு விஷயம் உனக்குச் சொல்லுகிறேன். அப் பொழுதுதான் நீ என் உள்ளத்தை நன்றாய் அறிந்துகொள்வாய். நமது அம்மணியின் அருளினால் ஒருகால் நான் ஓர் நாட்டிற்கு அரசியாகுவேன், நான் விலையுயர்ந்த ஆபரணங்களை யணிந்துகொள்ளல், சொகுசான ரதம்ஸ தூவி மஞ்சங்களில் சயனித்தல் முதலிய ராஜபோகங்கள் என்னைப்பற்றும் இன்பங்களைத் துறந்துவிடுவேன்,

அரச சபையிலிருக்கும்பொழுது மகுடம் செங்கோல் முதலிய அத்தி யாவசியகமான ஆபரணங்களை மாத்திரம் அணிந்துகொள்வேன். அவை களையும் என் துறந்துவிடக்கூடாதென்று நீ கேட்கலாம். சர்வ ஜன க்ஷேம அபிவிர்த்திக்காக உழைப்பதற்கு மிக்க அநுகூலமாயுள்ள ராஜ்யாதி காரச் செல்வாக்கையும் பிரஜைகளின் அன்பையும் பெறுவதற்கு இச்சின் னங்கள் முக்கிய காரணங்களென்னலாம். ஆகையால் அவைகளைக் கைவி டேன்.

அரண்மனையிலிருக்கும்பொழுதும் அரச சபையிலிருக்கும்பொழுதும் அதிக விலையில்லாத பரிசுத்தமான வெண்பட்டுடைகளையே தரித்துக்கொள் வேன். நமது அம்மணியும் வெண்கலை தரித்துத்தானே பிரகாசிக்கிறாள். அன்றியும் நான் எப்பொழுதும் அரண்மனையிலேயே தங்கியிரேன். பல் வேறுவித நடை உடை பாவனைகளையுடைய பிரஜைகளோடு பழுதுபடாதற்குத் தக்கவாறு சமயோசிதமாய்ப் பல்வேறுவிதமாக எனது நடை உடை பாவ னைகளை மாற்றிக்கொண்டு வருவதற்கு ஆமாதங்களுக்குந் குறையாமல் தேசத்தின் எப்பக்கங்களிலும் சஞ்சரித்து, பிரஜைகளினவசியங்களும் பழகி, அவர்களது குறைகளை அறிந்து, அவைகளை நிவர்த்திப்பேன்.

ஜனங்களுக்குழைப்பதில் னிமித்தமாக இன்னும் என்னென்னவோ விஷயங்கள் என் அகத்தில் நிறைந்திருக்கின்றன. ஆனால் அக்கா! என் எண்ணங்களெல்லாம் வீண் மனோராஜ்யங்கள்தானே. அவைகளைப்பற்றி விரிவாய்ப் பேசுவதில் என்ன பிரயோஜனம்? நீ வற்புறுத்தியதால் ஒரு வாறு சுருக்கமாய்ச் சொல்லிவிட்டேன். (கலை தாழ்த்திக்கொள்ளுகிறாள். அவளது இரு விழிகளினின்றும் இரண்டு ஜலத்துளிகள் பொங்கி அவளது இரு கன்னங்களிலும் படிகின்றன.)

ரசிகை:—(தன் வலக்கையால் தன் சகோதரியின் கன்னங்களிலுள்ள ஜலத்துளிகளைத் துடைக்கிறாள்.) வஞ்சகீ! என் விசனிக்கிறாய்? காருண்யம் நிறைந்த உன் விருப்பங்கள் என் மனோராஜ்யங்களாகும்; அவைகள் யாவும் நிறைவேறச் சூழியலைகளே. சாரதாம்பாளருளினால் நீ உனது ஜன்ம

பூமிக்கு அரசியாவாய். நான் உனக்குமுன் பிறந்தவளே யாயினும் அறி வில் நீ என்னைவிட மிகச்சிறந்தவள். நீ உன் வாழ்நாள் முழுவதையும் தேசத்திற்காக உழைக்கும் நிர்மாணித்திருக்கிறாய். அன்றியும் அரசாட்சிப் பொறுப்பை வகிக்க எனக்குச் சிறிதும் விருப்பமில்லை, சக்தியுமில்லை. ஆகையால் நமது தந்தைக்குப்பின் நீயே நமது நாட்டிற்கு அரசியாக வேண் டும்.

வஞ்சகி:—இல்லையில்லை யக்கா. நான், நமது தந்தைக்குப்பின் இத்தே சத்திற்கு ராணியாதும் உரிமையை உன்னிடமிருந்து கவர்ந்து கொள்ளும் அற்ப சிந்தையுடையவளே யல்ல. தேச க்ஷேமத்திற்காக நான் அரசியாகக் கருதினேன். ஆனால் அரசியாயிருப்பதைப் போலவே அரசியின் உயிர்ச் சகோதரி யாயிருப்பதும் தேசக்ஷேமத்திற்குழைப்பதற்கு அதுகூலமாகவே யிருக்கும். ஆகையால் நீ ராணி யாகுங்காலத்தில் நான் உன்னோடு வசிக் கும் பாக்கியத்தைப் பெறுவதே எனக்குச் சம்பூரண திருப்தியை அளிக் கும். ஆனால் அக்கா! உயிர்ச் சகோதரிகளாயினும் நாமிருவரும் பெண்கள் தானே, மங்கைப்பருவ முற்ற பெண்களுக்கு மணஞ் செய்யாதிருப்பது தவறென்றெண்ணி நம்மிருவருக்கும் மணஞ்செய்து நம்மைப் பிரித்து விடு வார்களே. விவாகத்தைப்பற்றி நினைத்துவிட்டால், என் மனம் பதறுகிறது. (கைகூப்பிக்கொண்டு) அம்மணீ! சகல கலாவல்லீ! விவாகம் என்ற சாகரத் தில் விழாதவாறு நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். (விழிகளில் மீண்டும் ஜலம் பொங்குகிறது. தன் ஆடையின் முன்றானையை அக்கண் களில் ஒற்றிக்கொள்ளுகிறாள்.)

ரசிகை:—என்னடி! விவாகத்தைச் சாகரமென்று கருதுகிறாய்?

வஞ்சகி:—ஆமாம் அக்கா, அது சாகரந்தான். எனது அவாவனைத்தை யும் அலைமோதிக் கரைத்துவிடும் கொடிய சாகரம். உயிர்ச்சகோதரிகளா கிய உன்னையும் என்னையும் பிரிக்கும் பாதக சாகரம்.

ரசிகை:—இல்லையடி. இப்பொழுது நீ இப்படித்தான் பேசுவாய். ஆனால், உன்னைப்போல் உலக க்ஷேமாபிவிர்த்திக் குழைக்கக் கங்கணங் கட் டிக்கொண்டிருக்கும் உத்தம நாயகனொருவனை நீ காதலித்து, அவனது காத லையும் நீ கவர்ந்து கொண்டால் பின்பு நீ விவாகத்தை என்ன சாகரமென்று கருதுவாய் தெரியுமா? இணையற்ற இன்பசாகர மென்றுதான் கருதுவாய். உன்னுடைய உயர்ந்த நோக்கங்களில் ஒன்றேனுமில்லாத நான் இந்நாட் டிற்கு அரசியாக, நீ எனது உயிர்ச் சகோதரியாக என்னோடு வசித்தல் உனது விருப்பங்களை நிறைவேற்றி உனக்குச் சம்பூரண திருப்தியைக் கொடுக்கும் என்று நீ சொல்லியது தவறு. உண்மையில் நீ உனது உயர்ந்த விருப்பங்களுக்கும், உனது சௌந்தரியத்திற்கும், உனது கல்விக்கும் இசைந்த உனது அகத்திற்கினிய காதலை மணந்து நீங்களிருவரும் இந்தச்

சரஸ்வதி தேசத்திற்கு அரசனும் அரசியுமாகும்முன் நீ பூரண திருப்தியை யடைவாய். ஆகையால் வசீகரி! உனது ஆசைகொல்லாம் நிறைவேறும் வண்ணம் நீ உனக்குத் தக்க காதலனை அடைவதற்கு நமது அன்னை அருள் புரியுமாறு நீ அந்த அம்மணியைத் தியானித்துக் கொண்டிருக்க வேண்டும்.

வசீகரி:—என்னக்கா! நித்திய கன்னிகையா யிருப்பதே எனது முக்கிய விருப்பமென்று சொன்னேன். சீயோ, எனது எண்ணங்களெல்லாம் நிறைவேறுவதற்கு நான் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறாய். வெகு அழகாயிருக்கிறது உன்னுடைய புத்திமதி.

ரசிகை:—விவாகமின்றி கன்னிகையா யிருப்பதில் என்ன இன்பமடி யிருக்கிறது?

வசீகரி:—விவாகஞ் செய்து கொள்வதில் என்ன இன்பமக்கா இருக்கிறது?

ரசிகை:—என்ன இன்பமா? சொல்லுகிறேன் கேள். முதலில் நான் கேட்கும் ஒரு விஷயத்திற்கு மாத்திரம் பதில் சொல். நீ என்னைத் சம்பாவித்து விளையாடிக் குலாவி யிருக்கிறாயிடத் தனிமையா யிருப்பதுதான் உனக்கு அதிக இன்பத்தைக் கொடுக்கிறதோ?

வசீகரி:—இல்லையில்லை, ஏகாந்தத்தி யிருப்பதைவிட உனதருகேயிருப்பதுதான் எனக்கு அதிக ஆனந்தம்.

ரசிகை:—அவ்வாறானால் ஏகாந்தத்திலிருப்பதைவிட உன் உள்ளத்திற் கினிய காதலனைத் சம்பாவித்துக் குலாவி யிருப்பதும் அதிக ஆனந்தமானே?

வசீகரி:—சீச்சி! என்னவார்த்தைகளைப் பேசுகிறாயக்கா! நீ என் சொந்த சகோதரி. என்னுயிர்த்தோழி. ஏன்? என்னுயிர்த்தெய்வி யென்றே சொல்லலாம். உன்னைத் குலாவியிருப்பது எனக்கு மிகுந்த ஆனந்தம். உன்னைப்பிரியும்படி நேரிட்டால் பின்பு ஏகாந்தமென்ற தோழிதான் எனது இனிய தோழியாவாள். வேறொன்றுந் தோழியோடு குலாவினும் நான் சிறிதும் இன்பமடையேன். நீ சொன்னபடி ஒருபுருஷனைத் சம்பாவித்துக் குலாவி யிருத்தலைப்பற்றி நினைக்கும்பொழுது ஆ! என் மனம் எவ்வளவு அருவருப்படைகிறது தெரியுமா! சீ! இனி அப்படிப்பட்ட வார்த்தைகளை என் முன் பேசாதேயக்கா.

ரசிகை:—(புன்னகைபுடன்) என்னைத் தவிர ஏகாந்தம் என்ற சக்தி உன் உனக்கு இனிய தோழியென்றாய். ஏனும் ஒரு பெண்ணானேன். நான் மாத்திரம் எவ்வாறு உனக்கு இனிய தோழியாகின்றேன்?

வசீகரி:—அக்கா! அதற்குக் காரணம் நான் உன்பால் கொண்டிருக்கும் அன்புதான். வேறொன்றுமில்லை.

ரசிகை:—நீ என்னிடத்தில் அன்பு பூண்டிருப்பதால் நான் உனது உயிர்த்தலைவியா யிருக்கிறேன். நீயும் என்னைத் குலாவியிருப்பதில் இன்பமடைகின்றாய். அவ்வாறே நீ உனக்குத் தக்க நாதனிடத்துக் காதலுற்று விட்டால் அவனே உன்னுயிர்த் தலைவனாவான். அவனைத் குலாவியிருத்தலே உனக்குப் போராகுந்தானும்.

வசீகரி:—அக்கா! நீயும் நானும் ஓர் வயிற்றிலுதித்த சகோதரிகள். குழந்தைப் பருவத்திலிருந்து நாமிருவரும் ஒருவரையொருவர் பிரியாது ஒன்றாய்க் குலாவி விளையாடினோம். ஆகையால் என் மனம் உன்னிடத்தில் முகிழ்ந்த அன்பு பூண்டிருக்கிறது. ஆனால் நான் இன்றுவரையில் ஒருபோதும் பார்த்திராத புருஷனொருவனை இனிமேற்கண்டு அவன்பாற் காதலுறுதலைப்பற்றிப் பேசுகிறாயே. காதல் அல்லது அன்பு கெடுகோட் பழக்கத்தினால் அகத்தைச் சார்ந்திருக்குமே யன்றி, புதிதாய்க் கண்ட ஒருவரிடத்து எப்படி உண்டாகும்?

ரசிகை:—வசீகரி! நீ காதல் அல்லது அன்பு என்று பேசியது பிழை. காதல் வேறு. அன்பு வேறு. அன்பு நீ கூறியவாறே கெடுகோட் பழக்கத்தினாலுண்டாகும். ஆனால் காதல் என்பது ஸ்திரீ புருஷர் இருவர் ஒருவரையொருவர் புதிதாய்க் கண்ட கூணத்திலேயும் அவர்கள் உள்ளத்தில் பதிந்துவிடும் அற்புதக் ளர்ச்சி.

வசீகரி:—(நகைத்துக்கொண்டு) கூணப்பொழுதில் எப்படித்தான் அந்தப் புதுக்கிளர்ச்சி மனத்திற் பதியுமோ? எனக்கா இந்த அசம்பாவித விஷயத்தில் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாய்?

ரசிகை:—இது அசம்பாவித விஷயமா! அப்படியானால் சீதா பிராட்டியும் ராமபிரானும் ஒருவரையொருவர் கண்ட கூணத்தில் அவர்கள் உள்ளத்தில் ஒப்பற்ற காதலுதித்ததும் பொய்யாகுமோ? யமராஜனை வெற்றி கொண்ட அற்புத சக்திவாய்ந்த சாவித்திரியின் அகத்தில் நிறைந்த மகத்தான காதல் அவள் சத்தியவானைக் கண்ட கூணத்தில் அவள் மனத்திற் பதிந்ததும் பொய்யாகுமா? என்னடி வசீகரி! ஓர் அன்னப் பறவையின் வார்த்தைகளினிமித்தமாக நிடதநாட்டரசனுகிய நளனும் விதர்ப்ப நாட்டரசபுத்திரியாகிய தமயந்தியும் ஒருவர்பாலொருவர் காதலுற்று மன முருகினரென்றால், ஆடவர் அரிவையர்கள் ஒருவரையொருவர் கண்ட கூணத்தில் காதலுறுவது அதிசயமும் அசம்பாவிதமு மாகுமோ? நீ உன் அன்பிற்குரிய என்னைச் சம்பாவித்துக் குலாவியிருப்பதில் அடையுமின்பத்தைவிட, உன் காத்தற்குரிய தலைவனை மணந்து அவனைத் இனிமையாகச் சம்பாவித்துக் குலாவியிருப்பதால் நீ அடையும் இன்பம் பன்மடங்கதிகமாக யிருக்கும். நீ அத்தகைய இன்பமுறுமாறு உனக்கினிய காதலனை மணந்து கொண்டபிறகுதான் என்வார்த்தைகளின் உண்மையையறிந்துகொள்வாய்.

வசிகரி:—ஜானகியும் சாவித்திரியும் கமலந்தியும் புருஷர்கள்பால் காதலுறமுர்களென்றால் வசீகரியும் அவ்வாறு ஓர்புருஷனிடம் காதல் கொள்ளவேண்டியது அவசியமா! இது என்ன நியாயம்! அக்கா! நீ கூறிய காதல் என்ற இளர்ச்சினையும் அதன் காரணமாக நிகழும் விவாகத்தையும் கான் விஷமாக வெறுக்கிறேன். மேலும்மேலும் அந்த விஷயத்தைப்பற்றி என்னோடி பேசாதே. காழிகையாகிறது. காம் நியானத்திற்குப் போலோம் வா.

ரசிகை:—உன்னுடைய கன்மையைச் சோதியேகான் உனக்குப் புத்திமதி சொல்லுகிறேன். மற்றொருமுறை இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுவோம். இப்பொழுது அதிக காழிகை யாகிறதுதான். போலோம்மா.

(இருவரும் போகிறார்கள்.) (தொடரும்)

பத்மாதிபர்.

காயம் பினி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

முன்னுரை.

தீராவி, மின்சாரம் முதலியவைகளின் உதவியினால் உடற்கட்டுகளும் பந்தோபஸ்தாக கொண்டு போவதற்கு வேலைகளைச் செய்து வரும் சாலைகளிலுள்ள யந்திரங்களிலுமுமா மற்றும் போவதற்கான காரணங்களினாலும் பாதிட தேகத்திற்கு தீங்கிழைக்கூடிய காரணங்கள், பெரிய காயங்களாதல், இரத்தப் போதல், விஷமேயாவின்மை முதலிய அபாயங்களைத் தீர்ச்சிபெற்ற சிறந்த சிகிச்சைகளைக் கொண்டு இவர்களுக்கென்றும் வரை அவ்விதமான அபாயங்களுக்குட்பட்டவர்களுக்கு உடனே சமீபாதிதபாய்ச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகள், காயப்பட்டவர்களுக்கு சேவகங்கள் புரிக்கிறதுபடி அவர்களைப் பிடிக்க தூக்க அனுசரிக்கவேண்டிய முறைகள், அவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோக வேண்டியதிலும் அதற்கென வர்பட்டிருக்கும் கைவண்டிகளிலும் அல்லது அவைகள் இல்லாத காலத்தில் அவர்களுக்குக் கஷ்டமில்லாமல் உடம்பிலுள்ளதை வேறுவிதமாய்க் தாங்கிலும் இலேசாய்த் தூக்கிக் கொண்டு போகவேண்டிய முறைகள், இவைகளைக்கொண்டு காயம் பினி உற்றவர்களுக்குச் செய்யும் சகாயம் பிரதம உபசரணை என்று சொல்லப்படுகின்றது.



கண்ணம்மாள் கதை.

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

அத்தியாயம் 2.

கண்ணம்மாள் கணவன்! இவர் நமது கதையில் ஓர் முக்கியஸ்தர். ஆகலால் இவரை புருஷனைப்பற்றிக் கொஞ்சம் பேசுவோம். அவன் பெயர் சுப்பைசாமி. இவர் ஓர் சுகப்பனர் ஒரு இரத்தின வியாபாரி. அவருக்குக் கொஞ்சம் ஆஸ்தியும் கடனுமிருக்கத. ஆதலால் அவர் இறக்கபிறத அவரது சகோதரன் ஒருவன் அவரை வியகாரஸ்தலில் தள்ளிவிட்டான். சுப்பைசாமி தனிகைட்ட கண்ணம்மை அழைத்து தனன் திருமிய குசாலப்பானதி கண்ணம்மை அதனுக் கனித்தான், "பொ! பாவி என் சுகப்பனர் எனக்குக் கடன் முதலிய பெரிய தொல்லைகளெல்லாம் வைத்துவிட்டுப்போனர். என் சிறிய சுகப்பனர் மாத்திரம் இல்லாவிட்டால் நான் தெருவில் நின்று வாங்குவேன். ஆ! என்னபிரச்சம் அவர், நான் தப்புவதற் விட்டுப்போன திக்கலான வியகாரசாக்களை யெல்லாம் தன் தலைமேற் போட்டிக்கொண்டு அதற்கு எவ்வளவோ செலவுபட்டு என்னை எவ்வளவு செல்வப்புத்திரனை யாக்கி வருகிறார்" என்று சுப்பைசாமி மகிழ்ந்தவிட்டான். தனகையால் தன் பிற்றப்பன் சொன்னபடியெல்லாம் செய்தான். அவன் நீட்டின பத்திரங்களிலெல்லாம் கையெழுத்து வைத்தான். என்ன பத்திரம், என் எழுத்திடவேண்டும், என்றெல்லாம் வாவிப்பதேயில்லை. ஆனால் தாசனும் விலாசக்கன்தான் காழ்த்தன. அப்புறம் தெல்லாம் படிப்படியாகக் கடனித்த சுப்பு சாமிக்குக் கோபம் பொங்கி விட்டை சண்டப்பிரசண்டமாய் தே. தகையால் அவரை தாட்டக்கப்போனன். அதற் ர் விலாசுக்கு சமாதானஞ் பன் மறுபடியும் ப்பேய் னான். ஒரு சம்

திருக்கிறது. வளர்ந்த மூளைக் கூடுகளில் சிறியதின் கனம் மனிதர்களில்
63 கன அங்குலத்திற்குக் குறைந்திராது. வாலில்லாக் குரங்குகளின்
பருத்த மூளையின் கனம் 35 கன அங்குலத்திற்கு மேற்பட்டதில்லை.

இவ்வித மூளை மனிதனுக்கு வாய்த்த காரணம், சிறந்த ஆணும் பெண்
ணுமாகப் பெற்ற குழந்தைகளில் தகுந்தவையே தப்பிப் பிழைத்து காலவித
குணங்களை அடைந்து தலைமுறை தலைமுறையாக மூளைபருத்து வந்தது
தானென்று மேனட்டார் கூறுவர். தற்காப்புச் சாதனங்களாகிய கனத்த
உரோமம், கொடுங்கை, கூரிய நகங்கள், பற்கள், கொம்புகள், முட்கள், முத
லியவற்றில் ஒன்றுவது அமையப்பெறாத மனிதன் என்றைக்குமுதல்
தோலைப்போர்த்தானே, என்றைக்குமுதல் ஈட்டியை வேட்டையில் உபயோ
கித்தானே, என்று பாகம்பண்ணி தினை வளர்த்தானே, என்று முதல் விதை
யைத் தெளித்தானே, முதல் மூளையை நாட்டினானே, அன்றே இயற்கை
யில் பலமான மாறுதல் உண்டாயிற்று. பூதங்களின் விகாயாட்டைக் கருவியா
பிருந்த மனிதன் அவைகளைச் சீர்ப்படுத்தி இயற்கை மாறுதல்களுக்குத்தக்
கபடி தனது தேகத்தை மாற்ற முயலாமல் மனோதிடத்தால் அம்மாறுதல்
களுக்கு ஏற்ற பரிகாரங்கள் செய்யலானான்.

ஆகவே மனிதனை இயற்கையில் ஊடுருவும் ஒருவகை யந்திர
மென்றே மேனாட்டாரில் சிலர் கருதுவார்கள். மதத்துவஞா
தர்மம் மதம், இவற்றைக் கருதுவதிலேயே அவ்யந்தி
யந்திரங்களுக்கும் பேத மேற்படுகிறதென்றும் சொ

இந்துக்களில் ஆத்மஞானிகளே
றும் ஆத்மா நித்தியமானதெ
மானிட யாக்கையும்
சிலர் அது தாழ்ந்த யாக்
றும் கருதுவார்கள்.

பின்ன
னின்
கால
தெ

காரங்களோயும் செய்திருந்தான். தனைசாமிக்கோ வீடு ஒன்றுதான் பிர
ரார்ஜிதமாக நீலேத்தது. வேறு ஒன்றும் கிடையாது. ஆனல் பிதாரார்
ஜிதக் கடனும் கிடையாது. அம்மட்டும் விட்டதற்காக அவன் சிற்றப்பனே,
இங்காட்டுக் குடும்பங்களோக் குலைத்துக் குட்டிச்சுவர் செய்யும் சில கோட
ரிக்காம்புகளோவிட கல்லவனென்றே சொல்லவேண்டும்.

இந்நிலைமையில் தனைசாமி தஞ்சாவூருக்கு ஓடிவந்தான். அங்கே சில
மாதங்கள் இருந்தான்; பின்பு அவன், கண்ணம்மாள், ருக்மாங்கதர், அவர்
மனைவி, அவர் குழந்தை லக்ஷ்மி, ஆக அனைவரும் புறப்பட்டுக் கூடலூ
ருக்கு வந்தார்கள். கூடலூர் வீட்டில் கண்ணம்மாள் இல்லறம் நடத்து
வதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

தனைசாமியின் கல்வியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்வோம்.
முதன்முதல் அவன் ஒரு சிறு தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான்.
அங்கே முதல் வகுப்பில் வாசிக்கும்போதே "படிப்பில் வீர்த்தியில்லை"
என்று அவன் படிப்பைப் பற்றி அடிக்கடி உபாத்தியாயர் புகார் செய்து
கொண்டிருந்தார். அவனது தகப்பனார் தன் பிள்ளையின் மூளைத்தம் தமிழ்
உபாத்தியாயர் கற்பிக்கிற மாதிரிக்கும் பொருத்தமில்லை என்று சொல்லி
அவனை இங்கிலீஷ் பாடசாலைக் கனுப்பினார். அங்கே எல்லாரிலும்
டங்கள் பட்டு எட்டாவது வகுப்பு வரையில் வாசித்தான். ஒவ்வொரு
வொரு வகுப்பிலும் கடைசியில் உட்கார்ந்திருக்கும் புத்திமி
சிரோன்மணி இருந்தான். எட்டாவது வகுப்புக்குமேல் தன்
கூடம் போக முடியவே முடியாதென்று பிடிவாதமாய்ச்
டான். 'டைப் ரைட்டிங்' என்றே அச்செழுத் தடிக்
கற்றுக்கொள்ளும்படி அவன் தகப்பனார் ஏற்
மூன்று நான்கு மாதங் கழிந்ததும், "அந்தப்
கும் பிடித்தமேயில்லை. என் கை
உத்தோச்சலைக் கொடுக்கிறது. என்ன க
னைலும் நிமிஷத்திற்கு ஒழெட்டு வார்
அப்படி இப்படி அவஸ்தைப்பட்டு அ
எப்படியோ தப்புத் தப்பாகப் போகிற
லும், பிழைக்க
கொண்டு என்
வது போல் பு
பார்கள். ஆ
கெட்டுப்போ
டான். அப்

கணக்குமுறை நூல்களிற்கு வந்து கற்பிக்கும்படி ஒரு உபாத்தியாயரை நியமித்தார். ஆனால் அதி சனக்கு என்னவது கூட அர்த்தமே ஆகவில்லை என்பதும் எத்தனை பரதேசங்கள் அலைந்து மண்டையை யுடைத்துக்கொண்டாலும் அர்த்தமாகாது என்றும் சித்திரத்தில் கண்டுபிடித்து உபாத்தியாயரை வீட்டுக் கனுப்பிவிட்டான். பின்னர் அவன் தகப்பனார் எவ்வளவும் ஒரு வர்த்தக சாலையில் அவனை ஒரு வேலையில் அமர்த்தவேண்டு மென்று முயற்சித்தார். ஆனால் குமரன் "கூட்டாளியில் இரத்தின வியாபாரம் செய்யும், ஓர் பிரபல ஜகவரியாகுயிய உங்களுக்கு மகனாகப் பிறந்தான். ஒரு வன் கீழ் அமர்ந்து வேலை பார்க்கிறதா! இதைவிட வெட்கக் கேடான காரியம் வேறு என்ன இருக்கிறது! சீ!" என்று சொல்லிவிட்டான். அவன் தகப்பனார் என்ன செய்வார். பாவம்! "என்னுடை இரத்தின வியாபாரமாவது கற்றுக்கொள்" என்று தானே தன் புத்திரனுக்குக் குருவாக ஆயினார். ஆனால் எத்தனை காள். இரத்தினங்களோடும் வியாபாரிகளோடும் பழகியும் அந்த வியாபாரம் வெகு விசித்திரமாகவே தோன்றிற்று கடைசி கண்ணம்மாள் கணவனுக்கு. வியாபாரிகள் ஒருவர்க்கொருவர் கைகோர்த்து துணியால் அக்கைகளை மூடி, இரத்தின விலைகளைப்பற்றி இரகசியமாகப் பேசும் விதங்களைப்பற்றி அவன் தகப்பனார் அவனுக்குப் போதித்தும் அம்மாதிரி விதங்களெல்லாம் அவனுக்கு வெறுப்பாகவும் அசங்கியமாகவு தோன்றிற்று. "என்! வெண்மையாக வாயினால் பேசினாலென்ன? இரு மார்க்கங்களும் அழுத்தங்களும்! தமிழர் தொழிலெல்லாம் இப்படித்தான் நிறைந்திருக்கிறது. அதனால்தான் விர்த்திக்கு வருவதில்லை. வியாபார வியவகாரங்களெல்லாம் எவ்வளவு கோணலாகவும் திருட்டாகின்றன." என்று எல்லோருடைய வியவகார முறைகளை கவுன்போல் பேசுவான். அன்றியும் பணப் பைட்டிற்கு ப்பன்மடங்கு மிக்கலாகவும் கவர்ச்சாத்திய மோக ரப் பயிற்சி. கற்களெல்லாம் மிழுமழுப்பு ஒ. இந்த மிழுமழுப்பையும் மக்கலையும் ர, 27½ ரூபாகன், 54 ரூபாகன், 500 காகக் கற்களுக்கு மதிப்புச் செல்லும் க்கைப்பிழை ந்த மூச்சடக்கித் தவளு ட்டாதுபோலிருக்கத.

அவன் தகப் ரு இரத்தின காலங்களில் தம் விநோத் ணைசாமி

மூலமாகக் கையாடியதில், அது எப்படியோ மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக 40 வராகன் கூடப் பெறுத வேறொரு வைரம் இரத்தின வியாபார புத்திர ரத்தினத்தின் கையில் வந்து விட்டது. மாற்றிய திருட்டு வியாபாரி யாரென்று கண்டுபிடிக்கக் கூடவில்லை. வைரத்தைக் கையாடியவர்களில் ஒருவர் அல்லது பலராயிருக்க வேண்டும். விஷயங்களைப் போலீசுக்குத் தெரிவித்தால் ஒருகால் உண்மை வெளியாகலாம். ஆனால் தனை சாமியின் தந்தைக்கோ இந்த விஷயத்தைப் பிரமாதப்படுத்திப் போலீ சாருக்குத் தெரிவிக்கப் பிரியமில்லை. இத்தவிஷயத்தில் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் ஒவ்வொருவரும் அவர் தாக்ஷண்யத்திற்கும் வசீகரத்திற்கும் உரியவர்கள். போலீசுக்குப் போனால் அவர்கள் அனைவரையும் பகைக்க நேரிடும், ஊர் முழுதும் ஓர் அமளியாகும், இவைகளினால் தன் இரத்தின வியாபாரச் செல்வாக்கும் குன்றும், என்று கருதி, தன் புத்திரசிகாமணி யின் புத்தி சுகுமத்திற்கு யார்தான் என்ன செய்வது என்று ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு சும்மா யிருந்துவிட்டார். ஆனால் அன்று முதல் தனைசாமி இரத்தின வியாபாரத்தைக் கைகழுவிவிட வேண்டி யதாயிற்று. சரியான வேலைக்குச் சாப்பாட்டுக்குக்கூட வீட்டுக்கு வரப் போகிய அவகாசமில்லாமல் இவ்வப்படி வரைச் சுற்றிக்கொண்டு வரும் உத்தியோகத்தில் அமர்ந்தான். இந்த உத்தியோகத்திலிருந்து பெரும்படி [illegible] கண்ணம்மாள் கூடலூருக்கு வழலுந்த பிறகுதான்.

(தொடரும்.)

யாணர்நாகன்.

[illegible]

[illegible] ங்களுக்கும் தனித்தலைமை பூண்டு கருணாகரமாக வீசுகும் கடவுளே ஓர் தாயாகவும், இவ்வுலகத்தோர் ஓர் குழந்தையாகவும், கடவுள் அளித்துள்ள பல அருமைபெரும் கலைகளே பிட்டாயாகவும் ஒருவாறு உருவகப்படுத்தி, சிறுவர் சிறுமியர்களுக்குப் பிரியத்தைத் தரும் ஒரு வேடிக்கையான மட்டாய்ப் பாட்டாகவும் இருத்தல் வேண்டுமெனக் கருதி மிகத் தெளிவான மொழிகளால் அமைக்க கடையில் இப் பாட்டு எழுதப்படுகின்றது. தோற்றத்தில் வேடிக்கையான ஒரு குழந்தையின் பாட்டாயிருந்தபோதிலும், இதில் உயர்ந்த நீதிகளும் தொடர்ந்திருப்பது காண்க.)

"சுத்த ப்ரம பராத்பரராம்" என்ற மெட்டு.

1. அன்னை யம்மாள் என்னம்மாள்
அன்புடை யாளவள் என்னம்மாள்

தெய்த்தரைப் பாளையன் என்னம்மாள்.
(அடுத்த மலையில் இப்பாட்டு முடிவுறும்).

கோகிலத்தோன்.

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

சமூகத்தின் எல்லிதமான உயர்விற்கும் அறிவே மூலாதாரம். அறிவிற்கு அடியாதாரம் கல்வி. கல்வியோ பாஷைகளால் ஆக்கப்பெற்றிருக்கிறது. சுவரின்றி சித்திரமில்லை. பாஷையின்றி கல்வி ஏது! ஆகவே கல்வியை ஓர் பாஷை அல்லது பல பாஷைகள் மூலமாகத்தான் பெறவேண்டும். பிற பாஷையில்விடத் தாய்ப்பாஷை மூலமாகவே எளிதாகவும் அதிக திருத்தியிலும் கல்வி பெறலாமாகையால் அவ்வாறு கல்வி புகட்டும் முறையே உத்தமமானது. எனினும் ஒரு பாஷைதயின் மூலமாகப் பெறும் கல்வி அப்பாஷைதயின் புஷ்டியையும் ஆழத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. வளர்ச்சியடையாத (எட்டெழுத்து முறை) இல்லாத பாஷைகளும் வளர்ச்சியடைந்திருந்தபோதிலும் ஒரு சில சாதாரண நூற்களே உடைய பாஷைகளும் உள. அவைகள் மூலமாக என்ன கல்வியை அடைய முடியும். அப்படிப் பெறுவதையும் கல்வி என்னலாமா!

நமது நாட்டுக் கல்வி இயலுக்குத் திரும்புவோம். கி. பி. 1834ம் வரை நமது அரசாங்கத்தார் ஆழ்ந்த ஆலோசனை செய்து இந்நாட்டுக் கல்வியை முக்கியமாக ஆங்கில பாஷை மூலமாகக் கற்பிப்பதெனச் செய்திருமானமே இவ்வளவு காலமாக அநுசரிக்கப்பட்டு வந்திருக்கின்றது. அத்திர்மானமும் அநுசரணையும் இதுகாறும் இருந்து வந்தமை நமது கலத்திறகே யுரியதாயிற்று. எவ்வாறென்றுங் கூறுவோம். கல்வியை வைதிகக் கல்வி யெனவைகைக் கல்வி எனப் பாகுபாடி செய்யலாம். வைதிகக் கல்விக் குரிய கலைகளோ இந்நாட்டுப் பாஷைகளில் முக்கியமாக நமது தமிழ் மொழியில், சமுத்திரத்தினும் விசாலமும் ஆழமும் கொண்டவையாயிருக்கின்றன. ஆனால் இலௌகிகக் கலைகளோயோ ஐரோப்பிய பாஷைகள் அபரிமிதமாகக் கொண்டுள்ளன. அவைகளோ கண்டு எங்களும் பிரப்பிப் பாவச் செய்து மாறு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி புகட்டலாயிற்று. இம்மாறு இத்தேய மொழிகளின், முக்கியமாக நமது தாய்த் தமிழின் அபிவிர்த்திக்கே இட்டு அஸ்திவாரம் என்ன வேண்டும். கல்லுமனமுகமே நாடித் தன் கையாலேயே அவைகளை எடுத்துண்ணும் ஆசையும் ஊற்றமும் தூர் குழந்தைக்குண்டாகாது அதன் தாய் தன் கையால் உணவை எடுத்து வாட்டி அக்குழந்தைக்கு அவ்வுணவின் தன்மையை உணர்வித்த பின்புதான். உயர்ந்த இலௌகிகக் கலாஞானம் நமது சமூகத்தர் அறிவில் நன்கு பரவும் நிமித்தம் அக்கலாஞானத்தில் மிகச் சிறந்துள்ள ஆங்கில கல்வி நமக்கு ஏற்பட்டது. அவ்வாறே இலௌகிகக் கலாஞானமும் பரவிற்று. இந்த ஞான மனைத்தையும் நமது தமிழ் மொழிக்கு அர்ப்பணம் செய்து, எத்தனையோ உன்னதமான விசாலித்த ஆழ்ந்த கல்வியையும் தமிழின் மூலமாகப் பெற இயலும் காலமும் சமீபித்து விட்டது.

தமிழ்! தமிழ்! தமிழ்! கொஞ்சத்திற்கும் காவிற்கும் செவிக்கும் இனிய தமிழ்ப் பாஷையை அபிவிர்த்தி செய்யவேண்டும் என்ற அவா சமார் பத்தாப் பன்னிரண்டு வருஷத்திற்குமுன்பு இருந்ததைவிட இப்பொழுது பன்மடங் கதிகரித்துச் சற்காலம் தமிழ் நாடெங்கும் பரவியிருக்கிறது. ஆனால் தமிழின் நற்காலத்திய அபிவிர்த்திக்குத் தக்க வழிகள் அனேதையம் தமிழ் நாடி தன்றாய் அறிந்து கொள்ளவில்லை என்னலாம். பழைமையிலும், இனிமையிலும், சொற் சுவை பொருட் சுவையாகிய இலக்கியச் சுவை செறிந்துள்ள அற நூற்களிலும், ஆத்மதத்துவ ஆராய்ச்சி நூற்களிலும், மற்றும் பல விதங்களிலும் தமிழ்மொழிக்கு இணையொழி இல்லையெனத் துணிந்து கூறலாம். இத்தனைப் பெருமை வாய்ந்த தமிழ் இலக்கிய இலக்கண வைதிக நூற்களோ ஆராய்ச்சி கற்பதும் அவற்றைப் போன்ற நூல்கள் இயற்றுவதுந்தான் தமிழபிவிர்த்திக்குரிய முக்கிய முயற்சிகள் என்று பெரும்பான்மையோர் கருதுகின்றார்கள். உண்மையில் நமது தமிழை உன்னதப்படுத்த வேண்டுமெனின் முற்கூறிய சாதனங்கள் மாத்திரம் போதவே போதா. பௌதிக சாஸ்திரம் ரசாயன சாஸ்திரம் முதலிய பிரதிருஷ்டி சாஸ்திரங்கள், தேச சரித்திரங்கள் பூகோள சாஸ்திரம், ஜியாமெட்ரி கணித சாஸ்திரம், முதலிய ஐரோப்பிய பாஷைகளிலுள்ள அருமையான விஷயங்கள் நமது பாஷைதயில் காணப்படவில்லை. இதை நினைத்துவிட்டால் நிஜமான பாஷாபிமானிகள் நெஞ்சம் உச்சயமாக நோகும். பண்டைக்காலத்தில் தமிழும் தமிழ்நாடும் பெருஞ் சிறப்புற்றிருந்தன வென்று தெரிகின்ற நால் அக்காலத்தில் முற்கூறிய சாஸ்திரங்கள் தமிழில் அமைந்திருந்தாலும் இருக்கலாம். என்றாலும் சற்காலம் அந்நூல்கள் ஐரோப்பிய பாஷைகளிற் பெருகியிருப்பதுபோல் நமது பாஷைதயில் இல்லவே யில்லை. ஆகவே ஐரோப்பிய பாஷைகள் அறிந்தவர்கள் அடையக்கூடிய இலௌகிக ஞான செல்வமது தமிழ்மாத்திரம் அறிந்தார் அடைவதற் கில்லாமற் போகின்றது. அதையகல் இலௌகிக சாஸ்திரங்களாகிய ஆபரணங்கள் நமது தமிழ்த்தாயின் மேனியில் அலங்கரிக்கச் செய்யவேண்டியது அத்தியாவசியகம். அப்பொழுதுதான் அவள் இந்த உலகில் நமக்கு அச்சத்தும் மதிப்பும் பெறுவாள்.

இலௌகிக சாஸ்திரங்கள் தமிழில் இல்லாத குறையை நிவர்த்திக்க மகத்தான முயற்சி நாட்டில் எழவேண்டும். அவ்வாறு எழச்செய்யும் பொறுப்பு ஐரோப்பிய பாஷைகள் பயின்று அப்பாஷைகளின் சாஸ்திரங்களில் நிபுணத்துவம் பெற்றிருப்பவர்களையே முக்கியமாகச் சார்ந்தது. ஆனால் அக்கப் பெறுப்பை வகிக்க அவர்களுக்குச் சுயபாஷாஜ்ஞானமும் வேண்டியது அவசியம். சுயபாஷாஜ்ஞானம் இல்லாமையாற்றான் அவர் களில் அநேகர் தாங்கள் இந்த பாஷைகளிற் கற்ற அரிய விஷயங்களைத் தமிழில் எழுதச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆகவே, ஐரோப்பிய பாஷையில் ஏ ல அறிஞராகிய தமிழர் அனைவரும் திட்டமான தெள்ளிய இனிய பிழையற்ற தமிழ் நடை எழுதப் பழகி இலௌகிக நூற்களைத் தமிழில் அமைப்பதில் விசேஷ கவலை யெடுத்து முயற்சித்துவரக் கடமைப் பட்டின்னார்கள். சுயபாஷையில் கல்வி! சுயபாஷையில் கல்வி! என்ற மீன மாகப் பிரசங்கங்களும் பத்திரிகை வியாசங்களும் (முக்கியமாக ஆங்கிலத்தில்) முளைத்துச் சலசலக்கின்றனவேயன்றி, சுய பாஷைக் கல்விக்கு அத்தியாவசியமான, சுய பாஷையில் இலௌகிக நூற்கள் ராளமாகப் பெருக்கும் சக்தான பெரிய எத்தனங்கள் இன்னும் தோன்றின பாடில்லை.

ஆனால், தமிழின் ஏற்றத்தை நாடியிருக்கிற தெய்வத்திருவருள் தமிழ் எக்காலும் இங்ஙனமையில் இருக்கச்சம்மதியாது. இனி தமிழ் உன்னதமடையத்தான் வேண்டும். ஆகையால் இந்த பாஷைகளிலுள்ள இலௌகிகக் கிரந்தங்கள் தமிழில் அமையத்தான் வேண்டும். இது சம்பந்தமான பெரிய எத்தனங்கள் இன்னும் சரியாக ஏற்படவில்லையாயினும் அதற்குரிய சிறு சிறு சின்னங்கட் சிற்சில மூலங்களிலிருந்து தோன்றிக் கொண்டுதானிருக்கின்றன. அத்தகைய மூலங்களில் ஒன்றெனவும் கொள்ளுமாறு தமிழில் இலௌகிக நூற்களின் அபிவிர்த்தியைத்தன் நோக்கங்களில் ஓர் பகுதியாகக் கொண்டு இப்பத்திரிகை உதிக்க நேர்ந்தது என்னலாம். அந்நோக்கத்திற் கிசைய பௌதிக சாஸ்திரம் (Physics) என்ற அரும் பெரும் நூலின் பல பல விசேஷ விஷயங்களைச் சிறு சிறு பாடங்களாகத் தமிழில் எழுதவேண்டுமெனத் தீர்மானித்துள்ளோம். ஆகலின் அடுத்த மழையிலிருந்து மதுரு வருஷணியில் அப்பாடங்கள் தொடங்கப்பெறும். எடுத்துச்சொல்லும் பொருள்களைத் திட்டமும் தெளிவும் வாய்ந்த தமிழ் நடையில் பொதுஜனங்களுக்குப் பிரியமான விதமாகக் கூறவேண்டுமென்பது நம்முடைய நோக்கம். இக்கருத்து எவ்வளவு தூரம் நிறைவேறுமோ? அதனை நமது நேயர்களது தீர்மானத்திற்கு விடுகின்றோம். இப்பாடங்களை வரைவது நிதர்சனமான ஒரு பௌதிக சாஸ்திரம் அமைத்துவிட வேண்டுமென்பதற்காகவல்ல; இத்தியாதி நூற்கள் தமிழில் அமைவதின் அவசியத்தைப்பற்றி ஒரு

வாறு வற்புறுத்தும்பொருட்டே. கடவுள் திருவருள் துணைநின்று காப்பதாக.

பத்திராதிபர்.

பாப்பின் சாபம்.

ஆறுமாதங்களுக்கு முன் ஒரு வியாபார விஷயமாக விருதுப் பட்டிக்குப் போய் பாலிரவணி வண்டிக்கு மதுரைக்குத் திரும்பு மாறு இரண்டாவது வகுப்பு டிக்கெட் எடுத்துக்கொண்டு வண்டியை எதிர்பார்த்துப் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். டிக்கெட் பரிசோதகர் பலமுறையும், ஸ்டேஷன் மாஸ்டர் இருமுறையும், என்னை இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கு மிடத்தில் நாற்காலியில் உட்காருமாறு வேண்டிக்கொண்டும் முடியாதெனப் பறுத்துவிட்டு மறுபடியும் காலாற உலாவின வண்ணமாயிருந்தேன். மூன்றாவது வகுப்பு டிக்கெட் எடுக்கும் ஏழை ஜனங்கள் படுக்கக்கூடங்களையும் பிரயாணிகள் அறியாமைக்குக் காரணமாகக் கள்ளப்பணி வேலைக்காரர்கள் செய்யும் அமுல்களையும் பணத்திலுள் பிரயாணத்தில் உண்டாகும் சுகங்களையும் குறித்து யோசித்துக் தொண்டிருக்கும்பொழுதே பலத்த ஆரவாரத்துடன் வண்டி வந்து சேர்ந்தது. இரங்கி வேறுபல்கலின் சந்தடியையும் கூவியாட்களின் கூச்சலையும், ஸ்டேஷன் அதிகாரிகளின் பரபரப்பையும், எஞ்சின் இரைச்சலையும், ஸ்பென்டம் விற்பவர்கள் சோடா லிமினெட் விற்பவர்கள் முதலிய பல வியாபாரிகளின் ஆரவாரங்களையும், புளிமூட்டை யடைவது போல் ஒரேவண்டியில் பலபேரடைந்து இடத்திற்காக அவர்கள் செய்யும் சச்சரவுகளையும், இன்னும் பல விதங்களையும். கவனித்துக் கூட்டமாகப் பிரயாணஞ் செய்வதினு லுண்டாகும் செளகரியாசௌகரியங்களைப்பற்றிச் சிந்தித்து அறிந்தவர்களுக்கு வந்தனாவளித்துக்கொண்டு ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குச் சாவதானமாக உலாவி வண்டி புறப்பட்டு மெதுவாக ஓடும் பொழுதே இரண்டாவது வகுப்பு வண்டியி லேறிக்கொண்டேன்.

அங்கியைக் கழற்றி ஆணியில் மாட்டிக் கூலியாள் குப்பலாயிக் குவித்திருந்த பொட்டணங்களைப் பலகையின் கீழ் அடுக்கி,

வைத்து மின்சார விசிறியைச் சுழற்றிவிட்டு ஜன்னலுக்கு அடுத்த இடத்தில் அமர்ந்துகொண்டேன். எண்ணெத்தவிர அந்த அறையில் வேறொருவு பிரயாணி இருந்தான். கூர்ய சோகத்தைக் கொண்டவன் போல் இளைத்து முகம் வெளுத்து ஏறிப்புகள் வெளித்தோன்ற சீனப்பிரதேசத்தைப்போல் முக்காடு போட்டுக்கொண்டு படுத்திருந்தான். நீராவிவண்டியில் ஏறிவிட்டதற்காக மனங் களித்தாலும் அந்த மெயிலாகையால் திருமங்கலம் வரை வேறு வகையில்லாமல் பொழுது போக்குவதற்காக, "கமலாம்பாள்" என்ற சிறந்த கதைப் புத்தகத்தைக் கையிலெடுத்தேன். மனம் படிப்பில் நிலை நிற்காமல் காலை நேசத்தின் நிலைமையைச் சார்ந்த பற்பல விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தவனானேன். இவ்விதம் ஆலோசனையில் ஆழ்ந்திருக்குபொழுது வண்டி திடீரென்று திருமங்கலத்தைக் கிடப்பிட்டது. வண்டி நிற்பதற்குமுன் மெதுவான ஓட்டத்திலிருக்கும் பொழுதே எனது பழைய நேர்ழர்களாகிய கார்டுள்ளிடரன்மாஸ்டர் இருவர்களுக்கும் வந்தனமளித்துவிட்டுக் கீழே இறங்குவதற்காகக் காலைப் பெயர்த்துவைத்தேன். "என் ஐயா! மதராஸ் மெயிலாயவாள்! அசங்கியப்பட்டோ கீழே இறங்குகிறீர்கள்? ஒட்டவா சொட்டி நேரமல்ல, காரைமாய் இந்த வண்டியிலேயே மதுரை வரையில் போகலாம்." என்ற பேச்சுக்குச் செவி கேட்டு, நிக்பிர்மைகொண்டு திரும்பி நோக்கினேன். எனக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஒரு நிமிஷத்துக்குமுன் அண்ட நீராவியின் சின்னங்களில் ஒன்றேனும் காணவில்லை. நீக விளைப்பு, முக வெளுப்பு, நீராவியிருமல், கப்பலி மூட்டம் எல்லாம் பறந்துவிட்டன. வாலிபநிலை முற்றும் நீங்காத பக்குவத்தையுடைய ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கக் கண்டேன். கண்களைத் துடைத்து உற்று நோக்குகையில் என்னுடன் பாலியத்தில் படித்துப் பிறகு சிங்கப்பூர் சென்றிருந்த சங்கரலிங்கநாடனைக் தோற்றியது. இவ்வதிசயத்தால் மனங்கலங்கி, வண்டி புறப்பட்ட அதிர்ச்சியில் கதவில் மோதிக்கொண்டு அசக்கனப் ஆசனத்தில் சாய்ந்துவிட்டேன். பிறகு குலைந்த வெண்ணங்களை ஒருவாறு சீர்ப்படுத்திதைரியங்கொண்டு "நீயார்?" என எதிரில் தோற்றிய உருவத்தை விளவினேன்.

"பழைய சிநேகிதன் பேரிலுள்ள அன்பு இதுதானோ? பிரயோஜனத்திற்காக வேறு தேசஞ் சென்றிருந்தால் ஆள் மாறிவிட்டேனோ?" என்று பதில் வந்தது. அதற்கு நான் "ஆள் மாறுட்டமாய்த்தான் இருக்கிறது. ஒரு நிமிஷம் கூர்யசோகி வேஷம் மறு நிமிஷம் மாப்பிள்ளைக் கோலமென்றால், மந்திர ஜாலம்போல், கண் கட்டி வித்தையோ என்ற மயக்கம் ஏற்படுகிறது." என்றேன். உடனே அவன் சரிகை புனலில் மிளகாய்த்தூள் தூவினவன் போல மனக்கிலேசம் மடைந்து முகவாட்டமடைந்தான். அதைக் கண்டு கடின மொழி கூறியதற்காகக் கழிவிரக்கங் கொண்டேன். அவன் பெருமூச்செறிந்து சன தொனியில் பின்வருமாறு பேச ஆரம்பித்தான்:—

"ஐயா ராமதாசரே! என்னை துர்ப்பாக்கியத்தை என்னவென்று சொல்லுவேன். நான் பள்ளியில் படிக்கும்பொழுது யாதொரு கவலையுமின்றி சுகமாய் வாழ்ந்தது நீர் அறிந்த விஷயந்தானே. பிறகு நான் சிங்கப்பூருக்குப் போனது முதல் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. ஐந்து வருஷ காலமாய்ப் பகலெல்லாம் நீராவியாகவும் இராக்காலங்களில் மட்டும் சுய ரூபத்துடனும் காலங்கழித்து வருகின்றேன். அது, பாம்பின் சாபம். இனி வெகுகாலம் ஜீவித்திருக்க மாட்டேன். இப்பதற்குமுன் ஒன்றையும் ஒளியாமல் உள்ளதை யுள்ளபடி எழுதிவைத்தால் என்னுடனிருந்த ஜீவிய சரித்திரத்தை பிரசுரஞ்செய்யலாமென்றபோதல்லவோ டவுனுக்காய் தெய்வ சங்கற்பத்தால் பாலிய சிநேகராகிய உம்மைச் சந்திக்கநேர்ந்தது. சாகக்கிடக்கிறவனுடைய கடைசி விண்ணப்பத்தை நீர் அவசியம் நிறைவேற்றவேண்டும். செலவு தொகைக்கு யோசிக்க வேண்டாம்; மதராஸ் போய்ச் சேர்ந்தபிறகு பிரயோஜனப்படுத்திக் கொள்ளுகிறேன்." என்று சொல்லிக் கொண்டிருக்கையில் பேச்சுக்குப் பதிலளிப்பதற்கு முன் உடம்பையிருந்து நெட்டுப்பதைத்து பலவீனன் போலிருந்த ஒரு உக்கிரவடிவு, அலறியடி, கலக்கத்தில் இருந்த காகிதப்பட்டணம் இருப்புப் பெட்டியைத் தூக்கி அதில் ஏறித்த பருக்க காகிதச் சுருளையும் என் கைவசப்படுத்தி

"என்று விசுவாசத்திற்காக மறுக்காமல் இதை அறிவிட்டு வெளியிடவேண்டும்" என்று தட்டாத வண்ணம் வேண்டிக்கொண்டான். வழியில் வந்த வம்பை வருத்தத்துடன் வாங்கிக் கட்டிக்கொண்டு, மதுரை விட்டிவிட்டபடியால் பொட்டணங்களைக் கணக்குப் பார்த்து ஒழுங்குபடுத்தி, வண்டி திருத்தவும், கூலியாட்கள் தலைகளில் சுமைகளை ஏற்றி ஊருக்குள் போவதற்காகத் தாசரிடம் விடைகேட்டேன். அவன் ஓடோடியும் வந்து எனது இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, "ஐசை நண்பா! எனதுயிரை இரட்சியடைய தான் ஒப்புவித்த கருமத்தைத் தவறுமல் முடித்துவைக்கவேண்டும். அதிரத்தை கூடாது" என்று வற்புறுத்தினன். அதில் ஐயம் வேண்டாமென்று உறுதி கூறி முஜாபரி பங்களாவிலாவது மங்களாபுரி சத்திரத்திலாவது பீம விலாசத்திலாவது தங்களாமென்று சொல்லிவிட்டு, வெளியே வந்து வாடகை வண்டி வரி, வடக்கு வாணிமூல வீதியில் எனது இருதத்தை யடைந்து, போஜனாதிகளை முடித்துக்கொண்டு வட்ட மேஜையின் அருகில் சோபாவில் அமர்ந்து, எனது நண்பன் கொடுத்த கட்டை அவிழ்த்துப் பின் வரும் அற்புத ஜீவிய சரித்திரத்தை மிகுந்த கவனத்துடன் படிக்கலானேன்."

(தொடரும்.)

மங்களாகரன்.

சதுரங்கம்.

(குறிப்பு. சதுரங்க ஆட்டம் மனோலயம், புத்திக்கூர்மை முதலிவற்றைத் தரும். தாயம் சொக்கட்டான் காகித ஆட்டம், இவைகளில் பார்ச்சிகைகள் உருளுந் தன்மையையும் காகிதங்கள் சிலைக்குந்தன்மையையும் பொறுத்து வெற்றியும் தோல்வியும் அதிர்ஷ்டவசத்தால் உண்டாகும். சதுரங்கத்தில் அவ்வாறன்று. வெற்றி, புத்திக்கூர்மையையும் ஆழ்ந்த ஆலோசனையும் பொறுத்தது. ஆதலின் இது மறுக்கூறிய தாயம் முதலிய ஆட்டங்களைப் போல் கவர்ச்சி அன்று. இவ்வாட்டத்தை ஓர்வகைக் கணிதப் பயிற்சி என்னலாம். பண்டைக் காலங்களில் இஃது நமது நாட்டில் (இதே ஷமாய்ப் பெண்பாலாருக்குள்) மிகப்பிரியமான கேளிவிளை ஆட்டமாக இருந்தது. சதுரங்கத்தில் தங்களை யாராலும் வெல்ல முடியாத வல்லமை வாய்ந்த பெண்களும் இருந்தார்களென்று

சொல்லப்படுகிறது. தற்காலம் இவ்வாட்டம் அமெரிக்கர்கள் ஐரோப்பியர்கள் முதலியவர்களுக்குள் விசேஷமாகப் பரவியிருக்கிறது. அன்னேர் நாடுகளில் சதுரங்க ஆட்ட நூட்பங்களை எடுத்துரைப்பதற்கென்றே பத்திரிகைகள் பல இருக்கின்றன. ஆனால் இதன் ஜனனபூமியாகிய நமது நாட்டில் இவ்வாட்டம் வழங்குவது அபூர்வமாய்விட்டது. நமது வருஷிணியின் வளர்ச்சியில் மிக்க ஆர்வங்கொண்டுள்ள ஆபிமானியாகிய ஸ்ரீமான் ரா.சே. சுப்ரமண்ய ஐயர், எம். வ. எஸ். டி. அவர்கள் சதுரங்க ஆட்டச் சூக்குமங்களில் அநேக வருஷ ஆழ்ந்த ஆராய்ச்சி யுடையவர்கள். அவர்கள் இவ்வாட்ட முறைமை முதலியவற்றை விளக்கிச் சில பக்கங்கள் எழுதுவார்கள். பின்னர், விடுகதைகள் முதலிய வினோதார்த்த விஷயங்கள் பிரசுரிக்கப் பெற்று வரும். இப்பத்திரிகையின் புறப் பக்கங்களின் மூலமாக, சதுரங்க ஆட்டத்தைச் சார்ந்த சங்கேதங்கள், விடைகள் விடைகள், முதலியன பிரசுரிக்கப்படும். ப. ர்.)

(1) சரித்திரம். சதுரங்கம் என்ற பதத்திற்கு நான்கு அங்கங்கள் என்று பொயர். இது ஒரு ஆட்டத்தின் பெயர். பழைய இந்திய அரசர்கள் நால்வகைப் படைகள் கொண்டு போர்புரிந்த வண்ணமே இவ்வாட்டத்திலும் பாவை அரசர்கள் சதுரங்கங்களுடன் போலியுக்கம் செய்வதினால், இவ்வாட்டத்திற்கு அப்பெயர் வந்தது. சதுரங்கங்களாவன, யானை, குதிரை, தேர், காலாள். யானைப்படை இந்தியாவைத் தவிர வேறு தேசங்களில் கிடையாதாகையால் இவ்வாட்டம் இந்தியாவில் தோன்றிய தென்பதற்குப் பெயரே சாக்ஷியாகும். இதை அரசர்கள், மந்திரிகள், பிரதானிகள், முதலியோர் முக்கியமாகக் கையாண்டுவந்தார்கள். இக்காலத்தில் இது உலகமெங்கும் பரவியிருக்கிறது. இவ்வாட்டத்தை, கர்நாடகம், மோகலாயம், ஐரோப்பியம், என்று மூன்று வகைகளாக ஆடிவருகிறார்கள். ஐரோப்பிய வகையே இப்பத்திரிகையில் விளக்குவோம்.

(2) ஆட்ட முறைமை. இவ்வாட்டத்தை இருவர்களோ அல்லது இரு கக்ஷிக்காரர்களோ ஆடுவது வழக்கம். ஒருபலகையிலாவது, அட்டையிலாவது 64 கட்டங்கள் வரைந்து, அவற்றை ஒன்றுவிட்டொரு கட்டம் அடையாளந் தெரியுமாறு கரி பூச வேண்டும், அல்லது சிறு குறுக்குக் கோடுகள் போடவேண்டும்.

ஆட்டத் துவக்கத்தில் கரி பூசிய கட்டம் ஒவ்வொரு ஆட்டக்காரருடைய இடதுகைப் பக்கத்தி லிருக்கும்படி பலகையை அமைக்க வேண்டும். ஆட்டம் விளங்குமாறு ஒவ்வொரு கட்டத்திற்கு ஒரு பெயர் கொடுப்பது வழக்கம். அதை இப்படத்திலுள் விளக்குவோம்:



அடிவரிசைக் கட்டங்களுக்கு அ1, ஆ1, இ1, ஈ1, உ1, ஊ1, எ1, ஏ1, எனப் பெயர்.

அ, பத்திக் கட்டங்களுக்கு, அ1, அ2, அ3, அ4, அ5, அ6, அ7, அ8, என்பபெயர். இவ்விதமே மற்றக் கட்டங்கள் பெயருங் கண்டு கொள்க. ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் அரசன் ஒன்று, மந்திரி ஒன்று, யானை இரண்டு, குதிரை இரண்டு, தேர் இரண்டு, காலாள் எட்டு, ஆகப் பதினாறு உருப்படிகள் உண்டு. ஒருவர் காய்களை மற்றவர் காய்களினின்றும் பிரிப்பதற்காக ஒரு கணத்திற்குச் சிவப்பு வர்ணமும் மற்றொரு கணத்திற்குப் பச்சை வர்ணமும் பூசிவைப்பது வழக்கம். இனி அரசனுக்கு அ என்றும், மந்திரிக்கு ம என்றும், யானைக்கு யா என்றும், குதிரைக்கு கு என்றும், தேருக்கு தே என்றும், காலாளுக்கு கா என்றும், குறிப்பிடுவது வழக்கம்.

ஆட்டத் துவக்கத்தில் சிவப்புக்காய்க்காரர் ஒரு யானையை அ1 இலும், மற்றொரு யானையை எ1 இலும், ஒரு குதிரையை ஆ1 இலும் மற்றொன்றை எ1 இலும், ஒரு தேரை இ1 இலும், மற்றதை ஊ1 இலும் அரசனை உ1 இலும, மந்திரியை ஈ1 இலும் எட்டுக் காலாட்களையும் அ2, ஆ2, இ2, ஈ2, உ2, ஊ2, எ2, ஏ2 என்ற கட்டங்களிலும் வைக்கவேண்டும். பச்சையில் யானைகளை அ8, எ8 இலும், குதிரைகளை ஆ8, ஏ8 இலும், தேர்களை இ8, ஊ8 இலும், அரசனை உ8 இலும், மந்திரியை ஈ8 இலும், எட்டுக் காலாட்களையும் அ7, ஆ7, இ7, ஈ7, உ7, ஊ7, எ7, ஏ7, என்ற கட்டங்களிலும் வைக்கவேண்டும். இது ஐரோப்பிய முறை. மொகலாய முறையில் பேதமுண்டு.

ஒவ்வொரு ஆட்டக்காரரும் எதிரி அரசனைக் கட்ட முயல வேண்டும். கட்டுவதென்றால் அரசனுக்கு நகர இடமில்லாமல் செய்துவிடுவதே. எதிரி அரசனை வெட்டக்கூடாது.

அரசன் ஒரு ஆட்டத்திற்கு ஒரு கட்டமாகத் தன்னைச் சுற்றியுள்ள எட்டுக் கட்டங்களில் எதாவது ஒன்றுக்கு நகரலாம். அரசன் நகரக்கூடிய கட்டத்தில் எதிரியின் காய் பலமில்லாமல் நின்றால், அதை அரசனால் அடிக்கலாம். அடிப்பது அல்லது வெட்டுவதென்றால் எதிரி காயைப் பலகையைவிட்டு விலக்கித் தன்காயை எதிரி காய் நின்ற கட்டத்தில் வைப்பதுதான்.

ஒரே கட்டத்தில் இரு காய்கள் இருக்கலாகாதாகையால், அரசன் நகரக் கூடிய கட்டத்தில் சொந்தமனிதன் நின்றால் அரசன் அக்கட்டத்திற்குச் செல்ல முடியாது.

மற்ற எந்தக் காய்களை வெட்டினாலும் வெட்டுக் கொடுத்தாலும், அரசனை ஒருகாலும் வெட்டவாவது வெட்டக் கொடுக்கவாவது ஆகாதாகையால் எதிர்ப் படைகள் பார்க்கக் கூடிய கட்டங்களுக்கும் அரசன் செல்லலாகாது.

(தொடரும்.)

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

பத்திரிகைப் பண்புரை.

ஞானோதயம். பத்திராதிபர், ஸ்ரீமான் சிவ. பெ. சாமிநாத நாடார், தூத்துக்குடி. இம்மாத மாகத்திலிருந்தே சென்னை சித்திரை மாதத்திலிருந்து பிரசுரிக்கப்பெற்று வரும் மாதப்பத்திரிகை. சுகாசாரம், பக்தி, யோகம், ஞானம், பொதுவிஷயங்கள், நாவல் முதலியவற்றைச் சார்ந்த இலௌகிக வைதிக விஷயங்களைப், நாடார் குலத்தவர்களின் அபிவிர்த்திக்குரிய விசேஷ வியாசங்களும் கொண்டிருக்கின்றது. வருடச் சந்தா ரூ 2–0–0.

கலிமகள். பத்திராதிபர், ஸ்ரீமான் சி. பங்காருப் பத்தர், கல்லூரி காலேஜ் தமிழ்ப்பண்டிதர், புதுச்சேரி. இம்மாத புதுச்சேரியிலுள்ள கலிமகள் கழகம் என்ற தமிழ்ச் சங்கத்திலிருந்து பிரசுரிக்கப் பெறுவதாய், சிறந்த தமிழாராய்ச்சி, பல பெரியோர்கள் சரித்திரங்கள், சம்போதைய தேச காலஇயல்புக்கு ஏற்ற நல்ல வியாசங்கள், சுதந்திர விசாரணை விஷயங்கள் முதலியவற்றைப் பூண்டு, தன் பெயருக் கேற்பப் பீடும் பொற்பும் பொருந்தி விளங்கும் ஓர் அருமையான மாதப் பத்திரிகை. இதில், திருக்குறட் பாக்களின் கருத்தைத் திரட்டித் தெளிவுற விளக்கி, அவ்வுயரிய தமிழ் நூலின் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒவ்வொரு வியாசமாக இனிய வசன நடையில் பத்திராதிபர் அவர்கள் எழுதி வருவது விசேஷித்துப் பாராட்டத்தக்கதும் பெரிதும் பயன் தரக்கூடியதுமாம். வருடச் சந்தா புதுச்சேரி வாசிகளுக்கு ரூ 1–0–0, வெளியூரார்க்கு ரூ 1–4–0.

ஜனோபகாரி. மேவலூரிலிருந்து வரும் ஓர் மாதப்பத்திரிகை. இதன் சொந்தக்காரர் மெஸ்ஸர்ஸ் வி. என். சாமராவ் அண்டு கம்பேனியாருக்காக ஸ்ரீமான் வி. என். வைத்திய நாத ஐயர் அவர்களால் பிரசுரிக்கப்படுகிறது. வியவசாயம், கைத்தொழில், வைத்தியம், பொருளாதாரம், சமுதாய இயல் முதலிய பல்வகைத் துறைகளைச் சார்ந்த பிரியமான வியாசங்கள் இதில் காணப்படுகின்றன. வருடச் சந்தா ரூ 3–0–0.

---

18 FEB 1919 KAUNAS.

ஸ்ரீ சால்வதி சகாயம்.

கதாவருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள், ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள் இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாருமின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே, தாயுமானவர்.

பருவம் 1.	கலியுகாப்தஸ 5020. காளயுக்திஸ கார்த்திகைமீ கொல்லமாண்டு 1094, விருச்சிகமீ. கி. பி. 1918-ஸ நவம்பர்மீ.	மலை 3.

வருஷிணி வாழ்த்து.

புதுவை, "கலிமகள்" பத்திராதிபர் ஸ்ரீமான் சி. பங்காருப் பத்தர் அவர்கள் இயற்றியன.

I. மாதிருமங் கிராகாம வளர்தூத்துக் குடியதனில் வாழுஞ் செம்ம
லோதுசுப்ப ராயவே ஞரவுகதா வருஷிணியென் றுரைக்கு நங்கை
மேதையர்க டருமரிய விடயமெனும் பணிபுண்டி விரும்பெ வர்க்குந்
தீதகன்றவின்புதவி வளர்மதிபோல் வளர்தென்று செழிக்க மாதோ.

2. இனியசுண நிறைந்திருஞ சுப்பரா யப்பின்னோ யிடத்துத் தோன்றி
நன்மதரக் கதையாலு நல்லபிற பொருளாலு நானிலத்திற்
கினிமைசெய வெழுந்தகதா வருஷிணியே மடமையெலு மிருள்
[நெட்டோட
மனிதருக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி யெக்காலும் வாழ்க மன்னோ.

பண்டிதர் மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை
அவர்கள் இயற்றியது.

சூழ்க சுற்றத் தினைவலி கூடுக
தாழ்க தீயன காரா சோங்குக
ஆழ்க அன்பில் அனைவர் அன்கழல்
வாழ்க இன்ப வருஷிணி வாழ்கவே.

—:o:—

அருளாளர் இருப்பிடம்.

ஓர் கனவு.

நாங்கள் மேல் நோக்கிச் சென்றுகொண்டே இருந்தோம். வழி மாளாததாக இருந்தது. கொடிய வெப்பக் கதிர்களும் எங்கள் தலைக்கு மேலாக நின்று எங்களை எரித்தனர். எனினும், நாங்கள் இவ்விடர்களைப் பாவனையும் பொருட்படுத்தாது எங்கள் வழியே சென்றோம்.

எங்களுக்கு எங்கள் தலைவரிடமிருந்து அழைப்புக் கடிதம் வந்திருந்தது. பெரியதொரு விருந்து அளிப்பதாக அவர் அறிவித்திருந்தார். ஆக ஊரார் யாவரும் கூட்டம் கூட்டமாக அருளாளர் மாளிகையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். சிலர் பாடினர். கூற்றுகள் செப்பினர் சிலர். மற்றவர் நகைத்தனர். வழித்துணை இருந்ததில் நடைக்கோர்வு சிறிதேனும் தோன்றவில்லை.

காலை இந்நகைக் கூட்டத்திற் சேர வில்லை. அவர்களிடமிருந்து விலகி ஓர் புறமாக நான் நடந்தேன்.

குருடன் ஒருவன் என் வழியில் நின்றான். "ஐயா! நானும் அருளாளர் வீட்டிற்குச் செல்வதாயிருக்கிறேன். வழி தெரியவில்லை. அன்பு கூர்ந்து என்னையும் அழைத்துப் போங்கள்." எனக்களுக்கு முற்றுகுரலில் அவன் கதறினான். முள் ஒன்று அவன் காலில் தைத்தது. "அப்பாடா!" என்று அரற்றிக்கொண்டே அவன் கீழ் விழுந்து தத்தளித்தான். எல்லோரும் கோலென்று நகைசெய்தனர். அவர்களது இரக்கமற்ற நகைமொழி என் நெஞ்சத்தில் ஏதோ ஒருவித வேதனை விளைத்தது.

நான் அவனுக்கு உதவி புரிய நினைத்தேன். எனினும் என் னைத்திருத்த பேய் என்னைத் தடுத்தது. மற்றவர்கள் யாவரும் அவனது வருமையைக் கண்டும் வீணிற் செல்ல, நான் மட்டும் ஏன் அவனைக் கவனிக்கல் வேண்டும்? மேலும் குருடன் கையிற் கொண்டிருந்த கொம்பைப் பற்றி அவனுக்கு வழி காட்டச் சென்றால் அக்குருடனின் வீதத்தில் மேற் சென்றேன். என் நண்பர்கள் கூத்தும் களியும் மெள்ளக் குறைந்துகொண்டே வந்தன.

"நண்பகல். சூரிய வெப்பம் குறைந்தபாடில்லை. மேல் செல்வது முடியாதெனத் தோன்றியது. சிலர் ஊருக்குத் திரும்பி விடலாமென்றே கூறினர். ஆனால் இடையில் அருளாளர் மாளிகை அருகிலிருப்பதென அனைவர் ஒருவர் கூறினர். இது எங்களுக்கு ஒருவாறு ஊக்கம் தந்தது. பொறுமையுடன் மேல் நடந்தோம்.

இடையில் ஒரு முடவன் வேட்டைத்துறையில் உயிரை விட்டுக் கொண்டிருந்தான். கிணறு ஒன்று நாங்கள் வந்தவழியிலேயே அருகில் இருந்தது. எனினும் ஒருவரும் அவனுக்கு உதவி புரிய முன் வரவில்லை. அவன் நிலைமையைக் கண்டு என் மனம் இளகியதெனினும் நான் வாளா நடந்தேன். என் மனத்தின் உள்ளிருந்து கண்ணிலாப் பேயுமென்னை மெச்சிக்கூறியது. அவனுக்குத் தண்ணீர் கொணர்ந்து உண்ணும்படி ஊட்டி வருவதற்குள் அருளாளர் மாளிகைக்குச் சென்றடையலாமே என்றெண்ணினேன்.

கடைசியாக "அருளாளர் மாளிகையை அடைந்தோம். வாயிலில் நின்ற சேவகன் ஒருவன் "அருளாளரை நீங்கள் வழியில் காணவில்லையா? உங்களை எதிர்கொண்டு அழைத்து வருவதாகச் சொல்லிச் சென்றனரே அவர்!" என்றான்!

நாங்கள் திகைத்து நின்றோம். எங்களில் சிலர் அவர் வருமட்டும் காத்திருப்பதாகச் சொல்லி அவ்விடமே நின்றனர். வேறு சிலர் அருளாளரைக் கண்டோமாறு வசைமொழிகள் வழங்கித் தங்கள் ஊர் செல்லத் தொடங்கினர். நானும் உள்ளத்தினுள்ளே என் இல்லம் நாடினேன். வழியில் அந்த முடவனை மீண்டும் கண்டேன். அவன் முன்போலவே இரக்கம் விளைக்கும் குரலில் உயிர்நீர் வேண்டி நின்றானன்றோ போலவே என்னை விடுத்துச் சென்றனர். நான்மட்டும் ஓர் ஓடையிற் சென்று தேக்கிலையால் ஒரு சிறு கோவல் அமைத்துத் தண்ணீர் அதிற் கொணர்ந்து அவனுக்களித்தேன். அவனும் வேட்கை தணிந்து பனி மொழிகளுடன் என்னை வாழ்த்தினன்.

இச்சிறு நன்றி என் மனத்தில் ஒருவித ஆறுதல் விளைத்தது.

என் உளத்தும் உடலிலும் மிகுந்திருந்த சோர்வை மறந்தேன். களி கொண்டவனாக மேல்கடந்தேன்.

முன் கண்ட இடத்திலேயே அக்குருடனையும் நான் சந்தித்தேன். "ஐயா! நான் அருளாளர் வீட்டு விருந்திற்குச் செல்ல வேண்டும். எனக்கு வழிகாட்டுங்கள்!" என அவன் இரைஞ்சினன். நான் அன்பு மிகுந்தவனாக "நண்பா! நாங்கள் அங்கிருந்துதான் வருகின்றோம். அவர் நம்மைத் தேடி முன் சென்றனராம். நாம் இருவருமாக அவரைத் தேடிச் செல்லலாம் வா!" என்று சொல்லி அவன் கையைப் பிடித்தேன்.

மேல் அடிவைக்கு முன்னர் அருள் பழுக்க குரலில் ஒருவர் என்னை விளித்தனர். "அன்பனே! நான் உன்னைத் தேடியே இக்கா ழிகையகலம் தேன். வருக! வருக!" எனப் புன்னகை கமழ்ந்த வண்ணமே அவர் புகன்றனர்.

நான் திருப்பிப் பார்த்தேன். அருளாளனைக் கண்டேன். குருடன் மாயமாய் மறைந்தான். வாழி கூறி அருளாளர் அடிகளிற் பணிந்தேன். பேருவகையுடன் அவர் என்னைத் தழுவினர்.

ரா. வாசுதேவ சர்மா.

கண்ணம்மாள் கதை.

(67–ம் பக்கத் தொடர்ச்சி.)

ரூக்மாங்கதருக்குத் தெரிந்த ஒரு ஐரோப்பிய கனவானது ஐரோப்பிய நண்பர் ஒருவர் கூடலூரிலுள்ள ஓர் பெரிய வர்த்தக சாலையின் கலெமை உத்தியோகஸ்தராயிருந்தார். ஆகையால் அவரிடமிருந்து இவருக்கு ஒரு சிபார்சுக் கடிதம் கொணர்ந்து கூடலூர் வர்த்தகக் காரியஸ்தலத்தில் மாதம் 15 ரூபாய் சம்பளத்தில் துரைசாமிக்கு ஒரு உத்தியோகம் அமர்த்தினர் அவனது மைத்துனர். துரைசாமி புகுந்த காரியஸ்தலத்தில் கலெமைக் குமஸ்தாவாக இருந்தவர் ஒரு ஐயங்கார். அவருடைய சகலர் ஒருவர் ரூக்மாங்கதரிடத்தில் ஒரு குமஸ்தா. துரைசாமியை ஒரு கண் பார்த்துக் கொள்ளும்படி, கூடலூர் ஐயங்காரிடம் ஒரு வார்த்தை சொல்லப்பட்டது. அவரும் "ஹா அதற்கென்ன! என் சொந்த சகோதரன்போல் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று

வாக்களித்தார். துரைசாமிக்கு உத்தியோகம் அமர்ந்த புதிதில், ரூக்மாங்கதர் தன் குடும்பத்தோடு கூடலூரில் வசித்தார். பின்பு தன் தங்கையைப் பிரியாமற் பிரித்து விடைபெற்றுக் கஞ்சா வருக்குப் பிரயாணமாயினர். அவர் காய் தங்கையர் இறந்த காலத்திற் கூட அவருக்கு அவ்வளவு துக்கமில்லை. தங்கையைப் பிரிந்த சஞ்சலம் அகலினும் கூரியதாயிருந்தது. பெயிலில் அவர் முகமே வேறுபட்டுவிட்டது. திடீர் திடீரென குப்புப்பென அவர் கண்களில் நீலம் பொங்க, கைக்குட்டையால் துடைத்துக் கொண்டேயிருந்தார். அவர் முகத்தைப் பார்த்துப் பார்த்து அவர் குழந்தை லக்ஷ்மியும் வீறிட்டு வீறிட்டு அடிக்கடி அழலாயினள். அவளைப் பல நயமொழிகளாலும், வக்கீலைச் சில கண்டனமொழிகளாலும் தேற்றுவது மீனாண்டமணியம்மாள் வேலையாயிருந்தது. கூடலூரில் கண்ணம்மாள் கலங்கிக் கலங்கி அழுதகையும் வீட்டு ஜானகி முதலிய பெண்கள் அவளைத் தேற்ற முயன்றதையும் விவரியாமல் மேற் செல்லுவோம்.

கண்ணம்மாள் தன் கணவனோடு வாழ்கிறாள். துரைசாமித்து அவன்மைத்துனர் நியமித்த உத்தியோகம் அவனுக்கு எட்டி மாதங்கூடநிலைக்கவில்லை. அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலையில் அவன் செய்யும் பெரும் பெரும் கவனக்கேடுகளையும், பொதுவாக அவ்வேலைக்கே அவன் தகுதியற்றவனாயிருந்த தன்மையையும், ரூக்மாங்கதர் தாக்ஷண்யத்திற்காக ஐயங்கார் எவ்வளவோ பொறுத்து மறைத்துச் சமாளித்து வந்தபோதிலும் அவைகள் தலைமை உத்தியோகஸ்தர் அறிவிற்கு எட்டிவிட்டன. ஆகலால் அவர் அவனை வேலையினின்றும் நீக்கிவிட்டார். அது முதல் தான் இனி ஒருவனுக்கு அடிமை வேலை செய்கிறதில்லை என்று சபதஞ் செய்து கொண்டான். ஆனால் ஜீவனத்திற்கு என்ன வழி? அவன் பதினைந்து ரூபாய் உத்தியோகத்திலிருந்த காலத்திலேயே அவனுக்கு மாதம் 15 ரூபாய் அனுப்பிக் கொண்டிருந்தான், 15 ரூபாய் சம்பளம் கின்ற பிறகு அவர் மாதம் 25 ரூபாய் அனுப்பலாயினர். முன்பு அவனது மொத்த மாத வருமானம் 30 ரூபாய் ஆயிற்றே, அந்த மூப்பது ரூபாயும் வக்கில் கொடுக்கக் கூடாதா இருபது ரூபாய் குறைத்தனுப்பி விட்டால் அவருக்கு என்ன பிர

மாத வாடகம்! இவ்வளவுதானே அவர் தன் தம்பையிடம் கொண்டி
ருக்க அன்பு! என்று சிலர் எண்ணலாம். ஆனால் வக்கில் தன் கு
கையின்பால் அன்பிற் குறைக்கவரல்ல. கூட 5 ரூபாய் அனுப்ப
வகுக்கும் மீளாபியுமல்ல. துரைசாமிக்கு அபர்த்திய மேலதிகச்
அவன் மண்ணைப் போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தது அவருக்கு
பனவருத்தம். மேலையிலிருந்தால் கனத்த 30 ரூபாய் வருமானம்,
தனக்கு ஒரு தொழில் இல்லாதபோனாலும் தன் வருமானத்தில்
5 ரூபாய் குறைத்துவிட்டது, தன் மைத்துனர் முனம் போன
போக்கில்லாவர் தன் ஜீவனம் தொடங்கிக் கொண்டிருக்கிறது
என்பதை அவன் உணர்ந்து வெண்டுதான் அவனுக்கு வ
கில் மாதம் 25 ரூபாய் அனுப்பினர். அவனுக்கு அவ்வளர்த்தி வ
தமிதா என்னவோ! அதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய அவ
சியமில்லை. அவனை ஒரு புதிய துரைசாமியாக மாறிவிட்டதன்.
தினந்தினம் வளர் சுற்றி வரும் உத்தியோகத்தில் அமர்ந்திருந்
தனில் எப்படியோ மதுபானப் போய் அவனைப் பற்றிக்கொண்டது.
மிக இழிந்த நாட்டுச் சாராயத்திலிருந்து அதி உன்னதமான ஸ்காட்
சாக்கு வரையில். அவன் பருகாத மதுவே இல்லையாம். வருஷத்
தோறும் கோடைகாலவிடுமுறையிலும், கிறிஸ்துமஸ் நாளிலும்,
வக்கில், குடும்பத்தோடாவது தனியாகவாவது கூலாருக்கு வரு
வது வழக்கம். ஆகையால் கண்ணம்மாள் எழுதும் கடிதங்களில்
தன் கணவன் குற்றங்களைப்பற்றி ஒன்றும் எழுதாவிடினும், அவ
னது நிலைமை அவருக்குத் தெரிந்திருந்தது. என்ன செய்
வார்! கோவில் தன் மைத்துனனுக்குப் புத்திமதிகள் சொல்லுவார்.
அப்பொழுது சுவர் போலவே அவன் பேசுவான். கடிதங்களால்
புத்திமதி சொல்லுவது பயனற்றதென்று அவருக்குத் தெரியும்.
ஆகையால் ஒரு முறை கோவில் சென்று பேசி அவன் திருந்தாவிடில்
அவனுக்கு ஒரு காசும் அனுப்புவ தில்லை என்று பயமுறுத்தினர்.
நீ அனுப்பாவிட்டால் எனக்கென்ன! உன் தங்கைதான் பட்டினி
யால் சாவாள். நான் எங்கேனும் வழியை வளர்த்துக்கொள்வேன்,
உன் அற்பக் காசை எதிர்பார்த்துக்கிடக்கவில்லை நான் என்
யார் வயிற்றில் பிறந்தேன்— என்றவாறு தன் அத்தானுக்குத்
தான் வைத்திருந்த மரியாதையைக் கடிதத்தில் எழுதினான்.

விட்டான் துரைசாமி. போதாப் போதாது, இனிமேல் இவனிடத்
தில் தயவதாட்சண்யம் வைப்பதாவது என்று தீர்மானித்தான்.
கண்ணம்மாளின் கதி அவ்வளவுதான் என்று மேல் மூடிக்கோடு
வக்கில் விட்டார். கண்ணம்மாளும் அவன் கணவனுடைய சுபா
வத்தில் நம்பிக்கை வைத்து அவனுக்கு அனுப்பினாள் என்று அவர் எண்ணினார்.
அதற்குமேல் துரைசாமி சம்பந்தப்படவில்லை.

அத்தியாயம் 3.

சில மாதங்கள் கழிந்தன. பின்னர் துரைசாமியின் வருமானம் 20 ரூபாயா
கக் குறையலாயிற்று. அதுவுங்கூட, கண்ணம்மாள் பெயருக்குத்தான் மணி
யார்டர் மூலம் வரும். பணம் துரைசாமி கையில் சிக்குவதில்லை. அவன் மதுபானக்
செலவில் அவ்வளவு பணத்தையும் அழித்துவிடுவானென்று தீர்மானித்து, வக்கில்
அவன் பெயருக்கு அனுப்புவதில்லை. யாருக்கு அனுப்பினான் என்னில்,
கப்பற்காரன் கொண்டுவரும் மணியார்டர் பாரத்தில் கையெழுத்திடவேண்
டியது கண்ணம்மாள் வேலை. பணத்தைப் பெற்றுக் கொள்வோன் துரைசா
மிதான். வீட்டுச்செலவுகளுக்குச் சொற்பப் பணத்தைக் கண்ணம்மாள் அவ
னிடமிருந்து பறிக்கும் சாமர்த்தியம் அவளுடைய சகல சாமர்த்தியங்களி
லும் மேற்பட்டது என்னலாம். பற்பல கடன்காரர்களுக்கு அப்போதுக்கப்
போது நயந்து பயந்து சொல்லிக்கொண்டும் பணம் கொடுத்துக்கொண்டும்,
தான் பலமுறை பட்டினியாயிருந்தும் கொடுமையான வறுமையில் கண்
ணம்மாள் காலந்தள்ளிவந்தது அதிசயத்திலும் அதிசயம். ஆறு பெருகி ஓடி
ஓயும் நாய் நக்கித்தான் குடிக்கவேண்டும் என்றவாறு, மாதம் 25 ரூபாய்
வந்த காலத்தில் அதில் பெரும்பாகம் துரைசாமியின் தர்ச்செலவுக்கே
போதாதென்றமையால் அவனுக்குத் தீமைதான் அதிகரிக்கிறதெனக் கருதி,
25 ரூபாய் அனுப்புவதைவிட 20 ரூபாய் அனுப்புவதே நலம் என்று கண்
ணம்மாள் கஞ்சாவூருக்குக் கடிதம் எழுதிவிட்டாள். ஆகையினால்தான் வக்
கீலும் 20 ரூபாய் அனுப்பி வாலாயினர். அந்த 20 ரூபாய் வந்த முதல்
கடவை துரைசாமி வீட்டை ஓர் பேரமக்கள் மாகினன். ஒரு காசு கூட
வீட்டுச் செலவுக்குக் கொடுக்கவில்லை. மறு மாதம் முதல் கடன்காரர்கள்
உபத்திரவத்தாலும் கண்ணம்மாள் சாமர்த்தியத்தாலும் கொஞ்சம் பணம்
சேர்ந்தது. 25 ரூபாய் வருமானம் 20 ரூபாயாகக் குறைந்தால் துரைசாமி
யின் அத்தியாவசியச் செலவு சற்றுங் குறையவில்லை. கண்ணம்மாள் பட்ட
கஷ்டந்தான் பெருகிற்று.

இவ்வித வாழ்க்கை வாழ்கிறாள் கண்ணம்மாள். துரைசாமியோ தடி
யன். திண்தோள், கொடியனும் ஆவினன். பெண்களைத் தப்படிப்பே

கண்ணம்மாளின் ஸ்திதியென்ன! கணவனோடு வாழும் கண்ணம்மாவின் கதியென்ன! ஆனால் தரித்திரமும் தாலிகட்டியவனும் அவளை எவ்வளவு கொடுமையாக வதைத்தபோதிலும் அவள் கல்வி, புத்திக்கூர்மை, இனிமையான தொனி, பாகெந்திறல், மதுரமான சம்பாஷணைசக்தி, அடக்கம், பொறுமை முதலிய கலங்கள் இல்லவேயிலை. புத்தகங்களையும் பத்திரிகைகளையும் காய்ந்த செங்கல் தண்ணீரை விரும்புவதுபோல் விரும்புகிறாள். அவளுக்கோ சொந்தப் புத்தகங்கள் முதலியன இப்பொழுது ஒன்றுமே கிடையா. அவளது சகோதரரது ஏற்பாட்டினால் அவளுக்கு வந்து கொண்டிருந்த பல பத்திரிகைகளும் அப்போதுக்கப்போது அவள் கணவனால் நெருப்பில் போடப்பட்டனவாகையால் இனி தனக்கு ஒரு பத்திரிகையும் அனுப்ப வேண்டாமென்று அவளே தஞ்சாவூருக்கு எழுதிவிட்டான். ஆனால் புத்தகம் பத்திரிகை இல்லாமல் கண்ணம்மாள் காலங்கழிப்பாளா? தூசைசாமி வீட்டில் இல்லாதபோது வீட்டு முன்கதவைச் சார்த்தித் தாழிட்டுக்கொண்டு படித்துக் கொண்டேதானிருப்பாள். எதைப்படிப்பது? எதிர் வீட்டு ஜானகி யிருக்கிறாளே அந்த அம்மாள் வீட்டில் எத்தனையோ புத்தகங்களிருக்கின்றன, பல பத்திரிகைகளும் வரவழைக்கப் படுகின்றன. அவைகளைக் கொணர்ந்து ஜானகி கண்ணம்மாளுக்குக் கொடுப்பாள். அவைகளைக் கண்ணம்மாள் படித்து முடித்துவிட்ட பிறகு ஜானகி மீண்டும் அவைகளைத் தன்வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய்விடுவாள். இவ்வாறு ஜானகி வீட்டுப் புத்தகங்கள் முதலியவற்றால் அந்தக் கொடிய வறுமையிலும் கண்ணம்மாள் அறிவும் ஆராய்ச்சியும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டேயிருந்தது. இதனைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறிவிட்டு நமது கதையின் முக்கிய அங்கத்திற்குச் செல்லுவோம்.

(தொடரும்)

வாணிதாசன்.

வர்ணனை.

"ராபர்ட் ஹெரிக்" என்னும் ஆங்கிலப் புலவர், ஒரு பெண்ணின் அழகை வியந்து கூறும்பொழுது அவளது அதரம், பல், வதனம் முதலியவற்றை முறையே பவளம், முத்து, கமலம் முதலியவற்றுடன் உவமித்துச் சில பாடல்கள் பாடியுள்ளார். அவரது பாடல்களின் கருத்தைத் தழுவிப் பின் வரும் பாடல்கள் தாய்நிழல் கூற்றாக அமைக்கப்பட்டுள்ளன.

அதரம்.

ஒருகிலர் என்பால் வந்த உத்தமப் பவளம் அன்றோ
வருவதெங் கிருந்து அம்மா வாருவ தென்றே யென்றார்;
ஒருவிரல் கொண்டு சுட்டிக் காட்டியே ஒப்பி லாத
சிருவிலும் கல்லான் என்றன் சேயிழை அதரம் என்றேன்.

பல்.

கன்னநீர் உரைத்துச் சும்ம; கலந்தித முத்து மேன்மேல்
சென்றுசென் றலங்கரிக்கும் தேமதி, எங்குள தியம்பு மென்றார்
அன்றலர் கமலப் போதின் அழகிலும் வதன மிக்க
சன்றனல் மகன்பற் காணப் பேசுமா நிபுணி னேனால்.

முகம்.

மலர்மிக வுற்றோம் கல்ல கமலமா மலரென் குண்டு
புகலுவீர் எங்கட் கென்றார்; பூமியை நோக்கி நின்ற
நிகரிலென் முகமோ நோக்கி நீரிலும் நோக்கீ கல் என்றேன்
முகமலர் பிறரும் நோக்க மிகிர்ந்தனள்; முறுவல் பூத்தார்.

கல்.

வீரர்கட் குரித்தாய் மிக்க மேன்மையும் ஒளியும் தங்கி
தீரியல் தன்மை யெம்மை விகழுமோர் வாள்எங் கென்றார்
கார்நிகழ் தழலாள் என்றன் கண்மணி யனைய நங்கை
போர்மதன் செய்வம் போல்வாள் கண்களே யெனப்புகன்றேன்.

தெ.

சரித்திரபதுமினிக்கட்.

60-ம் பக்கத்தொடர்ச்சி.

முடிவுரை.

பழையவிஷயச் சுருக்கம்: சரித்திரம் என்னுல் இற்றைகாலத்தில் நடந்த விஷயங்களை கூறுங்கலையென்றும், அச்சரித்திரம் எழுத்து மூலமாக நமக்கு நாலாயிர வருடங்களுக்குமுன்தான் கிடைத்திருக்கிறதென்றும், ஆனாலோ

உலகிருஷ்டி ஆகி பல யுகங்கள் முடிவுபெற்றன என்றும், ஆகவே காலக்கிரமமாக வருடங்களுக்கு முற்பட்ட சரித்திரத்தைப் புராதன வஸ்து சாஸ்திரங்களின் உதவியால் உய்த்துணரவேண்டும் என்றும், அவ்வகை, உணர்ந்த மட்டும் இவ்வுலகிலுள்ள பல ஜீவராசிகளும் ஒரே ஜீவகாதுவினின்று தோன்றின என்றும், நிமிர்ந்து நடப்பதினாலும் விசேஷ கைச் சக்தி வாய்த்திருப்பதினாலும், தனது எண்ணங்களைப் பேச்சுமூலமாக வெளியிடக் கூடுமானதினாலும், கற்பனாசக்தி பகுத்தறிவு, இவற்றில் சிறந்திருப்பதினாலும் மனிதனே ஜீவராசிகளில் முதன்மை பெற்றவன் என்றும், ஆதியில் பஞ்ச பூதங்களின் விளையாட்டுக்கருவி ஆகி விலங்குபோல் வாழ்ந்து பிறகு படிப்படியாக முன்னேற்ற மடைந்தான் என்றும் குறித்தோம்.

இனி மானிட இனங்கள், நாகரீக வளர்ச்சி இவற்றை விவரித்து விஷயத்தை முடிப்போம்.

மானிடவினங்கள்: ஆதியில் மனிதர்கள் ஒரே தாதுவினின்று உற்பத்தியானாலொனினும், பூகோளஸ்திதி, செய்தொழில், ஆகாரம் இவற்றின் வேற்றுமையால் காலவளவில் பேதப்படுகிறார்கள். முக்கியமாக சருமம், கேசம், நேத்திரம், இவற்றின் நிறத்திலும், தேகம், கேசம், முகம் நாசி, மூளைக்கூடு இவற்றின் அமைப்பிலும் வேற்றுமை எற்படுகின்றன. இவ்வேற்றுமைகளை ஆதாரமாகக்கொண்டு மனிதர்களை, வெள்ளை, மஞ்சள் சிவப்பு, கறுப்பு, என நான்கு இனங்களாகப் பிரித்திருக்கிறார்கள். வெள்ளை இனத்தினர் ஐரோப்பா, அமெரிக்கா, இந்தியா முதலிய பாகங்களிலும் மஞ்சள், இனத்தினர், சீனா, ஜப்பான், துருக்கிமுதலிய பாகங்களிலும் சிவப்பு இனத்தினர், அமெரிக்காவிலும் கருப்பு இனத்தினர் ஆப்பிரிக்காவிலும் காணப்படுகின்றனர். இவ்வினங்கள் ஒன்றோடொன்று கலந்து கலப்பினங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இனக்குறிகள் உண்டாவதற்கோ குறைந்தது பதினாயிரம் வருடங்கள் பிடிக்குமென்று மேனாட்டுச் சாஸ்திரிகள் வகுத்திருப்பதினால், ஒரேதாதுவினின்றும் உற்பவித்த மானிடர்கள் பல்வேறு இனங்களாகப் பிரிவதற்குப் பல நூற்றாண்டுகள் பிடித்திருக்கவேண்டும்.

நாகரீகவளர்ச்சி: ஆதிமனிதன் கூட்டங்கூட்டமாக விலங்குகளைப் போல் காடுகளில் வசித்தான். இறைச்சியையோ, மீன்களையோ, பழங்களையோ பச்சையாகவே தின்று பசியாற்றினான்.

மரவுரிகளையும், தோல்களையும் உடுத்திக் குகைகளிலும் குடிசைகளிலும் வசித்தான். கற்களை ஆயுதங்களாக உபயோகித்தான். ஏலும்புகளையும், மிருகப்பற்களையும். சோழிகளையும் ஆபரணங்களாக அணிந்து கொண்டான். ஆனால் ஆதிமனிதனுக்கும் குடும்ப ஜனசமூக பாசங்களுண்டு.

அவன் சிறுவர்களையும் வயோதிகர்களையும் காப்பாற்றி வந்தான்; ஆதிமனிதர்கள் ஸ்திரீ புருஷ ஒழுக்க விஷயத்திலும் பெற்றோர் கடமை மக்கட் கடமை கற்றோர்க் கடங்கல் மரபுதவறுமை இவற்றிலும் எச்சரிக்கையாய் நடந்து வந்தார்கள்.

பிறகு படிப்படியாக ஆகாரம் பக்குவம் பண்ணுவதிலும், வீடு கட்டுவதிலும், உடைசெய்வதிலும், அணிகள் செய்வதிலும், உலோகங்களை உபயோகிப்பதிலும், சாஸ்திரப் பயிற்சிகளிலும் மனிதர்கள் தேர்ச்சியடைந்தார்கள். உதாரணமாக ஆதியில் சைகைகளினாலும் வியப்புக் கூச்சல்களினாலும் பாவனை ஒலிகளினாலும் தங்கள் எண்ணங்களை வெளிபிட்ட மனிதர்கள் காலக்கிரமத்தில் லக்ஷக்கணக்கான வார்த்தைகளால் அலங்கரிக்கப்பட்ட இரக்கங்களையுடைய சிறந்த பாஷைகளைக் கற்பித்துவிட்டார்கள். இத்துடன் சரித்திரத்துவக்கம் முற்றுப்பெற்றது. அடுத்த மஞ்சரியில் 'பன்னிட்டி மனிதர்கள்' என்ற விஷயம் துவக்கப்படும்.

ரா. கே. சுப்ரமணிய ஐயர், எம். ஏ. எல். டி.

சுகவாழி.

ஓர் சம்பாஷணை.

25-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆசிரியர்:—சுகாதார முறைகளை வியாதியைத் தடுக்கக் கூடியவை. அவற்றைக் கவனியாது நடந்தால் சுகக் கேடு அல்லது வியாதி நேரிடும் என்பது திண்ணம். முன் ஜாக்கிரதையினால் வியாதியைத் தடுப்பதனை நல்ல புத்திசாலி சாதாரணமாய் வியாதி உண்டாவதற்கு இருவகைக் காரணங்கள் சொல்லலாம். மனிதன் பிறக்கும்பொழுதோ அல்லது தன் அஜாக்கிரதையினாலோ வியாதிக்குச் சித்தமாயிருப்பது ஒன்று. மற்றது, அடி, காயம், விஷம், அல்லது சுற்றுப் பக்கங்களிலுள்ள சண்ணுக்குப் புலப்படாத பூச்சிகள் அல்லது கருக்கள் இவை மூலமாய் வியாதி உண்டாக்கிக் கொள்வது. ஒரு குழந்தை தன் தாயின் கர்ப்பத்திலேயே பெற்றோர்களின் பலவீனமும் வியாதியும் அடைந்து தர்ப்பலமாயும் பலவித ரோகங்களுடனும் பிறக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு உற்பத்தியாகும் சந்ததிகளும் வரவர க்ருஷி, பலம் குன்றி வியாதியஸ்தராயும் உலக வாழ்க்கைக்கு உதவாதவர்களாயும் இருப்பார்கள். ஆகையால் இப்படி நோயண்ணம் பாலியுவிவாகம் முதலிய கொடிய வழக்கங்களை நமது நாட்டில் நிறுத்த வேண்டும். அன்றியும் நமது அஜாக்கிரதையினால் யாதொரு வியாதியும் உண்டாகாமலிருக்கும்படியும் கவனித்துத் தேக சுகத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். மனிதன் சுவாசிக்கும் வாயு அவனுடைய உயிர் வாழ்க்கைக்கு எவ்வளவு அத்தியாவசியமானதோ, அவ்வளவு அவனது தேக சௌக்கியத்திற்கும் முக்கிய

மாண்டு. ஆதலின் தான் சஞ்சரிக்கும் இடங்கள் சுத்தமான காற்றுள்ள இடங்களாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இப்படியே அவள் குடியிருக்கும் வீடு, பருகும் நீர், உண்ணும் உணவு, உடுத்தும் ஆடை, இவை ஒவ்வொன்றும் சுத்தமாயிருப்பதோடு, தேகப்பயிற்சி; வெளிச்சம், போதிய நித்திரை முதலியனவும் அவளது சுகத்திற்குக் காரணமாயிருக்கின்றன. இனி தொத்து வியாதிகளைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன். குஷ்டரோகம் அவ்வியாதியஸ்தனைத் தொடுவதினாலும் அல்லது அவன் துணி முதலியன படுவதினாலும், மகம்மாரி வியாதி, எலியெட்டி ஈக்களின் மூலமாயும் வாந்திபேதி முக்கியமாய்க் குடிஜலத்தின் மூலமாயும், பெரியம்மை காற்றின் வழியாகவும், குளிர் ஜ்வரம் யானைக்கால் முதலிய வியாதிகள் கொசுக்களின் கடியாலும் உண்டாகின்றன. இப்படி ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு விதமாய் உண்டாகிறது. ஆதலால் பொதுவாகக் கவனித்தால், நமது கண்ணுக்குப் புலப்படாத மிகச் சிறிய லக்ஷக்கணக்கான பூச்சிகள் நம்முடைய தேகத்திலும் நம்மைச் சுற்றியிருக்கும் ஆகாயத்திலும் சஞ்சரிக்கின்றன; இவைகளே தொத்து வியாதிகளை விளைவிக்கும் வித்து.

சுந்தராம்:—இப்படிப்பட்ட பூச்சிகள் கண்ணுக்கே புலப்படுவதில்லையென்றால் அவை இருக்கின்றன என்பதற்கு என்ன அத்தாட்சி?

ஆசிரியர்:—அதனை இரண்டொரு விஷயங்களால் தெரிவிக்கிறேன் கேள். ஒரு அறையில் ஒரு தேங்காய் முறியை எலி வாய் படாதபடி தொங்கவைத்து இரண்டு தினம் பொறுத்துப் பார்த்தால் தேங்காயைச் சுற்றி ஒரு விதமான கறுப்பு மாசு படர்ந்திருக்கும். அப்போது அதைப் பூஞ்சக்கானான் பூத்துவிட்டது என்கிறோம். அப்படிச் செய்தது மேற்சொன்ன பூச்சிகள் வேலையே. தவிரவும் வீடுகளில் கரந்தவண்ணமே வைக்கப்பட்ட பால் கெட்டுப்போவதற்கும், காய்ச்சின பால் கெட்டுப் போகாமலிருப்பதற்கும் காரணமென்ன? பசுவின் மடியிலிருந்தோ பால் கறப்பவன் கையிலிருந்தோ அல்லது கறக்கும் பாத்திரத்திலிருந்தோ கறந்த பாலில் அகஸ்மாத்தாய்ச் சேர்ந்திருக்கும் பூச்சிகளுக்குப் போதுமான ஆகாரம் அப்பாலில் கிட்டுகிறபடியால் அவை அதி சீக்கிரம் பெருகிப் பாலைக் கெடுத்து விடுகின்றன. ஆனால் பாலைக் காய்ச்சும்போது பூச்சிகள் உஷ்ணந்தாங்க முடியாமல் மாண்டு போகின்றமையால், திரும்பவும் பாலில் வெளியே உள்ள உயிருள்ள பூச்சிகள் குடியேறிய பின்புதான் அப்பால் கெடக் கூடும். ஒரு துளி உறை மோரினால் பால் தயிராக மாறுவதும் பூச்சிகளினாலேயே. இவ்விஷயங்களினால் நம்மைச் சுற்றி மேற்கூறிய பூச்சிகள் இருக்கின்றன என்று தெளிவாகத் தெரிகின்றதல்லவா?

சுந்தராம்:—ஆமாம். ஆனால் இப்பூச்சிகள் நிலைநின்றுள்ள இவ்வுலகின்

கண் மனிதன் உய்யுமாறு எப்படி? உங்கள் கணக்கின்படி பார்த்தால் ஒவ்வொரு மனிதனும் வியாதியஸ்தனுகவன்றோ இருக்க வேண்டும்!

ஆசிரியர்:—அப்படி உலகமெங்கும் வியாதி மயமாய் இராததற்குக் காரணம் சொல்லுகிறேன். முன் பேசிய பூச்சிகள் எங்கணும் பரவியிருந்தாலும் அவைகள் அனைத்தும் விஷப்பிராணிகளல்ல. உலக இயற்கையின் அமைப்புப்படி அவற்றில் பல நன்மை பயப்பனவாயும் சிறிய மாத்திரம் கெடுதி யுண்டாக்குவனவாகவும் இருக்கின்றன. அஜீரணத்தை அகற்றி ஆரோக்கியத்தைக் கொடுக்க முற்கூறியபடி பாலைத் தயிராக மாற்றும் பூச்சிகளோப்போன்று நன்மைக்குரிய பூச்சிகளும் ஏராளமாய் இருக்கின்றன. தவிரவும் நாம் எடுத்துக்கொள்ளும் விசேஷ ஜாக்கிரதையினாலோ தேகசுபாவத்தினாலோ, தீர்ப்பூச்சிகளினாலும் யாதொரு கெடுதியும் உண்டாகாதிருப்பது முண்டு. வியாதி வித்துக்களாகிய பூச்சிகள் நமது தேகத்தின் புறத்திலும் ஆடைகளிலும் தங்கியிருந்த போதிலும் அவைகள் நமது இரத்தத்தில் சேரமார்க்க மில்லாத வரையில் பாதொரு கெடுதியும் செய்ய முடியாது. நமது முயற்சிக்கும் மீறி நமது தோலி னுட்புறம் பூச்சிகள் பிரவேசித்து வி [illegible] அற்றை நாசஞ்செய்யுக் கூடியவையும், அதன்றின் சக்தியை ஒடுக்கக் கூடியவையுமாகிய வஸ்துக்கள் நமது இரத்தத்திலேயே இருக்கின்றன. ஆகையினால்தான் நல்ல சுத்தமான இரத்தம் இல்லாதிருக்கும் தேகத்தில் வியாதிகள் எளிதாக உண்டாகின்றன. இனி தீர்ப்பூச்சிகளால்யாதொரு கெடுதியும் உண்டாகாதபடி நமது இரத்தத்தைக் காப்பதற்கும் செயற்கை வழிகளுண்டு. பெரியம்மை என்ற கொடிய வியாதியினின்றும் காப்ப அம்மை குத்திக்கொள்வதை உதாரணமாகச் சொல்லலாம். காய்ச்சின பாலின்றி, கடைந்த மோரில் உறையூற்றி வைத்தால் அது தயிராகாததுபோல் உரம் முதலியவற்றால் பக்குவப் படுத்தப்பட்ட நிலத்தில் விதைக்காமல் அறவடையான நிலத்தில் உடனே திரும்பவும் அதில் விதையைவிதைத்தால் பயிர் செழிப்பா யுண்டாகாதது போல, அம்மை குத்தி மாறுபாடடைந்த தேகத்தில் அம்மைப் பூச்சிகளான வித்துக்கள் எவ்விதம் சேர்ந்த போதிலும் அவை யேறுன்றிப் பலப்படா. மகம்மாரி என்ற கொடிய வியாதிக்கும் இவ் விதமான முன் சிகிச்சையுண்டு. இந்தியாதி முன் சிகிச்சைகள் தரும் வியாதி வித்தலையை சிலர் பிறவியிலேயே இயற்கையாய்ப் பெறுகிறார்கள். உதாரணமாக ஓர் ஸ்திரீ தன் கர்ப்பகாலத்தில் பெரியம்மையினால் பீடிக்கப்பட்டவளாயின் அவள் கர்ப்பாசயத்திலுள்ள குழந்தைக்கும் அவ்வியாதிசற்று அணுகி அக்காரணம் பற்றி, அக்குழந்தைக்கு எத்தனை தடவை அம்மை பால் குத்தினாலும் பலிக்காமலும், அதற்குப் பெரியம்மை வியாதி வராமலும் இருப்பது இயல்பு. ஆகவே இப்போது நடக்குன் நிகழ்ந்த சம்பாஷ

னையால் முக்கியமாக அறியவேண்டியது, பிரபஞ்ச தியல்புகளுக்கும் நமது தேக அமைப்பிற்கும் தக்கவாறு, நமது புத்தி யுக்தி அநுபவங்களோக் கொண்டும், சுகாதார விதிகளே நன்குணர்ந்தும், தேகத்தைத் திடப்படுத்தும் முறைகளேயும் வியாதி அணுகாது பாதுகாக்கும் முறைகளேயும் அனுஷ்டித்து வந்தால் நாம் அரோகதிடகாத்திர தேகிகளாய்ச் சுகவாழ்க்கையடையலாம் என்பதே.

கூந்தாம்:—எனக்கு மிகப் பிரியமானதாகவும் பிரயோஜனமானதாகவும் இருந்த இந்தச் சம்பாஷணைக்குத் தங்களுக்கு மிக்க வந்தனம். இதைப் போன்ற விஷயங்களேப்பற்றித் தங்களோடு கூடியவரை அடிக்கடி பேச விரும்புகிறேன். நமஸ்காரம்.

கே. முத்துக்கிருஷ்ணா பிள்ளை.

ரசிகை.

ஓர் நவீன தமிழ் நாடகம்.

56—ம் பக்கத் தொடர்ச்சி.

அங்கம் 1. காட்சி 3.

(அரச புத்திரிகளது பூம்பொழிலின் தென்புற வெல்லேயாகிய வேலிக்குச் சிறிது தூரத்தில் ஓர் தடாகம். தடாகத்தின் மேற்குப்புறக் கரையருகே ஓர் அழகிய சிறு ஆலயம். அவ்வாலயத்துள் அமைக்கப் பெற்றிருந்த பீடத்தின்மீது சரஸ்வதி படம். படத்தின் முன்பு சில கனிவர்க்கங்களும் ஓர் பொற்பாத்திரத்தில் அமிர்தமும் சமர்ப்பிக்கப்பெற்றிருக்கின்றன. அருகே தீபங்கள் எரிகின்றன. ரசிகை, வசிகரி, ஆகிய இரு சகோதரிகளும் அன்னையின்முன்பு கைகூப்பி உள்ள முருகப் பாடுகின்றார்கள்:—)

ரசிகை:— ஆய கலே ளறுபத்து நான்கினேயும்
எய உணலிர்க்கு மென்னம்மை—தூய
வருப்பளிக்கு போல்வாளென் னுள்ளத்தி லுள்ளே
யிருப்பளிக்கு வாரா திடர்.

வசிகரி:— வெள்ளேக் கலேயுடுத்து வெள்ளேப் பணிபூண்டு
வெள்ளேக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளே
சியா சனத்தி லரசரோ டென்னேச்
சரியா சனம்வைத்த தாய்.

(வேறு பல பாடல்களும் பாடுகின்றனர். விரிவஞ்சி அவை எண்டுவிடப் பெற்றன, பற்பல தோத்திரங்களோ உளமுருகப் பாடி, பின்னர் இருவரும் தேவ மாதரை யொப்பக் கண்ணிமையாது அன்னையையே உற்று நோக்கியவாறு விழிகளிலிருந்து முத்து முத்தாக ஜலம் பெருகத் தன்னே மறந்த தியானத்திலிருக்கின்றனர்.)

(தடாகத்துக் கப்பால் வேலியைத் தோத்துக்கொண்டு ஓர் நெடிய கத்தி தகதகவென ஜ்வலிக்கின்றது. உடனே சடசடவென ஓர் சப்தம். வேலியில் ஓர் பிளவு உண்டாகிறது. அதன் வழியாய்க் கையில் கத்தியோடு கம்பீரமாய்ப் பிரவேசிக்கின்றனன் ரமணன். தடாகத்தை நோக்கி விரைந்து நடக்கின்றனன். அதை அணுகிவிடுகின்றனன். வஞ்சலியால் அவனது திருஷ்டி ஆலயத்தை நோக்கிச் செல்லுகின்றது. கன்னிகைகளேயும் காண்கின்றனன். பதுமையாக நின்று நோக்குகின்றனன். அவன் உள்ளத்தில் ஓர் புதிய ஒளிர்ச்சி எழுகின்றது. பெரும்பான்மை அந்த ஒளிர்ச்சி காரணமாகவும் சிறுபான்மை தாகத்தின் கொடுமையாலும் ஓடிவந்த களேப்பினாலும், ஓர் மயக்க முறுகின்றனன். "கண்ணே!" என்ற மொழியைப் பதறுகின்ற குரலில் தொனித்து மூர்ச்சையாய்க் கீழே விழுகின்றனன். அந்தத் தொனி அரச புத்திரிகளின் தியானத்தைக் கலேத்துவிடுகின்றது. இருவரும் தடாகத்தின் புறமாகப் பார்க்கின்றனர்கள். ரசிகையின் நெஞ்சம் பதைக்கின்றது. வசிகரி அவன் முகத்தை நோக்குகின்றனள். அவன் தலேதாழ்த்திக் கொள்கின்றனள்.)

வசிகரி:—அக்கா! யாரோ ஒருவர் அதோ தடாகத்தருகே மூர்ச்சையாய் விட்டார், போய்ப் பார்ப்போம் வா.

ரசிகை:—என்ன! நாம் போகலாமா! நம் தந்தைக்குத் தெரிந்தால் என்ன சொல்வார்?

வசிகரி:—என்ன அக்கா! ஆபத்தில் கூடவா அந்தப்புரச் சட்டங்கள்! அவர் என்ன அவஸ்தையி லிருக்கிறாரோ? ஓர் உயிரைக் காப்பாற்றியதால் உண்டாகும் ஆனந்தத்தை உனக்களிப்பதற்காகவே சாரதாதேவி இந்தப் புருஷரை அனுப்பியிருக்கிறாள். ஆலசியமில் வா.

(எழுந்து தடாகத்தை நோக்கிச் செல்லுகின்றனள் விவாகத்தை வெறுத்த விமலே. ரசிகையும் எழுந்து அவளேத் தொடர்கின்றனள். இருவரும் ரமணனருகே வந்து அவன் முகத்தை நோக்குகிறார்கள். ரசிகையின் விழிகளில் தாரை தாரையாக ஜலம் பொங்கி வடிகின்றது. அதாங்கள் அதிரக் கூறுகின்றனள்:—)

"வசிகரி! வசிகரி! இனி என்ன செய்வதடி? என்ன செய்வதடி?"

(மேற்கூறச் சக்தியற்று, தன் வலக்கரத்தால் நெற்றியைத் தாங்கிக் கொண்டு கீழே உட்காருகின்றனள்.)

வசிகரி:—பயப்படாதே அக்கா! தைரியமாயிரு; சற்று நேரத்தில் எழுந்துவிடுவார் பார்.

(உடனே வசிகரி தடாகத்திலிருந்து இருகைநிறைய ஜலம் மொண்டு வந்து ரமணன் முகத்தில் தெளிக்கின்றனள். ரமணன் மூர்ச்சை தெளிந்து

அருகேஉட்கார்ந்திருந்த ரசிகையின் முகத்தைக் கோக்குகின்றான். பெண்மணி கான்னி எழுந்து நிற்கின்றாள். ரமணனும் எழுந்து உட்கார்ந்து மெல்லிய குரலில் "ஜலம்! ஜலம்!" என்கிறான். வசீகரி ஆலயத்திற்கோடுகின்றாள். அங்கு அம்மணியின் முன்பிருந்த அமிர்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டு திரும்பி வந்து அதை ரமணனுக்குக் கொடுக்கின்றாள். அவன் அமுகத்தைப் பருகுகின்றான். அவ்வாறு பருகும்பொழுதே, கலகாட்டுகின்ற ரசிகையின் கள்ளக் கண்கள் அவன் முகத்திற் பிரகாசித்து செளந்தரியத்தையும் காண்பையும் பருகுகின்றன. ரமணன் அமிர்தபானம் புரிந்தபின்பு, பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு எழுந்து நின்று இந்த சம்காஷணையும் கோக்கிக் கூறுகின்றான்:—)

ரமணன்:—தாகத்தின் கொடுமையால் வேலியைப் பிரித்து இந்த இடத்திற்கு வந்துவிட்டேன். கூமித்துக்கொள்ளுங்கள். நீங்கள் என்னுயிரைக் காப்பாற்றியதை ஒருபோதும் மறவேன். நான் வேலியை முன்போல் அமைத்துவிட்டுப் போகிறேன்.

(தரையிற் கிடந்த கத்தியை எடுத்துக் கொண்டான். சரசரவென நடக்கின்றான். ரசிகையும் வசீகரியும் அவனையே நோக்குகிறார்கள். ரமணன் வேலிக்கப்பால் நிற்கின்றான். ஓர் எழை விருத்தை (கிழவி) ஓர் கள்ளிக் கற்றையைத் தன்னிடையிற் முருங்கி தன்னிடக்யால் அணைத்துக் கொண்டு வருகின்றாள். ரமணன் வேலிக்கப்பால் வந்ததும், பிரமித்து அவனைப் பார்த்தவாறே நிற்கின்றாள்.)

ரமணன்:—என் பாட்டி மலைத்து நிற்கிறாய்?

விருத்தை:—யாரு நீங்கோ? நந்தவனத்திலிருந்து வர்றேனே.

ரமணன்:—நான் இருப்பது புஷ்பபுரி. வேட்டை யாடுவதில் எனக்குப் பிரிய மதிகம். எங்கள் ஊருக்கருகே யுள்ள காட்டில் இன்று வேட்டையாடப் போய் ஒரு மானைத் தொடர்ந்து தொடர்ந்து ஓடினேன். மான் அகப்படவில்லை. பின்பு தாகத்திற்குத் தண்ணீரைத் தேடிக்கொண்டு இந்த இடத்திற்கு வந்தேன். இந்த வேலிக்கப்பால் ஒரு தடாகமிருக்கிறதென்று ஒரு விறகுவெட்டி சொன்னான். தாகத்தை என்னாற் சகிக்கக் கூடவில்லை. ஆகையால் என் கத்தியின் உதவியினால் வேலியைப் பிரித்துக் கொண்டு தடாகத்திற்குப் போய் என் தாகத்தைத் தணித்துக் கொண்டேன்.

விருத்தை:—நீங்க கல்ல மனுஷனா இருக்கிறேள். நீங்க இந்த நந்தவனத்துள்ளே போன சேதி நம்ம ராஜாவுக்குத் தெரிஞ்சா பெருந் தொல்லே வந்திடும். ஒன்னாம் பேருக்குத் தெரியாமலே வீட்டுக்குப் போயிடுங்கோ.

ரமணன்:—என்ன தொல்லே வந்திடும் பாட்டி?

விருத்தை:— இது யாரு நந்தவனமின்னு ஒங்களுக்குத் தெரியாதோ? நம்ம ராஜா பெண்களுக்கு ஏற்பட்டது.

ரமணன்:—அதோ நிற்கிறார்களே! அவர்கள்தானே ராஜா பெண்கள்?

விருத்தை:—ஆமாம் அவாள்தான்.

ரமணன்:—ஏன் பாட்டி! நமது அரச புத்திரிகளின் பெயர் ரசிகை வசீகரி என்று சொல்லுகிறார்களே. இவர்களில் யார் ரசிகை, யார் வசீகரி?

விருத்தை:—வெள்ளோப்பட்டுக் கட்டிக்கொண்டிருக்காளே அந்த அம்மாதான் வசீகரி. பீதாம்பரம் கட்டிருக்கிறே அம்மாதான் ரசிகா. ஆனா என்னமக்கு இந்த வீண்பேச்சு. ஆரேனும் பார்த்துவிட்டா நம்ம ரெண்டு பேரையும் ராஜா முன்னே கொண்டு போயிடுவா.

ரமணன் —பிரித்த வேலியை நான் முன்போல் சரியாய் அமைத்து விட்டுப் போகிறேன்.

விருத்தை:—ஒங்க இஷ்டப்படி செய்யுங்கோ. நான் போறேன்.

[விருத்தை செல்கின்றாள். ரமணனும் வேலியை முன்போல் அமைத்து விட்டு மறைகிறான். தடாகத்தருகே, நின்ற ரசிகையும் வசீகரியும் சம்பாஷிக்கின்றனர்.]

வசீகரி:—எனக்கா! இந்தச் சமயம் நாம் இங்கே இல்லாவிட்டால் அவருடைய கதி என்னவாயிருக்கும்!

ரசிகை:—அடி கண்மணீ! வசீகரீ! நீ ஓர் அரிய வீரஸ்திரீ. (தங்கையின் கன்னமொன்றை முத்தமிடுகிறாள்.) உன் பரோபகார குணச்சையும் உன் தைரியத்தையும் எனக்கு நன்கறிவிப்பதற்கே நமது அன்னை இவரை அனுப்பினாள். நீயே அரசியாவதற்குத் தகுந்தவள். நீ அரசியானால் நமது குலத்தின் புகழ் எங்கும் பிரகாசிக்கும்.

வசீகரி:—என்னை வீணாய்ப் புகழாதே அக்கா.—இந்த விஷயத்தை நமது தந்தைக்குத் தெரிவிக்க வேண்டுமல்லவா?

ரசிகை:—அவருக்குத் தெரிந்தால் நான் புகழ்ந்ததைப் பார்க்கிலும் அதிகமாகவே உன்னைப் புகழ்வார். ஆகையால் தெரிவிக்கவேண்டியது தான்.

வசீகரி:—அவர் என்னைப் புகழ்வதாயிருந்தால் தெரிவிக்க எனக்குப் பிரியமில்லை. ஆனால் நமது நந்தவனத்தில் ஓர் புருஷன் வந்ததை அவருக்குத் தெரிவியாதிருக்கக் கூடாது. ஆகையால் அம்மணிக்குச் சமர்ப்பித்த பிரசாதங்களை எடுத்துக்கொண்டு போகலாம் வா. (போக அடியெடுக்கின்றாள்.)

ரசிகை:—சற்றுப் பொறடீ.

வசீகரி:—எனக்கா? (செல்லாது நிற்கின்றாள்.) தந்தைக்குத் தெரிவித்துவிட்டால் எனக்கு அகந்தை தலைக்கேறிவிடுமென் றெண்ணுகிறாயோ?

ரசிகை:—அதிசயை என்னைப்போன்ற பேதைகளிடமிருக்கமே யொழிய உயர்ந்த கொள்கைகளையுடைய உன்னை அணுகுவதற்கும் அஞ்சுமே.

வசீகரி:—அப்படியானால் நீ என் சொல்லவேண்டாமென்கிறாய்?

ரசிகை:—எனென்றால்—எனென்றால்—எனென்றால்—(நிறுத்து நேரம் யோசிக்கிறாள்.) காரணம் எனக்குத் தெரியவில்லை. ஆனால் மனது தாக்குச் சொல்லவேண்டாமென்று மாத்திரம் என் புத்தியில் தோன்றுகிறது.

வசீகரி:—சரி உன் புத்தியில் தோன்றுகிறபடியே சொல்லாதிருந்து விடுவோம்.

ரசிகை:—ஒரு விஷயம் என் மனத்தைக் கலக்குகிறதடி.

வசீகரி:—என்ன விஷயம்?

ரசிகை:—அந்தப் புருஷர் யாரென்று நினைக்கிறாய்?

வசீகரி:—யாராயிருந்தாலென்ன?

ரசிகை:—அவர் ஒரு அரச வம்சத்தைச் சேர்ந்தவரென்று நினைக்கிறேன்.

வசீகரி:—அவர் அரச வம்சத்தைச் சேர்ந்திருந்தாலென்ன! ஆண்டி வம்சத்தைச் சேர்ந்திருந்தாலென்ன! நமக்கென்ன! காரியமாகிறதா. போகலாம் வா.

ரசிகை:—ஆனால்—

வசீகரி:—ஆனால் என்ன?

[ரசிகை தன் மேல் இதழ்களைக் கிள்ளிக்கொண்டு மௌனமாய் யோசிக்கின்றாள்]

வசீகரி:—(புன்னகையுடன்) என்னக்கா! இங்கே நடந்த விஷயங்களை நமது தங்கைக்குச் சொல்லவேண்டாமென்று நீ சொன்னதையும், நீ மெல்லப் பேசுவதையும், என்னென்னவோ யோசித்துக்கொண்டு உதட்டைக் கிள்ளிக்கொண்டிருப்பதையும், கவனித்தால், நீ விரும்பிய வரத்தை இன்றைக்கே அம்மணி அளித்துவிட்டாள் போலிருக்கிறது.

ரசிகை:—(முகஞ்சிவந்து) என்னடி இப்படிப் பேசுகிறாய்! என் புத்திக்குத் தோன்றியதைச் சொன்னால் என்னென்னவோ அர்த்தம் செய்துகொள்ளுகிறாயே. எல்லாவற்றையும் இப்பொழுதே நமது தங்கைக்குச் சொல்லலாம் வா.

வசீகரி:—வேண்டாம் வேண்டாமக்கா. என்னை கோபித்துக்கொள். நான் வேடிக்கையாகச் சொன்னேன். உண்மையில் நான் ஒரு அர்த்தமும் செய்து கொள்ளவில்லை. போகலாம் வா.

(இருவரும் ஆலயத்தை நோக்கிச் செல்லுகிறார்கள்.)

பத்திராதிபர்.

உடற்கூறுபாடு.

இம்மலையில் பிரசுரிக்கப்பெறும் பாகத்தில் வழங்கும் சாஸ்திரார்த்தமான் பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

உடற்கூறுபாடு.	Anatomy.
கங்காளம் (எலும்புஅல்லதுஅஸ்திக்கோனை.)	Skeleton or bony frame work.
பேசிகள், நரை நார்கள், மாமிசம்,	Muscles.
தருணாஸ்தி, முருக்கு, குருத்தெலும்பு,	Cartilage.
சல்லியக் கவிப்பு, அஸ்திக்கவிப்பு.	Periosteum.
நீர்க்காஸ்திகள், நீண்ட எலும்புகள்.	Long bones.
குறுகாஸ்வாஸ்திகள், (குட்டை அல்லது உருண்டை எலும்புகள்.)	Short bones.
கபாலாஸ்திகள், பலகாஸ்திகள் அல்லது தகட்டெலும்புகள்.	Flat bones.
விஷமாஸ்திகள், ஒழுங்கீன அல்லதுகாடு முரடான எலும்புகள்.	Irregular bones.
காம்பு.	Shaft.
அருதிகள்.	Extremities.
மச்சை.	Marrow.
எலும்புக் கண்ணறைகள்.	Spongy or Cancellous tissue.
கபோடி, சிரசு, மண்டை.	Skull.
அங்கூரம்.	Process.
வம்சாஸ்தி, முள்ளந்தண்டு.	Spinal Column.
முண்டம், உடல்.	Trunk.
ஊர்த்வசாகைகள், உற்காயம்.	Upper Limbs.
அதசாகைகள், அதக்காயம்.	Lower Limbs.
சிரக்கபாலம், தலை எலும்புக்கூடு.	Cranium.
லலாடாஸ்தி, நெற்றி எலும்பு.	Frontal Bone.
நெற்றிமேடுகள்.	Frontal Eminence.
புருவமேடுகள்.	Superciliary Ridges.
நாசிகாபீடம்.	Nasal Tuberosity.
கண்கூட்டுத் தட்டை எலும்புகள்.	Orbital Plates.
பிடரெலும்பு, பிற்கபாலம்.	Occipital Bone.
கபால மூலத்துவாரம்.	Foramen Magnum.
சுஷும்நாகாண்டம், மூலாக்கொடி முதுகெலும்பு நாடி.	Spinal Cord.
மூட்டுமுடிகள்.	Condyles.
பச்சிமார்புதம், பின்பிதுக்கம்.	Occipital Protuberance.

நாடிகள், தமநீக்கள், இரத்தக்குழாய்கள். Arteries.
நரம்புகள். Nerves.
சங்காஸ்திகள், கன்னப்பொறிஎலும்புகள்,
காதெலும்புகள். Temporal Bones.
பார்ச்வகபாலங்கள், பித்திகைஎலும்புகள்,
தலையின் பக்க எலும்புகள். Parietal Bones.
ஜதூகாஸ்தி. Sphenoid Bone.
ஜர்ஜராஸ்தி. Ethmoid Bone.
கபாலசேகை, கபாலசந்தி. Suture.

உடற்கூறுபாடுகளைக் கற்கும்பொருட்டு முதலாவதாக, கங்காளம் (எலும்புஅல்லது அஸ்திக் கோவை) என்று சொல்லப்படுவதைப் பல பாகங்களாகப்பிரித்து அவைகளில் ஒன்றுக் கொன்றுள்ள சம்பந்தத்தைக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. ஈஸ்வரன் சிருஷ்டித்த மனிதர்களின் தேகத்தில் (பற்கள் தவிர) 200எலும்புகள் உள்ளன. இவைகள் பலமாயும், வைரமாயும், மங்கலான வெண்ணிறத்தனவாயுமிருக்கின்றன.இவ்வெலும்புகள் மனிதன், ஆடு, மாடு, குதிரை முதலானவைகளுக்குச் சதைக்குள்ளும், நண்டு, விரால் மத்தை முதலியவற்றிற்குச் சதைக்கு வெளியிலும், ஆமை முதலியவற்றிற்கு உள்ளும் வெளியிலும் இருக்கின்றன.

மானிடசரீரத்தின் எலும்புக் கூடானது—

1. தேகத்தின் உருவத்தையும் உறுதியையும் கொடுப்பதற்கும்,
2. பேசிகள் (தசை நார்கள்)சேர்மானத்திற்கும்,
3. வயிறு, மார்பு, கபாலம் முதலிய இடங்களுக்குள் இருக்கிற ஜீவிருக்காதாரமான சில உறுப்புக்களைப் பாதுகாப்பதற்கும்,

ஆன ஒரு கட்டு வேலையாயிருக்கிறது.

இளமைப் பருவத்தில் அநேக எலும்புகள் மெதுவான முருத்து அல்லது தருணாஸ்தி (குருத்தெலும்பு) யாக இருந்து, வளர வளர, அதில், சுண்ணாம்பு அதிகரிப்பதால் வைரமாகின்றன. அஸ்திகள் கடையது வரையில் விர்த்தியடைந்து, முதிர்ந்த வயதில், அவைகளில் சுண்ணாம்பு கணக்கில் அதிகரிப்பதால் இலேசாய் ஒடியக்கூடியவை யாகின்றன. அஸ்திகள் அஸ்திக்கவிப்பு என்னும் ஜவ்வால் மூடப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக அஸ்திகளை அவைகளின் ரூபத்திற்குத் தக்கபடி நான்கு வகுப்புக்களாகப் பிரிக்கலாம். அவையாவன:—

1, நீண்ட எலும்புகள் அல்லது தீர்க்காஸ்திகள்.
2. குட்டை எலும்புகள் அல்லது ஹ்ரஸ்வாஸ்திகள்.

161291

3, தகட்டெலும்புகள் அல்லது கபாலாஸ்திகள் அல்லது பலகாஸ்தி
4. ஒழுங்கீன எலும்புகள் அல்லது விஷமாஸ்திகள். [கள்.

1-வதான நீண்ட எலும்புகள் முக்கியமாய்ச் சரீரத்தின் நீண்ட அங்கங்களில் ஒரு காம்புடனும் இரண்டு அருதிகளுடனும் காணப்படும்.

காம்பு—உருவத்தில் ஸ்தம்ப வடிவாயும், வெளிப்புறம் கெட்டியாயும் உட்புறம் ஜீவன் இருக்கும்போது மச்சையை அடக்கும்படியாயும் குழாயாயிருக்கும் பாகத்திற்குக் காம்பு என்று பெயர்.

அருதி—அகலமாய், விரிந்து பக்கத்து எலும்புடன் சேரும் பாகத்திற்கு அருதி என்று பெயர். எலும்பின் வெளிப்புறமானது பேசிகள் சேர்மானத்திற்காகச் சற்றுக் கரடுமுரடாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது.

2-வதான குட்டை எலும்புகள். இவைகளை உருண்டை எலும்புகள் என்று சொல்லலாம். இவை மத்தியில் கனத்தில் லேசாயும் பல எலும்புக் கண்ணறைகள் உள்ளனவாயும் இருப்பதோடு சுற்றிலும் கெட்டியான எலும்பால் மூடப்பட்டிருக்கின்றன. இவை கை மணிக்கட்டுகளிலும் கணுக்கால்களிலும் இருக்கின்றன.

3-வதான தகட்டெலும்புகள். இவை சரீரத்தின் பதிவான இடங்களிலும், இடுப்பு, கபோடி (சிரசு) முதலிய இடங்களிலும் இருக்கின்றன. இவை கீழ்மேல் தட்டுகள் தடித்தனவாயும், மத்தியில் இலேசான கனமும் எலும்புக் கண்ணறைகளும் உடையனவாயும் பேசிகள் சேர்மானத்திற்காக வெளியில் அங்கூர முடையனவாயு மிருக்கின்றன.

4-வதான ஒழுங்கீன எலும்புகள். இவை விஷமமாயிருப்பதால் இவை கோக்காடு முரடான எலும்புகள் என்றும் சொல்லலாம். இவைகளும் மற்ற எலும்புகளைப்போல் சுற்றிலும் கெட்டியாயும், மத்தியில் இலேசானகனமும் எலும்புக் கண்ணறைகளும் உடையனவாயுமிருக்கின்றன. இவற்றை முள்ளந்தண்டு முழுவதிலும் பார்க்கலாம். அஸ்திக்கோவையைப்பற்றி வாசிக்கும் போது மானிடசரீரமானது நேராக நிற்கிறதென்றும், உள்ளங்கைகள் இரண்டும் முன்புறமாகவும், கைப்பெருவிரல்கள் இரண்டும் சரீரத்திற்கு வெளிப்புறமாகவும் இருப்பதாக நிகாளித்துக் கொள்ளவேண்டும். தலையின் உச்சியிலிருந்து இரண்டு பாதங்களின் மத்தி இடத்திற்கு நேர்க்கோடொன்று இழுப்போமானால் அதுதான் சரீரத்தின் மத்திய பாகத்தைக் காண்பிக்கும் அடையாளமாகும். இவ்விஷயங்கள் பின்சொல்லலாகும் விஷயங்களுக்கு அதிக உபயோகமுள்ளவையாகையால் இவற்றை ஞாபகத்தில் வைக்கவேண்டியது அவசியம்.

அஸ்திகளைப் பல்பாகங்களாகப் பிரிக்க மானிட சரீரத்தை நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம்.

1. சிரசு அல்லது கபோடி (சிரசும் முகமும் அடங்கிய பாகம்.)

2. உடல் அல்லது முதுகிடம் (சரீரத்தில், சிரசு, கால், கை, நீக்கி மீதப் பாகம்.)

3. உதரகாயம் அல்லது ஊர்த்வசாகை (தோள், புறங் கரம், மணிகட்டு, கரதலம், விரல்கள் அடங்கிய பகுதி.)

4. அதக்காயம் அல்லது அதசீசாகை (இடுப்பு, கால், கணுக்கால், பாதம், விரல்கள் முதலியவை அடங்கிய பகுதி.)

கபோடி அல்லது சிரசு. இதில் அடங்கிய எலும்புகளை இரண்டு விதங்களாகப் பகுக்கலாம். அவை (1) சிரக்கபாலத்திலுள்ளன, (2) முகத்திலுள்ளன.

சிரக்கபாலம் அல்லது தலை எலும்புக்கூடு. இது உச்சியிலுள்ள உருண்டையான பாகம், நெற்றி அல்லது புருவம், தலையின் பின்பாகம் இவைகள் அடங்கிய பாகம். இதில் 8 கபால எலும்புகள் ஒன்றோடொன்று கூடியிருக்கின்றன. இவ்வெட்டு எலும்புகளும் சேர்ந்து மூளையைக் காப்பதற்கேற்றகெட்டியான பெட்டி போன்ற ஓர் எலும்பறையை அமைக்கின்றன. அவ்வெட்டு எலும்புகள் வருமாறு:—

(1) நெற்றி எலும்பு அல்லது லலாடாஸ்தி. முன்புறத்திலுள்ளது. நெற்றியின் இருபுறமாயிருக்கும் மேடுகளுக்கு நெற்றி மேடுகள் என்றும், அவைகள் அடியில் வளைந்திருக்கிற வைகளுக்குப் புருவ மேடுகள் என்றும், அவை இரண்டுக்கும் மத்தியில் கூர்மையாயிருக்கும் பாகத்திற்கு நாசிகாமூலம் என்றும் சொல்லப்படும். நெற்றி எலும்புக்கெடியில் உள் நோக்கித் தட்டையாயும் சன்னமாயும் இரண்டு எலும்புப் பிதுக்கங்கள் உண்டு. அவைகளுக்குக் கண் கூட்டுத்தட்டை எலும்புகள் என்று பெயர். இவ்வெலும்புகளுக்கு மத்தியில் ஒரு சிறிய எலும்புப் பிதுக்கம் உண்டு. இதில் மூளையின் ஜவ்வு ஒட்டிக்கொண்டிருக்கும். நெற்றி எலும்பானது குழந்தைப் பருவத்தில் இடையே சிறிய சந்துடன் இரண்டு பாகமாய்ப் பிரிக்கப்பட்டு, தலையின் பக்க எலும்புகளின் மத்தியில் எற்பட்டுள்ள சந்துடன் தொடர்ச்சியாயிருக்கிறது.

(2) பிற்கபாலம் அல்லது பிடரெலும்பு. பின்புறத்திலுள்ளது. இது மூளையின் பெரும்பாகத்தை அடக்கிக்கொண்டிருப்பதால், அகலமாயும் ஆழமாயு மிருக்கிறது. இதனுடைய அடிப்பாகம் முள்ளந்தண்டு அல்லது கம்மாஸ்தியின் மேல் மூளையில் பொருந்தச் செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு பொருந்துமிடத்தில்

இக்கபால எலும்பில் ஒன்றரை அங்குலச் சுற்றளவுள்ள கபால முலத்துவாரம் என்ற ஒரு பெரிய துவாரமுண்டு. இந்தத் துவாரத்தின் மூலமாக மூளையிலிருந்து சுஷும்நாகாண்டம் என்ற மூளைக்கொடி வெளிவந்து மெருதண்டி அல்லது முள்ளந்தண்டுக்குள் பிரவேசிக்கிறது. இந்தத் துவாரத்திற்கு இருபக்கங்களிலும் பூடமுடிகள் என்ற சிறு பிதுக்கங்கள் உண்டு. இவைகள் முள்ளந்தண்டிலுள்ளமுதல் எலும்புடன் சேர்ந்து தலையை முன்னுக்கும் பின்னுக்கும் அசைவுச் செய்கின்றன. இந்தத் துவாரத்திற்கு அடுத்த மேற்புறத்தில் பின் பிதுக்கம் அல்லது பர்ச்மார்புதம் என்ற ஒரு பிதுக்கம் காணப்படும். இதில் இப்பெரிய துவாரத்தைத் தவிர்த்து நுண்ணிய குழாய்களும் கரம்புகளும் மூளைக்குப் போவதற்கும் அதிலிருந்து வருவதற்கும் அநேக சிறிய துவாரங்களு மிருக்கின்றன. பிடரெலும்பின் உட்புறத்தில் இரண்டு நீண்ட சிலுவையை ஒத்த வரம்புகள் உண்டு. அவைகளில் மூளையின் ஜவ்வு ஒட்டிக்கொண்டிருக்கும்.

3. 4. கன்னப்பொறி எலும்புகள் அல்லது சங்காஸ்திகள் அல்லது காதெலும்புகள். இருபக்கங்களிலுமுள்ள இரண்டு எலும்புகள். ஒவ்வொன்றிலும் செவித் துவாரத்திற்குச் சற்று மேலிருந்து புறப்பட்டு, முன்னுக்குப்போய் சன்னத் தெலும்போடு கூடியிருக்கிற சன்னப் பிதுக்கத்திற்கு (Zygoma) ஜைகோமா என்று பெயர். இதில் மாமிசத் தசைகள் ஒட்டிக்கொள்ள மேடு பள்ளங்களும், கரம்புகளும் நாடிகளும் ஓடத் துவாரங்களு மிருக்கின்றன.

5. 6. தலையின் பக்க எலும்புகள் அல்லது பார்சவ கபாலங்கள் அல்லது பித்திகை எலும்புகள். சன்னப்பொறி எலும்புகளுக்கு மேலே தலையின் இரு பாரிசங்களையும் உச்சியையும் கவர்ந்திருக்கிற இரண்டு எலும்புகள். இவைகளின் மேற்புறம் குவிந்திருக்கிறது. இவைகளின் உட்புறத்திலும் சால்வாய்கள் ஒத்த அநேக வரம்புகள் காணப்படும். இவைகளில் நாடி கரம்புகள் ஓடுகின்றன.

7. ஐதாகாஸ்தி. சிரக் கபாலத்திற்கு அடிப்புறத்தில் பிடரெலும் பிற்கு முன் அமைந்துள்ள இரண்டு எலும்புகளில், பெரியதாய் உருவத்தில் இறக்கைகள் விரிந்த வௌவாலைப் போலொத்து முன் இருப்பது. இதன் மத்தியஸ்தானத்திற்கு உடல் என்றும் இரு பாரிசத்களிலும் இருக்கிற சன்ன ஓடுகளுக்கு இறக்கைகள் என்றும் சொல்லலாம்.

8. ஜர்ஜராஸ்தி. ஐதாகாஸ்தியின் பின்னுள்ள சிறிய எலும்பு. இந்த இரண்டு எலும்புகளும் கபாலத்தின் இதர எலும்புகளுடன் சேர்ந்து நெற்றி எலும்பிலுள்ள நேத்திரக் குழிகள் இரண்டுக்கும் மத்தியஸ்தானம் மூக்கின் அடித்துவாரங்கள் வரையிலும் பரவி நிற்கின்றன. ஜர்ஜராஸ்தி செல்ல

ரித்தது போல் நேத்திரக்குழிகள் இரண்டுக்கும் மத்தியில் மூக்கின் மேற்புற த்தில் அமைந்திருக்கிறது. இதற்கு மத்தியில் திரைச்சீலை போன்ற ஓர் சிறிய தகட்டு எலும்புச் சேர்க்கை உண்டு. இதற்கு மேற்புறத்தில் ஒரு பிதுக்கம் உண்டு. அதற்குக் கொண்டை என்று பெயர். இதில் மூளையின் ஜவ்வு ஒட்டிக்கொண்டிருக்கிறது. இக்கொண்டைக்கு இருபுறங்களிலும் சிறிய துவாரங்கள் காணப்படும். அவைகளின் வழியாக நாசி நரம்புகளின் இழைகள் பிரவேசிக்கின்றன. கபாலத்தின் அடிப்பாகம் முகம் முன்னந்தண்டு எலும்புகளால் மறைக்கப்பட்டிருக்கிறது. கபாலத்திற்குரிய எட்டு எலும் புகளும் தையலைப்போல் கபாலரேகை என்னும் கருக்குள்ள விளிம்புகளி னல் ஒன்றோடொன்று கெட்டியாய் இணைக்கப்பட்டிருக்கின்றன.

(வரும்)

ரெ. கோவித்தசாமி நாயடு,

மெடிக்கல் பிராக்டிஷனர்,

தூத்துக்குடி.

மகளிர் வீரம்.

(காலஞ் சென்ற ஸ்ரீமான் பாதூர் கேசவாச்சாரி ஐயங்கார், யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எழுதியது.)

தற்காலத்தில் நடைபெற்று வருகிற மகாயுத்தத்தில் வீராவேசத்தால் தூண்டப்பெற்று தேசசேவை செய்கிற ஆடவர்களோடு மகளிரும் கலந்து யுத்த சம்பந்தமான பல தொழில்களை முடித்துவருவதன்றித் தாமே ஆடவர் வேடம் பூண்டு ரணக்களத்திலும் நேரே சென்று ஆயுதம் தரித்துச் சண்டை செய்கின்றனரென்றும் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். இவ்விஷ யம் இக்காலத்தில் நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதாயினும் நமது பண்டைத்தமிழ் நூல்களை ஆராய்ந்து பார்ப்பார்க்கு இதில் புதுமை ஒன்றுங் தோன்றாது. தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்திருந்த மகளிர் பலர் வீரம் மிகுந்தவர்களாயும் உயர்ந்த கோட்பாடுடையவர்களாயும் இருந் தனர். ஒரு ஸ்திரீ, நாட்டின் நன்மைக்காகப் போர்க்களத்துக்குச் சென்றி ருக்கிற தன் மகன் அவ்விடத்தில் இறக்கப்பெறுவானாயின் அதுவே அறஞ் செய்யும் பயன், அது ஈகையின் பயனும் கடமையின் பயனுமாகும் என்று கூறுகிறாள். இது

"தருமமு மீதேயாந் தானமு மீதேயாம்
கருமமுங் காணுங்கா லீதாம்—செருமுனையிற்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப வென்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்."

என்றதனாலே யாத்திரையால் விளங்கும். அக்காலத்தில் ஒரு மனிதனைத் தயார் செய்வதற்கு அவனைச் சேர்ந்தவர்களுடைய கடமைகள் இன்னின்ன என்பது வரையறுக்கப்பட்டிருந்தது.

மகனை யீன்று காப்பாற்றுதல் தாயின் கடமை. அவனைப் பல குணங்க ளாலும் நிறைந்தவனாகச் செய்வது தந்தையது கடமை. அவனுக்கு ஆயுதஞ் செய்து கொடுப்பது கொல்லனது கடமை: ஆயுதங்கள் பயிலப்பெற்ற போர்க்களத்தில் புறங்கொடாமல் பகைவர்களையும் யானைகளையும் கொன்று வருதல் ஆண்மகனது கடமை. இது "ஈன்று புறந்தருதல்" (புறம் 312) என்னுஞ் செய்யுளால் இனிது விளங்கும். அச்செய்யுளைப் பாடியவர் பொன்முடியார் என்னும் பெயருள்ள ஒரு பெண்மணியாவார்.

முற்காலத்தில் நடந்த ஒரு போரில் தன் மகன் ஒரு யானையை வெட்டி வீழ்த்திவிட்டுத் தானும் போர்க்களத்தில் மடிந்தான் என்பதைக் கேட்டு இவ னைத் தவிர வேறு பிள்ளைகளில்லாதவளாகிய வயது முதிர்ந்த கிழவி அவ னைப் பெற்ற பொழுதையினும் மிகுந்த களிப்பை யடைந்தனள் என்பதைப் பூங்கண் உத்திரை என்னும் பெண் புலவர் பின் வருமாறு கூறுகிறார்:—

"முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனனென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே." (புறம் 277)

சின்னாட்களுக்கு முன்பு நடந்த போரில் தனது தந்தை யானையைக் கொன்று இறந்து போனான்; நேற்றைப் போரில் கணவன் பகைவரைக் கொன்று தானும் மடிந்தான். இவ்வாறு இருக்கவும், பழைய வீரக்குடியிற் பிறந்த ஒரு பெண் தனக்குள்ள ஒரே மகனை, அவன் போர் புரிவதற்குரிய பருவ மடையாதவனாயிருந்தும் அம்மகனை அலங்கரித்து ஆயுதங்களைக் கொடுத்து யுத்தகளத்துக்கு அனுப்பினாள்: இச்செய்தி ஒக்கூர் மாசாத்தியார் என்னும் நல்லியற் புலமை மெல்லியல் பாடிய புறநானூறு என்ற நூலில் அடியிற்கண்ட பாடலால் விளங்கும்.

"கெடுக சிந்தை கடிதிவ ணினியே
மூதின் மகளி ராத றகுமே
மேனை ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
கெருங ளுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுபட் டனனே
இன்றும் செருப்பறைகேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி

யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

பழையகால அரசர்களுடைய யுத்த முறைகளையும் அதன் பாகுபாடுகளையும் விவரமாகக் கூறுகிற வெண்பாமாலை என்கிற நூலில் அதன் ஆசிரியர் ஒரு ஸ்திரீயின் செய்கையைப்பற்றிக் கூறுகிறார். அதாவது தம்மூரின் மேல் படையெடுத்துச் சத்துருக்களின் சேனைகள் வந்தன. அதைப் பார்க்க இவள் மனம் பொறுமல் தான் பாலூட்டிக்கொண்டிருந்த குழந்தையின் வாயைத் தன் குசங்களினின்றும் நீக்கி முன்னே பகைவர்களைக் குத்தி வீழ்த்து போயிருக்கிற வேலாயுதத்தைச் சீர்ப்படுத்தி அவன் கையில் கொடுத்து அவனைப் பார்த்து "உனது முன்னோர்கள் போரில் புறங்கொடாது பகைவரைக் கொன்று களத்தில் மாண்டு நடுகல்லாயினர். ஆகையால் அவர்கள் செய்ததைப்போன்ற புகழுக்கேதுவாய செய்கைகளை நீயும் செய்ய வேண்டும். ஆகையால் யுத்த களத்துக்குச் செல்வாயாக." என்று கூறுகிறாள். இது

"வந்தபடை நோளுள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃகமிறைக் கொளீஇ—முந்தை
முதல்வர்கற் ருன்காட்டி மூதில் மடவாள்
புதல்வனைச் செல்கென்ரூன் போர்க்கு."

என்ற செய்யுளால் விளங்கும்.

ஒரு ஸ்திரீயின் மகன் போர்க்களத்தில் ஒரு யானையின்மீது வேலை எறிந்துவிட்டுத் திரும்பவும் அதனைப்பெறும் ஆற்றலில்லாது புறங்கொடுத்து மீண்டனன். அவனைக்கண்ட அவன் தாய் "இதற்குமுன் எமது முன்னோர் ஒருவருஞ் செய்யாத இழி தொழிலைச் செய்து அதனால் பெரும் பழியை எங்கள் குடிக்கு உண்டாக்கிய மூடன் நீ, இத்தகையவனுகிய உன்னைப் பெற்ற எனது வயிற்றை அறுப்பேன் அறுப்பேன்" என்று கூறினாள்." இதி,

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
... ...
புகர்முகக் குஞ்சர மெறிந்த வஃகம்
அதன்முகத் தொழிய நீபோந் தனையே
அதனால் எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை ஈன்ற வயிறே!"

என்னுஞ் செய்யுளால் அறியப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு முற்காலத்து அழியா உரனுடை உள்ளத்து மகளிர் பலரை உடையதாயிருந்தது. அக்காலே மகளிர் பலருடைய மனநிலையே இவ்வாறிருந்த தென்றால், ஆடவர் வீரம் இத்தகையதென்பது சொல்லாமலே விளங்கும். இக்காலத் தமிழர்க்கு மேலே கூறுஞ்செய்திகள் அதிசயத்தை விளைவிக்கக்கூடிய கற்பனைகளாகத் தோன்றும். அதற்குக் காரணம் அவர்களுடைய மனநிலையே. நமது தமிழ்ச்சிறுவர்கள் பயமென்னும் ஆகாயத்தின் நடுவில் தங்களால் ஒன்றுமே முடியாதென்கிற கொள்கையாகிற வீட்டில் தரித்திரம் என்னும் தாய்மாரால் அறியாமையாகிற பாலூட்டி வளர்க்கப்படுகின்றனர். பழைய காலம்போல் ஆடவர் மகளிர் அனைவரும் தமிழ்க்கல்வியைக் கற்றுச் சங்கநூல்களை ஓதியுணருங் காலம் எப்பொழுது உண்டாகுமோ அப்பொழுதுதான் தமிழ்நாடு பண்டைய நிலையை எய்தி வீரமகளிர் பலரையும் வீரர் பலரையும் உடையதாய் விளங்கும்.

பாம்பின் சாபம்.

76-ம் பக்கத் தொடர்ச்சி.

சங்கரலிங்க தாசரின் வரலாறு. "1907-ம் வருடத்து விஸ்சன் கோப்பைக் காற்பந்து பந்தயத்தில் திருச்சிராப்பள்ளிக் காலேஜ் ஜெயித்ததற்குக் காரணமாக நின்றவர்கள் சங்கரலிங்க தாசரும் கிருஷ்ண தாசரும் என்று அவ்வருஷம் நவம்பர் மாதத்தில் ஒரு தேதிக்கு தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரமானது பலரும் அறிந்த விஷயம். மேலும் கர்ப்பத்தில் சங்கரலிங்க தாசருக்கு இணை தென்னிந்தியாவில் கிடையாதென மெரில் பேப்பரில் குறித்திருந்தது இன்னும் பலர் ஞாபகத்திலிருக்கலாம். அவர் விளையாட்டில் தீதர்சரி அடைந்தது அல்லாமல் படிப்பிலும் சாதாரணமான வரல்லர் என்பதற்கு மறுவருஷம் பிப்ரவரி மாதம் வெளிப்போந்த காலேஜ் பத்திரிகையில் முந்தின வருடத்துச் சென்னை சர்வகலாசாலை பி. ஏ. பட்டப் பரீக்ஷையில் கணக்கு வகுப்பில் இராஜதானியில் முதலாகத் தேறினவர் சங்கரலிங்க தாசரென்று அவருடைய சித்திரப்படைப் படத்துடன் பிரசுரஞ்செய்திருந்தே சான்றாகும். அதே பத்திரிகையில் கீழ்க்குறிப்பில், கணக்காசிரியரால் சிறப்பாகத் தேறுவரென்று எதிர்பார்க்கப்பட்ட கிருஷ்ண தாசன் சோதனையில் தவறிப்போனது விசனிக்கற்பாலதே என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. பிறகு செல்வாக்கிற் சிறந்த காலேஜ் தலைமை ஆசிரியரிடமிருந்து மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு ஒரு சிபார்சுக் கடிதம் பெற்று அதனால் டிபுடி தாசில்தாராக வேலை

க்றுக் கொள்ளும்படி உத்தரவு பெற்றும் வேலையில் அமராமல் சங்கரலிங்க தாசன் ஒருவரிடமும் சொல்லாமல் திடீரென்று சிங்கப்பூருக்குப் போய்விட்டானென்ற வதந்திமட்டும் ஊர்முழுவதும் பரவிவிட்டது. அவன் அவ்வண்ணஞ் செய்ததற்கு அந்தரங்க காரணம் என்னவென்று இக்கதையைப் படிக்கும் பிரபுக்கள் கவனிப்பார்களாக.''

* * *

இவ்வண்ணம் நான் படித்துவரும்பொழுதே ஒரு பக்கத்தை முடித்து மற்றொரு பக்கம் திருப்பும்பொழுது ஒரு உதிரிக் கடிதம் பிறந்து கீழே விழுந்தது. அதில் பின் வருமாறு குறிதிருந்தது.

''எனது ஜீவிய சரித்திரத்தைப் படர்க்கையிடமாக எழுதி வெளியிடவேண்டுமென்பதே எனது கருத்து. அதுவே இலௌகிகத்திற்கு உசிதமானது.'' மேலும் படிக்கலுற்றேன்.

* * *

''சங்கரலிங்க தாசன் கிருஷ்ண தாசன் என்ற இருவர்களும் சிவகிரியிலிருந்து போய்த் திருச்சியில் படித்தவர்கள். சங்கரலிங்க தாசன் அருணாசலப் பூசாரியின் மகன். இப்பூசாரி தனது மகனைப் பாலியந்தொட்டு தெய்வந்தொழல், ஆசான் வழிபடுதல் மெய்பேசுதல், தருமஞ்சிந்தித்தல் முதலிய நற்குணங்களிற்பழக்கி அவன் கற்பதற்கு வெளியூருக்குப் போவதற்கு முன்னே சகல தருமங்களிலும் அவாவையும் அறிவையும் ஊட்டிவிட்டார். ஆகவே சங்கரன் தனது ஆசிரியரிடத்து, அழலினீங்கா னணுகா னெஞ்சி நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோடு' படர்ந்தான்.

கிருஷ்ண தாசனோ பெரிய வம்சத்திற் பிறந்து செல்வத்தில் வளர்ந்தவனாகையால் படிப்பில் அதிக சிரத்தை கொண்டவனல்லன். கலாசாலைக் கோட்பாடுகளுக்கு மாறாக நடப்பது, உபாத்தியாயர்களை எதிர்த்து வாயாடுதல், தன்னிலுஞ் சிறுவர்களை வருத்துவது, பள்ளிக்கூடச் சாமான்களைச் சேதப்படுத்துவது முதலிய சில்லறை விஷயங்களுக்கென்று அஷ்டர்கள் கோஷ்டி வ்

படுத்தி அதற்குத் தலைவனாகத் தானே அமர்ந்துகொண்டவன். மேலும் அவன் ஊர்ச்சச்சரவுகளில் தலையிட்டு, பாலக்கரைத் துருக்கரோடும் ஜங்ஷன் ஆங்கில இந்தியர்களோடும் கர்நாடகக் காலாட்படைச் சிப்பாய்களோடும் சண்டையிடுவான். ஸ்ரீரங்கம் திருவாணைக்காவல் முதலிய பக்கத்துப் புண்ணிய க்ஷேத்திரங்களில் உற்சவ காலங்களில் அதிக்ரமங்கள் செய்வது, கோட்டை வெளி வீதிகளில் கூச்சலிடுவது, உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு மேல் ஏறுவது, பொதுஜனக் கூட்டங்களில் உபந்யாசம் செய்து விழாதப்படி ஆரவாரிப்பது, நாடகம், பாட்டுக் கச்சேரி, தாசிக் கூத்து, மிருகக்காட்சி முதலிய தூர்விஷயங்களிற் பணத்தை விரயப்படுத்துவது முதலிய விஷயங்களில் கண்ணுங் கருத்துமாக விருந்தான்.

கிருஷ்ணதாசன் இவ்வகையாகத் திருச்சியில் கடந்துகொண்ட விஷயம் சிவகிரியில் ஒருவருக்குந் தெரியாது. சங்கரனும் கோட்சொல்லுங் குணமிலாஞகையால் இதைப்பற்றித் தன்னூரில் மூச்சும் விடவில்லை. பிறகு கிருஷ்ணதாசன் சோதனையில் தேறுதலுஞ் ஊருக்குத் திரும்பாதது கண்டு அவன் தகப்பனார் சங்கரனை வினவியபொழுதும் அவன் ஒன்றும் வெளியிடவில்லை. அப்பால் கிருஷ்ண தாசனுடைய தகப்பனார் திருச்சிக்குச் சென்று ஆங்கு காலேஜ் அதிகாரிகளிடமிருந்து தனது மகன் நடத்தைகளைப் பூராவாக அறிந்து கிலேசப்பட்டுச் சங்கரன் தன்னை எச்சரிக்காததற்காகச் சினங்கொண்டு ஊருக்குத் திரும்பி சேலம் அருணாசலப் பூசாரியிடஞ் சென்று அவரது மகனுடைய மனைதத்தைக் குறித்துக் கடிந்து பேசி சங்கரன் மீது பழிசுமத்தி வருத்தத்துடன் வீடு சென்றார். தனது நல்பருடைய முறையீட்டைக் கேட்ட பூசாரி தனது மகனை அழைத்துச் சினந்தும் திட்டியும், கண்ணை ஒருகாலும் பார்க்கவேண்டாமென்றும், தனது வீட்டைவிட்டு உடனே வெளிக்கிளம்புமாறும், ஆஞ்ஞாபித்துவிட்டார். தாசில் வேலைக்கு உத்தரவு பெற்றிருந்த சங்கரன் பிதாவின் இடிபோன்ற மொழிகளைக் கேட்டுத் திக்பிரமை கொண்டு யாது செய்வதென்றறியாமல் திகைத்துத் தனது ஜன்ம பூமியிலிருக்கச் சற்றுஞ் சம்மதியாமல் தனது மாமனால் கொடுக்கப்பட்ட சொக்கத்

கையான ஐம்பதினாயிர ரூபாய்க்களையும் மதராஸ் பாங்கியினின்றும் வாங்கிக்கொண்டு தூத்துக்குடி மார்க்கமாகக் கொழும்பு சென்று பிறகு சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தான்.

அருணாசலப் பூசாரி தன் மகன் கேங்கினவுடன் அவனது பிரிவாற்றாது தனது கடின மொழிகளுக்காகக் கழிவிரக்கங் கொண்டு தனது மகனைப் பலவகையால் தேடியும் காணுமல் புத்திர சோகத்தால் உயிர் துறந்தார். இதைப் பத்திரிகை மூலமாக அறிந்த சங்கரன் சிங்கப்பூரிலேயே உத்தரகிரியைகள் நடத்தினனும் சிவகிரிக்குத் திரும்பச் சம்மதியாமல் சிங்கப்பூரிலேயே நின்று விட்டான்.

காணுமற்போன கிருஷ்ணனைப்பற்றி ஒரு தகவலும் வெளிவரவில்லை. அவனைத் தேடி இளைத்த அவன் தகப்பனாரும் காலஞ் சென்று விட்டார்.

சங்கர தாசனை ஊர் விசேஷங்களை அப்போதைக் கப்போது பலவழிகளாலும் அறிந்து கொண்டும் தனது நிச்சயத்திற் பிறழாமல் சிங்கப்பூருக்கு அருகில் பெரிய தோட்டங்கள் வாங்கிக் கொண்டு வியவசாயத்தில் சுகமாகக் காலங்கழித்துவந்தான். சங்கரதாசர் சிங்கப்பூருக்கு அருகே நில பலங்கள் வாங்கி ஒரு தோட்டத்தின் மத்தியில் உயர்ந்த மாளிகை அமைத்துக்கொண்டு வேலையாட்கள் பணிவிடை செய்ய இனிது வாழ்ந்திருந்தார். இவ்வாறு சில வாண்டுகள் சென்றன. பிறகு ஒருநாள் அந்தி சோதத்தில் வெளியே சென்றிருந்து திரும்பக் கிருதத்தை நோக்கி வரும் பொழுது, தனது மாளிகைக்குப் பக்கத்துமாளிகை வெகுநாளாய்க் காலியாயிருந்தும் அன்று ஜனப்பழக்கம் உள்ளதாகத் தோன்றியதைக் கவனித்து ஒரு வேலைபாளை அழைத்து விசாரிக்க அவன் அம்மாளிகையையும் அதைச் சார்ந்த தோட்டங்களையும் அன்றே இந்தியாவினின்றும் வந்த செட்டியார் வாங்கிக் கொண்டு தானும் தனது இருபது வயதுள்ள மகளுமாக வந்திறங்கியிருக்கின்றனரென விடையளித்தான். இதைக்கேட்டு அவர்களைக் காலையில் பார்க்கலாமென்று தீர்மானித்துக்கொண்டு தனது மாளிகைக்குச் சென்று விட்டார். மறுநாள் காலையில் காபிக்கு

மேலாகங்களை ஆடைகள் தரித்துக்கொண்டு புதிதாக வந்திருக்கும் தாசரைக் காணப் புறப்பட்டார். அதிக்க மாளிகையை அணுகும்பொழுது காதில் பிரகாசமாய் விழுந்தது. அகன் சாரத்தால் பரவசப்பட்டே உட்சென்றார். சங்கீதத் தேர்ச்சிக்கு ஏற்ப வளமும் வனப்பும் வாய்ந்த ஒரு பெண்ணிசை வீற்றிருந்தாள். கண்டார், காதற் கடலில் மூழ்கிவிட்டார்.

சுருங்கச் சொல்லில், காளாவின் காதல் மேற்பட்டு முடிவில் இருவர் மணவினைக்கும் செட்டியார் ஒப்புக்கொண்டார்.

மங்களாகரன்.

(தொடரும்.)

பௌதிகசாஸ்திரபாடங்கள்.

பீடிகைப் பாடம்.

வஸ்து:—வஸ்து என்னும் மொழி ஒவ்வொருவருக்கும் தெளிவாக அர்த்தமாகக்கூடிய மொழியே. புஷ்பம், வீணை, புத்தகம், காற்காலி, மண், ஜலம், வாயு, கடல் இவைகளெல்லாம் வஸ்துக்கள் என்று ஒவ்வொருவருக்கும் தெரியும். இந்த வஸ்துக்களில் வாயுவைத் தவிர மற்ற வஸ்துக்களை நாம் கண்ணுற் காணக்கூடும் வாயுவை கண்களுக்குக் காணப்படவில்லை. ஆயினும் நாம் வாயு என்ற வஸ்து இருப்பதாக அறிவோம். எவ்வாறு, ஒரு புத்தகத்தாலாவது ஒரு விசிறியாலாவது காற்றை விசிறிக்கொண்டால் காற் கண்ணுற் காணுகின்ற வஸ்துக்களாகிய புஷ்பம், வீணை, நாற்காலி முதலியவைகள் தேகத்திற் பட்டு உராய்வதை நாம் உணர்வதுபோல் என்னவோ ஒன்று நம் தேகத்திற் பட்டு உராய்ந்து போவதை உணருகிறோம். அவ்வாறு உணர்வதால் நமது தேகத்தில் பட்டு உராய்ந்து செல்லும் ஓர் வஸ்துநம்மைச் சுற்றி இருப்பதாக அறிந்து அந்த வஸ்துவை வாயு என்றழைக்கிறோம்.

சில சுண்டர்கள் ஓரறையில் உல்லாசமாய்ச் சம்பாஷித்துச் சொண்டிருக்கும்பொழுது புதிதாய் அவ்வறைக்குள் ராகவன் என்ற மற்றொரு நண்பன் புகுவை முன்னமே அறையிலிருந்தவர்களில் ஒருவனாகிய தேசவர் என்பான் ராகவனை நோக்கி "மல்லி

கைப்பூ வாசனை வீசுகிறதே! உன் காதலி சூட்டினாளோ" என்று ராகவன் கூந்தலில் மறைத்துச் சூட்டப்பெற்றிருந்த மல்லிகைப் புஷ்பத்தை எடுத்து மற்ற நண்பர்களுக்குக் காட்டிப் பரிகசிக்கின்றான். ராகவன் "கேசவா! உன்சாமர்த்தியத்திற்கு நான் ஒன்று கருகிறேன், கண்ணை மூடிக்கொண்டு வாயைத்திற" என்கின்றான். கண்ணனும் அவ்வாறே செய்யவே ரமணன் அவன் வாயில் என்னவோ ஒன்றைப்போட, கண்ணன், "ஓகோ! உன் காதலி கொடுத்த கற்கண்டோ" எனப் புன்னகையுடன் கூறித் தன் வாயிலுள்ள கற்கண்டைத் தின்னுகிறான். நண்பர்களனைவரும் சற்று நேரம் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே "டடங் டங்டங், டடடங் டங்டங், டடடங், டங்டங்—" என்றவாறு ஒலித்த ஒலி அவர்கள் செவிகளிற் புகவே, கேசவன் "மாதாக் கோயில் மணி அடிக்கின்றது. மணி பன்னிரண்டாய்விட்டது. நான் வீட்டுக்குப் போகவேண்டும்." என்கிறான். இச்சம்பவங்களிலிருந்து பின்வரும் விஷயங்கள் தெளிவாகின்றன. முதலில் கண்ணன் மல்லிகைப்பூவைக் கண்ணுற் காணுதிருந்தபோதிலும் அதன் வாசனை யுணர்ச்சியினால் மல்லிகைப்பூ என்ற வஸ்து புதிதாய் அறையில் வந்திருப்பதாக அறிந்தான். அவன் கற்கண்டைக் காணுதிருந்தபோதிலும் சுவை யுணர்ச்சியினால், தன் வாயிலிருப்பது கற்கண்டென்று அறிந்தான். மாதாக்கோயில் மணியை அவன் காணுதிருந்தபோதிலும், ஒலித்த ஒலிக்குக் காரணம் மாதாக்கோயில் மணி என்ற வஸ்து என்று சப்த உணர்ச்சியால் அறிந்துகொண்டான்.

இவ்வளவு விஷயங்களிலிருந்து நாம் என்ன அறிந்துகொள்ளுகின்றோம்? வஸ்துக்கள், ரூபம், ஸ்பரிசம், கந்தம், ரசம், சப்தம், (காணல், தொடுதல், மணப், சுவை, ஒலி) ஆகிய ஐந்து புலன்கள் அல்லது உணர்ச்சிகளில் ஒன்றினாலேனும் பலவற்றினாலேனும் அறியப்படுவன என்றறிகின்றோம். ஆகையால் ஐம்புலன்கள் ஒன்றினாலேனும் பலவற்றினாலேனும் அறியப்படுவதுதான் வஸ்து எனப்படும்.

வஸ்துவல்லாதன. ஐம்புலன்களால் அறியப்படுவன வஸ்துக்கள் என்றமையால், வெண்மை, கருமை, சூடு, குத்திப்பு, நாற்றம்

மூகரப்படுவதாயும், இசைச்சல் கேட்கப்படுவதாய் மிருப்பதால் வெண்மையும், கருமையும், சூடும், குத்திப்பும், நாற்றமும், இசைச்சலும் வஸ்துக்கள் என்று சிலர் எண்ணக்கூடும். அது நியாயமன்று. ஏனென்றால், சற்றுக்கூர்ந்து யோசிக்கால் வெண்மையும் கருமையுமுடைய பொருள்கள்தான் காணப்படுவனவன்றி வெண்மையுங்கருமையுங் காணப்படுவனவல்லவென்பது தெளிவாகும். காணப்படும் பொருள்களைக் காணும் காட்சி யுணர்ச்சி இருக்கிறதே அந்த உணர்ச்சியின் பேதங்களுக்குத்தான் வெண்மை கருமை என்று பெயர். அவ்வாறே சூடும் குத்திப்பும், நாற்றமும், இசைச்சலும், முறையே ஸ்பரிச, ரச, கந்த, சப்த உணர்ச்சிகளேயன்றி உணரப்படுவனவாகா. ஆகையால் இவையெலாம் வஸ்துக்களாகா.

அறிவு, மனம், உயிர் ஆகிய இவைகளையும் இவைபோன்றவைகளையும் நாம் அடிக்கடி வஸ்துக்கள் என்று வழங்குகிறோம். என்றாலும் புஷ்பம், வீணை, கல், ஜலம் முதலியவைகளிலிருந்து அறிவு, மனம், உயிர் முதலியவைகளை வேறாகப் பிரித்து, புஷ்பம் முதலியவைகளை ஸ்தூல வஸ்துக்கள் என்றும், மனம் முதலியவைகளை சூக்ஷ்ம வஸ்துக்கள் என்றும் நாம் வழங்குவதுண்டு. ஆனால் நாம் இந்த நூலில் வஸ்து என்பது ஐம்புலன்களால் அறியப்படாதவை களை வஸ்து என்றழைப்பதேயில்லை. ஆகையால் இந்த நூலின் பிரகாரம் மனம் முதலியன வஸ்துக்களன்று.

நிழலும் கண்ணாடியில் காணப்படும் பிரதிபிம்பமும் காணப்படுவதேயாயினும் அவை வஸ்துக்களன்று. இதற்குக் காரணம் அடுத்த பாடத்தில் வஸ்துக்களின் லக்ஷணங்களைப்பற்றிக் கூறும் பொழுது தெளிவாக விளக்கப்படும்.

பிரகிருதி சாஸ்திரங்கள் 'பிரகிருதி' என்ற மொழியை நமது வைதிக சாஸ்திரங்களில் என்ன அர்த்தத்தில் உபயோகித்திருந்த போதிலும் இலௌகிக நூல் சம்பந்தமாக, "பிரபஞ்ச இயற்கை" என்னும் அர்த்தத்திலேயே நாம் உபயோகிக்கிறோம். ஆகையால் பிரபஞ்ச இயற்கையைப்பற்றிக் கூறும் நூல்கள் பிரகிருதி சாஸ்திரங்களாம். அவை பலவகைப்படும். பூமியின்

மேற்புற அமைப்பின் இயற்கையைக் கூறும் பூகோள சாஸ்திரம், பூமியின் உட்புற அமைப்பைப்பற்றிக் கூறும் கேகோள சாஸ்திரம், வானத்துக் கிரகங்கள் நட்சத்திரங்களைப்பற்றிக் கூறும் வான சாஸ்திரம், பிராணிகளைப்பற்றிக் கூறும் பிராணிசாஸ்திரம், தாவரங்களைப்பற்றிக்கூறும் தாவர சாஸ்திரம், சரீரக்கட்டுமானத்தைப் பற்றிக்கூறும் உடற்கூறு நூல், சரீரக்கிரியைகளைப்பற்றிக் கூறும் சரீர சாஸ்திரம் முதலியவைகளும், நாம் தொடங்கியிருக்கும் நூலாகிய பௌதிக சாஸ்திரமும், பிரகிருதி சாஸ்திரங்களின் பாற்படும். பௌதிக சாஸ்திரம் எதைப்பற்றிக்கூறுவது என் பதைப் பின்னர்த் தெரிவிப்போம். பிரகிருதி என்றால் பிரபஞ்ச இயற்கை எனவேறும், அப்படியாயின், மனிதர்களும் பிராணிகளும் பிறப்பது, இறப்பது, மகிழ்ச்சியுறுவது, சஞ்சலமுறுவது ஒருவர்க்கொருவர் நன்மை புரிவது, தீங்கிழைப்பது, பலவகைச் சிக்கனைகள் செய்வது, முதலியவைகளும் பிரபஞ்ச இயற்கையே யன்றோ. ஆனால் இவை, உயிருள்ள மனிதர்களும் பிராணிகளுமாகிய ஜீவர்களுடைய சைதன்னியத்தில் அல்லது அறிவில் திகழும் சலனங்களால் விளைவனவாகையால், அவற்றைச் சைதன்னியப் பிரகிருதி என்ன வேண்டும். முன் பாராவில் சொல்லிய நூற்களோ, பிரபஞ்ச வஸ்துக்களின் (சைதன்னிய இயல்களைப்பற்றிக் கூறுது) ஜடத்துவ அமைப்பின் தன்மைகளைப் பற்றித்தான் ஆராயும், ஆகையால் அந்நூற்கள் பேசும் பிரகிருதி ஜடப்பிரகிருதி என்னலாம். அதுப்பற்றி அந்நூற்களுக்கு ஜடத்துவ சாஸ்திரங்கள் என்றுஞ்சொல்வார்கள். சைதன்னியப்பிரகிருதியின் காரணகாரியங்கள் முதலியவற்றை ஆராயும் நூற்களைத் தத்துவ சாஸ்திரம் என்று அழைப்பதுண்டு, இச்சாஸ்திரத்தில் தான் மிகப் பழையகாலத்திலிருந்து நமது நாட்டில் ஆழ்ந்த ஆராய்ச்சி எற்பட்டு அது சம்பந்தமான நமது நூற்கள் இன்றும் உலகில் இணையற்றனவாயிருக்கின்றன. ஜடத்துவ சாஸ்திரங்கள்தான் தற்காலம் மேனாட்டுப் பாஷைகளில் பெரு[illegible]போல் நமது நாட்டுப் பாஷைகளில் இல்லை.

பௌதிக சாஸ்திரம். இது ஜடத்துவ சாஸ்திரங்களிலொன்று. ஜடத்துவ சாஸ்திரப் பிரகாரம் வஸ்து என்றால் இன்னது என்

பதை இப்பாடத் துவக்கத்தில் கூறினேம். பௌதிக சாஸ்திரம் பொதுவாக வஸ்துக்களின் இயல்களைப்பற்றிச் சொல்லும் நூல் ஆகும். நீர், நிலம், காற்று, இவைகள் பூதங்கள் என அழைக்கப்படுவன வாகையாலும், அவை வஸ்துக்கள் ஆகையாலும், பூதங்கள் என்பதை வஸ்துக்கள் எனப் பொருள் கொண்டு பூதத் தன்மைகளைச் சார்ந்த நூல் என்று, பௌதிக சாஸ்திரம் - என்று இந்நூலுக்குப் பெயராயிற்று. ஆகவே பௌதிக சாஸ்திரம் என்ற மொழிக்கு வஸ்து சாஸ்திரம் என்றே பொருள் கொள்ள வேண்டும். இது, பொதுவாக வஸ்துக்களைப்பற்றியும் அவைகள் பிருக்கும் ஸ்திதி அவைகளின் லக்ஷணங்கள் அவை அடையும் சலனங்கள் அல்லது மாறுபாடு இவைகளைப்பற்றியும் நுட்பமாய் ஆராயும். ஆனால், வஸ்துக்களைப்பற்றி ஆராய்வதில், வஸ்துக்களில் எவ்வளவு பேதங்களிருக்கின்றன? இருக்கிலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் கல்பற்ற தனி வஸ்துவா? அல்லது பல வஸ்துக்களாலாகிய கல்பு வஸ்துவா? கலப்பு வஸ்துவாயின், அதில் என்னென்ன வஸ்துக்கள் கலந்திருக்கின்றன? என்றவாறு வஸ்துக்களின் பேதங்களையும் ஆக்கம் அல்லது அமைப்பையும் அறிவதை யோர் ஆராய்ந்த ஆராய்ச்சி மிகவிரிவாக வளர்ந்து ஒரு பெரிய தூர்க்கவே அந்த நூல் ரசாயன சாஸ்திரம் என்று ஒரு தனிப் பெயருடையதாயிற்று. ரசாயனம் என்பதற்குச் செப்பு வெள்ளி முதலிய லோகங்களைப் பொன்னாக்கும் வித்தை என்றர்த்தமென்று நமது ஜனங்கள் சாதாரணமாய் அறிவார்கள். ஆகியில் சாதாரணப் பொருள்களிலிருந்து பொன் செய்ய முயற்சித்ததிலிருந்தே வஸ்துக்களின் பேதங்களையும் ஆக்கத்தையும் விளக்கும் பல அரிய விஷயங்கள் அறியப்பெற்று அவை ஒரு முக்கிய நூலாயமைந்தன். பொன்னை எளிதாகவும் மாளாமலும் செய்ய இயலாமற் போனாலும், அவ்வாறு செய்ய முயன்றதிலிருந்து அறிந்த பல அரியவிஷயங்கள்தான் அம்முயற்சிகளிலிருந்து அகப்பட்ட பொன் எனக் கருதி அவ்விஷயங்களைப் பொன்போற் போற்றி ஒரு நூலாக அறிஞர்கள் அமைக்க, அந்நூலின் உற்பத்திக்குக் காரணமாகிய முயற்சியின் பெயராகிய ரசாயனம் என்பதே அந்நூலுக்குப் பெயராயிற்று.

ரசாயன சாஸ்திரம் பௌதிக சாஸ்திரத்தில் ஒரு பாகம். ஆனல் அது ஒரு பெரிய முக்கிய நூலாயமைந்து தனிப் பெயர் பெற்றிருப்பதால் பௌதிக சாஸ்திரத்தில் ரசாயன சாஸ்திர மொழிந்த மற்றப்பாகத்திற்கே சாதாரணமாக இப்பொழுது பௌதிக சாஸ்திரம் என்று வழங்கப்படுகிறது. ஆகையால் வஸ்துக்களின் லக்ஷணங்கள், அவையிருக்கும் ஸ்திதி, அவை அடையும் சலனங்கள் அல்லது மாறுபாடுகள். ஆகிய இவைகளைப்பற்றி ஆராயும் நூலையே பௌதிக சாஸ்திரம் என்ற பெயருடன் எழுதுகின்றோம்.

(தொடருமு.)

பத்திராதிபர்.

அகந்தை.

ஓர் குழந்தையின் பாட்டு.

70-ம் பக்கத் தொடர்ச்சி.

"மாடதின்னும் பறையா—உனக்கு மார்கழித்திருநாளா"

(என்ற மெட்டு. வேறு மெட்டிலும் பாடலாம்.)

தாய் குழந்தைக்குக் கூறுகிறாள் :—

1. அழாதே யழாதேடி—கண்ணே
யழாதே யழாதேடி
அழாதே யழாதேடி—கண்ணே
ஆயிர முத்தமடி.

2. மிட்டாய்தான் தித்தித்திடும்—கண்ணே
மெய்யான வித்தையது
கட்டாகச் சொல்லுகிறேன்—கண்ணே
கருத்தாகக் கேளடியே.

3. அம்மாள் கொடுத்தமிட்டாய்—என்றே
யன்பாக வெண்ணிக்கொண்டு
அம்மாவோ மறவாவரை—மிட்டாய்
அற்புத மாய்த்தித்திக்கும்.

4. அல்லாதுன் மிட்டாயென்றே—யெண்ணி
அகந்தைகொண் டெனைமறந்தால்
பொல்லாக் கசப்பாய்விடும்—மிட்டாய்
பொங்கிடுஞ் சீழாகவே.

5. அன்பிற் கரசியும்யான்—கண்ணே
அழகிற் கரசியும்யான்
இன்பத் தரசியும்யான்—கண்ணே
இன்பமன் றேநித்திப்பும்.

6. யானின்றி யின்பமிலை—கண்ணே
யானின்றி யழகுமில்லை
யானின்றி யன்புமிலை—கண்ணே
யானின்றித் துன்பமேதான்.

7. ஏன்னை மறந்தனையேல்—கண்ணே
ஈனப் பிசாசமொன்று
உன்னையே பற்றிக்கொள்ளும்—உன்றன்
உருவைக் குலைத்துவிடும்.

8. அகந்தைப் பிசாசமுனைக்—கண்ணே
அணுகிட வேண்டாவடி
சுகத்தை யழித்துவிடும்—உன்றன்
சோபிதஞ் சுட்டுவிடும்.

9. அந்தப் பிசாசமுனைக்—கண்ணே
அணுகித் தூரத்திலுன்றன்
சொந்தத்தாய் என்னைநினை—அஃதி
சொல்லாம லோடிவிடும்.

10. அம்மாவோ நம்பிடடி—கண்ணே
அம்மாவோ நம்பிடடி
எம்மாதி ரிச்சரிலும்—கண்ணே
அம்மாவோ நம்பிடடி

11. அழாதே யழாதேடி—கண்ணே
யழாதே யழாதேடி
அழாதே யழாதேடி—கண்ணே
ஆயிர முத்தமடி.

கோகிலத் தோணி

சதுரங்கம்.

79-ம் பக்கத் தொடர்ச்சி.

ஒருவர் எதிரி அரசன் நிக்கும் சட்டத்தைப்பார்த்து ஒரு காயை வைத்தால் எச்சரிக்கையாக அரசு என்று சொல்லவேண்டும். சொல்ல

வேண்டியது கட்டாயமில்லை. எச்சரித்தாலும் எச்சரிக்காவிட்டாலும் ஓர சனை எதிரிகாய் பார்த்து நின்றால் உடனே அக்காயை வெட் டக்கூடுமானால் வெட்டிவிடவேண்டும், அல்லது அரசனை நகர்த்த வேண்டும். அல்லது ஒரு காயை வைத்து தன் அரசனை மூடவேண்டும். எதாவது ஒரு வழியில் அரசு நின்றும் விலக வேண்டுமே யொழிய வேறு யாதொரு ஆட் டமும் அப்பொழுது ஆடலாகாது. இதில் எதாவது ஒன்று செய்ய முடியா விட்டால் அரசன் கட்டுப்பட்டான். ஆட்டமும் தோற்றுவிட்டது. எதிரி பார்க்கும் கட்டங்களுக்கு அரசன் செல்லமாட்டானுகையால் ஈராசர்களும் அடுத்தடுத்த சுட்டங்களில் ஒருபொழுதும் நிற்க மாட்டார்கள். அரசனுக்கு அரசு வரக்கூடிய ஓராட்டமும் ஆடலாகாது. காயொன்றுநகருவதினால் தன் அரசனுக்கு அரசு வரக்கூடியதாயிருந்தால் அதை நகர்த்தலாகாது காய்கள் அவ்வளவு மிருந்தபோதிலும் அரசன் கட்டுண்டால் ஆட்டம் தோற்றுவிட் டது. மந்திரியானது ஒரே ஆட்டத்தில் எதிரிலாவது, பின்புறத்திலாவது, பக்கங்களிலாவது, குறுக்கேயாவது நேர்கோட்டில் எத்தனைகட்டங்கள் வேண்டுமென்றாலும் உசிதப்படி கடந்துசெல்லலாம். ஆனால் மந்திரியாவது யானையாவது, தேராவது மற்றொரு ஆசாத்தாண்டிச் செல்லாது. யானையா னது எதிரிலாவது, பின்புறத்திலாவது, பக்கங்களிலாவது, நேர்க்கோட்டில் எத்தனை கட்டங்கள் வேண்டுமென்றாலும் கடந்து செல்லும்.

தேரானது குறுக்குக் கோட்டில் மட்டும் முன்னும் பின்னுமாக எத் தனை கட்டங்கள் வேண்டுமென்றாலும் செல்லும். ஆகவே, வெள்ளைக் கட் டத் தேர் ஒருகாலும் கறுப்புக் கட்டத்திற்குச் செல்லாது. கருப்புக் கட் டத்தேரும் வெள்ளைக் கட்டத்திற்கு வரமுடியாது.

குதிரை ஒரு தினுசாக நகரும் தான் நிற்கிற கட்டத்தை விட்டு ரூப த்தில் மூன்று கட்டங்கள் எண்ணி மூன்றாவது கட்டத்திற்குப் பாயும். இடையில் சொந்த மனிதனை, பிற மனிதனை நின்றாலும் அவர்களைத் தாவிச் செல்லும். உதாரணமாக ஒரு குதிரை 24ல் நின்றால் அது ஈ 2, ஊ 2, இ 3, எ 3, இ 5, ஏ 5, ஈ 6, ஊ 6, என இவ்வெட்டுக் கட்டங்களில் எதாவது ஒன்றுக்கு ஒரு ஆட்டத்தில் செல்லும். ஓராள் செல்லக்கூடிய கட் டத்தில் எதிரி காய் நின்றால் அதை ஆட்டக் கிரமத்தில் இஷ்டமிருந்தால் வெட்டலாம்.

காலாட்கள் ஆட்டம் விசித்திரமானது. அவைகள் முன்னேசெல்ல லாமேயொழியே பின்னேதிரும்பலாகாது. காலாட்கள் ஆட்டத்தில் மொக லாயத்திற்கும் ஐரோப்பிய வகைக்கும் பல பேதங்கள் உண்டு. ஐரோப் பியவகையே இங்கு குறிப்போம். ஒவ்வொரு ஆளும் முதல் தடவை நகரும் பொழுது ஒருகட்டமோ அல்லது இரு கட்டங்களோ நகரலாம்.

பிறகு ஒரு ஆட்டத்திற்கு ஒரு கட்டமாக முன்னேறிச் செல்லலாம். வெட்டுவதில் ஆட்படைக்கும் மற்றப் படைகளுக்கும் வித்தியாசமுண்டு. மற்ற ப்படைகள் மேற்குறித்த பிரகாரம் தாங்கள் செல்லக்கூடிய கட்டத்திலுள்ள எதிரி காய்களை வெட்டும். ஆட்படையோ தான் செல்லக்கூடிய கட்டங்களி லுள்ள எதிரி படைகளை வெட்ட விதியில்லாமல் குறுக்கே வலத்திலும் இட த்திலு முள்ள அடுத்த கட்டத்திலுள்ள எதிரி காய்களை வெட்டும். பழைய விதிப் பிரகாரம் வெட்டப்பட்ட காய் நின்ற கட்டத்தில் தான் சென்று நிற்கும். பிறகு அதே வரிசையில் ஒவ்வொரு கட்டமாக முன்னேறும். உதா ரணமாக இ 2 இல் நின்ற ஓராள் முதல் தடவை நகரும்பொழுது இ 3 அல் லது இ 4க்கு நகரும். பிறகு ஒவ்வொரு கட்டமாக முன்னேறும். இ 4இல் உள்ள ஆள் இ 5இல் இருக்கும் எதிரி காயை வெட்ட விதியில்லாமல் ஆ 5 அல்லது ஈ 5இல் நிற்கும் எதிரி காய்களை வெட்டி அக்கட்டங்களிலேறி, பிறகு எறின பத்தியிலேயே ஒவ்வொரு கட்டமாக முன்னேறும். அதாவது இ 4ல் உள்ள ஆள் ஆ5ல்உள்ள எதிரியை வெட்டினால் அக்கட்டத்திலேறிப் பிறகு ஆ பத்தியில் ஒவ்வொரு கட்டமாகமுன்னேறும்.

குதிரை காய்களைத் தாண்டிச்செல்வதுபோல் ஆளால் தாண்டிச் செல்லமுடி யாது. மற்றொருவிஷயம் கவனிக்கவேண்டும். ஓராள் எட்டாவது கட்டத்தை எட்டிவிட்டால் உடனே ஐரோப்பிய முறைப்பிரகாரம் மந்திரியோ, யானை யோ, குதிரையோ, தேரோ எது வேண்டுமென்றாலும் ஒன்று வைத்துக் கொள்ளலாம். எட்டாங் கட்டமேறிய காலாள் ஒவ்வொன்றுக்கும் இதுவே விதி. ஆகவே இரண்டோ மூன்றோ மந்திரியாவது, யானையாவது, குதிரை யாவது, தேராவது, பெறலாம். இஷ்டப்பட்டால் வேறும் ஆளாகவே நிறுத்தி வைக்கலாம். ஆனால் அதற்கு மேல் ஆட்டம் கிடையாது. (தொடரும்)

ரா. சே. சுப்ரமண்ய அய்யர்,

எம். ஏ. எல். டி.

பல கண்காட்சிகளில்
மெடல் பெற்றவை.

பி. சுப்பராயர், ஆயுர்வேத

ஔஷதசாலை,

ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் கோயில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து

இதைத் தங்கள் சிநேகிதர்களுக்குவாசித்துக்காண்பியுங்கள்.

பி. சுப்பராயரின் அபூர்வ ஆயுர்வேத் ஔஷதங்கள்.

தஞ்சாவூர் மாலா பவுடர்.

ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வாசனை வஸ்துக்களோடுகொண்டு செய்யப்பட்ட மனோரம்மியமான தூளை பவுடர். சைவாளும் மாம்ஸதார்களும் குழம்பு, கரி, துவையல் முதலியன் இன்னும் எல்லாவித சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசி மனதைக் கவரச் செய்யும். இதை உபயோகித்தால் அக்கினிமாந்தம், அரிசிமுதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இம்மசாலாவை சேர்த்து செய்த சமையலின் மனோரம்மியமான வாசனை வீடுமுழுவதும் மட்டுமல்ல வெளியிலும் சுற்றுப்பக்கங்களிலும் பரவும். இதை பிராமணர்களும் மற்றவர்களும் யாதொரு தடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஒளியிலாமலும் நிஸ்ஸங்கோசமாய் உபயோகிக்கலாம்.

டப்பா 1-க்கு விலை அணை 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனு வி. பி. செலவு அணை 5 பிரத்தியேகம்.

வெண்குஷ்டத்திற்கு மருந்து.

இம்மருந்தை வெண்குஷ்டமுள்ள இடத்தில் மேலுக்குமட்டில் உபயோகித்துவந்தால் ஒரு வாரத்தில் குணந்தரும் எல்லா தேஹிகளுக்கும் ஏற்ற மருந்து. இந்த ஔஷதம் உபயோகித்தால் எரிச்சல், வேக்காடு முதலியது உண்டாகாது. விலை சீசா 1-க்கு ரூ. 2—0—0 முதல் 4 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணை 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராயர், தஞ்சாவூர்.

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேசசரித்திரங்கள்,
தீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள்,
இலைகன் மூலமாகத, சன்மார்க்கம், ஜ்ஞானசாரம், இல்லாஸிக்,
வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின்
ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாருமின்புற் நிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறென் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பாகம் 1.	கலியுகாப்தம் 5020. கொளுத்திரு மார்கழிமீ கொல்லமாண்டு 1094, கூடுஷ்ரீ கி. பி. 1918-ஆம் டிசம்பர்மீ	மலர் 4.

குழந்தை கலியாணம்

கனகமி நான்கு வயது அழகிய குழந்தை. அவள் முகத்தில் பேதைமையே பிரகாசித்தது. அவள் அடர்ந்த கூந்தல் அழகாக சுற்ற ஜடையிடப்பட்டிருந்தும் அதைத் தாண்டி சில சிறு மயிர்கள் நெளிந்திருந்தன. இடையில் ஒரு வெளுப்புப் பாவாடையும் தேகத்தில் அழுக்கேறிய ஒரு வெள்ளைச் சட்டையும் தரித்திருந்தாள். அவளுடைய தமக்கை கூண்டாயி அம்மாள் பதினெட்டு வயதுப் பெண். இந்த அம்மாளுடைய கணவன் காடு கோப் பராமரித்துச் சீர்திருத்தம் இலாகாவிற்குரிய ஓர் உயர்ந்த உத்தியோகத்தை வகிக்கும் நிமித்தம் டோடான் என்ற ஊரில் கல்வி பயின்று கொண்டிருக்கிறார். இவருடைய மனைவி இப்பொழுது தன்சகோதரன் ராகவன் ஆதரவில் இருந்து வருகிறாள். ராகவனுக்கு ஓர் வியாபாரக் கம்பெனியில் வேலை.

இன்று ஆதிவாரம். மத்தியான வேளை 2 மணி சுமார் மூன்றிருக்கலாம். நாகை வருஷப்பிறப்பு. அதையாட்டி அண்டாளம்மாள் அடுப்பண்டையிருந்து கொண்டு பூரி சுட்டுக்கொண்டிருந்தாள். கனகமி அருகேயிருந்து கொண்டு சுட்ட பூரிகளில் ஒன்றைப் பிட்டுப் பிட்டுத் தின்று கொண்டு தன் அக்காள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். பூரி சுடுவதில் அண்

டாளமாருக்கு இதிதான் முதல் யத்தனம். ஆதல் ஐயோ பாவம்! பக்
ணங்கள் செய்வதில் கைதேர்ந்தவர்களிடமிருந்து பூரி செய்யும் பக்குவத்
தைச் செவ்வையாய் விசாரித் தறிந்திருந்தும் அவள் நயார்செய்து வைத்தி
ருந்த பச்சைப் பூரிகளில் சுமார் கால் பாகத்தை அடுப்பின்மீதிருந்த இருப்
புச் சட்டியிலுள்ள நெய்யில் இட்டு எடுப்பதற்குள் அந்த நெய் முழுதுமாகச்
செலவாய்விட்டது. "ஆ! இதென்ன! எவ்வளவு நெய் குடிக்கிறதம்மா!"
என்று சொல்லிச் சற்றுப் பெருமூச்செறிந்து, "தனம்! நீ இங்கேயே இரு.
நெய்ச்சட்டி கிட்டப் போகாதே. யானை வரும்மல் பார்த்துக்கொள். நான்
பரிபூரணத்தம்மாள் வீட்டுக்குப் போய் நெய் வாங்கி வருகிறேன்!"
என்று சொல்லிவிட்டு ஒரு ஜாடியைக் கையிலெடுத்துக்கொண்டு சமையல்
லறையை விட்டு அகன்றாள் தமக்கை. அவள் திரும்பி வருவதற்குள் தனம்
ஆழாக்கெண்ணெய்ப் புட்டியை எடுத்து, அதிலிருந்த எண்ணெய் முழுவ
தையும் காய்ந்துகொண்டிருந்த நெய்ச்சட்டியில் வார்த்து, எதெட்டுப் பச்
சைப்பூரியை அதிலிட்டுக்கல்லிக்காண்டியால் (கண்அகப்பை) அவைகளைப்
புரட்டிக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஆண்டாள் அம்மான் ஜாடியில் நெய்
வாங்கிக்கொண்டு "என்னடி தனம்! என்ன சேஷ்டை செய்கிறாய்?" என்று
கூவிக்கொண்டே வந்தாள். தனலக்ஷ்மி நடுநடுங்கியவாறு சட்டெனச் சல்
லிக்கரண்டியைக் கீழே உமியின்மேல் எறிந்துவிட்டு அஞ்சிஒதுங்கிநின்றாள்.
சட்டியில் நெய் அதிகரித்திருப்பதையும் பக்கத்தில் விளக்கெண்ணெய்புட்டி
வெறுமையாய்க் கிடப்பதையும் பார்த்தாள் தமக்கை. உடனே தன் தங்கை
யின் சாமர்த்தியத்தை உணர்ந்துகொண்டாள். "அடி அவலக்ஷணமே! உன்
னையும் ஒரு ஜன்மமாய்ப் பிரம்மன் படைத்தானே! நீ நாசமாய்ப் போக!
என்ன வேலை செய்துவிட்டாயடி!" என்று ஆசீர்வதித்துக்கொண்டே
தன்தலையின் மூன்றில் ஐந்தாறு தோசைகள் கொடுத்து அவள் அழகிய கன்
னங்களையும் சிவக்கக் கிள்ளி அவளை அடுப்பங்கரையிலிருந்து பிரவ்டப்படு
திவிட்டாள். "நான் என்ன செய்துவிட்டேன்! சட்டியில் இருந்த நெய்யை
எடுத்து அக்காளுப்பேரில் பூரி சுட்டேன். இதற்கு என்னடி இப்படி என்னை
அடித்துக் கிள்ளவேண்டும்" என்று மனத்தில் எண்ணித் தாரை தாரையாய்க்
கண்ணீர் வடித்து அழுதாள் தனம்.

ஆண்டாளம்மாள் சட்டியிலிருந்த நெய் விளக்கெண்ணெய் கலப்பை
விளக்கெரிக்க உபயோகிப்பதற்காக இரண்டு மூன்று புட்டிகளில் வார்த்துப்
பத்தனப்படுத்திவிட்டு இருப்புச்சட்டியை நன்றாய்ச் சுத்தம் செய்து, பின்பூரி
சுட்டு முடித்ததைப்பற்றி அதிகமாய் விவரிப்பது அவசியமில்லை. சாயங்
காலம் சுமார் ஆறுமணிக்கு ராகவன் உத்தியோகத்திலிருந்து திரும்பி வீட்
டுக்கு வந்தான். தனம் அழுதழுது சோர்ந்து ஓர் சாய்வு நாற்காலியின்மீது

தூங்கிக்கொண்டிருந்தாள். "தனலக்ஷ்மி! தனலக்ஷ்மி!" என்று அழைத்துக்
கொண்டே ராகவன் தன் கையால் அவளை அசைத்து எழுப்பினான். தனமும்
விழித்தெழுந்தாள். தன் அண்ணனைக் கண்டாள், அவள் கண்களிலிருந்து ஜலம்
பொங்கிவிட்டது. "அக்கா என்னை கிட்டினு, அடிச்சா, கிள்ளினு—" என்று
என்னென்னவோ முறையிட்டு அழ ஆரம்பித்தாள். இம்முறையிட்டைக்
கேட்டு ராகவன் "ஆண்டாள்! ஆண்டாள்! ஆண்டாள்!" எனத் தன் தங்கை
யை அழைத்தான். செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு
வேறு என்னவோ வீண் வேலைகளைச் செய்துகொண்டிருந்த ஆண்டாள்
அம்மாள் உடனே முன்கட்டுக்கு வந்தாள். தனம் நாற்காலியிலிருந்து அழு
வதையும் கண்டாள். "நீ தனத்தைக் கிள்ளினாயாம், அடித்தாயாம், கிட்டி
னாயாம், என் இவ்வளவு கோஷ்டங்கள் செய்தாய்?" என்று சிரித்துக்கொ
ண்டே வினவினான் ராகவன்.

ஆண்டாள்:—ஐயோ அண்ணு! நீதான் அவளுக்குச் செல்லங் கொடு
த்து அபியாயமாய்க் கெடுத்துவிடுகிறாய். அவள் செய்த அக்கிரமத்தையும்
அழிம்பையும் நீ கேட்க வேண்டுமே! என்னவாய் எரிகிறதி தெரியு
மா?

ராகவன்:—அப்படியே என்ன விபரீதச்செயல் தனம் கொட்டிவிட்
டாள்.

ஆண்டாள்:—என்ன விபரீதச்செயலுக் கொட்டினாளா! அதைத்தான்
சொல்லுகிறேன் கேள், காண்பதற்கியலாத பூரிகளைப் பாழாக்கிக்கொண்டிருந்தேன்.
நெய் போதாமையினாலே இன்னும் கொஞ்சம் நெய் வாங்கிவருவதற்
காகப் பரிபூரணத்தம்மாள் வீட்டுக்குப் போனேன். போய்த்திரும்பிவருவ
தற்குள் இவளுக்கு என்ன செய்தாள் தெரியுமா! ஒரு மூலையிலிருந்த
விளக்கெண்ணெய்ப் பாட்டிலை எடுத்து அதிலிருந்த எண்ணெயெல்லாம்
வாணலியில் (இருப்புச் சட்டி) வார்த்துப் பத்துப் பதினைந்து பூரிகளையும்
அதிலே போட்டு நாசம் செய்தால் எவன்தான் சகிப்பான்! காலடி நெய்க்கு
மேல் பாழாய்ப் போச்சு.

ராகவன் தனலக்ஷ்மியைச் சோபத்தோடு பார்த்தான். "இறங்கு கீழே"
என்று உரக்கக் கூறினான். தனத்தின் அழுகை நின்றுவிட்டது. நாற்காலி
யிலிருந்து மெதுவாய் இறங்கி நடுநடுங்கிக்கொண்டே நின்றாள்.

ராகவன்:—ஏன் அப்படிச் சேஷ்டை செய்தாய்?

தனலக்ஷ்மி:—நான் பாட்டிலிலே நெய்யிருக்கிறது நினைத்தேன்.

ராகவன்:—பாட்டிலிலே நெய்தான் இருந்தாலும் அச்சாரிக்கேட்கா
மல் நீ இப்படியெல்லாம் செய்யலாமா! நீ நல்ல பெண் என்றல்லவோ நினைத்
தேன். நீ இவ்வளவு குறும்புக்காரக் குழந்தையா! இன்றைக்கு உன்னைச்
சும்மா விடுவதில்லை. உன்னைக் கரைக்கு அழைத்துக்கொண்டு போகமாட்டேன்.

இம்மொழியைக் கேட்டதும் தனம் முன்னிலும் அதிகமாக எங்கி எங்கி அழுதாள்.

ஆண்டான்:—நீ சமுத்திரக்கரைக்கு அழைத்துப் போகாவிட்டால் அவளுடைய குறும்பும் அட்டமும் அடங்கிவிடுமா? இப்போது ஒழுங்காய்த்தான் அழுவாள். காலைக்குப் பழையபடி அதுமாராய் விடுவாள். இந்தப் பிடாரியை அடக்க எனக்கு ஒரே ஒரு யுக்திதான் தோன்றுகிறது.

நாகவன்:—அது என்ன யுக்தியம்மா? சொல்லு கேட்போம்.

ஆண்டான்:—இவளை இந்த வயதிலேயே ஒருவனுக்குக் கலியாணம் செய்து இந்த வயதிலேயே மாமியார் வீட்டுக்கு அனுப்பினால் அப்பொழுதான் இவள் மதம் ஒடுங்கும்.

நாகவன்:—போதுமம்மா போதும். உன் யுக்தியை அதசரித்துவிட்டால் உலகமெல்லாம் தலைகீழாய் வாழ்த்துமே. ஒரு பேதைக் குழந்தை சேஷ்டை செய்தால் அதற்குக் கலியாணமா செய்து வைக்கவேண்டும்! ஹா! எவ்வளவு சிறந்த யோசனை! என் அதைவிட அதைக் கட்டையிலே வைக்கவேண்டுமென்று என் யுக்தி சொல்லக்கூடாது! அப்படிச்செய்துவிட்டால் அக் குழந்தையின் மதமெல்லாம் ஒரே முழையாய் ஒழிந்துவிடும்.

ஆண்டான்:—சீச்சி! என்ன பேச்சுப் பேசுகிறாய் அண்ணு! உன் வாயில் வருவதெல்லாம் அலட்சியமும் அசபமுமாகத்தான்.

நாகவன்:—நீ சொன்னது மாத்திரம் லக்ஷணமும் சுபமும் நிறைந்த வார்த்தைகளோ?

ஆண்டான்:—ஆ! அதற்குத் தடையா! கலியாணத்தைப்போல் லக்ஷண மான காரியம் சுபமான காரியம் வேறு என்ன இருக்கிறது!

(தொடரும்.)

பெண்மை நல நாடி.

ரசிகை.

ஓர் நவீன தமிழ் நாடகம்.

(98—ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 1, காட்சி 4: (கூடிய சீக்கிரத்தில் இந்நாடகக் கதையை முடிக்க வேண்டுமென்றெண்ணிக் கொண்டு இக்காட்சி ஈண்டு விடப்பெற்றது. அதன் சாராம்சமாவது:) கண்ணன் கூஜாவில் நீருடன் தமனைச் சார்ந்து சம்பாஷிக்கின்றனன். தன் அண்ணன் அரசபுத்திரிகளின் பூம்பொழிலிற் சென்று அவர்களைக் கண்டு அபிநயம் புரிகிற விவரங்களை அறிந்த பிறகு, பூஞ்சோலைக்குட் சென்று அரசபுத்திரிகளைக் கண்டமையால் ராஜஸ்திரிகள் அந்தப்புரச் சட்டங்களைப் பற்றி நன்கு விசாரித்து, தான் அவ்விடம் பிரவேசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். பின்பு இருவரும் வீடு செல்லுகிறார்கள்.

அங்கம் 2, காட்சி 1.

[புஷ்பபுரியில் ரமணன் கண்ணன் ஆகிய சகோதரர்களது சயன அறை. அர்த்தராத்திரி. அறையில் ஓர் தீபம் எரிகின்றது. ஒரு அழகிய மஞ்சத்தில் சகோதரிருவரும் சயனித்திருக்கிறார்கள். ரமணன் துயிலுகின்றனன். கண்ணன் துயிலுவதற்கு முயல்கின்றனன். நித்திரை வராமையால் எழுந்து தனக்குட் சொல்லிக்கொள்ளுகின்றனன்:—]

"அண்ணு! உன்னைப்பற்றிய நிந்தனையால் எனக்கு இன்று நித்திரையும் வரவில்லையே! என் நீ இரண்டு தினங்களாக யாவையும் வெறுத்திறவியைப்போலிருக்கிறாய்? வேட்டையாடுவதில் உனக்கிருந்த பிரியம் எங்கே பறந்துபோய்விட்டது? உணவும் சரியாய் உட்கொள்ளுகிறாயில்லை. இந்த அறையைவிட்டு நீ வெளிவருவதும் அபூர்வமாய்விட்டது. என்னுடன் சம்பாஷிப்பதும் உனக்குக் கசப்பாய்விட்டதுபோலிருக்கிறது. இதென்ன உன்னிடம் இவ்வளவு மாறுபாடுகள் ஏற்படும்படி என்ன சம்பவம் நிகழ்ந்துவிட்டது? அன்று நீ பூஞ்சோலைக்குச் சென்ற சமயவந்தானே? பூஞ்சோலையில் அரசபுத்திரிகளையும் வேலிக்கருகே ஒரு விருத்தையையுந்தானே சந்தித்தாய். வேறெருருவரையும் சந்திக்கவில்லையே. அச்சன்னிதிகளிலொருத்தியைக் காதலுற்றனையோ? அடடா! என்ன தகாதவெண்ணம் எண்ணுகிறது! என் அண்ணன் அரசரைத் தந்தையாகக் கருதினவருமுண்டே! அவரிடம் சிறந்த பக்தியுடையவனல்லவா! அவனு அவரது புத்திரியின்பாற் காதலுறுவான்! ஆனால் அண்ணு! அன்று வேட்டைக்குப் போய்த் திரும்பிவந்தது முதற்றானே நீ புதிய ரமணனாய் மாறிவிட்டாய். ஆகையால் ஒருகால் மனதின் வலியால் நீ அரசபுத்திரியிடந்தான் காதலுற்றிருக்கிறாயோ? அல்லாது காதலுற்றிருந்தால், காதலுற்ற கணத்திலிருந்து எப்பொழுதும் நீ உன் காதற்குரிய காரிகையை நினைந்து நினைந்து ஏங்கிக்கொண்டல்லவோ இருக்கவேண்டும். அவ்வாறின்றி நீ எப்பொழுதும் அறையிலிருந்து வைராக்கிய சதகம், பட்டினத்தடிகள் பாடல், தாயுமானவர் பாடல் முதலிய ஞான நூல்களையே வாசித்துக் கொண்டிருக்கிறாயே. காதலினால் உருகுவான் இந்த நூல்களையா வாசிப்பான்! ஆகையால் அண்ணு! காதலினால் நீ வருந்தவில்லை. யாரோ ஒரு மகரன் நீ துறவறத்தை அனுசரிக்கும்படி உனக்குப் போதித்துவிட்டார் போலிருக்கிறது. ஆதலால் நான்

நியாமல் எந்த மகான் உனக்குத் தரிசனை மளித்தார்? நான் நான் எப்பொ
ழுதும் உன்னோடிருக்கிறேனே. நீ மாலைத் தொடங்தோடியபொழுதும்
அரச புத்திரிகளையும் விருத்தையையும் நீ கண்டபொழுதுந்தான் உன்
னைப் பிரிந்திருந்தேன். மாலைத்தரத்தி ஓடியபொழுது ஒரு மகானைக்கண்
டாயோ? கண்டிருந்தால் எனக்குச் சொல்லாதிராயே. அந்த விருத்தை
தான் உன் மனத்தை மாற்றி விட்டாளோ? சீ! "கள்ளியொழுக்கும் எழைக்
கிழவி" என்றல்லவோ நீ அவளைப்பற்றிப் பேசினாய். அந்தக் கிழவிக்கு
என்ன தெரியும்? ஒருகால் அரசபுத்திரிகள் சிறந்த ஞானிகளோ! அவர்கள்
தான் உலகப்பற்றை ஒழிக்கும் ஞானத்தை என் சகோதரனுக்கு உபதேசி
த்து விட்டார்களோ?

நான் என்னென்ன வீண் எண்ணங்கள் எண்ணுகிறேன். அந்தப்
புரத்திலிருக்கும் பேதைப் பெண்களாவது! சிறந்த ஞானிகளா யிருப்ப
தாவது! எனக் கொன்றும் தோன்றவில்லையே! அண்ணா! அண்ணா! (அண்
ணன் கன்னத்தை முத்தமிடுகின்றான்.) நீ பிழைத்தபுடன் எவ்வாறேனும்
உன் வாயால் உண்மை யனைத்தையும் அறிந்துகொள்வேன். அம்மணி! சா
ஸ்வதி! லோகநாயகி! பங்கஜவல்லி? உன்னையே நம்புகின்றேன். என் அண்
ணன் எதிலும் பற்றற்றிருப்பதின் காரணத்தை எனக்கறிவிப்பாய்." (கண்
களை மூடிக்கொண்டு தேவியை தியானிக்கின்றான்.)

[சிலநிமிஷங்களில் ரமணன் நித்திரையில் பிதற்றுகின்றான்.]

"வசிகரி! வசிகரி! நான் என்ன செய்வேன்! சரஸ்வதியம்மையோ
லவோ உன்னை என் காட்சிக்கு அளித்தாள்!"

கண்ணன் கண்விழித்துத் தன் சகோதரன் முகத்தை உற்று நோக்கிக்
கொண்டு "அண்ணா! அண்ணா! அண்ணா!" என அழைக்கின்றான்.

ரமணன்:—என்ன வசிகரி! நான் உனக்கு அண்ணனா?

[கண்ணன் "அண்ணா! அண்ணா!" என அழைத்துக்கொண்டே அண்
ணன் சரீரத்தை அனைத்து அவனை எழுப்புகின்றான். ரமணன் பதறி விழி
க்கின்றான்.]

கண்ணன்:—என்ன அண்ணா, சாதாரண தேவி வசிகரியை உன் காட்சிக்கு
அளித்தால் என்ன?

[முறுவலுற்ற முகத்துடன் எழுந்துட்காருகின்றான் ரமணன்.]

ரமணன்.—என்ன கண்ணா! நான் என்னென்ன வார்த்தைகளைப்
பிதற்றினேன்?

கண்ணன்:—"வசிகரி! வசிகரி! நான் என்னசெய்வேன்! சரஸ்வதி
யன்னையல்லவோ உன்னை என் காட்சிக் கனுப்பினாள்" என்று சொன்னாய்.
நான் "அண்ணா! அண்ணா!" என்றழைத்து உன்னை எழுப்பினேன். அந்த

ற்கு நீ "என்ன வசிகரி! நான் உனக்கு அண்ணனா?" என்றனை.

ரமணன்:—இந்த வார்த்தைகளைத்தானே பிதற்றினேன்? வேறென்
றுஞ்சொல்லவில்லையே?

கண்ணன்:—வேறென்றுஞ் சொல்லவில்லை. என்ன கனவுகண்டு அப்
படிப் பிதற்றினாயண்ணா?

ரமணன்:—உன் கண்கள் சிவந்திருக்கின்றனவே. நீ படுக்கைக்கு வந்த
தழுதல் தூங்கவேயில்லையோ?

கண்ணன்:—ஆம் அண்ணா! நான் தூங்கவேயில்லை. நீ என்ன கனவு
கண்டாய்? சொல்.

ரமணன்:—அர்த்த ராத்திரியில் விழித்துக்கொண்டு கனவுகளைப்பற்றி
வீண்பேச்சுக்கள் பேசி என் நமது நித்திரையைப் பங்கப்படுத்த வேண்டும்.
அம்மணியைத் தியானித்துக்கொண்டே தூங்கலாம், படு.

கண்ணன்:—உன் ரகசியத்தை நான் முற்றும் அறிந்து கொள்வதற்கு
முன் நான் தூங்கவே மாட்டேனென்று சற்றுநேரத்திற்கு முன்புதான்
நான் பிரதிக்கினை செய்துகொண்டேன்.

ரமணன்:—என் ரகசியமா! என்ன ரகசியம்?

கண்ணன்:—என்ன ரகசியமென்று எனக்குத் தெரிந்திருந்தால்
என் பிரதிக்கினைப்பிரகாரம் நான் நித்திரை செய்வேனே.

[ரமணன், பித்தம் பிடித்தவனைப்போல் சற்றுநேரம், தன் பார்வையை
நாற்புறமும் செலுத்தி விழிக்கின்றான். பின்பு தலையணைமீது சாய்ந்து
கண்களை மூடிக்கொள்ளுகின்றான்.]

ரமணன்:—கண்ணா! எனக்கு மயக்கமாயிருக்கிறது. நான் தூங்கவேண்
டும்.

கண்ணன்:—(அண்ணனைத்தழுவி முத்தமிடுகின்றான்) அண்ணா! உன்
ரகசியத்தை எனக்குச் சொல்லுவதில் உனக்கு என்ன லஜ்ஜை? நான் உன்
உயிர்ச் சகோதரனல்லவா?

[ரமணன் நித்திரையிலோ அல்லது ஒரு மயக்கத்திலோ இருந்தால்
பதிற்பேசவில்லை.]

கண்ணன்:—அண்ணா! அண்ணா! அண்ணா! அண்ணா!

[உத்தரமேயில்லை.]

கண்ணன்:—இதென்னமயக்கம்! சாதாரண தூக்கமயக்கமோ! காதல்
மயக்கமோ! அல்லது ஞானிகளின் யோகமயக்கமோ! தூக்கமாயிராது.
கணப்பொழுதிலா தூக்கம் வந்துவிடும்! என்ன மயக்க மிருந்த
போதிலும், அதை நீக்கி என் அண்ணன் சித்தத்தைத் தெளிவிக்கவேண்டும்.

[மஞ்சத்திலிருந்து இழிந்து சென்று ஒரு மேஜையின்மீதிருந்த பன்
னீர்ப் பாத்திரத்தை எடுத்துவந்து மீண்டும் மஞ்சத்திலேறித் தன் அண்ணன்

முகத்திற் பன்னீர் தெளித்துக்கொண்டே "அண்ணே! அண்ணே! அண்ணே!" என்றழைத்துக்கொண்டிருந்தான்.)

ரமணன்:—(கண்விழித்து) என்ன கண்ணே என்னை இத்தனை தொல்லைப்படுத்துகின்றாய்?

கண்ணன்:—அண்ணே! நான் உனக்குத் தீங்கோ வேறும் நினைப்பேனா? நீ தலையணையில் சாய்ந்தவுடனே பிரஞ்ஞையற்றிருந்தாயாகையால், நீ தூங்கவில்லை என்னவோ ஒரு மயக்கத்திலிருக்கிறாய் என்றெண்ணி உன் முகத்திற் பன்னீர் தெளித்து உனக்குப் பிரஞ்ஞை வரச் செய்தேன். அண்ணே! உன் சித்தம் இப்பொழுது ஒரு அசாதாரண நிலைமையடைந்திருக்கிறது. அந்தக் கலனம் நீங்கி உன் சித்தம் தெளிவடையும் பொருட்டு, எழுந்துட்கார். சற்றுநேரம் பேசிக்கொண்டிருப்போம். (தன் கரங்களால் ரமணன் சிரத்தையும் சரீரத்தையும் நிமிர்த்தி அவனை உட்கார்ச் செய்கின்றான்.)

இந்தப் பன்னீரினால் உன் கண்களைச் சுத்தம் செய்துகொள். (பன்னீர்ப்பாத்திரத்தைக் கொடுக்கின்றான். ரமணனும் அப்படியே தன் கண்களைச் சுத்தம் செய்துகொள்ளுகின்றான்.) இப்பொழுது உனக்கு ஒரு மயக்கமுமில்லையே.

ரமணன்:—இல்லை.

கண்ணன்:—என்னண்ணே! நீ புதிய அண்ணனாக மாறிவிட்டாயா? சொல்லு, சொல்லு. இரண்டு நாளாக நீ இருக்கும் நிலைமைப்பற்றி நினைத்து நினைத்து நான் எவ்வளவோ வேதனைப்பட்டேன். என்னவோ ஒரு விஷயத்தைப்பற்றிய சிந்தனையில் நீ ஆழ்ந்திருக்கிறாய். அந்த விஷயமின்னதென்று நீ சொல்லுகிறவரையில் நான் உணவையும் உறக்கத்தையும் ஒழித்து வருந்துவேன். (கண்களிலிருந்து ஜலம்பொங்கி வழிகின்றது.) என்னண்ணே உன் ரகசியத்தை எனக்குச் சொல்லக் கூடாதா? நீ என்னை வெறுக்கிறாயா? ஆ! என் சொந்தக் கண்ணனோடும் தெலுக்குச்சியமான சம்மைப்பற்றி உனக்கு மனத்திற் புருத்தி? (ரமணன் விழிகளிலும் நீர் பொங்குகின்றது.) அண்ணே? உன்னுடைய இரகசியத்தையும் என்னுடைய இரகசியத்தையும் நாடிச்சொல்லுகிறேன். நான் எப்பொழுதும் உனக்கினிய உன் சொந்த உயிர்ச்சகோதரன். உன்னுடைய வனக்குச் தெரியாதது எனக்குமட்டுமென்ன தெரியப்போகிறது? சொல்லு அண்ணே? சொல்! என்ன ரகசியம்? சொல்லு சொல்லு. நமது அகப்புறத் தொடர்புகளைக் காதலிக்கின்றாயோ? அதைப்பற்றி—

ரமணன்:—(முகஞ்சிவக்க இதழ்களைக் கடித்து) போடா! வெகுநாயகி! நான் முன்னாலேயே உன்னிடம் சொல்லிவிட்டேனே—கண்ணா! ஆமாம் அது தானே? நீ சொல்லுவது அதுதானே? உன் உள்ளத்திலிருக்கும் அகத் ரகசியம்.

கண்ணன்:—இந்த ரகசியத்தைத்தானே எனக்குச் சொல்லாமலிருந்தாயண்ணே?

ரமணன்:—என்ன! அந்த ரகசியத்தைப்பற்றி அவ்வளவு அலட்சியமாய்ப் பேசுகிறாயே.

கண்ணன்:—நான் அலட்சியமாய்ப் பேசவில்லை. இந்த ரகசியத்தை எனக்குத் தெரிவிப்பதில் பாதக மொன்றுமில்லையென்றுதான் கருதினேன்.

ரமணன்:—எனக்குச் சற்றும் தகாத இந்த ரகசியத்தைச் சொல்வது உன் பரிசுத்தமான மனத்திற்கு மிருந்த வற்புறுத்தியும் தருமென்றெண்ணித்தான், நான் உனக்குச் சொல்லாதிருந்தேன். ஆனால் யாவும் சாதாதேவியின் செயல்கள். அந்த அம்மணி உன்முன் என்னைக் கணவித் பிதற்றச்செய்து, என் பாவமயமான ரகசியத்தை உனக்குத் தெரிவித்துவிட்டாள்.

கண்ணன்:—"பாவமயமான ரகசியம், எனக்குச் சிறிதும் சாதக ரகசியம்" என்று என் சொல்லுகிறாயண்ணே?

ரமணன்:—நான் அரசாது பிரஜைகளிலொருவன். நம்து அரசபுத்திரிகள் ஒருகாலத்தில் நமக்கு அரசிகளாதற் குரியவர்கள். ஆதலையால் அவர்கள் நமக்கு அன்னைகள். அன்னைபாற் செலுத்தும் பக்தியைத் தவிர்த்து காதல் என்ற இளர்ச்சி அவர்கள்பால் என் மனத்தில் இருப்பது தகுமா? அது பாவமயமான இளர்ச்சியல்லவா?

கண்ணன்:—அது பாவக் இளர்ச்சியாயிருந்தால், அந்தப்புரச் சட்டங்களில் ஒன்றையேனும் பலவற்றையேனும் நீ மீறினவனல்லவா?

ரமணன்:—ஆமாம் மீறினவன்தான்.

கண்ணன்:—அப்படியானால், அன்று நான் கூஜாவில் நண்பரீரொணர்ந்தபொழுது, அரசமங்கையர் அந்தப்புரச் சட்டங்களினால் கண்டிக்கத்தகுந்த யாதொரு எண்ணமும் நீ என்னிலில்லை யென்று சொன்னாயே?

ரமணன்—ஆமாம் சொன்னேன். என் மனத்துக்கிளர்ச்சி கள்ளமானது என்று அப்பொழுது எனக்குத் தோற்றவில்லை. அரசபுத்திரிகளை முதன்முதல் நான் பார்த்தவுடன் வசீகரியின் முகத்தில் அற்புதமான தேஜஸும் சௌந்தரியமும் பிரகாசித்ததாக உணர்ந்தேன். அப்பொழுது மூர்ச்சித்து வீழ்ந்தேன். பின்பு மூர்ச்சையினின்றும் தெழுந்தேன். மீண்டும் வசீகரியின் முகத்தைப் பார்த்தேன். அவள் மன்னுலகப் பெண்ணுலகமே தோற்றவில்லை. தெய்வத்தன்மை வாய்ந்த யுவதியாக என் கண்முன் தோன்றினாள். நான் என்றும் மறியாத ஓர் பேரானந்த பரவசம் என் மனத்தில் வியாபித்தது. அந்தப்பரவசம் நமதுதேசத்தின் உயிராய்விளங்கும் நம்து அரசரின் அதிசயப்

பிரமை கொண்ட புத்திரியைத்தரிசித்தவுடன் என்னுள்ளத்திலுள்ளராஜபக்திப் பெருக்கால் எழுந்த பாவசம் என்றெண்ணினேன். அவ்வாறு எண்ணித்தான் நான், அந்தப்புரச் சட்டங்களிலுல் தண்டிக்கத் தகுந்த யாதொரு எண்ணமும் எண்ணவில்லையென்று தீர்மானமாக அப்பொழுது சொன்னேன். ஆனால் அன்றிரவு வீட்டுக்கு வந்தபின் சற்றுநேரம் தனிமையிலிருந்த பொழுது, நான் பூஞ்சோலைக்குச் சென்றதையும் அரசபுத்திரிகளைக் கண்டதையும் அமிர்தம் பருகினதையும் பற்றி விழித்துக்கொண்டே ஒரு கனவு கண்டேன். அப்பொழுது முதல் என் சித்தம் ஒரு பெரிய மாறுபாடுற்றுவிட்டது. எப்பொழுதும் வசிகரி என் முன் நிற்பதுபோல் ஒரு பிரமை நிலைத்திருக்கிறது. அவள் முகத்தின் காந்தியும்! கண்களின் மருட்சியும்! மற்றும் அநேக விஷயங்களோப் பற்றிய சிந்தனைகள் என் சித்தத்திற் சுழன்று சுழன்று மற்ற எதையும் மறக்கச் செய்துவிட்டன. வசிகரி மூன்பு என் மனத்தில் உண்டான பாவசம், என் இருதயத்தில் இயற்கையாகவே உள்ள ராஜபக்தியால் உண்டானதல்ல, அந்த இருதயத்தில் புதிதாய் எழுந்த காதல் என்ற இளர்ச்சியால் உதித்தது, என்று அப்பொழுதுதான் அறிந்தேன். நான் அன்னையாகக் கருதவேண்டிய அரச புத்திரியின்பால் காதலுற்றது எவ்வளவு பாதகம் என்பதையும் உணர்ந்தேன். ஆகையால் அந்தக் காதல் என்ற தகாத இளர்ச்சியை என் அகத்திலிருந்து அகற்ற இயன்றவரை முயல்கின்றேன். இன்னும் முயல்கின்றேன். ஆனால் வசிகரி இன்னும் என் கண் முன் ஒளிர்கின்றாள். வைராக்கிய சதகம், பட்டினத்தார் பாடல் முதலிய ஞான நூற்களில் பெண்ணுசையை இழித்துப் பேசுகின்ற பாகங்களோ வாசித்தால் என் உள்ளக்கிளர்ச்சி ஒழிந்துவிடும் என்றெண்ணி அவைகளோ விருப்பத்தோடு வாசித்தேன். ஆனால் அந்நூற்கள் கேவலம் புலன்களால் அநுபவிக்கும் போகங்களின் இழிவையும், நிலையற்ற தன்மைகளையும் நீங்குகளோயும் பற்றி எடுத்துத் தெளிவாய்ச்சொல்லி அப்போகங்களோ ஆசிக்கும் காமம் என்ற கசட்டுக் கிளர்ச்சியை ஒழிக்கத் தகுந்த சக்தியுடையனவே யன்றி என் உள்ளத்தில் நிரம்பியுள்ள காதலை எரித்துவிடக் கூடவில்லை. நான் என்ன செய்வேன்! அதி உன்னத பதவியுடைய அரச கன்னிகையின்பாற் கொண்ட என் பாதகக் காதலை அழிக்கும்படி நமது சமயோசித சஞ்சீவியாகிய ஸ்ரீ சரஸ்வதி யன்னையைத் தியானித்தேன். ஆனால் தியானத்தின் போதும் வசிகரியின் சித்திரம் என் சித்தத்தினின்று நீங்கினவாறில்லை. நமது அன்னையும் இவ்விஷயத்தில் எனக்கு அருள் செய்யவில்லை. நான் அத்தேவியை உருக்கமாகத் தியானிக்கும் சந்தர்ப்பங்களிலும் எனது புதிய இளர்ச்சி போர்த்துக் கொண்டதே போலும். ஐயோ! வசிகரி! வசிகரி! வசிகரி! ஏன் இப்படி என்னைப் பாதக னாக்குகின்றாய்! என் செய்வேன்! என் செய்

வேன்! கண்ணே! நான் என் செய்வேன்! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே.

கண்ணன்:— சற்றுப் பொறு அண்ணே! இன்னது செய்வதென்று சொல்லுகிறேன். ஆனால் ஒரு சங்கேதத்தை மாத்திரம் கிரகித்திசெய். காமம் என்றால் என்ன? காதல் என்றால் என்ன? பக்தி என்றால் என்ன?

(தொடரும்.)

பத்திரார்திபர்.

கடலும் கதிர் மதியும்.

வசிக்தகால நிலவில் கடலைக் கண்டு செய்த

ஓர் புதிய வர்ணனை.

கடலே! கடலே! கண்மணி கடலே!
உடல்புள கிகழுற் உவந்திடு கடலே!
துய்யவன் ஜானகி துய்ய உலகவர்
மெய்ப்பன் ராகவன் மெய்கிரக் கடலே!
திய புகழொளி நிலவிடி குரிசில்
சத்ய வாகினலும் சற்குண த்தான்பால்
சாவித்ரி யனும்பெயர் சார்ந்திடு காரிகை
ஆனியை அகற்றிடும் யமனை வென்றான்
செந்நிசாற் கிள்ளோரின் செம்மிகழ் கங்கையின்
செஞ்சமும் தெய்வகாவ் கேந்திரா ருன்கொளும்
காதலின் ஆழம் கணித்த ஆழமார்
நீதமு நிதனத் தெள்ளிர்க் கடலே!
அன்னைதன் மடியில் அன்பாய் அனைத்திடப்
புன்னகை பொலிவுறு பொற்பின் பூட்டனன்
வலம்புரிச் சங்கின் வண்ணச் சுழித்தினை
அலங்கரித் திலங்கும் ஆபர ணத்தினை
ஆதர வாய்செவ் வண்கைகளிற் பற்றிய
கோதறு கருவிழிக் குழந்தையை விளித்துப்
பாலா தூங்கெனப் பரிவுடன் பாடிக்
காலாட் டுதலைக் கண்குளிர் சிகர்ந்தனன்
அகத்தில் நிலைத்த ஆழுத் அமைதியும்
அகற்றியவ் வகத்திற் கமைதினை அளித்து

ஒன்றிய கழிநீ ருலகையும் உத்வீ
ரன்றும் இணையிலா வகவின் குரலில்
எண்ணிய இசைபல வய்ந்திடு யாழின்
பண்ணினைப் பழித்துப் பாடுங் கடலே!

உளத்தினைக் கொள்ளைகொள் உன்னருங்காதலி
இளந்தளிர் நங்கையை இங்கிலத் தொருவரும்
உணர்ந்திலர் எனநீ உணரினும் யானவ
வணங்கினை அறிவேன் அறிவேன் அறிவேன்.
அன்னவள் எவளெனில் அறைகுவேன் காலால்,
தன்னிக ரில்லாத் தன்னெழில் பரப்பி
விண்ணிலே எழுமுன் விழைந்துனை அணையும்
வெண்ணிலா மதியென விளம்புறு விபலதான்.
உன்கா தலிசீர் உரைத்திட உரைத்திட
என்பா லன்பினை எய்ந்திடு வாயெனக்
கருதியான் அவள்சீர் கழறுவேன் களிந்து
மருவிய நங்கையை மறந்திடாக் கடலே!

அமிர்தவெண் ணகையும் அமிர்தக் கண்ணையும்
அமிர்த இனிமையும் அணைந்தபே ரணங்கவள்.
உத்தம நங்கையர் ஒன்முக உவமையாய்
முத்தமிழ் வல்லோர் மொழிந்திடு பாண்டினள்.
ஏசபத் திலிதோன் பினனெனப் பேருற்
றேகபத் தினிதோன் பிறந்தில நாட்டவே
தசமுக ராவணன் தசசிரந் துணித்த
தசரத பாலனும் தாய்முலை மறுவாப்
பருவத் தவனகம் புரிந்தெழு காதலால்
மருவி விளையாட மங்கலவெண் மதியை
அன்னப் எடுத்தெனக் களித்தியென் றழுதிட
நன்னிற வானில் நாணிதில் நங்கை.
விரிபூங் குழலார் வெற்பிகல் தோளராம்
பிரிவுறு காதலர் பிரியசத் துருவவள்.
திரியில் தீல தெடுப்படாம் நிகர்த்த

விசும்பிற் பதித்த விலையிலா மணிகளாங்
கணைக்கரு மீன்களும் கருவ மொடுங்கி
வணங்கிக் கரந்திட வானிற் றிகழ்ந்து
வளர்கரு மதகீர் வனதடை மேவிய
இளமுகி லாரும் இளம்பிடி களுடன்
கிளையுறக் கண்டோர் களியுற ஓடும்
விளையாட் டதனில் விருப்புறு பேதை.

வன்னே டலமே! இத்துணைத் தலைவியை
மன்னிய நின்னு மாண்பே மாண்பு!
உரைசெயற் கரிய ஒப்பிலா உயர்ளின்
விரைந்துனை அணைந்தபின் விண்ணிற் செல்ல
கரையிலாக் காதலால் காதலி நோக்கியுன்
திரைகளை உயர்த்துந் திறனினைக் கண்டதால்
அன்னவள் எய்திய ஆகந்த ஒளியால்
மின்னிய தினது மேனியைக் கண்டு
என்னகம் எய்திய இன்பமே இன்பம்!
என்னென் றியம்புவல் என்னென் றியம்புவல்!
ஆஹா! இந்த அற்புதக் காட்சியை
எதாந்த மெனும் என்னுயிர்க் கலைவியே!
கண்டியான் களித்தேன் களிப்பாய் நீயும்
எண்டிசை மாந்தர் எவருமே அளிபா
இணையிலா இன்பம் இனிதெனக் களித்துந்
துணைவியே! துயசொழி துயமெல் லைநீகே!
பாராய் பாராய் பரிவோ டிக்கடல்
நீராய் எழுதலை நெஞ்சமும் நெகிழ்தலை.
அலைகளாம் புயல்கள் அலையுமோர் விதானம்
நிலத்தினை அணைந்து நிலவுதல் நோக்காய்.
வியனுல கணைந்தவல் விசும்பினில் உலவும்
புயலெலும் அலைகளைப் பொற்புறக் கிழித்த
வெண்ணுலை மின்னலின் கண்ணருங் வரிசைகள்
கண்ணுலைந் தகத்தைக் கனிக்கலைக் காணுய்.

கடலே! கடலே! காதலி வெண்மதி
யுடனீ யுற்ற உவகையைக் கண்டு
தனிமை எனுமென் சகோதரி யுடன்யான்
இனிதள வளாவி இன்புற் றிருக்கவவ்
வஞ்சியைப் பிரியா வாழ்வுற்றிருக்க,
அஞ்சுதல் தோன்றுதல் நீங்கி நீயவன்
தனக்கும் உனக்கும் எவர்க்கும் முதல்வன்
மனமும் வாக்கும் மன்னுதற் கரியவன்
அருளுரு வென்றே அவனியான் போற்றினேன்
விருப்பொடவ் வணங்கி விமலனைப் போற்றுவாய்
உன்பா லன்புபான் உற்றிருப் பதுபோல்
என்பால் அன்புகூர் இயைந்தனை யாயின்,
கடலே! கடலே! கண்மணி கடலே!
உடல்புள கிதமுற உவந்திடு கடலே!

கோகிலத் தொனி.

பன்னுட்டு மனிதர்கள்.

இப்பிரபஞ்சியின்கண்ணுள்ள ஜீவராசிகளின் சரீரங்கள் யாவும் பஞ்சபூதங்களின் இயைபினால் ஆனவை. பஞ்சபூதங்களின் பங்கீடானது, பூகோளத்தின் அமைப்பு, சூரியனின் நிலை; சமுத்திரத்தின் அருகாமை, மழைவீழ்ச்சியினளவு, முதலிய விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. இப்பூதங்களில், காற்றில், ஊனை, சூறை முதலியன ஜீவ இம்சைக்கு ஏதுவா யிருக்கின்றன. நெருப்பின் குணத்தை ஆலோசித்தால், சூரிய வெப்பம் அதிகமானால் நிலம் பாலையாக மாறிவிடுகிறதைக் காண்கிறோம். வெப்பம் குறைந்தால் பாசிபடர்ந்தும் பனியால் மூடப்பெற்றதுமான இமயநாடாகிறதையும் அறிகிறோம். தீயினின்றும் வற்படும் ஒளியானது பிரகாசித்தால், செடிகளுக்கு ஜீவாதாரம் பலப்படுகிறது. ஒளி குன்றினால் ஆதாரம் குறைகிறது. நீரின் தேவையைக் கவனிப்போம். நீர் மலிந்தால் நீர்வாழ்வன மலிகின்றன. நீர் சுருங்கினால் மற்றவை சுருங்குகின்றன. மற்றும் பூமியின் வளத்தினாலேயே ஜீவ

ராசிகளின் தொகை கூடுவதும் குறுகுவதும் என்பது சொல்லாமலே எற்படும். ஆகையால் உயிர்வாழ்வன எல்லாம் பூதங்களின் சேட்டைக் குட்பட்டன.

பூதங்களின் திட்டம் சில முகாந்தரத்தைச் சார்ந்துள்ளனவென்றோம். அந்நியமிதங்களில் பூகோளத்தின் அமைப்பே முதன்மையாகும். அவ்வமைப்பினாலேயே சீதோஷ்ணஸ்திதி, மரவினங்கள், விலங்கினங்கள் யாவும் நிர்ணயமாகின்றன.

காட்டின் அமைப்பில் மலை, பீடபூமி, சமவெளி என்ற மூன்றையுமே பிரதானமாகக் கையாளுவார்கள். அம்மூன்றிலும் மலை சார்ந்த விடத்தில் மலைநெல்லும், தினையும் உணவாகவும், புலி சிங்கம், பன்றி, யானை முதலியன விலங்காகவும், தேனழித்தல், கிழங்கு எடுத்தல் கிளைகடிதல் தொழிலாகவு மாகின்றன வென்பர் இலக்கண வல்லோர். சமவெளிகளில், நெல் உணவாகவும், ஆடு மாடுகள் விலங்காகவும், உழுதல், பயிரிடல், களைபறித்தல், நெல்லரிதல், தொழிலாகவு மாகின்றன. பீட பூமிகளில், மலை இயற்கையும், சமவெளி இயற்கையும் கலந்துள்ளன.

சூரியன் கண்ணிலையில், கோடையில் சதபிதத்தும், பாரியில் சற்று விலகியும் இருப்பதால், பல மாறுதல்கள் உண்டாகின்றன. அவற்றை யாவரும் அறிவார்கள். சமுத்திர அருகாமையால் மிதஉஷ்ணஸ்திதி உண்டாகிறது. உள்நாடுகளில் கோடையில் அதி உஷ்ணமும், பாரியில் அதிசீதளமும் நீர்நிலை யின்மையால் விளைகின்றன. மழை வீழ்ச்சியினளவைச் சார்ந்து புற்பூண்டு தானியாதிகளின் விளைவு ஏற்படுகிறது.

மேற்கூறிய காரிய காரணங்களை அனுசரித்தே மானிட வாழ்க்கை தொடருகிறது. இவற்றை விளக்கத் தருவுதாரணம் சற்றியுள்ள பனிநாடு, மிதசீதோஷ்ணப்பிரதேசம், முல்லை நிலம், பாலைவனம், பெருங்காடு முதலிய இடங்களில் மனிதர் வசிக்கும் வகையை விசாரித்து விஷயத்தை முடிப்போம்.

தருவுதாரணம் பனியால் மூடப்பெற்றும் பாசியால் படரப்பெற்றும் உத்தர கடலையும் தக்ஷிண கடலையுந் தழுவி, பரந்து கிடக்கின்றது. நீண்ட மரியும் குறுகின கோடையும் கொண்டு வெம்

கச்டி, நீர்நாய், கலிமான், விலங்காக, வாபன ரூபிகளான எஸ்கிமோ என்பவர்கள் வாழப்பெற்று வினங்கும். எஸ்கிமோக்கள், உரோமம் நீக்கப்பெறுகமிருகச் சருமங்களைப் பேரார்த்து, மச்சங்கள், கலிமானின் பால், அழுகின மாமிசம், சருகுகள் முதலிய வற்றைப் புசிக்து, பனி வண்டியில் ஊர்ந்து, தேச தேசமாய்த் திரிந்து, ஓரிடத்தில் தாமதிக்கும்பொழுது கூடாரங்களில் வசித்துக் காலத்தைப் போக்குகின்றனர்.

மிதசிதோஷ்ணப் பிரதேசங்கள் பாங்கள் அடர்ந்துள்ளன. அங்கு வசிப்பார்கள், மரச்சாமான்கள் திருத்தி செய்தல், விறகு வெட்டுதல், படகு கப்பல் முதலியன கட்டுதல் போன்ற தொழில்களால் ஜீவிக்கிறார்கள். மரங்கள் அழியப்பெற்ற வெளிகளில், ஆகாரத்திற்குப் போதுமான தானிய வர்க்கங்கள் விளையப்பெற்றால் அந்நாட்டார் கைத்தொழில்களை அபிவிருத்தியாக்கிக்கொண்டு பலதேசங்களிலும் படர்ந்து வியாபாரஞ்செய்து லாபம் பெற்று பிழைக்கின்றனர்.

மூல்லை வாசிகள், தழை மேயும் மறி, வெள்ளாடு, மாடு, ஒட்டகம், கழுதை, குதிரை முதலிய மிருகங்களை வளர்த்து அவற்றின் பால் மாமிசம் முதலியவற்றால் ஜீவிக்கிறார்கள். புல்லடர்ந்த காடுகளில் தங்கி, கான்யாறுக ளோரம் கூடாரம் அடித்து, கோடைகாலங்களில் நீர்த்துறையை நோக்கி வடக்காகவும், மாரி காலங்களில் தெற்காகவும் குடி யேறுகிறார்கள். குதிரைச் சவாரியில் தேர்ந்தவர்கள். கூட்டங் கூட்டமாக அன்னியோன்னிய மாய் வாழும் இயல்புடையவர்கள்.

பாலைவனங்கள் அதியுஷ்ணத்தாலும், பனியின்மையாலும் உண்டாகின்றன. மணற் சமுத்திரமென்னலாம். பகலில் சூடு பொறுக்காது; இரவில் குளிர் தாங்காது. பேசக்கூட்டம் ஒருபோழுதும் கிடையாது; கானல் காணப்படும். பாலையை ஒட்டத்தில் ஒன்றிலேயே கடக்கமுடியும். பாலைவனத்திடையிற் செழிப்பான பலவிடங்கள் உண்டு. வர்த்தகர்கள் கூட்டமாகப் பிரயாணமாவார்கள். பேரீச்சம்பழம் உணவாகிறது. பாலைவாசிகள் வழிபறித்து உண்ணுவார்கள்.

பெருங்காடுகள் அதி உஷ்ணத்தாலும் அதிவிருஷ்டியாலும் மரங்கள், அடர்ந்து கொடிகள் படர்ந்து புதர்கள் நிறைந்து பாம்பினங்கள் பறவி ஜாலங்கள், குரங்கு வர்க்கங்கள் நிரம்பப்பெற்று, மானிட வாழ்க்கைக்குப் பயனற்று விளங்குகின்றன. சகனஞ் செய்து காட்டை அழித்தால் மனிதர்கள் விவசாயஞ்செய்து பிழைக்கக்கூடிய தன்மை வாய்கிறது.

ஐரோப்பா காட்டரைப்பு, சிதோஷ்ணம் நிறைந்து, விசேஷபாகுள்ள இவற்றின் ஆட்சிக்கு உட்பட்டு இயலுந் தொழிலைப் புரிந்து உழுகுசென்றார், நூலுசென்றார், பீப்பல வகையால் பண்ணுகிறார்கள் பனிகர்கள் பரீன்றவரைநின்றனர். காயல்து. சகன் திருவடிகளே சரணம்.

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

பாம்பின் சாபம்.

111-ம் பக்கத் தொடர்ச்சி.

சக்கரனுக்கும் பங்கஜாக்ஷிக்கும் தனித்த கல்யாண தினத்திற்கு இருபது நாட்களுக்குமுன் ஒரு தினத்தன்று சங்கரன் சொக்கலிங்க நாகரின் மாளிகையினின்றும் தனது இல்லத்திற்குத் திரும்புகையில் தனது மாடத்தில், உயர்ந்த சோபாவில் மாமனுடைய சொக்கலிங்க நாகருக்கு வெதமதியாக வாங்கி வைத்திருந்த உபந்புகளை அணிந்து ஒருவன் துயில்வதைக்கண்டான். தனது காரியஸ்தர்களில் ஒருவன் குடிமயக்கில் அவ்விதம் செய்தானென்றுவெருண்டு நோக்க, தனக்குப் பரதேசவாசம் கிட்டச்செய்த கிருஷ்ணநாசனைக் கண்டான். காணவும் அரக்கனைக் கண்ட தவசிகள்போலக் கலங்கி அத்தீயோனால் யாது சம்பவிக்குமோ என்று கிலேச மடைந்தான்.

சங்கரன் சமீபிக்கவும், கிருஷ்ணநாசன் கண்ணைத் திறந்து பாய்ந்தோடி அவனைப் பற்றிக்கொண்டான். அண்ணவென்றும், அப்பாவென்றும் ஆக்காவென்றும், பிதற்றிப் பின்னடங்கி, "அண்ணா! உங்கள் மகிமையைக் கேட்காலன்போரு பல தருக்கங்களுக்கும் ஸ்தானனேன். இனி உங்கள் பணிவிடையாளாக என்னை ஆட்கொள்ளவேண்டும். அதைதவிர வேறு காதி" என்று விம்மினான். அதற்குச் சங்கரன் "உனக்கென்ன குறைவு! என்னப்போல ஆயிர மக்களையும் காப்பாற்றலாமே! இங்கு இரண்டொரு தினங்கள் தங்கிப் பிறகு ஊருக்குச் சென்று இனிது வாழலாம். மற்றும் இவ்வகையென்பேசவேண்டும்!" என்றான். கிருஷ்ணன் இதைக்காதிற்போட்டே

கொள்ளாமல் சங்கரனைத் தவிர தனக்கு வேறுகதியில்லை யென்று சாதித்து அவ்விடமே அமர்ந்துவிட்டான்.

* * *

இச்சீக்குணன் வந்த மறு தினமே காதல் திருவருக்கும் அற்ப விஷயத்தில் வேற்றுமை உண்டாகி சச்சரவு பலக்கும் போலாயிற்று. அன்று தொட்டு நாளோலும் ஆயிரம் வழிகளில் சிக்கல்கள் விளைந்தன.

இவ்வகை காட்சியில், ஒரு சமயம் சங்கரன் தூரங்கிக்கொள்ளாமல் தன்னை றைச்சாளரத்தின்வழியே திருஷ்ணதாசன் உறையும் வீட்டைநோக்கினான். பலகணிகள் திறக்கப்பட்டிருந்தன; பலபேர்கள் உள்ளே காணப்பட்டனர். திருஷ்ணதாசன் கற்பிச்சுற்றித் தடித்துக்கொண்டிருந்தான். அதைக்கண்டு ஆச்சரிய முற்று மெத்தவாகக் கீழே யிறங்கி அவ்வீட்டை அணுகி விஷயங்களைக் கவனித்தான். கண்கள் செக்கச் சிவந்த சாயம்போல் சிவந்து வெருள, தேகம் உணர்வு இழந்து தள்ளாட, திருஷ்ணதாசன், தனது எதிரில் படமெடுத்து ஆடிய ஓர் பெரும்பாம்போடு உரைக்கொண்டிருப்பதைக் கண்டான். சங்கரன் நெருங்கவும், அதை நோப்பத்தினுலறிந்த மாசுணப் பாம்பு அவன் தின்ற இரையை நோக்கிப் பட்டத்தால் அடித்தது. உடனே திருஷ்ணதாசன் வெளியே நோக்க, சங்கரனைக்கண்டு "நீ என் ஜற்றுகிறாய்? சீக்கிரம் ஓடிவிடு. இல்லாவிடில் இறப்பது நிண்ணம்!" என்று கலவரமாக மொழிந்தான். அவனது விகார உருவத்தையும் நொளியையும் கண்டு அச்சமயம் அவனை அண்டலாகாதென்று விரைவில் திரும்பிவிட்டான் சங்கரதாசன்.

* * *

மறுபடியும் ஓரிரவு 8-மணிக்கு, சங்கரன் தனக்கு நிகழும் நிடையூறுகளை யெண்ணித் தளர்ந்திருக்குந் தருணத்தில் அவனைக் காணச் சொக்கலிங்க தாசர் வந்தார். வழக்கம்போல் பரிவுடன் பேசாமல், சங்கரனை நோக்கி "இனி நீ என் முகத்தில் விழிக்கலாகாது. இனிமேல் ஒரு மனோவி இருக்கிறாள் என்பதை எனக்குஅறிவிக்காமல் எனது மகளைக் கவரக்கருதினீரே. உமக்கும் எமக்கும் சம்பந்தம் இத்துடன் அற்றுவிட்டது." என்று குமுற, சங்கரன் "விசாரித்துச்செய்யுங்கள். புறப்படுங்கள் வெகுதூரம்: ஆத்திரப்படாதீர்கள்." என்று வற்புறுத்தியும் கேளாமல் கையைத் தினிறிக்கொண்டு தாவிச் சென்றுவிட்டார். சங்கரன் பின்தொடர்ந்து ஓடினான். வாசல் காப்போன் உட்செல்லலாகாதென்று மறித்தான். அவனைச் சங்கரன் தாக்கினான். பல சேவகர்கள் சங்கரனைக் கட்டி அவனை பங்களா முற்றத்தில் கொண்டு தள்ளிவிட்டார்கள்.

* * * *

சங்கரன் எழுந்து உட்சென்றான். முன்னறையில் பெரியதோர் மரப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. கவனிக்கையில் அதைச்சுற்றி பாக்தட்

பாம்பு படுத்திருந்தது. நிமிர்ந்து அதையே உற்றுநோக்கினான். தலையைத் தூக்கி அசைத்தது. மெதுவாய் அவனை அணுகிற்று. கால்களை கோத்து நெருங்கிற்று. சங்கரன் கீழே சாய்ந்தான். கழுத்தைக் கவிந்துகொண்டது. மாசுணத்தின் சருமம் படவும் சங்கரன் உணர்ச்சி மாறிவிட்டது. தைக்கங்களை மறந்தான். ஆனந்தக்கடலில் மூழ்கினான். எழுந்தான்; கொடி கொட்டி, அல்லியம், சடையம் கழற்று என்ற நிருத்த வகைகளினால் ஆடினான். முடிவில் மூர்ச்சித்துக் கீழே சாய்ந்தான்.

* * * *

பொழுது விடிந்தது. உஷ்ணம் ஏற ஏற சங்கரன் மேனி வெளுத்தது. பலங் குன்றியது. உருவம் குறுகிற்று கலிபிடித்தவன் போலானான்.

* * * *

அன்றே திருஷ்ணதாசனுக்கும் பங்கஜாக்ஷிக்கும் கைப்பற்றல், என்று கேள்வியுற்று நின்ற கோலத்துடன் சங்கரன் ஆண்டுச் சென்றான். தம்பதிகளைக் கண்டுகைகுத்தான். தாசரைப் பழித்தான். வேலையாட்களோத்திமிரித்தள்ளித் திரும்பினான். இடைகாடு பாலை, காம்பு முதலிய நிலப்பிரதேசங்களில் திரிந்தான். அன்றிரவு சீக்கிரம் மரணம் கிட்டுமென்று கனக்கண்டான். தனது சரித்திரத்தை எழுதி முடித்தான். அரைப் பிரகாரஞ் செய்யும்பெருட்டு இந்தியாவிற்குப் புறப்பட்டானான்.

* * * *

நான் கதையை முடிக்கவும் வாசற்கதவை ஒருவன் தட்டி "ராமதாசருக்குச் சுகமில்லை என்ற கூவினான். எனக்கு கவனிக்கவேண்டுமென்று இரண்டாயிற்று. வேலைபார் தக்கிலைக் கொளார்த்து கொடுத்தான். விளக்குபினின்றும் வம்வந்திருந்தது "சங்கரதாசர் உண்மைத் தேடி ஓடிவிட்டார். சித்தர் சுவாதீனமில்லை. காவல் செய்யவும். திருஷ்ணதாசன் சொக்கலிங்க தாசரைக் கொன்றுவிட்டு ஆஸ்திகளுடன் சீனாவுக்கு ஓடிவிட்டான். பங்கஜாக்ஷி அனுதை. தாசருடன் புறப்பட்டு வரவும். இப்படிக்கு, சங்கரதாசரின் கணக்கப்பிள்ளை, இதற்குள்மற் றொருவன் கடிதத்தைத் தட்டினான். அவன் முனுபாரி பங்களா காவற்காரன். யாரோ ஒருவர் என்பெயரைச்சொல்லிவிட்டுத்தினமென்ற பக்கமா முற்றத்தில் விழுந்தானென்றும், போய்ப் பார்க்கையில் இறந்து கிடந்தானென்றும் அறிவித்தான். பங்களாவிற்குச் சென்றேன். சங்கரதாசன் மாண்டுகிடந்தான். அவனைச்சுற்றிக்கொண்டு ஒரு பெரும்பாம்பு செத்துக் கிடந்தது. சவக்கிரியைகளுக்காக முனிசிபாலிடிக்கு அறிவித்துவிட்டு வீடி வந்தசேர்ந்தேன். சங்கர தாசரின் மரணத்தை அவர் கணங்குப்பிள்ளைக்குத் தந்திமூலமாக அறிவித்தேன். சிறிது நாட்களில் பங்கஜாக்ஷி அம்மாள் ஸ்திரீகள் சமத்துவ சுதந்திரத்திற்கு உழைக்க எழுதிக்கொடுத்த சங்கதிகளென்றுவிட்டார்களென்று கேள்விப்பட்டேன்.

எனது கண்பன் சரித்திரத்தைத் தூத்துக்குடியில் பிரசுரமாகும் ஓர் சிறந்த மாதப் பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய ஏற்பாடுசெய்துவிட்டு மூன்போல்ப் பொதுநல விஷயமாக உழைக்கலானேன். சுபம் சுபம்.

மங்களாகரன்.

இதைப் படிப்பவர்கள், பாம்பின் தோல் சங்கரனைத் தீண்டவும் அவன் மாறுதலடைந்ததற்குக் காரணத்தை ஆலோசித்துப் பத்திராதிபருக்குக்கடிதம் மூலமாக அறிவிக்கலாம். உண்மையானகாரணத்தை அடுத்த மலையில் பிரசுரிப்போம்.

(தொடரும்.)

மங்களாகரன்

கண்ணம்மாள் கதை.

88-ம் பக்கத் தொடர்ச்சி.

இந்தக் கதையின் ஆரம்பத்தில் சுப்பிரமணியன் என்று ஒரு பெயர் சொன்னேனே, ஞாபகமிருக்கிறதா? ஞாபகமிருந்தால் அந்தச் சுப்பிரமணியன் ஜானகியின் கணவன் என்பதும் உங்களுக்குத் தெரியுமே. அவன் பி.ஏ. பரீட்சையில் தேறினவன். ஆனால் அவ்வூரில் தபாலாபீசில் அவனுக்கு முப்பது ரூபாய் சம்பளம். அவன் மத ஆராய்ச்சியில் விசேஷ ஆர்வங் கொண்டவன். தமிழிலும் ஆங்கிலத்திலும் மத சம்பந்தமான புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்க மாதம் நாலைந்து ரூபாய் செலவுசெய்வான். அச் செலவு அவன் வருமானத்திற்குத்தகாத, அனாவசியச்செலவு என்றுஞானகி அடிக்கடி அவனோடு சண்டைபோடுவது சம்பிரதாயம். அவன் சேகரித்து வைத்திருந்த அநேக புத்தகங்களை ஒவ்வொன்றாகக், கொணர்ந்து கண்ணம்மாளுக்கு ஜானகி கொடுப்பாள். கண்ணம்மாள் கூடலூரில் இருந்த காலத்தில் மத ஆராய்ச்சி சம்பந்தமான பல சந்தேகங்கள் அவளுக்கிருந்தன. ஜானகி வீட்டுப் புத்தகங்களோ அவள் வாசித்து, அவள் அறிவு விசாலிக்க முற்கூறிய அவள் சந்தேகங்களெல்லாம் தீர்ந்து ஒரு தெளிவுற்ற போதமடைந்தனள். முக்கியமாய் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ சுவாமிகள் உபதேசங்கள், பகவத்கீதை ஆகிய இரண்டு நூற்கள் அவள் விசேஷ பிரியத்தையும் விநயத்தையும் கவர்ந்தன. தான் முன்பு ஒருபோதும் கண்டிராத ஒரு தெளிவை, ஒரு விளக்கத்தை, ஒரு திருப்தியை இவ்விரண்டு நூற்களிலும் அடைந்தாள்.

இவ்வாறு ஜானகி வீட்டிலுள்ள அரியபுத்தகங்கள் முதலியவற்றால் கண்ணம்மாள் அறிவும் ஆராய்ச்சியும் அபிவிர்த்தியுற்று வளரவளர அவளுக்கு ஓர் தீர்க்கமான ஞானமும் உண்டாயின. "அகண்டாகாரமான, அநியந்த

மற்றதான, சர்வ சக்தி சார்ந்ததான, ஓர் அற்புத மூலம் சகலவற்றிற்கும் தலைமையாகி ஆட்சி புரிகின்றமை சத்தியம். அச்சத்திய ஆதி மூலமே கடவுள். யாவும் அக்கடவுளின் லீலையாட்டுப்பொருள்கள். கோடானுகோடி நிகழ்ச்சிகளெல்லாம் அவரது லீலையாட்டு. அவரது அகண்டமான, அருள்மயமான, மெய்யான, நன்மை மனத்திற்கு எட்டுவது எவ்வளவு அரிதோ, அதேமாதிரி அரிதே அவர் லீலையாட்டுகளின் சரியான காரணத்தை அறிவது. அத்தகைய அற்புத மூலம் ஆகிற கடவுளை நான் அதி சோபிதமான வெகு கம்பீரமான என் இஷ்ட தேவதை உருவாகக் கொண்டு அத்தேவதையை நான் பக்தி செய்கின்றேன். கூடிய வரையில் சந்ததமும் என் இஷ்ட தேவதையாகிய கடவுளை உள்ளத்தில் தியானித்துக் கொண்டிருந்து கூடியவரை வேறுவித பற்றுக்களையெல்லாம் உள்ளத்திற் றுறந்து, கூடியவரையில் பயனிலாவது விஷயத்திலாவது பற்றற்றுச் சற்கருமங்களைப் புரிந்துகொண்டிருப்பதே என் கடமை. அதுதான் எனக்குப் பிரியமாகும்" என்ற உணர்ச்சி அவள் உள்ளத்தில் உறுதியாக நின்றது.

கண்ணம்மாளது கூடலூர் வாழ்க்கையில் அவள் படும் கஷ்டங்களினால் அவள் சற்றும் மனத்தளர்ச்சி யுறுவதில்லை. அவளுக் கிருந்தது ஒரே சஞ்சலமே. அதுவும் பொதுநலத்தைச் சார்ந்தது. அதாவது:—தமிழ் நாட்டில் பெண்கள் நிலைமை இழிந்ததாகவும் அவசியம் சீர்திருத்த வேண்டியதாயு மிருக்கிறது; ஆனால் இவ்விஷயம் சரியானபடி ஜனங்கள் உணர்ச்சியில் உறைக்கவில்லை; ஆகையால் நிருத்தத்திற்குப் போதிய அவாவுமில்லை, முயற்சியுமில்லை; இந்த அவாவையும் முயற்சியையும் பரவச்செய்து வளர்ப்பதாகிய சற்கருமத்தைத் தன்னால் இயன்றவரையில் புரிவது தனது கடமையாகும்; என்ற சிந்தனை சதா அவளது மனத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. ஆனால் அவள் கணவனோடு வாழும் வாழ்க்கையில் பெண்கள் பெருமைக்காக அவளால் என்ன செய்யமுடியும்? ஒன்றும் முடியவில்லை. அது ஒன்றுதான் அவள் மனத்திலிருந்த சஞ்சலம். மற்றையவாறு அவள் யாதொருவித பற்றுமற்றிருந்தாள். ஆகையால் அவள் இல்லறத்திலிருந்த போதிலும் அவள் ஒரு துறவிப்பெண் என்றே சொல்லலாம். ஆனால் அவள் மனத்தை உறுத்திய சஞ்சலத்தையும் விட்டொழித்து, மனோலயம் முற்றையும் தன் இஷ்ட தேவதைக்கு அர்ப்பணஞ்செய்து சர்வ சாந்தமாய் இருந்தா லென்ன! ஐயோ அவளால் அப்படி யிருக்கக் கூடவில்லை. தமிழ்ப் பெண்களைப் பற்றியும், அவர்கள் நிலைமை, செய்யவேண்டிய திருத்தங்கள் முதலியவற்றைப்பற்றியும் சிந்தனைகள் அவள் சித்தத்தில் நிலைத்துச் சுழன்று கொண்டே யிருக்கின. அவைகளைப் பிரஸ்தாபிக்க அவளால் முடியவில்லை. தெய்வ விருப்பத்தால் அவைகள் அவ்வளவு ஆர்வத்துடன் தன்னிடம் தங்கியுள்ளன என்றும் அவள் நினைத்தாள்.

இவ்வாறு கண்ணம்மாள் தனது ஒரே சஞ்சலத்தினால் நாளுக்குநாள் வாட்டமுற்றனள். அவளுக்கு ஏற்பட்ட இல்லற வாழ்க்கையில் அவளால் பெண் நல முயற்சி ஒன்றும் புரியக்கூடவில்லை யென்றேரும். அப்படிச் சிலகாலம் சென்றது. பின்னர் பெண்கள் பெருமை யடையும் நிமித்தமாய்த் தன் சிந்தையில் தோன்றுன்ன விஷயங்களைத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எழுதலாகாத் துணிந்து நிர்மானித்துவிட்டாள். அப்படியே முதலில் கட்டுரை ஒன்று எழுதினாள். தன் மித்திரி எதிர் வீட்டு ஜானகியை அழைத்து அதனை அவளுக்குக் காண்பித்து, அதை அவளே ஒரு நல்ல பத்திரிகைக்கு அவள் பெயரால் பிரசுரிக்கும்படி செய்ய வேண்டினாள். தான் எழுதாத விஷயத்தைத் தன் பெயரால் பிரசுரத்திற்கு அனுப்ப ஜானகி முதலில் சம்மதிக்கவில்லை. ஆனால் கண்ணம்மாள் என்னென்னவோ எடுத்துச்சொல்லி ஜானகியின் மனத்தை மாற்றி அவளைச் சம்மதிக்கச்செய்து விட்டாள். அவளும் தன் கணவன் அநுமதியும் பெற்று அதனைப் பிரசுரத்திற் கனுப்பிவிட்டாள். இதுமுதல் தொடர்ச்சியாகப் பல பல விஷயங்கள் "ஜானகி" என்றபெயரைப்பழமுன்புத்திரிகைகளில்காணப்பட்டு பத்திரிகை வாசிப்போர் விசேஷ கவனத்தைக் கவர்ந்தன.

அத்தியாயம் 4.

ஜானகியின் கையொப்பத்துடன் கட்டுரைகள் எழுதத் தொடங்கிச் சில மாதங்களாயின. ஒருநாள் மாலை சுமார் 3-மணிக்கு ஜானகி கண்ணம்மாள் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது கண்ணம்மாள் புத்தகத்தை மிகக் கருத்தாக வாசித்துக்கொண்டிருந்தாள். "கற்பூரவல்லி பெண்ணுக்கு என்னவோ ஜ்வரமாம். போய்ப் பார்த்து வரலாம் வா" என்று அழைத்தாள் ஜானகி. "கொஞ்சம் பொறு. இதோ வந்துவிட்டேன்" என்று கண்ணம்மாள் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அதைச் சட்டென அவள் கையினின்றும் பிடுங்கி மூடி "யா கண்ணம்மா போகலாம். நீ வரா விட்டால் உன் ரகசியத்தைச் சொல்லிவிடுவேன்" என்று சிரித்தாள் ஜானகி. வேறொரு பெண் கையிலிருந்து அவள் அப்படிப் புத்தகத்தைப் பிடுங்கியிருந்தால் அப்பெண் பெருங்கோப மடைந்திருப்பாள். கண்ணம்மாள் பொறுமை பூண்டவள். அவள் மனத்தில் எழுந்த ஆத்திரத்தை அக்கணமே அடக்கிவிட்டாள். "இல்லே ஜானகி! நான் படித்துக்கொண்டிருந்த அத்தியாயத்தை மாத்திரம் முடித்துவிட்டு வருகிறேன். கொஞ்சம் பொறு" என்றாள். "நீ படித்துக்கொண்டிருக்கும் பொழுது நான் இஞ்சி தின்ற குரங்குபோல் இங்கே கும்மா உட்கார்ந்திருக்கலா! அப்படியானால் நீ அப்புறம் வா. நான் போகிறேன்" என்று ஜானகி எழுந்து சென்றாள். கண்ணம்மாள் மீண்டும் புத்தகத்தை விரித்தாள். நாலைந்து வரி வாசித்தாள். ஜானகியை

அனுப்பிவிட்டதைப்பற்றி நினைந்தாள். அவள் மனம் இளகி வருந்திற்று. தான் அவசரப்பட்டு அலட்சியமாயிருந்ததாகக் கருதினாள். ஆகையால் புத்தகத்தை மூடிவிட்டு உடனே தெருவிற் கோடினாள். "ஜானகி! ஜானகி! ஜானகி!" என்று கூவினாள். ஜானகியும் திரும்பி வந்தாள். பின்பு இருவருமாகப் புறப்பட்டார்கள்.

கற்பூரவல்லியம்மாள் வீடு. அங்கே கூடத்தில், கற்பூரவல்லியம்மாள், அவள் பெண் காமாட்சி, காலேஜ் உபாத்தியாயர் மனைவி ஜயலக்ஷ்மி, ஒரு ஜவளி வியாபாரி மனைவி நீலாம்பாள் ஆகிய நால்வர் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஜானகியும் கண்ணம்மாளும் வந்தார்கள். "வாருங்கள் வாருங்கள்" என்று காமாட்சியைத் தவிர மூன்று பெண்களும் உபசரித்தார்கள். வந்தவர்களும் பாயின்மீது உட்கார்ந்தார்கள்.

ஜானகி:—காமாக்ஷிக்கு இப்பொழுது சௌக்கியந்தானே.

கற்பூரவல்லி:—இப்போதுதான் காமாக்ஷி சௌக்கியத்தை விசாரிக்க வந்தீர்களோ! உங்கள் புண்ணியத்தில் இரண்டு நாளாய் ஜ்வரம் வரவில்லை.

ஜானகி:—ஐயோ! எனக்குச் சமாசாரமேதெரியாதம்மா. இன்று காலையிலேதான் ராஜம் சொன்னாள். சரி—எப்படியாவது சௌக்கியமாகத்தானே இருக்கவேண்டும். அதைக் கேட்க எனக்குச்சந்தோஷம்.

கண்ணம்மாள்:—எனக்குக்கூட ஜானகி கொஞ்சநேரத்திற்கு முன்பு என்னை இங்கே அழைத்து வருவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்த பிறகுதான் தெரியும்.

நீலாம்பாள்:—இப்போது எனெல்லாம் ஒரு காய்ச்சல் உலாவுகிறது எங்கள் மாமியிருக்கூட தேகம் குளிருகிறது என்று சொன்னார்கள்.

ஜயலக்ஷ்மி:—ஸ்கூல் பெண்கள் செய்கிற அக்கிரமங்களைத் தர்மதேவதையால் சகிக்க முடியவில்லை. என்ன செய்வாள்! காய்ச்சல் வாந்திபேதியையாவது ஆகிய எல்லா தரித்திரங்களையும் அனுப்பி ஜனங்களைத் தண்டிக்கிறாள்.

கண்ணம்மாள்:— என்ன அக்கிரமம்மா பெண்களிடம் பெருத்து விட்டது?

ஜயலக்ஷ்மி:— என்ன அக்கிரமமா! என்ன அக்கிரமந்தான் நடக்கவில்லை! நீங்களே சொல்லுங்கள்.

ஜானகி:—நடக்கிறதில் நாலைந்தை நீங்களே சொல்லுங்களேன். என்னைக் கேட்டால் புருஷர்கள்செய்கிற அக்கிரமங்களில் தாற்பரியொரு பங்கு கூடப் பெண்களிடம் இல்லையென்று சொல்லுவேன்.

நீலாம்பாள்:—அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் ஜானகி யம்மா! நான் அதை ஒப்புக்கொள்ளமாட்டேன்.

கற்பூரவல்லி:—அட, புருஷர்களோ என் இடையில் இழுக்கிறீர்கள்! நாமெல்லோரும் பெண்கள். நாம் பெண்களோப்பற்றி மாத்திரம் பேசுவோம். முதலில் இந்தப் பேச்சை எடுத்தவர்கள் உபாத்தியாயர் வீட்டம்மாள்தான். ஆகையால் (ஜெயலக்ஷ்மியைப் நோக்கி) ஜானகியம்மாள் சொன்னபடி நீங்கள் தான் நாலைந்து அக்கிரமங்களோ அடுக்கடுக்காகச் சொல்லுங்கள்.

ஜெயலக்ஷ்மி:—உங்களுக்கெல்லாம் தெரியாதா! என்னைக் கேட்கிறீர்களே. சரி—நீங்கள் கேட்பதற்காகச் சொல்லுகிறேன். மூன்றும் வருஷம் இந்த ஊரில் ஒரு கொலை நடந்ததே; ஒரு பெண்ணின் ஒழுக்கப்பிசகுதானே அதற்குக் காரணம். அதுதான்போயிற்று. அல்லாமலும் பெண்களுக்கு வரவர அச்சம் மடம் நாணம் என்ற குணங்களே இல்லாமற் போகிறது. கொஞ்சங்கூட லஜ்ஜை யில்லாமல் சாரட்டு வண்டியில் தங்கள் புருஷர்களோடு சரிசமானமாக உட்கார்ந்து கொண்டு போகிறார்கள். மஞ்சள் பூசுவதை மறந்தேவிட்டார்கள். பொட்டு இட்டுக்கொள்வதுகூட அழகல்ல என்று சிலர் நினைக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில் சுமங்கலிகள் எல்லோரும் வெற்று நெற்றியோடும் அமங்கலிகள் எல்லோரும் குங்குமப் பொட்டோடும் துலங்குவார்கள் போலும். புருஷர்கள்தான் தங்கள் நிலைமையைக் கண்டகண்டபடி கத்தரித்துக் கண்டகண்டபடி சுருட்டிச் சீவிக் கொள்ளுகிறார்களென்றால், பெண்கள் தங்கள் கூந்தலை ஒழுங்காக முக்குக்கு நேராக அழகாகச் சரியான உச்சி வகிர்ந்து சீவி ஜடை அல்லது கொண்டை யிட்டுக்கொள்வதை விட்டு, குறுக்கு நெடுக்காகவும் கோணல் கோணலாகவும், என்னென்னவோ மாதிரி, கூந்தலை வகிர்ந்து சீவி என்னென்னவோ மாதிரி முறுக்கித்திருக்கிப் பின்னலிட்டுக் கம்பளி நூல்களையும் மற்றும் என்னவோ தரித்திரங்களையும் ஒட்டிக்கொள்ளுகிறார்கள்.

இருசப்ப செட்டி வீதியில் ஒரு பெண் நெற்றிக்குமேல் கொஞ்சம் கூவரமே செய்துகொண்டு, முன் பக்கத்துக் கூந்தலையும் கொஞ்சம் கத்தரித்து என்னென்னவோ மாதிரி சீவி அவலக்ஷணமாகப் பின்னல் போட்டிருக்கிறாளாம். உடைகளைப் பற்றியோ, கேட்கவேண்டியதே யில்லை. ஜாக்கெட் சர்வ சாதாரணமாய்விட்டது. ரவிக்கை சட்டைக் கையாகவே ஆய்விட்டது. தாசிகளானால் ஆகென்றால் முழுத்தாசி சாவிகள் ஆகவேண்டும். அவர்களைப்போல் கவுன் போட்டுக்கொள்ளுகிறதுதானே! ஜாக்கெட்டென்ன! சட்டைக்கை ரவிக்கை என்ன! அதற்குமேல் புடவை அல்லது தாவணி என்ன! இன்னும் இந்த ஊரில் சில பெண்கள் பட்டணத்திலுள்ள சில பெண்களைப்போல் காலுக்கு மேல்ஜோடு பூட்ஸ்

போட ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம். இன்னும் சொல்லிக்கொண்டே போனால் இந்தக்கதை எண்ணிமுடியாது, எட்டில் அடங்காது.

கற்பூரவல்லி:—அட போங்களம்மா! நீங்கள் என்ன பெரிய கர்நாடகக் காரியா யிருக்கிறீர்கள்! பெரிய காலேஜ் உபாத்தியாயருக்கு வாழ்க்கைப் பட்ட நீங்கள் இப்படிப் பேசுவது ஆச்சரியமா யிருக்கிறது. நாலுக்குநாள் நாகரீகம் விர்த்தியானால் அதுவும் ஒரு அக்கிரம மாகுமா! சாரட்டு வண்டியில் போனால் என்ன! யாரோடு போகிறாள்! அவள் புருஷனோடுதானே? பெண்கள், ரெயிலில் அந்நிய புருஷர்களுக்கு எதிரிலும் பக்கத்திலும் உட்கார்ந்தும், சில வேளைகளில் அவர்களை இடித்துக்கொண்டு நடந்தும் போகிறார்களே. அப்படி யிருக்க, கொண்ட கோமானோடு சமானமாய்ச் சாரட்டு வண்டியில் உட்கார்ந்து போவதில் என்ன பாதகம்! கூந்தலை அலங்கரிப்பதிலும், உடை உடுத்துவதிலும் புதிது புதிதாக, நல்ல நாகரீகமாக, நடந்து கொண்டால் அதுகூட ஒரு குற்றமாகுமா? என் மகள் காமாட்சிக்குக்கூடத் தான் எத்தனையோ ஜாக்கெட்டுகள் தைத்து வைத்திருக்கிறேன். எனக்குக் கர்நாடக மாதிரி உடுப்பதும் அலங்கரிப்பதும் பிடிக்கவே யில்லை. என் ரவிக்கைக்கைகூட முழங்கைக்குக் கீழே இறங்கியிருக்கிறது. நீலாம்பாளம் மான் கையையும் பாருங்கள். ஜானகியம்மாள் கையையும் பாருங்கள். நீங்கள் பேசுவதைப் பார்த்தால் நாங்கள் எல்லோரும் அக்கிரமக்காரிகள்போலும்.

ஜெயலக்ஷ்மி:—இல்லை யில்லை யம்மா, நீங்கள் கோபித்துக்கொள்ளாதேயுங்கள். என்னவோ ஊரில் நடப்பதையும் என் புத்தியில் பட்டதையும் சொன்னேன்.

நீலாம்பாள்:—"குஞ்சி யழகுங் கொடுந்தாடி மஞ்சள் அழகும் அழகல்ல, நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி யழகே யழகு" என்ற பெரியோர் வாக்குப்படி, பெண்களுக்கு நெஞ்சக் சுத்தமும் கல்வியுந்தான் வேண்டும். சுமங்கலிகளுக்கு ஆவசிகமான மஞ்சள் அழகும் அழகல்ல என்று சொல்லிவிட்டபடியினாலே, மற்ற நாகரிக உடை பாவனைகளெல்லாம் உண்மையாகப் பெண்களுக்கு அழகு செய்கின்றனவல்ல. முக்கியமாக வேண்டியது கல்வியும் ஒழுக்கமும். இவைகளை அலட்சியம் செய்து, நாகரீக நடை, உடை, பாவனை, ஆகிய இவைகளிலேயே நமது பெண்கள் தலைசிறந்து முழுகிப்போய்விடுகிறார்கள். ஆகையால் ஜெயலக்ஷ்மி அம்மாள் சொன்னதையும் முழுவதும் புறக்கணிக்கக் கூடாது.

ஜானகி:—கூந்தலை அப்படிப் பின்னிக்கொள்ளட்டும், இப்படிப் பின்னிக்கொள்ளட்டும், ஜாக்கெட் போட்டுக் கொள்ளட்டும், குல்லா போட்டுக் கொள்ளட்டும், எப்படியேனும் உடுத்தித் தொலைந்து போகட்டும். ஆனால் கர்வம் இருக்கிறதே! காளு, இர்ன்னு, வாளு, இம்மன்னு, என்ற அந்த நாலெழுத்து வார்த்தை, அது ஒன்று இல்லாமலிருந்தால் போதும். அந்தக் கர்வ விஷமல்லவா தலைக்கேறிவிடுகிறது. அது இறங்கிவிட்டால் எல்லோரும் உத்தமப் பெண்களே.

பின்பு கண்ணம்மாள் பேசலுற்றாள்.

(தொடரும்.)

வாணீதாசன்.

காயம் பிணி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

உடற் கூறு பாடு.

104-ம் பக்கத் தொடர்ச்சி.

இம்மழையில் பிரசுரிக்கப்பெறும் பாகத்தில் வழங்கும் சாஸ்திரார்த்தமான பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

மேல்தாடை எலும்புகள்.	Superior maxillary bones.
குழிகள்.	Sockets.
அண்ணத்தெலும்புகள்.	Palate bones.
மேல்வாய்.	Roof of the mouth.
நாசி எலும்புகள்.	Nasal bones.
கண்ணீர் எலும்புகள்.	Lachrymal bones.
கண்ணீர் ஜவ்வுப்பை.	Lachrymal sac.
கன்னத் தெலும்புகள்.	Molar bones.
கீழ்த்தாடை, அல்லது முகவாய்க்கட்டை அல்லது ஹறங்வஸ்தி எலும்பு.	Lower jaw or Inferior maxillary.
நேர் அல்லது நிகந்த பாகம்.	Horizantal portion.
உச்சமான பாகம்.	Vertical portion.
தாடையின் கோணம்.	Angle of the jaw.
கழுத்தெழும்பு, அல்லதுநாக்கெலும்பு,	Hyoid bone.
குரல்வளை.	Larynx.
நேத்திரத் துவாரம்.	Optic Foramen.
மேல்வாய்.	Palate.
முன்னெலும்பு அல்லது, கசேருகம், அல்லது மணிஎலும்பு.	Vertebra.

ஸுஷீம்நாதுவாரம், அல்லது மூளாக்கொடி நுழைந்தோடுந் துவாரம்.	Spinal canal.
குறுக்கிட்ட அங்கூரம்.	Transverse process.
கூர்மையான அங்கூரம்.	Spinous process.
மூள்ளெலும்பு மத்திய முருந்து.	Interverteberal cartilage.
ஸ்நாயு. அல்லது முட்டுக்கட்டு	Ligament
கழுத்தெலும்புகள்.	Cervical vertebrae.
முதுகெலும்புகள், அல்லது பிருஷ்ட கசேருகங்கள்.	Dorsal vertebrae
இடுப்பெலும்புகள், அல்லது கடீகசேருகங்கள்.	Lumbar vertebrae.
திரிகாஸ்தி.	Sacrum.
அநுத்திரிகாஸ்தி, அல்லது புச்ச எலும்பு, அல்லது குயில் மூக்கெலும்பு, அல்லது குதோடிகம்.	Coccyx.
விலாவெலும்புகள், அல்லது பழுஎலும்புகள், அல்லது பர்சுக காஸ்திகள்.	Ribs.
முக்கிய பர்சுகங்கள்.	True ribs.
போலிப் பர்சுகங்கள்,	False ribs.
மிதக்கும் பர்சுகங்கள்.	Floating ribs.
மார்பெலும்பு, அல்லது மார்க்கண்ட எலும்பு, அல்லது வக்ஷ எலும்பு.	Sternum.
காரை எலும்பு, அல்லது சவடி எலும்பு, அல்லது அக்ஷகாஸ்தி, அல்லது கண்ட எலும்பு.	Clavicle or collar bone.
மார்பறை, அல்லது நெஞ்சறை.	Thorax.
விதானம், அல்லது ஈரல்தாங்கி.	Diaphragm.
சுவாசக்குழல்.	Trachea.
சுவாசாசயம், அல்லது புப்புஸங்கள், அல்லது நுரையீரல்.	Lungs.
இரத்தாசயம்.	Heart.
அன்னவாஹி, அல்லது உணவு உட்செல்லுவதற்கான குழாய்கள்.	Oesophagus.
இரத்தக் குழாய்கள்.	Blood vessels.
இரைப்பை.	Stomach.
மண்ணீரல், அல்லது பீலிகம்.	Spleen.

முகத்திற் தூரிய எலும்புகள்:—முகம் என்பதை, முகவாய்க்கட்டை முதல் நெற்றிக்குக் கீழுள்ள மூக்கு வாய் முதலிய அவயவங்கள் யாவும் என்று கிரஹிக்கவேண்டியது. பதினான்கு சிறிய எலும்புகளால் முகத்தின் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. முகத்திலுள்ள மாம்சபேசிகள் இவ் வெலும்புகளில் கட்டப்பட்டிருக்கின்றன.

இரண்டு மேல்தாடை எலும்புகள். இவ்விரண்டும் சேர்ந்து, மேல் தாடை, கன்னம், அண்ணம், கண்குழிகளின் கீழ்ப்பாகங்கள், இவைகளை ஆக்குகின்றன. இவைகளின் கீழ் ஓரத்தில் பதினாறு குழிகள் உண்டு. அவை களில் பதினாறு பற்கள் அமைந்திருக்கின்றன. இவைகளின் பின்னால் இரண்டு அண்ணாத்தெலும்புகள் உண்டு. இவைகள் மூக்கின் அடிப்புறத் திலிருந்து அண்ணம்அல்லதுமேல்வாயைப்பூர்த்தி செய்கின்றன. மூக்கின் மேற்புறமாய் இரண்டு நாசி எலும்புகள் என்னும் சிறிய மூக்கெலும்புகள் கீண்டு அமைந்திருக்கின்றன. இவைகளை நெருங்கி, கண்குழிகளுக்கு முன்னால் சிறிய இரண்டு கண்ணீர் எலும்புகள் இருக்கின்றன. இந்த எலும்புகளின் வெளிப்புறத்தில் நீண்ட பள்ளம் ஒன்று உண்டு. இதில் கண்ணீர் ஜவ்வுப்பை வைக்கப்பட்டிருக்கின்றது. கண்களிலிருந்து கண் ணீரை நாசித்துவாரத்திற்கு இக்குழல் வழியாக ஓடிவரச் செய்கிறது. நாசி மத்தியில் தட்டையாயும் நாற்சதுரமாயு முள்ள மெல்லிய ஒரு எலும்பு உண்டு. இது நாசியின் மத்திய ஸ்தானத்தில் இருப்பதால் நாசிக் குழி இரண்டு பிரிவுளாகின்றது. இதைத் தவிர்த்து நாசித்துவாரத் தில் இரண்டு சுருண்டு வளைந்த சிறிய மெல்லிய எலும்புகள் மீட்டிக்கொண் டிருக்கின்றன.

இரண்டு கன்னந்தெலும்புகள். இவைகள் தட்டையாயும் உறுதி யாயு மிருந்து கன்ன மேடுகளை ஆக்குகின்றன.

கீழ்த்தாடை அல்லது முகவாய்க்கட்டை அல்லது ஹநீவல்ஸ்தி எலு ம்பு. இவ்வெலும்பின் மேல் ஓரத்தில் நெடுக, பதினாறு பற்கள் வரிசையாக அமைந்திருக்கின்றன. இப்பற்கள் மேல்தாடையில் மூளைத்துள்ள அதே விதமான பதினாறு பற்களோடு சந்திக்கின்றன. இந்த எலும்பு ஒன்றுதான், முக எலும்புக்களில் பெரிதாயுள்ளதும் சிரசு எலும்புகளில் அசையக்கூடிய தமான எலும்பு. இதைத்தவிர்த்து மற்றெல்லா எலும்புகளும் நெகிழ்ந்த சைய முடியாமல் சிரக் கபாலங்களைப்போல, கெட்டியாக ஒன்றோடொ ன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த எலும்பு சிசுப்பருவத்தில் மத்தி யில் இரண்டு துண்டுகளாக இருந்து, பிறகு ஒன்றோடொன்று இணைந்து போகிறது. இந்த ஸ்தானத்திற்கு அடியில் முன்னுக்குக் கொஞ்சம் பிதுங்கி யிருப்பதற்கு முகவாய்க்கட்டை என்று பெயர். இந்த எலும்பின் பாகங் களாவன:—

(1) பற்களுக்காகக் குழிகள் அமைந்துள்ள நேர் அல்லது நீளந்த பாகம்.

(2) இரு பக்கங்களிலும் காதிற்கு முன்னால் சிரக்கபாலத்தின் அடிப் பாகத்திற்கும் கீழ்த்தாடைக்கும் இடையில் உள்ள பொருத்தில் முடிவாகிற நாற்சதுரமான இடத்திற்கு உச்சமான பாகம் என்று பெயர். இதன் உச்சிப் பாகத்தில் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு இரண்டு பிதுக்கங்க ளிருக்கின்றன. இவைகளில் ஒன்று கூர்மையாகவும் மற்றொன்று மூட்டு முடியாயு மிருக்கின்றன. இவை கன்ன எலும்புகளிலுள்ள பள்ளங்களில் பொருத்தப்பட்டு, வாயை மூடவும் திறக்கவும் செய்வதுடன் பக்க அசைவு களுக்கும் காரணமா யிருக்கின்றன.

(3) மேற்கூறிய இரண்டு பாகங்களும் சேருமிடத்திற்குத் தாடையின் கோணம் என்று பெயர்.

கழுத்தெலும்பு அல்லது நாக்கெலும்பு. இது நாக்கிற் கடியில் குரல்வளைக்குச் சற்றுமேலே உள்ள ஒரு வளைந்த எலும்பு. இதன் மத்தி யில் தட்டையா யிருக்கிற பாகத்திற்கு உடல் என்றும் இருபக்கங்களிலு முள்ள பிதுக்கங்களுக்குக் கொம்புகள் என்றும் பெயர். இவ்வெலும்பு குரல் வளையிலுள்ள முருந்து வளையங்களில் முதல் வளையத்திற்கும் நாக் கெலும்பிற்கும் மத்தியிலுள்ள கேடய ரூபமுள்ள ஒரு ஜவ்வால் இணைக்கப் பட்டிக்கிறது.

கண்தூழி அல்லது கண்துவாரம். இது, மேற்பாகம் நெற்றி எலும்பு டன் ஐதூகாஸ்தி கூடியும் கீழ்ப்பாகம் மேல்தாடை எலும்பினாலும் உட் புறம் கண்ணீர் எலும்பினாலும் வெளிப்புறம் கன்ன எலும்பினாலும் பொரு ந்தி கண்கள் அபாயமில்லாமலிருப்பதற்கு அநுகூலமான குழிகளை அமைக் கின்றன. இக்குழியில், கண்விழி, மாம்ஸ பேசிகள், இரத்தக் குழாய்கள், நரம்புகள், கொழுப்பு ஆகிய இவைகள் அடங்கியிருக்கும். இதில் அநேக துவாரங்களுண்டு. அவைகளில் விருத்தமாய் மத்தியிலிருப்பதற்கு நேத்தி ரத் துவாரம் என்று பெயர். இதன்வழியாக நேத்திர நரம்பு ஓடி விழி களுக்குப் போகும்.

செவித் துவாரங்கள்.செவிப்புலன்கள் காதெலும்புகளுக்குள் அடங்கி மிகவும் கெட்டியான எலும்புக்குழாயால் காக்கப்பட்டிருக்கின்றன. இக் குழாய்களின் திறப்புகளில் செவிகள் ஒட்டிக்கொண்டிருப்பதால், செவித் துவாரங்கள் இத்திறப்புகளோடு சேர்ந்திருக்கின்றன.

வாய்:—கீழ் மேல் இரண்டு தாடைகளுஞ் சேர்ந்த இடையில் வாயா கின்றது. அண்ணம் அல்லது மேல்வாயானது வாயின் மேற்பாகத்தில் நாசித்துவாரத்திற்கு அடியில் இருக்கிறது.

முண்டம் அல்லது உடல்.

I. வம்சாஸ்தி அல்லது முள்ளந்தண்டு. சிரசுக் கடியிலிருந்து கீழ் இறங்குகிற, தண்டெலும்புகளின் கோர்வைக்கு முள்ளந்தண்டு என்று பெயர். இதிலிருக்கிற ஒவ்வொரு எலும்புக்கும்முள்ளெலும்பு அல்லது கசேருகம் என்று பெயர். தனிக் கசேருகத்தைக் கவனித்துப் பார்த்தால்அதில் காணப்படும் பாகங்களாவன:—

(1) முன்னிற்கும் முண்டம் அல்லது எலும்புக்கட்டி.

(2) பின் நீண்டிருக்கும் அங்கூடங்கள். பின்னல், ஒன்று சேர்ந்து இவ்வெலும்பு ஒவ்வொன்றின் மத்தியிலும் ஒவ்வொரு துவாரத்தை அமைக்கின்றன. முள்ளெலும்புகள் ஒன்றின்பின் ஒன்றுகப் பொருந்துவதனல், அவைகளிலுள்ள துவாரங்கள் ஒன்றுக்கொன்று நேராக அமைய, இவ்வஸ்தி வரிசையின் இடையில் அந்தத் துவாரங்கள் ஒரு வாய்க்கால்போற் காணப்படும். இதற்கு ஸுஷீம்நா துவாரம் என்று பெயர். இந்தத் துவாரத்தினூடே ஸுஷீம்நா காண்டம் என்ற மூளைக்கொடி கீழ்நோக்கி ஓடுகின்றது.

(3) இரண்டு தூக்கிட்ட அங்கூடங்கள். இவைகள் பன்னிரண்டு ஜதை விலாவெலும்புகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

(4) கூர்மையான அங்கூடங்கள். இவைகள், முதுகின் மத்தியில் தடவிப் பார்ப்போமானல், சருமத்திற் கடியில் முதுகின் நீள முழுவதும் தென்படும்.

முள்ளந்தண்டு மூன்று இடங்களில் வளைவு உடையதாயிருக்கிறது. அதாவது கழுத்திலும் முதுகிலும் இடுப்பிலுமே. இந்த வளைவுகள் முன்னேக்கியும் பின்னேக்கியும் இருப்பதால், மூளை குலுங்கி அதிர்ச்சி அடையாதவாறும், தேகம் குனியவும் நிமிரவும் ஏதுவாயிருக்கின்றன. முள்ளெலும்புகளின் முண்டங்களுக்கிடையில் தடித்த முருந்துத் தண்டுகள் இருக்கின்றன. இவைகளுக்கு முள்ளெலும்பு மத்திய முருந்து என்று பெயர். இவை கசேருகங்களோ ஒன்றோடொன்று சேர்ப்பதோடு முள்ளந்தண்டு முழுவதும் தாராளமாய்ச் சுழலுவதற்கும், திடீரென்று முள்ளந்தண்டைத் தாக்கும் அதிர்ச்சியை (உதாரணம் உயரத்திலிருந்து பாதந்தாங்கி விழுதல்) காப்பதற்கும் ஆகின்றன. முள்ளந்தண்டு முழுவதும் நீண்டு பரவியிருக்கும் நார்போன்ற ஸ்நாயுவால் இணைக்கப்பட்டிருக்கிறது.

முள்ளெலும்புகள் மொத்தத்தில் 33. இவைகள் அமைந்திருக்கும் இடங்களுக்குத் தக்கவாறு தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு இடங்களிலுள்ள எலும்புகளைத் தீர்மானிக்க எண்ணும் எண்கள் குறிப்பிக்கின்றன.

மேலே இருக்கிற முதல் ஏழு கசேருகாஸ்திகளுக்குக், கழுத்தெலும்புகள் என்று பெயர். இவற்றிற்கு அடுத்துள்ள பன்னிரண்டு கசேருகங்கள் முதுகெலும்புகள் அல்லது பிருஷ்ட கசேருகங்கள், என்று கூறப்படும். கடைசியிலுள்ளஐந்துகசேருகங்கள்இடுப்பெலும்புகள் அல்லது கடிகசேருங்கள் எனப்படும்.இவற்றிற்குக் கீழே ஐந்து எலும்புகள்ஒன்றுசேர்ந்த திரிகாஸ்தி என்ற எலும்பும்,அதற்கடியில் நான்கு கசேருகங்கள் சேர்ந்த அநுத்திரிகாஸ்தி என்ற எலும்பும் இணைக்கப்பட்டிருக்கின்றன. திரிகாஸ்தி ருபத்தில் முக்கோணமாய், முன்பக்கத்தின் மேற்புறம் முன்னுக்குப் பிதுங்கியிருக்கும், இந்த எலும்பில் துவாரங்கள் உண்டு. அவைகளின் வழியாய் நரம்புகள் வெளிப்பட்டுச் சமீபத்திலிருக்கிற உறுப்புக்களுக்குப் போய் வியாபிக்கின்றன.

II. விலாவெலும்புகள் அல்லது பழ எலும்புகள் அல்லது பர்சுகாஸ்திகள். இவை மார்புக்கு இரண்டு பாரிசங்களிலும் முள்ளந்தண்டிலிருந்து ஆரம்பித்துஒவ்வொரு பக்கத்திலும் பன்னிரண்டு பழுஎலும்புகள்வீதம்வளைந்து சரீரத்தின் முன்புறத்திலுள்ள மார்பெலும்பில் வந்து முடிகின்றன. பர்சுகாஸ்திகள், நெடுக முற்றிலும் எலும்புகளாயில்லாமல்,சிலபாகம் எலும்பாகவும் முனையில் முருந்துகளாகவும் பரிணமித்து முடிவடைகின்றன. மேலேயுள்ளஏழுஜதை எலும்புகள் மார்பெலும்புடன் அவற்றின் முனையில் ஆரம்பித்துள்ள முருந்துகளால் நேருக்கு நேர் பொருத்தப்பட்டிருப்பதால் அவைகள் முக்கிய பர்சுகங்கள் என்று கூறப்படும். அடியிலுள்ள மற்ற மூன்று ஜதை எலும்புகளின் முன் முருந்துகள் மார்பெலும்புடன், சேராமல், கீழ்ப்பர்சுகம் அதற்கடுத்த மேற்பர்சுகத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதால், அவைகள் போலிப் பர்சுகங்கள் எனப்படும். பதினோராவது பன்னிரண்டாவது ஜதை எலும்புகள் முன் புறத்தில் எந்த எலும்புடனும் சேராமல் தொங்கிக் கொண்டிருப்பதால் அவை மிதக்கும் பர்சுகங்கள் என்னப்படுகின்றன.

முதல் ஜதைப் பர்சுகம் தொடங்கி ஏழாவது ஜதைப் பர்சுகம் வரையில் ஒன்றைவிட மற்றொன்று அதிக நீளமாகவும், ஏழாவது ஜதை எல்லாவற்றிலும் மிக நீளமாகவும் இருக்கும். பிறகு பர்சுகங்கள் வரவர மிகக்குறுகி பன்னிரண்டாவது ஜதை எல்லாவற்றிலும் சிறியதாய் இருக்கிறது. இவை அகலத்திலும் இவ்விதமாகவே குறைந்திருக்கின்றன. முதல் ஜதைப் பர்சுகம் சோரையும் மற்றவை சாய்வாயும் இருக்கின்றன. பர்சுகங்களின் வெளிப்புறம் குவிந்தும் மாம்சபேசிகள் ஒட்டிக்கொண்டும் இருக்கிறது. உட்புறம் தட்டையாயும் ஜவ்வு ஒட்டிக்கொண்டும் இருக்கிறது.

III மார்பேலும்பு, அல்லது மார்க்கண்ட எலும்பு, அல்லது வக்ஷ-ஸ் எலும்பு இது மார்பின் முன்புறத்தில் சட்டி வடிவம் அமைந்த தாய் மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. வெளிப்புறம் கவிந்தும் உட்புறம் குவிந்தும் இருக்கின்றன. இதன் கீழுள்ள கூர்மையான பாகம் வயிற்றுக் குழிக்குச் சற்று உயரமாக வைக்கப்பட்டிருக்கிறது. மேற்புறம் அகன்றும் இருபக்கத்திலும் காரை எலும்புகளின் உள் முனையைத் தாங்கிக்கொண்டிருப்பதற்கு இரண்டு பள்ளங்களை உடையதாயு மிருக்கிறது. இவ்வெலும்பில் இப்பள்ளங்களை தவிர்த்து வலது இடது பக்கங்களில் ஏழு பள்ளங்களுண்டு. அவைகளில் பழு எலும்பின் முருந்துகள் பொருந்தியிருக்கும்.

மார்பறை அல்லது நெஞ்சறை. இது, பின்புறம் வம்சாஸ்தியின் எலும்புகளினலும், அடிப்புறம் விதானம் என்னும் மாம்ஸ பேசியினலும், இருபக்கங்களும் பழுஎலும்புகளினலும் அவைகளின் முனைகளிலுள்ள முருந்துகளினலும், முன்புறம் மார்பெலும்பினலும், சேர்க்கப்பட்ட பெரியதோர் எலும்புக்கூடு. இதற்குள் சுவாசகிதழல், சுவாசாசயம், இரத்தாசயம், அன்னவாஹி, பெரிய் இரத்தக்குழாய்கள், இவைகள் அடங்கியிருக்கின்றன. அடியிலுள்ள பர்சுகாஸ்திகளால், இரைப்பை, மணணீரல் அல்லது பீலிகம் முதலிய உறுப்புக்கள் காக்கப்படுகின்றன.

(தொடரும்.)

ரே. கோவிந்தசாமி நாயுடு,

மெடிக்கல் பிராக்டிஷனர், தூத்துக்குடி.

விராதன் வத்மும் ராகவன் துதியும்.

உலகிலுள்ளோர்க்கு நன்னெறி புகட்டுவான் வேண்டி, அகில புவன நாதனை சாகூதாத் பரமாத்மா, ராஜராஜர் போற்றும் நற்றவப்பெரியான், அயோத்திக் கிறைவன் தசரதச் சக்கரவர்த்தியின் அருமை மழலைபாயுதித்தான். கோசலை புத்திரராகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அதிபாலியக்கில் அதிஅற்புதங்களைச் செய்து யாவரும் போற்றும் தகைமைத்தாய் உலவுவாராயினர். தசரதர் தளர்வுற்ற சமயத்து, ஸ்ரீ ராமனே அவனிக்கு ஆன்ற அரசனென முடிபுனைந்து செங்கோலோச்சத்தக்க பருவ முற்றனன் என்பதனை ஓர்ந்து அதற்காம் பொருள்களியாவையும் சேகரிக்கலாயினர்.

இவ்வமையத்து ஸ்ரீமத் இராமாயணம் அரங்கமாவதற் கிலக்காக, மந்தரை யென்னும் கூனியின் போதனையால் கைகேசி தனக்குரிய வரங்கள் இரண்டனையும் மன்னன்பால் பெற்று, ஸ்ரீராமர் காண்புக விடைகொடுத்தனள். அவ்விடை பெற்ற ராமர் தந்தைதாய் சொற்கேட்டலே ஆன்ற நெறியெனத்தேர்ந்து, லோக மாதாவாகிய சீதை யம்மனுடனும் தன் பின்னவனை ஸ்ரீ லக்ஷ்மனைப் பெருமானுடனும், கல், முள், முதலியன நிறைந்த கான்வழி, கடு வெயிலிலும் கடுமழையினும் தமது சஞ்சாரத்தைத் தொடங்கிச்சென்று சம்மைத்தேடித் தொடர்ந்து வந்த பரத சத்துருக்கனதியருக்கு உறுநெறி யுரைத்து, தமது பாதுகைகளை அளித்து அவர்களை அயோத்திக்குத் திருப்பி, பற்பல வனங்கள் கடந்துத் தண்டகாரண்யம் வரும் வழியில் பற்றுகளத்தனையும் அறவே பொழித்த அத்திரி மகரிஷி ஆச்சிரமம் புக்கு, அம்மகரிஷியாலும், அம்மகரிஷியோடிருந்த மற்றும் எனைய முனிபுங்கவர்களாலும், சுற்பிற் சிறந்த மாதர் திலகமாம் அத்திரி மகரிஷியின் பத்தினி அனுசூயையாலும் அன்பு அன்புடன் உபசரிக்கப்பெற்று, தண்டகவனத்தை அடைந்தார்கள்.

இவ்வாறு தண்டகவனத்துட் புகுந்து ராமலக்ஷ்மனரும் ஜானகிப் பிராட்டியும் மேற்செல்லும்பொழுது, அரக்கர் குழாத்தவனை விராதன் பதினாறு யாளிகளும் பதினாறு யானைகளும் மூப்பத்திரண்டு சிங்கங்களும் ஒழுங்காக நெருங்கக் கோர்க்கப்பட்ட முத்தலைக் கழுவாயுதங் கைக்கொண்டு, புண்களெனச் சிவந்த கண்களிலிருந்து கனற்பொறிகள் பறக்க, கதிரோனும் அச்சத்தினல் ஒளிகுன்ற, நமனும்நடுங்க, வரிப்புலிகளின் தோலை ஆடையாக உடுத்து, யானைத்தோலை உத்தரீயமாகத் தரித்து, பல மலைப்பாம்புகளாற் பின்னிய கச்சை இடையிற் கட்டி, இரதகஜ துரகபதாதிகள் பல பதித்துத் தொடுக்கப்பெற்ற மாசுணங்களை மாலையாகவும் பலிச்சிகரங்களைக் குண்டலங்களாகவும் அணிந்து, உதிரச்செஞ்சந்தனம் பூசி அதிபயங்கரத் தோற்றத்துடன் எதி

ருற்றனன். சிவ்ந்தொளிருஞ் சுருட்டை மயிர்கள் செறிந்த சென்னியனுகிய அவ்வரக்கன் ஆலகாலவிடமே வெற்புரு வெடித்து வந்தவாறு படிமிசை நடக்கின்ற வேகத்தில் மேகஞ்சூழ் மலைகளெல்லாம் பஞ்சு பட்ட பாட்டை யடைய, குன்றுகளொப்பத் தன் சூலத்தினிடை அடுக்கிவைத்திருந்த குமுறு கோப மதயானைகளை ஒன்றன்பின்னொன்றுகத் தன் தடக்கையால் எடுத்துத்தன் வாயாகிய பெருங்குகையின் ஒருபாற் செலுத்திச் செலுத்தி மென்று தின்றும் அடங்காத பசியோடு வந்தனன், என்பதைக் கூறும் கம்பரின் கவிநறு கவிச்சுவை காண்க :—

செஞ்சுடர்ச்செறி மயிர்ச்சுருள் செறிந்தசெனியன்
நஞ்சு வெற்புருவு பெற்றிடை நடந்ததெனமா
மஞ்சு சுற்றிய வயங்குகிரி பாதவிசையிற்
பஞ்சு பட்டது படப்படியில் மேன்முடுகியே,
குன்று துன்றின வெனக்குமுறு கோபமதமா
வொன்றி னொன்றிடை யடுத்தின தடக்கையுதவப்
பின்று கின்றபில னிற்பெரிய வாயினெருபான்
மென்று தின்றுவிளி யாதுவிரி யும்பசியொடே.

இவ்வாறு ஸ்ரீ ராமலக்ஷ்மணருக் கெதிரே தோன்றிய விராதன் அவர்களை நோக்கி "நில்லுங்கள் நில்லுங்கள்" என்று நிணமுண்ட பற்கள் மின்னும் தனது முழைவாய் திறந்து மொழிந்து, மலரில் வதிகின்ற அன்னப்பேடன்ன சீதாபிராட்டியாகிய மாதாவை உரையொன்று கழறுங் கடிகையில் ஒரு கரத்தெடுத்து உயர் விசும்பில் எகிறினன். அதுகண்டு வீரமைந்த திருவுரும் வெகுண்டு தோளிருந்த வில்லைத் துண்ணென இடக்கரத்தெடுத்து வலக்கரத்து வாளிபல கொண்டு அக்கொடியனைத் தொடர்ந்து "அடவஞ்சகா! எங்கே செல்லுகின்றாய்! மீளுவாயாக" என்று விளம்பினர். அவன் மறப்பிறப்பாகிய அரக்க உருவை ஒழித்து முற்பிறப்புக் கந்தருவனுக மீளும்படி பிரானது பொன்னடிகள் அவனுக்கு அருள்செய்ய இருப்பதை முன்னமே குறிப்பாக உணர்த்தும் பொருட்டு, மெய்யன் இருவாக்கில் "மீளுக" என்ற மொழி அவர் வெகுண்ட உரையிலும் உதித்து எனக்கொள்ளுமாறு கம்பர் அழகாகக் கவியை அமைத்திருக்கிறார்.

ராமலக்ஷ்மணர் யுத்த சன்னத்தராய்த் தன்னைத் தொடர்ந்து கூறிய மொழிகளைக் கேட்ட விராதன்,

ஆதி கான்முகன் வரத்தினென தாவியகலே
னேதி யாவதுவு மின்றியுல கியாவுமிகலிற்
சாதி யாதனவு மில்லையுயிர் தந்தனனடா
போதிர் மாதிவளை யுங்கியினி தென்றுபுகல,

அப்பொழுது ஸ்ரீராமச்சந்திரன் சிறிது வெண்முறுவல் பூத்து "இவன் போர்முறையறிந்திலன்! இவன் வீரமும் வலியும் இதோ அழிந்து விடப்போகிறது" என்று நினைத்து, எங்கெங்கும் இடியேறு போன்று முழங்க, தமது பாரவெஞ்சிலையின்கண் நாணேசையை விளைத்தார். அந்த நாண்முழக்கத்தைக் கேட்டதும் விராதன் சற்று மனஞ்சிதைந்து, வஞ்சப் பூணை வாயிலகப்பட்டு மறுகும் பஞ்சரக்கிளி யெனக் கதறும் பாவையாகிய பிராட்டியைத் தனிமீதுவிடத்து, ஸ்ரீராமபிரானுக்கு எதிரேவந்து நின்று சினந்து, தனதுகொடிய முத்தலைச் சூலத்தை வேகமாகச் சுழற்றி எறிந்தான். அஃது "பேய்களது பசி நீங்கப் பகைவர் உதிரத்தில் தோய்ந்த மூனைகளை யுடையதாய், மிகப்பாரமானதாய், வடவையினும் பெண்குதிரையின் முகத்துத் தோன்றி கடல்நீரைப் பருகுகின்ற வடவாமுகாக்கினி என்னும்படி பெருநெருப்பைத் தன்னிடங்கொண்டிருப்பதாய், இருந்தது, என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் அச்சூலத்தின் தன்மையைக் கூறும் செய்யுளின் நுனிகளையே அச்சூலத்தின் கொடுமையை விளக்கும் திறத்தாய் இருக்கின்றமை காண்க.—

பேய்முகப்பிணி யறப்பகைஞர் பெய்பி னுதிரந்
தோய்மு கத்தது கனத்தது சுடர்க்குதிரையின்
வாய்மு கத்திடை நிமிர்ந்துவட வேலைபருகுந்
தீமு கத்தினி கிகைப்படை திரிக்கெரியவே.

இத்துணைச் சூலாயுதமானது அஷ்டதிக்குப் பாலகர்களும் அஷ்ட கஜங்களும் நடுங்க ஆலவிடமென மின்னி வரவும், ஸ்ரீமத் ராமபிரான், மாமேரு மலை சப்த பர்வதங்கள் போன்ற வலிசால் தமது வெற்றிக் கோதண்டத்தில் ஒப்பற்ற கணைபொன்றைத் தொடு

த்திதப்தினர். உடனே, அரக்கர் குலம் இற்றொழிவதை முன்னதாகக்குறிக்கும்உற்பாதமாகப்பகற்பொழுதிலேயேவிசும்பினின்று பெருநட்சத்திரங்கள் விழுவனபோல், விராதனது பூடர்ச்சூலம் அறக்காவலன் கணையினால் இரண்டு துண்டாக அறுந்து அத்துண்டங்கள் இரு திக்கெல்லையை யுற்றன.

இதனைக் கண்டும் அரக்கன் சற்றுந் தளராது மனம் புழுங்கி மலைகள் பலவற்றை வேரோடு பிடுங்கி விசைத்து எறிந்துகொண்டேயிருக்க, அவையனைத்தும் ஸ்ரீராமரது வயிரக்கட்டமைந்த கதிர் வாளிகளினால், திரும்பித் திரும்பி விராதன்மீதே படப்பட அப்படிப் பட்ட பட்ட விடமெங்கும் அவன் உடல் ஊறுபட்டது. பின்னர் அவன் ஓர் மராமரத்தைப் பெயர்த்து, அறத்தை நிறுவ அவதரித்த மூர்த்தியை அம்மரத்தால் எற்றவந்த வளவில் அதனை ஸ்ரீமத் பிரான் நான்கு அத்திரங்களால் வேறு வேறுகத் துண்டித்துத் தள்ளி, அவனது தோள்களிலும் மார்பிலும் மாற்றி மாற்றி ஆறு ஆறு வெங்கணைகள் அழுந்தச் செய்தனர். அப்படித் தைத்த சரங்களை அரக்கன் தன் கரத்தினால் எடுக்க முயன்று முடியாதவருந்தி அக்கணைகள் எங்கும் தெரித்து விழுமாறு, கோப்புற்றதோர் முள்ளம்பன்றி யொப்பத் தன் உடலைச் சிலிர்த்ததறினன். அப்பொழுது ஸ்ரீராமர்எய்த அக்கினியாஸ்திரம்அரக்கனது மெய்யை ஊடுருவிச் செல்ல, அவன், மலைபாயும் அருவிபோல் தன்னுடலினின்று உதிரமழி பெருகிச்சோரிய, பலமழிந்து உணர்வு சோர்வுற்றவனுயினன்.

அச்சமயம் ஸ்ரீராமலக்ஷ்மணரிருவரும் இவன் மெய்வரத்தினனுதலால் ஆயுதப் பிரயோகங்களால் இறக்கின்றலன், மீண்டும் போர்புரிய வருவன், இவனது கரங்களை வெட்டுவம், எனக்கருதி, வாளை உருவி அவனது தோள்களின்மீதுவரினர். உடனே விராதன் அவ்விருவர் தனது தோளின்மீதபர்ந்த துணர்ந்து அவர்களைத் தாங்கியவாறே எழுந்து முன்னிலும் பதின்மடங்கு விரைந்து நடந்து வட்டமாகச் சுற்றினன். அப்பொழுது ஜானகிப்பிராட்டி, வஞ்சவிராதனுல் தன் கணவன்தன்னைப் பிரிந்துபோதலைக் கண்டு திகைகையிற் பிடியுண்ட ஆண் அன்னத்தைக்கண்ட பெடை

யன்னமொப்ப அலமந்து சோர்ந்து, துவண்டுவிழும் பூங்கொம்பு போலக்கூந்தல் சூலையப்பூமிமீது விழுந்தனள். பின்னர்எழுந்தாள். தன் துயரமொழிக்கத் துணையொன்றும் பெறுதவளாய், தேறுதலுரை யொன்றும் பெறுதவளாய், மின்னலே யொத்த தனது இடைநடுங்க நடந்து அரக்கனைத் தொடர்ந்து, "அகிலங்களுக்கு அன்னையேயனைய தருமசொரூபிகளை விட்டுவிட்டு என்னை உண்பாயாக" என்று கூறி மீண்டும் படிமிசை வீழ்வாளாயினள். இதனைக் கூறும் கம்பர் கவிகளாவன:—

மாத யாவுடைய தன்கணவன் வஞ்சன்விண்ணிற்
போத லோடுமல மந்தனள் புலர்ந்துபொடியிற்
கோதை யோடுமொசி கொம்பென விழுந்தனள்குலச்
சிதை சேவல்பிடி யுண்டசிறை யன்னமனையாள்.

பின்னை யேதுமுற வந்துனை பெறுஞரை பெறுண்
மின்னை யேயிடை நடங்கிட விரைந்துதொடர்வா
ளன்னை யேயனைய வன்பினை வோர்கடமைவிட்
டென்னை யேயுரர்தி யென்றனை ளெழுந்துவிழுவாள்.

இவ்வனம் அழுது வாய்குழறி ஆருயிர் அழுங்கி வருந்தும் பாவையனையாள் நிலையுணர்ந்து லக்ஷ்மணப் பெருமான் அண்ணலைத் தொழுது, பிராட்டி துன்பெய்தி நிற்ப வினையாடல் புரிவது பழுது என்று எடுத்துரைக்க, ஸ்ரீராமபிரான், "நாம் போகவேண்டிய பாட்டையை இவன் மீது இனிமையாகவும் கடிதிலும் செல்லலா மெனக் கருதினேன், இனி இவன் இறப்பது ஒரு பொருளன்று" என்று இளநகையோடு இயம்பியருளி, தமது திருவடிகளால் விராதனைக் கீழே தள்ளி, பின்னர் நைந்திருவரும் தமது கூரிய வாளினால் அவனது தோளிரண்டையும் துணித்துக் கீழே குதித்தனர். அப்பொழுதும் அரக்கன் இறவாது எழுகின்ற விகற்பங் கண்டு, சற்றுலோசித்து ஸ்ரீராமர் லக்ஷ்மணரை நோக்கி "இனையோய்! இவனை மண்ணிடைப்புதைத்தலே முறைமை" என்றனர். அதனைக்கேட்டு லக்ஷ்மணர் வகிர்ந்த குழியினிடத்து அரக்கன் அழுந்தும்படி, ஸ்ரீராமபிரான் உலகில் அன்பர்கருதிய வரங்களை உதவும் தமது சேவடிகளால் அவனை உந்தினவளவில், விரா

தன், தனக்கு முன்னே குபேரனுல் நேர்ந்த சாபமும் அதனுல் உண்டாய இழிந்த ராக்ஷச சரீரமும் நீங்கப் பெற்று, தனது முற்பிறப்பை உணர்ந்து, அப்பிறப்புக் கந்தருவ சரீரத்தை யுற்று விண்ணிலே விளங்கினன். அச்சமயம் அக்கந்தருவன் மொறிவழிச் சென்றுதிரியாத புந்தியும் தத்துவஞான மும் உற்று, ஒப்பற்ற பக்தியும் உடையவனுய் ஸ்ரீராமசுவாமியைப் பரம்பொருளென அறிந்து துதிசெய்வானுயினன்:—

(அடுத்த மழையில் இவ்வியாசம் முடிவுறும்.)

செ. பகவதியாநந்தம்.

சதுரங்கம்.

119 ம் பக்கத்தொடர்ச்சி.

முதல் தடவை ஆட்களை நகர்த்தும் பொழுது உசிதப்படி ஒரு கட்டமோ அல்லது இருகட்டங்களோ ஐரோப்பிய முறைப்படி நகர்த்தலாமென்று முன்பு குறித்தோம். ஆனல் ஒரே கட்டம் நகர்த்துவதுதான் மொகலாய விதி. இவ்விதிக்கேற்பவே ஐரோப்பிய முறையிலும் ஆட்களை இருகட்டங்கள் நகர்த்துவதற்கு ஒரு நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. அதாவது இரண்டு கட்டங்கள் மாறிச் செல்லும்பொழுது இடையிலுள்ள கட்டத்தை எதிரி ஆள் பார்த்து நின்றல், அப்படி இரண்டு கட்டங்கள் நகர்த்தினவுடன் எதிரிக்கு இஷ்டமிருந்தால் ஒரே கட்டம் நகர்த்தியதாகவே வைத்துக் கொண்டு நகர்ந்த ஆளை வெட்டிவிடலாம். உதாரணமாக ஈ 2ல் உள்ள ஆள் ஈ 4க்கு செல்லும்பொழுது ஈ3ல் எதிரி காலால் பகைத்துநின்றல் ஈ4க்குநகர்த்தியவுடன், எதிரிபிரியப்பட்டால் அடித்த ஆட்டத்தில் அவ்வாளை, ஈ3க்கு நகர்ந்ததாகவே வைத்துக்கொண்டு வெட்டிவிடலாம். வெட்டுகிற ஆள் ஈ 3ல் நிற்கும்.

மற்றும் ஐரோப்பிய முறையில் கோட்டை கட்டுவது என்று ஓர்ட்டம் உண்டு. அதில் அரசனும் யானையும் இடம் மாறும். ஒரே ஆட்டமாகத்தான் கருதவேண்டும். கோட்டை கட்டுவதற்கு முன், (1) அரசனுயானையோநகர்ந்திருக்கலாகாது (2) அவைகளுக்கிடையில் வேறு காய்கள் நிற்கலாகாது (3) அரசன் அரசில் நிற்கலாகாது. (4) அரசன்தான்றும் இடைக்கட்டங்களை எதிரிகாய்கள்பகைக்கலாகாது. இந்நிபந்தனைகட்கு உட்பட்டு அரசன் இரண்டு யானைகளில் யாதேனும் ஒன்றுடன் கோட்டை கட்டலாம். அவ்வண்ணம் செய்யும்பொழுதும் யானை நின்ற கட்டத்தை நோக்கி அரசன், ஒரு கட்டம் விட்டு மறுகட்டத்துக்குப் பாய்கிறன். யானை அரசனைத்தாண்டி அடுத்த கட்டத்தில் ஏறுகிறது. உதாரணமாக உ 1ல் உள்ள அரசன் ஏ 1ல் உள்ள யானையுடன் கோட்டை கட்டும்பொழுதும் அரசன் எ1க்குப்பாய்கிறன். யானை அவனைத் தாண்டி ஊ1ல் ஏறுகிறது. அம்மாதிரியே உ 1ல் உள்ள அரசன் அ1ல் உள்ள யானையுடன் மாறும்பொழுது இ1க்குப் பாய்கிறது, யானை ஈ1ல் ஏறுகிறது.

இருவர் ஆடும்பொழுது கலைக்கு ஒரு ஆட்டமாக மாறிமாறி ஆடவேண்டும். கன்காயை நகர்க்கவும் எதிரி காயை வெட்டவுந்தான் இயலும். தொட்ட காயை நகர்க்கவேண்டும்.

[அடுத்த மழையில் இவ்விஷயம் முடிவுறும்]

ரா. செ. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

மதிப்புரை.

ஸ்ரீலோகமாதா. பத்திராதிபர் பண்டிதர் எம். எம். நாராயணசாமி அவர்கள். இஃது திருவாங்கூர் ராஜ்யம் புனலூரிலிருந்து வெளிவரும் தமிழ்வளர்ச்சிக்குரிய ஓர் நல்ல தமிழ்ப்பத்திரிகை. இனிய நடையும் உயர்ந்த நோக்கும் உள்ள பல சிறந்த வியாசங்கள், பெரியோர் சரித்திரங்கள், சாணக்ய தந்திரம் இரகுவம்சம் ஆகிய நூற்களின் அழகிய தமிழ் மொழி பெயர்ப்பு. முதலியன கொண்டிருக்கின்றது வருடச்சந்தா. ரூ 1—8—0.

ஜாதக பஞ்ச சித்தாந்தம். இந்நூல் வடமொழியில் ஸ்ரீ சத்யாச்சாரியார்என்ற பெரியோர் அருளிச்செய்த ஜாதக பஞ்ச சித்தாந்தம் என்ற அரிய ஜோதிடக் கிரந்தத் தமிழ் அமைப்பின் முதற்பாகமாகும். திருநெய்த்தானம் ஜோதிட வித்வான் ஸ்ரீமான் வாதூல ஆ. இ. ஸ்ரீநிவாஸாச்சாரியார் அவர்கள் தமிழில் மொழிப்பெயர்க்க, திருவையாறு ஸ்ரீமான் ஆர். தாமோதர நாயுடு அவர்கள், முதல் நூலில் இல்லாத பல விஷயங்களைப் பல சாஸ்திரங்களிலிருந்து ஆராய்ந்தெடுத்து, தக்க இடங்களில் சேர்த்து அச்சிட்டுப் பிரசுரஞ்செய்திருக்கிறார்கள். இதில் ஜோதிடப்பயிற்சியின்வழி பலதுட்பமான கணித ஆராய்ச்சியின் வகைகளும் அக்கணித ஆராய்ச்சியையே முக்கிய சார்பாகக்கொண்டு சரியானபடி பலன்கள் சொல்லப் பற்பல வழிகளும் தெள்ளிய நடையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஜோதிடப்பயிற்சியில் பிரிய

முள்ள சகலருக்கும் மிகஉபயோகமுள்ள புத்தகம். ஆதலால் ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இவ்வரிய ஜோதிடநூலைத் தமிழில் வெளிப்படுத்திய ஸ்ரீமான் தாமோதர நாயுடு அவர்களுக்குப் பொதுவாகத் தமிழுலகும், சிறப்பாகத் தமிழ் ஜோதிடவுலகும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளன. இப்புத்தகத்தின்விலை அணு 12. வேண்டுவோர் நமது கதாவருவிணி காரியஸ்தலத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ப—ர்.

விடு கதைகள்.

1. அதிகாலையில் அலறி எழுவாள், அண்ட நடுங்க ஆடிக்களிப்பாள், ஆயிரம் பேர்க்குமேல் அன்னமளிப்பாள், அவனிமாந்தர்க்கு ஆடையளிப்பாள், அவளைப்போல ஆடவர் அரிவையர், அவளைப்போல்க்க ஆவலாய்ச் செல்வார்.

2. விதவிதமான குரல்களிலே பேசிப்பாடி மகிழ்விப்பான், விநோதமென்ன வென்று கேட்டால் உயிரேயில்லை யவளுக்கே.

3. இந்தலோகந் தன்னில்வாழும் எமலோகத்துத் தூதுமோன், ஈன்ற மக்களைத் திரும்பவயிற்றில் இருத்தும் புண்ணிய வதியுமோன், கந்தவாடை வாத்யவாடை காதலிக்கும் பெண்ணும் நான், கழறுவாய் என் பெயரையே காதமில்லை காலுமில்லை.

4. காலற்ற உடலுடையான், தலையற்ற கழுத்துடையான், பிளவுண்டநெஞ்சுடையான் பேச்சுமூச்சில்லாதான், விரலற்ற கையுடையான் விரிவுண்ட வயிற்றிற்குள் வீராதிவீரரையும், விழுங்கிடுந் தொழிலுடையான்.

இவைகளுக்கு விடைகள் அடுத்த மழையில் வெளிவரும்.

சென்ற மழையில் வந்த விடுகதைகளுக்கு விடைகள்:—

[1] தேள், பாம்பு.
[2] பிரசவ நோவு.
[3] ரத்தினம் மாணிக்கத்திற்குச் சகோதரி.

23 JUN 1919

உ

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருவிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள், நீதிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள் இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் நிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன்பராபரமே. தாயுமானவர்

பருவம். 1. | கலியுகாப்தஞ 5020. காளயுக்தி ஞ தைமீ. கொல்லமாண்டு 1094 மகாமீ. கி. பி. 1919-ம்ஞ ஜனவரிமீ. | மழை 5.

நமது சக்கரவர்த்தியின் குடும்பப் பெருமை.

நோண்டிச் சிந்து.

1. பகவான் பதம்பணிந்தே—இன்று
பாடுவம் ஜார்ஜ மன்னர் பண்பிற்சிறிதே.

2. பரம்பரை ராஜகுடும்பம்— நேரோநாம்
பார்த்துள்ளோம் பின்மூன்று கலைமுறைகள்.

3. பாட்டியார் பெற்றமகிமை—மூற்றும் [டோ?
பாட்டிசைக்கும் சொற்புலவர் நாட்டினிலுண்

4. நாட்டினர் வெற்றியின்கொடி— உலகெங்கும்
நன்மைகளெல் லாம்பெருகி நயம்படவே.

5. ஆண்டறு பதுக்குமேலே— அன்புடனே
ஆண்டரசு வீற்றிருந்தார் ஆர்கொலுலகில்?

6. விக்டோரியாஇவர்பேர் —கல்லை
வேற்றிக்கோடி யாள்என வில்லைத்தகுமே.

7. பிதாவின்சீர் பேசல் எளிதோ—மிக
இதமாக யாவனையும் இணைத்தவர்கர்ண்.

8. எட்வார்ட் என்பார்இவர் பேர்—ஏற்றபடி
இவேர் எனும்பெயர்தான் மருவியதோ?

9. ஜார்ஜ்மன்னர் சீர்மை சிறிதோ—பார்முழுதும்
சார்நிக் குரையாணி சான்றவர்காண்.

10. கருணை முகில்என்னலாம்—காரணம்
காட்டுகிறோம் கேட்டுணர்மின் நேசர்களே.

11. இந்தியர்க ளாம்பயிர்கள்—சற்றுமினி
நொந்தயரா தேவளர நோக்கங்கொண்டு

12. கடல்கள் பலகடந்தோ—கில
கண்டமுன் கடந்துநம் தேசம்வந்து

13. வெள்ளியையும் பாகரில்—மாறு
வல்லியரு தோகொழுமிக் குரும்பைகாண்.

14. கருணை! கருணையம்மா!—கல்லை
கருணம் இப்போதிறைவன் காலடிதாழுவோம்.

15. நீடுழி வாழ்கவென்றோ—சுப்பராச
நாடு செழிக்கநீ செலுத்துவரோ.
மங்களம் மங்களமே—நிறை
மங்களம் மங்களம் மங்களமே.

பெரும்போர் முடிவு.

1. நாடி நீதியுளா தவர்
கோடி கோடிபடை யாளினும்
ஓடி யோடியுயிர் மாளினும்
பீடி லாதழிவர் பெரிதோர!

2. கூடி நின்றுவலி கொண்டவர்
தேடி கல்லுவரை மையலை
சாடி னுரெனினும் இறுதியில்
வீடு னர்வெறி யடங்கியே.

3. நாடி நாடுபல கூடியே
நீடி போர்கனி விளைத்ததில்
பீடு சாலரசர் ஜார்ஜ்தம்
நாடு லாதஜயம் நீடுமே.

மு.பொ. சுகரமூர்த்தியா பிள்ளை.

பரிகை.

ஓர் கவின நாடகம்.

(131-ம் பக்கத்தொடர்ச்சி.)

ரமணன்:—குழந்தைகளுக்கு இனிய தின்பண்டங்களில் விருக்கும் ஆசை போல, குழயர்களுக்கு மற்றவின்பாலுள்ள வெறிகொண்ட பிரேமைபோல மானிடர்களுக்குச் சிற்றின்பத்திலுள்ள ஒரு ஆசைதான் காமம் என்பது. பக்தி என்பது, தாய், தந்தை, அரசன், தெய்வம் முதலிய பெரியோர்களிடத் தண்டாகும் விசுவாசம் நிறைந்த ஓர் உன்னதமான அன்பு. காதல் என்பது ஸ்திரீ புருஷர்கள் ஒருவர்பா லொருவர் பூணும் ஓர் அற்புத அன்பு. காதலும் அன்புதான், பக்தியும் அன்புதான். ஆனல் காதல் என்ற அன்பின் தன்மை வேறு, பக்தி என்ற அன்பின் தன்மை வேறு. காமம் என்பது அன்பே யல்ல. அஃது விருகங்களுக்கு இருப்பதுபோல மனிதருக்கு இருக்கும் ஓர்வித இச்சை.

கண்ணன்:—காமம் பக்தி இவை இன்னவையென்று தெரிந்துகொண் டேன். காதல் என்பது என்ன என்றுதான் எனக்குத் தெரிய வில்லை. காதலைக் காமத்தினின்றும் வேறுபடுத்தினல் அது பக்தியாகத் தோற்றுகிறது. பக்தியினின்றும் வேறுபடுத்தி னல் காமமாகத் தோற்றுகிறது. காதல் பக்தியினின்றும் வேறுபட்டது, காமத்தினின்றும் வேறுபட்டது என்பதை என்னல் உணர்ந்துகொள்ளக்கூடவில்லை.

ரமணன்:—சகோதர வாஞ்சை என்ற அன்பு வேறு, பக்தி என்ற அன்பு வேறு என்று உணர்கிறாயல்லவா?

கண்ணன்:—ஆமாம் நன்றாய் உணர்கிறேன்.

ரமணன்:—இரண்டும் அன்புதான். ஆனால் இரண்டின் தன்மைகள் வேறு. அதுபோல, காதல் என்ற அன்பின் தன்மை பக்தி என்ற அன்பின் தன்மையினின்றும் வேறுபட்டிருக்கிறது. காமம் என்பது புனிதர்கள் அருவருக்கும் ஓர் புன்மைப் பிரேமை. அது அன்பே யன்று.

கண்ணன்:—அப்படியானால் காதல் என்பது சகோதரவாஞ்சை என்ற அன்பைப்போல் இருக்குமோ?

ரமணன்:—அல்லவே யல்ல. சகோதரவாஞ்சையின் தன்மை வேறு. காதலின் தன்மை வேறு. பக்தி என்ற அன்பினின்றும் வேறாகிய அன்பும் இருக்கக் கூடும் என்பதற்குச் சகோதரவாஞ்சையை உதாரணமாகச் சொன்னேனே யன்றி, சகோதரவாஞ்சை காதலாகாது. காதல் ஒருவகை அற்புத அன்பு. இம்மையாகிய இவ்வுலகவாழ்க்கையை இனிமை மயமாக ஆக்கிக் கொள்வதற்குக் கடவுளால் அருளப்பட்ட ஓர் மகத்தான அன்பே காதல். அஃது மானிடர் அந்தரத்தை அலசச்செய்து, அறநெறி பிறழாத ஒழுக்க உறுதியைத் தந்து, கடவுளின் பேரருள் ஒருவ்டி நியதி முதலிய அற்புதங்களே வியந்தருகும் தெய்வபக்தியை வளர்க்கும் திறல் வாய்ந்தது. காமமோ பகுத்தறிவற்ற மிருகங்களுக்கே ஏற்பட்ட இழிந்த மிருகக்கிளர்ச்சி. அஃது ஆறறிவுடைய மானிட சமூகத்திற் பரவியதாற்றான், துன்பம், பாவம் முதலிய தொல்லைகள் உலகில் ஏற்பட்டன. உயர்ந்த இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது காதல் என்ற அற்புத அன்பே. வெறும் வார்த்தைகளினால் காதல் இன்னது என்று நீ உணரும்படி செய்வது என்னால் இயலாது. நீ ஒரு புண்ணியவதியின்பாற் காதலுற்றால் அப்பொழுதுதான் நீ காதலை உணர்வாய்.

கண்ணன்:—ஆம் அண்ணா! நான் காதலை அறியேன். ஆனால் சகோதர வாஞ்சையை அறிவேன். அந்த வாஞ்சை யவ்வளவு காதல் உருக்கமானதென்று நீ நினைக்கிறாய்?

ரமணன்:—அதனிலும் அநேக மடங்கு அதி உருக்கமானது காதல். ஆ! என்ன சொல்லுவேன்! இல்லை தம்பி! காதல் சகோதரவாஞ்சை என்ற இரண்டின் உருக்கத்தை ஒப்பிட்டுப் பார்க்கவே

என்னால் முடியவில்லை. சகோதர அன்பின் உருக்கத்தின் தன்மை வேறு, காதல் என்ற அற்புத அன்பின் உருக்கத்தின் தன்மை வேறு. காதலுருக்கம் அதி விசித்திரமானது. தாயன்பு, தந்தையன்பு, மகவன்பு, சகோதரவாஞ்சை ஆகிய பல்விதி அன்புகளையும், தத்ரூப தெய்வதரிசனத்தாலெழும் ஒரு வகைக் கிளர்ச்சியில் ஒன்றுருக்கிய ஒரு பெரிய எக உருக்கத்தை ஒருவாறு உன்மனத்திற் சித்திரித்துக்கொள்ளக் கூடுமானால் ஒருவாறு காதலுருக்கத்தின் தன்மையை அறியலாம். அல்லலேயில் கண்ணா! ஒரு கன்னிகையின்பால் உன் மனத்தில் காதல் உதித்தால்தான் நீ காதலை உணரலாவாய்.

கண்ணன்:—அவ்வளவு மகத்தான தன்மையுடைய காதல் பரிசுத்தமானதென்றுஞ் சொல்லலா மல்லவா?

ரமணன்:—(சற்று யோசித்து) சகல விஷயங்களிலும் ஒருவர்க்கொருவர் தகுதியான ஸ்திரீ புருஷர்கள் உள்ளத்தில் உண்டாகும் காதல் பரிசுத்தமானதுதான். ஆனால் நான் அண்ணியாகத் தொழவேண்டிய அரச புத்திரியின்பால் என் மனம் கொண்ட காதல் பரிசுத்தமானதென்று எப்படிச் சொல்லுவேன். ஆகையால்தான் முன்னமே களங்கமயமான காதல் என்று பேசினேன். அது பரிசுத்தமான காதலாயிருந்தால் நான் என் அதைத் துறக்க முயலுகிறேன்!

கண்ணன்:—அரசகுலத்திற் பிறந்த ஒருவன் வசிகரியின்பால் காதலுற்றான் என்றால் அந்தக் காதல் பரிசுத்தமானதா?

ரமணன்:—உண்மையில் அது காதலாயின் அது பரிசுத்தமானதே.

கண்ணன்:—அந்த அரசகுமாரனது காதல் உனது காதலைவிட அதிக உருக்கமானதாக இருக்குமோ?

ரமணன்:—இல்லை. என் மனத்தை வருத்தும் காதல் வேறு எந்தக் காதலைப் பார்க்கிலும் உருக்கத்திற் குறைந்ததென்று நான் சொல்லத் துணியேன்.

கண்ணன்:—அண்ணா! இப்பொழுதுதான் உன் உள்ள நிலையைத் தெளிவாய் அறிந்தேன். அதை அறிவிக்கும்படி நான் நமது அன்னையைத் தியானித்தது வீயர்த்த மன்று. அண்ணா! சற்றுக்கவனி. காதல் என்பது நீ சொல்லியபடி அதிஉருக்கமான ஓர்வகை அற்புத அன்பு. அந்த அன்பு வாழ்வியால் மனத்தில் உதிக்கின்ற தென்னலாம். ஆகையால் நீ புருஷர்கள் மனத்தில் எழும் காதல் பரிசுத்தமானது, ஆனால் நீ வசிகரியின்பாற் கொண்ட காதல்

பாதகமானது என்று நீ நினைக்கின்றாய். அப்படி நீ எண்ணியது பிழை என்று எனக்குத் தோன்றுகிறது. நீ எவ்விதத்திலும் களங்கமற்ற ஒரு புண்ணிய புருஷன். உன் பரிசுத்த மனத்தில் பாதகமான கிளர்ச்சி உதிப்பது முற்றும் அசம்பாவிதம். நீ லோகநாயகியாகிய நமது அம்மணியினிடம் முதிர்ந்த பக்தி யுடையவன். உன் மனத்தில் களங்கமான கிளர்ச்சியுண்டாகும்படி கருணைமுத்திரமாகிய நமது தாய் இடங்கொடுப்பாளா! அன்றியும் உன் மனத்தில் தோன்றிய கிளர்ச்சியை நீ துறக்கும்படி செய்ய சிறந்த ஞான நூல்களுக்கும் சக்தியில்லை என்று நீயே ஒப்புக்கொண்டாய். உன் காதலை உன் மனத்தினின்று அகற்றும்படி நீ நமது அன்னையைத் தியானித்தும், உன் தியானத்தின்போதும் வசிகரியின் சித்திரம் உன் சித்தத்திலிருந்து நீங்கவில்லை யென்றாய். இவ்வளவு விஷயங்களிலிருந்தும் எனக்குத் தெரிகிறதைச் சொல்லுகிறேன். வசிகரியின்பால் நீ காதலுற்றது அம்மணியின் திருவருட் செயலே. அந்தக் காதல் பரிசுத்தமானதே. அது பரிசுத்தமானதல்ல வென்று வீணாக நீ மருட்சியடைகிறாய். அந்தக் காதல் உனக்குத் தகாதது என்று எனக்குச் சற்றும் தோன்றவில்லை. உன்னை சிறந்த அறிவு, நிறைந்த கல்வி மாசற்ற குண ஒழுக்கங்கள், யாவும் வசிகரியை நீ காதலிப்பதற்கு முற்றும் ஏற்றவையே. நீ நமது அரசரின் பிரஜைகளில் ஒருவனாய் பிறந்திருந்தா லென்ன! அரசியலில் மந்திரிகளாகவும் சேனாபதிகளாகவும் மற்றும் உத்தியோகஸ்தர்களாயும் இருந்தவர்கள் குடும்பங்களுக்கும் அரச குடும்பங்களுக்கும் விவாக சம்பந்தம் பலமுறை ஏற்பட்டிருப்பது, நமது தேச சரித்திரத்தையும் பிறதேச சரித்திரங்களையும் நன்குணர்ந்திருக்கிற நீ அறியாத விஷயமல்ல. அந்த உத்தியோகஸ்தர்களும் அவர்கள் குடும்பங்களும் பிரஜைகள்தானே. ஆகையால் நீ வசிகரியின்பாற் காதலுற்றதில் யாதொரு மாசுமில்லை. யாவும் நமது தாயின் செயல்கள். வசிகரிக்குத் தகுந்த கணவன் நீயே, அவளே உனக்குத் தகுந்த மனைவி, என்று விதித்தது தான் நமது அன்னை உங்கள் இருவரையும் சந்திக்கச் செய்து உங்கள் இருவர் மனத்திலும் காதலைத் திருவுள்ளித்தாள்.

ரமணன்:—என்ன கண்ணா! இருவர் மனத்திலுமா?

கண்ணன்:—ஆம் அண்ணா! இருவர் மனத்திலுந்தான். வசிகரியும் உன்னைக் காதலிக்கிறாள் என்று நான் முற்றும் நம்புகிறேன்.

ரமணன்:—கண்ணா! வசிகரி ஓர் தேவப் பெண்ணின் தேஜஸோடு என் கண்முன் மின்னுகின்றாள். அத்தகைய பெண்மணியின் மனத்துக் காதலைக் கவரும் புருஷன் எவ்வளவு உயர்ந்த கம்பீர லக்ஷணங்களும், எவ்வளவு சிறந்த சக்திகளும், எவ்வளவு அரிய ஜன்மாந்தரப் புண்ணியமும் உடையவனா யிருக்கவேண்டும்! அந்தப் புருஷன் நானா! சீ! என்ன அகந்தை! என்ன மடமை!

கண்ணன்:—வசிகரியின் காதலைக் கவர்ந்த உத்தம புருஷன் நீதான் அண்ணா நீதான். உன் பெருமையை நீ அறிந்து கொள்ளவில்லை. வசிகரி ஓர் தேவஸ்திரீயாக உன் கண்முன் மின்னுகின்றாள் என்றனை. நீயும் ஒரு தேவபுருஷனாக அற்புத ஒளி வாய்ந்து வசிகரியின் கண்முன்பு இந்த க்ஷணத்திலும் நிற்கின்றா யென்று நான் நம்புகிறேன். எனென்றால், அம்மணியின் திருவருளால் நான் தோற்றியது. அம்மணியின் திருவருளால் நீ மானுஷத் தொடர்ந்தோடினாய். அம்மணியின் திருவருளால் உனக்குத் தாகமுண்டாயிற்று. அம்மணியின் திருவருளால் கண்ணீர் கொண்டுவர நான் உன்னைப் பிரிந்தேன். அம்மணியின் திருவருளால் நீ வேலியைப் பிரித்துக்கொண்டு பூஞ்சோலைக்குப் போனாய். அம்மணியின் திருவருளால் அச்சமயம் நீ வசிகரியைக் கண்டாய். அம்மணியின் திருவருளால் உனக்கு அவள்பால் காதல் உதித்தது. ஆகையால் அம்மணியின் திருவருளால் வசிகரியின் மனத்திலும் உன்பாற் காதல் உதித்திருக்கத்தான் வேண்டும்.

ரமணன்:—எவ்வளவு இன்பமாயிருக்கிறது உன் வார்த்தைகள்! வசிகரியின் மனத்திலுமா காதல் உதித்திருக்கிறது! உண்மைதானா! யாவும் அம்மணியின் திருவருட் செயல்களா! ஆமாம், எல்லாம் அவளது அருட்செயல்களே. அம்மணீ! பங்கயவல்லீ! கருணாகரமே! ஜகத்ரக்ஷகீ! தாயே! அபயம்! அபயம்! அபயம்! எனக்கு உண்மையை அறிவித்தாய். கண்ணா! ஒருபுதிய குதூகலமுற்று என் உள்ளம் ஜலமாக நெகிழ்கின்றது. உன்னோடு பேசவும் என்னால் இயலாது. நீ சயனித்துக்கொள். (கண்களை மூடிக்கொண்டு தியானிக்கின்றான்.)

கண்ணன்:—(தனக்குள்) வசிகரீ! நீ என் சகோதரனையே காதலிக்கின்றா யென்று நான் உறுதியாய் நம்புகிறேன். காலைக்கே நான் உன் பூஞ்சோலைக்குட் சென்று உன் ரமணன்பால் உனக்குள்ள

காதலே என் செவிகுளிரக் கேட்டுப் பின்பு உங்கள் நிருமணத்தையும் விரைவில் நிறைவேற்றுவேன். அம்மணீ! இந்தப் பிரதிக்ஞையை நீயே நிறைவேற்றவேண்டும். யாவும் உன் திருவருட் செயல்கள். நாங்கள் எல்லோரும் உன்றன் லீலா யாட்டுப்பொருள்கள். (காணும் நியாயத்தில் அமர்கின்றனர்.)

அங்கம் 2.

காட்சி 2.

[ராஜபுத்திரிகளின் பூஞ்சோலை. மாலைப்பொழுது. முன்பு ரமணன் வேலியைப் பிரித்தலிடத்தருகே புஷ்பத்தட்டைக் கீழே வைத்துவிட்டு ரசிகை பசும்புல்லீ தூட்கார்ந்து மனமுருகித் தனக்குட் பேசுகின்றாள்:-]

"அம்மணீ! சாரதே! இதுதானோ காதல்என்பது! இதில் துன்பமொன்றுமில்லையே! என்ன என்ன இதயம் இன்பமயமாயிருக்கிறதே! பேருற்சாகம் பொங்குகிறதே. தமயந்தியும் சீதையும் சாவித்திரியும் காதலை யறிந்த சமயம் துன்பமடைந்தார்களாமே. எனக்குத் துன்பம் தோன்றவில்லையே. இது காதலல்லவோ? பின்பு இது என்ன? இல்லை. இது காதல்தான். என் தேவி, என் ஸ்வாமி, என் அம்மணி, எனக்கு இன்பமயமான காதலைக் கருணையோடு அளித்தாள். காதலில் கலந்த சஞ்சலத்தை என் இறைவி சம்ஹரித்துவிட்டாள். என் அன்னையின் கருணையே கருணை! என் ராணீ! உன்னை எப்படிப் பகழ்வேன்!— ஹா! மின்னலைப்போல் என் கண்முன் தோன்றி மறைந்த கன்னலை! அமிர்தம் பொங்குவதுபோல் தோற்றும் உன் முகாரவிந்தமும், உன் புஜங்களின் வசிகர அமைப்பும், உன் உடைகளின் ஒய்யாரமும், உன் நடையின் கம்பீரமும், கரும்பை நாவிற்பிழிவதுபோல் என் செவிகளிற் புகுந்த உன் சொல்லும், இவைகளை யெல்லாம் நினைந்து நினைந்து நான் என்ன சுகமடைகின்றேன்! நீ இத்தகைய சுகம் அநுபவிக்கின்றனையோ? நீயும் அத்தகைய சுகம் அநுபவித்தால், நீ அநுபவிக்கும் அந்தச் சுகத்திற்கு நான் காரணமாயிருந்தால்,— அடி ரசிகே! அதுதானடி உனக்குச் சுவர்க்கம். நீ உன் மனத்தில் காதலனைப்பெற்ற இன்பத்தைத்தான் கண்டாய். உன் காதலனுக்கு நீ காதலியாயிருக்கின்றாய், என்றறிந்ததையும் இன்பம், அதாவது நீ காதலிக்கும் காதலன் மனம் உன்னையே காதலிக்கின்றது என்றறிவதானுண்டாகும் இன்பம், அந்த இன்பம் எப்படியிருக்குமென்று உனக்குத் தெரியுமா?

நான் என்னென்ன எண்ணுகிறேன்! என் அன்பனும் இவ்வாறுதான் எண்ணுகின்றாரோ? அவ்வாறு அவர் என்முன் இப்பொழுது தோன்றிச் சூறுவாராயின் நான் என்ன ஆனந்த மடைவேன்! என் கண்ணாளா! என் கம்பீரமே! என் முன் வந்து "அடி என் ரசமே! என் ரசிகே!" என்ற இரண்டே வார்த்தைகளைச் சொல்லிவிடு, போதும். என் வாராதிருக்கின்றாய்? எங்கள் அந்தப்புரத்திற்கு வருவது தகுதியோ என்னவோ என்றஞ்சுகிறாயோ? உண்மையில் உன்மனம் காதல் நிறைந்திருந்தால் அந்தக் காதல் இந்த அச்சத்தை வென்றுவிடுமே. என் அன்பே! இன்னும் ஒருமுறை உன் அற்புத உருவத்தை நான் தரிசித்தால்— என்ன மனோராஜ்யம்! அடி ரசிகே! இதென்ன வீண் கனவுகள்! அவர் வரார். அவர் உன்னைக் காதலிக்கின்றார் என்று சொன்னவள் எவள்? அவர் மனத்தைக் கவரும் சக்தி உன்னிடத்தில் என்ன இருக்கிறது? நீ அரசனது ஜேஷ்ட புத்திரியாலால் அவருக்கென்ன?— இல்லையில்லை, என் எண்ணம் வீண் கனவுகளல்ல. அவரால் என் மனம் உருகுவதால் என்னால் அவர் மனம் உருகத்தான் வேண்டும். காதல் என்னும் இவ்வற்புத உருக்கம் எக்காலத்தில் தலைவன் தலைவி ஆகிய இருவர் உள்ளத்திலும் ஜனிக்குமோ யொழிய தலைவியின் உள்ளத்தில் மாத்திரம் உதிப்பது அசம்பாவிதம்.— தலைவி! தலைவி! நான் என் நாதனது தலைவியா! என்ன இனிய வார்த்தைகள்! என் சுந்தரமே! உன் தலைவியைக் கண்டு அவள் கன்னமொன்றை நீ முத்தமிட்டால்—(புன்னகை புரிகின்றாள்) காதலர், கன்னத்தையா முத்தமிடுவார்கள்? இதழ்களோ முத்தமிடுவார்க ளென்றுதான் வாசித்திருக்கிறேன். என் அன்பன் என் இதழ்களையா முத்தமிடுவார்! அம்மம்மா! நினைக்கும்பொழுதே என் தேகமெல்லாம் சிலிர்க்கிறதே. முத்தமிட்டால் என்ன இன்பமயமாயிருக்குமோ! அந்த இன்பத்தை ஒரு முறை எனக்கு அளித்துவிட்டுப் போய்விடு, என் ஆருயிரே! வா! நீ வருவாயென்று நேற்றுங் காத்திருந்தேன். நீ வரவில்லை. இன்றேனும் வருவாயோ? என்னிடத்தில் உனக்கு அன்பிருந்தால்தான் நேற்றே வந்திருப்பாயே. உனக்கு என்னிடத்தில் அன்பில்லைபோலும். ஐயோ! இதுதானோ என் கதி! என்காதலன் அன்பை நான் பெறவில்லையா? நான் பெறாமல் வேறு எவள் பெறுவாள்? அவருக்கு என்னிடம் அன்பில்லை யென்பது பொய். அதை நான் நம்பமாட்டேன். அது மெய்யாயிருந்தாலும் நான் நம்பமாட்டேன். ரசிகே! எது பொய்யாயிருந்தாலும் எது மெய்யாயிருந்தாலும் இன்பமயமான எண்ணங்களை எண்ணி நீ சுகித்திருப்பதற்கு உனக்குச் சுதந்தரம் இல்லையா என்ன! உன்னிஷ்டப்படி நீ சுகித்திரு. உன் காதலன் உன் முன் நிற்பதாகவும் உன்னைநோக்கி அவர் புன்னகை புரிவதாகவும், "அடி ரசமே!" என்று உன்னை அழைப்பதாகவும் உன் அதரங்களை முத்தமிடுவதாகவும் நீ மனத்தாற் பாவித்துக் கனவுகண்டு சுகப்படு.

ஆனால் வெறுங்கனவுமாத்திரம் காண்பதில் என்ன பிரயோஜனம்! கனவு காண்பதிலேயே இவ்வளவு இன்பமிருக்கிறதே. காணும் கனவு பிரத்தியட்சத்தில் பலிதமானால்—ஐயோ அம்மா! எனக்கும் அந்தச் சுகம் சித்திக்குமா! சித்திக்குமானால் எப்பொழுதுதான் சித்திக்கும்!

தாகத்தினால் மருண்டு என்னைத்தேடிவந்த அன்பே! நீ இங்கே வரும்படி மீண்டும் உனக்கு ஒரு தாகம் உண்டாகாதா! என்னடி ரசிகே! பன்னிப் பன்னிப் பன்னி இதே கனவைக் காண்கிறாய்! வருபவராயிருந்தால்தான் வருவாரே! அவர் வாரார் போ? அவர் வராமலே யிருந்தால் நான் அவரை நினைத்து எவ்வளவு காலம் இவ்வாறு ஏங்கி ஏங்கி உருகவேண்டும்? ஏங்கி ஏங்கி உருகவா! எனக்கும் ஏக்கமா! என் அம்மணி எனக்கு ஏக்க மற்ற இன்பமயமான காதலை அளித்தாள் என்று முன்பு எண்ணினேனே. இப்பொழுதோ, ஏங்கி ஏங்கி உருகுவதைப்பற்றி எண்ணுகிறேன். ஆனால் இந்த ஏக்கத்திலும் ஒரு இன்பம் இருக்கிறது. நான் இரண்டு தினத்திற்கு முன்பு மனத்தில் இவ்விதமான கிளர்ச்சியற்ற ஒரு பேதைப் பெண்ணாக இருந்ததைவிட, இப்பொழுது என் நாதனை நினைத்து ஏங்கி ஏங்கி உருகுவதே எனக்குப் பிரியம். காதலில் ஏக்கம் என்ற துன்பம கலந்துதான் இருக்கிறது. ஆனால் அது கசப்பற்ற ஏக்கம். நான் பிரியப் பிரியப்படாத ஏக்கம். ஆகையால் அதை இன்பமயமான துன்பம் என்னலாம். இன்பமயமான துன்பமா! என்ன வேடிக்கை! கேட்போர்களுக்கு வேடிக்கையாகவும் முரணாகவும்தான் இருக்கிறது. அநுபவிப்பவர்களுக்கல்லவோ அதன் உண்மை தெரியும்.—ஹா! என் மனம்தான் எவ்வளவு தூரம் ஓடி ஆலைகிறதம்மா! இன்னும் என்னென்ன விஷயங்களைத்தான் எண்ணும் பார்ப்போம். அவர் வாரார். (பெருமூச் செறிகின்றாள்.) சற்றுநேரத்தில் வசுகரி வந்துவிடுவாள். நான் என் பூங்கொய்யவில்லை என்று என்னமெல்லாம் சாக்குச் சொல்லவேண்டும். பின்பு பூஜைக்குச் செல்லவேண்டும். தியானத்தில் இன்று இந்தப் பாழ்மனம் பதிந்திருக்குமோ என்னமோ! தியானத்தின் பின்பு, சற்றுநேரத்தில் நிலவு தோன்றிவிடும். என்ன! என்ன! என்ன! அடி விசித்திர மனமே! நிலவு என்பதை நினைத்தவுடனே உனக்கு இவ்வளவு பதற்றமா? அடி ரசிகே! நிலவில் என்ன சுகத்தையடி கண்டுவிட்டாய்? சுகத்தையா கண்டேன்! நிலவைக் கண்டவுடன் நெஞ்சில் பெருகு கொதிப்பு புஸ்ஸென்று அக்கொதிப்பு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் பரவ, என் உருக்கமும், என் ஏக்கமும், என் கனவுகளும் இப்போது இருப்பதைவிட ஆயிரமடங்கு அதிகமாகப் பொங்கி என்னைச் சுழற்றிச் சுழற்றிச் சுழற்றி உச்சியும் சுகத்தைத்தான் கண்டேன். அது சுகமாகுமோ! சுகமல்லவானால் என் நிலவிலிருந்து அப்பால் செல்ல என் மனம் சற்றும் இணங்குவில்லை! சுகமில்லையானால் நிலவை நினைத்தவுடன் என் மனம் இப்ப

டித் துள்ளுகிறது! அன்றியும் சந்திரன் தோற்றுத் தோன்றிய அழகோடு எப்பொழுதுதான் எனக்குத் தோன்றினீர்? அதன் வெண்மையும், அதன் இனிமையும், அதன்மந்தகாசமும், அது வீசும் அற்புதமான ஒளியும், அதன் சௌந்தரிய வடிவமும்,— அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோதே அமிர்தம் பருகிக்கொண்டிருப்பதுபோலிருந்ததே. கண்கள் பருகும் அமிர்தம்மாதா! அது அவ்வளவு சௌந்தரியமாய், அவ்வளவு அமிர்தமயமாய், அவ்வளவு பிரகாசமயமாய், அவ்வளவு அற்புத மயமாய், நேற்றிரவுற்று முன்பு ஒருநாளும் எனக்குத் தோற்றவில்லையே. ஆனால் நேற்றிரவு மாத்திரம் என் கண்ணாளன் என்னருகிலிருந்தால், "அடி என் கண்ணே! ரசிகே! இந்தச் சந்திரனைப் பாராடி" என்று சொல்லியிருந்தால், என் இதழ்களாலேயேனும் கன்னத்தாலேயேனும், நெற்றியாலேயேனும் முத்தமிட்டிருந்தால்— ஐயோ அம்மா! இந்த எண்ணத்தில்தானே என் துன்பமெல்லாம் தோற்றுகிறது. என் அங்கமுழுவதும் அக்கினிமயமாகிறது. இந்த எண்ணங்களை மறக்க வேண்டுமென்று விநோதார்த்தமாக நேற்று நிலவிற் சென்றால், அச்சந்திரன் இந்த எண்ணங்களையெல்லாம் அதி உக்கிரமாகப் பெருக்கி என்னை வருத்திவிட்டாள். அவன் அவ்வாறு வருத்தியும் அவனைப் பிரிய எனக்கு இஷ்டமில்லையே. அவனை என்னைப் பிரிந்தபிறகும் எப்பொழுது இரவாகும், சந்திரன் எப்பொழுது வருவான் என்று எதிர்பார்த்துக்கொண்டே யிருக்கிறேன். சந்திரன் என்சத்துருவா, மித்துருவா? நான் பிரிய விரும்பாத சத்துரு, என் இனிய சத்துரு என்று சொல்லலாம். அல்லது என் கொடிய மித்துரு, என்னலாம். (புன்னகை யுறுகின்றாள்.) என்ன என்ன விபரீதங்களம்மா? ஜானகி! தயங்தி! நீங்கள் உங்கள் காதலர்களை முதல் முதல் கண்டபிறகு இந்த விபரீதங்களைக் கண்டீர்களா! ஆனால் அப்பொழுது நீங்கள் இருந்த ஸ்திதியைப் பற்றி எழுதிய கவிகள் சந்திரனை நீங்கள் முற்றிலும் வெறுத்தீர்களென்றும் சந்திரனால் நீங்கள் வெறும் துன்பமாத்திர முற்றதாகவும் எழுதியிருக்கிறீர்களே. ஆனால் அவர்கள் என்ன செய்வார்கள்! நீங்கள் நிலவில் வருந்தியதாய்த்தோற்றியதை எழுதினார்கள். உண்மையில் சந்திரன் உங்கள் அகத்தில் இனிய சத்துருவாகவும் கொடிய மித்துருவாகவும் இருந்ததை அவர்கள் உணரவில்லை போலும். உங்கள் ரகசிய உணர்ச்சிகளை யெல்லாம் அநுபவத்தில் அறிகின்ற நான் இனி உங்களைப்பற்றி எழுதும்படி நேரிட்டால், உங்கள் காதலுக்கும் சந்திரனுக்கும் இருந்தசம்பந்தத்தை உண்மையாய்சொல்லுவேன். என்உயிர்ச்சகிகள்! உங்களை என் உயிர்ச் சகிகள் என்ற ழைக்கிறேன். ஏனென்றால் உங்கள் காதற் கிளர்ச்சியின் நன்மையை உண்மையாய் அறிந்தவள் நான். என் உயிர்ச் சகிகள்! உங்களுக்குச் சகிகளிருந்தார்களாமே. நீங்கள் உங்கள் காதல் ரகசியங்களை அந்தச் சகிகளுக்குச் சொல்லுவீர்களாமே. எனக்கு என் பிரிய சகோ

தனிவசிகரியைத் தவிர வேறொரு சகியையும் என் தந்தை எற்படுத்த வில்லை. என் உயிர்க்குயிராகிய என் சொந்தத் தங்கை வசிகரிக்கும் என் ரகசியத்தை சொல்ல என் நாவு கூசுகின்றதே. நீங்கள் அந்திய ஸ்திரீகளாகிய உங்கள் சகிகளுக்கு உங்கள் காதல் ரகசியங்களைச் சொல்ல எப்படித் துணிந்தீர்களோ? உங்களுக்கு நாண மென்பதில்லையா? அல்லது நான்தான் பெண்களுக்கு இருக்க வேண்டிய அளவிற் கதிகமான நாணமுடையவளாயிருக்கிறேனோ? எப்படியிருந்தாலும் என்— (என்னவோ ஒன்று தொப்பென்று கீழே விழுகின்றது. ரசிகை தன்னைச் சுற்றிப் பார்க்கிறாள்.) மாம்பழம்! இதென்ன பழத்தோடு ஒரு ஓலையும் எழுது கருவியும் கட்டப்பெற்றிருக்கின்றனவே. (மூன்றையும் எடுத்து ஓலையில் எழுதப்பட்டிருப்பதை வாசிக்கின்றாள்:—)

"அன்பின் தகைமை அறைதுவன் அறிக
இன்புற வஃது ஈர்கம் பொருந்தும்."

(ஓலையை முத்தமிடுகின்றாள்.) என் இன்பமே! இவ்வளவு நாழிகை நான் காத்திருந்தபின் இப்பொழுதுதான் உன் உள்ளம் இரங்கிற்றோ? அன்பு இரண்டு நெஞ்சங்களில் பொங்கும் என்று சொல்லுகின்றனை? ஆமாம் மெய்தான். ஒரு நெஞ்சத்தில் மாத்திரம் பொங்காதுதான். ஒன்றில் எப்பொழுது பொங்கிற்றோ அப்பொழுதே அது மற்றொரு நெஞ்சிலும் பொங்கத் தான்வேண்டும். ரசிகே! வாரீர் வாரீர் என்றேங்கினையே. வந்துவிட்டாரடி. (தான் ஓலையில் என்னவோ எழுதி அதை வாசிக்கின்றாள்,)

"அன்பின் தகைமை அறிந்தது மெய்யெனில்
இன்புற இவள்வா ஏனை மயக்கம்?"

(மீண்டும் வாசிக்கின்றாள், புன்னகையுறுகின்றாள், மீண்டும் வாசிக்கின்றாள்.) இதைப் பார்த்து நான் அதிக துணிவுற்றவள், அச்சமற்றவள், நாண மற்றவள், என்று என் அன்பன் எண்ணுவரோ? இல்லை. என்பால் அன்புடைய அவர் அவ்வாறு எண்ணார். (எழுந்து மாம்பழத்தையும், ஓலையையும், எழுது கருவியையும் வேலிக்கப்பால் எறிகின்றாள். சற்று நேரத்தில் வேலி பிரிக்கப்படுகிறது. கையிற் கத்தியுடன் கண்ணன் வருகின்றான். ரசிகை திகைத்து ஒடுகின்றாள்.)

கண்ணன்:—அஞ்சவேண்டாம் தாயே! நான் அவர் சகோதரன்தான் (நமஸ்கரித்தெழுகின்றான்.)

ரசிகை:—(ஓடாமல் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டு) யாருடைய சகோதரர்?

கண்ணன்:-அன்று இச்சோலைக்குள் மூர்ச்சித்தவருடைய சகோதரன்.

ரசிகை:—(தனக்குள்) ஆம் அவருடைய முகச்சாயலிருக்கிறது, மெய்தான்.
(வெளிப்படையாய்) அவர் யார்? அரசவம்சத்தைச் சேர்ந்தவரா?

கண்ணன்:—அரச வம்சத்தைச் சேர்ந்தவரல்ல. உங்கள் பிரஜைகளிலொருவர்தான். ஆனால் அவர் தருந்த அந்தஸ்தை யடைவதற்கு முன்பு விவாகத்தைப்பற்றிக் கனவிலும் எண்ணார்.

ரசிகை:—நீங்கள் என் இக்கு வந்தீர்கள்?

கண்ணன்:—அன்றிரவு அகத்துக்கு வந்ததுமுதல் என் சகோதரர் சித்தை கலங்கி வாடுகின்றார். காரணம் நான் சொல்லவேண்டியது தாவசியமில்லை யென்று நினைக்கிறேன். அவருக்கு நீங்கள் கூறத்தகும் தேற்றமொழி என்னவென்றறிந்து போவதற்கே வந்தேன்.

(ரசிகை நாணித் தலைதாழ்த்துகிறாள்.)

கண்ணன்:—அம்மா! நான் அவருக்கு உயிர்ச்சகோதரன். என்னை நீங்கள் நம்பலாம்.

ரசிகை:-எல்லாம் பங்கஜவல்லியின் செயல். அவர் வருந்தவேண்டாம். அம்மணியின் கருணையால் யாவும் இனிமையாய் முடியும், என்று சொல்லுங்கள்.—இனி நீங்கள் இங்கே தாமதிக்கவேண்டாம், போய்விடுங்கள். வசிகரி வந்துவிடுவாள்.

கண்ணன்:—(வியப்புடன்) வசிகரியம்மாளா!—சகலகலாவல்லி! இதென்ன சோதனையம்மா!

ரசிகை:—என்! சகலகலாவல்லி என்ன சோதனை செய்துவிட்டாள்?

கண்ணன்:—தாயே! நீங்கள் யார்? அரசரது மூத்தபுத்திரி ரசிகையம்மையோ?

ரசிகை. ஆமாம், அதற்கென்ன?

(கண்ணன் பிரமித்து ஒன்றும் பேசாமல் ஸ்தம்பமாய் நிற்கின்றான்.)

ரசிகை. (சற்று யோசிக்க அவள் முகம் சிவக்கின்றது.) அறிந்து கொண்டேன். நான் வசீகரி என்று நினைத்தீர்களோ? உண்மையைச் சொல்லிவிடுங்கள். மறைக்க வேண்டாம்.

கண்ணன்:—ஆமாம் அம்மணீ! உண்மை அதுதான்.

ரசிகை. (சற்றுலாசித்து, பெருமூச் செறிந்து) வசீகரியின் சித்தம் எவ்வாறு இருக்கிறதென்று நான் அறிந்து சொல்லுகிறேன். நீங்கள் அடுத்த சுக்ரவாரத்தன்று இந்நேரத்திற்கு இங்கே வாருங்கள். வசீகரியின் சித்தம் இப்பொழுது எவ்வாறு இருந்தபோதிலும், அவர்பால் அன்பை அவளிடத்தில் திருஷ்டித்து அவளுக்கும் அவருக்கும் விவாகத்தை நிறைவேற்ற ரசிகை தன்னாலியன்ற உதவியெல்லாஞ் செய்வாளென்று அவருக்குச் சொல்லுங்கள். நாழிகை யாகிறது, நீங்கள் போகலாம்.

(கண்ணன் நமஸ்கரித்துவிட்டுச் செல்லுகின்றான்.)

ரசிகை:—சற்றுப் பொறுங்கள். ஒரே ஒரு வார்த்தை.

(கண்ணன் திரும்பி வந்து நிற்கின்றான்.)

ரசிகை:—நீங்கள் சத்தியத்தைக் காப்பாற்றுவீர்களா?

கண்ணன்:—அரிச்சந்திரனைப்போல் காப்பாற்றவேண்டுமா! சந்தேகிக்க வேண்டாம்.

ரசிகை:—அப்படியானால் எனக்கு ஒரு வாக்களிப்பீர்களா?

கண்ணன்:—தாங்கள் கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கின்றேன்.

ரசிகை:—(முகஞ் சிவந்து நாணி) என்ரகசியமும் என் மானமும் உங்கள் கையில் இருக்கின்றன. நீங்கள் ஓலையில் எழுதினதையும், நான் அதற்கு எழுதிய உத்தரத்தையும், நான் வசீகரியல்லவென்று நீங்கள் அறிந்துகொள்வதற்கு முன்பு நான் பேசிய வார்த்தைகளையும் என் உத்தரவின்றி நீங்கள் யாருக்கும் அறிவிப்பதில்லை யென்றும் உங்கள் அகத்திலேயே பூட்டிவைத்திருப்பதாகவும் எனக்கு உறுதிமொழி தரவேண்டும்.

கண்ணன்:—அவ்வாறு நடந்துகொள்வது எனது தவறுக் கடனுமிற்றே.

ரசிகை:—சரி—நான் உங்களை நம்புகின்றேன். நீங்கள் போகலாம்.

(கண்ணன் செல்லுகின்றான். வேலி முன்போல அமைக்கப்படுகிறது.)

(ரசிகை விழிகளில் நீருடன்சோர்ந்து புல்மீது சாய்ந்து கண்களை மூடிக் கொண்டு ஆலோசிக்கின்றாள். சற்று நேரத்தில் வசீகரி வருகின்றாள்.)

வசீகரி:— அக்கா! அக்கா! அக்கா!

ரசிகை:—(கண் விழித்து) என்னடி!

வசீகரி:—ஏனக்கா அப்படிச் சோர்ந்து படுத்திருக்கிறாய்?

ரசிகை:— ஒன்றுமில்லை, சற்றுத் தலை நொந்ததால் சற்றுப் படுத்துக் கண்ணயர்ந்தேன்.

வசீகரி:—உன் கண்களிலிருந்து ஜலம் வழிந்திருக்கிறதே. உனக்கென்ன துயர மக்கா?

ரசிகை:—ஒன்று மில்லை, தலைவலியின் உக்கிரத்தால் வழிந்த ஜலந்தான், வேறொன்று மில்லை. போகலாம்வா (புஷ்பத்தட்டை எடுத்துக்கொண்டு எழுகிறாள்.) (இருவரும் சொல்லுகிறார்கள்,)

(தொடரும்.)

பத்திராதிபர்.

கண்ணம்மாள் கதை.

146-ம் பக்கத் தொடர்ச்சி.

கண்ணம்மாள்:—புதிய கலை உடை பாவனை எல்லாம் அதிக்ரமம் என்று லோகம்பாள் அம்மாள் சாடுகிறார்கள். பழைய வைகளைவிடப் புதிய வைகளே சிறந்தவை என்று கற்பூரவல்லியம்மாள் சொல்லுகிறார்கள். எதை அநுசரித்தாலும் கர்வம் இல்லாதிருந்தால் போதும் என்று ஜானகி சொல்லுகிறாள். ஒழுக்கமும் கல்வியுந்தான் பெண்களுக்கு முக்கிய அழகு என்று லோகம்பாள் அம்மாள் வற்புறுத்துகிறார்கள். நடை உடை பாவனைகளில் ஒன்றொன்றைப் பழித்துப் பழித்துப் பேசுவதால் ப்ரயோஜனமென்ன. அவரவர்கள் அவரவர்கள் இஷ்டப்படி அமைத்

துக்கொள்ளுகிறார்கள். உண்மையில் பெண்களுக்குள் அக்கிரமம் இருக்கிறதென்றால் பெண்கள் ஒழுக்கங் தெடுவதும் ஜானகி சொன்னபடி கர்வம் முதலிய கெட்ட குணங்களுடையவர்களாயிருப்பதுமே. இவைகள் இல்லாம லிருக்கவேண்டியதற்குச் சாதனம் ரவிக்கையை முழங்கைக்குக் கீழே கரிப்பதுமல்ல மேலே தரிப்பதுமல்ல. இவைகள் இல்லாமலிருப்பதற்குச் சாதனம், கூந்தலே நேர் உச்சி வகிர்ந்து சிவதலுமல்ல, கோணல் கோணலாக வகிர்ந்து சிவதலுமல்ல. இவைகள் இல்லாமலிருப்பதற்குச் சாதனம், புருஷனோடு சாரட்டுவண்டியில் ஏறுவதுமல்ல, வீட்டிலே அடைபட்டுப் புழுங்கியிருப்பதுமல்ல. பின்பு எதுதான் சாதனம்? பெற்றோர்கள் பெண்களை வளர்க்கும் முறை ஒன்று. இரண்டாவது பெண்களுக்கு நிறைந்த கல்வி கொடுத்தல். நல்ல பெற்றோர்களால் விசேஷ சிரத்தையுடன் நன்மாதிரியில் வளர்க்கப்பெற்ற பெண் ஆயிரம் புருஷர்களுக்கு மத்தியில் பழகியபோதிலும், பரிசுத்தவதியாகவே யிருப்பாள் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். நிறைந்த கல்வி யில்லாமல், வெறுமனே தமிழைச் சற்று எழுதப் படிக்க மாத்திரம் தெரிந்துகொண்டு, தமது பெண்கள் மனம்போனபடி நவீன உண்மை பாவனைகளை அமைத்துக்கொண்டு, ஜானகி சொன்னபடி கர்வங்கொண்டு மிருக்கிறார்கள். இதற்கு யாரைத்தான் சேர்வது? பெண்களுக்கு உயர்ந்த படிப்பு வெகு சாதாரணமாகப் பரவுகிற வரையில் அவர்கள் நிலைமை இப்படித்தானிருக்கும்.

இவ் விஷயத்தைத் தொடர்ந்தும் மற்றும் பற்பல விஷயங்களைப்பற்றியும் சுமார் இரண்டுமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியாக, லீலாம்பாள் "இத்தனை நேரம் நாம் என்னென்னவோ முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச்சு இழுத்தபடி யெல்லாம் பேசினோம். இப்படிப் பேசி வீண் காலப் போக்குவதாகக் கழிப்பதைவிட நமக்குள் ஒரு சங்கம் ஏற்படுத்தி அடிக்கடி ஒரு மீட்டிங் கூடி பல நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசியும் புத்தகங்கள் பத்திரிகைகள் வாசித்தும், அபிவிர்த்தி செய்துகொண்டால் நல்லதல்லவா?" என்றாள்.

"ஆமாம் அது நல்ல யோசனைதான், பட்டணத்தில் பல பெண்கள் சங்கங்களிருக்கின்றன, நமது ஊரிலும் ஒன்று அவசியம் இருக்கவேண்டும்." என்று கற்பூரவல்லியம்மாள் ஆமோதித்தாள். இதைப்பற்றிப் பேச்சு வளர்ந்தது. பெண்கள் சங்கம், புத்தகசாலை, மீடிங், பெண்கள் பெரிய பிரசங்கிகளாதல், பத்திரிகை பிரசுரித்தல், பெண்கள் உயர்ந்த கல்விபெற பல உதவிகள் அமைத்தல், பெண்கள் சங்கீதத்தில் அபிவிர்த்தியுறல், தமிழ் நாட்டில் வேறு எங்குமில்லாத ஒரு அரிய பெரிய பெண்கள் சங்கம் கூடலூரில் வளர்ந்து பிரபலமடைந்து தமிழ்நாடு முழுவதும் பெண்கள் நிலைமையில் ஒரு பெரிய அபிவிர்த்தி யுண்டாகல்—என்பது வரையில் ஐந்து பெண்களூர், காங்கள் அமைக்கப்போகிற பெண்கள் சங்கத்தின் எதிர்கால மேலிலைகளைப்பற்றிப் பேச சிறுற் கோட்டை கட்டினார்கள். ஆனால் கண்ணம்மாள் தான் சங்கத்தில் ஒரு அங்கத்தினளாக முடியாதென்றும், தன் கணவன் சம்மதிக்க மாட்டா ரென்றும், ஆனால் சங்கத்துக்காகத் தன்னாலியன்றவரை உழைப்பதாகவும் கூறினாள். அன்றியும், "முதன்முதல் இந்த விஷயத்தில் இவ்வூரிலுள்ள ஒரு பெரிய கனவான் மனைவியைச் சம்பந்தப்படுத்த வேண்டும். பாலகிருஷ்ணராஜா இருக்கிறாரே, அவர் ஒரு கனவான். ஊரில் அதிக செல்வாக்குள்ளவர். அவர் மனைவிக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தி அந்த அம்மாளை நமது சங்கத்திற் சேர்க்கவேண்டும்." என்றும் கூறினாள் கண்ணம்மாள்.

"அண்டைத்தெருவில் ஒரு உபாத்தியாயரம்மாள் இருக்கிறார்களே, அவர்களை அழைத்துவந்து யோசனை கேட்போம்" என்றாள் கற்பூரவல்லி. உடனே ஜானகி போய், பெண் பாடசாலை உபாத்தியாயினி கிருஷ்ணம்மாளைக் கையோடு அழைத்துவந்தாள். ஆனால் உபாத்தியாயினி அம்மாள் விஷயமெல்லாந் தெரிந்துகொண்டு, "இது வெகு கஷ்டமான காரியந்தான், ஆனால் நான் இதில் சம்பந்தப்பட்டால் அந்த விஷயம் எங்கள் மேல் அதிகாரிகளுக்குத் தெரிந்து என் உத்தியோகத்திற்கே ஒருகால் ஏதானி வரும். ஆகையால் என்னால் இம்மாதிரி விஷயத்தில் தலையிட முடியாது." என்றாள்.

"இது என்ன, அடாத காரியமா? அதிகாரிகளுக்குத் தெரிந்தால்தான் என்னமோ! இதனால் வன் உங்கள் வேலைக்கு ஹானி? நீங்கள் நன்றாய் வாசித்தவர்கள். நீங்களே இப்படிச் சொன்னால் நாங்கள் என்னசெய்வோம்!" என்றாள் நீலாம்பாள் அம்மாள். ஆனால் கிருஷ்ணம்மாள் ஒரே பிடிவாதமாய்த் தான் கூறியதையே கூறி விடைபெற்றுக்கொண்டு போய்விட்டாள். "அவள் போனால் போகிறாள்" என்று சொல்லிவிட்டு நீலாம்பாள் கற்பூரவல்லி யம்மாளைக் காகிதம், மை, பேனு கொண்டுவரும்படி செய்து, கண்ணம்மாளோடு கலந்து பின்வருமாறு ஓர் சுற்றுக் கடிதம் தயார் செய்தாள்:—

ஓர் வேண்டுகோள்.

அன்பார்ந்த சகோதரிகளே!

ஒழுக்கம், கல்வி, அறிவு முதலிய நலங்களில் நமது நகரத்துச் சகோதரிகள் மேம்பட்டுத் துலங்கும் பொருட்டுப் பெண்கழகம் ஒன்று பிரத்தியேகமாகச் சங்கமொன்று ஸ்தாபித்தல் வேண்டுமென்ற உன்னத நோக்கம் பலர் சித்தங்களிற் பதிந்திருப்பதாகத் தெரிகின்றது. காலத்துக்கு நாள் பல நல்லிஷயங்களில் அபிவிர்த்தி யடைந்து வருகிற நமது நாட்டில் பல விடங்களில் அக்கலைய பெண்கள் சங்கங்கள் நடைபெற்றுவர, நமது கூடலூரில் ஒன்று இல்லாதிருப்பது நமது அழகிய நகரத்திற்கே ஒரு பெருங் குறை. இதனைச் செவ்விதாய் உணர்ந்து அப் பெருங்குறையை நிவர்த்திக்கும் நிமித்தம் நமக்குள் ஒரு சங்கம் அமைக்கப் பிரியமுள்ள சகோதரிகள் இதனடியிற் கையொப்ப மிடுமாறு வேண்டுகின்றோம்.

சங்கம் நிர்மாணிக்கப் பெற்றபின்னர், ஆரம்பத்தில், சகோதரிகள் வாரந்தோறும் கூடி "திருக்குறள்" அல்லது வேறு தக்க தமிழ்நூல் ஒன்றை ஆராய்வதாலும், பல நல்லிஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தும் வியாச மெழுதி வாசித்தும் பிரசங்கித்தும் பயிற்சி செய்வதாலும் அறிவைப் பெருக்கவும், காலடைவில் சிறிது சிறிதாகச் சங்கத்தின் நோக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் விசாலப்படுத்திக் கொள்ளலாம்.

இங்ஙனம்,

கூடலூர்,
நளவரு ஆனிமீ வ }

முற்கூறியவாறு கூடலூரில் ஒரு பெண்கள் சங்கம் அமைக்க நாங்கள் சம்மதிக்கின்றோம்.

இங்ஙனம்,
ஜயலக்ஷ்மி.
கற்பூரவல்லித்தாயார்.
நீலாள்.
ஜானகி.

இவ்வாறு, "இங்ஙனம்" என்ற பதத்தின்கீழ் பாலகிருஷ்ணராஜ மனைவி கையொப்பம் மிடுவதற்கு இடம் விட்டு, அதன்கீழ் ".....நாங்கள் சம்மதிக்கிறோம்" என்பதற்குக் கீழ் கண்ணம்மாளைக் கவிர மற்ற நான்கு பெண்களும் கையொப்பமிட்டார்கள். கண்ணம்மாளோ, தான் சங்கத்தின் அங்கத்தினளாக இருக்க முடியாதாகையால் கையொப்பமிட மறுத்தாள். அப்பொழுது நீலாம்பாள் அம்மாள் அவளை நோக்கி, "என்ன கண்ணம்மா! நீங்களும் உபாத்தியாய சம்மாளைப்போல் பேசினால் பின்பு இந்த நல்ல காரியம் எப்படித்தான் நிறைவேறும்! இப்பொழுது நீங்கள் இதில் கையெழுத்து இட்டதினாலே என்ன பாதகம் வந்து விடும்! முதன் முதல் கையெழுத்துக்காவது இதில் இருக்க வேண்டாமா? சங்கம் அமைத்தான பின்பு வேண்டுமானால் நீங்கள் நீங்கிக்கொள்ளலாம். இப்பொழுது அவசியம் நீங்கள் கையெழுத்து இடத்தான் வேண்டும்." என்று வற்புறுத்தினாள். மற்ற மூன்று பெண்களும் அவ்வாறே கண்ணம்மாளை நிர்ப்பந்தித்தார்கள். கண்ணம்மாள் அதற்கு மாறாகப் பல நியாயங்கள் எடுத்துச் சொல்லிப் பார்த்தாள். அவர்கள் அவைகளை ஒப்பவில்லை. கடைசியாய் ஜயலக்ஷ்மி அம்மாள், கண்ணம்மாளைப் பெரும் பிடிவாதக்காரி என்று சொன்னாள். கண்ணம்மாள் கையெழுத்திடவில்லை என்றால் தான் தன் கையெழுத்தை அழித்துவிடுவதாகச் சொல்லி ஜானகி பேனாவைக் கையிலெடுத்தாள். நீலாம்பாள் அதைத் தடுத்து பேனாவை ஜானகி கையிலிருந்து வலிந்திற் பற்றிக் கொண்டாள். "என் இஷ்டத்தை எப்படி நீங்கள் தடுக்கலாம்?" என்று ஜானகி சினத்து அவளோடு வாதிக்கத் தொடங்கினாள். "பெண்கள் கூட்டம் பேய்கள் கூட்டம்தான்,"

இதோ நான் இதை ஒரே இழியாய்க் கிழித்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிடுகிறேன்" என்று சொல்லி ஜயலக்ஷ்மி எடுக்கப்போன சுற்றுக் கடிதத்தைக் கண்ணம்மாள் சட்டென்றுத் தன் கைபிலெடுத்து மடித்துக் கொண்டாள். "அஞ்சே அஞ்சு பெண்கள் கூட்டத்தில் இவ்வளவு சண்டையா! சி! கட்டுங்கள் உங்கள் கடையை!" என்றாள் கற்பூரவல்லி யம்மாள்.

"பார்த்தாயா கண்ணம்மா! பெண்டிர் கூட்டின் சண்டை விளையும், என்று அன்றைக்குப் பத்திரிகையில் வாசித்தவுடன் உனக்கு என்ன ஆத்திரம், என்ன ரோஷம் வந்தது! உடனே அதில் எழுதியிருந்ததையெல்லாம் சின்ன பின்னமாக வெட்டி வெட்டித் தள்ளி, பன்னிரண்டு முழம் அதே பத்திரிகைக்கு எழுதியனுப்பினையே. இப்பொழுது பார் அநுபவத்தில்" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் ஜானகி. கண்ணம்மாளுக்கு முகம் செக்கச் செவேல் என்றாய்விட்டது. தன் ரகசியத்தை ஜானகி பகிரங்கமாக்கத் தொடங்கியதா லுண்டான ஆத்திரம் ஒன்று. அதற்குமேல் பன்மடங்கு அதிக மாயிருந்தது, தான் எழுதிய விஷயத்தை ஜானகி அலக்ஷியமாகக் கருதியதால் எழுந்த ஆத்திரம். இந்த இரண்டு ஆத்திரங்களும் பொங்க, கண்ணம்மாள் ஜானகியை ஓர் கூரிய பார்வை பார்த்தாள்.

"உன் பார்வை என்னை என்ன செய்துவிடும்! நான் உன் பேச்சில் மயங்கி என்னென்னவோ எண்ணியிருந்தேன். பெண்கள் உயர்வடைவதற்காக நீ உன் உயிரைக்கூடக் கொடுப்பாய் என்று நான் பூரண நம்பிக்கை வைத்திருந்தேன். ஒரு வெறுங் கையெழுத்து இட நீ இவ்வளவு கதை செய்வாய் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இந்தத் தேசத்தில் பெண்கள் முன்னேற்ற மடைவதாயிருந்தால், ஆனு என்ற அட்சரமும் அறியாத படிப்பற்ற மூடப் பெண்கள், புருஷனுக்கு அடங்காத பெண்கள், குப்பைக்காட்டுப் பெண்கள், இவர்களால்தான் பெண்கள் நிலைமை உயர்வடையும். படித்த பெண்களெல்லோரும் பக்காப் பயங்காளிகள், மூழுப் பாசாங்குக்காரிகள், வெறும் பதர்கள். நாழிகையாகிறது, நான் போய்வருகிறேன்." என்று சொல்லி ஜானகி எழுந்தாள். "நில் ஜானகி" என்று அவள் கையைப்பிடித் தமர்த்தினாள் கண்ணம்மாள். தன் கையிலிருந்த சுற்றுக் கடிதத்தைப் பிரித்தாள். நீலாம்பாள் கையிலிருந்த பேனாவை

வாங்கி மையில் தொட்டு சுற்றுக்கடிதத்தில் கையொப்பமிட்டுவிட்டாள். பின்பு ஜானகியை நோக்கி, "நீ சொன்ன விஷயங்களைப்பற்றிச் சாவகாசமாய் வீட்டில் போய் பேசலாம் ஜானகி! இப்பொழுது ஒன்றுமாத்திரம் சொல்லுகிறேன். நல்ல காரியங்களுக்கு மலைமலையாக இடையூறுகள் வந்தாலும் மனம் சோர்வடையாமல் முக்கியமாய்க் காரியத்தில் கலந்திருக்கிற, காரியத்தை ஆசரிக்கிற சகோதரிகள் சகோதரர்களுடன் எவ்விதத்திலும் கோபம் பாராட்டாமல் காரியசித்தி ஒன்றையே கருதி இடைவிடாத முயற்சியோடிருக்கவேண்டும்" என்றாள்.

நீலாம்பாள், "ஆமாம், பெரியோர்களும் என்ன சொல்லுகிறார்கள்:—

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்ணோஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னோர்.

இடுக்கண் வருங்கால் நகுக வதனே
யடுத்தூர்வ தஃதொப்ப தில்
முடிவு மிடையூறு முற்றியாங்கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்."

என்று அச்சமயம் தனக்குத் தோன்றிய மேற்கோட் கவிகளைக் கூறி அவைகளுக்குத் தனக்குத் தெரிந்தவரையில் அர்த்தமுஞ் சொல்லி முடித்தாள்.

ஜானகி:—என்மேல் கோபித்துக்கொள்ளாதே கண்ணம்மா! அச்சி பூத்ததுபோல் இந்த ஊரில் பெண்கள் சங்கம் ஒன்று எற்படாமலிருந்தால் உன்னால் உலகத்து போகிறதே என்ற ஆற்றாமையால் நான் என்னென்னவோ பேசிவிட்டேன். ஆனால் நீ அதை மனத்தில் பாராட்டமாட்டாய். புத்திகெட்ட நாய் என்னவோ குலைக்கிறது என்றுதான் எண்ணியிருப்பாய். அதுவும் எனக்குத் தெரியும்.

கற்பூரவல்லி:— ஆ! என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் ஜானகியம்மா! நாங்கள் எல்லோரும் என்ன சொன்ன போதிலும் கேட்காதவர்கள் உங்கள் பிரசங்கத்தாலல்லவா சட்டென்று கையெழுத்திட்டார்கள்.

நீலாம்பாள்:— சரி, வீண் பேச்சில் காலத்தைப் போக்கவேண்டாம். இந்தச் சுற்றுக் கடிதத்தில் பால கிருஷ்ணராஜு மனைவி பாக்கியத்தம்மாள் கையெழுத்து வாங்கி, பலசகோதரிகளுக்கும் அனுப்பவேண்டும். பாக்கியத்தம்மாளைக் கண்டு பேச யார் போவது, எப்பொழுது போவது, என்பதைப்பற்றி யோசியுங்கள்.

"நான் போகிறேன். இப்பொழுதே போகவேண்டும். கண்ணம்மா! நீயும் வா. வேறு யார் யார் வருகிறீர்கள்? என் நாம் 5 பேருமாகவே போகலாமே. எழுந்திருங்கள் எல்லோரும்." என்று எழுந்தாள் ஜானகி.

"நான் வருவதற்குத் தடையில்லை" என்றாள் நீலாம்பாள்.

"எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றாள் ஜயலக்ஷ்மி.

"அவள் பெரிய கர்வக்காரியாச்சே. அவள்வீட்டுக் கல்யாணத்திற்குப் போனால்கூட சரியாகப் பேசமாட்டாளே." என்றாள் கற்பூரவல்லியம்மாள்.

ஜானகி:—அவள் கர்வம் எக்கேடுக்கெல்லாம் தெரியாதா என்ன! அவளை யார் மதிக்கிறார்கள்! அவள் என்ன படிப்பில் பெரியவளா? புத்தியில் பெரியவளா? அவன் அகமுடையானுக்கு நிரம்பச் செல்வமும் வரிசையில் செல்வாக்கும் இருப்பதால் அவர் பெண்சாதியை நமது சங்கத்தில் இழுத்துப்போட்டு வைத்தால் அதனால் அதற்குப் பல அநுகூலங்கள் உண்டாகுமென்றுகருதித்தான் கண்ணம்மாள் இந்த யோசனை யெடுத்தாளேயொழிய அந்தக் கர்வக்காரியை நாம் புஷ்பமிட்டு அர்ச்சித்து நமஸ்காரம் செய்யவா போகிறோம்! அவளும் நமது சங்கத்தைச் சேர்ந்தவள் என்ற பெயரைமாத்திரம் வைத்துக்கொண்டு மற்ற எல்லாக் காரியங்களையும் நாமே நடத்திக்கொண்டு போகவேண்டும். ஆகையால் நாம் நமது சங்கத்தின் நன்மையை முன்னிட்டு அவள் வீட்டுக்குப் போவது நமக்கு எவ்விதத்திலும் அகௌரவமல்ல. நமது சொந்த நன்மையைக் கோரியா போகிறோம்! பொது நன்மையைக் கருதித்தானே போகிறோம். போய் எப்படியாவது நாஜூக்காக, தளுக்காக, அவளோடு பேசி அவள் கையெழுத்தை வாங்கி வந்துவிடவேண்டும்.

கற்பூரவல்லி:—ஆமாம். நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்.

நீலாம்பாள்:—நீங்கள் எல்லாவற்றையும் கலகலவெனக் கொட்டிவிடுகிறீர்கள் ஜானகியம்மா! நமக்குள் இந்தப் பேச்சு ஒருவாறு சரியாகப் போகிறது. நமது சங்கம் எற்பட்டபின் சங்கக் கூட்டங்களில், சங்கத்தைச் சார்ந்த யாரையேனும் குறிப்பிட்டு இம்மாதிரிப் பேசக்கூடாது.

ஜானகி—ஐ! அந்தச் சமயத்தில் நான் இப்படிப் பேசுவேனு! நான் அவ்வளவு புத்தி கெட்டவளல்ல. கண்ணம்மாளே வேண்டுமென்றாலும் கேளுங்கள்.

கண்ணம்மாள் புன்னகை புரிந்தாள்.

"கற்பூரவல்லியம்மா! ஜயலக்ஷ்மியம்மா! நீங்கள் இருவரும் வருகிறீர்களா இல்லையா? சொல்லுங்கள் சீக்கிரம். நாலைந்து பேராகப் போனால்தான் அழகாயிருக்கும். பாக்கியத்தம்மாளால் மறுக்க முடியாது" என்றாள் நீலாம்பாள்.

"எனக்கு என்னவோ பெருத்த லஜ்ஜையாயிருக்கிறது. இதற்கு மாத்திரம் என்னை நிர்ப்பந்தியாதேயுங்கள்," என்று வேண்டினாள் கற்பூரவல்லி.

"நாளைக் கென்றால் நான் அவசியம் வருவேன். இப்பொழுது என்னால் வரமுடியாது," என்றனள் ஜயலக்ஷ்மி.

"என் கையெழுத்தாகிய ஒரு அற்ப விஷயத்திற்குத்தான் மூன்று ஒரு அமலியாயிற்று. இப்பொழுது ஐந்துபேரும் ஒன்றாகப் பாக்கியத்தம்மாள் வீட்டுக்குப் புறப்படுவதைப்பற்றி மற்றொன்று ஆரம்பிக்க வேண்டாம். என்! நாம் மூன்று பேராகத்தான் போவோமே," என்றாள் கண்ணம்மாள்.

"ஆமாம் புறப்படுங்கள் நீலாம்பாளம்மா! நாற்பது பேர் போவதைவிட கண்ணம்மாளைப் போலொத்தவள் உங்களைப் போலொத்தவர்கள் ஒருத்தி போனால்கூட போதும்." என்றாள் ஜானகி.

ஆகவே, ஜானகியம்மாள் நீலாம்பாளம்மாள் கண்ணம்மாள் ஆகிய மூவரும் சுற்றுக் கடிதத்தை எடுத்துக்கொண்டு பாக்கியத்தம்மாள் வீட்டுக்குச் சென்றார்கள். ஆனால் வீட்டில் பாக்கியத்தம்மாள் இல்லை. அந்த அம்மாள் தன் கணவன் பரிஜனங்கள் முதலியோருடன் புதுச்சேரிக்குச் சமீபத்திலுள்ள மாஷ்டோரி என்ற பெரிய தடாகக் கரையிலுள்ள தங்கள் பங்களாவில் சிலகாலம் உல்லாசமாகக் கழிக்கச் சென்றிருப்பதாகவும் அன்றிரவாவது மறுநாட் காலையிலாவது கூடவூருக்குத் திரும்பி வருவார்களென்றும் வீட்டிலுள்ள கணக்கர் மனைவி சொன்னாள்.

"மூன்று பேராகப் புறப்பட்டதே பிசகு. சரி, நாளைக்கு ஜயலக்ஷ்மி அம்மாளையும் அழைத்துக் கொண்டு நான்கு பேராகப் போவோம்." என்றாள் நீலாம்பாள். அத்தீர்மானப்படி அவர்கள் ஜயலக்ஷ்மி அம்மாள் வீட்டுக்குப் போய் விஷயத்தை அவளுக்குத் தெரிவித்துவிட்டுத் தங்கள் தங்கள் வீட்டுக்குச் சென்றார்கள். சுற்றுக் கடிதத்தை நீலாம்பாள் எடுத்துக் கொண்டு போனாள்.

இவர்களில் வேலையாளை அனுப்பிவிட்டு ஸ்ரீமதி நீலாம்பாள் அம்மாளை மாத்திரம் நாம் தொடர்ந்து அடுத்த அத்தியாயத்தைத் தொடங்குவோம்.

(தொடரும்.)

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

புதுமாதிரிப் பாட்டுகள்.

காதல்.

"காமர் வண்ணக் கண்ணினையாய்!
காதல் என்னைக் கழறுதியோ?"
"விண்ணின் றிழியும் வேல்வீச்சு
வில்லா லெறிந்த தீக்கோலாம்
ஆசைச் செல்வன் வளர்ப்புத்தாய்
பாசம் உற்றுர் படுபாவை" (1)

"பிறிதோர் செய்தி பண்மொழியே!
பாவையர் யாரும் வாய்மையரோ?"
"பொதுவில் யாரும் பண்புடையர்
பிறிதா மவரும் பலருண்டு
புதுமல ருதும் வண்டன்னர்
புனர்வர், பிரிவர்: பண்பெங்ஙன்?" (2)

"மீட்டும் வினவுவல் மெய்மொழிவாய்
பின்னர் காமந் தழுங்குவர்கொல்?"
"வாட்டும் வேள்கணை யாற்றுது
வேதனையுற்று வாழ்ந்திடினும்
ஓடுதல் செய்யா வுயிர்கொண்டு
ஆடவர் சாடவுங் கருதுவரால்?" (3)

"நன்று நிகழ்ந்தினை நேரிழையாய்!
நேரா மாறினி நவிலுதியோ?"
"சான்றோ னுயி ஞண்பகலும்
செவ்விய ளாயின் றலைப்பகருங்
ஆன்றோர் முறையில் மணமியற்றி
யன்புற நிற்பர் என்பேன்யான். (4)

"விழியும் விழியும் எதிர்பொருது
வளர்க்கும் வன்னி கனிநிற்ப
கழிவறு காதல் கலக்கொண்டார்
கூடிய வுறவின் குழாத்திடையே
விழ வியம்பி மணம்புரிந்து
வாழ்க லெங்கும் விதியாமே." (5)

ரா. வாசுதேவ சர்மா.

காயம் பிணி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

உடற் கூறுபாடு.

152-ம் பக்கத் தொடர்ச்சி.

இம்மழையில் வரும் பாகத்திற்குரிய சாஸ்திரார்த்தமான பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

புஜ எலும்புகள், அல்லது பிரகண்டாஸ்திகள்.	Humerus.
கரஸ்திகள், அல்லது பிரகோஷ்டாஸ்திகள், அல்லது கை எலும்புகள்.	Bones of the fore-arm.
உட்கர எலும்பு, அல்லது இரத்தினி.	Ulna.
வெளிக்கர எலும்பு, அல்லது ஆரை.	Radius.
கூர்ப்பர கூடம்.	Olecranon process.
மணிக்கட்டு எலும்புகள், அல்லது மணிபந்தாஸ்திகள்.	Carpus bones.
உள்ளங்கை எலும்புகள், அல்லது கரதலாஸ்திகள், அல்லது கூர்ச்சாஸ்திகள்.	Metacarpus bones.
கைவிரலெலும்புகள், அல்லது கராங்குல்யஸ்திகள்.	Phalanges bones.
கூபகம், அல்லது ச்ரோணி.	Pelvis.
கூபகாஸ்திகள், அல்லது ஸ்ரோண்யாஸ்திகள், அல்லது இடுப்பெலும்புகள், அல்லது நாமகுண்ணிய எலும்புகள்.	Os Innominatum.
மர்ம எலும்பு.	Pubes.
இடைக்குழி.	Pelvic cavity.
பொய்க்கூபகம்.	False pelvis.
மெய்க்கூபகம்.	True pelvis.

ஊர்த்வ சாகை (அல்லது உற்காயம்).

தோள் எலும்புகள்:—தோளானது கையை உடலுடன் கூட்டுகின்றது. மேலும் அது காரை எலும்பு அல்லது அக்ஷகாஸ்தியுடனும், தோளெலும்பு அல்லது அம்ஸபலகத்துடனும் கூடியதாயிருக்கிறது.

காரை எலும்பு அல்லது அக்ஷகாஸ்தி:-இருபுறத்திலும் கழுத்துக்கடியில், முன்பக்கத்தில் விரற்பருமன் குறுங்வளைந்த தடியைப்போல் சருமத்திற்கடியில் கென்படும். இதன் உள்முனை மார்பெலும்பின்மேல் சார்பாயும் வெளிமுனை தோளெலும்புடன் பொருத்தப்பட்டும் இருக்கின்றன. இந்த எலும்பின் உள்ளடங்கிய மூன்றில் இரண்டு பாகம் முன்னேக்கி வளைந்தும் மற்றொரு வெளிப்பாகம் பின்னேக்கி வளைந்தும் இருப்பதால், இவ்வெலும்பிற்கு மற்ற எலும்புகளைவிட அதிகமான நெகிழ்ச்சி ஏற்படுகிறது.

தோளெலும்பு அல்லது அம்ஸபலகம்:-நெஞ்சறைக்குப் பின்பக்கத்தின்மேல் வெளிப்புறமாயிருப்பதோடு, இது ஓர் முக்கோணவடிவமுள்ள தகட்டெலும்பு.

இதன் முன்புறம் மாம்ஸ பேசிகள் ஒட்டியிருக்கக் கவிப்பாயிருக்கிறது. பின்புறம் குவிப்பாயும் அதன்மேல் ஒரு மேடு குறுக்காய் ஓடியுமிருக்கும். இந்த மேட்டின் வெளிமுனையிலிருக்கும் ஒரு பெரிய அங்கூடமானது காரை எலும்புடன் சேர்ந்து புஜத்திற்கு உருவத்தையும் உறுதியையும் கொடுப்பதன்றி இதற்குமேர் கீழிருக்கும் தோள் பொருத்தத்தையும் பாதுகாக்கிறது. இவ்வெலும்பின் வெளிமுலையில் (சிரசில்) மேலெழுச்சியாயிருக்கும் எலும்புச் சந்திப்பு ஸ்தானம் தோளெலும்பின் சிரசுப்பொருத்தத்தின் குவளையாக இருக்கிறது.

புஜ எலும்பு அல்லது பிரகண்டாஸ்தி:— இது முழங்கை முதல் தோள்வரையிலுமுள்ள ஒரு நீண்ட எலும்பு. இது காம்பென்ற மத்திய பாகத்தில் உருண்டையாயும், இதன்மேல் அருகியானது தோளெலும்பிலுள்ள மேலெழுச்சியான இடத்தில் உழன்று அசையும்படிக்கு உருண்டையான கலையை உடையதாயும்

இருக்கின்றன. இதற்கடியில் இரண்டு மேடுகளுண்டு. அவைகளில் பேசிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். இந்த மேடுகளுக்குக் கீழாக எலும்பைச் சுற்றிலுமுள்ள பள்ளத்திற்குக் கழுத்து என்று பெயர். கீழருதியானது சிறிது தட்டையாகஇருக்கிறது. இதில் இந்த எலும்புகளாகிய இரத்தினி அகத்திலும், ஆனை புறத்திலும் சேர்ந்து முழங்கை என்னும் சந்தி ஏற்படுவதற்கு அனுகூலமான உருவமுள்ளதாக அமைந்திருக்கின்றன. இந்தச் சந்திப்பு ஸ்தானத்திற்கு மேல் முன் பக்கத்தில் ஒரு சிறிய பள்ளம் தோன்றும் அதில் கையை மடக்குகையில் இரத்தினி எலும்பின் பிதுக்கம் வந்து அமையும். அதற்கு மேராய், பின்புறத்தில் ஒரு பெரிய பள்ளமுண்டு. அதில் கையை நீட்டும்போது, மேற் சொல்லிய எலும்பின் சிகரம் போய் அமையும்.

கராஸ்திகள் அல்லது பிரகோஷ்டாஸ்திகள் அல்லது கை எலும்புகள்:—இவை முழங்கைமுதல் கணுக்கைவரையிலும் நீண்டுள்ள இரண்டு எலும்புகள். அவற்றின் ஒன்றுக்கு வெளிக்கரஎலும்பு அல்லது ஆரை என்றும் மற்றொன்றுக்கு உட்கர எலும்பு அல்லது இரத்தினி என்றும் பெயர். வெளிக்கர எலும்பானது முழங்கையின்வெளிப்புறத்திலிருந்து ஆரம்பித்து மணிக்கட்டில் பெருவிரலின் அடிப்பாகத்திற்கு ஏதிரில் முடிவு பெறுகின்றது. இதன் சிகரம் (சிரசு அல்லது பேல்அருகி) உருண்டு உச்சியில் பள்ளமாயிருக்கும். இந்தப்பள்ளம் தோளெலும்புடன் சேர்ந்திருக்கும். சிகரத்தின் ஓரமானது இரத்தினி எலும்புடன் சேர்ந்திருக்கும். சிரசுக்கடியில் ஓர் மேடுண்டு. அதில் பேசிகள் ஒட்டியிருக்கும். இரண்டு எலும்புகளுக்கு மத்தியில் ஓர் ஜவ்வுண்டு. கீழருதி அகன்று முனையில் சந்திப்புஸ்தானங்கள் காணப்படும். அகத்திலிருக்கிறஸ்தானத்தில் இரத்தனி எலும்பும், உச்சியிலிருப்பதில் மணிக்கட்டெலும்புகளும் கூடியிருக்கின்றன. உட்கர எலும்பானது முழங்கையின் உட்புறத்தில் ஆரம்பித்து மணிக்கட்டில் சுண்டுவிரலின் அடிப்பாகத்திற்கு ஏதிரில் முடிவடைகின்றது. இவ்வெலும்பின் மேல் அருகி வெளிப்புறம் குவிந்து உட்புறத்தில் சந்திரபிறையைப்போல் பள்ளத்துடனிருக்கிறது. இந்தப் பள்ளத்தில் தோளெலும்பு சேர்ந்திருக்கிறது. இந்தப்பள்ளத்திற்கு வெளிப்புறமாக மற்

ரொரு சிறிய பள்ளமுண்டு. இதில் ஆரை எலும்பின் சிகரம் கூடியிருக்கும். சங்கர பிறை என்ற பள்ளத்திற்கு மேற்புறமாய் ஒரு பிதுக்கமுண்டு. அதற்குக் கூர்ப்பர கூடம் என்று பெயர். இதற்குக் கீழ்ப்புறத்தில் சிறிய பிதுக்கமுண்டு. இதன் கீழ்முனை ஆரை எலும்புடன் சேர்ந்திருக்கும். கை பிறழும்போது வெள்ளெலும்பு உள்ளாகவும், உள்ளெலும்பு வெளியாகவும் இடம் மாறுகின்றன.

மணிக்கட்டெலும்புகள், அல்லது கைக்குளச எலும்புகள், அல்லது மணிபந்தாஸ்திகள்:—இவை கராஸ்திகளுக்கும் கரதலாஸ்திகளுக்கும் இடையிலுள்ள சிறிய எட்டு எலும்புகள். இவ்வெட்டு எலும்புகளும் கீழும் மேலுமாய் இரண்டு வரிசைகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

உள்ளங்கை எலும்புகள், அல்லது கரதலாஸ்திகள், அல்லது கூர்ச்சாஸ்திகள்:—இவை புறங்கை உள்ளங்கைகள் அமைவதற்கு ஆகாரமாயேற்பட்டுள்ள ஐந்து மெல்லிய நீண்ட எலும்புகள். இதன் மேலருகு சதுரமாயும், கீழருகு உருண்டையாயு மிருக்கின்றன. இவ்வைந்து எலும்புகளும் ஐந்து விரல் எலும்புகளின் அடிப்பாகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன.

கை விரலெலும்புகள் அல்லது கராங்குல்யஸ்திகள்:—ஐந்து விரல்கள் அமைவதற்கென்று ஏற்பட்ட பதினைந்து எலும்புகள். விரல் ஒன்றுக்கு மூன்று எலும்புகள் வீதம் நான்கு விரல்களுக்குப் பன்னிரண்டு எலும்புகளும், பெருவிரலுக்கு இரண்டு எலும்புகளுமாகப் பதினைந்து எலும்புகளாகின்றன.

கூபகம் அல்லது ச்ரோணி:—இதை உண்டாக்கும் எலும்புகளுக்குக் கூபகாஸ்திகள் எனப்பெயர். நான்கு எலும்புகள் (முள்ளந்தண்டிற்கடியில் பின்புறத்தில் திரிகாஸ்தியும், அநுத்திரிகாஸ்தியும், இரண்டு பார்சுவங்களிலும் தனித்தனியே ஒவ்வொரு ச்ரோணியஸ்தி என்னும் கூபகாஸ்தியும்) ஒன்றுக்கொன்று கெட்டியாகச் சேர்ந்து ஒரு சட்டியைப்போல் அமைகின்றன.

இடுப்பெலும்பு அல்லது கூபகாஸ்தி, அல்லது நாமசூன்னிய எலும்பு, அல்லது ச்ரோணியாஸ்தி:—குழந்தைப் பருவத்தில், இடுப்பெலும்பானது மூன்றுதுண்டுகளாக இருந்து, பிறகு அவைகள் ஒன்றுகச் சேர்ந்து ஒரே எலும்பாகி விடுகின்றன. இந்த மூன்று பாகங்களாவன:—

1. இடுப்பெலும்பின்மேற்புறத்தில் அகலமாய் விரிந்து திரகாஸ்தானத்துடன் சேர்ந்திருக்கிற வளைந்த பாகம்.

2. அடியில் உறுதியாய் நாம் உட்கார்ந்திருக்கும்பொழுது நமது சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் பாகம்.

3. முன்புறம் இரண்டு ச்ரோண்யாஸ்திகள் சேரும் பாகம் இதற்கு மரும எலும்பு என்று பெயர்.

இடுப் பெலும்பின் வெளிப்புறத்தில் ஆழ்ந்த கிண்ணத்தைப் போல் ஒரு பள்ளம் உண்டு. அதில் தொடையெலும்பின் சிகரங்கள் சேர்ந்திருக்கின்றன. இந்த எலும்பில் அண்டவடிவாய் ஒரு பெரிய துவாரம் காணப்படும். இது ஜவ்வால் மூடப்பட்டிருக்கிறது. இக்கூபகம் முள்ளந்தண்டைத் தாங்கிக்கொண்டு வஸ்தி குகம் முகலியவற்றை அடக்கிக் காப்பாற்றக்கூடிய ஒரு குழிபாயிருப்பதோடுங்கூட இருபக்கங்களிலும் தொடை எலும்புகளின் சேர்மானத்திற்காக இரண்டு பள்ளங்களைப் பெற்றதாயுமிருக்கிறது.

இடைக் குழி:-உட்புறத்தில் கூபகக் குழியைச் சுற்றிக்கொண்டிருக்கிற மேட்டிற்கு வரம்பு என்றும், அவ்வரம்பிற்கு மேலாக எலும்புகள் விரிந்து செல்லும் ஸ்தானத்திற்குப் பொய்க்கூபகம் என்றும், வரம்புக்கடியில் கிண்ணத்தைப்போலிருக்கும் பாகத்திற்கு மெய்க்கூபகம் என்றும் பெயர்.

(தொடரும்.)

ரெ. கோவிந்தசாமிநாயுடு,
பெரங்கல் பிராக்டிஷனர், தூத்துக்குடி.

ஐரோப்பாக்கண்ட சரித்திரம்.

நீங்கள் ஒவ்வொருவரும் சாதாரணமாய்ப் பள்ளிக்கூடங்களில் உபயோகப்பட்டுவரும் பூகோள உருண்டையைக் கவனித்திருப்பீர்கள். அக்கோளத்தின் நிலப் பிரிவுகளைப் பஞ்சகண்டங்களாக வகுத்திருப்பதையும் அவற்றில் ஒன்றாகிய ஐரோப்பாவின் நிலைமையையும் அறிந்திருப்பீர்கள். அவ்வைரோப்பாவின் சரித்திரத்தையே சில விபரசங்கள் மூலமாகக் கவனிப்போம்.

ஒரு கண்டத்தின் சரித்திரமானது சிருஷ்டிகாலந் தொடங்கியோ, அல்லது நம்மறிவுக்கு விஷயங்கள் தெளிவுபடுங் காலந் தொடங்கியோ இன்றுதொட்டும் நடந்துள்ள சகல விஷயங்களின் வரலாற்றைக் கவனிப்பதேயாகும். சரித்திர வாராய்ச்சியில் கருதப்படும் முக்கிய விஷயங்களில், நாட்டின் நிலைமை, குடிகளின் சமூக நிலைமை, மதக் கோட்பாடுகள், சட்டதிட்டங்களின் ஏற்பாடு, நாகரீகத்தின் ஸ்திதி, இராஜாங்க முறைமை, முதலியன இன்றியமையாத விசேஷம் வாய்ந்துள்ளன. ஆகவே இவ்வம்சங்களைக் குறித்தே இச்சரித்திரத்தை வெளியிடுவோம்.

ஐரோப்பாக் கண்ட சரித்திரத்தில் நம்மறிவுக்கு விஷயங்கள் தெளிவுபடுங் காலத்தில் அக்காடு முழுவதும் இயற்கைத் தாதுவர்க்கங்களால் மூடப்பெற்றும் காட்டு விலங்குகளால் நிரப்பப்பெற்றும் விளங்குகிறது. அக்காலத்தில் நாகரீகமற்ற ஜனங்கள் கூட்டங்கூட்டமாகப் பஞ்சபூதங்களையே வணங்கி விலங்கினங்களுக்கு உள்ள சட்டங்களையே அனுசரித்து யாதொரு அரசாட்சியுமில்லாமல் நாடெங்கும் திரிந்து காய்கனிகளையோ, மச்சங்களையோ, வேட்டையாடிக் கொன்ற மிருகங்களையோ புசித்துக் காட்டு வாழ்க்கை வாழ்ந்துவந்தார்கள். ஐரோப்பா முழுவதும் பெரும்பாலும் அவ்வண்ணம் ஆயினும் அக்கண்டத்தில் ஒரு சிறிய தேசத்தில் மட்டும் ஜனங்கள் நாகரீகத்தில் முதிர்ந்து ஜன சமூகக்கோட்பாடுகளைப் பலவிதமாக அமைத்துக்கொண்டு அதற்கிணங்கச் சட்டங்கள் தீர்த்துவிளங்க, பலதெய்வங்களை ஏற்படுத்திக்கொண்டு, விக்கிரகங்கள், உத்ஸவங்கள், ஆலயங்கள், பூஜை

கள் முதலியன செய்துகொண்டு ஆயுதப் பயிற்சிகளில் பழகி, பலகலைகளில்வல்லோராய்ப் பாஷாஞானத்தை அபிவிர்த்திசெய்து, பல நூல்கள் இயற்றி, அரசாட்சி முறைகளை வகுத்துக்கொண்டு, சரித்திரத்தில் தங்கள் செயல்கள் யாவும் நின்று உலாவும் வண்ணமாக வாழ்ந்தார்கள். ஐரோப்பாக்கண்ட சரித்திரம் எழுதுவோர் யாரும் அந்நாட்டின் சரித்திரத்தையே முதலில் எழுதத் தொடங்குவார்கள். அவ்வண்ணமே இப்பொழுதும் செய்வோம்.

அக்காடு யாதென்று சொல்வீர்களா? அஃதே ஆசியாக்கண்டத்திற்கருகாமையிலுள்ள கிரீஸ் தேசம். இத்தேசம் ஆதியில் உன்னதஸ்திதியிலிருந்த காலம் 900. கி. மு. முதல் 300. கி.மு. வரை ஆகும். கிரீஸ் தேசம் கடற்குடாக்களால் ஊடுருவப்பெற்ற மலைப் பிரதேசம். தரைமூலமாகத் தேசசஞ்சாரம் சிரமமானபடியால் நீர்மூலமாகப் படவுகளிலும், தோணிகளிலும் இங்கும் அங்கும் செல்லக்கூடிய சிறந்த மாலுமிகளாகக் கிரேக்கர்கள் இருந்தார்கள். அவர்களின் அதிகாரத்தின் உச்சவேளையில் அவர்கள் தங்கள் தேசத்தோடு நில்லாமல் மத்தியதரைக்கடலைச் சூழ்ந்த பிரதேசங்கள் எங்கும் தங்கள் நகரங்களை ஏற்படுத்திக்கொண்டு பிரபல கடற்சேனைகளுடன் உயர்ந்திருந்தார்கள். கிரேக்கர்கள் ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஜாதிப் பாகுபாட்டுக்காரர் கூறுவார்கள். ஆதியில் அவர்களுடைய ஸ்திதி யோக்கியதை யாவும் அவர்களின் சிறந்த கவியாகிய ஹோமர் எழுதியுள்ள இலியட் ஆடிசீஸ் முதலிய பிரபலமான இதிகாசங்களினின்றுமே நாம் அறிந்துகொள்ளுகிறோம். இலியட், டிராய் நகரத்து இளவரசனை பாரீஸ் என்பவன் கிரீக் இளவரசியாகிய ஹெலன் என்பவளைக் கவர்ந்து சென்றதால் உண்டான யுத்தத்தையும், ஆடிசீஸ், உலுசிஸ் என்ற வீரனது யாத்திரைகளையும் முறையே விவரிக்கின்றன. அப்பெருங் காப்பியங்களினின்றும் அக்காலத்தில் கிரேக்கர்கள் அரசர்களால் ஆளப்பட்டு வந்தார்களென்று அறிகிறோம். அவ்வரசர்களுக்கு ஆலோசனை எடுத்துரைக்கக் கனவான்களின் சபையும் சகல விஷயங்களையும் ஆமோதிக்க ஜனங்களின் கூட்டமும் இருந்துவந்தன. ஸ்திரீகள் கௌரவமாகப் பாவிக்கப்பட்டு வந்தார்கள். ஆயினும் அவர்க

ஞக்குச் சுதந்தரம் கிடையாது. ராஜாவின் வேலைகளைச் செய்வதற்காக அடிமைகளிருந்தார்கள். கிரேக்கர்கள் பஞ்சபூதங்களைக் கடவுள் சொரூபமாக நிரூபித்து அத்தெய்வங்களை வணங்கினர்கள். பிறகு மூன்றாறு வருஷங்களாகக் கிரீசில் நடந்த விஷயங்கள் ஒன்றும் புலப்படுகிறதில்லை.

கி.மு. 600-ல் பாபிலோனியும் வெகுசீர்கெட்டிருந்தபொழுது, கிரீஸ் தேசத்தில் பல இராஜ்யங்கள் இருப்பதைக் காண்கிறோம். இந்தியாவில் பூர்வத்தில் 56 அரசர்கள் ஆண்டு வந்ததாகச் சொல்லும் ஐதிகம் போலவே கிரீசிலும் பல இராஜ்யங்களிருந்தன. ஆனால் அவ்விராஜ்யங்களின் சிறப்புக்குணம் யாதெனில் பழைய இந்திய இராஜ்யங்கள் போலல்லாமல் ஒவ்வொரு நகரமுமே ஒரு இராஜ்யமாக இருந்தது. சில நகரங்களுக்குப் பக்கத்திலுள்ள பிரதேசங்களும் வயப்பட்டிருந்தன ஆயினும், நகரமே இராஜ்யமாகக் கிரேக்கர்கள் கருதினர்கள். அவ்விதம் ஓங்கி வளர்ந்த நகரங்களில் ஏதன்ஸ், ஸ்பார்டா, காரிந்து, தீப்ஸ் முதலியன முக்கியமானவை. இந்நகரங்களில் ஹோமர்காலத்திலுள்ளபடி அரசன், சபை, கூட்டம் என்று அரசாட்சி இல்லாதபடி. பற்பல வித அரசாட்சிகள் தோன்றி நடைபெற்றுவந்தன. ஸ்பார்டா ஒன்றில்தான் அரசர்கள் இருந்தார்கள். மேலும் அந்நகருக்கு ஒரே காலத்தில் ஈரரசர்கள் வாய்த்திருந்தார்கள். சில நகரங்களில் சபையாரே சகல அதிகாரத்தையும் கைக்கொண்டிருந்தனர். மற்றும் சிலவற்றில் கூட்டத்தாரே ஆண்டார்கள்.

ஸ்திரீகள் ஹோமர் காலத்தில் போலவே பாவிக்கப்பட்டு வந்தார்கள். அடிமைகளே சகல வேலைக்காரியஞ் செய்தார்கள்.

கிரேக்கர்கள் 600 கி.மு. வில் ஜீயஸ், அப்பல்லோ, பாரிடன், ஹீரா, அதினீ, என்று பல தெய்வங்களுக்குக் கோயில் கட்டி அவர்களை வணங்கி வந்தார்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஒலிம்பியா என்ற விடத்தில் திருவிழா கொண்டாடி, அப்பொழுது ஓட்டம் குஸ்தி ஆயுதப்பழக்கம் முதலிய தேகப் பயிற்சிகள் பந்தயம் நடத்துவார்கள். அக்காலத்தில் கிரேக்கர்கள் பலவிடங்களிலிருந்தும் வந்து கூடி அந்நியோந்நியமாய் நடந்து கொள்வார்கள்.

மேலும் சிலபெரிய ஆலயங்களில் பூசாரிகள் ஜனங்களுக்குக் குறி சொல்லுவது உண்டு. அவ்வாலயங்களில் பெயர் பெற்றது டெல்பி என்ற ஸ்தலத்திலுள்ள ஆலயமே. கிரேக்கர்கள் பிரார்த்தனைக்காக இத்தகைய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வது முண்டு.

அக்காலத்தில் கிரீசிலுள்ளதாகச் சொல்லப்பட்ட பல நகரங்களிலும் ஸ்பார்டா, ஏதன்ஸ் என்ற இரண்டுமே மிகவும் உன்னதஸ்திதியிலிருந்தன. நம் நாட்டில் வர்ணாசிரம தருமத்திற்கிணங்க க்ஷத்திரியர்கள் நடந்த வண்ணமே ஸ்பார்ட்டாவில் ஜனங்கள் நடந்துவந்த படியால் ஸ்பார்ட்டா யுத்தப் பயிற்சியில் தேர்ந்த நகரமாயிருந்தது.

ஏதன்ஸ் கப்பற்படையில் வலுத்து, கடல் இராஜ்யங்களை ஜெயித்துக் கலைஞானங்களில் தேர்ந்து, நாகரீகவேஷப்பாடுகளிலும் நாடகம், காப்பியம், சங்கீதம், சிற்பம் முதலிய சாஸ்திரங்களிலும் முதிர்ந்து உலக முழுவதிற்கும் ஞானம் அளித்து என்றும் தன்பெயர் அழியாவண்ணம் புகழைப் பரப்பியது.

(தொடரும்.)

ரா. சே. சுப்ரமண்ய ஐயர். எம். ஏ. எல். டி.

விராதன் வதமும் ராகவன் துதியும்.

(158-ம் பக்கத்தொடர்ச்சி.)

மகாமாயா சம்பந்தத்தாலும், பஞ்சீகரண பஞ்சமகா ஸ்தூல பூதங்களின் சேர்க்கையாலும் ஏற்பட்டுள்ள சாஞ்சல்யங்களத்தினையும் ஒருங்கே குழுமிய இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி ஸ்திதி லயமாதிகளுக்கு ஆதாரமான அகண்டாகார சச்சிதானந்த வடிவினதாய பரமாத்மசொரூபத்தின் அம்ஸபூர்வமான, சாகஷாத் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் உண்மையிலே உண்மையில் உள்ளபடி கண்டுகொண்ட தேவலோகத்துக் கந்தருவனை விராதன் என்பான் துதிக்கின்றான்:-

"வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிலையென்னிற் படிவங்க ளெப்படியோ
வோதங்கொள் கடலன்றி யொன்றினை டொன்றெழுவாப்
பூதங்க டொறுமுறைந்தா லவையுன்னைப் பொதிக்குமோ."

"நின் பெருமை கண்டு மறைகள் பறையறைகின்றன. பழ மறைகளாற் கோஷிக்கப்பெற்ற நினது தூய மலர்ப் பாதங்களே, இப்பொழுது தமியேன் தரிசிக்கப்பெற்ற மலரினைய திருவடி களே, முன்னம் உருவின் சிறுமைகண் டெள்ளிவீழ்ந்து பட்ட மாபலி யென்னு மரக்கனது ஆணவ மறுத்துத் தர்மஸ்காபனர் தம் இவ்வுலகெங்கும் பரந்தன வென்றால், ஏனைய பெரிய திரு அவயவங்கள் என்செய்தனவோ? ஹே! பரமாத்ம சொரூபமே! தர்மஸ்காபனார்த்தம் இப்பூமிசைப் பூதவுடம்பொடு நிலவும் புனிதா!

"பிரானுன் பெருமை பிறரா ரறிவார்
உரூஅ யுலகளந்த ஞான்று—வராகத்
தெயிற்றளவு போதாவா றென்கொலோ வெந்தை
அடிக்களவு போந்தபடி."

நினது முடிவிலாற்ற லுடைமையை அறியாதார் நின் பெரு மையை அறியுந் தரத்தவரோ? அறியாதா ரறியாரே. சிறப்பு மிகு ந்த நினது சேவடி இரண்டானும் மூவுலகும் தாவி யளந்தாய்! ஹே! தசரதன் அருமை மழலாய்! அணுவிற் கணுவாய், அப்பா லுக்கப்பலாய், அண்டத்திற் கண்டமாய், பிண்டத்திற்குப் பிண்ட மாய் உறையும் நின் பெருமை யாரே யறியவல்லார்? சிறுமையே கண்டிடாச் சிரிய! மறுமையுற்றிடாவழிச் செயவல்லவெம்மிறைவ! ஆராரு மறியாத சூதான வெளியினில் வெளியாகின்ற துரியாதீதப் பரவுருவா யிலங்கும் நின்னருட்சித்திரங்களே அறிந்துகொள்ளும் படியான சக்தியைப் பெற்றார் யார்? தேவலோக வின்பத்திற்குப் பாத்திரமாய, அமிர்தம் பொங்கிய திருப்பாற்கடலும், செந் தன்மை கொண்ட பிரளயகால சமுத்திரத்தில் அலரும் ஆலிலை யுமேயன்றி வேறெவை நின்னைத் தாங்கவல்லவை?

"பாலன் றனதிருவா யேழுலகுண் டாலிலையின்
மேலன்று நீகிடந்தாய் மெய்யன்பர்— ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெறித்தாய் சொல்."

ஆலிலையில் பள்ளிகொள்ளும் நீலமேக சாமள வர்ணா! மகா பிரளயகாலத்திலுங்கூட ஆலிலையில் யோக நித்திரை போகின்றாய்! நீ யோக நித்திரை போகும்படியான ஆலிலையும், மகாசமுத்திர

மும் தம் திறங்கொண்டு தாங்கினவோ? அவையும் நின்னைத் தாங்க வல்லவையல்லவே! அவை நின்னைத் தாங்கிக்கொண்டதும் நின் சக்தியின் விசேஷணமேயாம். நினதருட் சக்தியின் விசே ஷத்காலன்றி, நிலையாயிருக்கும் தன்மையுடையதும் வாசனையு டையதும் ஆன பிருதுவி, பாய்ந்தோடுந் தன்மையுடையதும் குளிர்ச்சியுடையதும் ஆன அப்பு, மேலேக்கி யெரியுந் தன்மை யுடையதும் உஷ்ண ஸ்பரிசமுடையதும் ஆன தேயு, எத்திசை களிலும் வீசுந் தன்மையுடையதும் உருவின்றி ஸ்பரிசமுடை யதும் ஆன வாயு, எங்கணும் பரவியிருக்குந் தன்மையை யுடை யதும் சப்தகுணமுடையதும் ஆன ஆகாசம் ஆகிய ஒன்றுக்கொன் றொத்திலாத பஞ்சமகா ஸ்தூல பூதங்க ளெவையும் நின்னைத் தாங்க வல்லவைபோ? சர்வ லோகங்களையும் மகாசக்தியின் வலி யான் முக்கிக்கொண்டிருக்கும் சர்வ வல்லமை யுடைய நின்னைக் கேவலம் தினகாதாரத்காலையே நிலைபெற்று நிற்கும் பஞ்சமகா ஸ்தூல பூதங்கள் தாங்குந் தரத்தனவல்லவே! ஹே! பரந்தாமா! சகலவேதமான பொருளும் நீயே, சர்வ வியாபகமான பரம் பொருளும் நீயே, பற்றுக்கோடு வாய்ந்த அடியவர்க்கெளியவன் நீயே, மனுவர்க்குக் காமங்களால் நிரகிக்கக் கூடாத அகோர மான பரவஸ்துவும் நீயே, மாம்ஸமயமான நேத்திரங்களுக்குப் புலனுகாத மாதவனும் நீயே, பொறிவாயி லைந்தவித்த ராஜயோகி யும் நீயே, ஒவ்வோ ருயிருள்ளந்தோறும் நிறைந்து அதுவது வான அந்தர்யாமியும் நீயே, சர்வசக்தனும் நீயே, சர்வ ஆதார னும் நீயே, அனந்த கல்யாண குணங்களோடு கூடிய சர்வ மங் கள ஸ்வரூபனனே ஹே! ஸ்ரீராமா! நீ எல்லாமாக விருக்கிறாய், அல்லதுமாக விருக்கிறாய், நின்னைத் தரிசிக்கப்பெற்ற பாக்கியமே பாக்கியம்! ஹே! ரகுநந்தனு!" என்றிவ்விதம் ஸ்ரீரகுகுலதில கனை ஸ்ரீராமச்சந்திரருக்குப் பரத்துவஞ் சொல்லித் துதிசெய் யலாயினள்.

பெய், வாய், கண், மூக்கு, செவி என்ற தொடக்கத்தன வாய பஞ்சேந்திரியங்களின் வயப்பட்டு அவைகள் ஐந்தினையும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவாய புலன்வழிச் செல்லவிட்டு, பிரதி ஜீவர்களின் போகாதிகட்குப் பாத்திரமாய

இப்பிரபஞ்ச போகப்பரப்பிலுள்ள பதார்த்தங்களாம் விஷ யாக்தர அந்தகாரத்தில் வீழ்ந்து, அடிக்கடிக்காய்த் துன்பம் பல வற்றைத் தொடர்ந்து ஒப்பில்லா தனுபவித்துக்கொண் டழுதும் நானு ஜீவகோடிகளின் சாதாரண அறிவினைப்போ லில்லாது மகா அதர அறிவினை யுடையவனும், ஒப்பற்ற பழைமை அன்பி னேடுகூடிய பரோபகார சிந்தனை ஞானம் வந்துலவப்பெற்ற, அழ கிய இரு பொன் ஒருகாலினின்றும் வானிடை பிரிந்தும் அதிசுந்தர சுந்தரனுக்கு லிங்கரூபத்தில், தான் கோரிய உத்தேச வகையிலத்தினிட மேயே கண்ணுங் கருத்து முடையவராய், அவ்வெண்ணிய பொருளுருக்கு விரிவாகவே தொழிலினிடத்தே நிண்ணமாக்கப் பெற்ற (வலியுறுத்தப்பெற்ற) மனத்திடை அவ்வெண்ணத் தின் தாட்டிப்பு மிருந்து உறுதியாளருக்கு அவரவர் எண்ணிய வெண்ணிய வாறேயே சுந்தரரும் கருணாகர மூர்த்தியான ஸ்ரீசுக்ரமாம்பிகையு கோக்கிப் பின்னும் நுதிக்கின்றனர்:—

"தோற்றமே தொழிலாத் தோன்றினோர் தோன்றியக்கான்
மறைப்பதோ ரவைமுதல் வன்றனின் மற்றவர்போற்
பிறப்பதோ வெவர்க்குந்தாம் பெற்றபதம் பெறவிதோ
விறப்பதே பிறப்பதே யெழுவம்விளாயாட் டிவிதுவந்தோய்".

"கருணை நிருவிடி னிருந்திற்றும் நீங்கப்பெறுத சுந்தண்மை கொண்டு தொடர்ந்தாரை படைக்கின்ற இவ்விய நேத்திரங்களையுடைய எம்பெருமாட்டி! அனுசுத்தசங்கட மாயிரங்கோடி குழுமிய இவ் வகிலப் பிரபஞ்சத்தின்கண், பிரசாதத்துவ விசேஷணத்வாரா மிசுரசன்மத்தால்(கலப்புற்ற கன்மத்தால்) மானவ சரீரத்தைப் பூண்டுள்ள நானுகோடிகளும் கூடிணை கூடினே சாஞ்சல்யங்கள் பலவற்றைச் சதாவும் ஒப்விலாது அநுபவித்துக்கொண்டிருக் கின்ற சாதாரண மற்றைப் பிறவிகள்போ லல்லாது, இவ்விதம் துன்பங்கள் பலவற்றைத் தொடர்ந்து அனுபவித்துக்கொண்டிருக் குங் நானுகோடிகள் பலவற்றையும், துன்பமே பெரிதுங் குழுமிய "புனரபி ஜனனம், புனரபி மரணம்" என்னும் பெரும் துக்கசாகாத்தி னின்றும் (பயப்படு குழியினின்றும்) கரையேற் றற் பொருட்டே "ப்ருதாவிஜாயதே" என்னுள்ள சுருதிவாக்கி யத்தின்படி உலகோபகாரார்த்தமாகச்செய்யப்பட்ட நினதுதிவ்ய திருவவதாரம், மிகுந்த அபாரமான சொல்லற் கரிதாய அத்தனை

மகிமையை யுடையது. * கேவலம் மண்ணை ஆகாரத்தா லேற் பட்ட மண்ணை சுக்கிலை சுரோணிதக் கலப்பால் உருவெய்திய சரீரம் மண்ணை ஆகாரத்தால் வளர் வெய்தி நிலைபெற்றிருந்து கடையிலவ்வாறு மண்மே யாகி விடும் எக்காலத்தும் மண்ணை பூதவுடம் பொடு இவ்வவனிமிசை ஜனித்த ஸ்ரீராமனென்றும், "லோகஸ்யாசுகூணார்த்தம் இதம் சரீரம்" என்றபடி உலகப் பாது காப்பின் பொருட்டே திருவவதாரஞ் செய்தருக்கின்றாயகலின், கர்மத்தாற் பிணிப்புண்ட மற்றப்பிறப்புக்கள் போலாகமாட்டாது நின்பிறப்பு.

இவ்விதம் தர்மஸ்தாபனத்தின் பொருட்டு அவதரித்தலே ஓர் பெரும் லீலையாகக் கொண்டிருக்கும் நீ! அச்சுதாமர! துஷ் டசங்ஹா நிக்ரஹத்துச் சிஷ்டரக்ஷணம் பரிபாலித்து அதனால் அநர் மக் கதையைப் பிடுங்கித் தர்மம் எங்கணும் இனிது விளையும் வண்ணம் யுகங்கடோறும் யுகங்கடோறும் அவதரிக்கும்படியான ஸ்ரீலக்ஷ்மிகாந்தனை ஸ்ரீமந்நாராயணனை வே† நீயாக விருக்கின்ற யென்று நிதர்சனமாகக் காண்கிறோம். கேவலம் நீதான் நின்று மறைவற்றழிந்திடும் என்பு தோனாப்பு பொருந்தும் இவ்வெழி லாக்கையாம் பஞ்சீகரண பஞ்சமகாஸ்தூல பூதங்களாலாக்கப் பெற்ற இப்பூதவுடம்பொடு இப்பூமிசை தர்மஸ்தாபனார்த்தம் திருவவதரித்தலினலேயே மகாதிருப்தியடைந்து மிகுந்த சந் தோஷக்கையுடைய நீ! கல்யாண ராமா! தர்மத்திற்குக் கர்த் தர்களாய (அதிகாரிகளாய) சாதகர்களைச் சிறிதும் வருந்த விடாத படி கண்ணிமைபோல் சதாகாலும் காத்துக் கொண்டிருக்கும் லோகரக்ஷகா! உருவின் சிறுமை கண்டு எள்ளினன் மாபலி, அவனையுங்கூட ரக்ஷித்தாய். தீனதயாபர! நின் பெருமை அணுவு மறியாது அமர் தொடங்கிய தமியேனையும் நினது திருச்சேவடி இரண்டாலும் புனிதமடையச் செய்தாய். ஆஹா! பகைவர்களை

---

* இது வேதாந்த சித்தாந்தம். விரிக்கிற்பெருகு மென வஞ்சி சுருக்கினோமிதற்கிப் பின்னொருகால் சமயம் வாய்ப்புழி விவரிப்பல்.

† இவண் பிரம்மத்தையல்லாது பிரதானமான பிரபஞ்சவையைக் கூறுவதானேயே இனிது விளங்கும் பாலதாம்.

யுங்கூடப் பாதுகாக்கும் பரமாசிலனே விளங்குகின்றாய். தேவரீரது இவ்ய அதிசயங்களை என்ன என்று சொல்வது!

"பனிகின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிகின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிகின்ற தத்துவத்தின் றகைமூர்த்தி நீயாகி
னினிகின்ற முதற்றேவ ரென்கொண்டென் செய்வாரே".

ஹே! ஜகத் காரண மூர்த்தி! துன்பமே பெரிதுங்குழமி யதாகலின் மிகுந்த பயத்திற்குக் காரணமாயு காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலான பிறவிப் பெருங் கடல் நீந்துவான் கருதி நின்னையே கதியாகக் கொண்டு மிகுதியு முறு தியோடு பற்றி நின்ற (பற்றுக் கோடு வாய்ந்த) எண்ணில் பல் சமயத்தவரும், நின்னைப் பற்றி நிற்பதையே, தக்க ஜீவப்பிர போத உபாய (சர்வனர்த்த நிவர்த்திப் பரமானந்தப் பிராப்திக் குரிய உபாய) மென்று கொண்டில்ல, ஒப்பற்று இலக்கும்படி யான, நான் மறைகளும் உத்கோஷிக்கும் படியான மகா ஆனந்த தத்துவ சொரூபி நீயென்றால், அந்தந்தச்சமயங்கட்கு(மதங்கட்கு) ஆசிரியராக வமர்ந்து அவற்றை இனிது இன்னிலமிசை நிலவும் படி செய்த சமய குரவர்கள் என்ன பெருமையைக் கொண்டு என்ன செய்யப் போகிறார்கள்!

சாதலானதும் பிறப்பு மில்லாத ஞான முதலே! பிறவிப் பெருங் கடல் நீந்தலாம் ஜீவப்பிரபோதோபாயத்திற்குப் பீஜபூத மான ஹே! தத்துவத்தின் தகைமூர்த்தி! சர்வனர்த்த நிவர்த் திப் பரமானந்தப் பிராப்திவடிவ மோக்ஷ ஹேதுவாய சருணை மூர்த்தி! ஆயுங்கலையுஞ் சருதியுங் காண்டற் கரியோய்! தலைமை சால் சிறப்பு வாய்ந்த தவச்சிரேஷ்ட! நின்னருட்டிருவிளையாட லென்னே!

"ஓயாத மலாயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றெழிந்த மன்னுயிர்க்கு
நீயாகின் முதற்றுதை நெறி முறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் தனிமூர்த்தி."

ஒப்புயர்வற்ற தர்ம சாகரமூர்த்தி! சதாவும் ஒப்பொழி வின்றி கற்பங்க டோறும் படைக்கப் படுகின்ற ஸ்ரீவத்சம் என் றும் மச்ய மருவினை மார்பினிட முடையவனும், சங்குசக்கர தாரி யாய், நீல மேக சாமள வர்ணனும், ஸ்ரீலக்ஷ்மி சமேதனும், ஜகத் ரக்ஷகனுக விளங்கும் ஸ்ரீமந் நாராயணனது நாபிக் கமலத்தே தோன்றிய பிரமன் முதற்கொண்டு கீண்ட காலம் அழிவிலாத சரீரிகளான விண்ணகத்துத்தேவாதிகள் மட்டுமன்றி மற்றைகீழ் பேறுடை உயிர்கள் எனுக உள்ள சமஸ்த உயிர்களுக்கும் முதற் றுதை நீயாக விருக்கின்றாய். ஆனல், உலகவழக்கிலுள்ளபடி பெற்று வளர்த்த தாயாகவுள்ளார் நின்னையன்றிப் பிறிதொருவர் யாரே! பிரபஞ்சத்திற் கெல்லாம் ஆதிகாரணமாய் தனக்கென ஓர்வித காரணமும் வேண்டாதிருத்தலானும், கேவலம் ரணுபந்தத்தால் வரும் ஏனைத்தன்தைகள் போலில்லாது, சதாவும் துக் கசாகரத்திலேயே துன்பவலகத்திலேயே கிடந்தழன்று கொண் டிருக்கும் ஜீவகோடிகள் அனைவரையும் பிரபோதமுறும்படி செய்யவல்ல கல்ல ரக்ஷகனுகவிருத்தலானும் இவ்வகிலப் பிரபஞ் சத்திற்கெல்லாம் முதற்றுதை நீயேயாவாய். உலகுக்கெல்லாம் ஒருதனிவிளக்காக விலங்கும் பரமாத்ம சொரூபமே! நீயே யென் னறிவாவாய்; நீயே யென்னன்பாவாய்; நிறை உணர்வாய், அஃ தன்றி ஓயாமல் என்னுடலினுள் ஊருக்கி யுயிர்நிறுத்துந் தாயான வழியாவாய் தன்மையுனக்கிஃதாமே."

(மேல் இரண்டொரு அரிய பாக்களை விளக்கவேண்டியிருப் பதால், இவ்வியாசம் அடுத்த மழையில் முடிவுறும்.)

செ. பகவதியாநந்தம்.

சிறு வேடிக்கைக் கதைகள்.

பலகலைகள் கற்ற புகழ்பெற்ற பண்டிதர் ஒருவர் காலஞ்செ ன்ற சிறிது காலத்திற்குப் பின்னர் அவரது புத்திரனையும் அவ னது தோழனொருவனையும் செயில்வண்டியில் ஒரு கனவான் சந் திக்க நேர்ந்தது. பண்டிதர் புத்திரன் என்றறிந்து அக்கனவான் அவனோடு பிரியமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது "உமக் குப் பிழைப்பு எப்படி நடக்கிறது?" என்று கேட்டார் "பிழைப் பா! எனக்குக் கிரந்தப் பிழைப்பு" என்று பண்டிதர் மகன் விடை யளித்தான். "ஆ! உம்முடைய தகப்பனைப் போல் கிரந்தங்களை

ஆராய்ச்சி செய்தல், புதிய கிரந்தங்கள் எழுதல் முதலிய முயற்சிகளை நீரும் கைக்கொண்டிருப்பது எனக்கு மிகச் சந்தோஷம், நீர் உமது தகப்பனரை விடச் சிறந்த கீர்த்தி அடையவேண்டும்'' என்றார் கனவான். அப்பொழுது பண்டிதர் புத்திரனது தோழன் கனவானைப் பார்த்து ''என்ன ஐயா! இவருடைய கிரந்தப்பிழைப்பு என்றால் அர்த்தம் என்ன தெரியுமோ! இவர் தகப்பனர் சேகரித்துவைத்திருக்கிற கிரந்தங்கள் ஏராளமாய்இருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாய் விற்று ஜீவிப்பதைத்தான் கிரந்தப் பிழைப்பு என்கிறார்'' என்றான். கனவான், ''ஆ! அதுவா அர்த்தம்—சரி பால பண்டிதரே! உமது தகப்பனருடைய கிரந்தங்களெல்லாம் விலையான பின்பு என்னசெய்வீர்?'' என்று கேட்டார். ''சுவாமி இருக்கிறார்'' என்றான் பண்டிதர் மகன். ''போதும், சுவாமி இருக்கிறார், அவர் எப்படியாவது காப்பாற்றுவார் என்று கடவுளிடம் நம்பிக்கையாவது உமக்கு இருக்கிறதே.'' என்று சொல்லிக் கனவான் சற்றுத்திருப்தியடைந்தார். அப்பொழுதுதோழன், ''இல்லை ஐயா! கிரந்தங்கள் விற்பனையானபின், அவர் தகப்பனர் பூசை செய்து வந்த பல விக்கிரகங்கள் விற்பனைக்குச் சித்தமாயிருக்கின்றன என்பதுதான், சுவாமி இருக்கிறார் என்பதற்கு அர்த்தம்'' என்று கூறினான்.

2. தான் யுத்தகளத்தில் எதிரி பொருவனது காலை ஒரே வெட்டாக வெட்டிவிட்டதாக வீரியம் பேசினான் ஒரு சூரன். ''காலை வெட்டுவது அவ்வளவு சிலாக்கிய மல்லவே, தலையை வெட்டியிருந்தால் சிலாக்கியம்'' என்றான் அருகிலிருந்த ஒருவன்.

''தலையை முன்னமே வேறு யாரோ ஒருவன் வெட்டிப் போட்டுவிட்டுப்போய்விட்டான்'' என்று சமாதானஞ்சொன்னான் சூரன்.

''பாம்பின் சாபம்'' ''சதுரங்கம்'' ஆகியவிஷயங்கள் இன்னும் வரப்பெறுமையால் அவை இம்மலரில் பிரசுரிக்கப்பட வில்லை. பின்னர் வெளிவரும். ப—ர்.

12 JUL 1919 MADRAS.

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருஷிணி.

பெரும்பாலும், கற்பனைக் கதைகள், தேசசரித்திரங்கள், ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள் இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக வைதிகசாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பருவம். 1.	கலியுகாப்தஞ 5020. காளயுக்தி ஞ மாசிமீ. கொல்லமாண்டு 1094 கும்பமீ. கி. பி. 1919-ம்ஞ பிப்ரவரிமீ.	மலர் 6.

விராதன் வதமும் ராகவன் துதியும்.

199-ம்—பக்கத் தொடர்ச்சி.

''நீயாகி பாம்பாரமு நின்னவே யுலகங்க
ளாயாத சமயமுநின் னடியவே யயலில்லை
நீயாரி னெனைத்தியால் வெளினின்றுற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ.

* நிருவுறையும் மணிமார்ப! இந்தஜகத் அத்தனையின் உற்பத்திஸ்திதி லயமாதிகட்குப் பீஜபூதமான, முதன்மையான, பராபரவஸ்துவும் நீயாகவே யிருக்கின்றாய். சர்வ உலகங்களும் நின்னுடையனவாகவே யிருக்கின்றன. ஆய்ந்தறிய வொண்ணாத (முடியாத) பல்வேறு சமய கோடிகளும் நின்தி வ்விய கமல பொற்பாதங்களையே பற்றியனவாக விருக்கின்றன. அஃ சன்றி வேறயலான தொன்றைப்பற்றிய தின்று. பிரபஞ்ச சஞ்சல யங்களோ முனிந்து நீத்த முனிவரரேறே! ஆறாறு சமயங்களோறும் வேறு

---

* ஸ்ரீலக்ஷ்மி தேவி வீற்றிருக்கும்படியான அழகிய மார்பினை யுடையவனே!

வேறாகி நின்று விளையாடுமம் மாதியண்ணலே! ‡ ஆறத்தனையும் பல் வேறுஉற்பத்தி ஸ்தானங்களையுடையனவாய், பல்வேறுபிரதேசங்களின் வழி பாய்ந்து, பல்வேறுய தன்மையுடையனவாக விருப்பினும், கடையில் வக மாக லிருக்கும் சமுத்திரத்தினிடமே யே இக்கியமாவதே போல், ஜீவப்பிர போதாயத்தை முன்னிட்டு பல வேறு மகத்துக்களை ஆசிரியர்களாக வுடையதாய், பல வேறு வருப்பாரால் பல வேறு விதியாசமான வந்தனை வழி பாடுடையதாய், பல வேறு நாம ரூபங்களுடையதாய், பலவேறு ஆசார தர்மத்தையுடைய தாய், இருக்கப்பெற்ற இவ்வுலகிடை. நிலவும் பல்வேறு சம யங்களுக்குமேயும் அலைகள் பிரபோதத்திற்கு உபாயமாகத் தொடர்ந்து பற் றிப் புகுவது நின் திருச்சரணாரவிந்தங்களையேயன்றோ? ¶ அன்னமா மருமறைக ளறைந்த மாமறை முதல்வ! சீவையமுழுதிலுக்கும் ஆதிபகவனுகிருந்தும், வையமுழுதும் நின்னதாகவேயிருந்தும், வையமிசைவைகும்பல்வேறு சமயங்களும் நினது திருவடிகளையே பற்றி நிற்பதாக விருந்தும், வஞ்சகர் போல (கப்பட நெஞ்சினர் போல) ஆராரு மறியாத ருதான வெளியினில் ஒளித்துக்கொண்டிருக்கின்றாய். அவ்வித மொளித்துக் கொண்டிருத்தலின் காரணம் என்னையோ? நீ அவ்வித மொளித்துக் கொண்டிராது யாரு மறிந்துகொள்ளும்படியாக வெளிப்பட்டு நின்றால் யார்க்கேனும் தீங்குண் டாய்விடுமோ? என்றும் பொன்றாத பெரிய மாயையாகிய திருவிளையா டலு முனக்கு வேண்டுமோ? வேறுபடும் சமய மெல்லாம் புகுந்து பார்த்த நின் விளங்கும் பரம்பொருளே! எக்காலும் நின் திருவிளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தொன்றுங் காணேன்.

தாய்தன்னை யறியாத சன்றில்லை தன்கன்றை
யாயுமறி யும்மதுபோ லாகின்று யாகினைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நீயெய்தியா
மாபையிது வெண்கொலோ வாராதே வரலல்லாய்.

வருந்தற்கரியவன் போலிருந்து மிக்க எளியையாய்ப் பக்தி வலைப்பட்டு வரு மடியவர்க் கெளியையாய்! வந்தாய்போல வாராதாய்! வாசாதாய் போல வருவானே! இந்நிலவுலகத்துத் தன் தாயைத் தெரிந்து கொள்ளாத கன் றில்லை; தனது கன்றை யறியாத தாயுமில்லை. அதுபோல் உலகுக்கெல் லாம் தாயாக நீயிருக்கின்றாய். உலகத்தின் தாயாகிய நீயோ யாவற்றையு மறிகின்றாய். ஆனலப்பா! அப்பொருள்களெல்லாம் நின்னை இன்ன நிலையினனென அறிகின்றதில்லையே! இம்மாயைதான் யாதோ?

‡ சர்வ சம்ய சமரஸ ஸ்தாபகரும்.

¶ முற்காலத்து ஹம்ஸ ரூபமாக அவதரித்து ஒதற் கரிய வேதங் களைப் பிரமனுக்குக் கருணையோடு உபதேசித்தருளிய பெருந்தகையே!

பன்னலா மென்றுலகம் பலபலவு நீனையுமா
லுன்னலாற் பெருந்தெய்வ முயர்த்துளோ மொழுக்கன்றே
யன்னவூர் நியையுமுதலா மந்தணர்மாட் டருந்தெய்வ
நின்னலா லில்லாமை நெறிநின்றார் நீனையாரோ.

உலகத்திலுள்ள ஜனங்கள் தெய்வமென்று பலபல தெய்வங்களையுத் தேசிக்குமாறெலும், நின்னையன்றிப் பிறிதொரு பெரிய தெய்வமுண்டோ? அவ்விதமுண்டென்றுசொல்லுதல் உயர்ந்தோர்களது ஒழுக்கமெறியல்லவே. பிரமனே முதலாகவுடைய மேலோர்களால் ஆராதிக்கத் தகுந்த அரிய தெய் வம் நீயல்லாற் பிறிதொன்றில்லாமையை வேதங்களையு மொழுக்கநெறி நிற்போர் ஆராய்ந்தறிவர்.

ஒப்பிறையும் பெறலரிய வொருவாமுன் னுவந்துறையு
மப்புறையு நிறந்திடியே னருந்தவத்தா லணுகுறலா
லிப்பிறவிக் கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையுங்
கப்புறழு நீர்த்தசுடர்த் திருவடியாற் றுடைத்தாய்நீ.

ஒப்புமையு முயர்வும் சிறிது மில்லாத பேரின்பையே! முன்னர் திரு வள்ள முவந்து பள்ளி கொண்டருளிய திருப்பாற் கடலங்கிய நின திருப் பிடத்தை விட்டுத் தமியேனது முற்பிறப்பின் அருந்தவப்பயனுல் ஈண்டு எழுந்தருளினாய். அதனுல் சம்சாரசாகரத்தைக் கடந்து ஜன்மசாபல்ய மடைந்தனன். இனி நான் பிறிதொரு கருவினிற் புகாவழி பெரும்பேறு பெற்றுய்ந்தேன். தமியேனது பிறப்பிற்கு மூல காரணமாய் இரு வினை களையும், திருப்பவழமலைய ஒளியோடிலங்கும் நினது நித்யபாத பத்மங் களால் போக்கியருளினாய். இன்று நான் புனிதம் பெற்றேன்." என்றிவ் வண்ண மியம்பினன்.

இவ்வண்ண மன்பினேடு இயம்பிய விராதனை விளித்து ஸ்ரீமத் பிரான்,

இற்றை லாமி யம்பினை
னிற்ற லோடு நீயிவ்வா
றுற்ற வாறு ணர்த்தெனை
வெற்றி யான்வி ளம்பினன்.

"இங்ஙனம் மகாகோர சொரூபத்தோடி அரக்கர் குலாத்து ளொரு வனுப் வந்ததெங்ஙன்? அந்த வரலாறு சொல்" என்று விளம்பினன். இவ்விதம் விளம்பக் கேட்ட விராதன், நோன்றி நின்று மறைதற்றன்மை யுடைய இப்பொய்யாகிய இவ்வுலக போகத்தொடக் கறும்படியாக, உண்மை யான தத்துவ ஞானங்களை அளித்துக் காக்கவல்ல திருவடிகளையுடைய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி கேட்கும்படியாக உள்ளபடி நடந்த விருத்தாந்தங்களை உள்ளபடியே தெரிவித்தான்.

கள்ள மாய வாழ்வெலாம்
விள்ள ஞானம் வீசுதாள்
வள்ளல் வாழி கேளெனு
வுள்ள வாறு ணர்த்தினன்.

"ஸ்ரீராம! விண்ணகத்துறையும் கந்தருவர்களில் தும்புரு என்ற கந்த ருவன் நான். அப்ஸரஸ்திரிகளு ளொருவளாய அரம்பையோடு சல்லாபித் துக்கொண்டிருக்கும்பொழுது, பரமாத்ம சொரூபமே! விண்ணகத் நிறை வன் ஆண்டு போந்தான். போந்த அவனை எதிர்கொண்டு உபசரியாது சல் லாபத்திலையே அழுந்திப் போயினேன். அதனால், உபசரியாதிருந்த அப சாரத்திற்காகப் பூமிசை அரக்கர் குழாத்து ளொருவனுய்ப் பிறக்கக் கடவா யெனச் சாபமீந்தான். அந்தச் சாபத்தைத் தாங்கொணாதவனுய் கூமிக்கும்படி வேண்டினேன். தமியேன் வேண்டுகோட் டினங்கி, "பூமிசை அரக்கர் குழாத்தனொருவனுய்நீபிறந்தாலும்,ஆதியிறை லோகஸம்ரக்ஷணார்த்தம் தச ரத குமாரரா யவதரித்து வனசஞ்சாரம் பண்ணுகையில் அவரது திருவடிக் கமலங்களான், அரக்கவுருவழிய மீண்டும் சுந்தர கந்தருவ சொரூபமாய் வான கத்து வருவாய்" என்று அருளினன் தேவர்கோன். அவனது சாபத்தால் அரக்கவுருக்கொண்டு இப்புவியில், நன்றிது தீதிது என்று நாடாது அநேக பாப கிருத்தியங்களைப் புரிந்து நீவினைகளையே சம்பாதித்துக்கொண்டேன். கல்லொழுக்க நெறிசெலுத்த நின்ற பண்டைநம் பழவினைப் பயனன் வேத சாஸ்திரங்களையே ஆபரணமாகக் கொண்ட அழகியநின்திருவடி அடைந்துய் யும்படி இன்றுதான் தெரிந்துகொண்டேன். முதல்வனே! தன்பக்கடலுள் புகுத்திய பாவமனைத்தையும் நீக்கி யாண்டருளிய நின்னை அறிவிலியாகிய நான் என் அஞ்ஞான அந்தகார வலியான் வருத்திய மகா அபராதத்தை கூமிக்க வேண்டும்"

என்றிவ்விதம் பிரார்த்தித்துத் தன்னுலகமாகிய வானடேகினன் விராதன்.

முற்றும்.

செ. பகவதியானந்தம்.

குழந்தை கலியாணம்.

ஓர் குடும்ப சம்பாஷணை.

124-ம் பக்கத்தொடர்ச்சி

ராகவன்:—அம்மாளண்டை பால்குடிக்கிற பாப்பாவுக்கும் நெய்க்கும் விளக்கெண்ணெய்க்கும் வித்தியாசம் தெரியாத பேதைக் குழந்தைக்கும் பாடி ஆடித் திரிகிற பாலிகைக்கும் கலியாணம் செய்வதுஎவ்வளவு லக்ஷண மான காரியம்! அந்தலக்ஷணமான காரியத்தினுல் குழந்தைகளின் சேஷ்டை

அடங்கும், ஓட்டம் அடங்கும், ஆட்டம் அடங்கும், பாட்டு அடங்கும், எல்லாம் அடங்கும். ஆனல் ஒரு குழந்தையை அடக்க இதைவிட விசேஷ மான மற்றொரு யுக்தி இருக்கிறது. என்ன தெரியுமா? அந்தக் குழந் தைக்கு அழகாய்க் கட்டின தாலியை அறுத்துவிட்டு அதன் கையில் ஒரு ஜபமாலையைக் கொடுத்துவிட்டால் அந்தக் குழந்தையிடத்துள்ள எல்லாம் அடங்கிவிடும். குழந்தையா யிருந்தாலும்திடீரென அதன் சித்தத்தில் அபார ஈஸ்வர பக்தியும் ஏற்பட்டுவிடும்.

ஆண்டாள்:—நீ இப்படித்தான் அநிகப் பிரசங்கியாய்ப் பேசுவாய் போ. கல்யாணமான குழந்தைகள் எல்லோரும் விதவைகளாகத்தான் ஆய் விடுகிறார்களோ! என்னவோ, நூற்றில் ஒன்றிரண்டு ஆய்விட்டால் அதற் காகச் செல்லக் கல்யாணமே கூடாதென்ற சொல்லிவிடலாமோ? நமது ஜாதியிலே அம்மாதிரிக் கல்யாணம் செய்வது அபூர்வ மாகையால் நீ இப் படிப் பேசுகிறாய். உண்மையில் அதில் எவ்வளவு நன்மை யிருக்கிறது தெரியுமா?

ராகவன்:—(நாற்காலியில் சாய்ந்திருந்தவன் ஆத்திரத்துடன் எழுந் திருட்கார்ந்து) ஆண்டாள்! அறியாக் குழந்தைகளுக்குக் கல்யாணம் செய் யும் வழக்கத்தில் நீ என்ன நன்மையைக் கண்டுவிட்டாய்?

ஆண்டாள்:—என்ன நன்மையா! எத்தனையோ நன்மைகள் இருக்கின் றன. முதல் முதல், சிறுபெண்களுக்குக் கல்யாணம் செய்வது கண்ணுக்கு எவ்வளவு அழகா யிருக்கிறது பார். 18 வயசு 20 வயசு 30 வயசுத் தடிப் பெண்களைக் கல்யாண மணையிலிருத்திப்பார்ப்பதைவிட லக்ஷணமான சிறு குழந்தைகளை அந்த மணையில் பார்ப்பது எவ்வளவு சிங்காரமாயிருக்கிறது!

ராகவன்:—அது என்ன சிங்காரக் காட்சியோ! எனக்கு என்னவோ அது மக்காகோரக் காட்சி என்றுதான் தோற்றுகிறது. உயிரில்லாத சிறு பொம்மைகளுக்குக் கல்யாணம் செய்தாலாவது நீ விரும்பும் சிங்காரக்காட்சி ஒரு மாதிரி தோன்றும். உயிருள்ள பேதைக் குழந்தைகளின் கல்யாணக் கோலத்தைப்போல் பரிதாபமான காட்சி வேறு இல்லையென்று எனக்குத் தோற்றுகிறது. அது எப்படி யிருந்தபோதிலும், கல்யாணம் என்பது பார்க்கிறவர்கள் கண்களுக்குச் சிங்காரமாய்த் தோற்றும்படி பெண் மாப்பிள் ளையை மணையில் உட்காரச்செய்யும் ஒரு வினையாட்டா? கல்யாணம் என் பது ஒரு பெண்ணின் ஸ்திதியையும் கதியையும் விதிக்கும் ஒரு பரிசுத்த மான சடங்கு. அது முக்கியமாய்க் கடவுளைத் தியானித்து அவரை முன் னிட்டு நிகழ்வ தாகையால் அதைப் பரிசுத்தமான சடங்கு என்று சொன் னேன். ஒரு பெண்ணின் ஸ்திதியையும் கதியையும் விதிக்கும் அவ்வளவு முக்கியமான அவ்வளவு பரிசுத்தமான சடங்கைச் செய்யும் பொழுது,

அதைப் புரிந்துகொள்ளும் பெண்ணும் பிள்ளையும் அதன் முக்கியத்தையும் பரிசுத்தத்தையும் நன்முய் உணர்ந்தவர்களாயும், அப்படி உணர்ந்தே தாங்கள்! ஒருவரை யொருவர் விவாகஞ்செய்துகொள்ளச் சம்பூரண இஷ்டமுள்ளவர்களாயும், இருக்கவேண்டியது அவசியம். விளையாட்டுக்கருத்து ஒன்றேயுள்ள சிறு குழந்தைகளோ, சிறு பையன்களுக்காவது தடித்த வாலிபர்களுக்காவது தலை நரைத்த கிழவர்களுக்காவது பரிசுத்த கல்யாணம் செய்தால், அந்தக் குழந்தைகளுக்கு என்ன தெரியும்! "என்னவோ நமது தாயார் தகப்பனார் நமக்குக் கல்யாணம் செய்கிறார்கள், நமக்கு மிகக் குசாலாய்த் தானிருக்கிறது" என்று எண்ணிக்கொள்வார்கள். தங்கள் வாழ்நாள் முழுவதும் தாங்கள் அநுபவிக்க இருக்கும் சுகதுக்கங்களின் தன்மை தாங்கள் மணந்து கொள்ளும் புருஷர்களைப் பொறுத்தது என்று அவர்களுக்குத் தெரியுமா! அப்படித்தான் ஒருவாறு தெரிந்திருந்த போதிலும் அந்தப் பொறுப்பு எவ்வளவு முக்கியமானது என்று சரியாக உணர்வார்களா?

ஆண்டாள்:—அந்தக்குழந்தைகளுக்கு என்னதெரிந்திருந்தால் என்ன தெரியாவிட்டா லென்ன! அவர்கள் பெற்றோர்களுக்கு எல்லாந் தெரியுமல்லவா? அவர்கள்தங்கள்குழந்தைகளுக்குத்தகாதமாப்பிள்ளைகளுக்காஅவர்களைக் கொடுப்பார்கள்! தடிப்புருஷர்களையும் தலை நரைத்த கிழவர்களையும் பற்றிப் பேசினையே. அப்படிப்பட்ட மாப்பிள்ளைக்கு எல்லாப் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைக் கொடுத்து விடுவார்களா? பணத்திற்கு ஆசைப்பட்டாலது அல்லது வேறேதேனும் காரணத்தினுலாவது அபூர்வமாய் யாரேனும் அக்கொடிய செய்கை செய்தால் அதற்காகச் சிங்காரக் குழந்தை கலியாணமே கூடாதென்று எப்படிச் சொல்லலாம்! இதற்காகக் குழந்தை கலியாணத்தைப் பழித்தால், லக்ஷணமான பதினைது பதினெட்டு வயசுப் பெண்களை, 60, 70 வயசுக் கிழவர்களுக்குக் கொடுத்திருக்கும் பெற்றோர்களும் இருக்கிறார்களே. இதற்கென்ன சொல்லுகிறாய்?

ராகவன்:—அப்படிக் கொடுத்திருந்தால் அந்தக் கல்யாணங்கள் கல்யாணப்பெண்களின் சம்மதத்தையும் அநுசரித்தே நடந்திருக்கவேண்டும். அந்தப்பெண்களும் தங்கள்பெற்றோர்கள் மனம்போல் கிழவர்களோடு வாழச் சம்மதித்திருக்கவேண்டும். பதினைது பதினெட்டு வயசுள்ள எந்தப் பைத்தியக்காரி தனக்குச் சம்மதமில்லாமல் கிழவன் பக்கத்தில் கலியாண மேடையில் உட்காருவாள்! கலியாணத்தின் தாற்பரியமே அறியாத சிறு குழந்தைகள்தான் தங்கள் பெற்றோர்கள் தங்களுக்கு என்னவோ தமாஷான கல்யாணம் செய்கிறார்கள், என்று வெகு குசாலாக, சுவஸ்தமாக, கிழமாப்பிள்ளை பக்கத்தில் உட்கார்ந்திருப்பார்கள். வயதாகி ஆகி, யௌவனம் வந்தால் அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் பெற்றோர்களின் கொடுமையையும் தங்கள் பரிதாபகர ஸ்திதியையும் உணர்வார்கள்.

ஆண்டாள்:—கிழவர்களுக்கு வாழ்க்கைப்படும் பெண்கள் எல்லோரும் தாங்களே இஷ்டப்பட்டுத்தான் கல்யாணம் செய்துகொள்ளுகிறார்களோ? அநேகர் தங்கள் பெற்றோர்கள் மணங்கோணுது நடக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, தங்களுக்குத் தகாத கிழவர்கள் முதலியோரை மணந்துகொள்ளுகிறார்களே யொழிய தங்கள் முழுச்சம்மதத்தோடு அவர்கள் அந்தக் கல்யாணங்களுக்கு இணங்குவதில்லை.

ராகவன்:—பணத்தாசையினுலாவது அல்லது வேறு எதேனும் காரணத்தினுலாவது தங்கள் குழந்தைகளைக் கிழவர்கள், வியாதியஸ்தர்கள், மூடர்கள் முதலிய தகாத மாப்பிள்ளைகளுக்குக் கொடுக்கஇசையும் பெற்றோர்கள் கொடியவர்களே என்று சொல்லவேண்டும். அப்படிப்பட்ட கொடியவர்களாகிய பெற்றோர்கள் கொடிய மனப் போக்கிற்கும் கோணுது நடக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, தங்கள் வாழ்நாள் முழுவதும் தாங்கள் வெறுக்கும் தகாத மாப்பிள்ளைகளுக்கு அர்ப்பணஞ் செய்யச் சம்மதிக்கும் யௌவனப் பெண்கள் மூழுப் பேதைகளாயிருக்க வேண்டும், அல்லது பெற்றோர் பாசம் ஒன்றைத் தவிர வேறெவ்விதப் பற்று மற்ற மகா உத்தமிகளா யிருக்கவேண்டும். அப்படிப்பட்ட பேதைகளும் மகோத்தமிகளும் காணப்படுவதும் அபூர்வம். அநேகர் இருப்பதாக நீ சொன்னது பிசகு. அத்தகைய மகோத்தமிகள் அல்லது பேதைகள் குழந்தையாயிருக்குங் காலத்திலேயே, ஒரு தேவதை வந்து "இந்தப் பெண்கள் தங்கர் பெற்றோர்களைத் திருப்தி செய்யும் ஒரே காரணத்திற்காகத் தங்களுக்கு இஷ்டமில்லாத புருஷர்களையும் மணக்கச் சம்மதிக்கும் பேதைகள் அல்லது மகோத்தமிகளாக வளரப் போகிறார்கள்" என்று சொன்னுல், இந்தப் பெண்கள் விவாகந்தான் எப்பொழுதும் பெற்றோர்கள் இஷ்டத்தைப் பொறுத்தாயிற்றே, இவர்களுக்கு எப்பொழுது கல்யாணம் செய்தால்தானென்ன என்று அவர்களுக்கு விளையாட்டுப் பருவத்தில் விவாகம் செய்தால் ஒருகால் அந்த விவாகத்தால் பாதகமில்லை யென்னலாம். ஆண்டாள்! பொதுவாக விவாகத்தின் உணமைத் தன்மையும் முக்கியத்தையும் பொறுப்பையும் சரியாய் அறிகிற சக்தியும், பற்பல விஷயங்களிலும் தன் இதத்திற்கும் தன் இஷ்டத்திற்கு ஏற்ற நாயகன் இவன்தான் என்றறியும் சக்தியும் பெண்களுக்குப் பதினைது வயதுக்கு மேற்பட்டுத்தான் உண்டாகும். விளையாட்டுப் பருவத்தில் விவாகத்தின் பொறுப்பையும் உணமைத் தன்மையும் உணர்ந்து கொள்ள முடியவே முடியாது.

கல்யாணப்பெண் என்ன உணர்ந்தா லென்ன! உணராவிட்டாலென்ன! அவளது நன்மையைக் கருதும் பெற்றோர்கள் அவளது சுகத்தைக் கருதாமல் அவளுக்குத் துக்கத்தைத் தரும் விவாகத்தையா செய்வார்கள், என்று வாதிக்கிறாய். ஆனால் தனது சுயநலத்திற்காகத்தன் செல்வக்குழந்தையை எவ்வளவு பெரிய சஞ்சலத்திற்கும் விற்றுவிடும் கொடிய பெற்றோர்களும் சிலர் இருக்கிறார்கள். தகுந்த மணப்பருவத்தில் உலக விஷயங்களைப் பகுத்தறியக்கூடிய விற்பனம் வாய்ந்த பெண்கள் அப்படிப்பட்ட தங்கள் கொடிய பெற்றோர்கள் எண்ணங்களுக்குச் சாதாரணமாகச் சம்மதிக்கமாட்டார்கள். பெரும்பாலும் பெற்றோர்கள் தங்கள்பெண்களுக்குத்தகுந்த கணவர்களுக்கே மணஞ் செய்வார்களென்பது உண்மைதான். ஆனால் ஒரு புருஷன் இன்னின்ன குணங்கள், இன்னின்ன ஒழுக்கம், இவ்வளவு கல்வி முதலியவை உடையவனு யிருப்பான் என்று அவன் சிறுவனு யிருக்கும்பொழுது யாருக்குத்தான் தெரியும்? சிறு பிராயத்தில் சாத்வீகிகளாயிருப்பவர்கள் வாலிபப் புருஷர்களான பிறகு பெருத்துஷ்டர்களாகிவிடுவதும், பாலியத்தில் மிகத் துடுக்காயிருப்பவர்கள் பின்னர் பரமசாதுக்களாக மாறுவதும் உலக வியல்பே. ஒரு புருஷனது குணவொழுக்கம் முதலியவை யௌவனப்பருவத்தில்தான் சரியாக ஏற்படும். விளையாட்டுப் பருவமுள்ள பெண் குழந்தைகள் வயதுக்கு ஏற்ற மாப்பிள்ளைகள் சிறுபையன்களே யாவார்கள். அந்த மாப்பிள்ளைப் பையன்கள் பின்னர் இப்படிப்பட்ட புருஷர்களாவார்கள் என்று, அவர்கள் குழந்தை மணப் பெண்களுக்கும் தெரியாது பெற்றோர்களுக்கும் தெரியாது. கடவுளைத் தவிர ஒருவருக்கும் தெரியாது. அன்றியும் ஒரு பெண்ணின் கணவன் அந்தப் பெண்ணின் இஷ்டத்திற்கு ஏற்றவனு யிருக்கவேண்டுமே யொழிய அவள் பெற்றோர்கள் இஷ்டத்திற்கு ஏற்றவனுய் மாத்திரம் இருப்பது போதாது. செவெனிங் இன்ஸ்பெக்டர் மதனகோபாலர் இருக்கிறாரே, அவருடைய யௌவனத்திற் கென்ன குறை? ஒழுக்கத்திற் கென்ன குறை? யோகத்திற் கென்னகுறை? அநேக விஷயங்களில் சிறந்தவர்தான். அவருக்கு உன்னை மணஞ்செய்விக்க அம்மாளுக்கும் நாயனுவுக்கும் நிரம்பச் சம்மதம். உனக்கு மாத்திரம் என்னவோ சம்மதமில்லை. ஆகையினால் அந்த விவாக ஏற்பாடு முடிவுபெறாமல் நின்று விட்டது. நீ குழந்தையா யிருக்கும்பொழுது உனக்குக் கலியாணம் நடந்திருந்தால் நீ இப்பொழுது வெறுக்கும் அந்த இன்ஸ்பெக்டருக்கே ஒருகால் உன்னைக் கல்யாணம் செய்வித்திருப்பார்கள். இப்பொழுது அவரை மறுக்க உனக்கு அப்பொழுதமறுக்க, தகுந்த புத்தியு மிராது சக்தியு மிராது.

ஆண்டாள்:—ஆமாம் அது மெய்தான். செவினியு இன்ஸ்பெக்டர் நல்ல மனுஷர்தான். ஆனால் என் மனத்திற்கு என்னவோ அவர்சற்றும்

பிடித்தமில்லை.

ராகவன்:—இப்பொழுதாவது குழந்தை கலியாணத்தின் கொடுமை உனக்குத் தெரிகிறதா? இன்னுமொரு உதாரணம் சொல்லுகிறேன் கேள். நமது ருக்மணி யத்தை மகன் மாசிலாமணி இருக்கிறான் பார். அவன் பிறபையனு யிருந்தபொழுது எப்படியிருந்தான் சொல்.

ஆண்டாள்:—நல்ல சாதுவான பையனுத்தான் இருந்தான். ஆனால் அப்படியிருந்ததனுல்தானே நமது தாத்தா எப்பொழுதும் அவனை முன்னாலுள்ள ராஜா அமராவதி ராஜா என்றழைப்பார்.

ராகவன்:—இப்பொழுது அவன் எப்படியிருக்கிறான் பார். அவன் செய்யாத அக்கிரமமும்உண்டா? சதா சர்வகாலமும் தன்னுள்ளப்புட்டியும் தலையுமே தியாகக்கொண்டு திரிகிறான். அவன் இவ்வளவு தானுவானென்று, முன்பு யாரேனும் கனவிலும் நினைத்தார்களா? சிறுவனுய் அமராவதி ராஜாவா யிருக்கும்பொழுது உன்னை அவனுக்குக் கல்யாணஞ்செய்து விட்டார்களென்று வைத்துக்கொள்வோம். அப்ப—

ஆண்டாள்:—(சினந்து) சீ! போ அண்ணு! என்ன வார்த்தைகளைப் பேசுகிறாய்! போதும் போதும் நிறுத்து.

ராகவன்:—இல்லை ஆண்டாள்! குழந்தை கலியாணம் பிசாசுக் கலியாணம் என்று சொல்ல வந்தாயே, அதன் சிரமத்தையும் கொடுமையையும் விளக்கிக் காட்டுவதற்காகச் சொன்னேன். என்மேல் கோபித்துக்கொள்ளாதே. ஒருதப்புமில்லாத செவினியு இன்ஸ்பெக்டரைக் கொலைசெய்யுமாறு, நீ மாசிலாமணியின் அருமையாளா யிருந்தால் நீ என்ன செய்யியிலிருப்பாய் என்று நினைத்துப்பார். உன் நெஞ்சம் எப்படிக் கொதிக்கும்! அந்த மகா பரிதாபகர ஸ்திதியில் எப்பொழுதும் கொதிக்கின்ற நின்னைத்தோடி எத்தனையோ ஸ்திரீகள் இந்தத் தேசத்தில் கஷ்டப்படுகிறார்கள். அவ்வளவு கஷ்டங்களுக்கும் காரணம் அறியாப் பருவ விவாகமே. சீ! குழந்தை கலியாணமா! என்ன கொடிய வழக்கம்! நீயும் அதை ஆதரித்துப்பேச வந்துவிட்டாயே. குழந்தைகள் கருத்தைக் கல்விவளர்ச்சியிலும் சன்மார்க்கப்பயிற்சியிலும் செலுத்துவதும், அவர்கள் சுகதேகிகளாயும் திடதேகிகளாயும் சந்தோஷ்டியான மனப் போக்குடையவர்களாயும் இருப்பதற்குத் தேகாப்பியாசம் செய்யச் செய்வதும் ஓடி யாடி விளையாடச்செய்வதும், இன்னும் அவர்கள் நன்மையை முன்னிட்டு எவ்வளவோ காரியங்களெல்லாம் செய்ய வேண்டியிருக்க அவைகளை உபேட்சித்துவிட்டு, வர தக்ஷிணை பறிக்கும் சடங்கு, விவாகச்சடங்கு, மாமியார் வீட்டிற்குப் போகும் சடங்கு, பிரவிடைச்சடங்கு, மாமியார் மாட்டுப்பெண் சண்டைச்சடங்கு, மேன்தச் சடங்கு, பிரசவச் சடங்கு முதலிய சடங்குகளையும் இவைகளின் விவரத்

எனும் அவர்கள் சங்கறிய இடங்கொடுத்து உபதேசிக்கவேண்டும்! சீச்சீ வேட்கக்கேடு! வெட்கக்கேடு!

(தொடரும்)

பெண்மை நல நாடி.

வேனிற் கள்வன்.

ஓர் புதிய பாட்டு.

(1) விலங்குக்குப் புறங்காட்டி விண்ணை நோக்கவோ—அங்கு
வானகத்து மீனி லொன்றை வில்லா லெய்குவான்
புல்லிலைப் புளகங்கொள்ளும் புனையெண்ணிலே—அவன்
பூக்களி லெல்லாம் வாளி பதுக்கி யுள்ளான்.
மெல்லெனவோர் மாநிழல் நாடி நிற்பினே—அங்கு
மிணமிகு வாடை யொன்றை மெய்யி லெறிவான்
தோல்லியிது வென்னசெய்தும் தீருவ தில்லை—சகிகாள்
தீமற்ற கள்வனடி வேனிற் செல்வன்.

(2) தனியிடம் காடியாலுந் தோப்பிற் சென்றிட்டால்—அவன்
தூதெனவே குயில்வந்து தீங்குரல் தரும்
அரியசீப் மென்றியாணு மயலி லேகவே—அவன்
ஆம்பலங் குழலூதி அங்குவந் திட்டான்
இனியென்ன செய்வலென்று ஏங்கி நிற்பினே—அம்ம!
இனியென்ன செய்வையென் றிளித்து நிற்கிறான்
தனியித தோழியரே சகிப்ப தில்லை—இந்தத்
திருட்டைப் போதுமென்னைத் தொடர்ந் திடுவான்.

அங்கயற்கண்ணி.

கண்ணம்மாள் கதை.

188-ம் பக்கத் தொடர்ச்சி.

அதிகாலம் 6

[illegible] அம்மாள் வீடு சென்றதும் கற்றுக்கடத்தை ஒரு மேஜை [illegible] மாமியை பார்த்து "உலைஞ்சதுவிட்டீர்களா?" என்

ஆமம்மா! காலை உலைவைக்க வேண்டும்! ஆமாம், அது தாண்டி சரி அதுதான் சரி, நீ ஊரிலுள்ள, அக்கா வீடு, இக்காவீடு, சொக்காவீடு, டொக்காவீடு, என்று வீடு வீடாய் தழைந்து தழைந்து சிரித்துச் சிரித்துக் குலுக்குக் குலுக்கிப் பிலுக்குப் பிலுக்கிப் பேசிவிட்டு அஸ்தமித்து அறுபது நாழிகைக் கப்புறம் வருவதும்! காடு வாவா, வீடு போபோ, என்கிற இந்தக் கிழவி உலைவைத்து, சோறு ஆக்கி ஒன்பது வகைக்கறி செய்து, அம்மாள் நீ வந்த வுடன் சட்டமாக வட்ட இலைபோட்டு வட்டித்து வணக்கி நிற்கவேண்டும்! அதுதாண்டி சரி! ஹா ஹாங்——"

இவ்வளவுதான் நீலாம்பாள் காதில் விழுந்தன. மௌனமாய்த் தன் மூக்கையும் உதடுகளையும் சுழித்துத் தன் கழுத்தையும் முகத்தையும் நிமிர்த்தி வெகு அலட்சியமாக, தன் மாமியை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சரேலெனத்திரும்பி உட்கட்டுக்குச் சென்றாள். சென்று என்னென்னவோ தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே வீடு பெருக்கல், விளக்கேற்றல், சமையல், முதலிய வேலைகளைக் கவனிக்கலாயினாள். மாமியோ முற்கட்டி விருந்துகொண்டே கேட்பாரின்றி குலகுலவென வார்த்தைகளைக்கொட்டி உரக்கக் கூவிக்கொண்டிருந்தாள். அது ஒய சுமார் ஒருமணி நேரமாயிற்று. அதற்குள் மருமகள் வேலைகள் பாதிக்குமேல்முடிந்தன. சுமார் 7½-மணிக்கு முன்னமே தன் சகல வேலைகளையும் முடித்துத் தன்மாமியைப் போஜனத்திற்கழைத்தாள். நீலாள் அழைத்ததற்கு நேரான பதில் ஒன்றும் பேசாமல் மாமி மறுபடியும் முன்போல் பல்லவி தொடங்கலாயினள். "நீ வக்து சாப்பிட்டால் சாப்பிட்டுத்தொலை. இல்லாவிட்டால் உன் தொண்டை வெடிக்கும்வரை கூலத்துத் தொலை." என்று அவள் காதில் விழாதபடி சொல்லிவிட்டு நீலாள் ஒரு அறைக்குள் புகுந்தாள். கால்காலியி லுட்கார்ந்து மேஜை மேல் சில வெள்ளைக் காகிதங்களைப் போட்டுக்கொண்டு, ஆலோசித்து, இனி எற்படப்போகும் பெண்கள் சங்கத்திற்கு வேண்டிய சட்டதிட்டங்களைக் கருத்தாக எழுதிக்கொண்டிருந்தாள். கற்பூரவல்லி யம்மாள் வீட்டில் பெண்கள் சங்கத்தைப்பற்றிய பேச்சு எழுந்தது முதல் அதைப்பற்றிய சிந்தனையிலேயே நீலாள் ஆநந்தமயமாக மூழ்கியிருந்தாள். அவள் கொஞ்சம் கன்றாகத் தமிழ் படித்தவள். அவ்விஷயம் பலர்க்கும் தெரியும்படி தான் பேசும்பொழுதெல்லாம் பல மேற்கோட் செய்யுள்களை எடுத்துச் சொல்லி அர்த்தமும் சொல்லுவதில் தவறுவது மில்லை சலிப்பது மில்லை. பெண்கள் சங்கத்தில் தானே உண்மையில் ஒரு தலைமைபூண்டு பிரகாசித்துச் சங்கத்தை நடத்தலாம் என்பது அவள் நம்பிக்கை. ஆனால் தன்னைப்போல் அல்லது தனக்கதிகமான கல்வியுடைய கண்ணம்மாள் ஒருத்தி இருக்கிறாள், என்பது அவளுக்குத் தெரியாததல்ல. கண்ணம்மாள் எவ்வளவு படித்தவளாயினும் ஜானகி சொன்னதுபோல் ஒரு பயங்காளி, தன் கல்விப் பெருக்கத்தி

சங்கத்தில் முக்கியமானவளாவது முக்கியமானவனாவது இலக்க வேண்டுமென்ற ஆசையுமற்றவள், அதற்கு வேண்டிய பணமு தேவையும் மற்றவள், அன்றியும் அவள் ஒரு அங்கத்தினளாகச் சங்கத்தில் சேர வேண்டுமென்பதும் சந்தேகம், அப்படிச் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் சங்க அபிவிருத்திக்கு அவளால் இயன்றதெல்லாம் செய்வதாக வாக்களித்திருக்கிறாள், அவ்வாறுதான் செய்வாள், இவைதான் அவளிடமிருந்து தான் எதிர்பார்ப்பது, ஆகையால் சங்கத்தில் பிரதானமாகப்பிறக்குவில்லை எண்ணமுள்ள தனக்குப் போட்டியாக எப்பட்டவே மாட்டாள், என்று எண்ணி னாள் நீலாம்பாள்; பாக்யத்தம்மாள் சபா நாயகியாகவும், தான் காரியதரிசி யாகவும், கண்ணம்மாள் சபையில் சேர்ந்தால் அவள் உபகாரியதரிசியாகவும், முன்னாள் கோமிட்டால் ஜானகி அந்த உத்தியோகம் வகிக்கவும், கற்பூரவல்லி அம்மாள் பொக்கிஷதாரியாகவும் அமைய ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்றும் தீர்மானித்திருந்தாள்.

சங்கத்தின் பெயர் சங்கத்தின் இடம், நோக்கங்கள், நிகழ்ச்சிகள், சங்கத்தின் அங்கத்தினர்கள், என்பவைகளைப்பற்றி முதன் முதல் எழுதி, அடித்தந்திருந்தனர். அவைகளைச் சுத்தமாக வேறுபிரதியாகஎழுதி முன்பு எழுதியதைக் கிழித்தாள். பின்பு சுருக்கப் பிரதியில் தொடக்கத், சங்கத்தின் சின்ன, சங்கத்தின் பரிபாலனத், என்பவைகளைப்பற்றிச்சிலவரிகள் எழுதி னாள். அதில் சில அடித்தல்கள் திருத்தல்கள் முதலிய மாற்றங்கள் செய் தான் முதலிலிருந்து எல்லாவற்றையும் சுத்தமாக வேறொரு காகிதத்தில் எழுதினாள். இதற்கு மணிஒன்பதுக்குமேலாயிற்று. அவள் கணவன்ஜவளிக் கடைபிலிருந்துவந்து கடைக்குப் பூட்டியும்கணக்குப்பத்தகமும் தாங் கியே ஒருவண்டியிலேயே வீட்டுக்குவந்துவிட்டார். அவர்வரத்படியை மிதிப்பு தற்குள் அவருடைய தாயார் தன் மருமகள் அன்றுசெய்த அக்கிரமங்களை யெல்லாம் பாடம் ஒப்புவிக்கத் தொடங்கினாள். அவள் பேசப் பேச, உம், உம், உம், என உத்தரம் கொடுத்துச்சொண்டே மைப்பெட்டியிலுள்ள கணக்குகளை ஒரு ஜாக்கிரதையாகக் கணக்குப்பார்த்துக்கொண்டு பெட்டி யையும் கணக்குப்புத்தகத்தையும் உள்ளே இருக்கும் பெட்டியில் வைத்துப் பூட்டிச்சாவிப்பூட்டிவிட்டுப் பையனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார் செட்டி யார். நீலாம்பாள் அறையில் சட்டங்கள் எழுதும் வேலையை மனக்கவலை யுடன் விட்டுவிட்டு, செம்பில் ஜலம்கொண்டுவந்து கணவன்கையில் கொடுத்தாள். அவர்முகத்தில் அன்றுநடந்த தன்னைக்குறித்த நிந்தாஸ்துதிச்சமாசாரங்களைக் கேட்டறிந்துகொண்டதின் அடையாளம் தென்பட்டது. நீலாம்பாள் [illegible] "போய் உன் [illegible] அவள் கையைப் [illegible]

காதுகேட்கும்படியாகவே சொல்லிவிட்டு, மருமகள் மீண்டும் அறைக்குள் வந்து சட்டம் எழுதுவதில் மேற்செல்லலாயினள். செட்டியாரோ, கால், கை, முகம் கழுவி விபூதி யிட்டுக்கொண்டு சுவரில் மாட்டப்பெற்றிருந்த ஒரு புகையடைந்த அழுக்கேறிய பழைய படாஜர்படத்தின் முன்புநின்று "மாலுட மழுவாட மங்கைசிவ காமியாட....." என்று ஒரு பாட்டுச் சொல்லி முடித்துப் போஜனத்திற்குப் போயினர். அவர் பாடும்பொழுது அவர் எண்ணமோ முக்காலே அரைக்கால் பங்கு, மறுநாள் வசூல்செய்ய வேண்டிய பணப் பாக்கிகளைப்பற்றியும் அரைக்கால் பங்கு தன் தாயார் தன் மனைவியைப்பற்றி என்னென்னவோ உளறியதைப்பற்றியும் சார்ந்தி ருந்தது. வாய்தான் பாடிற்றே யன்றி, கவனம் தினையளவுகூடத் தோத் திரத்திற் செல்லவில்லை.

தன் தாயார் கொட்டிய புகார்களைப் பாதி கேட்டும் பாதிகேளா மலும் வழவழவென்று அவளுக்குச் சில பதில்கள் சொல்லிக்கொண் டும், போஜனஞ்செய்து முடித்துக்கைவாயலம்பித் தெருப்புறமாகச்சென்று சற்று உலாவினர். அப்பொழுது அவர் மனைவி உள்ளேவந்து 5, 6 நிமிஷங்களில் அவசர அவசரமாகத் தன் சொந்தப் போஜன வேலையை முடித்துவிட்டு அறைக்குத் திரும்பி, கட்டிலில் டுக்கை விரித்துவிட்டுமறு படியும் தன் பிரிய வேலையைப் பார்க்கலாயினள். சற்று நேரத்தில், வெளிக் கதவைச் சார்த்தித் தாழிட்டுச் செட்டியாரும் அறைக்குள் வந்தார். அம்மாள் வலதுகையில் பேனாவும் இடதுகையைத் தன்கன்னத்திலும் வைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையி லிருப்பதைக் கண்டார். அவரைக் கண்டதும் சட்டென எழுந்தாள். "என்ன கவர்னர் உத்தியோகம் நடக்கிறது?" என்று கேட்டார் செட்டியார். "என்னசெய்கிறாய்?" என்று அவர்கேட்பார், உடனே எல்லா விவரங்களையும் சொல்லவேண்டும், என்று எண்ணியிருந்த நீலாம்பா ளுக்கு இப்பொழுது கோபம் பொங்கி எழுந்தது. என்றாலும் ஒன்றும் பேசா மலிருந்தாள். செட்டியார் மேஜைமேலிருந்த ஒரு காகிதத்தை எடுத்தார். அது, அன்று கற்பூரவல்லியம்மாள் வீட்டில் எழுதிய சுற்றுக்கடிதமாக இருந்தது. அதை முழுவதும் வாசித்துப்பார்த்தார். பின்பு தன் மனைவியின் முகத்தைப்பார்த்து "இது என்ன?" என்றார்.

"நான், பாலகிருஷ்ணராஜு வீட்டுப்பாக்யத்தம்மாள், கற்பூரவல்லியம் மாள் ஆகிய பலபெண்கள் சேர்ந்து, பெண்கள் முன்னேற்றமடையும்படி ஒருசங்கம் ஏற்படுத்தப்போகிறோம். அதற்காக ஏற்பட்டசுற்றுக்கடிதம்இது. அந்தச் சங்கத்தில் சேரப் பிரியமுள்ளவர்கள் அதில் கையெழுத்திடவேண் டும். இப்போது நான் சங்கத்தில் அநுசரிக்கவேண்டிய சட்டங்கள் எழு தித் தயார் செய்கிறேன். அது முடிய இன்னும் அமைமணி அல்லது ஒரு

களிலும் அவர்களுக்கு ஆசையைப் பெருக்கி, அவர்கள் நன்மனைவியர்களாகவும், நல்ல தாயார்களாகவும் இருந்து கற்புநெறியின் நிகரற்ற மகிமையை உணர்ந்து தங்கள் குழந்தைகளைச் சன்மார்க்கத்தில் செலுத்தி நன்மணிகளாக வளர்த்து, இந்நாடு தன் பழைய பெருமையை அடையச் செய்யும் மகோத்தமமான ஒரு காரியத்தை நான் தொடங்கியிருக்கிறேன் என்று என் மனச்சாட்சி சொல்லுகிறது. நான் முதன் முதல் என் மனச்சாட்சியின் கட்டளைப்படி நடக்கவேண்டியது எனது முதற் கடமை. அதுதான் என் முதல் வேலை. அதைக் கைவிடுவது கொடிய பாவம். நான் காரைக்காலில் பிறந்து வளர்ந்தேன். அந்தப் புண்ணிய பூமியில் கல்ல பழைய காலத்தில் காரைக்கால் அம்மையார் என்ற ஒரு அம்மணி இருந்தாள். அவள் இயற்பெயர் புனிதவதி. புனிதவதி என்றால் பரிசுத்தமான பெண் என்றர்த்தம். அவள் சிவபெருமானிடத்திலும் சிவனடியார்களிடத்திலும் உயர்ந்த பக்தி சிரத்தையுடையவளா யிருந்தாள். அவள் கணவன் ஒருநாள் அவளுக்கு இரண்டு மாம்பழங்கள் கொடுக்க அவைகளைப் பதனமாக வைத்திருந்தாள். பின்பு சிவனடியா ரொருவர் பசியினால் மிகவருத்தப்பட்டுக் காரைக்காலம்மையாரிடம் வந்து அமுதளிப்பா யம்மணி யென்று கேட்கவே அம்மையார் அவருக்கு அன்னம்படைத்து, கறியமுது இல்லாமையால் தன் கணவன் தந்த மாங்கனிகள் இரண்டில் ஒன்றை அந்த அடியவருக்கு அளித்துத் திருப்தி செய்தாள். இப்படிச் சிவனடியார் திருப்தியாய் அமுதுசெய்து போனபின்பு, புனிதவதியின் கணவர், வீட்டிற்குவந்து போஜனஞ்செய்யும் பொழுது மற்றொரு மாங்கனியைக் கொணர்ந்து அவர் உண்ணும்படி வைத்தாள். அவர் அந்தக் கனியைப் புசித்து, அதன் சுவையை மிகவும் விரும்பி மற்றொரு மாங்கனியையும் கொண்டிவரும்படி கேட்டார். காரைக்காலம்மையார் மதிமயங்கி ஒன்றும் தோன்றாது சமையலறைக்குச் சென்று சிவபெருமான் திருவடிகளையே தியானித்து நின்றாள். அப்பெருமான் அருளாலே மாங்கனி யொன்று அவள் கையில் அற்புதமாய் வந்தமர்ந்திருந்தது. அவள் அதைக் கொணர்ந்து கணவருக்கு அளிக்க, அவர் அதைப் புசித்து அதன் அற்புதமான சுவையை அறிந்து "இது நான் தந்த கனியல்ல; எது உனக்கு இவ்வளவு மதுரமான கனி?" என்று கேட்கவே, அம்மையார் நடந்த தனைத்தையும் உள்ளபடி சொல்லிவிட்டாள். கணவர் அதை நம்பாதவராகி, "அப்படியானால் இதைப் போல் வேறொரு மாம்பழம் கொண்டுவா" என்று சொல்ல, புனிதவதியும் உள்ளேபோய், பரமசிவத்தைத்தியானித்து அவர் அருளால் மற்றும் ஒருகனி கொண்டு வந்து கொடுக்கவே, அவள் கணவர் ஆச்சரியத்துடன் அதைத் தன் கையில் வாங்க, கனி மாயமாய் மறைந்தது. இதைக் கண்டு கணவர் பிரமையடைந்து தன்னிலும் தன் மனைவி மிக உயர்ந்த நிலையினளாய் இருப்பதை

னுணர்ந்து அவனே ஒரு தெய்வமெனக் கருதி அவன் தன்னிஷ்டப்படி
நிலாதானே முதலிய வெகுகைங்கரியஞ் செய்யப் பூரண அதுமதியளித்தார்.
அந்தப் புண்ணியவதியின் ஞாபகார்த்தமாக வருஷத்திற் கொருமுறை
மாம்பழத் திருநாள் என்ற உற்சவம் காரைக்காலில் இன்றைக்கும் வெகு
கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இந்தச் சரித்திரத்தைச் சேக்கிழார்
சுவாமிகள் தமது ஒப்புவமையற்ற பெரிய புராணம் என்ற திவ்ய நூலில்
அறுபத்தாறு அழகிய பாட்டுகளால் வெகுஉருக்கமாகத் திருவாய் மலர்ந்தரு
ளியிருக்கிறார். காரைக்காலம்மையாரும் ஒரு செட்டிப்பெண். நானும்
ஒரு செட்டிப்பெண். அந்தத்தேவி பிறந்து வளர்ந்ததும் காரைக்கால்.
நான் பிறந்து வளர்ந்ததும் காரைக்கால். அந்த அம்மணிக்கென்ன
னுடனே சிவனடியார் தொண்டு என்ற சற்கருமம், நான் கைக்கொண்டுள்
ளது பெண்கள் கல்வி ஒழுக்க அபிவிர்த்தியைப் பற்றிய ஒரு பொது
வேலை தொண்டு. அந்த அம்மையார் தன் கணவனும் அறியாமல் ஒரு சிவ
னடியார்க்கு அமுதிட்டாள். நான் நீங்கள் அறியவே இவ்வூரில் பெண்
களுக்கென்று பிரத்தியேகமாகச் சங்கமொன்று அமைக்கும் ஒரு பெரிய
முயற்சியை எடுத்திருக்கிறேன். ஆனால் காரைக்காலம்மையார் கணவர் பர
தத்தனார் தன் மனைவியிடம் உள்ள உயர்ந்த இயல்பை அறிந்து அவள் சிவதை
செய்யுந்தை ஆதரித்து இயன்ற உதவியும் புரிந்து அந்த அம்மையாரிடம்
பிரதிஉபகாரமுங்கொண்டிருந்தார். நானோ உங்களுக்குச்சகலவிதவுபகாரங்களிலும்
பிரதிபலனில்லாத கடப்பாடனாகவே யிருக்கின்றேன். அப்படியிருந்தும் நீங்கள் நான்
ஆரம்பித்திருக்கும் மகத்தான பொதுக் காரியத்தைக் கைவிட்டுவிடும்படி சொல்
லலாமோ? அது ஒரு போதும் கூடாத காரியம். ஆனாலொன்று. காரை
க்காலம்மையார் தன் பக்தியின் மகிமையினால் அற்புதமான இரண்டு மாங்
கனிகளைக் கொணர்ந்ததுபோல என்னால் கொண்டுவர முடியுமா என்று
நீங்கள் கேட்கலாம். ஆனால் நான் காரைக்காலம்மையாருக்குச் சமான
மென்று நான் சொல்ல வரவில்லை. அந்தப் பரிசுத்தவதியின் பாதத்தில்
அமர்ந்த தூளிக்குச் சமானமாவதற்குக்கூட நான் இன்னும் எத்
தனை ஜன்மங்கள் எடுக்க வேண்டுமோ! இருந்தாலும், நானும் என் சகோதரி
களுடன் சொன்னேன். பெண்கள் சங்க முயற்சியினால் எங்களுக்கும் இந்த
சுதேசிக்கும் இந்த நாட்டிற்கும் இனி உண்டாகப் போகிற அநேக பெரிய
காரியங்களையும் எங்கள் சற்கருமத்தால் கிடைத்த அதி மதுரமான மாம்பழ
மொன்றையும் சொல்லவேண்டுமே. இத்தகைய உயர்ந்த சற்கருமமுயற்சியை
நான் தொடங்கியிருக்கிறேன். இதற்குநீங்கள் என்ன தடை செய்கிறீர்கள். ஆனால்
நானும் சோமயாஜுலு அம்மாளும் எவ்வளவு பிரயத்தனங்கள் பெரிய பெரிய
மனிதர்களின் புருஷர்கள் சபை சித்தமுடித்து

கும் ஆதரிப்பும் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ அதற்கு நேர்
விரோதமாயிருக்கிறது. ஆகையினால்தான் இந்தத் தேசத்தில் பெண்கள்
நிலைமை முன்னேற்றத்திற்கு வருவதாயிருந்தால் புருஷனுக்கு அடங்காத
பெண்களால்தான் வரும்என்று இன்றுஜானகியம்மாள்சொன்னாள்போலும்.
ஐயோ! நான் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்வதெல்லாம் எதற்காக!
கல்வியபிவிர்த்தி, சுற்பு, பதிபக்தி, இல்லறமுறை, பொறுமை, சாந்தம்,முத
லியவற்றில் பெண்கள் எல்லோரும் மேம்பட்டுத் துலங்கச் செய்வதற்குத்
தானே. இதற்கு என் புருஷர்கள் விரோதங் காட்டவேண்டும்! ஆனால்,
எது எப்படியிருந்தாலும் என்ன! நாம் எடுத்துள்ள சற்காரியத்தில் சிதருத
ஊக்கங் கொண்டிருந்தால் போதும். ஊக்கந்தான் காரியஸ்தர்களுக்குக் கண்
கணம், ஊக்கந்தான் அபிவிர்த்திக்கு அஸ்திவாரம், ஊக்கந்தான் காரியசித்
திக்கு உயிர், ஊக்கமில்லாவிட்டால் ஒன்றுமே யில்லை. ஆகையினால் காயஞ்
சும்

"உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று".

என்றனர். ஊக்கமில்லாதாருக்கு என்ன இருந்தாலும் ஒன்றும் இல்லாத
வராவராம். ஊக்கமில்லாவிட்டால் எவ்வீதமான ஆக்கமும் தூக்க மடைந்து
விடும். ஆகையினால்தான் "ஊக்கமது கைவிடேல்" என்றனன் ஔவைப்
பிராட்டியும். என்ன இடுக்கண் வந்தாலும் நான் அந்த ஊக்கத்தை உறுதியா
கப் பற்றி நிற்பேன். இது நிச்சயத்திலும் நிச்சயம். ஆகையால் இந்த ராத்
திரி வேளையில் சூரியன் உச்சிக்கு நேரே வந்து உக்கிரமான வெய்யலைப்
பரப்பினாலும், நான் சட்டங்களை எழுதி முடிக்காமல் படுக்கைக்குப் போக
மாட்டேன். இதுதான் என்னுடைய ஒரே நிர்மானம்." என்று ஒரே மூச்
சாக ஒரே உறுதியாகப் பேசி முடித்தாள் லீலாம்பாள் அம்மாள்.

அவள் கடகடகடவென்று பேசிய தன்மையைப் பார்த்து, அவள்
கண்களிலும் அவள் நின்றுகொண்டிருந்த நிலைமையிலும் தோன்றிய மனோ
வுறுதியைப் பார்த்து, செட்டியார் பிரமித்து விழித்தார். அவருக்கு இன்
னது செய்வதென்று திட்டமாகத் தெரியவில்லை. காரைக்காலம்மையார்
கதையை இதற்குமுன் கேட்டே யறியாத அவர், தன் மனைவி கல்விக்
கடலைக் குடித்தவள் என்று எண்ணினார். அதனால் அவர் சற்று மகிழ்ந்தார்
என்றுஞ் சொல்லலாம். அவர் சற்றும் அழுக்காறற்ற சித்த முடையவர்.
ஒரு வீணை வித்வான், வீணை வாசிப்பதில் தன்னிலும் தன் புத்திரன் பன்
மடங்கு ஸ்வாரஸ்யமாக வீணை வாசிப்பதைக்கண்டு மனஞ்சகியாது உடனே
அப்புத்திரனது வலக்கை விரலொன்றைத் துண்டித்துவிட்டதாகக் கேட்டி
ருக்கிறோம். தம்மிலும் தமது தம்பியர் உயர்ந்த கல்விச் செல்வம் பொருட்
செல்வம் முதலியன கொண்டிருப்பதைக் கண்டு எவரும் தமையன்மார்

பதை விட்டுஉள்ளவர்களை ஏன் நிரந்தரப் பேதைகளாகவே வைத்திருக்க நினைக்கிறீர்கள்? நல்ல காரியஞ் செய்தீர்கள். பேசாமல் உன்னை விட்டுப் போய்விட்டால் தருமஞ் செய்ததாகவாவது நினைத்து ஆண்டவனுக்கு நன்றி சொல்வேன். நீ ஆயிரம் இணுக்குத் தச்சோறு போட்டாலும் நான் சமர்த்தாயமாய்ச் சகித்திருப்பேன். மற்றப்படி பெண்களுக்குள் சங்கம் கூட்டவேண்டுமென்றால் அதுமட்டும் பெண்களுக்குக் கொஞ்சகூட அழகல்ல. அதனால் பெருந்தலைவலிகள் வரும். எல்லாம் உன்னுடைய நன்மைக்குத்தான் சொல்லுகிறேன்" என்றனர்.

"நான் என்ன புதிய மாதிரியான முயற்சியையா எடுத்திருக்கிறேன்! சென்னையிலும் இதைப்போல் மற்றும் பலபட்டணங்களிலும் எத்தனையோ பெண்கள் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் ஒன்றைப்பற்றியெல்லாம் காலைக் காலை ஆலலித்து ஆர்வமில்லாமலாக நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். எது எப்படியிருந்தாலும் உங்கள் உத்தரவில்லாமல் நான் சங்கத்தைத் தொடங்குவேனா! ஆனால் இப்பொழுது நான் சட்டங்கள் தயாரிப்பதை மாத்திரம் தடைசெய்யாதீர்கள்." என்று கேட்டனள் மனைவி.

அவள் பிடிவாதத்தைக் கண்டு செட்டியாருக்குத் தன்னைச் சிறைமம் பொங்கிற்று. "நான் எவ்வளவு சொன்னாலும் திருப்பித் திருப்பி எதிர்த்துப் பேசுகிறாய்! எல்லாவற்றையும் எடுத்துக் குப்பையிலே எறிந்துவிட்டுத் தூவக்கப்போ போ." என்று உரக்கக் கூவினர்.

"இதை நான் எழுதி முடிக்காமல் எனக்குத் தூக்கமே வராது. வீணாக என்னைத் வாதாடாதீர்கள்." என்ற பதில் எழுந்தது.

அவள் பேசி முடிப்பதற்குள் அவள் இடக்கன்னத்தில் பளீர் பளீரென இரண்டு மூன்று அறை அறைந்து விட்டார் செட்டியார். நீலாள், குப்பென்று கண்களில் நீர் பெருக்கக் கன்னத்தைத் தடவிக்கொண்டே தேம்பித் தேம்பி விக்கலாயினள். என்னென்னவோ முணுமுணுத்துக்கொண்டிருந்த செட்டியார் "இப்பொழுதாவது போகிறாயா? இல்லையா?" என்று சீறலானார். இதுகாறும் நின்றுகொண்டிருந்த நீலாள் சட்டென்று கதவண்டை வந்து தன் ஆடையை முகத்தில் வைத்துக்கொண்டு முன்னிலும் அதிகமாகத் தேம்பலாயினள். செட்டியார் அவளைப் பற்றி அறைக்கு வெளியே உந்த முயற்சித்தார். அவள் தயங்கித்தயங்கித் தத்தித் தள்ளாடினாள். அவள் கால் பலசாலியாகிய செட்டியாரால் அவளை வெளியேதள்ள முடியவில்லை. "எப்படியேனும் தொலைந்து தொலைப்போ" என்று தீர்மானித்த வாய்வரை வந்து அனைத்துவிட்டு ஒரு ஐம்பதாவது தடவையும் மாத்திரம் "

தச்சொண்டு வெளியே வந்து தெருப்புறத்தைத் தொடுகிறது.

[இன்னும் இரண்டொரு மழையில் இக்கதை முடிவுறும்.]

வாணீதாசன்.

காயம் பிணி உற்றவாகளுக்குப் பிரதம உபசரணை.

உடற்கூறுபாடு.

இம்மழையில் பிரசுரிக்கப்பெறும் சாஸ்திரார்த்தமான பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

தொடை எலும்பு அல்லது ஊர்வஸ்தி.	Femer or thigh bone.
சரோணி சந்து.	Hip joint.
சந்தி பந்தனம், ஸ்நாயு அல்லது எலும்புகளை இணைத்தக்கட்டுமிடம்.	Ligament.
முழங்கால்சிப்பி, அல்லது ஜானவஸ்தி.	Patella or Knee cap.
ஜானகம் அல்லது ஐக்காஸ்தி.	Tibia.
சார எலும்பு, அல்லது அதஜங்காஸ்தி.	Fibula.
கணுக்கால் எலும்பு அல்லது குல்பாஸ்தி.	Tarsus bones.
சாரி எலும்பு.	Astragalus.
குதிக்கால் எலும்பு.	Oscalcis.
நாவு எலும்பு.	Scaphoid.
உள் ஆப்பு எலும்பு.	Internal Cuneiform.
நடுவில் ஆப்பு எலும்பு.	Middle Cuneiform.
வெளி ஆப்பு எலும்பு.	External Cuneiform.
கன எலும்பு.	Cuboid bone.
பாத எலும்புகள், அல்லது உள்ளங்கால் எலும்புகள், அல்லது பாதாஸ்திகள், அல்லது கூர்ச்சாஸ்திகள்.	Metatarsus bones.
விரல்களில் எலும்புகள் அல்லது பாதாங்குலாஸ்திகள்.	Phalanges.

அதிசாரமும் அல்லது அதக்காயமும்.

தொடை எலும்பு அல்லது ஊர்வஸ்தி இதன் மேலே இடுப்பெலும்பு சேருமிடம் முழங்கால் மடிவிலுள்ள சிறிய எலும்பு. தொடைஎலும்பு

எலும்புகளில் இதுதான் மிகப்பெரிதும் அதிக பலமுள்ளதுமாயிருக்கிறது. இதன் மத்திய பாகம் (காம்பு) சற்றுப்பருத்ததாயும் உருண்டையாயும் முன்னேக்கின வளைவுடையதாயு மிருக்கிறது. இதன் மேல்முனை உள்வளைந்து சரோணியஸ்தியின் அடிப்புறத்திலுள்ள ஒரு ஆழமானகுழியில் பொருத்துவதற்குத் தகுந்தபடி உருண்டையான தலையுடையதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இது இவ்விதம் சேர்வதால் சரோணி சந்து ஏற்படுகிறது. மேல்முனையில் உள்ள உருண்டையான தலையில் ஒரு பள்ள முண்டு. அதில் ஒரு உருண்டைச் சந்திபந்தனம் ஒட்டிக்கொண்டிக்கிறது. தலையின் கீழிருக்கிற ஸ்தானம் சுருங்கியிருக்கும். இதற்குக் கழுத்து என்ற பெயர். இக்கக் கழுத்துக்கடியில் இரண்டு பிதுக்கங்கள் காணப்படும். இவ்வெலும்பின் பின்புறத்தில் ஒரு நீண்ட வரம்புண்டு. இவ்வெலும்பின் கீழருகு சிறிது விரிந்து ஜானவஸ்தி, அல்லது முழங்தான் பொருத்திற் கேற்றபடி இரண்டு புடைப்புகள் அமையப்பெற்றதாய் இருக்கிறது. இதில் உட்புற மிருப்பது நீண்டும் வெளிப்புற மிருப்பது அகலமாயு மிருக்கிறது.

முழங்கால்சிப்பி அல்லது ஜாநீவஸ்தி. இந்த எலும்பானது வேறு எலும்புடன் சேராமல் முழங்தான் பொருத்தை முன்புறத்தில் அணைத்துக் காப்பதற்காக அவ்விடத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது முக்கோணவடிவுள்ள சிறிய எலும்பு. இதன் அகலமான பாகம் முழங்தான் பொருத்தின் முன் மேல் நோக்கிச் சருமத்திற் கடியிலிருக்கிறது. கெருங்கிய பாகம் கீழ் நோக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

கால் எலும்புகள் அல்லது ஜங்காஸ்திகள். முழங்கால் முதல் கணுக்கால் வரையில் நீண்டிருக்கிற இரண்டு எலும்புகள். இவ்விரண்டில் உட்புறமாயுள்ள பெரிய நீண்ட எலும்பிற்கு ஜானகம் அல்லது ஐக்காஸ்தி என்ற பெயர். இவ்வெலும்பில் ஒரு கூர்மையான நீண்ட வரம்புண்டு. அது காலின் முன்புறத்தில் சருமத்திற்குக் கீழே காணப்படும். இவ்வெலும்பு முழங்கால் கணுக்கால் பொருத்தங்க ளிரண்டிலும் பிரதானமாயிருக்கிறது.

இதன் அகன்ற மேல்முனையில் தொடை எலும்பு வன்றி கிற்கிறது. கீழ்முனையில் ஒரு பிதுக்கமுண்டு. அது கணுக்கால் உள்முழி என்று சொல்லப்படும். இந்த முனையானது பக்கத்துச் சாவெலும்பு அல்லது அநுஜங்காஸ்தியுடனும் சாரி எலும்புடனும் சேர்ந்திருக்கிறது. ஜானகத்திற்கு வெளிப்புறமாய்க் கொஞ்சம் பின்னல் இதிலும் சிறியதாயும் சன்னமாயுமுள்ள எலும்புக்குச் சாவெலும்பு அல்லது அநுஜங்காஸ்தி என்று பெயர். முழங்கால் பொருத்தில் இது யாதொரு சேர்க்கையு மின்றி இருக்கிறது. பெருத்து, தனமாயிருக்கிற இதன்மேல்முனை ஜானகத்தோடு சேர்ந்திருக்கும். இதன் கீழ்முனை நீண்டு தட்டையாயிருக்கும். இதற்குக் கணுக்கால் வெளி

முழங்கையும் இதை சாரி எலும்புடன் சேர்த்திருக்கிறது. இவ்விரு
இரு எலும்புகளின் மத்தியில் ஒரு சீனப் புலவு ஒட்டிக் கொண்டிருக்கிறது.
இதனைக்கால் எலும்புகள் அல்லது குதிக்கால் எலும்புகள் அல்லது
குப்புறுதிகள், கெட்டியான வையமாகவும் குறியனவாகவும் உள்ள மற்ற
எலும்புகள். இவை மேலே ஐங்காஸ்திகளையும் கீழே பாத எலும்புகளையும்
ருசிக்கத் தாங்கி அழகுக்குறைவு உண்டாகாதபடி நன்மை அடையவே
காரிருக்கின்றன. இந்த ஏழு எலும்புகளின் பெயராவன:—சாரி எலும்பு, குதிக்
கால் எலும்பு, வெளி எலும்பு, உள் எலும்பு, மத்திய எலும்பு, வெளி
ஆப்பு எலும்பு, கன எலும்பு.

பாத எலும்புகள், அல்லது உள்ளங்கால் எலும்புகள், அல்லது
பாதாஸ்திகள், அல்லது கூர்ச்சாஸ்திகள்: பாதத்தை அமைப்பதற்கு மேற்
சொன்ன காதலாஸ்திகளைப்போலவே எற்பட்டன சிறு சிறு எலும்
புகளை இவைகளின் அடிதோறுமாயும் முன் உருண்டம் இருக்கும்.

காலிரலெலும்புகள் அல்லது பாதாங்குல்யஸ்திகள். கைவிரல
களைப்போல் காலிரல்களை அழைப்பதற்கு சென்ற பெருவிரலில் இரண்டு
எழுபுகளும் மற்ற நான்கில் ஒவ்வொன்றிலும் மூன்று எலும்புகளும்
உண்டு.

மானிட தேகத்திலுள்ள 200 எலும்புகளின் விபரம்.

1. தலை அல்லது சிரசு.

மூக்கு	{ பிரக்பாலம் 8	22
	{ முகம் 14	
மூளைத்தண்டு		1

2. முண்டம் அல்லது உடல்.

முள்ளந்தண்டு	{ கழுத்து 7	26
	{ முதுகு 12	
	{ இடுப்பு 5	
	{ 5 எலும்புகள் சேர்ந்த திரி காலடி அல்லது திரிகாண்டம் 1	
	{ 4 எலும்புகள் சேர்ந்த அதற் திரிகண்டி அல்லது பீடிகை 1	
மார்பெலும்பு		1
விலாவெலும்புகள்		24

	74
அம்ஸபலகைகள் அல்லது தோள்பட்டை எலும்புகள்	2
அகூகாஸ்திகள் அல்லது காரை எலும்புகள்	2
பிரகண்டாஸ்திகள் அல்லது புஜ எலும்புகள்	2

3. ஊர்த்வசாகை அல்லது உற்காயம்.

காஸ்திகள் அல்லது முன்கை எலும்புகள்	{ ஆரைகள் 2 / இரத்தினிகள் 2 }	4
மணிபந்தாஸ்திகள் அல்லது மணிக்கட்டு எலும்புகள் அல்லது கைக்குள்சுகள்		16
கரதலாஸ்திகள் அல்லது உள்ளங்கை எலும்புகள்		10
விரல் எலும்புகள் (விரல்கள் பத்திற்கு)		28

4. அதஃசாகை அல்லது அதஃகாயம்.

ஸ்ரோண்யாஸ்திகள் அல்லது கூபகாஸ்திகள் அல்லது இடுப்பெலும்புகள்		2
ஊர்வஸ்திகள் அல்லது தொடை எலும்புகள்		2
காலெலும்புகள்	{ ஜங்காஸ்திகள் அல்லது கணைகைகள் அதஃ ஜங்காஸ்திகள் அல்லது சாரெலும்புகள் }	4
ஜான்வஸ்திகள் அல்லது முழங்கால்சிப்பிஎலும்புகள்		2
குல்பாஸ்திகள் அல்லது கணுக்கால் எலும்புகள்	{ சாரி எலும்புகள் 2 / குதிக்சால் ,, 2 / காவு ,, 2 / உள்ஆப்பு ,, 2 / மத்தியஆப்பு ,, 2 / வெளிஆப்பு ,, 2 / கன எலும்புகள் 2 }	14
கூர்ச்சாஸ்திகள் அல்லது பாதாஸ்திகள் அல்லது உள்ளங்கால் எலும்புகள்		10
பாதாங்குல்யஸ்திகள் அல்லது கால்விரல் எலும் புகள் (விரல்கள் பத்திற்கு)		28
ஆக மொத்த எலும்புகள்		200

ரெ. கோவிந்தசாமி நாயுடு,
மெடிக்கல் பிராக்டிஷனர், அனந்தசுடி.

தாகப்பட்டணம் உருக்குப்பெட்டி.

ஓர் சிறு கதை.

உலகோம்பல், படைக்கலப்பயிற்சி, முதலிய அரசர்க்குரிய தொழில்களை நடாத்திய சிறப்பினால் தனது சீர்புகழை எத்திசையும் பரப்பிய ராஜமாபுரம் ஜமீன்தாரின் பிரபாவத்தை நம் விவரிக்கவேண்டியதில்லை. நமது ஜமீன் பிமபூபதி ஒருநாள் செவ்வந்திப்பொழுதில் தனது அரண்மனைக்கெதி மாடியில் உலாவிய வண்ணமே- பின்வருமாறு ஆலோசிக்கலானார். "மானிடவியற்கையின் விந்தையைஎன்னவென்று நினைக்கிறது! சுவக்கிரசுவக்கிரமென்று கேள்விப்பட்டுள்ளேன். ஆயினும் எனது குடிஜனங்களின் அபிப்பிராய பேதங்களுக்குமுன் சுரசுவக்கிரமுங்கூட அந்நியோந்நிய ஒற்றுமை என விளங்கும். இவ்விண்ணப்பம் யாது முறையிடுகின்றது? (ஒரு காகிதச்சுருளை பிடித்துப் படிக்கிறார்.) "மகாராஜாவே! குடிகள் முன்னேற்றம் அடையுமாறு திருத்தப் பிரசேபனைகளைச் சீக்கிரம் வெளியிடவேண்டும்." மற்றும் இம்மனு என்ன கூறுகிறது? (மற்றொரு காகிதச்சுருளைப் பிரித்துப் படிக்கிறார்)"ஜனங்கள் பக்குவமடையவில்லையாகையால் உள்ள முறையே உயர்ந்தமுறை." என்னை! இவ்விருகட்சிக்காரருக்குமிடையில், இரட்டைப் பெண்சாதிக்காரன்போல் தவிக்கிறேனே. நான் சிறிதுகாலம் இவர்களைப் பிரிந்திருந்தால் ஒருகால் இவர்கள் ஒற்றுமைஅடைவார்கள். ஆகவேஎனது உயிர்த்தோழனாகிய அரச்சுனராயருடன் மாறுவேடந்தரித்து, யாத்திரையில் சிறிது காலங்கழிப்பேன்."

* * * * *

பிமபூபதி மேற்கூறியவாறு தீர்மானஞ்செய்துகொண்ட மூன்றாம்நாள் மாலை காலு மணிக்குத் தூத்துக்குடியில் மரீனாத்தெருவில் கிருஷ்ணய்யர் காபிகிளப்பில் சலவைக்கல் மேஜைபண்டை வியாபாரிகளைப்போல் மாறுவேடந்தரித்து, காபி பானம் பண்ணிக்கொண்டிருந்த நபர்கள் நமது ஜமீன்தாரும் அவரது உயிர்த்தோழருமென்று அறிந்துகொள்வது சுன்ற தாய்மார்களுக்குமே சிரமமாயிருந்திருக்கும். அவர்கள் ஆசனத்திலமர்ந்து தங்களெதிரில் தோன்றிய பட்சுகளில் சாமான்கள் ஏற்றுவதைக் கவனித்துக்கொண்டிருக்கையில், ஓலென்னமண்டையும், சிமிர்ந்த காதும்,

வெருளும் கண்களும், சிறிய மூக்கும், வெளித்தோன்றும் மேல்வாய்ப்பற்களும், பின்வாங்கின நாவாயும், வளைந்து சிறுத்த கால்களும் உடைய ஒருமனிதன் தனது தோளில் ஒரு வெள்ளித்தட்டில் ஏதோ ஒருபொருளை வைத்து அதை ஒரு பட்டுவஸ்திரத்தால் மூடி, வெகு பரபரப்புடன், நமது வேஷதாரிகளுக்குமுன் வந்து தோன்றினன். காபி, டீ, பாலம்பண்ணிக்கொண்டிருந்தவர்களை நோக்கி "கனவான்களே! ஓர் அறிக்கை. நான் ஒரு விரதம் கைக்கொண்டுள்ளேன். இத்தட்டில் பக்குவமாய்ச் செய்த கொழுக்கட்டைகள் வைத்திருக்கிறேன். கனவான்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மோதகம் கொடுப்பேன். தயவுசெய்து சாப்பிடவேண்டும். இல்லாவிடில், மறுத்தவருடைய பங்காகிய கொழுக்கட்டையை நான் விழுங்கவேண்டியது வரும். இன்று,இதுவரையிலும், எழுபத்துமூன்று கொழுக்கட்டைகள் விழுங்கியிருக்கிறேன்." என்று சொல்லிக்கொண்டே வெகு மரியாதையுடன்,இளப்முன்னரையில் உட்கார்ந்திருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கொழுக்கட்டைவீதம் பரிமாறத்தொடங்கினன். பஞ்சகாலத்தில் நல்ல தருமமென்று சொல்லி நகைத்துக்கொண்டே சிலர் கொழுக்கட்டையை விழுங்கினர்கள். மூளைச்சூட்டுக்காரனென்று சிலர் மறுத்துவிட்டார்கள். மறுத்த கொழுக்கட்டைகளை மூச்சுக்காட்டாமல் வெள்ளித்தட்டுக்காரன் விழுங்கிவிட்டான். பூபதியும் சாயரும் தங்கள் பங்கை விழுங்கினபிறகு அம்மூவரையுமே கவனித்திருந்து, அவன் வெளியே செல்லவும், அவனைப் பின்தொடர்ந்து போனார்கள்.

வரும்.

மங்களாகரன்.



சீதா கல்யாணம்.

பாலிகைகள் பாலர்களுக்காக எழுதப் பெற்ற பாட்டு.

விநாயகர் காப்பு.

இராகம். "பதசனீத" என்ற கோட்டு மெட்டு.

பல்லவி.

மங்களாம்பிகை—மைந்த

அநுபல்லவி.

திக்கோ ணனிந்த தேவன் ஜெஷ்ட புத்ர தீரனே
திரு ருரு பா தம்
திருப்பதம்
திருப்பதம்
திருப்பதங்கள் துதித்திட்டோம். (மங்களாம்பிகை)

சரணங்கள்.

கஜமுகத்தோனே நான்கு
புஜம்பொலிந்தோனே
விஜய ரூன் வீர மொடுக்க விண்ணே ரெவரு மேத்திடும்
வே லன் அண் ணன்
வேலணண்ணன்
வேலணண்ணன்
விக்ன மழிக்கும் விமலனே (மங்களாம்பிகை)

வனிதை ஜானகி—அன்னை
புனித நன்மணம்
இனிதாய் இயம்ப இணையில் எழிலார் இணையாம் விழியோ டலங்கிடும்
நீ சா உன் றன்
ஈசா உன்றன்
ஈசா உன்றன்
இனிய அருளே சயலே. (மங்களாம்பிகை)

I. ஸ்ரீராமரது பாலப்பருவம்.

நோட்டு மெட்டு. வேறு.

1. பூதலக்க னேழிலும் புகழ்பெற் றோங்கும் புண்ணியன்
ஆதவன் குலத்து வந்த அன்பு மிக்க தசரதர்.

2. பட்ட மஹிஷி கௌசல் யாவும் பத்னி ஸ்மித்ரை மங்கையும்
இஷ்ட மாகை கேகி யோடு இன்பம் நுகரும் தசரதர்.

3. உற்பல் முன்னை ரணமேப் போரில் தோட்டி வென்ற வீரரும்
தம்பினெய் சமன்தி மிக்க கன்னை வென்ற தசரதர்.

4. மூத்தி முழுமை முழுதணைத்த மூனிவர் பல்லோர் அருளினால்
ஏழ் சமேஷ்டியாகம் செய்த புனித ராண தசரதர்.

5. தேவர் முதலா யாவருங் களிப்பை மேவ கௌசலை
ஆலல் தீர அயோத்தி நகரில் உதித்த ராமச் சந்திரன்.

6. சுக்கை சற்கை கேகி யுள்ளம் கன்குவப்பி பரதனும்
மக்கை ஸ்மித்ரை மிழச் செய்லக்ஷ் மணைத் ருக்ன மைந்தரும்.

7. பொழுதோர் வண்ணம் நானோர் மேனி புதல்வர் நால்வர் உடைய
தொழுதே எவரும் துதிக்கத் தக்க தூய தேஜஸ் உற்றனர். [ராய்த்

8. உலகை யுடனோர் வண்ணப் பந்தை உருட்டி விட்டுத்தொடர்ந்ததை
தவழ்ந்து தவழ்ந்து தாவிப்பற்றும் தனியன் ராமச் சந்திரன்.

9. காம மென்ன வென்று கேட்பின் கயண மிரண்டும் அசைந்திட
"ஆம" வென்று சைத்து மிழும் அன்பன் ராமச் சந்திரன்.

10. அன்னை யெக்கே யென்று சாவின் அன்னைமடியை அடைந்திட்டுப்
புன்சிரிப்பும் பூரிப்புங்கொள் புனித ராமச் சந்திரன்.

11. தந்தை மடியில் தங்கி அவர்தந் தாணி யாலுந் தன்மையில்
சிந்தை யெல்லாஞ் செலுத்து கின்ற செல்வன் ராமச் சந்திரன்.

12. எண்ணிலாரத் நங்களிருக்க எழில்வி சும்பில் வய்ந்திடும்
வெண்ணிலாவை விரும்பி யழுத விமலன் ராமச் சந்திரன்.

13. விண்ணில் நின்ற வெண்ணிலாவை விளங்கு மோர்கண் ணாடியிற்
கண்ணிற் கண்டு களித்த எங்கள் காதல் ராமச்சந்திரன்.

14. தம்பி மாரோ டைந்து வயதில் தக்க வித்யா ரம்பமுற்
செம்பிராளுய் இலங்கி நின்ற எங்கள் ராமச் சந்திரன்.

15. அன்னை பாங்கை கேகி தாதி அங்கக் கூனை நிமிர்த்திடப்
பின்னை அவன்தன் பகையைப் பெற்ற பிரிய ராமச்சந்திரன்.

கோகிலத்தோனி.

ரசிகை

ஓர் கவீன நாடகம்.

175-ம் பக்கத் தொடர்ச்சி.

(அங்கம் 2, காட்சி 3, ரமணன், கண்ணன் ஆகிய இருவருக்கும் நிகழ் சம்பாஷணையைக் கூறுகின்றது. அக்காட்சி நன்கு விடப்பட்டது.)

அங்கம் 2, காட்சி 4.

(அரசபுத்திரிகளின் சயனகிருகம். இரவு மூன்றாம் சாமவேளை. மேகரி மஞ்சத்தினமீது அயர்ந்து நித்திரை புரிகின்றனள். ரசிகை தன்

முன்ருணையைத் தலைமீது விரித்துச் சயனித்திருந்தவன் சட்டென எழுந்து உட்கார்ந்து கன்னத்தில் கையைவைத்துத் தனக்குட் பேசுகின்ருன்:—)

இரண்டாஞ் சாமமுங் கடந்து மூன்ருஞ் சாமமும் தொடங்கலாயிற்று. கண்களோ நிர்ப்பந்தித்து மூடிக்கொண்டிருந்தாலும் நித்திரை வரவில்லையே. ஐயோ! அம்மணீ! மங்களவல்லீ! தாயே! இது என்ன நூதனமான நிலைமை! பைத்தியக்காரர்களுக்குத் தான் நித்திரையே வராதென்பார்கள். எனக்குப் பைத்தியந் தான் பிடித்துவிட்டதா? பைத்தியக்காரர்கள் காரணமின்றி சிரிப்பார்களே! நானும் இத்தனை நாழிகைகளில் எத்தனையோ முறை புன்னகை புரிந்தேனே. ஆனல் அது சோகப்புன்னகை. கோடி கோடி சஞ்சலமயமான எண்ணங்கள் சித்தத்தில் சுற்றிச் சுற்றிச் சிதறுவதால் உண்டாகும் புன்னகை. "புன்னகைக்குக் காரணமென்ன? சோகமா? சுகமா? சுகம், மனத்தில் ஏழும் ஒரு திருப்தி ஒரு மகிழ்ச்சி, ஒரு இன்பம், காரணமாகத்தான் புன்னகை தோன்றும். இரவெல்லாம் நித்திரை யற்ற கண்களிலிருந்து நீரைச் சிந்திச் சிந்தாகுலியா யிருப்பவளுக்குப் புன்னகையும் வருமா? இது என்ன புதுமைப் புன்னகையோ! இதுதான் பைத்தியப் புன்னகையோ? எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது உண்மை தானே! சீ! பைத்தியங்கொண்டவர்களுக்குக் கண்ணில் ஜலமேது! கருத்தில் கலக்கமேது! பைத்தியங்கொண்டவர்கள் சும்மா வெறியர்களைப்போல், யாதொரு சிந்தனையு மற்று, ஆகாயத்தையும் பாராமல் பூமியையும் பாராமல், அக்கப்பக்கத்திலும் பாராமல் எதையும் பாராமல மிரள மிரள விழித்துக்கொண்டு ஹிஹ்ற ஹிஹ்ற ஹீ என்று சிரிப்பார்கள். அதுவல்லவோ பைத்தியச் சிரிப்பு. நான் அப்படியோ இருக்கிறேன்! எத்தனை தடவை நிலவிற் சென்று சந்திரனை உற்றுப் பார்த்துப் பேசி அவனை நிந்தித் திகழ்ந்தும் வந்தித்து வாழ்த்தியும் வந்தேன்! இந்தக் கண்கள் எத்தனை சொம்பு ஜலம் கொட்டியிருக்கும்! பைத்தியக்காரர்களுக்கு இவ்வித நிலைமைகள் ஏது! ஆகையால், எனக்குப் பைத்தியமல்ல. பைத்தியங் கொண்டவர்களைப்போல் நான் நித்திரை பற்றியிருந்தாலும், என்னுடைய புன்னகை பைத்தியப் புன்னகை யன்று. இது சோகப் புன்னகை, தினப்பு புன்னகை, வேதனைப் புன்னகை, கலக்கப் புன்னகை, காதற் புன்னகை,—

ஐயோ! ரஜினி! கடைசியில் என்னடி சொன்னாய்! காதற் புன்னகையா! அது சுகப்புன்னகை யல்லவோடி! அந்தச் சுவர்க்கதை உனக்கேதடி? காதலனும் காதலியும் கருத்தொருமித்தகாலெழும் கண் கலப்பு, மனம் இலயிதம் முதலியவை மூலமாய் நிகழும் தூது, முதலியவற்றைப்பற்றி நினைந்து நினைந்து இன்பமயமாக எழும் சிந்தனையில் தோன்றும் புன்னகையல்லவோ காதற்புன்னகை! உனக்கு ஏது அந்த நகை! நீதான் உன் காதலன் வேண்டாத பாதகியாய்விட்டனையே. ஆகையால் உன் புன்னகை காதற் புன்னகையன்று. அத்தகைய நகைகொள்ளும் பெரும்பேற்றிற்கு ஏற்றவள் அதோ துயில்கின்ருள் பார். (மஞ்சத்தில் தூங்குகிற வசீகரியைக் கைவிரலாற் சுட்டிக்காட்டுகிருள்.) ஆகையால் உன் புன்னகை காதற்புன்னகை யன்று. அது கலக்கப்புன்னகை. உன் காதலன் மனம் உன்னை உபேட்சிக்கின்றதால் உனக்குள் எழுந்துள்ள கடுமையான கலக்கம் இருக்கிறதே, அது காரணமாயெழுந்த புன்னகை. அதை ஏன் காதற்புன்னகை என்று எண்ணி வீண் மேட்டிமை கொள்ளுகின்ருய்! ஆனல் என் காதலன் என்னை இகழ்ந்தாலும் நான் என் காதலனைக் காதலிக்கவில்லையா? என்னைப் போல் காதலுருக்கங்கொண்டவள் இந்த ஜகத்திலும் இருப்பாளா? ஆகையால் எனது புன்னகையை ஏன் காதற் புன்னகையென்று சொல்லக்கூடாது! ரஜினி! திரும்பவும் சொல்லுகிறேன் கேள். காதற்புன்னகை கருத்தொருமித்த காதலருக்குத்தானுண்டு. ஆனல் நீயோ உன்காதலன் காதலைக் கவராத காதல் கொண்டனை. வேண்டுமென்ருல் உன்னகையை, காதற்கலக்கப் புன்னகை என்று வைத்துக்கொள்.—சீ! இது என்ன! நான் வெறிகொண்டவளைப் போல் சிந்தித்து உளறிக்கொண்டிருக்கிறேனே. ஒரு புன்னகையைப்பற்றி இவ்வளவுவீண்கதையா! எது என்ன புன்னகையாயிருந்தாலென்ன! சசிகை தன்காதலன் அன்பைப்பெறவில்லை என்பது மெய். ஐயோ! அம்மணீ! சர்வசக்தி! சரஸ்வதி! என்தேவீ! இதற்குத்தானு நான் இத்தனை நாள் உன்னை இறைஞ்சி நின்றேன். எங்கோயிருந்த என் இன்னுயிர் நாதனை எங்கள் பூஞ்சோலைக்கு வலிய அழைத்து வந்து, அவரது திவ்ய ரூபத்தை எனக்குக் காட்டிக் கொடுத்து என் உளத்தை அவருக்குக் கவர்ந்து கொடுத்து, அத

நிருப்பிரியாக அவர் அகத்தை எனக்குத் தராமலவசிகரிக்கு அளித்தனையே. இது என்ன நியாயமோ! அடி ரசிகே! இதற்காகவோ நீ பெண்ணைப் பிறந்தனை! இந்த நிலைமையில் இன்னும் உயிரை வைத்திருக்கின்றனையே. இனி, க்ஷணப்பொழுது உனக்கு உயிர் வாழ்க்கையும் வேண்டுமா? நீ இத்தனை நாள் புரிந்த பூஜையெல்லாம் உன் நாதன் அன்பைப் பெறுவதற்காக. அப்பூஜையெல்லாம் வீண் பூஜையாய்விட்டது. அம்மம்மா! தென்றலும் நிலவும் என்னை ஏளனஞ்செய்து நகைக்கக் கண்டு அளவற்ற விருப்புக் கலந்த வெறுப்புற்று வெருண்டு வெளிக்கி நியங்கி யுருகி எங்கும் வேதனையில் வாழ்வதைவிட உயிர் துறப்பதே உத்தமம். என் நாதனுக்கு என்பால் அன்பில்லை என்றறிந்தபொழுதே நான் பிராணத் தியாகஞ் செய்திருக்க வேண்டியது. இத்தனை நாள் இவ்வளவு வேதனைப்படுவதற்காக இருந்தேன். இனித் தாமதிக்கலாகாது. (எழுந்து இரண்டடி வைக்கின்றாள்.) சி! மடப்பெண்ணே! என்ன சுயகாரியப் புலியமமா! உன் காதலின் வேதனை இவ்வளவிருந்தால் உன் நாதனது காதலின் வேதனை எவ்வளவிருக்கும்! அவர் காதலுக்குரிய வசிகரியோ விவாகத்தை வெறுத்த கன்னிகையாயிருக்கிறாள். அவரோ அவளை நினைந்து நினைந்து உருகுகிறார். உன் உயிர்க்கு உயிராகிய அவரை அப்படி வருந்த விட்டு விட்டு உன் துயரத்தையாற்றுது சுவஸ்தமாய் உயிரை மாய்த்துக் கொள்வதில் உனக்கென்னடி சுகிர்தம்? நீ என்றைக்கு, உன் அகத்தை அவருக்குக் கொள்ளை கொடுத்தனையோ, அன்றுமுதல் உன் ஜனனம் உயிர் முதலிய உன் உடைமை யனைத்தும் அவருக்கே உரியன, உனக்குச் சொந்தமல்ல. ஆதலின் உன் உயிர் உடல் உளம் எதனையும் உன்னிஷ்டப்படி ஆள உனக்கு அதிகாரமில்லை. அவரது சேவைக்கே, அவரது இதத்திற்கே நீ அவற்றை உபயோகிக்கவேண்டும். இப்பொழுதோ அவர் நீ இருக்கும் அவஸ்தையிலேயே இருக்கிறார். உன் அவஸ்தை எப்படி யிருந்தாலும் அவர் அவஸ்தையை அகற்றவேண்டியது உன் தவறுக்கடமை. அதனிமித்தம் வேண்டுமென்றால் நீ எவ்விதமான தியாகமும் செய்துகொள்ளலாம். அப்படியிருக்க, அவர் நிலைமையைப்பற்றிச் சற்றுஞ் சிந்திப்பது நீ மாதிரம். உன் வேதனை

நிவர்த்தியுறச் சாகவேண்டுமென்று போகிறாயே. சி! இவ்வளவு தானு உன் காதலின் ஆழம்!—இல்லையில்லையடி பொறுமையற்ற மனமே! நான் அப்படிப்பட்ட பெண்ணல்ல. வீணாக என்னை இகழாதே. நான் என் இதத்தையே கருதி என் காதலன் இதத்தை நாடாத பாதகியாயிருந்தால், அன்று பூஞ்சோலையில், "வசிகரியின் சித்தம் இப்பொழுது எவ்வாறு இருந்தபோதிலும் அவர்பால் அன்பை அவளிடத்தில் சிருஷ்டித்து அவளுக்கும் அவருக்கும் விவாகத்தைநிறைவேற்ற ரசிகை தன்னாலியன்ற உதவியெல்லாஞ் செய்வாளென்று அவருக்குச் சொல்லுங்கள்," என்று அவர் சகோதரன் மூலமாய் என்னையும் அறியாமல் தூதுரை இயம்பியபுவேனோ! நான் என் காதலனது காதலுக்குரியவளல்ல வாயினும் அவர் நலத்திற்கு எவ்வகையினும் உழைத்தற் குரியவள். அதுவே என் விரதமெனக்கொண்டு ஒழுகுவேன். (நெஞ்சத்தில் கைவைத்துக் குப்பெனக்கண்ணீர்வடித்தேங்கி) நான்என் அகத்துக் காதலை அவ்வகத்திலேயே அமர்த்திப்பூட்டி நிச்சியகன்னிகையாய் நைந்துருக வேண்டியது என் விதிப்பயன். ஐயோ! நெருப்புச் சுவாலையில் வீழ்ந்தாலும் இருப்பாணிகள் பதித்த பள்ளியில் வீழ்ந்து புரண்டாலும் சுகமாகக் கொள்வேனே. என் காதலன் அன்பைப் பெறுது, என் காதலை என் இதயத்திலேயே சிறை செய்து பூட்டி வருந்தும் வாழ்க்கையை எவ்வாறு சகிப்பேன்! என்னடி பித்தங்கொண்ட பேதை! அவர் வருந்தும் வாழ்க்கையைப்பற்றிச் சிந்திப்பதை விட்டு மீண்டும் உன் சுயகாரிய எக்கத்திற்கே திரும்பிவிட்டாயே. (இரு கரங்களாலும் இரு கன்னங்களிலும் இரண்டு மூன்று முறை அடித்துக்கொள்ளுகிறாள்.) இல்லையில்லையடி ரசிகே! இந்த ஒருமுறை பொறுத்துக்கொள். இனி மேல் ரசிகை தன் சொந்தக் காதல்வேதனையைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டாள். இனி அவள் சிந்தனையெல்லாம் அவள் நாதன் நன்மையைப் பற்றியே. என் காதனே எனக்குத் தலைவர். என் தலைவர்க்குத் தலைவி வசிகரி. ஆகையால் வசிகரி என் தலைவியாவாள். அவள் என் தங்கையாயினும் அவள் எனக்குத் தலைவியே. (மஞ்சத்தில் துயில்கின்ற வசிகரி யருகே சென்று அவள் பாதங்களைத் தொட்டுத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு

வசிகரீ! என் கண்மணீ! உன்னைப்போல் பாக்யவதி எந்த உலகில் இருக்கிறாள்? ஆ! என்ன அற்புத அழகொளிர்ந்து துயில்கின்றாய்! என் காதலன் அகத்தை வசிகரித்த உனக்கே வசிகரி என்ற பெயர் தகும். வசிகரீ! என் நாதனுக்கு இனியவளாகிய உன்னைப் பார்க்கப் பார்க்க, உன் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்ற ஒற்ற, என் உள்ளத்து நின்ற வேதனையும் மங்கலாகின்றது. நீ என் அகத்திற்கு முன்னிலும் மிக நெருங்கிய மிக இனிய தங்கை யாகின்றாய்—தங்கையா?—இல்லை, கலீவியாகின்றாய். வசிகரீ! வசிகரீ! என் நாதன் காதலை நான் பெறுவிட்டாலும், அக்காதலைப் பெற்ற உனக்குச் சகோதரியாகவாவது நான் பிறந்தேனே. அது வரையில் எனக்கு ஒரு திருப்தி. ஆ! இப்பொழுது உன்பால் முன்னிலும், எவ்வளவு அதிக உருக்கமாக அன்புகொண்டிருக் கின்றேன் என்று உனக்குத் தெரியுமா! வசிகரீ! வசிகரீ! என் கண்மணீ!—(சட்டெனக் குனிந்து வசிகரியின் கன்னமிரண்டை யும் சற்று முத்தமிடுகின்றாள். வசிகரி திடுக்கிட்டு நித்திரை நீங் கிப் பார்த்து எழுந்துட்காருமபொழுதே பேசுகின்றாள்).

வசீகரி:—உன் அன்பே அன்பக்கா! நீ யல்லவோ என் உயிர் சகோதரி. என்னை எழுப்பவேண்டுமானால், அடிவசிகரி என்று ஒரு வார்த்தையால் அழைத்தால் போதாதோ. இதற்காக—

ரசிகை:—(குழப்பத்துடன்.) வசிகரீ வசிகரி என்று எத் தனையோமுறை அழைத்தேனே.

வசீகரி:— அப்படி அழைத்தும் நான் எழுந்திருக்கவில் லையோ? சீ! பாழும் தமோகுணம் அவ்வளவு உறுதியாகவா என் னைப் பற்றியிருக்கிறது? அப்படிப்பட்ட என் தூக்கத்தைக் கலைக்க நீ என் உடலை அசைத்து உசுப்பி எழுப்பாமல், என் கன்னத்தை முத்தமிட் டெழுப்புகிறாயே. என்னிடத்தில் அவ்வள்வு அன்பா! (தன்கரங்களால் தன் அக்காள் கழுத்தை யணைத்து அவள்கன்ன த்தை முத்தமிடுகிறாள்) என்னக்கா! உன்கன்னம் ஜில்லென்றிருக் கிறதே—ஆ! உன் கண்களும் சிவப்பாயிருக்கின்றன. நீ ராத்திரி யெல்லாம் தூங்காமல் கண்ணீர் வடித்திருக்கிறாய். ஏனக்கா—

(ரசிகை மெல்லத் தன் ஆடையால் வசிகரியின் பாதங்களில் மூண்பு படிந்துள்ள கண்ணீரைத் துடைக்கின்றாள். அதையறிந்து

வசீகரி சட்டெனத் தன் பாதங்களைப் பார்த்துக் கூறுகின்றாள்:—)

வசீகரி:—என் பாதங்களிலுமா நீர்த்துளிகள்? அக்கா! என் கால் மாட்டிலிருந்து கண்ணீர் சிந்தியிருக்கிறாயே. ஐயோ! நான் என்ன அபசாரம் செய்தேனக்கா?

ரசிகை:—அபசாரமா! வசிகரீ! நீ ஒரு தெய்வப் பெண். நான் தொழுவதற் குரியவள். உன்னைடு கூடப்பிறக்க——

வசீகரி:—என்னக்கா, ஒரு போது மில்லாதபடி நீ ஒருமா திரி நூதனமாகப் பேசுகிறாய்! உன் முகத்தைப் பார்க்க உன் வார் த்தைகளைக் கேட்க என் மனம் கலக்க மடைகிறது. நீ இரவெல் லாம் என்னவோ ஒரு ஆழ்ந்த சஞ்சலச் சிந்தனையில் இருந்திருக் கிறாய். உனக்கென்ன சஞ்சலமக்கா?

ரசிகை:—எனக்குச் சஞ்சல மொன்று மில்லை, அன்பினால் உருகுகிறேன், உன்னிடத்தில் கொண்ட அன்பினால் உருகு கிறேன்.

வசீகரி:—முன்னிலும் அதிகப் புதுமையாகப் பேசுகிறாயே. அன்பினாலா உருகுகிறாய்? என்னிடத்தில் கொண்ட அன்பினாலா? என்னிடத்தில் எப்பொழுதுந்தானே அன்புண்டு. இப்பொழுது என் இந்தப் புதிய நிலைமை! மேலும் உருக்கமென்றாலென்ன? சஞ்சலந்தானே? அன்பினால் சஞ்சலமேன் உண்டாகிறது? உன் வார்த்தைகள் ஒன்றும் அர்த்தமாகவில்லை யக்கா.

ரசிகை:—வசிகரீ! இத்தனை நாள் கொண்டிராத ஓர்வித அதி உருக்கமான புதிய அன்பை இப்பொழுது உன்னிடத்தில் கொண் டிருக்கிறேன்.

வசீகரி:—அன்பென்றால் அன்புதான். புதிய அன்பு பழைய அன்பு என்பதும் எனக்கு அர்த்தமாகாத பாஷையே-சரி. உன்னை இப்படி வருத்தும் புதிய அன்பு திடீரென எழுந்ததற்குக் கார ணம்?

ரசிகை:—காரணமா கேட்கிறாய்? என்ன காரணத்தைச் சொல்லுவேன்! (மயங்குகிறாள்.)

வசீகரி:—காரண மொன்று மில்லாமலா உனக்கு இந்தச் சஞ்சலமும், இந்தச் சிந்தனையும், இந்தக் கண்ணீரும், இந்தப் புதுமாதிரியான பேச்சு நடையும் திடீரென உண்டாயின்?

ரசிகை:—நீதான் காரணம், உன்னிடத்தில் கொண்ட அன்பு தான் காரணம் என்று முன்னமே சொன்னேனே யடி.

வசீகரி:—புதிய அன்பு என்று சொன்னாய். வழக்கம்போல் எப்பொழுதும் சந்தோஷமாக, பிரியமாக என்னோடு பேசும் உன் பழைய அன்பு, இப்பொழுது, சஞ்சலக் கோளத்தில், மயங்கி மயங்கி, எனக்கு அர்த்தமாகாதபடி, பேசப் புதிய அன்பாகத் திடீரென மாறியதற்குக் காரணந்தான் கேட்கிறேன்.

ரசிகை:—உன் பெயரென்ன?

வசீகரி:—நான் கேட்டதற்குப் பதில் சொல்லக்கா. வீண் பேச்சு வேண்டாம்.

ரசிகை:—நான் கேட்டதற்குப் பதில் சொல். உன் பெயரென்ன?

வசீகரி:—(தனக்குள்) புவனேஸ்வரி! என் அக்காள் பேசுவதையும் இரவெல்லாம் நித்திரையற்றிருந்ததையும் பற்றி எனக்குப் பயமாயிருக்கிறது. அவள் சித்த நிலைமையில்யாதொரு பிசகும் இல்லாமலிருக்கவேண்டும். (வெளிப்படையாய்) என் பெயர் வசீகரி.

ரசிகை:—ஆ! அப்படிச்சொல். வசீகரி, வசீகரி, எவ்வளவு அழகான பெயர். அந்தப் பெயர் உனக்கே தகும். அந்தப்பெயர்க்கேற்றபடி நீ என் அகத்தை முற்றும் வசீகரித்து விட்டாய். என் உடல் பொருள் ஆவி முழுவதும் உன் சேவைக்கே உரியன. என் பெயரென்ன? சொல்.

வசீகரி:—நீ பேசுவதைப் பார்க்க எனக்குக் கலக்கம் அதிகரிக்கிறது. நீ உன் மஞ்சத்தில் போய்ப் படுத்து கண்ணுய் நித்திரை செய். எனக்கும் களைப்பாயிருக்கிறது. (சயனிக்கிறாள்.)

ரசிகை:—(வசீகரி சயனிப்பதைத் தன் கரங்களால் தடுத்து) சற்றுப் பொறு, என் பெயரென்ன சொல்.

வசீகரி:—(மருண்டு) உன் பெயர் உனக்குத் தெரியாதா?

ரசிகை:—உன் வாயால் சொல்லு.

வசீகரி:—ரசிகை.

ரசிகை:—சரி, உன் பெயர் வசீகரி, நீ என்னை முற்றும் வசீகரித்து விட்டாய். என் பெயர் ரசிகை, அதாவது ரசிக்கச் செய்கிறவள். உன் வாழ்க்கையை, உனக்கு நன்கு ரசிக்கச் செய்கிறவள்.

வசீகரி:—எனக்குத் தூக்கம் வருகிறதக்கா! நீயும் போய் சயனித்து நித்திரைசெய். காளைக் காலை எல்லாவற்றையும்பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

ரசிகை:—காரணங் கேட்டாயே. காரணத்தை அறியாமலா தூங்கப்போகிறாய்?

வசீகரி:—(சற்று முக மலர்ந்து) சரி சரி, சொல்லக்கா, நான் தூங்கவில்லை.

ரசிகை:—உன் வாழ்க்கையை உனக்கு ரசிக்கச் செய்கிறவள் ரசிகை. நான் உன் இன்பத்தையே உன் நலத்தையே எப்பொழுதும் நாடியிருக்கிறேன். ஆனல் தக்க தலைவனின்றி உன்னைப்போன்ற உத்தமிகளுக்கு வாழ்க்கை ரசிக்காது. நீ தகுந்த தலைவனை அடைந்து இன்ப வாழ்க்கையில் திருப்பதைக் கண்குளிரக் காணலாம் என்று எண்ணியிருந்தேன். நீ விவாகத்தை வெறுப்பதாக அன்று சொன்னாயே. அதுதான் எனது சஞ்சலத்திற்கும், நீ சொல்லுகிறபடி என்னுடைய புதிய நிலைமைக்கும் காரணம். அன்பினல் உருகுகிறேன், உன்னிடத்தில் அன்பினல் உருகுகிறேன், என்று நான் சொன்னது இப்பொழுது உனக்கு அர்த்தமாகிறதல்லவா?

(தொடரும்.)

பத்திராதிபர்.

பத்திரிகை.

வீட்டின் செல்வம் புத்திரர்களின் தகுதியிலும் நாட்டின் செல்வம் பத்திரிகைகளின் திருத்தியிலும் அடங்கியிருக்கிறது. இதனை நன்குணர்ந்தே ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களில் இலட்சக்கணக்கான பத்திரிகைகள் அப்போதைக்கப்போது வெளிவருகின்றன. ஒரு ஜனசமூகம் முன்னேற வேண்மெனில் அந்த ஜனசமூகத்திற்குச் சொந்தமாக அநேக பத்திரிகை

கன் நின்று உழைக்கவேண்டும். அரசியற்குற்றங்குறைகளை ஒழிப்பிப்பதும் செங்கோல்களைச் செழிப்பிப்பதும் பத்திரிகையே. அரசர்களையோ ஆசாங்கங்களையோ கடாத்தவது மந்திரிகளென்றால் அம்மந்திரிகளை கடாத்தவது பத்திரிகைகளேயென்று திட்டமாய்ச் சொல்லலாம். உயிரின் ஜீவியத்திற்குச் சுவாசம் அவசியமானதுபோல அறிவின் ஜீவியத்திற்குப் பத்திரிகை அவசியமானது. செல்வாக்குள்ளதோர் பத்திரிகாசியர் வளம்பொருந்திய தோர் தேசத்தினது பிரதம மந்திரியைப் பார்க்கிலும் மேலானவர்.

பத்திரிகை வாசியாதவரிடத்தில் விவேகமும் விவகார ஞானமுமிருத்தல் துர்லபம். காலதேச வர்த்தமானங்கள் பத்திரிகாசையரிடத்தில் மாத்திரம் அகப்படும். உணவை அருந்துவதற்கு உசித நேரத்தைக் கண்டுபிடித்துக்கொண்ட வொருவனுக்கு, பத்திரிகை படிப்பதற்கேற்ற காலம் கைகூடாதிருப்பது அதிசயத்திலும் அதிசயம். சர்வகலாசாலைப் பட்டதாரியாய், ஒருவன் உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அவன் பத்திரிகாசையனில்லையாயின் அவனது பட்டத்தாலும் படிப்பாலும் அத்தனை பிரயோஜனமில்லை. மனிதவாழ்க்கைக்குக் கொடுபட்டிருக்கும் காலச்சக்கரத்துள், தான் சாப்பிடுவதற்கு நேரமில்லையென்றால் சிலவேளை அதனை கம்பலாம்; ஆனால் அவனே, தனக்கு வாசிக்க அவகாசம் இல்லையென்பானாயின் அறிவாளிகளாயுள்ளோர் அவன் வெறுங்கூற்றை ஒருபொழுதும் கம்பமாட்டார்கள்.

பத்திரிகையின்மாட்சி அதன் ஆசிரியரின் திறமையையிட்டும் பொறுத்தலல்; கடிதநேயர்களின் சாமர்த்தியத்திலும் பத்திரிகையின் ஜோலிப்பு பிணைக்கப்பட்டிருக்கின்றது. நிர்மலமும் ஸ்படிகம் போன்றதுமான இருதயம் பத்திராதிபருக்கு இருப்பதுபோலவே உண்மையும் தாகுண்யமின்மையுமிழ் கடிதநேயரிடத்தில் வதிந்திருத்தல்வேண்டும். கற்பனைக் கதைகளைக் கண்டமட்டும் வளர்த்தி யெழுதுவது காலத்திற்கேற்றதில்லையாயினும், அக்கதைகளில் சுருதி யுக்தி அதுபோகக்களுக்கு ஈடுபட்டதும், தற்கால நாகரீக தத்துவங்களுக்கு முரண்படாததுமான விஷயங்களைப் பொருத்தலவசியமானது. கைக்கூலிக்காகக் கலத்தை கிரப்பிவிடுந தொழிலில், கடிதநேயருள் முதற்றரமானவர் பிரவேசிக்க மாட்டார். எழுதுகோல், துப்பாக்கியைப் பார்க்கிலும் அதிவலிமை பொருந்தியதாதலால், பத்திராதிபரைப் போலவே கடிதநேயரும், தம் எழுதுகோலை இடங்கண்டு பிரயோகிக்கவேண்டும். போர்வீரனின் வெற்றி எப்படி அவன் கைவேல் வழங்கும் பான்மையிலிருக்கிறதோ அப்படியே கடிதநேயரின் ஜெயமும் தமது (எழுது) கோலை உபயோகிக்கும் நன்மையில் இருக்

பத்திரிகைவிஷயமாய்ச் செலவுசெய்யாது மீதம்பிடித்த தொகை கணத்திற்கு இலக்கியமா யிருக்கமாட்டாது. பத்திரிகைக்குச் செலவிடும் தொகை நமது குறிப்பேடுகளில் செலவுகலத்தில் எழுதிவைக்கவேண்டியதே வாஸ்தவமாயினும், பத்திரிகை வாசிப்பிலுல் உண்டாகும் அறிவோ வென்றால் அக்கணக்குப் புத்தகத்திலேயே வரவுகலத்தில் நீட்டிவைக்கவேண்டிய தாயிருக்கிறது. எழுத்துவாசனை யில்லாதவர்கள் பத்திரிகை வரவழையாதிருப்பதற்கு, அவரது வாசிக்க வியலாமையையே ஒரு காரணமாகச் சொல்லுகின்றனர். ஆயினும் காரணம் போலிக் காரணமேயொழிய மற்றப்படியல்ல. என்னை? தம்மால் வாசிக்கக் கூடாதாயின், வாசிக்கத் தெரிந்தவருக்குப் பத்திரிகையைத் தருவித்துக் கொடுத்து அன்னவர் வாசிக்குந் தோறும் விஷயாம்சங்களைக் கேட்டுணர்ந்துகொள்ளலா மன்றே?

அச்சுவிலையும் கடுதாசிவிலையும் கூலிவிகிதங்களும் மிக உயர்ந்துபோயிருக்கும் இக்காலத்தில் சொற்பவிலைக்குப் பத்திரிகைகள் அகப்படுவது கஷ்டமாயினும் நாலைந்துபேர்கள் சேர்ந்தாவது பொது வாசகசாலைகளில் அங்கத்தினராக அமர்ந்தேனும் பத்திரிகைபெற்று வாசித்தல் நிசம்பவும் கல்லது. அதிலும், நமது தேசபாஷைப் பத்திரிகைகளை நாம் முதலாவதாகப் போஷித்துவரல் வேண்டும். சுதேசபாஷாப் பத்திரிகைகளை வெறுத்தல், பெற்று வளர்த்த தாயைப் புறக்கணிப்ப தொக்கும். சுயபாஷைப் பத்திரிகைகளிற் பல, நெடுங்காலம் நிலைத்தலின்றி அதிவிரைவில் மறைவுற்றதற்கு நம் போஷிப்பின்மையே காரணமென்னும் அபகீர்த்திக்கு நம்மில் எவரும் ஆளாகாவண்ணம் காத்துக்கொள்ளவேண்டும். ஈசன் இதற்கு அருள்புரிவாராக.

எம். பி. மஸ்கரான்ஹாஸ்.

பல திரட்டு.

கடல்கள் கடந்து கம்பியில்லாத 'டெலிபோன்' பேச்சு.

கம்பியில்லாத் தந்திமூலமாய்ச் சமாசாரங்களை நெடுந்தூரம் அனுப்பும் முறை உலகில் அதிசாணியிருப்பது யாவருக்கும் தெரிந்துள்ள விஷயம். கம்பிச் சம்பந்த மில்லாமல், நெடுந்தூரத்திலுள்ள இடங்களிலிருந்து 'டெலிபோன்' மூலமாய்ப் பேசும் ஆச்சரியகரமான நிகழ்ச்சி 1919-ம் வருஷம் மார்ச்சு மீ 19-ம் உ நிகழ்ந்தது. அன்றுகாலை ஏழுமணிக்கு, அயர்லாந்திலுள்ள கிளிப்டென் என்ற இடத்திலிருந்து ஒரு என்ஜினீர், அமெரிக்காவிலுள்ள நேவர்ஸ்காஷியாவைச் சேர்ந்த கிளேஸ்பேயில் உள்ள ஒரு வரோடு கம்பியில்லா டெலிபோன் மூலமாய்ப் பேசினர். பேச்சு உடனே

தேட்டதாகவும், சாதாரணமான கம்பிச்சம்பந்த டெலிபோன் மூலமாய்ப் பேசுவதுபோலத் தெளிவாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஓர் சிறந்த பால இந்திய ரசாயன சாஸ்திரி.

ஸ்ரீஜத் இ. இ. தத்தர் என்னும் பதினேழு வயதுள்ள இந்திய ரசாயன சாஸ்திர நிபுணர் (chemist) இந்தியாவின் கைத்தொழிலபிவிர்த்திக்குப் பெருத்த கன்மை உண்டாகக் கூடியதாய், ரசாயன சாஸ்திர சம்பந்தமான சில புதிய விஷயங்கள் கண்டுபிடித்திருக்கிறார். இவர் மத்திய மாகாணங்களிலுள்ள பிரபல கைத்தொழிலாதிபதியும் பாரிஸ்டருமாகிய ஸ்ரீஜத் பீ. சி. தத்தரது புத்திராக 1902-ம்ஞ ஜூலை ஜபல்பூரில் பிறந்தார். இளமைப் பருவத்தில் பெரும்பாகம் இவர் இங்கிலாந்திலேயே கழிக்க நேர்ந்தது. லண்டனிலுள்ள 'சென்ட் பால்ஸ் பிரிபரேட்டரி ஸ்கூல்' என்ற ஒரே பாடசாலையில்தான் கல்வி பயின்றவர். வெகு பாலியத்திலேயே ரசாயன சாஸ்திரப் படிப்பில் மிக்க பிரியங் காட்டினார். 1915-ம்ஞ இவர் தன் பிறப்பிடமாகிய ஜபல்பூருக்கு வரும்படி யாயிற்று. இங்கேதான் இவருடைய சிறந்த புத்தி நட்பம் பெரிதும் விகாசிக்கலாயிற்று. கோள சாஸ்திர (Geology) ரசாயன சாஸ்திரப் பரிசீலனைப் பயிற்சியில் விசேஷ ஆர்வ முடையவராய், தன் தகப்பனாருடைய சாங்கச் சாலையில் மிகுதியும் பழகி, கடைசியாகத் தான் ஒரு ரசாயன சாஸ்திரி ஆவதாகவே தீர்மானித்தார். தந்தையும் அதற் கிணங்கி தன் சொந்த பக்களாவில் அதற்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தார். பின்னர் மத்திய மாகாணக் கவர்ன்மெண்டார் பால சாஸ்திரியின் அறிவுக் கூர்மையைப் பற்றிக் கேள்வியுற்று ஜபல்பூரில் காலேஜி லுள்ள சாஸ்திர பரிசீலனச் சாலையை (Laboratory) உபயோகித்துக்கொள்ளும்படி அநுமதி யளித்தார்கள். மற்றப்படி இவர்தற்கால அநுசாரணையிலிருக்கும் கலாசாலையில் ஏற்பட்ட முறைப்படி கல்வி பயின்றவரல்ல. இவர் கண்டு பிடித்துள்ள விஷயங்களாவன:—

1. 'மெதேன்' அல்லது 'மார்ஷ்காஸ்' என்ற ஒர்வகை வாயுவை எவ்விடத்திலும் பெறக்கூடிய முறை. இவ்வாயு நிலக்கரிச் சுரங்கங்களிலும், சிற்சில இடங்களிலுள்ள ஊற்றுகளிலுமே இதுவரை காணப்பட்டது. பிரகாசமான தீபங்கள் அமைப்பதற்கும், சுண்ணாம்புக் காளவாசல் முதலிய மிகுந்த உஷ்ணம் வேண்டிய தொழிற் சாலைகளுக்கும் இது மிகவும் உபயோகமான வாயு. இத்தகைய வாயுவை எவ்விடத்திலும் பெறக்கூடிய முறையைக் கண்டுபிடித்தது, பால சாஸ்திரி தன் பங்களா முழுவதும் மார்ஷ்காஸ் தீபமே அமைத்திருக்கிறாராம்.

2. இந்தியாவிலுள்ள ராஜபுதன ராஜ்யங்கள், சிந்து மாகாணம், வட மேற்கு எல்லை மாகாணம் முதலிய இடங்களில் ஏராளமாய்க் கிடைக்கக் கூடிய 'ஜிப்ஸம்' என்ற பொருளிலிருந்து கந்தகம் எடுக்கும் 15 முறைகள் புதிதாய்க் கண்டு பிடித்திருக்கிறார். கந்தகத் திராவகம் மலிவாய்க் கிடைத்தால், இந்தியாவில் இல்லாத அல்லது கூடினித்திருக்கிற பல கைத்தொழில்களின் விசேஷ அபிவிர்த்திக்கு அநுகூலமாயிருக்கும். அந்தக் கந்தகத் திராவகம் செய்வதற்கு வேண்டியகந்தகம் ஏராளமாய்க் கிடைக்கக்கூடிய வழி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

3. இந்தத் தேசத்திலுள்ள சில கற்பாறைகளிலிருந்து சோடா உப்புகள், 'அலுமினு,' 'பொட்டாஷ்' என்ற பொருள்கள் சுலபமாய் எடுக்கக் கூடிய முறைகளும் கண்டுபிடித்திருக்கிறார். பொட்டாஷ், நிலத்திற்கு எருவாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிகுதியாக உபயோகப்படுகிறது.

இப்பொழுதி ஸ்ரீஜத் தத்தர் பம்பாயில் இருக்கிறார். இவர் கண்டு பிடித்திருக்கிற முறைகளே அநுசரித்து, பொட்டாஷ் முதலிய பொருள்கள் செய்ய சீக்கிரத்தில் ஒரு கம்பெனி ஏற்படக்கூடும். சர் சாஸூன் டேவிட் என்ற கனவான்தான் தனக்குத் தன் முயற்சியில் மிக்க உற்சாக மளித்தா ரென்றும், அவருக்குத் தான் மிக நன்றிபாராட்டுவதாகவும் பாலசாஸ்திரி கூறுகிறார்.

நூறுவயது கடந்து ஜீவித்திருந்தவர்கள்.

சமீபத்தில் காலஞ்சென்ற மிஸ்ஸஸ் பூர்க் என்ற மாதுக்கு 121 வயதானதாகச் சொல்லப்படுகிறது. இப்படி 100 வயது கடந்து ஜீவித்திருந்தவர்கள் பலர். காப்டன் டயமண்ட் என்ற ஒருவர் அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ நகரத்தில் 1914-ம் வருஷம் 118-ம் வயதில் காலஞ் சென்றார். இவர் தமது 106-ம் வயதுவரை சிறுவர்களுக்குத் தேகாப்பியாசம் போதித்துக்கொண்டிருந்தார். இவர் 67 வருஷ காலமாக மாமிச ஆகாரம் உட்கொள்ளவில்லையாம். கும்பகோணம் தாலூகா ஆண்டார் கல்லூர் என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கிரிசுந்தரி சமேத கல்யாணசுந்தரேசுவர ஸ்வாமி சந்நிதானத்தில் சதா சேவை செய்துகொண்டிருந்த 110 வயதுள்ள அநந்து அம்மாள் என்ற ஒரு பிராமண மாதின் பக்தி விசேஷத்தைப்பற்றி காலேந்து வருஷங்களுக்கு முன் கேள்வி.

1904-ம்ஞ 18-வது பங்காளக் காலாட்படையின் 'சொஜிமெண்டல் சாப்லேன்' தன் 130-வது வயதிலும் வேலைபார்த்து வந்ததாகவும், 1908-ம் வருஷம் ஆந்தோ நிக்கோலேவிக்ஷ் ஷ்மிட் என்ற ஒரு ருஷியருக்கு 136 வயதானதாக நிரூபண மானதாகவும், கான்ஸ்டான்டிநோபிலில் 133 வய

னள ஒருவர் இருந்ததாகவும், ப்பூஜெட் சவுண்டு என்ற கரையில் 160 வயதில் திரிந்துகொண்டிருந்த 50 சாத்தல நிறையும் இல்லாத 2 அடி 5 அங்குல உயரமுள்ள ஒரு மனிதனைப்பற்றியும், 145 வயதில் ஒரு சீனதே சத்துக்காரன் 1918-ம்வரு நியூ யார்க் நகரில் வந்திறங்கியதாகவும், திருச் செல்வன் 'எல். பி. ஜி. ஹைஸ்கூல் மாகசின்' எழுதுகிறது.

எல். டி. பரீட்சையில் தேறிய பெண்கள்.

இவ்வருடம் எல். டி. பரீட்சையில் 15 பெண்கள் தேறியிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவப்பெண்களே. 'பெண்களுக்கு உயர்தரப் படிப்பு வேண்டியதில்லை' என்ற கொள்கையுடைய ஒரு சாரார் இருப்பினும், தகுந்த போதனைசக்தி வாய்ந்த உபாத்தியாயினிகள் பெண் கல்வி யபிவிர்த்திக்கு அவசியமன்றோ? காட்டில் போதிய பெண் உபாத்தியாயாகள இல்லாமையாற்றான் பலவிடங்களில் பெண் பாடசாலைகளில் புருஷர்களே உபாத்தியாயர்களாக இருக்கவேண்டியதா யிருக்கிறது. இது உசிதமற்ற அதசரணையென்றே, முற்கூறிய உயர்தரப் பெண்கல்விக் கண்டனக் கட்சியார் கருதுவர். ஆகலின் எவர் கொள்கை எவ்வாறிருந்த போதிலும், இக்காட்டுப் பெண்கல்வி யபிவிர்த்தியை முன்னிட்டு, அதில் பல லதிகள் ஆர்வங்கொண்டு நிறமையான உபாத்தியாயினிகளாகவேண் டியது அவசியம். அத்துறையை மேற்கொண்டுள்ள மிகச் சிறு பான்மை யராகிய இக்கியப் பெண்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களாகவே இரு கிறார்கள். தமது பெண் கல்வி யபிவிர்த்தியாகிய பொது நலத்தைக் கருதி இந்துமபெண்களும் தங்கள் கிறிஸ்தவ சகோதரிகளைப்போல் தங்கள் கல்வி பெருக்கத்தில் சிரத்தையும் ஊக்கமுங் கொள்வார்களாக.

ஒரு கிறிஸ்தவர் இந்துவானார்.

கொல்லத்தில் சிலகாலமாகத் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்திருந்த ஓர் உயர்ந்த பிராமணர்அல்லாதார் வகுப்பைச் சார்ந்த ஸ்ரீமான் ஆர். சங்கரவடி யேலு, தன் பந்துமித்திரர்கள் விருப்பத்திற் கிணங்க இந்து மதத்திற்கு மாறி, பிரியச்சொண்டிருந்தமையால், அவர் சமீபத்தில் கடந்த ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் 87-வது ஆண்டு விழாவின்போது ஸ்வாமி சிவா னந்தரவர்களால் சில சடங்குகள் புரியப்பட்டு மறுபடியும்இந்து மதத்தில் சேர்க் கப்பட்டார்.

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருஷினீ

பெரும்பாலும், கற்பனைக் கதைகள், தேசசரித்திரங்கள்,
ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள்
இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக
வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின்
ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பகுவம். 1.	கலியுகாப்தஹ 5020. காளயுக்தியஹ பங்குனீமீ. கொல்லமாண்டு 1094 மீனமீ. இ. பி. 1919-ம்வரு மார்ச்சுமீ.	மழை 7.

குழந்தை கலியாணம்.

ஓர் குடும்ப சம்பாஷணை.

210-ம்—பக்கத் தொடர்ச்சி.

ஆண்டாள்:—ஆமாமண்ணு! அதுமாத்திரம் மெய்தான். குழந்தைகள் கபடற்றவர்களாய்ப் பாட்டிலும் படிப்பிலும் கிளை யாட்டிலும் கருத்தா யிருக்கவேண்டியதுதான். பாலிய விவாகத்தி னால், குழந்தைகள் சூது படிந்த மனசுடையவர்களாய்விடுகிறார் கள். நீ சொன்ன சடங்குகளின் தன்மைகளை அறிந்து அவை களைப் பற்றிய அவர்கள் சிந்தனையால் தீங்குகள் உண்டாகும் என் பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் பாலியவிவாகம் உத் தமமென்று நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவே. நம்மை விட உயர்ந்த ஜாதியாராகிய பிராமணர்களுக்குள் பாலியவிவாகம் செய்யாதிருப்பது பாலமென்றும் கலியாண மாகாமல் ஒரு பெண் பிரவிடையாய்விட்டால் அவளையும் அவள் பெற்றோர்கள் முதலி யோரையும் ஜாதிப்பிரஷ்டம் செய்யவேண்டுமென்றும்சாஸ்திரம் விதித்திருக்கின்றதாமே. நமது சாஸ்திரங்களை ஏற்படுத்தியிருக்கிற மகான்கள் நமக்குக் கேட்டைத்தரும் விஷயத்தையா ஏற்படுத்தி னார்கள்?

ராகவன்:—இந்தமாதிரி, சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பேசுகிற பலரை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் எல்லோரும் பாலிய விவாகத்தின் கொடுமைகளை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் சாஸ்திரம் ஒப்புக்கொள்ளவில்லையே, என்ன செய்வோம், என்கிறார்கள். நீயும் அந்த வழிக்கே வந்துவிட்டாய். நியாயத்திற்கும் மனச்சாட்சித்திற்கும் அநுபவத்திற்கும் கொடுமையாயிருக்கும் எந்தக் காரியத்தையும் யார்தான் செய்யச் சொன்னாலும் அதைச் செய்வது ஏன் பாதகமாகாது? ஆனால் முகான்கள் எழுதிய சாஸ்திரக் கட்டளையை மீறுவது பாவமல்லவா என்று எல்லோரும் நினைக்கிறார்கள். அவர்கள் அப்படி எண்ணக்கூடாது பின்பு என்ன எண்ணவேண்டும்? பாலியவிவாகம் செய்வது கொடியவழக்கமாயிருக்கிறதென்றுஎல்லோருக்கும் வெண்மையாகத் தெரிகிறது, இவ்வளவு வெண்மையாகத் தெரியும் உசிதமற்ற வழக்கத்தை அநுசரிக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் விதித்தது என்ன விந்தையம்மா! இந்த விந்தைக்குக் காரணமென்ன என்று ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும்.

ஆண்டாள்:—எனக்கென்ன தோற்றுகிறதென்றால், நம்முடைய சாஸ்திரங்களை ஏற்படுத்தியவர்கள் பாலிய விவாக அநுசரணையில் விசேஷ நன்மைகள் இருக்கின்றனவென்று உணர்ந்துதான் அதைப் பேணி விதிகள் ஏற்படுத்தினார்கள். அவைகள் இன்னின்ன நன்மைகள் என்று உணர்ந்துகொள்ள நமக்குச் சக்தியில்லை. நமது அற்பப் புத்திக்கு அந்த வழக்கத்தில் சில தீமைகளேதோற்றுகின்றன. அப்படித்தீமைகள்நிறைந்ததாகத்தோற்றுகிற இந்த அநுசரணையை அறிவிற்சிறந்தவர்களாகியநமதுமுன்னோர்கள் ஏற்படுத்தியதுநமக்குவிந்தையாகத்தோற்றுகிறது.உண்மையில் விந்தை யொன்றுமில்லை. சித்தியஸ்நானம், ஏகாதசிவிரத உபவாசம், பட்டு வஸ்திரம் தரித்தல், செப்புப் பாத்திரங்களின் உபயோகம், வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாதென்ற விதி, முதலிய பலவிஷயங்களைப்பற்றி நமது சாஸ்திரக்கட்டுகள் உண்மையில் நமது தேகாரோக்கியத்தையும் நன்மையையுமே கருதித்தான் ஏற்படுத்தியிருக்கின்றன வென்றும் அந்த நன்மைகள் இன்னின்ன வென்றும் அண்ணாவுக்கு ஒருகால் நீ சொன்னாயே. அது

போல, பாலிய விவாகத்திலும் நன்மைகள் நிறைந்துதான் இருக்கின்றன. அந்த நன்மைகள் இன்னின்ன வென்று நாம் அறிந்து கொள்ள முடியாமல், தீமையே நிறைந்திருப்பதாகத் தோற்றும் இந்த வழக்கத்தைப் பெரியோர்கள் நியமித்தது விந்தை விந்தையென்று மயங்குகிறோம், அது விந்தையாகத் தோற்றுவதற்கு நமது மூட்டத்துவந்தான் காரணம்.

ராகவன்:—பேஷ்! பேஷ்! பாலிய விவாகத்தில் நன்மைகள் இருப்பதாக யாரியாருக்குத் தோற்றவில்லையோ, அவர்கள் எல்லோரும் மூடர்கள். அதில் தீமையிருப்பதாக யார்யார் சொல்லுகிறார்களோ அவர்கள் எல்லோரும் மூடர்கள். பாலிய விவாகம் செய்யாத, இந்த உலகத்தில் உள்ள கோடானு கோடி ஜனங்கள் எல்லோரும் மூடர்கள், ஈன ஆசார முடையவர்கள். நியாயத்திற்கும் அநுபவத்திற்கும் என்ன தோற்றியபோதிலும், பாலிய விவாக சாஸ்திரத்தை மீறி நடக்க அஞ்சி அந்தப் பரிதாபகர வழக்கத்தை அனுஷ்டிக்கும் இந்தத் தேசத்திலுள்ள சில ஜனங்கள்மாத்திரமே நிரம்ப அறிவாளிகள், உயர்ந்த ஆசார முடையவர்கள். இவைகள்தானே உன் கொள்கைகள்? என்ன நேர்த்தியான கொள்கைகளம்மா!

ஆண்டாள்:—அப்படியானால், நமது சாஸ்திரங்களை ஏற்படுத்திய மகானுபாவர்கள் எல்லோரும் மூடர்கள். இதுதானே உன் கொள்கை? இது என்ன நேர்த்தியான கொள்கையோ?

ராகவன்:—(புன்னகையுடன்) ஆண்டாள்! சாஸ்திரங்கள் எப்படியிருந்த போதிலும், அவைகளை நியமித்தவர்கள் யாராயிருந்த போதிலும், பாலியவிவாகக்கட்டு ஒருகொடிய ஆசாரம் என்பது மாத்திரம் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. பிரவிடையாவதற்கு முன்னமே பெண்களுக்குக் கல்யாணம் செய்துவிடவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால், பெற்றோர்களுக்கு, முக்கியமாய் ஏழைப்பெற்றோர்களுக்கு, பலபெண்கள பெற்ற பெற்றோர்களுக்கு, ஏற்படும் கவலையும் கஷ்ட நஷ்டங்களும் எவ்வளவு கடுமையானவை தெரியுமா? தங்கள் அருமைப்பெண்களுக்குப்பிரவிடைவயது நெருங்குகிறதே என்றதில்லாத பெற்றோர்கள் நெஞ்சை உறுத்திக்கொண்டிருப்பதால், சதி, சாஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி போன்று விசேஷ லக்ஷ

ணங்கள் வாய்ந்துள்ள பெண்களே அவர்களுக்குச் சற்றுங் தகாத மடையர்களுக்கும் குடியர்களுக்கும் கொடியர்களுக்கும் ஈனர் களுக்கும் விவாகம் செய்து தொலைக்கவேண்டிய அவசியம் ஏற் படுகிறது. வரதக்ஷிணை, வரதக்ஷிணை, என்று, பெண்களைப் பெற்ற வயிற்று எரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் பாதக வழக்கம் இருக் கிறதே, அதற்கு மூலகாரணம் பாலிய விவாகக் கட்டுதான். வர தக்ஷிணைக் கட்டு எந்தச் சாஸ்திரமும் ஏற்படுத்தவில்லை. துப் பாக்கி வயிற்றில் பிரங்கி பிறந்ததுபோல் பாலிய விவாகக் கட்டு, வரதக்ஷிணைக் கட்டு என்ற தரித்திர ஆசாரத்தை ஈன்று, புரு ஷரைப் பெற்றோரைக் கன்னெஞ்சும் பணப் பேராசையும் அற் பத் தன்மையும் கொண்டவர்களாக்கிப் பெண்ணைப் பெற்றோர் களைச் சஞ்சலத்தில் அலைத்து உழற்றுகிறது. இப்படிப்பட்ட பாலிய விவாகம் என்ற வழக்கத்தைச் சாஸ்திரம் என் விதித்தது என்பதற்கு நாமாகவே நிருப்திகரமான காரணத்தை அறிந்து கொள்ளவேண்டும். நன்றாய் ஆராய்ந்து ஆலோசித்துப் பார்த்தால் அதற்கும் காரணம் வெளிப்படும். பாலிய விவாகவிதி நமது நாட் டில் தொன்றுதொட்டு ஏற்பட்டதல்ல வென்று நிச்சயமாக நீரு பிக்கக்கூடும். சில நூற்றாண்டுகளுக்கு முன்புதான் அது ஏற்பட் டது. சில அரசர்கள், கலியாண மாகாத பெளவன ஸ்திரீகள் பலரைச் சிறையெடுத்துப்போகும் ஒரு கொடுமை ஒருகாலத்தில் இருந்ததால் பெண்களை அந்த மானக்கேட்டினின்றும் ஆபத்தி னின்றும் காப்பாற்றும் பொருட்டு பாலிய விவாக விதியும் அது ஷ்டானமும்ஏற்பட்டன என்று சொல்லப்படுகின்றது. நம்நப்படி. இது இந்நாட்டுப் பூர்வாசாரமல்ல வென்று எழுதப்பட்டிருக்கும் ஒரு புஸ்தகம் நான் வாசித்திருக்கிறேன். ஆகையால் பாலிய விவாக விதி இடையில் கேர்ந்த பயங்கர காலத்தில் ஜனங்கள் கன்மைக்கு ஏற்பட்டது என்னவேண்டும். அப்பொழுது அதை ஏற் படுத்தியவர்கள் பரோபகாரிகளே. ஆனால் கன்னிகைச் சிறை யெடுக்கும் அந்தக் காலத்தில் பொதுஜன நன்மையை முன்னிட்டு ஏற்பட்ட அந்த ஆசாரத்தை, அவசியமான கொடுமை நிற்றும் இல்லாத பிரிட்டிஷ் ராஜ்ய நாடுகளில் வின்றும் இக்காலத்திலும் அநுசரிப்பது சுத்த அநாகரீகமும் கேடுவிளைவிப்பது

மாகும். தேகம் அசௌக்கியமா யிருந்தகாலத்தில் வைத்தியர் விதித்த கசப்புப் பதார்த்தங்களையும் பாஷணத்தையும் மருந் தாகச் சாப்பிடுவது நன்மைதான். பூரண சௌக்கியத்தை அடை ந்த பிறகுகூட வைத்தியர் விதித்தவைகளை வெறுக்கக்கூடா தென்று பாஷாணத்தையும் கசப்புப் பதார்த்தங்களையும் சாப்பிடு வது என்ன அறியாமை! பாலிய விவாகவிதியை ஏற்படுத்திய பரோபகரிகள் உயிரோடு வந்து இப்பொழுது இந்த நாட்டைப் பார்ப்பார்களானால் அவர்கள்நெஞ்சம் கொதித்து உடனே இந்தக் கட்டை ஒழித்தே தீருவார்கள்.

ஆண்டாள்:—ஆமாம். நீ சொல்வது நியாயந்தான். குழந்தை கலியாணம் இடையில் ஏற்பட்ட வழக்கமாய்த்தான் இருக்க வேண்டும். பழைய காலத்தில் இந்த ஏற்பாடு கிடையாதென்று இராமாயணம் பாரதம் பாகவதம் முதலிய புத்தகங்களிருந்து தெரிகிறது. அவைகளில் யௌவனத்தைத்தான் பெண்கள் கலி யாணப்பருவமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பெண்கள் பிரவி டையாவதற்கு முன்னமே கலியாணம் செய்துவிடவேண்டு மென்ற கட்டு பழைய காலத்தில் இல்லாத ஒரு நூதனமாகத் தான் இருக்கிறது.

ராகவன்:—நூதனமாயிருப்பதோடு பல தீமைகள் நிறைந்த வழக்கமாயு மிருக்கிறது. அதை ஒழிக்க முயற்சிப்பது ஜனங்கள் நன்மையை முன்னிட்டுப் புரியும் ஒரு பெரிய புண்ணிய காரிய மாகும்.

ஆண்டாள்:—ஆனால் ஒன்று—

ராகவன்:—என்ன, எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு மறு படியும் ஆனால் என்று ஆரம்பித்து விட்டாயே.

ஆண்டாள்:—ஒன்று மில்லை. அன்றைக்கொருநாள் பாகீரதி யம்மாள் வந்திருந்தாள். அவள் பெண் சீதைக்குவயசுபத்து நிரம் புறதென்றும் தகுந்த வரன் அகப்படவில்லையென்றும் விசனப் பட்டாள். அப்போது நான் "என்ன நிர்ப்பந்த மம்மா உங்க களுக்குள். ருதுவானபின் கலியாணம் செய்துவிட்டால் என்ன குடிமுழுகிப் போவிடும்?" என்று சொன்னேன். உடனே அவள் ஆவேசத்துடன் என்னைக் கண்டித்து, "என்ன குடிமுழுகிப்

போயிற்று. எண்ணி சொல்லவந்தாயே! சீசி!" கலியாண மில்லாமல் ருதுவானவள் பேச்சுக்குச் சமானமானவள். அவள் முகத்தில் விழிக்கலாமா? அவளால் அவள் பந்துக்களும் நீசராய் விடுகிறார்களே. அவளையும் அவள் பந்துக்களையும் உடனே ஜாதிப் பிரஷ்டஞ் செய்யவேண்டுமே" என்றாள். "அவள் என்ன பாவம் செய்துவிட்டாள் என்று அவளை அப்படி அகற்றவேண்டும்? இதென்ன நியாயம்?" எனறு நான் கேட்டேன். அதற்கு அவள் "கலியாணமாகாமல் ருதுவானவள் எவள்தான் ஒழுங்காயிருப்பாள்? ஆகையால்தான் அவளையும் அவள் பந்துக்களையும் பிரஷ்டபடுத்தவேண்டும்." என்றாள். எனக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏ! எண்ண பேச்சுப் பேசுகிறயம்மா! நாங்கள் பதினாறு வயசுக்கு மேல்தான் பெண்களுக்குக் கலியாணம் செய்கிறோம். எங்கள் பெண்கள் எல்லோரும் ஒழுக்க மற்றவர்கள் என்று சொல்லுகிறாயா?" என்றேன். அவள் சிரித்து "ஒருமாதிரி என்னைப் பசப்பி விடாதே. இல்லையம்மா, கலியாணமில்லாமல் ருதுவானவர்களெல்லோருமே ஒழுக்கத்தவறி விடுவார்களா? கலியாணமானபின்பு ருதுவானவர்களெல்லோருமே ஒழுக்கமாயிருந்துவிடுவார்களா? அதைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். ஆனால் குழந்தையாயிருக்கும்பொழுதே இந்தப் பெண்ணுக்கு இவன்தான் புருஷன் என்று குறித்துக் கலியாணஞ்செய்துவிட்டால் அந்தப் பெண், தன் குழந்தைப் பருவத்திலிருந்தே தன் தாயார் தந்தை அக்காள் என்ற உரிமையோடு அவர்களிடம் அன்புள்ளவளாயிருப்பதுபோல், இவன்தான் தனக்கு கணவன் என்றறிந்து அவனிடத்திலும் அன்புகொண்டிருப்பாள். அவளவளாகவா அந்தஉரிமையும் அன்பும் அவளிடத்திலே வரும். ஆகையால்தான் நாங்கள் குழந்தை கலியாணம் செய்கிறோம்." என்றாள். அவள் சொன்னதும் நியாயமாகத்தானே யிருக்கிறது. வாலாகப்பருவத்தில் இயற்கையாகவே குழந்தைப்பருவத்தி லிருந்து அன்புபாராட்டி வளர்வதுபோல், கணவனிடத்திலும் வளர்ந்தால் அதை எவ்வளவு உத்தமம்?

[illegible]

அன்பு செலுத்தி வளர்த்துவருவதால் குழந்தைக்கு அவர்களிடம் அன்புண்டாவது இயற்கை. ஆனால் குழந்தைப் பருவத்தில் தனக்குத் தாலிகட்டிவிட்டு அவன்பாட்டில் அவன் தகப்பனார் வீட்டில் வளர்ந்துகொண்டிருந்த புருஷனிடத்தில் பதிபக்தி ஏற்படுப்பாங்காக வளர்ந்துவிடாது. அல்லாமலும் பதிபக்தி உண்டாவதற்கு ஏற்ற பருவம் யௌவனப் பருவந்தான். பெண்கள் பதிபக்தி பரிசுத்தம் முதலிய உயர்ந்த தன்மைகள் அமைந்தவர்களாயிருக்கவேண்டுமானால், அவர்களுக்கு இளமையிலேயே சிறந்த கல்வியளித்து நற்குண நல்லொழுக்கப் பயிற்சியில் அவர்களை வளர்ப்பதில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமே யொழிய அவர்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே கலியாணஞ் செய்வதில் யாதொரு நற்பிரயோஜனமும் இல்லை. மற்றுமொருமுறை சொல்லுகிறேன். குழந்தைகளின் கவனமெல்லாம் விளையாட்டிலும் வேடிக்கையிலும் கல்விபயிலுதலிலும் சன்மார்க்க அபிவிர்த்தியிலும் செல்லவேண்டும். இந்த நிர்ப்பாக்கிய நாட்டிலோ, குழந்தைகள், சாதாரணமாக நான் முன்பு சொன்னபடி, கலியாண சம்பந்தமான பலவகைச் சடங்குகள், ஸ்திரீபுருஷர்கள் குடித்தனம் செய்தல், குழந்தை பெறுதல், முதலிய கனவுகளைத்தான் காண்கிறார்கள். நாம் தேகதிடத்திலும் தேகாரோக்கியத்திலும் பஞ்சைகளாயிருப்பதற்குள்ள பல காரணங்களில் பாலிய விவாக ஆசாரமும் ஒன்று என்னலாம். ஆகையால் அந்த அநாசாரணையை அகற்றி நம்மைச் சீர்திருத்திக் கொள்ளாவிடில் நாம் வரவர மிகப்பஞ்சை ஜனங்களாய்விடுவோம்.

ஆண்டாள்:—அது வாஸ்தவந்தான். ஆனால் அதை ஒழிப்பதென்றால் இலேசான காரியமோ! எத்தனையோ தலைமுறையாய் அநுசரிக்கப்பட்டிருக்கிற வழக்கமல்லவா? நாம் வாயாற் சும்மா சொல்லிவிடுகிறோம். அந்த வழக்கத்தைப் பரம்பரையாய் அநுசரிப்பவர்களுக்கல்லவா தெரியும் அதை இப்பொழுது நிறுத்தும் கஷ்டம்.

ராகவன்:—இல்லை! ஆண்டாள், அப்படி நினையாதே. ஒரு ஏற்பாட்டை ஜனங்கள் ஆதரிப்பதும் புறக்கணிப்பதும், அந்த ஏற்பாட்டின் சௌகரியாசௌகரியங்கள் நன்மை தீமைகள் ஜன

களுக்கு உண்மையாக, தெளிவாக, தெரிவதைத்தான் பொறுத்திருக்கிறது. சமுதாயாத்திரை பிராமணர்களுக்கு விலக்கப்பட்டிருந்த வழக்கம் போய் இப்பொழுது பல பொதுநலங்களை முன்னிட்டும் சுயநலங்களை முன்னிட்டும் பிராமணர்கள் சமுத்திரயாத்திரை செய்வது சாதாரணமாய்விட்டது. அதுபோல நமது ஜன சமூகத்தில் ஏற்பட்டுள்ள பாலிய விவாகம் முதலிய ஆசாரங்களின் கொடுமை ஜனங்கள் மனதில் நன்கு பதியப் பதிய காளடைவில் அவை மறைந்துபோம். இவ்வாறு நிர்ணயம் ஏற்படுவதற்கு, சங்கங்கள் கூடுவதும் பத்திரிகைகளில் எழுதுவதும் பிரசங்கங்கள் செய்வதும் பாத்திரம் போதா. ஒவ்வொரு வீட்டிலும் இப்போது நீயும் நானும் பேசியதைப்போல் பாலிய விவாகத்தைப்பற்றியும் அதைப்போன்ற ஆசாரங்களைப்பற்றியும் சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் பேசவேண்டும். அப்பொழுது அந்த வழக்கங்களிலுள்ளவைகள் தெளிவுதெளிவாகத்தெரியும். பின்னர் காலப்போக்கில் அந்த வழக்கங்களில் வெறுப்பு உண்டாகும். அப்படியே வெறுப்புஉண்டாகவுண்டாக அவ்வழக்கங்களும் மறைந்துபோம். ஆகையால் ஆண்டாள்! இப்பொழுது நாம் பேசிய விஷயங்களைப் பற்றிச் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் நீ பேசி, பாலிய விவாகத்தின் தீமைகளை எடுத்துக் காட்டவேண்டியது உனது கடமை. மற்றொரு புத்திமதியும் சொல்லுகிறேன் கேள். நாம் நமது குடும்பக் தெய்வமாகிய கண்ணபிரானிடத்தில் எப்பொழுதும் பக்தியோடிருக்கவேண்டுமென்றும், நமது மனம்எவ்விதத் காலாவது கலக்கமடைந்தால் மயக்கமடைந்தால் உடனே அந்த மாயக்கண்ணன் திருவடிகளைத் தியானித்து நமது மனத்துக்குத் தெளிவை அளித்துப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று பிரார்த்தித்தால் சத்தியமாய் அந்தப் பரந்தாமன் நமது பிரார்த்தனையைக்கேட்டு நம்மைப் பாதுகாப்பார் என்றும், நமது தகப்பனார் சொல்லியிருக்கிறார்களே. அவர்கள் போதனைகளின் சக்தியை பதைப் பலமுறை நான் அநுபவத்தில் அறிந்திருக்கிறேன். பாலிய விவாகத்தில் வெறுப்பு இயற்கையாகவே என் மனத்தில் உண்டாயிற்று. அப்படி உண்டானது தகுதியோ தகுதியல்லவோ என்ற சந்தேகமுங்கொண்டேன். இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்து இவ்விஷய சம்பந்தமாக தெளிவுணர்ச்சியை எனக்குக்

கொடுக்கும்படி ஆபத்பாந்தவனிய அந்தக் கோபாலனைத் தியானித்தேன். அதன் பிறகு பாலிய விவாகத்தில் வெறுப்பு முன்னிலும் அதிகரித்தது. ஆகையால் அதை வெறுப்பதும் ஒழிக்க முயற்சிப்பதும் புண்ணிய காரியமென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஆண்டாள்:—பாலிய விவாகத்திற்கு விரோதமாகப் பேச இப்பொழுதே எனக்கு ஒரு உற்சாகம் பிறந்திருக்கிறது. இன்றிரவு படுக்கைக்குப் போவதற்கு முன் இந்த விஷயத்தைச் சார்ந்த உண்மைகளைத் தெளிவாக எனக்கு உணர்த்தும்படி நமது பாதகோபிரார்த்திக்கிறேன். இப்பொழுதுள்ள உற்சாகம் பின்னும் அதிகரித்தால் இந்த அநாகரிக வழக்கத்தைப் புறக்கணித்துச் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் பேச ஆண்டாளம்மாள் கங்கணம் கட்டிக் கொள்ளுவாள்.

ராகவன்:—ரொம்பச் சந்தோஷம். சரி—இந்த விஷயத்தைப் பற்றிப் பேச்சு எழுவதற்குத் தனலக்ஷ்மிதான் காரணமாயிருந்தாளாகையால் அவள் இன்று செய்த சேஷ்டையைப் பாராட்டாமல் அவளை மன்னித்து இப்பொழுது அவளைச் சமுத்திரக் கரைக்கு அழைத்துப் போகவேண்டும். தனலக்ஷ்மி! தனலக்ஷ்மி! தனலக்ஷ்மி!

முற்றிற்று.

பெண்மைநலங்காடி.

ஆங்கிலச் செங்கோல்.

கோட்டு மெட்டு.

1. கேளும் இந்திய நேசரே—நம்மை
ஆளும் வித்தையின் கோர்மையே. (கேளும்)

2. இமாசல முதல்தென் கடல்வரை—மிகு
சமாதா னம்நிலை யாம்உரை. (கேளும்)

3. பசுபுலி ஓர்துறை தன்னிலே—விசு
வாசமாய் நீருணும் உன்னிலே. (கேளும்)

4. வலியவர் எளியவர் தம்மையே—சற்றும்
நலியவொண் ணாதிந் நண்மையே. (கேளும்)

5. கள்ளர் ஜஷ்டர் அடக்கினரே—மிக
உள்ளொளி பூற்றவர் ஓங்கினரே. (கேளும்)

6. காடுகள் நாடுகள் ஆயினவே—சிறு
வீடுகள் மேடைகள் ஆயினவே. (கேளும்)

7. சிற்றூர் பேரூர் ஆயினவே—பல
மற்றூர் மாநகர் ஆயினவே. (கேளும்)

8. புஞ்சைகள் நஞ்சைகள் ஆயினவே—வெறும்
பஞ்சைகள் பண்ணையர் ஆயினரே. (கேளும்)

9. எங்கணும் கல்விச் சாலைகளாம்—பின்
எங்கணும் ஔஷத சாலைகளாம். (கேளும்)

10. சத்திரம் கல்வாய் கிணறுகளாம்—வெகு
பத்திர மாய்ச்செலும் பாதைகளாம். (கேளும்)

11. மூச்சு விரைபுகை வண்டிசெலும்—அதில்
தூக்கு விரைந்தொரு செப்திசொலும். (கேளும்)

12. தந்தியில் லாபமும் பேசுவரே—இனி
அந்தர மார்க்கமாய்ச் செல்லுவரே. (கேளும்)

13. உயர்குலம் இழிகுலம் என்றுரையார்—மிக
உயர்நிலை தகவறிந் தேயளிப்பார். (கேளும்)

14. எம்மதம் எதுவெது கூறிடினும்—அது
சம்மதம் அவர்அதில் தலையீடார். (கேளும்)

15. வாழ்கநம் ஜார்ஜ்தம் தேவியுடன்—என்றும்
வாழ்கஇங் கிலஅர சாட்சிகளன்றும். (கேளும்)

கும்மி.

—:o:—

1. தூறும் ஆங்கில ஆட்சிக் கினைசொலத்
தேடிலும் பூமியில் வேறிலையே
பாரில் பிறந்தது பண்பிற் பிறந்தது
போகிற் பிறந்தது பாரீரே!

2. சாதிவித்தி தாசம் பாராட்டமலத்
[illegible]

நீதியை யார்க்கும் பொதுவாய் விதித்தந்த
நீதிதப்பாமுறை செய்திடுமே.

3. காகிதத்தி னூயர்த்துவிக்கு கம்மை
கல்வ வழியிற் செலுத்துவிக்கும்
பாகொத்த பான்மொழி பேசுவிக்கும் பெரும்
பாக்கியம் காம்பெறச் செய்திடுமே.

4. தூங்காஉன் னன்பெனும் தேங்காய்பழங் கொண்டு
நூயபரம் பொருளைத் தொழுவோம்
ஆங்காரி யஞ்செய்து பாங்கா யமைந்துள்ள
ஆங்கில ஆட்சி நிலைபெறவே.

5. வாழ்கம் மன்னர் மாதவர் தேவியும்
மற்றுங் குடிகள் அனைவருமே
வாழ்க பயிரெலாம் வாழ்க உயிரெலாம்
வாழ்க மகாதேவன் சேவடியே.

மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக்கதை.

கலைமகள் காப்பு.

அற்புக் கரசி யவனிக் கரசி
பொற்புக் கரசி புலமைக் கரசி
வெற்புங் கனிய விளம்பித் தருவள்
சற்புத் திரசஞ் சலமென் சரிதை.

(இக்கதை கதாநாயகன் கூற்றாக எழுதப்படுகின்றது.)

முதல் அத்தியாயம்.

என்னை என்ற அன்னையின் பெயர் மனோன்மணியம்மாள். என் பிறப் பதற்கு இரண்டு வருடம் ஏழு மாதங்களுக்கு முன் எங்கள் பெற்றோர்கள் இருவருக்கும் விவாகம் நிகழ்ந்தது. அந்த விவாகம் இந்த உலகத்திலிருக்கும் பல விசித்திர சம்பவங்களில் ஒன்ற என்னலாம். என் அன்னையின் பெற் றோர்களும் என் தந்தையின் பெற்றோர்களும் செருங்கிய பந்துக்கள். ஆனால் அவர்கள் குடும்பத்தாருக்கும் மூன்றுதலைமுறையாக ஜன்மவிரோதம். ஜன்மப்பகை பூண்ட இவ்விரு குடும்பங்களிலும் உதித்த என் அன்னையும்

பிதாவும் தன்னை பதினேழாவது பதின்மூன்றாவது வயதில் உயிரைக் காதல் பூண்ட உயிர்க் காதலராயினர். பிதாசார்ஜிதமாக ஐன்மப் பகையும் சுயார்ஜித மாக உன்னத்தில் உயிர்க்காதலும் கொண்ட ஸ்ரீமான் தந்த கோபாலருக்கும் ஸ்ரீமதி மனோன்மணியம்மாளுக்கும் விவாகம் நிறைவேறிவிட்டது. அதற்கு சேர்ந்த இடையூறுகள் அநேகம். அவ்விடையூறுகள் எப்படி ஒழிந்தன, அவ் விவாகம் எவ்வாறு நிறைவேறியது, முதலியன விஷயங்களையெல்லாம் விவரிக்கவேண்டுமாயின் அதற்காக ஒரு தனிக்கதை எழுதவேண்டும். நான் இப் பொழுது விவரமாய் உரைக்க எடுத்திருப்பது என்னுடைய சரித்தான். என் தந்தையின் சரிதமன்று. மங்கலமாகத் தொடங்குவதற்காக அவர் விவாகத்தை முதலிற் சொன்னேன். அவ்விவாகத்திற்கு முன்பு நிகழ்ந்த பெரிய சம்பவங்களையெல்லாம் அறிவிப்பது இக்கதையைச் சார்ந்த கடனன்று.

தக்ஷப்பிரஜாபதியின் புத்திரி சதிதேவியைப்போல் என்னை ஈன்ற தாய் தன் கணவருக்காகத் தன் பெற்றோர்களைத் துறந்து, தன் கணவரே தன் சுகமெனக் கருதி அவரது இல்லத்திற்கு வந்துவிட்டாள். முதன் முதல் அவளது மாமனார் அவளைத் தன் மருமகளாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் இரண்டு மூன்று மாதங்களுக்குள் அவளுடைய அபூர்வ குணாதிசயங் களால் அவர் மனம் சற்று நெகிழ்ந்தது. ஆகையால் அவளிடமிருந்து ஒரே ஒரு வாக்குப் பெற்றுக்கொண்டு அவளைத் தன் மருமகளாக அங்கீகரித்தார். என் தாயார் அவருக்கு அளித்த வாக்கு என்ன வென்பீர்களோ.? அவள் ஜீவகால பரியந்தம் பிறந்த அகத்திற்கு அடியெடுத்து வைப்பதில்லை என் பதுதான். அவ்வாக்கையும் அவள் முற்றும் நிறைவேற்றினாள். இனி என் கதையைத் தொடங்குகிறேன்.

என் தந்தையின் விவாகம் நிறைவேறிய மூப்பத்து மூன்றும் மாதம் நான் இந்த உலகத்தில் பிறந்தேன். பிறந்த மூன்றும் நான் என்னை ஈன்ற அன்னை நித்திய நித்திரை புரிந்தனள். அப்பொழுதுதான் அவளுடைய தாய் தந்தையர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து என் அன்னையின் முகத்தைப் பார்த்து உருகி அழுது அங்கலாய்த்துப் பின்பு தங்கள் இல்லத்திற்குப் போய்விட் டார்கள்.

என் தந்தை என் அன்னைபால் கொண்டிருந்த அன்பு அற்புதமானது. அவள் சென்றவுடன் அவருடைய உயிரும் பாதியும் அவளோடு சென்று விட்டதென்னலாம். மானத்தாலாயில் என் அன்னை அவரை கோக்கி "என்னை நினைத்து வீணாக உங்கள் சௌக்கியத்தைக் கெடுத் துக்கொள்ளாதேயுங்கள். குழந்தைக்காக உங்களைத் தேற்றிக்கொள்ளுங்கள். [illegible] என் தங்கை ஆண்டாளை கல்யாணஞ்செய்துகொள்ளுங்கள். வேறு ஒருத்தி [illegible] முறைதவறி நடந்துகொண்டால் என்னை நினைத்து [illegible] என்று சொன்னாளாம். என் தகப்பனார்

இம்மொழிகளைத் தன் உள்ளத்தில் ஆழம் பதித்துக்கொண்டனர். என் அன்னை இறந்த மறுமாதமே வேறொரு பெண்ணைத் தன் புத்திரனுக்கு விவாகம் செய்விக்க முயற்சித்தனர் என் பாட்டனார். அவர் பெருங்கோபி. பிடிவாத குணமுள்ளவர். ஆனால் அவர் புத்திரன்தானே என் பிதாவும். பிதா சார்ஜிதமாக அந்தப் பிடிவாதக் குணத்தை இவரும் கைப்பிடித்திருந்தனர். அன்றியும் தன் உயிரென மதித்திருந்த தன் மனைவியைப் பிரிந்த எக்கத்தி னால் அவர் சித்தமும் மிகக் கலங்கியிருந்தது. ஆகையால் என் தந்தை தைரிய மாய்த் தன் தந்தையை நோக்கி "நான் ஆண்டாளை கல்யாணஞ்செய்து கொள்வேன். இதற்கு நீங்கள் சம்மதிக்காவிட்டால் நான் சன்யாசம் வாங்கிக் கொள்வேன்" என்றனராம். ஆனால் என் பாட்டனார் இச்சபதங்கட்குப் பயந்தவர்? ஆகையால் அச்சபதம் புகன்ற நான்காம் நாளே என் தந்தை அகத்தைத் துறந்து திருவாடுதுறைக்குச் சென்றுவிட்டார்.

இரண்டு மாதங்களாயின. என் பாட்டனார் தானே தன் புத்திரனை அழைத்துவரத் திருவாவடுதுறைக்குச் சென்றார். ஆங்கு தன் மகன் கொண் டிருந்த சன்யாசக் கோலத்தைக் கண்டதும் அவர் கண்ணீர் வடித்தனராம். அவர் கண்ணீரைக் கண்ணுற்ற என் தந்தையும் கண்ணீர் சிந்தினாராம். என்ன மனஸ்தாப மிருந்தபோதிலும் பெற்ற மனமல்லவா? ஆனால் மிகச் சிறிய ஒரு பிழைக்காகத் தன் புத்திரனை விஷமாக வெறுக்கும் பிசாசங் களாய பிதாக்களும் உளர். அந்தப் பிசாசக்கூட்டத்தில் சேர்ந்தவர் என் பாட்டனார்.

"உன்னிஷ்டப்பிரகாரமே கோபாலா! ஆண்டாளையே கல்யாணஞ் செய்துகொள். நமது குலம் தழைக்கவேண்டாமா! ஆனால் காலைப் போய் அந்தப் பேய்களிடத்தில் பெண் கேட்கமாட்டேன். நீ மனோன்மணியைக் கல்யாணஞ்செய்துகொண்டதுபோல் எப்படியேனும் இந்தப் பெண்ணையும் கல்யாணஞ்செய்துகொண்டு வந்துவிடு." என்றவாறு என் பாட்டனார் பற் பல விஷயங்களைப்பற்றித் தன் புத்திரனோடு கலந்து பேசிவிட்டு தனது சொந்த காரியத்திற்கு மீண்டனர். பின்னர் என் பிதாவும் சன்யாசக்கோலங் களைக் களைந்துவிட்டு மாப்பிள்ளைக்குரிய தன்னை அலங்கரித்துக் கொண்டு தன் மாமனார் அகத்திற்குச் சென்றார். அம்மாமனார் தன் சம்பந்தியாகிய என் பாட்டனாரைச் சந்தோஷப் படுத்தவேண்டி என் தந்தையின்பால் பிரி தியான் கொண்டிருந்தனர். ஆகையால் என் பிதா தன் வேட்டகத்தில் அன் புடனே உபசரிக்கப்பெற்றார். இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு கோபாலர் தான் வந்த காரியத்தைத் தன் மாமனாருக்கு வெளியிட்டார். மூன்று முதல் என் தாய்வழிப் பாட்டனார் இதற்கிணங்கவேயில்லை. ஆனால் ஏழெட்டுத் தினங்களுக்குப் பிறகு சம்மதித்துவிட்டார். இதற்கு மூன்

ஒரு காரணம் அவன் புத்திரி ஆண்டாளம்மாள் தான் தன் அக்கான் கணவ னையே மணந்துகொள்வதாகத் தன் பெற்றோர்களுக்குத் தெரிவித்து அழு தழுதழுதி அவர்கள் மனத்தைக் கரைத்ததுதான்.

ஆண்டாளம்மாளுக்கும் என்ன தக்கைக்கும் விவாகம் கிறைவேறிச் சுமார் இரண்டரை மாதங்களுக்குப் பிறகு என் தக்கை தன் மனைவியை அழைத்துக் கொண்டு எக்கச் வீட்டுக்கு வந்துவிட்டார். என் பாட்டனார் இந்த மருமகனிடமிருந்து யாதொரு வாக்குக்கத்தும் பெற்றுக்கொள்ளா மலே இவனை அங்கீகரித்துக்கொண்டனர். இந்த அம்மாளும் தாய்வீடு போய்வருவதைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் காலஞ்சென்ற தன் தமக்கையைப் போலவே ஒழுகினாள். இந்த ஆண்டாளம்மாள்தான் என னைக் கர்ப்பத்தில் தாங்கிய தாய், தன் சொந்தக் குழந்தையைக்கூட அவ்வளவு அன்போடும் ஆதரவோடும் எப்பத் தாயும் வளர்த்திரான். நான் "அம்மா" என்று முதன் முதல் அழைத்தது இந்த அன்னையைத்தான். இந்த அன்னைதான் என்னை அநேகமுறை மாம்போடனைத்துத் தாலாட்டினவள். இந்த அன்னைதான் எனக்கு கோணிக்குப் பாலூட்டி வளர்த்தவள். இந்த அன்னைதான் எனக்கு ஸ்நானம் செய்வித்து மருந்து புகட்டிப் பொட்டிட்டு மையிட்டு அலங்கரித்து அழகு பார்த்துப் பார்த்து மகிழ்ந்தவள். நான் பிறந்த பதினைமூன்றும் மாதம் கொடிய பெரியம்மை யென்ற வைசூரியால் உபாதிக்கப்பட்டிருந்த பொழுது, இரவெலாம் பகலாகப் பாவித்து விழித்திருந்து தினந்தினம் தண்ணீர் வடித்துத் தன் கரங்களையும் மடியையுமே எனது பஞ்சணை மெத் தையாக அமைத்து இருபத்தொரு நாட்களாக உள்ள முழுக்க உருகிக் கடவுளையே பிரார்த்தித்துக்கொண்டிருந்தவள். இந்த அன்னைதான், நான் உட்காரப் பழகியதை நடக்கப்பழகியதைக் கண்டும் என் மழலைச் சொற்களைக் கேட்டும் பேராகந்தமடைந்தவள் இந்த அன்னைதான். எனக்கு ஒரு வயது பூர்த்தியாயினபின்பு எனது முகத் பிறந்தநாளன்று எனக்கு ஜனகராஜன் என்ற பெயரிடவேண்டுமென்று சொல்லி யாவரையும் அதற்குச் சம்மதிக்கச் செய்து எனக்கு அப்பெயரிட்டு உலகையுற்றவன் இந்த அன்னைதான். (நான் பிறந்த மூன்றுமாதன் என் அன்னை இறந்துபிட்டதால் நான் உயிரோடிருப் பேனென்னவோ எனச் சந்தேகித்த ஒரு வருஷம் எனக்கு யாதொரு பெயரும் இடவில்லை) நான் பேசத்தொடங்கியபோது எனக்குப் பல அழ கான பாட்டுகள் பாடக் கற்றுக்கொடுத்து, நான் பாடக்கேட்டு மகிழ்ந்தவன் இந்த அன்னைதான். எனக்கு அ, ஆ முதலிய அட்சரங்களை முதன் முதல் கற்றுக்கொடுத்து எனது ஞானம் பருவம் பூர்த்தியாகும் முன்னர் முதல் எனை எழுத்தாசிரியரிடம் அனுப்பி எனக்கு அனித்து மகிழ்ந்தவன் இந்த அன்னைதான். இவை அனைத்தையெல்லாம் இப்பொழுதி

நினைத்தமாத்திரத்திலேயே உள்ளப்பதைப்பும் கெட்டியிர்ப்பும் என்னை மீறிப் பொங்குகின்றனவே! என்செய்வேன்!.

(தொடரும்.)

ஓர் ஆப்தன்.

சந்திர லோகம்.

ஓர் மனோதயாத்திரை.

மாலை சுமார் ஆறு மணி இருக்கும். ஆற்றின் தென் கரையில் உள்ள புல் மேட்டின்மீது உட்கார்ந்துகொண்டு வழக்கம்போல் வரும் கண் பார்வை எதிர்பார்த்திருந்தேன்; ஆனால், அன்று எக்காரணம் பற்றியோ அங்கே ஒருவரும் வரவில்லை. அன்று வழக்கத்திற்கு மாறுகானும் கையிற் புத்தகமும் இல்லாது இருந்தேன். ஆகவே மாலைப் பொழுதை எவ்வாறு கழிப்பது என்ற கவலை சிறிது மனத்தில் தோன்றத் தொடங்கியது. உடனே வானை நோக்கிக் கீழே படுத்துக்கொண்டு என் மனோதத்தை நோக்கி "ஏ மனோதமே! என்னை இப்பொழுது தயவுசெய்து சந்திர லோகத்திற்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டும்." என்றேன். அதற்கு அது யாதொரு தடையும் சொல்லாது பாக்குக் கடிக்கும் நேரத்திற்குள் என்னை அந்த லோகத்திற் கொண்டு சேர்த்தது.

ரதத்தை விட்டுக் கீழே இறங்கினதும் சாந்தமும் அமைதியும், இன்பகரமான காற்றும் உள்ள ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு சந்திர னையே இமை கொட்டாது வெகுநேரம் பார்த்தேன். அவனது அர்த்த ரூபத்தினின்றும் குளிர்ந்த அமிர்தம் போன்ற ஒளி பாய்ந்து ஒழுகிற்று; எஞ் ஞலும், அசைவின்றி, ஆடல் பாடல்கள் இன்றி, தவம் செய்யும் ரிஷிகளை ப்போல் ஒரே நிலையில் மௌனம் சாதித்துக் கொண்டிருந்த அச் சந்திரன் மீது எனக்குக் கோபம் பிறந்து "இதென்னடா பெருந் தொல்லை! வலிய வந்தவன் கிழவி என்பது போல, இவனைக் காண ஆசைகொண்டு வலிய இங்குப் போந்த நம்மை இவன் பெரிதும் அசட்டை செய்கிறான்! சீச்சி! உலகத்தார் இவனை ஆடுவான் என்றும், பாடுவான் என்றும், இன்பக் கதை கள் கோடானுகோடி கூறுவான் என்றும் சொல்வ தெல்லாம் வீண் சொற் களே!" என்று பற்பலவாறு அம்மதியை மதிகெட்டு நான் இகழ்ந்துவிட் டேன். சந்திரன் மிகவும் சமர்த்தன். எப்படியோ என் எண்ணங்களை யெல் லாம் அவன் அறிந்துகொண்டு, அதுகாறும் சலம் போல் அசைவற்று இருக் தனை ஒழித்து மேற்றிசை நோக்கி வெகு வேகமாக ஓடத் தலைப்பட்டான். அப்பொழுது "சந்திரா! தான் நினைத்தவை அனைத்தும் பிசகே. ஓடல்,

தேவி!" என்று கெஞ்சினேன். சந்திரன் மிகவும் வல்லவன். உடனே ஓட்டம் ஒழிந்து, என்னையே குறுகுறு என்று பார்த்தான். கைத்துப் பழுத்த தலையுடைய ஒரு கிழப் பாதிரியைப்போல அவ்வேளை அவன் என் பார்வையில் தோன்றினான். அதைக் கண்டதும், சதென்ன மாயம், சதென்ன மாயம்! என்ற இரண்டொரு முறை எனக்குள்ளேயே வியப்புற்றேன். உடனே அவனும் அவ்வருக் கனோக்கி ஹிந்தி-மகஹமது சமாலம் காடிய மஹாத்மாராயிய ஸ்ரீ காளக் முனியின் வேடம் தரித்துக் கீழ்புறம் நோக்கி— அதுவும் என்னைக் குறித்து வாயுவேகமாக ஓடி வரக் கண்டேன். "சரி, வாட்டும். ஞான ஸ்நானம் பெற்று, அவர் அருளாற் கலி பாடும் சக்தி பெறுவோம்" என்று என் மனம் குதூகலிக்க வேண்டியிருக்க, அங்ஙனம் இன்னிக்கருடனைக் கண்ட பாம்புபோற் குய்யோ முறையோ என்று கூக்குரலிடத் தலைப்பட்டது. அச்சமயம் அதைக் கொலை கூடச் செய்து விடலாமா என் றெண்ணி விட்டேன்; என்றாலும் கோபத்திற்குப் பெரிதும் இடங்கொடுத்துவிடாது, மீண்டும் அவனையே உற்று நோக்கினேன். அப்பொழுது அம்மாயக் கூத்தன், கழைக் கூத்தாடியே போலப் பற்பல அதி அற்புதமான வேடிக்கைகளையும் பொம்மைகளையும் எனக்குக் காட்டினான். சுமார் இருபது வருஷ காலத்தை ஆங்கிலப் படிப்பிலேயே போக்கினவன் ஆகையால் அவற்றின் அழகையும் இன்பத்தையும் விரித்துக்கூறச் சக்தி யில்லையே என்ற வருத்தம் இச்சமயம் அதிதமாகத் தோன்றுகின்றது! அதோ! சந்திரன் மலர் மழை பொழியும் சுற்றோம் போல், பிறர் உதவி இம்மியும் இன்றி வாயு வேக மனோவேகமாக மேலும் கீழும் எறி இறங்கிக் கொண்டு என்மீது பொழிந்த புஷ்ப மழையை நான் எப்படி யிங்கு விரித்துரைப்பேன்! ஆஹா அன்று நான் அனுபவித்த இன்பமே இன்பம். "தூக்கமும், கவலையும், வறுமையும், சூதும், வாதும், பொய்யும், திருட்டும், அசதியும், சோம்பலும், பிறப்பும், இறப்பும், பசிப் பிணியும், பொல்லாத அடிமைத் தன்மையும் தர்ம தேவதைக்கும் அஞ்சாது சில நீசர்கள் புரியும் துஷ்கிருத்யங்களும் மலிந்த மண்ணுலகத்திற்குப் போகாமல்— அதன் முகத்திலும் விழியாமல்— அதன் நினைப்பையும் மறந்து— இச் சந்திர லோகத்திலேயே இருந்து விடுவோம்" என்று கூட அவ்வேளை நினைத்துவிட்டேன்.

அதோ அச்சமயம் பூஜை வேளையிற் கரடி வந்தது போல என் அனுமதிக்கும் முன்னே வந்து நின்று கொண்டு "வா; போவோம்; நேரம் ஆயிற்று; எழுந்திரு" என்றது. சமயம் அறியாமற் பேசும் அம் மனோதப் பேய்மீது ஆற்றாதற்கு ஒண்ணாத பெரும் கோபம் பிறக்க, "என்னால் இப்பொழுது வர முடியாது. அதோ என் முன் தூணைத் தூக்கும் சக்தியை ஒரு முறையேனும் பிடித் தழுதி முத்தமிட்டு, பின் தாரை சம்பந்த ஞானத்தின் உண்மையைக் கேட்டு அறிந்து கொண்டே வருவேன், எனைத்தின் உண்மையைக் கேட்டு அறிந்து கொண்டே வரு

வேன், என்னைத் தொல்லை பண்ணுதே; என்று சொல்லி விட்டு, வீரம் ஜோதியுடன் என்முன் நின்று கொண்டிருந்த அப்புலியைப் பிடிக்க ஓடினேன்; என்னால் முடியவில்லை. ஒரு சமயம் என்னைக் கிட்ட நிற்பான்; இதோ பிடித்தேன் பார் என்று அவன் மீது பாய்வேன்; உடனே ஒரு 'மைல்' தூரத்திற்கு அப்பால் அவன் பறந்தோடி விடுவான். என்ன செய்வேன்! இனி நம்மால் ஒட முடியாது என்று தெரிந்தவுடன் "ஏ மதி கெட்ட மதியே! அன்று தாரைக்குப் பயந்து நந்தவனம் நோக்கி, ஓடினது போல இன்று ஏன் எனக்குப் பயந்து ஓடுகின்றனை! சீ! வெட்கம் கெட்டவனே; நில்," என்று சொல்லிக்கொண்டே பொத்தென்று கீழே வீழ்ந்து விட்டேன். அப்பொழுது அச்சந்திரன் ஒரு உத்தம வீரனைப் போல என் முன் நின்று கொண்டு "ஏ மனுஷ்யப் பதரே! பயந்து ஓடுகின்றேன் என்று நீ யெண்ணுதே. நீயோ அடிமைத் தன்மை மிகுந்த பாமர சண்டாளன். உன்னிடம் நான் எவ்வாறு பேசுவது! மேலும் நீசன் அண்டையில் எவ்வாறு நிற்பது!" என்றான். அது கேட்ட நான் "மிகவும் மனத்தூயர் உற்று, கண்மாரி பொழிந்துகொண்டே "ஹே! தேவாதி தேவா! என் அடிமை முறியை ரத்துசெய்து கொண்டு வந்தால்....." என்று முடிக்கும் முன், அவன் "உனக்கு நற்சுகமும், நல் வாழ்வும், நல்ல ஞானமும், சேக திடனும், நீண்ட ஆயுளும், நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றலும், இன்னும் சகல பாக்யங்களும் தந்து ரக்ஷிப்பேன்" என்று சொல்லி மறைந்தான் நானும் மண்ணுலகம் வந்து சேர்ந்தேன். கதையும் முடிந்தது.

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்."

பொதுமறை.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

ப. ரெ. விஸ்வநாத பாரதி.

சாத்தூர்.

நாகப்பட்டணம் உருக்குப்பெட்டி.

(ஓர் சிறு கதை.)

225-ம் பக்கத் தொடர்ச்சி

கொழுக்கட்டைக்காரன் அநேக வீதிகளும் சந்துகளும் நடந்து சென்று கடைசியாக ஒரு வீட்டினுட் புகுந்தான். பீமபூபதியும் அர்ச்சுன சாயரும் அவனை விடாது தொடர்ந்து தாங்களும் அவ்வீட்டினுட் புகுந்தார்கள். வீட்டு முற்றத்தைக் கடந்து உட்

கூடத்துச் செலவும் வாசல் கதவைக் கொழுக்கட்டைக்காரன் தட்டிய சிறிது நேரத்திற்குள், நரைத்த தலையிரும் தாடியும் உள்ளாரு மனிதன் கதவைத் திறக்கவே அவன் திருஷ்டி நமது மனபர இருவர்மீதும் பட்டது. உடனே "ஐயர் அவர்கள்?" என்று கேட்டான். அப்பொழுதுதான் கொழுக்கட்டைக்காரன் திரும்பிப் பார்த்தான். நிறமசரும மந்திரியும் சரசரவென அவனருகே சென்றார்கள். அர்ச்சனராயர் "ஐயா கொழுக்கட்டைத் தர்மபிரபு! நீர் கொழுக்கட்டைத் தர்மம் செய்து திரிவதும் பிறர் ஏற்காத கொழுக்கட்டைகளை நீர் விழுங்குவதுமாய் இருக்கிற விரதத்தின் காரணத்தை அறிய ஆவல் மிகுதியும் கொண்டு இவ்வளவு தூரம் உமைத் தொடர்ந்து வந்தோம். தயை செய்து காரணத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று வேண்டினார். கொழுக்கட்டைக் காரன் நரைத்த தாடியுடைய மனிதன் முகத்தைப் பார்த்தான். அவன், சுறுசுறுப்புள்ள முகத்துடன், "எங்கள் காரியங்களில் நீங்கள் தலையிடவேண்டாம். உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போக வழியைப் போங்கள்" என்றான். "எங்கள் உயிர் போனாலும் போகட்டும். இந்தக் கொழுக்கட்டை விரதக் காரணத்தை அறியாமல் நாங்கள் போகமாட்டோம்" என்று அர்ச்சனராயர் தன் மந்திரனைக் கையைப் பிடித்து அமர்த்தித் தானும் அவருமாகத் திண்ணையில் உட்கார்ந்து விட்டார்கள். அப்பொழுது தாடி மனிதன் புன்சிரிப்புடன் கூறுகிறான்:—

"அப்படியானால் சொல்லுகிறேன் கேளுங்கள். நானும் இவ்வியப்பரண்ச் சங்கத்தின் அங்கத்தினர்கள். மனிதனைப் பிற இறக்க வேண்டியவன். இவ்வுலகில் உள்ள மூப்பு பிணி முதலிய பலவகைத் துன்பங்களைவிட மரண அவஸ்தை இருக்கிறதே அதுதான் பெரிய துன்பம் என்று நாங்கள் நம்புகிறோம். மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களோடு தீர்க்காயுளையே முக்கியமாய்க் கவனிக்கிறார்களே யொழிய மரணவஸ்தையைப் பற்றி அவ்வளவாகக் கவனிக்கிறார்களில்லை. ஒவ்வொருவருக்கும் கடைசி அவசியம் வரவேண்டியிருப்பதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களில்லை. ஆனால் விரும்பாவிட்டாலும் சகலருக்கும் நிச்சயமாய் வந்திருக்கும் [illegible] அதைச் சுலபமாக்கும்

கண் வாழ்வு என்றும் நிலைத்திருப்பதுபோல் நடந்து கொள்ளுகிறார்களே. இதுதான் இவ்வுலகின் மாயம், விசித்திரம்" என்று பரண்டவ புத்திரராகிய தர்மநந்தனரும் சொல்லியிருக்கிறார். ஒவ்வொருவரும் அனுபவித்தே தீரவேண்டிய மரண அவஸ்தையை எவ்வளவு குறைக்கக் கூடுமோ அவ்வளவு குறைத்து மரணத்தை எவ்வளவு சுலபமாக்கக் கூடுமோ அவ்வளவு சுலபமாக ஏற்பட்ட சங்கம் இது. எங்கள் ஆராய்ச்சியில் சுலப மரணத்திற்காகத் தோன்றிய வழிகள் பல. அவைகளில் ஒன்று ஒரு பதார்த்தத்தையே ஓயாது தின்றுகொண்டிருத்தலாம். அதற்காகதான் இவர் கொழுக்கட்டையையே தின்றுகொண்டிருக்கிறார். ஒரே பதார்த்தத்தையே ஓயாது தின்னுவதும் முதன்முதல் சுலபமான காரியமல்ல. அதைச் சுலபமாக்குவதற்கு ஒரு வழி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது கொழுக்கட்டைகளைத் தர்மம் செய்வ தென்றும், ஏற்காது மறுக்கப்பட்ட கொழுக்கட்டைகளைத் தானே விழுங்குவதென்றும் ஒரு விரதம் கொண்டிருப்பதே. இந்த விரதம் பூண்டிருப்பதால் நாளடைவில் சதா கொழுக்கட்டை தின்னுவதும் சுலபமாகும், அப்படிச் சதா தின்னத் தின்னச் சுலப மரணமும் கிட்டும். அப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த கொழுக்கட்டை விரதத்தை இவர் பூண்டிருக்கிறார்."

இதைக் கேட்டு பீமபூபதி எழுந்து "என்ன ஐயா! சதா ஒரு பதார்த்தத்தையே தின்றுகொண்டிருந்தால் மரணம் எப்படிச் சுலபமாகும்! இதென்ன விபரீதம்!" என்றார்.

"அது எங்கள் ஆராய்ச்சி வகையில் பழகியவர்களுக்கே தெளிவாகத் தெரியும்." என்றான் கொழுக்கட்டை விரதன்.

"அப்படியானால் எங்களையும் உங்கள் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றார் அர்ச்சனராயர்.

"சரி, உள்ளே வாருங்கள், யோசித்துச் சொல்லுகிறோம்" என்றான் தாடிமனிதன்.

நால்வருமாக உள்ளே நுழைந்தார்கள். முதல் கட்டில் பலர் கூடியிருந்தனர். ஒருவன் "சுலப மரணமே சுவர்க்க சாம்பிராஜ்யம்" என்று பல்லவி பாடிக்கொண்டிருந்தான், அந்தக் கட்டைக் கடந்து,

வை பரிஸ்தி பாவங்களுக்குத் தெரியப்படுத்தவும். அந்த மழையில் உண்மையான காரணம் வெளிவரும்.

மங்களாகரன்.

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

முதற் பாடம்.

வஸ்துக்களின் மூவகை ஸ்திதி.— இந்த புலன்களால் அறியப்படுகின்ற வஸ்துக்கள் என்றுசொன்னேம். இனி வஸ்துக்களில் எத்தனை பேதங்கள் இருக்கின்றன என்றாராய்வோம். அநேக பேதங்கள் நமக்குத் தோற்றுகின்றன. புஷ்பம், கற்காலி, கல், ஜலம், வாயு இவைகளும், மற்ற வஸ்துக்களும் வெவ்வேறு வஸ்துக்களாக நமக்குத் தோற்றுகின்றன. வெவ்வேறு வஸ்துக்களாகத் தோற்றும் ஒவ்வொரு வஸ்துவும் தனித்தனி வஸ்துதானு, அல்லது ஒரு வஸ்து பல பேதப்பட்டுத் தோற்றக்கூடியதாக ஆக்கப்பட்டிருக்கிறதா, அவ்வாறுயின் எந்தெந்தப் பேதங்கள் ஒரு வஸ்துவாகும் என்ற மற்ற ஆராய்தல் ரசாயன சாஸ்திரத்தைச் சார்ந்தது. ஆனால் பௌதிக சாஸ்திரத்தில் வஸ்துக்கள் இருக்கும் ஸ்திதியைக் குறித்துத்தான் அவை கவனிப்பக்கவேண்டும். ரசாயன சாஸ்திரத்தில் வஸ்துக்களைப் பகுக்கும் விதத்தையும் பௌதிக சாஸ்திரத்தில் வஸ்துக்களைப் பகுக்கும் விதத்தையும் நன்றாகத் தெளிவாய் அறிந்து கொள்ளவேண்டும். வைரக்கல்லும் அடுப்புக்கரியும் ஒரே வஸ்து என்று ரசாயன சாஸ்திரம் சாதிக்கிறது. ஆனால் வைரம் மிக உறுதியுள்ளதாகவும் காந்தி வீசுவதாகவும் இருக்கிறது. அடுப்புக்கரியோ மிகச் சுலபமாய் நொறுக்கக்கூடியதாகவும் கன்னங்கரேலென்று இருக்கிறது. ஆகையால் வைரமும் அடுப்புக்கரியும் அவையிருக்கும் ஸ்திதியில் மிகுந்த பேதப்பட்டிருக்கின்றன. வைரத்தைப்போற் செய்யப்படும் மெழுகு, வைரங்களைய கண்ணாடிக் கற்கள், வைரத்தைப்போல் உறுதியுள்ளதாயிட்டாலும், அவை யிருக்கும் காந்திவீசும் ஸ்திதியில் வைரத்தை ஒத்திருக்கின்றன. ஆனால் ரூக்கத்தில் வைரமும் போலிவைரமும் பிரிக்கப்பட்டவை என்று ரசாயன சாஸ்திரத்தால் அறியக்கூடும். ஆகையால் வஸ்துக்களிருக்கும் ஸ்திதியை முன்னிட்ட பேதங்களை ஆராய்வதே இந்த விஷயத்தை அவ்வாறு சற்றுவேறித்தாலும் அநேக பேதங்களிருப்பதாகத் தெரிகிறது. கடின வஸ்துக்கள், பிராகாச வஸ்துக்கள், கரிய வஸ்துக்கள், மிருதுவான வஸ்துக்கள், வெண்ணிறமான வஸ்துக்கள், நீர்வஸ்துக்கள் என்றவாறு அநேக பேதங்கள் நமக்குத் தோற்றுகின்றன. இவற்றையும் வஸ்துக்களெல்லாவற்றையும், அவை யிருக்கும் ஸ்திதியிலும், மூன்று முக்கிய பேதங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:—

(1) திட வஸ்துக்கள் (2) நீர்வ வஸ்துக்கள் (3) வாயு வஸ்துக்கள். திடவஸ்துக்கள் புஷ்பம், காஷ்டம், சாவி, கற்கண்டு, நாற்காலி முதலியன. நீரவ வஸ்துக்கள் ஜலம், பால், எண்ணெய், தேன், கள் முதலியன. வாயு வஸ்துக்கள் நம்மைச் சுற்றியுள்ள சாதாரண வாயு, நீராவி முதலியன. இம் மூவகைப் பேதங்களில் திடநீரவ வஸ்துக்களின் பேதம் ஒவ்வொருவருக்கும் தெளிவாய்த் தெரியக்கூடியதே. வாயு வஸ்துக்களைப்பற்றி மாத்திரம் நாங்கு இன்னுஞ் சில வார்த்தைகள் சொல்வோம். நாம் சாதாரணமாய் அறியக்கூடிய வாயு வஸ்து நம்மைச் சுற்றியிருக்கும் சாதாரண வாயுதான். ஆனால் வேறு வாயு வஸ்துக்களும் உள. பெரும்பான்மை வாயு வஸ்துக்களைக் கண்ணாற் காணவியலாது. எண்ணெய் (எள், நெய்)என்ற மொழி எள்ளிலிருந்து பிழியப்படும் நெய் என்ற அர்த்தமுடையதாயினும் எள்ளிலிருந்து பிழியப்படும் வஸ்துவுக்கு நல்லெண்ணெய் என்ற சிறப்புப் பெயரும் அதற்கும் அதைப்போன்ற எல்லா நெய்களுக்கும் எண்ணெய் என்ற பொதுப் பெயரும் வழங்கப்படுவதுபோல, நம்மைச் சுற்றியுள்ள வஸ்துவிற்குச் சாதாரண வாயு என்ற சிறப்புப் பெயரும் அதற்கும் அதைப்போன்ற வஸ்துக்களெல்லாவற்றிற்கும் வாயு என்ற பொதுப் பெயரும் இந்த நூலில் வழங்கப்பெறும்.

லக்ஷணங்கள்:—லக்ஷணங்கள் என்ற மொழியை இனி அடிக்கடி உபயோகிப்போம். ஆகையால் அதை என்ன அர்த்தத்தில்உபயோகிக்கிறோமென்றும் விளக்கவேண்டியது அவசியம். சாந்தம், அடக்கம், கற்பு முதலியவை உத்தம மாதர்களுக்கு லக்ஷணம். இனிய நாதம் நல்ல வீணையின் லக்ஷணம். காமம், கவருடல், கள்ளுண்டல், வஞ்சித்தல் முதலியவை தீய புருஷர்களது லக்ஷணம். இனிமையான குரல் குயிலின் லக்ஷணம். அதிகாலையில் கூவுவது சேவலின் லக்ஷணம். மணம் புஷ்பத்தின் லக்ஷணம். நாலுகாலிருப்பது நாற்காலிக்கு லக்ஷணம். கருமைநிறம் காகத்திற்கு லக்ஷணம். ஒளி தீபத்தின் லக்ஷணம். ஆகையால் லக்ஷணமென்பதென்ன? உத்தம ஸ்திரீகளெல்லோருக்கும், நல்ல வீணை யெல்லாவற்றிற்கும், தீய புருஷரெல்லோர்க்கும், எல்லாக் குயில்களுக்கும், எல்லாச் சேவல்களுக்கும், எல்லாப் புஷ்பங்களுக்கும் எல்லா நாற்காலிகளுக்கும், எல்லாக் காகங்களுக்கும், எல்லாத் தீபங்களுக்கும் விசேஷமாயமைந்துள்ள தன்மைகள், அல்லது அவைகளில் நிகழும் காரியங்களே அவைகளது லக்ஷணங்கள் என்னப்பட்டன. தன்மைகள் அல்லது காரியங்கள் என்றதனால் இரண்டும் ஒன்றாகுமா என்று சிலர் யோசிக்கலாம். சற்றுக் கூர்ந்து யோசித்தால் இரண்டும் ஒன்றே என்பது புலப்படும். இனிமையாகப் பாடுவது குயிலின் தன்மை என்றால் என்ன? இனிமையாகப்பாடுவது குயிலினிடம் நிகழும் காரியம் என்றால் என்ன? அவ்வாறே நாலுகாலிருப்பது நாற்காலியின் தன்மை அல்லது நாற்காலியில்

ஐரோப்பாக்கண்ட சரித்திரம்.

(193-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு, கி. மு. ஆறும் நூற்றாண்டின் இறுதியில் கிரீஸ் தேசத்திற்கே ஒரு பெரிய விபத்து நிகழ்ந்தது. ஐரோப்பிய நாகரீகத்தை வேருடன் கல்லுவதற்கு எழுவதுபோல் கீழ் நாட்டு நாகரீகத்தாராகிய பாரசீகர் கிரீஸ் தேசத்தின் மீது படையெடுத்தார்கள். சிற்றாசியாவைப் பிடித்துக்கொண்டு கிரீஸின் வடபாகத்தையும் கைப்பற்றி கி. மு. 490-ல் டேரயஸ் என்ற பாரசீக வரசன் தென் கிரீஸின் மீது ஒரு சைனியத்தை ஏவினான். ஆனால் அது மாரதான் என்ற களத்தில் முறியடிக்கப்பட்டது. கி. மு. 480-ல் ஷெர்ஸீஸ் என்ற அரசன் மறுபடியும் பலத்த படையுடன் கிரேக்கர்களை எதிர்த்தான். சகல கிரேக் நகரங்களும் ஸ்பார்டவைத் தலைமையாகத் தேர்ந்தெடுத்தன. அப்பொழுதுதான் லியோனிகாஸ் என்ற ஸ்பார்டனும் அவனைச் சேர்ந்த முன்னூறு வீரர்களும் பாரசீகப் படை வெள்ளத்தைக் கலக்கி வீர ஸ்வர்க்கம் அடைந்தார்கள். அதீனியர்கள் சலாமிஸ் என்ற இடத்தில் பாரசீகக் கப்பற்படையை முடித்துவிட்டார்கள். மறு வருஷம் (479. கி.மு.) பிளாட்டிய என்ற யுத்தத்தில் பாரசீகச் சேனை சின்னபின்னமாகிச் சிலரே தப்பித்து ஓடினார்கள். பிறகு பாரசீகர்களைச் சிற்றாசியாவை விட்டும் துரத்துமாறு கிரேக்கர்கள் ஸ்பார்டவின்கீழ் ஒரு சபை கூடினார்கள். ஆனால் அக்கசபை சிக்கிரத்தில் இரண்டு பாகமாகப் பிரிந்துவிட்டது. உள்நாட்டார்கள் ஸ்பார்டவின் கீழும், துறைமுக வாசிகள் ஆதன்ஸ் கீழுமாக அமர்ந்தார்கள். இவர்கள் சகல காரியங்களிலும் வெற்றிபெற்றுப் பாரசீகர்களை அவர்கள் தேசத்திற்குள்ளாகவே அடக்கிவிட்டனர். பின்பு நாளடைவில் ஆதென்ஸ் தனது நேயர்களைக் கீழ்ப்படுத்தி ஏகாதிபத்ய நிலைமையை அடைத்து விட்டது. மற்ற நகரங்கள் பொறுமைகொண்டன. பல்த யுத்தம் நிகழ்ந்தது. முடிவில் ஆதென்ஸின் சிறகுகளைச் செதுக்கி விட்டனர். அதற்குள் ஆதென்ஸ், நாகரீக சமுத்திரத்திற்குத் தன்து சேவாகம் முழுவதையும் சமர்ப்பியாம லில்லை. அந்நகரத்தில் குடியரசு ஒங்கி, மந்திரிகளை, சீட்டுக் குலுக்கித் தேர்ந்தெடுத்து, உலகமுழுவதும் மெச்சும்படியாக ஆட்சி நடந்தது. பெரி

இருவருக்கும், காவிவஸ்திரம் தரித்துக் கையில் புத்தம் புதுப்பாழுதும் கையில் வைத்திருந்த யாரோ ஒரு சந்யாசிப் பெண்ணுக்கும், இவர்கள் எதிர்பார்த்திய பூஜைகள் யக்ஞங்கள் முதலிய ப்லவகைச் கிரியைகளுக்கும் ரூபாய் இருநூற்றறுபத்தேழையச்சில்லரை செலவுசெய்தாராம். களவுபோன பரத்நிரங்களின் விலை திட்டமாக எவ்வளவு என்று தெரியாது. சுமாராக இவ்வளவிருக்கும் என்று நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். என்ன மந்திரம்போட்டுப் பார்த்தும் களவுத் திப்பு புலப்படவில்லை. சாமான்களும் கிடைக்கவில்லை. ஆனால் மாந்திரீக சம்பந்தமான பல புது விஷயங்களைத் தான் அறிய நேர்ந்ததால் பாத்திரங்கள் களவுபோனதும் பெருத்த நன்மைக்கே என்று தான் மகிழ்ந்ததாகச் சொல்லிக்கொள்வார் பிரதாப்பிள்ளை. மாந்திரீகத்தில் இவருக்கு இவ்வளவு பிரேமையிருந்தால் நமது நண்பர் சாம்பசிவம் பிள்ளையும் மாந்திரீக விஷயங்களில் முன்பு இல்லாத ஒரு சிரத்தை திடீரென காட்டத் துவக்கினார். இப்படிக் காட்டியும் வேறுபல முயற்சிகள் புரிந்தும் ஸ்வர்ணம்பாளை மணக்கும் தன் கருத்து நிறைவேறுதலைக் கண்டு, மற்றும் என்ன சூழ்ச்சிகள் செய்யலாமென்று ஒருநாள் மாலை 4-மணிக்குத் தன்னறையில் ஒருகோடியிலிருந்து, மறுகோடிக்கு உலாவின வண்ணமே ஆலோசித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் ஒருவர் கதவைத் தட்டினார். மேற்கில் பல்லியும் சொல்லிற்று. காரிய சித்தியாகும் என்ற திருப்தியுடன் கதவைத் திறந்தார். தட்டியவர் உள்ளே நுழைந்தார்.

வந்தவர் யாரென்று நினைக்கிறீர்கள்? பிரதாப்பிள்ளைதான். சாம்பசிவம்பிள்ளை முகமலர்ந்து வெகு மரியாதையுடன் அவரை வரவேற்றார். சிறிது நேரம் யோக க்ஷேமங்களை விசாரித்துவிட்டுப் பிரதாப்பிள்ளை, "ஐயா! தங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும். காலஞ்சென்ற நாகநாதர் கோயில் பகவதியாபிள்ளை சாமான்களை இன்று வட்டக்கிணற்றண்டை எலம் போடுகிறார்கள். நான் நேரில் சென்றால் விலையை உயர்த்திவிடுவார்கள். இதோ சாமான்களின் ஜாபிதா இருக்கிறது. சாமான்களுக்கு நேரில் எனக்குப்பிரியமான விலையைக் குறித்திருக்கிறேன். அந்த விலைக்குள் கிடைக்கிற சாமான்களை எடுத்து என்னிடம் ஒப்புவித்தீர்களால் நல்ல உபகாரமாகக் கொள்ளுவேன்," என்று வேண்டிக்கொண்டு பின்பு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவதைக் கலியாண காரியமாகக் கருதிச் சாம்பசிவம்பிள்ளை உடனே புறப்பட்டு வட்டக்கிணற்றண்டை போய் எலத்தைக் கவனித்தார். தன் உள்ளத்து மாமனார் விதித்த விலைக்கு மூன்று பங்குக்குமேல் சாமான்களின் எல விலைகள் எறிவிட்டதைச் சாம்பசிவம்பிள்ளை ஒன்றும் வாங்கவில்லை. முடிவில் ஒரு செப்புக் கலயம் மிஞ்சிற்று. அதை வாங்குவதாக மாமனார் குறிக்கச்சொல்லியும் தன் கணக்

[illegible] ரூபாய்க்கு [illegible] விலைக்கு நினை முடிவில் அது பத்தரை ரூபாய்க்கு [illegible] விட்டது. லசத்துடன் தன் அறைக்குத் திரும்பினர். [illegible] மேலிருந்த முத்திரையுன்ன மூடியைப் பெயர்த் தெறிந்தார். கல [illegible] உள்ளிருந்து குப்குபுவெனப் புகை கொம்பிற்று. சாம்பவெம் கலங்கி [illegible] ழ்ந்தார். சற்று நேரத்தில் மூர்ச்சை தெளிந்து கண்ணைத் திறக்க [illegible] ரில் விருத்தாப்பியரான ஓர் அரபி நிற்கக் கண்டார். தான் வீழ்ந்த கா [illegible] ணவைக் கேட்டு, தெருவிற் சென்றுகொண்டிருந்த ஒரு மகமதியர் உபா [illegible] த்தின் பொருட்டு வந்திருப்பதாக மதித்து, "நீர் யார்?" என வினவினர். [illegible] அவரது "நான் இக்கலசத்தில் அடைத்து மிடந்த பூதம் உம் தருவால் [illegible] வெளிப்பட்டேன். உமக்கு என்ன கைம்மாறு செய்யவேண்டும்?" என்ற [illegible] "நீர் உமது ஜோலியைப் பார்த்துக்கொண்டு நடவும்" என்றார். தமது [illegible] னவர், பூதம் அதற்கு மறுத்துத் தான் அவருக்கு எவ்வகையிலேனும் [illegible] யும் செய்வதாகப் பிடிவாதஞ் செய்யவே, சாம்பவெம்பின்னர் தனக்குக் [illegible] வேண்டும் என்ற தன் அபீஷ்டத்தைத் தெரிவித்தார். உடனே [illegible] அரபி [illegible] னல் மூலமாகப் பறந்துபோய் விட்டார்.

[illegible] இதைக் கண்டு ஆச்சரியங்கொண்ட பின்னையவர்கள் முன்பு சிக்கித் [illegible] அழகிய வெனவனப் பெண்களுடன் அந்த அரபி வந்து நின்று [illegible] பெண்களில் உமக்குப் பிரியமானவர்களை மணஞ்செய்துகொள் [illegible] என்று சொல்ல சாம்பவெம்பின்னர், தனக்கு அந்தப் பெண்கள் ஒரு [illegible] வேண்டாமென்றும் பித்தாப்பின்னை மகன் ஒருவனைத்தான் விவா [illegible] செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறிவிட்டார். உடனே பூதம் [illegible] வெளியே சென்று பித்தாப்பின்னையைத் தூக்கிக் கொணர்ந்தது. ஆனல் [illegible] "காலத்தில் சாமான் எடுக்கத் தெரியாத பேருக்கு என் மகளைக் [illegible] னஞ் செய்து கொடுக்கமுடியாது" என்று பிடிவாதஞ்செய்தார். அதை [illegible] பூதம் வெகுண்டு பித்தாப்பின்னையைக் கோவேறு கழுதையாக மாற்றி [illegible]

மங்களாகரன்.

தனிப்பா.

[illegible] முதல் ஒரு நிறைந பாகத்தோடு பிரசுரிக்கப்பட்டிருக்கிற இக்கதையின் [illegible] கதை, பிரியமுள்ள நேயர்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் எழுதி முடி [illegible] ந்திருப்பருக்கு அனுப்பலாம். அப்படி அனுப்பப்படுவனவற்றில் [illegible] பத்திராதிபர் கருதும் கதை பத்திரிகையில் பிரசுரிக்கப் [illegible] எழுதியவர்க்கு நூறாய் இரண்டு பரிசாக அளிக்கப் [illegible] பிரசுரிக்கும் உரிமை பத்திராதிபரையே சார்ந்தது. [illegible] தனக்குக் கொள்ளவேண்டிய வேறு நேயர்கள் [illegible] முடிவுகளை முன்பாகவே எழுதியனுப்ப [illegible]

[illegible] ராகரன் என்ற நிருபரே கதையைப் பத்திரிகையில் முடித்துத் தருவார். நேயர்கள் எழுதியனுப்பும் கதை முடிவு 1919-ம்ஹு ஆகஸ்ட்மீ 15-ம் தேதிக்குள் பத்திராதிபரிடம் சேரவேண்டும். அதன் பின்னர் கிடைப்பவை கவனிக்கப்படமாட்டா.

ப—ர்.

சீதாகல்யாணம்.

II. விஸ்வாமித்திரர் ராமலக்ஷ்மணரை அடைதல்.

இராகம்:—"மார்கழி மாதம் திருவா திரைநாள்" என்ற மெட்டு.

16 சந்திர மதியரிச் சந்திர பூபதி சத்தியங் தலக்குரிஷி
இந்திர ஞகவீத் திருந்திடு தசரதர் எழிற்சபை யற்றனரே.

17 அன்றவர் பங்கய முகத்தொடு மன்னவர் அருந்தவர் அடிபணிந்தே
என்றனே யாட்கொள ஈண்டெழுந்தருளியதென்குலத்தவமென்றனர்.

18 வெண்கடல் வெண்மலே வெண்மல ரோனகர் விளங்குகந் பகருகரும்
தண்புனல் அயோத்தியும் தவத்தினர் இடசொழி தஞ்சமென் றனர்
[முனிவர்.

19 வேள்வியை யழித்திடுங் தீயரை யழித்திட விரைந்தனே யணுகிவந்
[தேன்.
தோள்வலி ராமனுந் தூயனேர் வீரனேத் தந்திடென் றியம்பினர்காண்.

20 பொறிகளுங் கலங்கிட இன்னுயிர் பதைத்திடப் புகன்றனர் பூபதியும்
சிறியவன் சிறிதேனும் போர்முனே யறிந்திடாச் செல்வனென் செய்
[குவனே.

21 எக்கணம் எவ்வெவர் எவ்விடர் இழைப்பினும் எமபுரிக் கேற்றுவன்
[யான்.
இக்கணம் எழுகுவீர் இக்கணம் எழுகுவீர் இயற்றிட வேள்வியையே.

22 கடுஞ்சினம் பொங்கிடக் கௌசிக மாமுனி கண்களிற் பொறிகளெழ
நெடுநில கடுங்கிட நிலத்தளோர் பதறிட நினேத்தனர் பலபலவும்.

23 சத்தின ஒண்முடி சிரத்தினி லணிந்தனே சத்தியக் கோல்கொண்டனே
கூத்திரி யாவனே கூத்திரி யாவனேச் சார்ந்ததே பிழையென்றார்.

24 பொங்கின பெருஞ்சினம் தணித்திடு வீரனைப் புகன்றனர் தவவசிஷ்
மங்கன காலமுன் மைந்தற்கு மன்னவ மாதவர் மொழிபணிவாய். [டர்

25 கண்மணி யிருவரை யழைத்திடு வீரென்ற காவலன் கட்டளையில்
பெண்மணி கௌசலே லைமைந்தனும் தம்பியும் பெரியரைப் பணிந்துகின்
[றார்.

பிள்ளைகள்.

பறவைகளில் இளிப்பிள்ளையும் விலங்குகளில் கீரிப்பிள்ளையும் தாவரங்களில் தென்னம்பிள்ளையும் இருக்கின்றன. இங்கே எடுத்துக்கொண்ட விஷயம் அப்பிள்ளைகளில் எப்பிள்ளையையு மல்ல. அவைகட்கெல்லாம் மூதன்மையாகிய மனிதப்பிள்ளைகளைப்பற்றியேயாம். மனிதப்பிள்ளைகள் என்பது மக்கட் பகுதியில் எவ்வயதுடைகுநர்க்கும் பொருந்துமாயினும் பெற்றோர் ஆதீனத்திலிருக்கும் இளம்பிராயமுள்ள பிள்ளைகளைக் கருதியே இவ்வியாசம் எழுதப்படுகின்றது.வேற்று மனிதனைக் கண்டவுடன் கள்ளன் கள்ளன் என்று அபயமிடுவது இளிப்பிள்ளையின் சிரேஷ்ட குணம். சர்ப்பத்தைப் பார்த்த மாத்திரத்தில் பாய்ந்தெழுந்து கொல்லுவது கீரிப்பிள்ளையின் பிரதம சுபாவம். தாளுண்ட நீரைத் தலையால் தருவது தென்னம்பிள்ளையின் சிறந்த லட்சணம். ஆறறிவுடைத்தான மனிதப் பிள்ளைகளோ வெனில், மேற்சொன்ன சீலத்திற்கெல்லாம் மேலானதோர் சுசீலத்தைக் கொண்டிருத்தல்வேண்டும்.

மனிதன் என்னும் வார்த்தைக்கு நிலையான நன்மையாளன் என்பது இரண்டாம் பொருள்.நன்மை சொரூபிகளே நன்மைக்குரிய குழந்தைகளைப் பெறுவார்கள். நல்லமரம் நல்ல கனி கொடுக்குமென்பது வேதவாக்கியம். நல்லவர்கள் கெட்ட பிள்ளைகளைப் பெறுவதும் அங்காங்கு நிகழக்கூடியதாயினும் பெரும்பான்மையாக நல்லவர்களே நல்லபிள்ளைகளைப் பெறுவார்கள். என்னை? "மனந்தூயார்க் கெச்சநன் ருகு மினந்தூயார்க் கில்லகன் ருகாவினை" என்பது சூத்திரம். நாளெல்லாம் நன்மையை விரும்பி நிற்கும் தம்பதிகள், கருத்தரிப்பதற்கு ஆஸ்பதமாகிய சம்சர்க்க நேரத்தில் சிறிதேர்நிய எண்ணத்திற்கு இடங்கொடுப்பாயின் கருவிற்கு அதன் உற்பத்தி ஸ்தானத்திலேயே தீயகுணம் பிடித்துவிடுமெனத் தேர்ந்த வைத்திய சாஸ்திரிகள் நிர்ணயித்துக் கூறியிருக்கின்றனர். பெற்றோர்கள் பேருண்டிக்காராகவோ, பாழும் மதபானப் பிரியராகவோ இருந்து குடிமயக்கத்திலும் பெருந்தீனிக்குப் பின்னும் கருத்தரித்தபிள்ளைகள் புத்தி தீக்ஷண்யமில்லாத உன்மத்தர்களாயிருத்தல் அதிசயமல்ல. தம்பதிகள் எந்த நேரத்தில் எப்படியிருந்தாலும் கருத்தரிக்கும் நேரத்திலென்கிலும் மாசற்றவர்களாயிருந்தாலொழியக் குற்றமற்ற சிசுக்களைப் பிறப்பிப்பது அருமையான தாயியம்.

பெறப்போகிற குழந்தையின் நிறம் அழகாயிருத்தல் வேண்டுமென விரும்பி அதற்காக் கோரோசனையையும் குங்குமப்பூ முதலானவற்றையும் அருந்திவரும் தாய்மார், சிசுவினது குணம் நன்றாயிருத்தல் வேண்டிய

வித்தியம் பிரயோசிக்கிறார்க ளென்பதைப் பெற்றோர்கள் கிஞ்சித்தேனும் நினைக்கிறதில்லை. தாங்கள் படித்த படிப்பை யெல்லாம் கடலில் கரைத்த புளிபோல் வீணுக்கிவிட்டுத் தங்கள் மக்களின் கல்வியைமட்டும், பாலோடு சேர்ந்த தேனைக் கருதுவது சாலவும் நன்றாயிருக்கிறது! மக்களுக்குத் தாம் ஓர் மேல்வரிச் சட்டம் போலிருத்தல் கல்வி யில்லாத பெற்றோரிடத்தில் காணக்கூடாதென்ப தண்மையாயினும் கற்றறிந்த பெற்றோர்களாவது தாம் பெற்றெடுத்த அருமருந்தன்ன பிள்ளைகளுக்கு ஓர் முன்மாதிரிகையான தன்மாதிரிகையாய் இருக்க வேண்டாமா? "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது" என்னும் மோனைவாக்கு இவர் மூலமாகவேனும் மூற்றுப்பெறவேண்டாமா? இன்றைக்குப் பேசத்தெரி யாத பிள்ளைகளாய் இருப்பவரே நாளைக்குப் பெண்ணம் பெரிய மேதாவி களாகி இவ்வுலகத்தைத் தாங்கும் தூண்போல் கிற்பார் என்பதை இன்னு மேன் கம்மில் அநேகர் அறியாம லிருக்கின்றனர்? இவ்வறியாமையினால் இற்றைவரைக்கும் கம்மவர்க் கேற்பட்டிருக்கும் கஷ்ட நஷ்டம் சிற்றள வல்ல. மனிதப் பிள்ளைகள் கேவலம் கிளிப்பிள்ளைக்கும் கேவலம் கிரிப்பிள் ளைக்கும் கேவலம் தென்னம்பிள்ளைக்கும் கிழ்த்தரமா யிருப்பதற்கு அவர்க ளைப் பெற்று வளர்த்த தாய்தந்தையரே ஜவாப்தாரிகள் என்பதற்குச் சற் றேனும் சந்தேகமில்லையென அறிக.

எம். பி. மஸ்கரன்ஹாஸ்.

ரசிகை

ஓர் நவீன நாடகம்.

235-ம் பக்கத் தொடர்ச்சி.

வசீகரி:—என்னக்கா, உண்மைதானா? எனக்காகவா நீ இப்படி உருகு கின்றாய்? நான் விவாகத்தை வெறுத்திருப்பதற்காகவா இப்படி உருகுகின் றாய்?

ரசிகை:—ஆமாமடி, அதற்காகத்தான். உன் இதத்தை நாடித்தான் இர வும் பகலும் சித்தனையி வாழ்ந்திருகுகின்றேன். நீ உன் விவாக வெறுப்பை வெறுத்துவிட்டாயென்று சொல்லிவிடு, உடனே நான் பழைய ரசிகை யாக மாறிவிடுகிறேன் பார்.

(மஞ்சத்தில் ரசிகை யருகே உட்கார்ந்திருந்த வசிகரி சட்டென வெழுந்து சட்டெனத் தரையில் வீழ்ந்து ரசிகையின் பாதங்களைத் தொட் டே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து கண்கள் நிறைய நீருடன் அவளை இறுகத் தழுவிக்கொண்டாள்.)

[illegible] செய்து விட்டாயடி. நீ என்னோடு கலங்கிப்
[illegible] (வேரியின் ஆலிங்கனத்திலின்றும் மெதுவாகத் தன்னை விலக்கித்
[illegible] கொள்ளுகின்றாள்.)

வசீகரி:—அக்கா! உன் அன்பே அன்பு! நீதான் என் சகோதரி, நீதான்
[illegible] தாய், நீதான் என் தந்தை, நீதான் என் உயிர்த்தோழி, நீதான் என் தலைவி,
[illegible] தான் என் ராணி. அக்கா! என் இதயத்தை நாடி, என் வாழ்க்கையை
[illegible] இனிமையாக்கவே விரும்பிச் சிந்தித்து வருகிறாய். உன் அன்பின்
[illegible] தையும் பெருந்தன்மையையும் கவனிக்குமிடத்தில், என் மனத்திற்
[illegible] கொண்டுள்ள தேச சேவையைவிட உனக்கு ஊழியஞ்செய்துகொண்
[illegible] பதே இம்மைக்கும் மறுமைக்கும் எனக்கு இணையற்ற இன்பந் தருவ
[illegible] தில், தேசசேவையை முன்னிட்டு முன்பு நான் விவாகத்தை விரும்பாத
[illegible] தேன். இப்பொழுதோ, உனது அன்பின் பெருக்கத்தைக் கண்டு,
[illegible] னேன்றும் அணுகிச் சேவித்து வாழும் ஆர்வத்தைக் கருதி, நான்
[illegible] தத்தைக் கொடிய ரசமாக வெறுக்கின்றேன். நீ உலகில் ஒப்புவமை
[illegible] பேரரசியாக மகுடம் புனைந்து வினங்க நான்—

ரசிகை:—(வசீகரியின் இதழ்களில் தன் கரத்தை வைத்தமர்த்தி)
[illegible] போதும் போதும் வசீகரி! என்னிமையினும் உன்னுடையனவாகக் கொண்டு,
[illegible] நேரிழாய் நியாயம் ஒதுகிறாய்! என் தங்கையே யாயினும் நீயல்
[illegible] என் தலைவியும் அரசியும் ஆகின்றாய். கானல்லவோ உன் பிரஜை
[illegible] ஒருவனாய். உன் செங்கோலின் செழிப்பிற்கு என்னால் இயன்ற
[illegible] உன் ஆக்ஞைப்படி உழைத்தற் குரியவன். ஆனால் வசீகரி! ஒரு விஷ
[illegible] மாத்திரம் உன் இதத்தையே கருதிச் சொல்லும் என் சொற்படி
[illegible] (வசீகரியைத் தழுவி முத்தமிட்டுத் தன் மடியிற் சார்த்திக் கொள்ளு

வசீகரி:—அக்கா! நான். இப்படி உன்னிடம் முத்தம் பெற்று உன்
[illegible] இருப்பது, நமது தாய் சார்தையன்னையின் மடியில் படுத்திரு
[illegible] போலவே இருக்கிறது. அந்த அம்மணியின் பிரதிபிம்பமாக உன்
[illegible] கருதுகின்றேன். நான் உன் குழந்தை. எப்பொழுதும் இப்படி உன்
[illegible] சார்ந்து உன்னால் பரிபாலிக்கப் படுவதையே விரும்புகிறேன். நீயோ
[illegible] மை என்ற கோடிய விலங்கைப் பூட்டிக் கொண்டு வருந்தும்படி
[illegible] அதைப்பற்றித் தானே இப்பொழுது நீ பேசப் பிடிகை

[illegible] அதைப்பற்றித்தான் உனக்குத் தக்க தலைவன்
[illegible] பெருவதைக்கோ, இப்பொழுதோ அப்
[illegible] நிற்கு முன்னால் நீ விவாகமே வேண்டாம்

மென்பதுதான் எனக்குப் பெரிய மன வேதனை. ஒன்றுக்கும் உதவாதவனா
யே என்னிடம் முத்தம்பெறுவதும் என் மடியில் சார்ந்திருப்பதும் உனக்கு
இவ்வளவு இன்பத்தையும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் தருவதாயிரு
தால், உன்னை உயிர்க் குயிராய்க் காதலிக்கும் உன் காதலன் மடியிற் சார்
ந்து சம்பாஷித்து விளையாடும் இன்பமும் மகிழ்ச்சியும் திருப்தியும் எவ்வ
ளவு பெருமிதமாக, வரம்பற்றதாக, இருக்கும்! ஐயோ வசீகரி! நீ அந்த உய
ர்ந்த பெருமிதத்தை அடைந்தால்தான் என் வாழ்க்கை எனக்கும் ரசிக்கும்.

வசீகரி:—(தனக்குள்) என் அக்காள் இன்று பேசுவதெல்லாம் வினோத
மாயிருக்கிறது. நான் எதை அருவருக்கிறேனோ, அதை மிகப் பிரேமை
யுடன் புகழ்ந்து பேசுகின்றாள். நான் விவாகத்தை வெறுத்திருப்பது அவ
ளுக்குப் பெரிய மனவேதனை என்கிறாள். இது என்ன அர்த்தம்! அவள்
மனம் விவாகத்தைப் பெரிதும் ஆசிக்கிறது என்பதைத்தான் குறிப்பாகச்
சொல்லுகிறாளோ? விவாகத்தை விரும்பித்தான் இன்றிரவெல்லாம் நித்தி
ரையின்றிச் சிந்தித்து வருந்தினாளோ? ஆம், அப்படித்தா னிருக்கவேண்
டும். என் விவாக வெறுப்பினால் இவள் என் வேதனை யடையவேண்டும்!
அது அவள் விவாக விருப்பால் விளைந்த வேதனையே. இதைப்பற்றி
நன்கு ஆலோசித்து அவசியமானால் நமது தந்தைக்குத் தெரிவிக்க வேண
டும். ஆனால் என் அக்காளுக்கு விவாகமான பின்பும் அவள் என்னிடத்தில்
இவ்வளவு பிரியமுள்ளவளா யிருப்பாளா! அவள் எப்படி யிருந்தபோதிலும்
நான் எப்பொழுதும் அவள் மடியில் இப்படிப் படுத்து விளையாடும் ஒரு
குழந்தையைப் போல் இருந்து அவள் கன்மையை மூன்னிட்டு என்
உயிரைக்கூடக் கொடுப்பேன்.

வசீகரி:—(வெளிப்படையாய்) நீ சொல்லிய விஷயத்தைப் பற்றி
நாளை அல்லது என்றேனும் விரிவாய்ப் பேசலாமக்கா. இப்பொழுது எனக்
குத் தூக்கம் வருகிறது. படுத்துக்கொள்ளலாம். ஒன்று மாத்திரம் சொல்
லுகிறேன் கேள். உனக்காக என் உயிரை வேண்டுமானாலும் அர்ப்பணஞ்
செய்வேன். தேச சேவையைப்பற்றிய எனது ஆர்வமெல்லாம் பறந்து
போய், உனது மனோபீஷ்டச் சேவையே இப்பொழுது என் மனத்தில்
பிரதானமாயிருக்கிறது.

ரசிகை:—(தனக்குள்) சரி. இன்று இவ்வளவு தூரம் இவள் மனத
தைத் திருப்பியது போதும். இப்போதே அதிகமாக நெருக்குவதும் யுக்த
மன்று. இன்று, தேசசேவையைவிட என் மனோபீஷ்டச் சேவையே
அவளுக்குப் பிரதானம் என்று சொல்லிவிட்டாள். இனிப் படிப்படியாய்
அவள் விவாக வெறுப்பை அழித்து, விவாக விருப்பை அளித்து என்
காதலன்பால் காதலையும் அவளிடத்தில் சிருஷ்டித்து என் காதலனுக்கே

வண்டியினின்றே கீழேவீழ்ந்து விட்டான். பின்பு ரோஜுண்டா ஸ்டே ஷனில் ரெயில்வே அதிகாரிகள், இரத்தம் தோய்ந்த ஆடையுடன் பிரக்ஞை யற்றுக் கிடந்த அவனை எடுத்துக் கிருப்பதி ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர் கள். அவனுக்குப் பிரக்ஞை வந்ததும் அவன் முற்கூறிய விஷயங்களைக் கூறினனாம். ரெயிலில் அவனிடம் கத்தியாவது, வேறெதேனும் கருவி யாவது இல்லையாம். அவன் தன் கைவிரல் நகத்தினால் தன் தோலைக் காயப் படுத்திக் கொண்டதாகச் சொன்னனாம்.

பரீட்சை தவறியதால் பரதேசியடைந்தான்.

ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலில் வாசித்துக்கொண்டிருந்த சுந்தரராஜன் என்ற மாணவன், ஸ்கூல் பைனல் பரீட்சையில் தவறியதால் தன் காலில் ஊஞ்சல்கொடியைக் கட்டிக் கொண்டு ஆச்ரமத்துறை என்ற இடத்திற் குப் போய், மடுவில் விழுந்து இறந்தான்.

ஒரு நாடகப் பெண்ணின் சம்பாதனை.

மோரி பிக்போர்டு என்பவள் மேல் நாட்டில் பிரசித்திபெற்று விளங் கும் ஒருநாடகப் பெண். இவள் மிஸ்டர் ஒவன் மூர் என்பவரை மணந்திருக் கிறாள். இவளுக்கு இப்போது வயது இருபத்தைந்து. தனது ஐந்தாம் பிராயம் முதல் விளையாட்டாக நடிக்கத் தொடங்கினளாம். சென்ற வரு ஷத்தில் ஒரு மாதின் சம்பளம் 50000 பவன், அதாவது 7½ லட்ச ரூபாய்.

பாலிகா பாட்சாலைகள்.

'மதராஸ் டைம்ஸ்' பத்திரிகையின் நிருபர் ஒருவர் எழுதுகிறார்:—

"இந்தியப் பெண்பாடசாலை, ஒரு விநோதமான இடம். அங்கே வந்து படிக்கும் பெண்கள் அமைதியுடனும் அடக்கத்துடனும் இருப்பார்கள். அவ ர்களுள் வயதானவர்களாயிருக்கும் பெண்கள் தங்கள் நன்றியறிதலை கண்ணீரைக் காட்டுவார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் தங்கள் உடையையும், ஆபரணங் களையும் ஒழுங்குபடுத்திக் கொள்வதிலேயே கவனஞ்செலுத்தும் பெண்கள் இராமற் போகமாட்டார்கள். சில பெண்கள் புத்தகங்களையும் எழுதுகோல் களையும் ஜாக்கிரதையாகப் பையில் போட்டுக்கட்டிவைத்திருந்தாலும் பாட த்தைக் கவனிப்பதில்லை. இந்தியச் சிறுமிகளுக்காக இன்னும் பல பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்த முடியாமலிருத்தல் விசனிக்கத்தக்கது. ஆனால் அரசா ங்கத்தாரிடம் உதவிச் சம்பளம் பெறுமல் பள்ளிக் கூடங்களை நடத்தும் உபாத்தியாயர்கள் கல்வி இலாகா விதிகளின்படி நடக்கவேண்டு மென்ற நியதியின்றி அயேச்சையாகக் கற்பித்து வரலாம். மூளைகளெல்லாம் ஒரே அளவையிலும் அளவுகளும் இருக்கவில்லை யென்பதைக் கல்வி இலாகாதார் அறிந்து கொள்ளுதல் வேண்டும். கூர்மையான புத்தியுள்ள குழந்தைகள் சில பள்ளி நேரங்களில் கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்களை மந்த புத்தியு ள்ள குழந்தைகள் சில நாட்களிலேயே கற்றுக் கொள்ளுதல் கூடும். ஒரு

26 AUG 1919

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள்,
ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள்,
இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக
வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின்
ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பருவம். 1. | கலியுகாப்தஹ 5021. சித்தார்த்தஹ சித்திரைமீ. கொல்லமாண்டு 1094 மேஷமீ. இ. பி. 1919-ம்ஹ ஏப்ரல்மீ. | மழை 8.

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

இரண்டாம் பாடம்.

அசைவு, அமைதி. அசைவு என்றால் என்ன? இது யாருக்குத்தான் தெரியாது? ஆயினும் இந்நூல் சம்பந்தமான ஒவ்வொரு மொழியையும் தெளிவாக வரையறுக்கவேண்டியதாகையால் யாவருக்கும் தெளிவாக விளங்கக்கூடிய அசைவு என்பதையும் வரையறுத்துச் சொல்வோம். ஒரு வஸ்து இடம் மாறும் தன்மைதான் அசைவு. அவ்வாறு இடம் மாறும்பொழுது அந்த வஸ்து அசைவிலிருக்கிறது என்கிறோம். ஓடுகின்ற ரெயில் வண்டித் தொடர், காலாலெற்றப்பெற்ற பந்து, மேகத்திலிருந்து விழுகின்ற மழைத் துளிகள் முதலியன அசைவிலிருக்கின்றன. ஒரு வஸ்து அசைவற்றிருக்கும்பொழுது, அஃதாவது ஒரே இடத்திலிருக்கும்பொழுது அது அமைதியில் இருக்கிறது என்னப்படும். அமைதி என்ற பதம் அசைவற்ற தன்மை என்ற அர்த்தத்தைமாத்திரம் இந்த விடத்தில் குறிக்கிறது.

அமைதியே. பூமி, தன்னைத்தானே சுற்றல் சூரியனைச் சுற்றல் என்ற இரட்டை அசைவுக் குட்பட்டிருக்கிற தாகையால், பூமியிலுள்ள அசையும் வஸ்துக்களெல்லாம் தமது அசைவோடு பூமியின் இரட்டை அசைவுக்கும் உட்பட்டிருக்கின்றன. இவ்வாறு பல அசைவுக்குட்பட்ட ஒரு வஸ்துவின் மொத்த அசைவு அல்லது தனி அசைவைக் கவனிக்கவேண்டுமாயின் ஆகாய வெளியில் ஒரு இடம் குறிப்பிட்டு அந்த இடத்திலிருந்து பல அசைவுகளுக்குட்பட்ட வஸ்துவின் அசைவுகளைக் கவனிக்கவேண்டும். அம்மாதிரி இடம் ஆகாய வெளியில் குறிப்பிடுவது அசாத்தியம். நாம் நமது பூமியோடு ஆகாய வெளியில் சதா எங்கெங்கேயோ அலைந்து கொண்டிருக்கிறோம். ஆகையால் நாம் கவனிக்கக்கூடும் அமைதியும், அசைவும், தாரதம்ய அமைதியும் தாரதம்ய அசைவுமே யாகும்.

இருவித அசைவு. அசைவு நேரசைவு வளைவசைவு என இருவகைப்படும். சற்றும் வளைதலின்றி நேராகச் செல்லும் அசைவு நேரசைவு. உதாரணம், உயரத்திலிருந்து ஒரு கல் விழுதல், பீரங்கிக் குண்டு பாய்தல் முதலியன. நேரசைவு அல்லாத அசைவு வளைவசைவு ஆகும். உதாரணம், கடிகார முட்களின் அசைவு, சக்கரத்தடியின் அசைவு முதலியன.

வேகம். இனி, வேகம் என்றால் என்னவென்று கவனிப்போம். ரயில் வண்டி அதி வேகமாய்ப் போகிற தென்கிறோம். நத்தை வேகமாய்ப் போகிறதென்று சாதாரணமாய்ச் சொல்வதில்லை. ஆனால் கடிகார முட்களைவிட நத்தை அதிக வேகமாய் நகர்கிறது என்றும் சொல்லுகிறோம். ஆகையால் நத்தையின் நகர்தலுக்கும் வேகம் உண்டு. அவ்வாறே கடிகார முட்களுக்கும் வேகம் உண்டு. அசைகின்ற ஒவ்வொரு வஸ்துவுக்கும் வேகம் உண்டு. ஒரு அசைவில் வேகம் மிகக் குறைந்திருக்கலாம். ஒரு அசைவில் அதிகமாயிருக்கலாம். ஆகையால் அசைவின் உக்கிரம் அல்லது அளவுதான் வேகம் என்னப்படுகின்றது.

ஒரு வஸ்துவினது அசைவின் வேகத்தை நாம் திட்டமாய் அறிந்துகொள்ளவேண்டுமாயின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு தூரம் அது அசைகிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு மணி நேரத்தில் ஒரு ரயில் வண்டித் தொடர்

முடிவதற்குள் சென்றால் அந்த வண்டித் தொடரின் வேகம் ஒரு மணிக்கு முப்பது மைல் என்று சொல்லவேண்டும். அல்லது ஒரு விநாடிக்கு அரை மைல் என்னவேண்டும். ஒரு பிரங்கி குண்டு ஒரு விநாடியில் 1000 அடி தூரம் பாய்ந்தால் அது விநாடிக்கு 1000 அடி வேகமுள்ளது என்னவேண்டும். அவ்வாறே ஒரு சதையின் வேகதையும் அசைன்ற ஒவ்வொரு வஸ்துவின் வேகதையும் குறிக்கவேண்டும்.

மாறுத வேகம், மாறும் வேகம். ஒரு செயில்வண்டித் தொடர் புறப்பட்ட ஒரு நிமிஷத்தில் அரை மைல் தூரம் ஓடி அதே வேகத்தோடு ஓடினால் மறு நிமிஷத்தில் அரை மைல் தூரமும் அதற்கடுத்த ஒவ்வொரு நிமிஷமும் அரை அரை மைல் தூரமும் செல்லும். அவ்வாறு ஓடும் வண்டித்தொடரின் வேகத்திற்கு மாறுத வேகம் என்று பெயர். இதை ஏக வேகம் என்றுஞ் சொல்லலாம். ஒரு செயிலவண்டித் தொடர் புறப்பட்ட முதல் நிமிஷத்தில் 800 கஜ தூரமும் அடுத்த நிமிஷத்தில் 1000 கஜ தூரமும் அதற்கடுத்த நிமிஷத்தில் 1500 கஜ தூரமும் ஓடி, இவ்வாறு ஒவ்வொரு சமமான காலவளையிலும் அது ஓடும் தூரம் வேறு படுமாயின் அதன் வேகம் மாறும் வேகம் என்னப்படும்.

சராசரி வேகம். முற்கூறிய உதாரணங்களில், ஏக வேகத்தோடு ஓடும் வண்டித் தொடர் ஒவ்வொரு நிமிஷத்திலும் அரை அரை மைல் தூரம் செல்வதால் அதன் வேகம் நிமிஷத்திற்கு அரை மைல் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் மாறும் வேகத்தோடு ஓடும் வண்டித் தொடரின் வேகத்தை எப்படிக் குறிப்பிட்டுக் கூறுவது? முதல் நிமிஷம் 800 கஜம், இரண்டாவது நிமிஷம் 1000 கஜம், மூன்றாவது நிமிஷம் 1500 கஜம் என்றவாறு ஒவ்வொரு நிமிஷமும் அது ஓடிய தூரங்களைக் குறிப்பிடாமல் அதன் மாறும் வேகத்தை வேறு விதமாய்ச் சுருங்கச் சொல்லவதுண்டு. மூன்றுமணி நேரத்தில் அந்த வண்டித் தொடர் ஓடியிருந்த தூரம் 72 மைல் ஆயின், அந்த மூன்றுமணி நேரத்தில் அது மணிக்கு 24 மைல் சராசரி வேகத்தோடு ஓடி யதாகச் சொல்லலாம். அல்லது நிமிஷத்திற்கு 104 கஜ சராசரி வேகத்தோடு ஓடி யதாகச் சொல்லவேண்டும். 1 மைலுக்கு 1760 கஜம், ஒரு மணிக்கு 60 நிமிஷம்

பெருகும் வேகம், குறுகும் வேகம். அசைன்ற ஒரு வஸ்துவின் வேகம் அதிகரித்துக்கொண்டேயிருந்தால் அந்த வேகம் பெருகும் வேகம் என்னப்படும். சாதாரணமாய் செயில்வண்டித் தொடர்கள் ஒரு ஸ்டேஷனை விட்டுப் புறப்படும்பொழுது பெருகும் வேகத்தோடு சென்று சற்றுநேரத்திற்குப் பின்புதான் ஏக வேகத்தோடு செல்லுகின்றன. ஒரு வஸ்துவின் வேகம் குறைந்துகொண்டேயிருந்தால் அந்த வேகம் குறுகும் வேகம் என்னப்படும். ஒரு செயில்வண்டித் தொடர் ஒரு ஸ்டேஷனை அணுகி அங்கே நிற்பதற்காக வரும்பொழுது குறுகும் வேகத்தோடு வருகின்றது.

ஜடத்தன்மை, சக்தி. ஜடத்தன்மை வாய்ந்திருத்தல் வஸ்துக்களின் லக்ஷணங்களி லொன்று என்று முன் பாடத்திற் சொன்னேம். வஸ்துக்கள் தாமாகவே யாதொரு மாறுபாடும் அடையா. ஆகையால் அமைதியிலிருக்கும் ஒரு வஸ்து தானாகவே அசையாது. அவ்வாறே அசைவிலிருக்கும் ஒரு வஸ்து தானாகவே அமைதியைப் பெறாது. வஸ்துக்களின் இந்த லக்ஷணத்தைத் தமோ குணம் என்றுஞ் சொல்லலாம்.

வஸ்துக்களின் ஸ்திதியை மாற்றுகின்ற காரணத்திற்குச் சக்தி என்று பெயர். வஸ்துக்கள் தமோ குணமுள்ள வாதலின் யாதேனும் ஒரு காரணத்தாலன்றி யாதொருமாறுபாடு மடையா. அமைதியிலிருக்கும் ஒரு வஸ்துவை அசையச் செய்வதற்குச் சக்தி வேண்டும். அசைவிலிருக்கும் ஒரு வஸ்துவை அமைதியிலிருக்கச் செய்வதற்கும் சக்தி வேண்டும். ஒரு வஸ்துவின் வேகத்தைப் பெருகச் செய்வதற்கும் சக்தி வேண்டும். குறுகச் செய்வதற்கும் சக்தி வேண்டும். சக்தியின்றி அமைதியிலிருக்கும் எந்த வஸ்துவும் அசையாது, அசைவிலிருக்கும் எந்த வஸ்துவும் அமைதியுறாது, எந்த அசைவின் வேகமும் பெருகாது, எந்த அசைவின் வேகமும் குறுகாது.

தென்னமரத்தில் காம்பு இற்ற தேங்காய் தானாகப் பூமியில் விழுவதாகத் தோன்றினும், அது தானாக விழவில்லை. ஒரு சக்தியே அதை விழச் செய்கிறது. சிறுவ னொருவனால் பூமியி லருட்டப்பெற்ற கோலிக்குண்டு உருண்டுருண்டு சென்று சற்று நேரத்தில் நின்று விடுகிறது. சிறுவனது கைவிரல்களின் சக்தி

போன காலமணி நேரத்துக்குள் நான் அழுதுவிட்டேன். எனக்குப் பய மாயும் லஜ்ஜையாயு மிருந்தது.பின்பு உபாத்தியாயர் பல அன்பான வார்த் தைகள் சொல்லி என்னைத் தேற்றினார். பள்ளிக்கூடத்தில் சிறுவர்களு டைய இரைச்சல்கள், ஓட்டங்கள், ஆட்டங்கள்,வாய்ச்சண்டைகள்,கைச்சண் டைகள் ஒன்றும் எனக்குப் பிடிக்கவேயில்லை. இந்த பாழும் பள்ளிக்கூ டத்தை விட்டு அம்மாளிடத்தில் போக எப்பொழுது மணி அடிக்கும் என்று எண்ணிக்கொண்டே யிருப்பேன். பாடசாலை எனக்கு ஒரு சிறைச்சாலை யாகவே தோன்றியது. ஆனல் காளடைவில் பள்ளிக்கூடத்தின்பால் எனக் கிருந்த வெறுப்பும் பயமும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது. நான் என் பாடங்களை எப்பொழுதும் ஒழுங்காய் வாசித்துக்கொண்டு வருவேன், உபாத்தியாயர் போதிப்பதை யெல்லாம் மிகக் கவனமாய்க் கேட்பேன். ஆகையால் உபாத்தியாயர்கள் என்னிடம் விசேஷ அபிமானங் கொண் டனர். அவர்கள் பல அன்புரை கூறி என் புத்தி நுட்பத்தையும் உழைப் பையுங் கொண்டாடியது, கல்வி அபிவிர்த்தியில் எனக்குப் பொங்குகின்ற உருசியையும் அழியாத ஊக்கத்தையும் அளித்தது. அன்றியும் சாந்த குண முள்ள சில சிறுவர்களோடு விளையாடிக் களிக்கவும் கற்றுக்கொண்டேன். இவ்வாறுகப் பள்ளிக்கூட வாழ்க்கையில் எனக்கிருந்த பயமும் வெறுப்பும் முற்றுந் தொலைவதற்கு ஒரு வருஷம் சென்றது.

வாய்மை, அடக்கம், அற்பப் பிராணிகளிடத்திலும் இரக்கம் என்ற குணங்களை என குழந்தைப்பருவத்திலிருந்தே என் உள்ளத்தில் ஆழப் பதித்து வளர்த்தனள் என் அம்மாள். ஆகையால், மலரில் மணமும், நெருப் பிற் சூடும் விளிர்ந்திருப்பதுபோல் இந்த நற்குணங்கள் என்னைப் பிரியாத இயற்கைக் குணங்களாயின. என் சரித்திரத்தில் பல இடங்களில் இவ்வாறு நற்புகழ்ச்சி கூறும்படி நேரிடும். நேயர்கள் கூமிப்பார்களாக. பள்ளிக்கூடத் தில்தான் நான் சில நல்ல சிறுவர்களோடு விளையாடுவேன். வீட்டுக்கு வந் தால் என் அம்மாளோடும் தங்கையோடும் உரையாடுவதும், என் தகப்பனுர் ஆஞ்ஞையின்படி தேகப்பயிற்சி செய்வதும், என் பாடங்களை வாசிப்பதுந் தான என் வேலை.

[ஆசிரியனுரை: கதாநாயகன் இவ்வாறு தன் வீட்டு வாழ்க்கையையும் பாடசாலை வாழ்க்கையையும் பற்றிய இன்னும் பலவிஷயங்களை விரிவாகக் கூறியிருக்கின்ருன். அவைகளை விட்டுவிட்டுக் கதையைச் சார்ந்த முதல் முக்கிய சம்பவத்தைச் சாற்றத் தொடங்குகின்றேன்.]

நான் 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன். காலேஜில் வாசித்துக்கொண்டிருந்தேன். வயது பதினெறு. புங்குனி மாதம் ஒரு நான் மாலைப்பொழுதில் காலேஜிலிருந்து இடது கையில் புத்தகங்களோடும் வலது கையில் குடையோடும், வீட்டை நோக்கிக் கடைத்தெரு வழியாக

போய் வந்துவிடுவதாகச் சொன்னேன். "போய்வா, பத்திரமாய்ப் போய்ப் பத்திரமாய் வா" என்றாள் என்னம்மாள். கோயிலுக்கு வந்தேன். கொலு மண்டபத்தில் ஸ்திரீகள் ஒரு புறமாகவும் புருஷர்கள் ஒரு புறமாகவும் கூடியிருந்தனர். புருஷர்களோடு நானும் நின்றுகொண்டிருந்தேன். சற்றுநேரத்தில் ஒரு குழப்பம் நிகழ்ந்தது.

ஸ்திரீகள் இருந்த இடத்திற் கருகே கற்பூரம் கபகப வென்று எரிந்து கொண்டிருந்தது. பேதைமையும் உவகையும் தேஜசும் பிரகாசிக்கும் முகத்தோடு ஒரு பாலிகை, சன்னிதிக் கெதிரே யிருந்து ஸ்திரீகளிருக்குமிடத்தை நோக்கிக் கற்பூர ஜ்வாலைக்கு மிகச்சமீபமாக ஓடிவந்தாள். அவள் வந்த அவசரத்தில் அவளது அழகிய ரோஜாநிறத் தாவணியின் முன்றூலை அலிந்து கற்பூர ஜ்வாலையில் விழுந்துவிட்டது. "ஹாங்! ஹாங்! ஹாங்! ஹாங்!" என்றனர் சிலர். 'மண்ணெடுத்து வாருங்கள்! மண்ணெடுத்து வாருங்கள்!" எனக் கூவினர் சிலர். "தீயே படுத்துப் புரளம்மா" என்றனர் சிலர். இவை போன்ற பலவித தொனிகளினால் பெருங் குழப்பந்தானுண்டாயிற்று. சிறுமி முதன்முதல் தன் தாவணியை உதறினாள். அதில் ஜ்வாலை அதிகமாகப் பரவிற்று. "அம்மா! அம்மா!" என்ற குரலுடன் சிறிது தூரம் ஓடினாள். பின்பு மதிமயங்கித் தீயே உட்கார்ந்துவிட்டாள். ஜ்வாலை குபு குபு வென அவள் தாவணி வழியாய் ஏறி அவள் தரித்திருந்த சட்டையிற் பற்றிக்கொண்டது.

அத்தியாயம் 3.

"சரிதான், பெண்ணின் உடைகளில் நெருப்புப் பற்றிக்கொண்டது. அந்த நெருப்பை ஜனகராஜன் அணைத்து அப்பெண்ணைக் காப்பாற்றிய தாகத்தான் கதை அமைந்திருக்கவேண்டும்" என்று கதாநேயர்களிற் பெரும் பான்மையோர் முன்னத்தியாயத்தைப் படித்து முடித்தவுடனேயே நிச்சயித்திருப்பார்களென்று எனக்கு நன்றாகத் தெரியும். கட்டுக்கதை எழுதுவோர் தங்கள் நேயர்கள் நினைக்கக்கூடியதற்கு முற்றும் மாறாகக் கதையின் பற்பல அங்கங்களை அமைப்பதில் தங்கள் கருத்தையெலாஞ் செலுத்தி எழுதுவர். ஆனால் இது கட்டுக்கதையன்று. என் சொந்தச் சரித்திரம். நேயர்கள் முன்னமே நிச்சயித்திருக்கும் விஷயமே உண்மையில் நிகழ்ந்த சம்பவ மாகையால் அதன் விவரங்களைக் கூறுகிறேன்:—

ஜ்வாலை அவள் சட்டையிற் பற்றிக்கொண்டது. அப்பொழுது என் சித்தம் இருந்த நிலைமையை என்னாலேயே இப்பொழுது நினைத்தறிந்து கொள்ள இயலவில்லை. வெறிகொண்டவனைப்போல் உடனே அவளருகே ஓடினேன். ஒரு குழந்தை ஒரு பொம்மையைத் தூக்குவதுபோல் மிகத்

அவளிடத்தை விட்டு நீங்கி என் இல்லமுகமாகச் சென்றுவிட்டேன். நான் புரிந்த செயல்கள் யாவற்றிற்கும் காரணம் என் அம்மாள் என்னிடத்தில் வளர்த்த இரக்கம் என்ற குணமேயன்றி வேறன்று. தண்ணீரில் மூழ்கிய தால் பிராஜ்ஞை யற்றிருந்தவர்களுக்கு, பிராஜ்ஞை வருவிக்க அவர்கள் நாசி வழியாகவும் வாய் வழியாகவும் தண்ணீரை உறிஞ்சி வெளிப்படுத்த வேண்டு மென்பதும், நெருப்பினால் வெந்த தேகத்துக்கு வாழைப்பட்டைச் சாறு பூசவேண்டுமென்பதும் என் அம்மாளிடமிருந்து நான் கற்றுக்கொண்ட வைத்தியப் பக்குவங்கள்.

வீட்டுக்கு வந்தேன். கோயிலில் நிகழ்ந்ததை என் பெற்றோர்களுக் குக் கூறினேன். என் தந்தைமாத்திரம் என் துணிவிற்காக என்னைச் சிறிது கண்டித்தார். என் அன்னையோ பூரிப்பெய்தினள். என் தகப்பனார் என்னை விட்டகன்றவுடன் என் அம்மாள் என் பரோபகாரத் துணிகரத்தைப் புகழ் ந்து என் கன்னத்தில் எனக்கு ஒரு முத்தங் கொடுத்தாள். நான் பேராநந்த மடைந்தேன். குழந்தைப் பருவத்தில் என் அம்மாள் முத்தத்தில் எனக் கிருந்த பிரேமை நான் பெரியவனையும் என்னைவிட்டு நீங்கவில்லை. என் தங்கை காந்திமதியோ அந்தச் சாவித்திரி என்ற பெண் தன்னோடு பாட சாலையில் வாசிக்கிற பெண் என்றாள். ஒரு விஷயம் முன்னமே சொல்ல மறந்துவிட்டேன். அதை நமது நேயர்களும், நான் சொல்லாமலே அறிந் திருக்கலாம். ஆயினும் நான் கூறவேண்டிய கடமையை நிறைவேற்றி விடுகிறேன். என்ன விஷய மென்றால், பங்குனி மாதம் ஒரு நாள் மாலை நான் காலேஜிலிருந்து வரும் வழியில் காற்றுமழையின் கொடுமையிலிருந்து ஒரு பாலிகையைப் பாதுகாத்து அவள் வீட்டுவரையில் அவளை அழைத்துச் சென்றேனே, அந்தப் பேதையைத்தான் நெருப்பிலிருந்தும் நானே காப் பாற்றும்படி ஈசுவரி நியமித்தாள்.

மறுநாள் காலேஜுக்குப் போனேன். அரிவையராய்ப் பிறந்தோர் அல் லலே படுவதற் கியைந்தவாறு பலவித விசித்திரக் கொள்கைகளும், ஆசாரங் களும், கம்பிக்கைகளும் நிறைந்த இந்த நாட்டில் பலர், பயனற்ற இழிந்த பரிகசப் பேச்சுக்களை நவ நவமாகப் பேசுவதில் தேர்ந்தவர்களல்லவா. ஆகை யால் முந்திய இரவு ஜோதிலிங்கேசுவரர் கோயிலில் நடந்த சம்பவத்தைப் பற்றி என்னை நோக்கி என் தோழர்கள் எழுபத்தெட்டுப் பரிகச மொழி களைப் பகர்ந்தனர். அவற்றையெல்லாம் பொறுமையராய்ச் சகித்துக்கொண்டு மாலையில் வீட்டுக்கு வந்தேன். வந்த சற்று நேரத்திற்குள் எங்கள் வீட்டு வாசல்முன்பு ஒரு வண்டி வந்து நின்றது. சுமார் 38 வயதுள்ள ஒருவர் அதிலிருந்து இறங்கி எங்கள் வீட்டினுட் புகுந்தார். அதை மாடியிலிருந்து சாளரவழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்த நான் உடனே கீழே இழிந்து

பேற அவர் எதிரொண்டேன். என்னைக் கண்டதும் அவர் "நீங்கள் தானே சேத்தில் கோயிலில் என் பெண்ணைக் காப்பாற்றியவர்கள்?" என வினவினர். "அதற்கென்ன! உமக்கம் வாருங்கள்! உள்ளே வந்து உட்காருங்கள்" என்று நான் பெருகுழப்ப முற்ற சித்தத்தோடு கூறினேன். அவர் "உங்களைப் பெற்றவர்கள் பாக்யமே பாக்யம். உங்கள் தகப்பனாரைப் பார்க்க விரும்புகிறேன். எங்கே அவர்?" என்றனர். "தற்சமயம் அவர் வீட்டில் இல்லை. ஏழுமணிக்கு மேல்தான் வருவார்" எனறேன். "அப்படியானால் அவரைச் சௌகரியமாய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் இப்பொழுதே எமதுடைய வீட்டுக்கு வரவேண்டும். சாவித்திரியின் தாயார் உங்களுக்குச் சொல்லி வார்த்தைகள் சொல்லுவதற்குள் நீங்கள் மேற்று வீட்டுக்கு வந்து விடவேண்டும்." அனறியும், குழந்தையும் உங்களை அழைத்து வரும்படி பிடிவாதம் பண்ணிக்கொண்டாள். ஆகையால இப்பொழுது அவசியம் நீங்கள் என்னோடு வரவேண்டும்" எனறனர் சாவித்திரியின் தந்தை. நான் இன்ன உபாதை உறுவதென் றறியாமல தவிக்கினேன். அப்பொழுது அவர், "என்ன யோசிக்கிறீர்கள்? நீங்கள் அவசியம் வரத்தான்வேண்டும்" என்று சொல்ல நான் உள்ளே சென்றேன். என் அம்மாவைக் கண்டு விஷயங்களை அவருக்குக் கூறினேன். போய்க் கூடிய சீக்கிரம் திரும்பி வந்துவிடும்படி அவர் எனக்குக் கட்டளையிட்டார். வெளியே வந்தேன். சாவித்திரியின் தகப்பனார் வண்டியில் ஏறிவிட்டேன். வண்டி நகர்ந்தது. என்ன காரணம் தெரியவில்லை, அப்பொழுது என் உள்ளத்தில் ஒரு குதூகலம் கொண்டிற்று. ஆயினும் இப்பொழுது அந்தத் தருணத்தைப்பற்றி நினைத்தால் ஆச்சரியம் எனபது என்ன விசித்திரமானது! என்ன வலியுடைத்தானது! என்று நான் வியப்படைய வேண்டியதிருக்கிறது. ஏனெனில், முதன்முதல் சாவித்திரியை மழையிலிருந்து நான் காப்பாற்றச் செய்ததும் விதிதான். அவனே தெருப்பு ஜுவாலையினின்றும் பாதுகாத்ததும் அந்த விதிதான். அவ்விதியே என்னை வண்டியிலேறச்சி சாவித்திரியின் அகத்துக்கு அழைத்துச் சென்றதன்றி அவளது பிதா உண்மையில் அழைத்துச் செல்ல வேண்டுமென்றும் அவரை ஏவின. விதி அழைத்துச் செல்லும்பொழுது, என் மனத்தில் ஒரு கலம் குடிகொண்டிருந்ததே; அந்தப்பேதைச் சாவித்திரியால் [illegible] அந்த இன்பக்கனவோ அணுவளவேனும் [illegible] அறிந்திருந்தால அவளது குதூகல உள்ளத்தோடு அவள [illegible] செல்வேனா?

(வரும்)

ஓர் அபலை.

பாழ்ங்கிணறு.

1. சூரியன் அஸ்தமித்துச் சுமார் இரண்டு நாழிகைப் பொழுது இருக்கும். திசைகள் எட்டிலும் காரிருள் கவிந்து இருந்தது. வானத்தில் மின்னலும் மேகமும் அதிகம். மழை பெய்யும் என்றும், ஆற்றில் புது ஜலம் வரும் என்றும், எண்ணுதற்குப் போதுமான ஹேது இருந்தது. என்றாலும், எதிர் பாராத பெருங் காற்று தோன்றி, மேல் திசையிற் கூடியிருந்த கரு மேகத்தை நாலா பக்கங்களிலும் பரந்து ஓடச் செய்து விட்டது. அப்பொழுது, பொழுது போக்கின் நிமித்தம் யாத்திற்குச் சென்று இருந்தோமானும், என் நண்பர் ஒருவரும் வழக்கம்போல் இளமை கொட்டாமல், மேற்றிசை வானத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தோம். தோன்றித் தோன்றி மறைந்து கொண்டேயிருந்த மின்னலின் அழகிய காக்ஷியும், அதன் பின் நோந்த வொரு சம்பவமும் எல்லோர் மனதையுமகலாத் தக்கன. 'பளிச்' என்றொரு மின்னல் ஒளிவீசும்; அது பார்வைக்கு சர்ப்ப பாணம் போன்று இருக்கும்; அதனது வெள்ளிய நிறத்தையும், குப் குப் என்று அடிக்கடி தோன்றி மறையும் ப்ரகாசத்தையும் பார்த்துப் பிரமானந்தம் கொண்டு ஆஹா என்று வியப்பு எய்துவேன். உடனே அதற்கு நேர் வலது பக்கத்தில் வெகு தூரத்தில் மற்றொரு மின்னல் கப் கப் என்று எரிமலை போல் தழல் எரிக்கும்; திடீர் என்று அதைக் காணாத் திரும்புவேன்; அப்பாவி மின்னல் என்னை ஏமாற்றுவதே போல் அக்ஷணமே மறைந்து விடும். காட்டுக் குருவிக்கு ஆசைப்பட்டுக்கைக் குருவியையும் இழந்த வேடனைப் போல், மனச் சோர்வுற்று இரண்டொரு கொட்டாவி விடுவேன். ஒரு நிமிஷ நேரத்தில் மற்றொரு திக்கில் இருந்து வெள்ளித் தந்திக் கம்பி போன்ற வால்மூளைத்த நீண்ட மின்னல் ஒன்று வாயு வேகமாகச் சுமார் இருபத்தைந்து கெஜ தூரம் ஓடும்; பின் அதுவும் கரிய மேகத்தால் விழுங்கப்படும். இவ்விதம் பற்பல காக்ஷிகள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டேயிருந்தன. இந்த உலக வாழ்வும் இத்தன்மைத்தே; இன்று துன்பம், நாளை இன்பம்.—இன்று பிறப்பு, நாளை இறப்பு.—இன்று அழுகை, நாளை சிரிப்பு;

ஆனும், இன இடையே ஒருவரை மற்றொருவர் ஏமாற்று
வதிலிப்பதும், கேலிப்பதும், வெறுப்பதும் எத்தனையோ
விடங்களில் நாம் காண்கிறோம். அனைத்த கோடானு கோடானு தடவை,
இந்த உலக வாழ்க்கையின் தன்மையை நமக்கு உணர்த்தக்
கூடியே இன்று இம்மின்னல்களும், மேகங்களும் கூடிப்பேசி
விளையாடுகின்றன,' என்று நான் எண்ணினேன். உடனே
என்னவென்னமோ செய்தது. பக்கத்தில் உள்ள பனை மரங்கள்
காற்றின் உதவியால் சலசல என்றும், படபட என்றும் தாளம்
போட்டுத் தொடங்கின. அதைக் கேட்டதும் 'சரிதான்: வானத்
திலேதோ ஒரு கல்யாண வைபவம் போலும்! அது பற்றியே
இந்த மேள தாளங்களும், பாண வேடிக்கைகளும்' என்று
நினைத்து, அதை, என் அருகில் வசிப்வளாமை மேற்கொண்டு
வந்த நண்பரிடம் கூற, அவரும் 'ஆஹா! பிரகிருதாதேவி இவ்
வுலகுக்கு வேண்டும் இன்பமே..... இன்பம்' என்று ஏகாரத்தில்
ஒரு மாத்திரையை ஏற்றி எனது செவியில் தேனைப் பாய்ச்சி

இந்த மின்னற் காக்கியும் இதன் சம்பந்தமான சம்பா
ஷணமும் முடிந்த உடன் வீட்டிற்குப் போகலாம் என்று நாங்கள்
நினைத்ததை விட்டு எழுந்தோம். அப்பொழுது வெகு சமீபத்
திலுள்ள தென்னையில் இருந்து, 'ஐயோ' என்ற துக்ககர
மான பெண் குரல் கேட்டது. என்னமோ ஏதோ என்று திடுக்
கிட்டோமே உடனே அவ்விடத்தைக் குறித்து விரைந்து
சென்றோம். இருட்டோ மை இருட்டு, மணியோ சுமார் எட்டு
இருக்கும். மேடு, பள்ளம், கல், முள் ஒன்றுமே கண்ணுக்குத்
தென்படவில்லை. எனினும், இவற்றைச் சிறிதும் பொருட்படுத்
தாமல் கொடியிடை சப்தம் எழுந்த இடம் போய்ச் சேர்ந்தோம்.
அது ஒரு பாழ்வெளி; அதனுள் அல்லோல கல்லோலமாக
'ஐயோ! ஐயோ!' என்ற ஸப்தம் மீண்டும் மீண்டும்
கேட்டவண்ணம் வந்து உடனே நாங்கள் இருவரும்
முன்னும் பின்னும் பரபரத்தோம். சேறும், கல்லும், முள்ளும்
நிறைந்த அவ்விடம் இருட்குழி; ஆனால் ஏறுமா
றாகத் தெரியாதவர்களைக் கொல்லக்

றுப் போதுமான ஜலம் அதனுள் இருந்தது. தட்டுத் தடுமாறிப்
பெருங் கஷ்டப் பட்டுக் கிணற்றினுள் இருந்து அவஸ்தைப் பட்
டுக் கொண்டிருந்த ஆஸாமியைக் கரை கொண்டு வந்து சேர்த்
தோம். அப்பொழுது அவளை இன்னார் என்று தெரிந்து கொடைப்
பொருட்டே சந்திரனும் மேகமாம் திரையை நீக்கிக்கொண்டு
வானமிசைத் தோன்றலானன். அது எங்களுக்குப் பெரிதும்
உபகாரமாக இருந்தது.

3. அன்பர்களே! இந்தப் பாழும் கிணற்றிற்கு இரை ஆகப்
பார்த்த ஆஸாமி ஒரு பெண். சுமார் இருபது பிராயம் இருக்கலாம்;
நல்ல சிவப்பு நிறம்; ஸாதாரண அழகு; நீண்ட தேகம்; சற்றுப்
பருத்த உடல். 'அக்கா அக்கா' என்று இரண்டு மூன்று முறை
கூப்பிட்டோம்; பேச்சில்லை; ஆனாலும், மெல்ல மூச்சு விடுகின்
றாள். 'சரி, இன்னும் நான்கு, ஐந்து நிமிஷங்களிற் சுகமுறு
வாள்' என்று நினைத்தோம்; அந்த எண்ணமும் வரவர மாறு
பாடு உற்றது; ஏனெனில், அநேக தடவை இரத்த வாந்தி எடுத்
தாள்; பெரு மயக்கமும் கொண்டாள். மிகுந்த மன வருத்தத்து
டன் 'அக்கா, அக்கா!' என்று விளித்தேன். மெல்லக் கண்களைத்
திறந்து என்னைப் பார்த்தாள். உடனே 'அக்கா! நீயார்! ஏன் இவ்
விதம் செய்யத் துணிந்தனை?' என்றேன். அதற்கு அவள் தொட
ர்ச்சி இல்லாத சில சொற்களால் ஒருவாறு விடைதந்து மன்னிப்
பும் வேண்டினாள், நான் 'பெண்ணே! அடாது செய்தவர் படாது
படுவது நீதியே: என்னிடம் மன்னிப்புக் கேட்பது ஒழிந்து எல்
லாம் அறிந்த எம்பிரானிடம் தாழ்ந்து வேண்டிக்கொள்.' என்
றேன். அப்பொழுது அவள் விம்மாரி யெனக் கண்மாரி சொரி
ந்தாள். 'பெண்ணே! அழுதாற் பயனென்ன? சொந்தாற் பயனே
என்ன? ஆவதொன்று மில்லை.' என்று இரண்டொரு ஹிதமான
மொழிகளைச் சொன்னேன். கேட்டாளோ இல்லையோ! கண்களை
மூடிக்கொண்டாள்; சுவாசமும் நின்றது; பாவி பரலோகம் அடை
ந்து விட்டாள். பாபம்! பாபம்!.

4. அன்புமிக்க சகோதரர்களே! நமது காட்டு முன்னேற்றத்
திற் குரிய முக்கிய அங்கங்களில் ஒன்று நாது மெல்லியலார்
நிலைமை சற்றேறப் பெரிதும் நாம் உழைத்தலாம். பால்ய விவா

43. தூய கோமதி—நதி—தூய சரயுவில்
பாயும் ஒலியின் நுரைக்கண் சேட்டார் ராமலக்ஷ்மணர்.

44. சந்த நதியணைந்—தனைச்—சார்ந்த மாண்பியம்-
பந்த மொழித்தோன் பகரக் கேட்டார் ராமலக்ஷ்மணர்.

45. அகத்தை அடக்கிடும்—தெறி—அறிந்த முனியொடு
அகன்ற வேள்விக் களத்தை அடைந்தார் ராமலக்ஷ்மணர்.

46. விரும்பி யான்செயும்—உயர்—வேள்விக் காவலாய்
இருக்க வென்றே இயம்ப உவந்தார் ராமலக்ஷ்மணர்.

47. வீஸ்தீ ணம்பெறும்—பெரு—வேள்விக் களத்திற்கு
அஸ்த்ரக் கோட்டை அணியாய் அமைத்தார் ராமலக்ஷ்மணர்.

48. இன்னல் இழைத்திடும்—நிறக்—எண்ணில் அரக்கரை
மன்னன் காதன் மகிழ அழித்தார் ராமலக்ஷ்மணர்.

49. வலிய சுபாகுவின்—உயிர்—வதைத்து மாரீசனை
ஒலிக்குங் கடலுள் ஒழித்தே உவந்தார் ராமலக்ஷ்மணர்.

50. நினைத்த தனைத்தையும்—நிறை—வேற்றுங் கௌசிக
முனிவர் வேள்வி முடித்தார் மகிழ்ந் ராமலக்ஷ்மணர்.

51. மாசில் ஞானர்—உப—தேசத் தடனவர்
ஆசிர் வாதம் அடைந்தார் எங்கள் ராமலக்ஷ்மணர்.

V. அகலிகை சாபவிமோசனம்.

ராகம்:—இந்துஸ்தானி காபி. தாளம்:—ஆதி.

52. மிதிலா புரிஜனகன் புரி மெய்வேள் வியைக் காண—நிறை
மதியாளர் சூழ மைந்தி ரின்று மகிழ்ந்தே குவ மென்றார்.

53. மனத்தே யென்றும் மகிழ்வே யளி மலர்ச் சோலையை அடைந்து—
கனல்சூ ரியன் கடலாழ்ந் திடக் களாயா றினர் ஆண்டு. [கொடுக்

54. அதிகா லையி லெழுந்தே கியோர் நிறையாற் றினை அணுக—அந்த
நதிகக் கையின் கன்மான் மியம் கவின்றார் குரு முனிவர்.

55. கங்கை யகன் றிமேரு வரும் காமே கங்கள் களிக்கும்—திரு
கங்கை யுறை ஜனகன் வள நகருட் டினை அடைந்தார்.

56. இருசீ வதரை இருகைக் கொண்டி எங்கள் சிவதி செல்ல—உல
கொருசீ வதனும் ராமன் பதம் ஓர்கல் லினைத் தொடவே.

57. வில்லுங் கையு மாய்ச்செல் எங்கள் வீரன் பதம் படவே—கருங்
கல்லுந் தன தருமா றிட ஒருகா ரிகை எழுந்தாள்.

58. எழுந்தே நின்ற மங்கை எங்கள் எழில்சா மரை ஏத்திக்—காம்
தொழுதே நிற்கத் தோன்றல் வியந் நிடமா தவர் மொழிவார்.

43. தூய கோமதி—நதி—தூய சரயுவில்
பயிலும் ஒலியென் றுரைக்கப் பெற்றார் ராமலக்ஷ்மணர்.

44. சந்த நடையுடன்—தனதச்—சாந்த மான்மியம்
பந்த மொழித்தோன் பகரக் கேட்டார் ராமலக்ஷ்மணர்.

45. அகத்தை அடக்கிடும்—நெறி—அறிந்த முனியொடு
அகன்ற வேள்விக் களத்தை அடைந்தார் ராமலக்ஷ்மணர்.

46. விரும்பி யான்செயும்—உயர்—வேள்விக் காவலாய்
இருக்க னென்றே இயம்ப உவந்தார் ராமலக்ஷ்மணர்.

47. வீஸ்தீ ரணம்பெறும்—பெரு—வேள்விக் களத்திற்கு
அஸ்த்ரக் கோட்டை அணியாய் அமைத்தார் ராமலக்ஷ்மணர்.

48. இன்னல் இழைத்திடும்—நிறக்—எண்ணில் அரக்கரை
மன்னன் காலன் மழை அழித்தார் ராமலக்ஷ்மணர்.

49. வலிய சுபாகுவின்—உயிர்—வதைத்து மாரீசனை
ஒலிக்கும் கடலுள் ஒழித்தே உவந்தார் ராமலக்ஷ்மணர்.

50. நினைத்த தனைத்தையும்—நிறை—வேற்றுங் கௌசிக
முனிவர் வேள்வி முடித்தார் நிகரில் ராமலக்ஷ்மணர்.

51. மாசில் மாதவர்—உப—தேசத் தடனவர்
ஆசிர் வாதம் அடைந்தார் எங்கள் ராமலக்ஷ்மணர்.

V. அகலிகை சாபவிமோசனம்.

ராகம்:—இந்துஸ்தானி காபி. தாளம்:—ஆதி.

52. மிதிலா புரிராஜனகன் புரி மெய்வேள் வியைக் காண—நிறை
மதியாளர் மைந்தி ரின்று மகிழ்ந்தே குவ மென்றார்.

53. மனந்தே யென்றும் மகிழ்வே யளி மலர்ச் சோலையை அடைந்து—
கனற்ருரு ரியன் கடலாழ்ந் திடக் களையா தினர் ஆண்டு. [கொடுத்-

54. அதிகா லையி லெழுந்தே யியோர் நிறையாற் றினை அணுக—அந்த
நதிகங் கையின் கன்மான் மியம் நவின்றார் குரு முனிவர்.

55. கங்கை யகன் றிமிழ் வரும் காமே கங்கள் களிக்கும்—திரு
கங்கை யுறை ஜனகன் வன நறுநாட் டினை அடைந்தார்.

56. இருசே வடரை இருகைக் கொண்டு எங்கள் சிவதி செல்ல—உல
கொருசே வடனும் சாமன் பதம் தூர்கல் லினைத் தொடவே.

57. வில்லுங் கையு மாய்ச்செல் எங்கள் வீரன் பதம் படவே—கருங்
கல்லுந் தன திருமா திட ஒருகா ரிகை எழுந்தாள்.

58. எழுந்தே நின்ற மங்கை எங்கள் எழில்சா மரை ஏத்திக்—காங்
தொழுதே நிற்கத் தோன்றல் வியந் திடமா தவர் மொழிவார்.

59. அருஞ்சிமை அணங்காம் அக லிசையென் றறிவு வம்மை—மதி
மருண்டிக் திரன் புரிவஞ் சத்தில் மானக் தலை இழந்தான்.

60. இவன்தா யகர் முனிகென தமர் இற்கு வைபைச் சபித்தார்—சர்வ
புவிநா யாசா உன்பா தங்கள் போக்கிற் றதச் சாபம்.

61. என்றே யுரை குருகென சிகர் இருமைக் தரும் அணங்கும்—மகிழ்ந்
தன்றே தவ முனிகென தமர் ஆசிர் மத்தை அடைந்தார்.

62. அலர்ந்தே தவண் அணங்கை அவள் ஆன் முனிக் கரிக்து—
விடையேற் றிட்டி விஸ்வா யிச்சர் விஸ்வீ சரும் சென்றார். [அவர்

கோகிலத் தோனி.

விருந்தோம்பல்.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்ன அற்புத மொழிகள்! 'மனைத்தக்க மாண்புடைய னாகித் தற் கொண்டான் வனைத்தக்கான்' ஆக விளங்கும் பெண்மணியை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு, 'அறிவறிந்த மக்கட் பேறு' ஆகிய பெரும் பேறு உற்று அறன்வழி நின்று அன்பு பூண்டொழுகும் மாசற்ற இல்லறத்தில் இருந்து பொருளோம்பி வாழ்வதெல்லாம் எதற்காக? விருந்தினரை உபசரித்து வேளாண்மை (உபகாரம்) செய்வதன் பொருட்டுத்தான். ஆகலின் இல்வாழ்க்கை, எனைய லக்ஷணங்களை எல்லாம் இனிது பொருந்தி விளங்கினும் விருந்தோம்பலைப் பெறாத தாயின், அது பயனற்ற தாகும். ஆனால் சாதாரணமாகத் தற்போது நமது காட்டு இல்லற வாசிகள், தக்க மனைவியையும், தக்க கணவரையும்கொண்டிருக்கலிலும், பொருளீட்டலிலும், புதல்வரைப் பெறுதலிலும், தங்கள் கலைலையெலாஞ் செலுத்தித் தங்கள் கலம் தங்கள் மக்கள் நலம் இவற்றையே நாடிய சிந்தனையினராக இருக்கின்றனரே யன்றி விருந்தோம்பலின் அவசியத்தையும் மஹிமையையும் உண்மையாக உணர்ந்து அதனை மேற்கொண்டொழுகுவதால் உண்டாகும் ஒரு இன்பத்தை ஒரு திருப்தியை அநுபவிப்பார் சிலரேயாவர். ஆடிக்கொரு முறை அமாவாசைக் கொருமுறை அபூர்வமாய்வரும் தடுக்கக்கூடாத விருந்தினருக்கு விருந்திட்டதால் செலவு அதிக மாயிற்று என நினைத்து நினைத்துக் கணக்கிட்டுக்கணக்கிட்டு மனமுளையும் மாதர்களும் பருவதர்களுந்தான் அதிக மாயிருக்கிறார்கள். "போனமாதம் அந்தப் பாழும் விருந்தாளி வராவிட்டால் எனக்கு ஒரு வேஷ்டி மூக்குத்தியாவது குழந்தைக்கு ஒரு கொப்பாவது செய்திருப்பேனே" என்பன போன்ற நிந்தை நிறைந்த குமுறல்களில் சதாசனம்.

பொதுவாகத் தற்போது காட்டில் வழமை மிருந்திருக்கிற தென்பது மெய்யே. ஆனால், சகோதரி சகோதரர்களே! தினந்தினம் வந்த விருந்தை ஓம்புவார்கள் வாழ்க்கை வறுமையால் வருந்திப் பாழ்படுவதில்லை என்றும், இனிய முகத்துடன் நல்விருந்து ஓம்புவார்கள் இல்லத்தில் லக்ஷ்மிதேவி எப்பொழுதும் மனமகிழ்ந்து வசித்துக்கொண்டிருப்பாள் என்றும், விருந்தினரைத் திருப்தி செய்கபின் மீந்திருக்கிற உணவை உண்பானுடைய வினை நிலத்திற்கு வித்தும் இடல் வேண்டுமோ! (வித்து இடாதிருந்தாலுங் கூட அது செழிப்பாக விளைச்சல் கொண்டு பயன் தரும் மஹிமை பொருந்தியிடம்.) என்றும், திருக்குறள் என்ற செய்வ நூலிற் கூறியுள்ள கருத்துக்கள் வெறுமனே அலங்காரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறீர்கள்! அன்று அன்று, அவை மகத்தான உலகியற் சத்தியங்கள் என்று உள்ளத்தில் உறுதியாக உணர்வீர்களாக. ஆகலின் விருந்தோம்பல் என்னும் உயர்ந்த கடமையைப் புறக்கணித்துப் பொருளே மீதப்படுத்திச் சேர்த்து வாழலாம்' என்று எண்ணுவது முழு மடமையும் கேட்டிற் குரியது மாகும். சிக்கனமும் செல்வச் சேர்க்கையும் அவசியந்தான். ஆனால் சிக்கனத்திற்குரிய உண்மையான வழிகளைக் கொண்டு அறத்தைக் கடைப்பிடித்தொழுகுவீர்களானால் செல்வம் தானே சேருமே. விருந்தினரை தட்டித் தங்கள் சொந்த வயிறுகளையும் அரைவிருந்தினராகக் கருதி அரை வயிற்றுக்கு உண்டு பலவருஷங்களாக எச்சில்பையால் காசம்தட்டாதுபார்த்துப்பிடித்த மொத்தத்தை இனகையோடு மேற்கொண்டும் கடன் வாங்கியும் கலியாண முதலிய விசேஷங்களுக்கு ஆயிரக் கணக்காக வீண் செலவு செய்தலை நிறுத்திச் சீர்திருத்துவதில் சிக்கனத்தைச் செலுத்தக் கூடாதா! பிச்சைக்காரன் முதல் பிரபுக்கள் வரையில் நமது சமூகத்தை வசப்படுத்தி விட்ட, உபயோக மற்றதும் தீமையிவு முதலிய கசுமால ரோகங்களை விலக்கக் கூடியது மாகிய காபி பானத்தை நிறுத்தல், பிராணி வதைக்கும் பெரும்பொருட் செலவிற்கும் உரிய மாமிச உணவை அகற்றல், அனாவசியமாய், தங்கள் வரவிற்குச் சற்றுக்கூறாதாரய் நினைத்த பொழுதெல்லாம் பலவகைப் பகட்டணங்கள் செய்து வயிறு புடைக்க உண்ணுதலை ஒழித்தல், ஆகிய இவைகளில் சிக்கனத்தைச் செலுத்தக் கூடாதா! இன்னும் சிக்கனத்தைச் செலுத்தக்கூடிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை விட்டுவிட்டு இல்வாழ்க்கைக்கு இன்றியமையாததாய் விதிக்கப்பட்ட விருந்தோம்பலை விலக்குதலிலுலோ சிக்கனந் தேட வேண்டும்! கலியாண முதலிய விசேஷதகளுக்கு ஏராளமாய்ப் பொருளைச் செலவு செய்யவேண்டும் என்றும் காபி பானம், புலாலுணவு, பேருண்டி முதலியவை வாழ்க்கைக்கு அவசியம் என்றும் எந்தத் திருக்குறளில் அல்லது வேறு எந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறது? ஆனால் ஜனங்கள் இற்றை அவசியத்திலும் அவசியமாகக்

கொண்டு போற்றி, திருக்குறளில் உறைந்து உலர்ந்துபோயிருக்கிற தங்கத்
தமிழரசனே அபிஷேகம் செய்கின்றனர், என்ன ஞானம்! என்ன ஞானம்!

திரு விருத்தினர் என்பார் யார்? என ஆராயின், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான், ஆகிய ஐவகையோரை உபசரித்தல் வள்ளுவர் முன்னரை பிரண்டும் கண்ணுறு காணப்பட்டதவரை நினைத்துச் செய்யப்படுவன வாதலாலும் பின்னரை பிரண்டும் பிறர்த்துக் கொடுத்தல் எல்லாமையாலும் கடைசியாக விருந்தோம்பல் சிறப்பை யுடையதாகி அவ்விலறத்துக்கு முதலாயிற்று, என்றனர் உரையாசிரியர் பரிமேலழகர். ஆதலின், சுற்றத்தார் அல்லாத பிறமானிடரே விருந்தினர் என்பது தெளிவாகின்றது. தனக்குப் பிரதினமும் உண்டி முதலிய உபசாரணைகளும் செளரியங்களும் அமைத்துக்கொள்வது எவ்வளவு சாதாரணமோ, அப்படியே சுற்றத்தாரை உபசரித்தலையும் கருதி விட்டார்கள் நமது முதியோர்கள். தற்காலத்திலோ மிக நெருங்கிய உறவினரை எப்போதாவது இரண்டொரு தான உபசரிப்பதே விருந்தினர் உபசரணையாகக் கொள்ளப்படுகின்றது. சுற்றத்தார் அல்லாதோராகிய அதிதிகள் என்னப்படும் உண்மையான விருந்தினரை உபசரிப்பது அற்றுப் போய்விட்டது. தன் கண்ணுக்குக் கண்ணாக வளர்க்கப்பெற்ற தன் சொந்தப் புத்திரியும் அவளை மணந்த மருமகன் என்னத்தகும் மருமகனுங்கூட, தனி வீட்டில் மூன்று நாளுக்கு மேல் தங்கியிருந்தால், அவர்கள் மனதாகை இழக்கும்படி தான் நடந்துகொள்ள நேரிடும் என்பது இல்லறவாசிகள் இனிய கொள்கையாய் விட்டது. வந்த விருந்தினர் புறத்திருக்க, சாவா மருந்தாகிய தேவாமிர்தமாயினும் தனே உண்ணக்கூடாது என்று திருவள்ளுவர் தெரிவித்திருக்க, அயலத்துக் குழந்தை, சில சமயம் தன் சொந்தக் குழந்தை, எதிரே தன்னைப் பார்த்து கிடக்க அயலான் முன் இருந்தாவது அல்லது மறைந்த விடத்தேயாவது உண்ணும் உத்தமர்களும் உளர். சற்போது நிலைமை எப்படி இருக்கிறதென்பதினமும் ஒரு அதிதிக்காவது விருந்தளித்து உபசரிக்க வேண்டியது இல்லறத்துக்கு இலக்கணம் என்றும், சுற்றத்தார் மாயினும் பிரதோபாயினும் அவர்களை ஆதரித்து உபசரிக்க வேண்டியது அந்த இல்லறத்துக்கு என்றும், அப்பொழுதுதான் இல்லத்திற்கும் வாழ்க்கைக்கும் பெருமையும், இன்ப மகிழ்வில் வாழ்க்கைக்கு மெய்யின்பமும் உறுதிப் பொருளும் என்பது எனது துணிபு.

விருந்தினருக்குச் செய்யவேண்டிய உபசரணைகளை விரிவாக நமது பழைய நூல்களில் முன்னோர்கள் முக்கியமாய்ச் சுவர் அடியார்களாகிய அதிதிகளுக்குச் செய்ய உபசரணைகளை பதினெட்டு வகை உபசரணைகள் செய்ய வேண்டுமென்றும் கூறியிருக்கின்றனர். அவைகளைப்பற்றி யெல்லாம் இப்பொழுது நான் எடுத்துக் கூறுவது நமக்கும் பொருத்தமில்லை. விஷயத்தில் யாவும்

16129

ரும் அதுசரிக்கக் கூடிய இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்லிவிட்டு எனது சிற்றுரை வியாசத்தை முடித்து விடுகின்றேன்.

"மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து நோக்கக் குளையும் விருந்து" என்ற அருமைத் திருவாசகக் நேயர்கள் அனைவரும் கேட்டிருக்கக் கூடியதே. ஆகவே விருந்தோம்பலின் முக்கிய லக்ஷணம் முகமலர்ச்சியேயும். விருந்தினர் எத்தகையோ ராயினும் பிற வீட்டிற்குப் உண்ண வந்திருப்பவர் ஆதலின், தமக்கு விருந்தளிப்போர் முகத்தில் சிறிது வாட்ட மிருந்தாலும், அது தமது வருகையால் நேர்ந்தது என்று லஜ்ஜை யுற்று மனம் வருந்துவர். அவ்வாறு அவர் வருந்த விருந்தளிப்பதிலும் சும்மா விருப்பதே உசித மானது. விருந்தளிப்போர்க்கு இருக்கவேண்டிய முகமலர்ச்சி அகபூர்வமான முகமலர்ச்சியா யிருத்தல் வேண்டும். விருந்தினர் எதிரில் பெரும் புன்னகையோடு முகமலர்ந்து இருந்து சமையலறைக்குச் சென்ற, "வந்து தொலைத்து விட்டானே—என்ன செய்வது—" என்றவாறு முகத்தைச் சுளித்துத் தன் மனைவியோடு முணு முணு என்று பேசுவது முற்றும் வெறுக்கத்தக்க இழிந்த செயலாம்.

விருந்தோம்பலின் பெருமையை உணர்ந்த உன்னதமான நாகரிகம் கொண்ட புருஷோத்தமர்கள் நமது நாட்டில் ஒவ்வோரிடங்களில் உளர் எனினும் அன்னார்க்கு வாய்த்த மனைவியர் தங்கள் கணவர் பெருநோக்கங்களுக்கு இசைந்தவரா யில்லாமையால் அவ்வுத்தம புருஷர்கள் சித்த கலமெலாம் பயனின்றிப் பாழ்படுகின்றது. பெருங்குணமில்லாப் பேய் போன்ற பெண்ணொருத்தியை மனைவியாகக் கொண்ட தயாள சித்தமுள்ள அன்பன் ஒருவன் வீட்டில் ஒளவை விருந்தினளாகச் செல்ல அப்பிராட்டியும் அவளும் அவன் மனைவியினால் பட்ட அவதிகளைப் பற்றிய கதை தமிழ் நாட்டில் சாதாரணமாக யாவரும் அறிந்திருக்கக் கூடியதே. ஆதலின் விருந்தினரைச் சரியாக உபசரித்தற்கு இல்லறத் தலைவனும் தலைவியும் மன மொத்திருக்க வேண்டியது அவசியம். அதுபற்றித்தான் இல்லற வியலில் "அன்புடைமை" என்ற அதிகாரத்திற்கு அடுத்ததாக "விருந்தோம்பல்" என்னும் அதிகாரத்தை வைத்தனர் திருவள்ளுவரும். தலைவனும் தலைவியும் முதிர்ந்த அன்பினைப் பகிர்ந்து மனமொத்திருந்தாலன்றி இல்லற தருமங்கள் எதுவும் சரியாக கடைபெற தென்றல் அவற்றில் முக்கிய மானதாகிய விருந்தோம்பல் எவ்வாறு கடைபெறும்! முக்கியமாய் நமது நாட்டுப் பெண்களுக்கு உயர்ந்த கல்வியறிவும் விசாலித்த நோக்கங்களும் இருந்தால், பெண்பாலிடத்து இயற்கையாக உள்ள வசிகர சக்தியினால், அவர்கள் தங்கள் கணவரிடம் இதமாகப் பேசிப் பழகி விருந்தோம்பல் முதலிய தக்க நல்ல கருமங்களுக்கு அக்கணவரை இணங்கச் செய்து விடுவார்கள். மனைவியே சற்கருமங்களிலிருந்து வழுவாமல் கொண்டு உன்னைப் பிசாசமாய்

இருக்கால் அவன் மனத்தைத் திருப்பல் அவன் கணவனாலும் இயலாதி, வேறு யாராலும் இயலாது.

மூன்றாவதாக மனமொத்த இல்லறத் தலைவனும் தலைவியும் அக மூன்று மனம் இன் சொற்கள் பல கூறி விருந்தினர்களுக்கு இருக்கை வசதி உண்ண வசதி தூங்குவதற்கு வசதி முதலிய பலவித சௌகரியங்களும் நன்கமைக்க வேண்டும். எப்பொழுதும் வீட்டுத் தலைவியே தன் கையால் போஜனம் பரி மாறல் வேண்டும். வேலைக்காரிகளையும் குழந்தைகளையும் விட்டுப் பரிமாறச் செய்வது மரியாதை யன்று. பரிமாறும் பெண்கள் போஜன பண்டங்களை விருந்தினர்க்கும் வீட்டுத் தலைவர்க்கும் சமம் சமமாகப் பரிமாற வேண்டும். விருந்தினர்க்கு அதிகமாகவும் வீட்டினர்க்குக் கொஞ்சமாகவும் வைத்தலும், அல்லது அதற்கு மாறாக வைத்தலும் கூடாது. விருந்தளிப்போன் விருந்தி னர் உண்பதைக் கவனித்துக்கொண்டேயிருந்து அவர் உண்ணும்கியதிக்குத் தக்கவாறு தான் உண்ணவேண்டும். அதாவது, அவர் தாராளமாய் உண்டால், அல்லது பைய உண்டால், அவ்வாறேதான் தானும் உண்டு விருந்தினரோடு கூடவே தன் போஜனத்தைமுடிக்கவேண்டும். அவருக்கு முன்பாகச் சிலநேரத்தில் தனது போஜனத்தை முடித்தலும் கூடாது. அவர் போஜனத்தைமுடித்தும்தனது உண்ணலை ஒழிக்காமல் அவரைக் காத்திருக்கச் செய்வதும் கூடாது. பரிமாறுகிற தலைவியும் விருந்தினர் உண்பதைக் கவனித்துக்கொண்டேயிருந்து அவர் உண்ணும் தன்மையிலும் அவருக்குப் பிரிய மான பதார்த்தங்கள் இவையிவையெனக் குறிப்புணர்ந்து அவைகளை அவருக்கும் தன் கணவருக்கும் மேன்மேலும் வைக்கவேண்டும். விருந்தினர் வேண்டாம் வேண்டாமென்று மிக வற்புறுத்தித் தடுத்தாலும் அன்னத்தை யும் மற்றக் கறிவகைகளையும் அதிகமாக அவர்களுக்கு வைக்கும் தர்மழக்கம் இப் பெண்களுக்கு உண்டு. வைத்தவைகளை வீணாக்கித் தள்ளுவது மரியாதை யன்று என்று கல்ல விருந்தினர்கள் பலர், அனவுக் கதிகமாகத் தமக்கு வைக்கப்பட்டவைகளைக் கஷ்டத்துடன் புசித்தே தீருகிறார்கள். அறிவற்ற பெண்ணாகிய தன் மனைவி அவ்வாறு அனவிற் கதிகமாக விருந்தினர்க்கு அமுது முதலியன படைத்துவிட்டால், வேண்டப்படாததை இலையில் வைத்துவிடும்படி விருந்தினருக்கு வீட்டுத் தலைவன் இதமாகச் சொல்ல வேண்டும். விருந்தினர் இலையில் அன்னம் இல்லாதிருக்கிற வரையில் கவர் போல் வென்றுவிட்டுப் பின்னர் சாதப்பாத்திரத்தை எடுத்துக்கொண்டு சாதம் வேண்டுமோ சமையலறைக்குச் சென்று, விருந்தினர் வெறும் இலையோடு இருக்கும்படி செய்யும் மதப் பெண்களும் இருக்கிறார்கள். உண்ணு வோர்க்கு ஒரு குறைவு நின்னா திருக்கிற சந்தர்ப்பம் பார்த்து உடனே [illegible] பெண்களைப் போலிப் பாத்திரங்களில் குறைவுபட்ட பதார்த்தங்களைத் [illegible] வைத்தலும் வேண்டும். இவ்வாறெல்லாம் சீர் தெரிந்தவன்

இலையில் உப்பும் அருகில் சுத்த ஜலமும் வைக்க ஒரு போதும் மறக்கக் கூடாது. முக்கியமாய் ஜலம் வைக்கப் பெருமல், விருந்தாளிகள் பின்னர் தாக அவஸ்தையால் வருந்தி, தண்ணீர் கொண்டு வரும்படி வீட்டு அம்மணி யைக் கேட்டே வாங்கிப் பருகுவதைப் பலமுறை நான் பார்த்திருக்கிறேன். உண்போர் போஜனம் முடிப்பதற்கு முன்னமே,கைகழுவத் தண்ணீரும், பின்னர் தரிக்கத் தாம்பூலாதிகளும், சித்தஞ் செய்திருக்க வேண்டியது தலை வியின் கடமை.

விருந்தினர் உண்ட இலையை அவர்களே எடுத்து வெளியில் எறியச் செய்விக்கும் மிருகத்தனமான வழக்கம் நமக்குள் பல விடங்களில் உண்டு. எக்காரணத்தாலேனும் விருந்தினர் உண்ட இலையை எடுத்தெறிய, தலைவி க்கு மனமில்லை யாயின், விருந்தினர் உண்டபின் அவர் அறியாமல், ஒரு கூடையாளைக் கொண்டாவது இலையை எடுத்தெறிவிக்க வேண்டுமே யன்றி, விருந்தினர் பெண்பாலராயிருந்தாலும், அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டும் அவர்களை இலையெடுத்துப் போடும்படி செய்விக்கவே கூடாது.

பெண் விருந்தினர் வர நேர்ந்தால் அவளுக்கு விருந்தளித்துத் திருப்தி செய்வித்த பின்னர் வீட்டுத் தலைவி உண்பது முறையாகும். ஆனால் பரி மாற, புத்திரியாவது வேறு யாராவது இருந்தால் தலைவியும் விருந்தி னளோடு கூட இருந்து புசிப்பது தவறாகாது.

சுருங்கச் சொல்லில், விருந்தினர் தங்கள் சொந்த வீட்டில் இருந்தால் சங்கோச மின்றி எவ்வளவு திருப்தியாய் உண்பரோ அவ்வாறே உண்டிருக் கும்படி, சமயோசிதமாக வேண்டிய உபசாரணைகள் அனைத்தும் புரியவேண் டியது இல்லற வாசிகள் கடமை.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்பது எனக்குப் பிரியமான முதுமொழி. ஆயினும் பழமை யிலும் புதுமையிலும் உள்ள நலங்களை எடுத்துக்கொண்டு பயனற்றவை களையும் தீங்கை விளைவிப்பனவற்றையும் உதறி ஒழித்துவிடவேண்டும். ஆதலின் விருந்தோம்பல் என்னும் இல்லற கருமத்தின் மகிமையையும் அவசியத்தையும்பற்றி முன்னோர் வற்புறுத்தியதைக் கூறி விருந்தினரை உபசரிப்பதற்குக் காலத்திற் கேற்றவாறு அநுசரிக்கவேண்டிய எனக்குத் தோன்றிய சில முறைகளையும் எடுத்துரைத்தேன். இவைகளை அக்கிரி த்து நேயர்கள் அவ்வாறே ஒழுகி வருவார்களாயின், நான் அதையே ஒரு பெரிய விருந்தாகக் கொண்டு மகிழும் ஒரு விருந்தினன் ஆவேன்.

ஓர் சகோதரி.

தேச கீதம்.

தத்தில மேஜயம் வன்றமன் னனஹரிச்
சந்திர னுண்டதென் தேசம்—புவி
சக்கிரை யும்புகழ் வள்ளுவ னும்கவி
வந்தல்பி றந்ததென் தேசம்.
மூத்தித ருந்தவ சித்திப யின்றநன்
மோனாதி றைந்ததென் தேசம்—தமிழ்
வித்தையில் கேர்தனக் கித்தரை மீதிலா
விஜயன்பி றந்ததென் தேசம்.
எந்தவே ரோயிலும் வந்திரந் தவர்கட்
கீந்தகர் னனுமென் தேசம்—பெற்ற
தந்தைசொற் காத்திடக் காட்டக மேகிய
தாசர தியுமென் தேசம்.
புத்தவ மூரவீரன் கண்ணன்மு தலான
புனைவ்பி றந்ததென் தேசம்—இந்து
உத்தமி சாவித்ரி கண்ணகி வாசுகி
ஔவைகந் பேயுமென் தேசம்.
செந்தமிழ் ஆரியம் என்றமிதப் வமொழிச்
சீர்கள்நி றைந்ததென் தேசம்—தமிழ்
மின்தைகந் போதகன் வேண்டவி ரல்கந்த
வேடன்பி றந்ததென் தேசம்.
மாதரும் மகாரிமா ருமறபொ ழிந்துநெல்
மல்கியி ருந்ததென் தேசம்—மத
வாதவைதி யிசங் தேக்க ணிதனால்
வலலாரப் பி றந்ததென் தேசம்.
ஆலிலோர் புங்கையி தீர்வையெனக்கொண்ட
வுலகனைல்வ ரண்டதென் தேசம்—இந்தப்
பாரில் தமிழ்பர தீசுவ னத்திகழ்
பாரத தேசமென் தேசம்.

புதுச்சேரி என்ற மொழி காரைக்கால் அம்மையாரையும் 'பாரதி' செல்வ நாயகி என்பதையும் உணர்த்தும் சொற்களாம்.

சாந்தூர்
பு.ப.மே. விஸ்வநாத பாரதி.

ஐரோப்பாக் கண்ட சரித்திரம்.

266-ம் பக்கத்தொடர்ச்சி.

பெரிக்லியின் காலத்திற்குப் பிறகு கிரீல் தேசத்திற்கு இராஜாங்கவிஷயங்களிலும் இராணுவ விஷயங்களிலும் ஆபத்துக்கள் அதிகரித்தன. அந்நாட்டு நகரங்கள் ஒன்றோடொன்று சச்சரவு செய்து முடிவில் வடக்கிலிருந்து படையெடுத்து வந்த மாசிடோனியன் அரசனாகிய பிலிப் என்பவன் வசம் ஆகிவிட்டன. கிரீல் தேசம் சின்னபின்ன மானதற்கு முதலடியாக ஏதென்ஸ் நகரத்திற்கும் ஸ்பார்ட்டாவுக்கும் முப்பது வருஷகாலம் நீடித்த போர் நடந்தது. ஏதென்ஸின் கப்பற்படை நிகரற்றிருந்தும் ஸ்பார்ட்டா தனரப்படைகளைக்கொண்டு ஜயமடைந்தது. 421. கி.மு.வில் சமாதானம் நடந்ததாயினும் ஏதென்ஸ், ஆல்சிபியாடிஸ் என்ற இராஜாங்க நிபுணனால் ஏவப்பட்டு சிசிலி என்ற தீவின் தலை நகராகிய சைராக்கியூஸை முற்றுகை போட்டது. நடுவில் ஆல்சிபியாடிஸ் மீது மதசம்பந்தமான பலத்த குற்றம் ஏற்படவே, அவன் தனது ஜன்மபூமிக்கு விரோதமாக ஸ்பார்ட்டன் தளகர்த்தர்களை ஏதென்ஸுடன் சண்டை செய்வதற்குத் தகுந்த சமயம் அதுவேயென்று தூண்டினன். அவர்களும் அவ்வண்ணமே படையொன்றை யனுப்பி, ஏதென்ஸ் கப்பற் படையைத் தோலித்து, பாரசிக அரசனிடமிருந்து பணம் கடன் வாங்கி யுத்தத்தை மும்மரமாக நடத்தி ஏதென்ஸ் நகரத்தைப் பிடித்து அதன் கோட்டைச் சுவர்களையும் பிடித்து விட்டார்கள். ஸ்பார்ட்டா யுத்தத்தில் ஜயமடைந்ததே யொழிய மற்ற நகரங்களையும் சேர்த்துப் பலத்த இராஜாங்கம் நடத்தக்கூடிய திறமை யற்றிருந்தது. ஆகவே பல நகரங்களும் ஸ்பார்ட்டாவின் பேரில் பொறாமை கொண்டு சண்டைபிட்டன. பல களங்களில் வெற்றியடைந்தும் முடிவில் 371. கி. மு. வில் லியூக்ட்ரா என்ற இடத்தில் எப்பாமினந்தாஸ் என்ற தீப்ஸ் நகராதிபதி தளகர்த்தனால் ஜயிக்கப்பட்டது. பிறகு சகல நகரங்களும் தீப்ஸுடன் விரோதிக்கத் தொடங்கின. எப்பாமினந்தாஸும் யுத்தத்திலேயே மடிந்தான். கிரீஸில் தலை நகரம் அற்று ஒவ்வொரு நகரத்திலும் பல கட்சிகள் ஏற்பட்டு இராஜாங்கப்

பணத்தை வினியோகம் செய்து எதிரிகளுடன் யுத்தம் செய்வதில் உற்சாகத்தை பிழந்து தாழ்மையான ஸ்திதியை அடைந்தார்கள். ஆனல் தத்துவ சாஸ்திரத்தில்மட்டும் பிளேட்டோ அரிஸ்டாட்டில் நான்கியுணர்கள் சகல சாஸ்திரத்திலும் அடிப்படையான ஆழ்ந்த தத்துவங்களை யூகித்து அறிந்து புஸ்தகங்கள் எழுதிவைத்தார்கள்.

இவ்வண்ணம் கிரீஸ் சீர்குலைந்திருக்கும் காலத்தில் அக்தேசத்திற்கு வடக்கேயுள்ள மாசிடோனியா என்ற தேசமானது பலம்பெற்று இராஜ்யத்தில் சிறந்து இதர தேசங்களை ஜயிக்கக் கூடிய பக்குவம் அடைந்துவந்தது. மாசிடோனியர்களும் பார்ஸீயர்களும் கி. மு. 359 வில் மாசிடோனியாவை ஆண்டுவந்த மகா பிலிப் என்பவன் கிரீஸை ஜயிக்கும்பொருட்டு கிரீஸ் நகரங்களின் விஷயங்களில் தலையிடத் தவறவில்லை. இவனது அபிப்பிராயங்களை முழுவதும் அறிந்துகொண்ட ஆதென்ஸ் நகரவாசியான டெமாஸ்தெனீஸ் என்ற பிரஸங்கி தனது ஊக்கமான உபந்யாசங்களினல் பல நகரங்களைப் பிலிப்புக்கு விரோதமாகச் சண்டை செய்யுமாறு தூண்டினன். ஆனல் முடிவில் 338-ம் கி. மு. வில் மாசிடோனியா மன்னன் தனது தேசம் முழுவதையும் தெஸ்ஸலி பாலோபொன்னேசஸையும் தவிர மற்ற நகரங்கள் யாவும் பிலிப்புக்குக் கீழ்ப்படிந்தன. கிரேக்கர்களை உற்சாகப்படுத்துமாறு பாரசீகத்தினின்றும் பணம் பெற்றுக்கொண்டு பல்தக சைனியம் சேர்த்துக் கொண்டிருக்கும் பொழுதே பிலிப், ஒருவனல் கொல்லப்பட்டு இறந்தான். ஆனல், அவனது மகனும் மகா அலக்ஸாந்தர் என்னும் பதினேழு வயது குமாரனின் எண்ணங்களை இறைவனுக்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்யப்பெற்று அதனல் எதிரிகளை ஜயிக்கவேண்டி தனது சிறந்த சைனியத்துடனும், போர்பெற்ற தனது குதிரைப்படையுடனும் 334-ம் கி. மு. வில் சிற்றாசியாவுக்குக் கடந்து சென்று பாரசீகர்களைத் தோற்கடித்து, டேலஸ்ஸை சுலபமாகக் கைப்பற்றி, எகிப்தின் பேரில் படை எடுத்து, அவனது பேராசை குறுகிய காலத்தை ஸ்காபித்து, மெசபோடோ பியாவுக்குத் திரும்பிவந்து அதிலிருந்து இந்தியாவை ஜயிக்கும் ஆவலுடன் [illegible]

இல பாரசீகர்களை முறியடித்து, ஆப்கானிஸ்தான் வழியாகப் பஞ்சாபில் பியாஸ் என்ற நதிக்கரை மட்டும் சைன்யத்தைச் செலுத்தினன் பிறகு தனது வீரர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பவேண்டுமென்று கலகம் செய்ய, கடற்கரையோரமாக நடந்து பாபிலோனையடைந்து முறைக்காய்ச்சலினல், அவ்விடத்தில் 323 கி. மு. வில் இறந்தான். மகா அலக்சாந்தரின் படை எடுப்பினல் கிரேக்க பாஷையும் கிரேக்க நாகரீகமும் சிற்றாசியா, சிரியா, மெசபோடோமியா, எகிப்த் முதலிய பல தேசங்களிலும் பரவின. மகா அலக்ஸாந்தர் சாகவும் அவனல் ஜயிக்கப்பட்ட நாடுகளில் ஒவ்வொன்றிலும் அவனுடைய தளகர்த்தர்களும் மற்றவர்களும் பல இராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஆண்டு வந்தார்கள். ஆனல் ஐரோப்பாக்கண்ட சரித்திரத்தில் கிலி நிற்கக்கூடிய செயல்கள் ஒன்றும் அலெக்ஸாந்தருக்குப் பிறகு கிரீஸ் தேசத்தில் நடக்கவில்லை. இதற்கு முன்னமே கிரீஸுக்கு மேற்கில் ஒரு சிறிய நகரம் ஓங்கி வளர்ந்துகொண்டிருந்தது. (தொடரும்.)

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

காயம்பினை உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

உடற்கூறுபாடு.

223-ம் பக்கத் தொடர்ச்சி.

இம்மழையில் பிரசுரிக்கப்பெறும் பாகத்தில் வழங்கும் சாஸ்திராத்தமான பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

அடக்கு பற்கள் அல்லது பாலர் பற்கள்.	Milk teeth or temporary teeth.
உறுதி அல்லது ஸ்திரப் பற்கள்.	Permanent teeth.
முன்வாய்ப் பற்கள்.	Incisors.
குருப்பற்கள் அல்லது கோரைப் பற்கள்.	Canines.
இணைக்குருப்பற்கள்.	Bicuspids.
தாடைகள் அல்லது கடைவாய்ப் பற்கள்.	Molars.
முரசு அல்லது ஈறு.	Gums.
நரம்பு.	Nerve.
நாளம்.	Vein.
நாடி.	Artery.
தசாலுஞ.	Enamel.

பற்கள்.

பற்கள் இருவகைப்படும். அதாவது (1) செவில் 1-2 வயதிற்குள் முளைக்கும் பற்கள் (2) பிறகு 6 வயது முதல் 14 வயது வரை, மேலே சொல்லிய பாலர் பற்கள் விழுந்து, புதிதாய் முளைக்கும் பற்கள். இவைகளில் முதலில் கூறிய செவின் பற்கள் அடக்கி, அல்லது பாலர் பற்கள் என்றும் இரண்டாவதாகக் கூறிய விழுந்து முளைக்கும் புதிய பற்கள் உறுதி அல்லது ஸ்திரப் பற்கள் என்றும் சொல்லப்படும்.

பாலர் பற்கள்:—இவைகள் மேல் வாயில் பத்தும் கீழ் வாயில் பத்துமாக இருபது உண்ண. இவைகள் ஆறு வயதிற்கு மேல் விழுந்து விடுகின்றன.

ஸ்திரப் பற்கள்:—இவைகள் ஆறு வயதிற்கு மேல் விழுந்து போகிற பாலர் பற்கள் இடத்தில் முளைக்கும் பற்கள்; இவைகள் மேல் வாயில் பதினாறும் கீழ் வாயில் பதினாறுமாக முப்பத்திரண்டு ஆகும்.

அவைகளின் விவரம்.

பாலர் பற்கள்.



ஸ்திரப் பற்கள்.



மத்தியில் முன்வாய்ப் பற்கள் 4. இவைகளுக்கு வலது இடது புறங்களில் ஒவ்வொரு குருப்பல் அல்லது கோரைப்பல்லும், இக்குருப்பல்களுக்கு அடுத்த இளைக்குப் பற்கள் இரண்டும், இவைகளுக்கு அடுத்த தாடைகள் முன்போல இருக்கின்றன. இப்பற்கள் மேல்வாய் ஏறும் தாடை எலும்பிலும் கீழ்வாய் தாடை எலும்பிலும் உள்ள குழிகளில் பதித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பல்லுக்கும், பற்சிகரம், கழுத்து, வேர் அல்லது தந்தமூலம் என மூன்று பாகங்கள் உண்டு. முரசுக்கு வெளியிற் காணப்படும் பல்லுக்கு பற்சிகரமென்றும், அதற்கடியிலிருக்கும் சுருங்கியஸ்தானத்திற்குக் கழுத்து என்றும், பற்குழிக்குள்ளிருக்கிற பாகத்திற்கு வேர் அல்லது தந்தமூலம் என்றும் பெயர். வேரை ஒருவித சவ்வு மூடிக்கொண்டிருக்கும். அது பற்குழியைச் சுற்றிக்கொண்டிருக்கிற சவ்வுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது. தந்தமூல முனையில் ஒரு துவாரமுண்டு. அது வழியாய் ஒரு சிறிய நரம்பும், நாளமும் நாடியும் பல்லுக்குள் பிரவேசிக்கின்றன. பற்சிகரத்தை மேலாகச் சுற்றிக்கொண்டு வெண்மையாயும் வைரம் போல் உறுதியாயு மிருக்கிற பதார்த்தத்துக்குத் தகாஞ்சு என்றும், வேரைச் சுற்றிக்கொண்டிருக்கும் பதார்த்தத்துக்குத் தந்த மென்றும் பெயர். மேற் சொல்லிய தகாஞ்சு தேய்ந்துப் போய்விட்டால் பற்கள் எலும்பிற்குச் சமானமாகி எளிதில் ஒடியக் கூடியவைகளாயிருக்கும். பல்லில் சிகரத்துக்குள் ஒரு பள்ள முண்டு. அதில் சவ்வு பாவி இருக்கும். அச்சவ்வானது வேரின் துவாரத்தி லிறங்கி, வேரின் வெளிப்புறமா யிருக்கிற சவ்வுடன் கலக்கிறது. மேல்வாய்த் தாடைப் பற்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று வேர்களும், மற்றவைகளுக்கு ஒவ்வொரு வேரு மிருக்கின்றன. குழந்தைகளுக்குப் பற்கள் ஒரே நிதானமாய் முளைக்கிறதில்லை. சிலருக்குச் சீக்கிரத்திலும், சிலருக்குத் தாமதப்பட்டும், முளைக்கும். கீழ்ப் பற்கள் முதலில் முளைக்கிறது வழக்கம். (தொடரும்.)

ரெ. கோவிந்தசாமி நாயுடு.

மெடிக்கல் பிராக்டிஷனர், தூத்துக்குடி.

நாகப்பட்டணம் உருக்குப்பெட்டி.

ஏழாவது மழையில் மூடிவான இக்கதையின் கடைசியில், ராஜமாபுரத்தில் பாம ஏழையா யிருந்தாலும் நாகப்பட்டணம் உருக்குப்பெட்டி யில்லாதவன் கிடையாது என்பதற்குக் காரணம் கதாசிரியர் கேட்டிருந்தனர். ஜமீன்தாரின் குடிகள் சிலர் விவேக தச சங்கம் அமைத்து நடித்தபோது தயார் செய்யப்பட்டிருந்த அநேக உருக்குப்பெட்டிகளை, பின்னர் ராஜமாபுரம் குடிகளுக்குத் தானம்செய்து விட்டார்கள். அதுதான் காரணம் என்று தோன்றுகிறது. அது சரியான காரணமா யிருக்குமென்று நம்பின்றேன்.

கதாப்பிரியன்.

வீதாலே போதும். காம் விரும்பும் பெண்கல்வி மூற்றுப்பெறும். தான் மேற்கும் உடை முதலாய் ஆகு ஓர் தையல்காரன் கைப்பட்டே வரவேண்டு மென்னும் பெண்கள் இன்னமும் காத்திருக்கத்தான் எத்தனை பரிதாபம்!

பெண்கள் படிப்புள்ளவர்களாயிருந்தால் சாஸ்திரங்களில் பிரதான ஸ்லோகமாயிய பாகசாஸ்திரத்தைத் தொடர்ந்து படியாதிருக்க மாட்டார்கள். ஸ்லோகத்தில் ஊப்பில்லை யென்னும் தங்கள் தாயார் சோட்டிருப்பார்க ளென்றல்லோ இருந்தேன் என்கின்றன மனைவி; ஸனம்மா உப்பில்லை யென்றால் ஸ்ரீ பெண்சாதி போடுவா ளென்றல்லோ இருந்தேன் என்கின்றன அமைவு. இப்படி யிருக்கிறது நம் வீட்டுப்பாக சாஸ்திரம். மேலும்;

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஆன்றோர் கூற்று. ஆனால் முன்னல் அறியக்கூடிய தெய்வம் குருட்டுத் தெய்வமாயிருந்தால் அது பிரயோஜனம்? தெய்வம் கண்ணுடையதாயன்றோ இருத்தல் வேண்டும். உண்மையில் தாயின் அறிவே பிள்ளையின் அறிவு. தாயின் குணங்களே பிள்ளைக்குப் படிவன. தாயின் பழக்க வழக்கங்களே பிள்ளையைப் பாதிப்பன. தாயின் அறிவு ஆற்றல்களே பிள்ளையை உருப்படுத்துவன. மக்களது பண்பை உருவாக்கும் கரு தாய்மாரேயாம். தாயைப்போல் பிள்ளை நூலைப்போல சேலை யென்பது சத்தியமே சத்தியம். முக்காலும் சத்தியம். இதை மறுத்து சத்தியத்திற்குப் புறம்போகாமல் சித்தவயிராகிய முன்னுள்ள பின்னுள்ள உத்தம தாய்மாரன்றி சாலாதென்பதை காம் கண்டறிந்து அவ்வுத்தம பண்பையை நம் பெண்மக்களுக்குக் கொடுக்கக் கூடிய கல்வியைச் சிறு வயதிலேயே அவர்களுக்கு ஊட்டவேண்டும். அன்றியும், புருஷனது ஸ்தானத்தை நிறப்பதாவது நிறப்பதாவது எவ்வளவு பெண்ணினது அறிவை ஸ்திரபரிபாகத்தையும் பொறுத்தது. காம் பெண்களின் அறிவின் க்ஷேமத்தில் சித்தம் வைத்து சிற்கும்வரையில் அவர்கள்மதுக்ஷேமத்தைத் தேடித்தேடிப்பர். ஒருவர் வார்த்தை. தெரிவுதோனால் என்ற ஹிந்தி தனகாத்தனே மகன் அறுகில் ஓர் தயவு வேண்ட அப்பெரிய தனபதி ஏ கேட்பதை ஸ்ரீ கொடுக்க முடியாது; ரீல் உலகை ஆண்கின்றது. ஹிரை ஆண்கின்றது ஸ்ரீ தானால்; ஸ்ரீ தன்னை நான் ஆளுகின்றேன். ஆனால் மகனே என்னை ஆளுது உன் அன்னையே" என்னும் தெலிவுதோ னொன். பார்த்தீர்களா பெண்களுக்கு இருக்கும் ஸ்தானத்தை? இத்தகைய பெண்கள் படித்திருந்தா ரிப்பெண்ணுக்கு ஏமாற்றமெல்லாம் ஏமாற்றமாய் முடியும். ஆகையால் தொட்டில் பழக்கமே சொல்தாலை ஓச்சுவது என்பதை இலக்ஷ்யமாகப்பதித்து பெண்களுக்குக் கல்வியைக் கொடுங்கள். கண்ணைத் திறவுங்கள். அவர் கண்களே ஞானக்கண்களாகுமென்று நம்பிக்கின்றேன்.

ஸ்ரீமதி. பி. மல்காரன்ஹாஸ்.

கிராம சுகாதாரம்.

1918-ம்ஹு நமது தேசத்தில் நூதனமாகத் தோன்றி லட்சக்கணக்கான ஜனங்களை மடித்த கொடிய தொத்து வியாதியான இன்பிளுயன்ஸா காய்ச்சலைப்பற்றி காம் அதிகம் கேட்டிருக்கிறோம். இந்தக் காய்ச்சலானது நகரங்களில் மட்டுமல்ல, நீர்வளமும்வசிக்கிறதற்கு ஆரோக்கியமுமுள்ளநல்ல கிராமங்களிலும் அதிகமாய்ப் பரவி, ஜனங்களுக்குப் பீதியை உண்டாக்கியிருக்கிறது. இதல்லாமல் இந்தக் காய்ச்சலினுல் அதிகச் சேதம் கிராமங்களிலேயே எற்பட்டிருக்கிறபடியால், அக்கிராமங்களின் சுகாதாரத்தை மிகவும் ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டியது நமது முதற் கடமையாகும். தற்காலம் பெரியபட்டணங்களிலும் நகரங்களிலு மிருக்கிற சுகாதாரவிருத்திக்கமிட்டிகள்போல் கிராமங்களி லில்லாதிருப்பது ஒரு பெரும்குறையே. இச்சுகாதாரக் கமிட்டிகளால் கிராமங்களுக் கேற்படு நன்மைகள் பல. நமது தேசத்து முக்கிய செல்வம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ, காலை 6-மணி முதல் சூரியாஸ்தமனம் வரை கழனியில் பாடுபட்டுவரும் நமது குடியானவர்களே. அவர்கள் உழைப் பில்லாவிட்டால் பட்டணங்களில் நடக்கும் வியாபார மேது! கைத்தொழி லேது! காலக்ஷேபஞ் செய்யத் தானிய மேது! இப்படி இருக்க, தொத்து வியாதிகளாலும் சுகாதாரத்தின் அருமை தெரியாததாலும் அச்சுகாதார முறைகளை அனுசரியாததாலும் நமது தேசத்திற்குக் கண்கள் போன்ற பயிர்த்தொழிலாளிகள் ஆயிரக் கணக்காய் மாண்டால் தேசம் பஞ்சத்தால் என் கஷ்டப்படாது?

சுகாதாரக் கமிட்டிகள் தங்கள் கிராமங்களில் முதலில் கவனிக்கவேண்டியது சப்பாத்துக் கள்ளிகளின் அழிவைப்பற்றியே. எந்தக் கிராமங்களில் நுழைந்தாலும் இக்கள்ளிகள் படராத இடம் கிடையாது. தொத்து வியாதி எவ்வளவு சீக்கிரம் பரவுகிறதோ அவ்வளவு சீக்கிரம் இக்கள்ளியும் படர்ந்து, பாம்பு பூச்சி இனங்களுக்கு உறைவிடமாயும் நல்ல காற்று உள்ளே வராமல் தடுப்பதற்கு ஹேதுவாயும் இதரபயிர் பச்சைகளை விருத்தி செய்யத் தடையாயு மிருக்கின்றன. இதல்லாமல் சில குடியானவர்கள் தங்கள் வயல்களைச் சுற்றிக் கள்ளி வைப்பதால் தங்கள் வயல்கள் காக்கப்படுகின்றன என்று நினைக்கிறார்கள். ஆனால் அக்கள்ளி படர்வதனுல் தங்கள் வயல்கள் எவ்வளவு தூரம் கெட்டுப்போகு மென்று தெரிந்துகொள்ளுகிறதில்லை. கிராமச் சுகாதாரக் கமிட்டிகள் ஜனங்களின் காலி மனைகளிலாவது வைக்கோற்படப்புகளிலாவது அவர்கள் பட்டிகளுக்குப் பக்கத்திலிருக்கும் புறம்போக்குகளிலாவது வளரும் கத்தாழைகளை வெட்டிச் சுட்டெரிக்கக் கட்டாயப்படுத்த வேண்டும். இப்படிக் கட்டாயப் படுத்தவதில் யாதொரு

தினால அதிகாரத்தோனியையும் காட்டாமல் கள்ளி கிராமத்தைச் சுற்றி வளர்வதால் ஏற்படும் சாதக பாதகங்களைக் கிராமப் பொதுக் கூட்டத்தில் தெளிவாய் எடுத்துக் காட்டித் தாங்கள் கொண்டுவரும் சீர்திருத்தங்களை ஜனங்கள் ஒரே மனதாய் அங்கீகரிக்கும்படி செய்யவேண்டியது அவசியம்.

கிராம சுகாதாரத்தை ஒட்டிக் கமிட்டிகள் கவனிக்கவேண்டிய இரண்டாவது விஷயம் எருக்குப்பைகள் கொட்டும் இடங்களைப்பற்றியே. கமது ஜனங்கள் இக்குப்பைகளை அகேகமாய்த் தமது வீடுகளின் முன் பக்கத்திலாவது கொல்லைகளிலாவது கிராமத் தெருக்களுக்குக் கூப்பிடு தூரங்களிலிருக்கும் சமதானத்திலாவது கொட்டுகின்றனர். அக்குப்பைகள் காலனாவில் அதிகமாகச் சேர்ந்து மேடாகின்றன. அவைகளிலிருந்து வரு துர்க்கந்தம் பொறுக்கமுடியாம லிருந்தாலும் கமது குடியானவர்கள் சுற்றத்தைப்பார்ப்பதிலும் அதனால் தேக சௌக்கியத்திற்கு வரும் கெடுதிகளை உணராதவர்களாய் மிருக்கின்றனர். இவர்கள் குடியிருக்கும் குடிசைகள் அத்தரிக்கந்தலிற்குச் சமீபமே அமைக்கப்பட்டிருக்கின்றமையால் அவர்கள் உண்ணும் உணவு குடிக்கும் தண்ணீர் இன்னும் இதர பதார்த்தங்கள் கெட்ட ஆகாய சம்பந்தப்படாம லிருப்பது மிகவும் அருமை. இதல்லாமல் இக்குப்பை களினால் கிராமக் குளத்தோரங்களில் காலரா, பொதுவாய் நதி னீர்நிலைகளில் குளத்துத் தண்ணீரையே பூராவாய் உபயோகிக்கும் கிராமங்களின் குளக்கரைகளில் குப்பைகளைக் கொட்ட விடக்கூடாது. ஆனி ஆடி மாதங்களில் மணல்மாரிக்காற்றுகளால் இக்குப்பைகள் உதறப்பட்டுக் குளத்துத்தண்ணீரைக் கெடுப்ப தல்லாமல் அத்தண்ணீரை உபயோகிக்கும் ஜனங்களைப் பலவித வியாதிக்குள்ளாக்குகின்றன. கிராமத்தில் எந்தக் குளத்து நீர் உபயோகத்திற்கென்று தனியாய் விடப்பட்டிருக்கின்றதோ அக்குளத்தில் தண்ணீரெடுப்பதைத் தவிர ஆடுமாடுகளைக் குளிப்பாட்டவாவது அழுக்கு வஸ்திரங்களைத் துவைக்கவாவது ஸ்நானம் செய்யவாவது மீன்பிடிக்கவாவது விடாமல் பாதுகாத்துத் தண்ணீர் வற்றுகிற சமயம் பார்த்து அத்தண்ணீரை உபயோகிப்பதால் வரும் கெடுதிகளைத் தமுக்கு மூலமாய் ஜனங்களுக்குத் தெரிவிப்பதோடு மீறி உபயோகப்படுத்துபவர்களை இலேசாகத் தண்டிப்பது உத்தமம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் வறண்டு சேறாய்க் கிடக்கும் தண்ணீரைக் குடிக்கவும் உபயோகிப்பது மிகவும் பரிதாபப்படத்தக்க விஷயங்களில் ஏற்படும் காலரா கேசுகளுக்கு இதுவே முக்கிய முகாந்திரம். இதைத் தடுப்பது மிகவும் பெரிய காரிய மல்லாமற் போனாலும் ஜனங்களின் கவனமின்மை இக்கொடிய வியாதிக்கு ஆதி காரணமென்று சொல்லலாகாது.

மூன்றாவதாகிய கிராமத் தெருக்களை எவ்வளவு சுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி அவ்வளவுக்கு கமக்கு ஆசேபணையில்லை.

கமது கிராமத் தெருக்கள் அசுத்தமாய் இருப்பதற்கு முக்கிய காரணங்கள் ஆறு. அவையாவன:—(1) வண்டிகளை ஒன்றுக்குப் பின் ஒன்றாய் கிறுத்தி மாகேளை தகத்தடியில் கட்டிப் புல் போடுவது. (2) எச்சில் இலைகளையும், அழுகிய பதார்த்தங்களையும் அஜாக்கிரதையாய்த் தெருக்களில் எறிவது. (3) வீடுகளின் சாக்கடைத் தண்ணீரைத் தொட்டிகளின் மூலமாய் வெளியேற்றாமல் தெருக்களில் ஓடச்செய்வது. (4) சாயம் காய்ச்சல், தோல் தோய்த்தல் இன்னும் நெசவுத் தொழில் சம்பந்தமான காரியங்களைத் தெருக்களில் செய்வது. (5) நெல் முதலிய தானியங்களைத் தெருக்களில் உணர்த்துவது. (6) சிறிய குழந்தைகளைத் தெருக்களில் ஆபாசப்படுத்தும்படி விடுவது கிராமத்து ஜனங்களுக்குச் சுகாதாரத்தைப்பற்றி எவ்வளவு தூரம் கூட்டங்களில் பிரசங்கித்தாலும், அவர்களுக்கு அப்பொழுதைக் கப்பொழுது மேற்கண்ட தெருக்களின் நிலைமைகளைச் சுட்டிக் காட்டி உடனே சீர்திருத்தம் செய்யும்படி கட்டாயப்படுத்தினு லொழிய அவர்கள் கவனியார்கள். இவ்வுலகத்தில் அநேக காரியங்கள் அதிக திரேக சிரமத்தாலும் தந்திரோபாயங்களாலும் நடைபெறுகின்றன. கிராம சுகாதாரத்திற்கு நாம் எடுத்துக் கொள்ளும் சிரமம் மிகக் குறைவாய் இருந்தாலும் நாம் அநுபவிக்கும் சுகமும் சக்தோஷமும் கணக்கில் அடங்காது. இதல்லாமல் மேற்கூறிய அசுத்தங்கள் தெருவில் தட்டுப்படுகின்றபோது "என்செய்கிறது! என்ன சொல்லியபோதிலும் கமது பேச்சைக் கேட்பா ரில்லை. நாம் என்ன செய்யலாம்!" என்று சுகாதாரக் கமிட்டி மெம்பர்கள் ஆயாசப்படக்கூடாது. அவர்கள் எடுத்துக்கொள்ளும் சிரமமான காரியங்களில் ஜனங்களை வற்புறுத்துவதே மிகவும் கஷ்ட சாத்தியமான காரியம். தினசரி பொதுஜனங்களுடன் அநேக காரியங்களில் பழகும் இக்கனவான்களாலேயே தங்கள் கிராமத்துக் குடிப்படைகளை வற்புறுத்த முடியாவிட்டால் பின் யாரால் அக்காரியம் செய்யமுடியும்? எம்மாதிரியான செய்கைகளால் ஜனங்களுக்கு இம்சையில்லாமல் சீர்திருத்தம் செய்யலாமோ அக்காரியங்களை உடனே கைக் கொள்ள வேண்டும்.

பெரிய பட்டணங்களில் இருப்பதுபோலக் கிராமங்களிலும் வண்டிப் பேட்டைகள் அவசியம். ஏழைகள் பணக்காரர்கள் என்ற வித்தியாசமில்லாமல் வண்டி மாடுகளைத் தகுந்த பாதுகாப்புடன் பேட்டைகளில் வைக்கவேண்டும். இப்படிச் செய்வது கஷ்டப்படுமென்று தோன்றினால், வண்டிமாடுகளை வீட்டுக் கொல்லைகளில் கட்டவேண்டுமே யல்லாது தெருக்களில் கட்ட விடப்படாது. அன்றூடம் இலை முதலிய அழுகிய அழிந்த வஸ்துக்களைக் கூட்டி அப்புறப்படுத்த ஒட்டர்களை நியமனம் செய்வது அவசியம். அநேக கிராமங்களில் இக்காரியம் கடைபெற்றாலும் ஒழுங்கினமா யிருக்கிறது. ஒருவரை சுத்தப்படுத்தி ஒன்பது நாள் கவனியாமலிருப்பதி லென்ன

பயன்? அந்த கிராமங்களில் ஜனங்கள் ஏழைகளாய் இருப்பதால் சமுதாயத்தில் வைத்து வேலை வாங்கச் சக்தி அற்றவர்களாயிருக்கின்றார்கள். அப்படி ஏழையாயிருந்தாலும் கிராம சுகாதாரத்தின் பொருட்டு தங்கள் சொற்ப வருமபடியில் ஒரு பாகத்தைக் கொடுப்பது அவர்கள் கடமை. ஒரு மனிதன் எவ்வளவு ஏழ்மை ஸ்திதியில் இருந்தாலும் கவ்டப்பட்டுக் குகி நாதனை நிவர்த்தித்துக் கொள்ளுவதுபோல் தன் கிராம சுகாதாரத்தின் பொருட்டும் தன் சொந்த சரீர சுகத்தின் பொருட்டும் தன்னாலியன்ற உதவியைச் செய்ய முன்வரவேண்டும். எல்லோரும் ஏகோபித்து ஒரு மனதுடன் காரியத்தைத் துவக்கினால் அசாத்திய மென்பது ஏது?

கிராமத்தின் சுகாதாரக் கமிட்டிகள் கவனிக்க வேண்டிய மற்ற விஷயங்கள் மூன்றே யாகும். கிராமப் பொதுக் கிணறுகளின் பாதுகாப்பு சுகாதாரக் கமிட்டிகளின் வேலையே. மாஞ்செடிகள் கிணற்றைச் சுற்றி வளராமலும் பாத்திரம் முதலியன தேய்த்துக் கழுவின அசுத்த நீர் கிணற்றினில் சிந்தி வழியாமல் இருக்கவும் பகுதி ஜாதிகள் கிணற்றில் எச்சமிடாமல் விருக்கவும் பார்த்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் கெட்டியாயும் அகலமுள்ளதுமான ஓர் மூடி தயார்செய்து கிணற்றை மூடிவைப்பது நலமாகும். இரண்டாவது அகலமான தெருச் சாக்கடை வெட்டி வீடுகளின் அசுத்த தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டும். மூன்றாவது ஆண் பெண் ஜனங்களுக்குச் சௌகரியமாய் இருக்கும்படியான இரண்டு பெரியலாட்டிரீன்கள் நிர்மாணஞ்செய்வது உத்தமம். அற்காலம் இவைகள் எந்தக் கிராமங்களிலும் காணப்படாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவத்திற்குக் கொண்டு வருவது உத்தமம்.

வி. சுப்புசேஷய்யர், பி. ஏ. எல். டி.

———:o:———

கலமிக வுடைய சில பழங் கதைகள்.

இந்தியர்கள் தேச பக்தியும் வீரச் செயலும் குன்றியவர்களென்று சிலர் பல நவீன, நாகரீக சரித போதகாசிரியர்கள் பள்ளிப் பிள்ளைகளிடத்தும், அவரொத்த அறிவுடையாரிடத்தும், அடிக்கடி தூஷணை பார்க்கின்றோம். இவர்கள் கூறுவது நமது முன்னோரின் புராதன சரித்திரத்திற்கும் பழ நூல்களுக்கும் எவ்வகையிலும் பொருந்தாதென்பதைத் சிறிது விசாரிப்போம். இந்த [illegible]

கடைக்கால நிகழ்ச்சிகளிலும் நிறைந்து கிடக்கும் சில கதைகளை மட்டும் ஞாபகப்படுத்திச் சிந்திப்பது மாணவர்களுக்கு மிகவும் முயோகாரப்படுமென்ப தெண்ணுதலால், சில கதைகளை எடுத்தெழுத விடைபேற்போம்.

பண்டைக் காலத்தில் சேர னொருவன் போர்க்களத்தில், பகல் நெடுநேரம் பொருது, மாலையில் பாசறை யடைந்தான். பெரும் படைமுகத்தே தளராத மனவலியுடன் தன் சிறு சேனையைச் செலுத்தி, பகைவர் முனைமுக மடக்கித் தோலா வென்றியொடு தோன்றினன். தானைத் தலைவரும் படைவீரரும் அவனைச் சுற்றி ஆர்ப்பரித்து வெற்றி விபத்து கொண்டாடினர். இதன் மத்தியில் அவ்வரசன் வாடிய முகத்துடன், நண்பர் முகமன் மகிழாது, உண்ணாது, உறங்க விரும்பாது, ஒய்ந்திருந்தான். இத்தகவிலாத் தளர்வுகண்டு அரசன் அன்புக்குரியாரும் அரசனை மிகவும் விசுவசிப்பவருமான படைப் புலவர் ஒருவர் அரசனை அடுத்து, இனிய பல கூறி, ஆர்வத்தோடு 'மாற்றலர் போற்றப் பொருதுவந்து ஆரவாரத் தபல் நெருங்கி வந்தித்து நிற்கும் படைவீரர் மகிழ அன்றைப் போர் புகழ்ந்து ஊக்காமல், தானும் தளர்ந்தப்பெரும் தானை வீரரையும் தளரச்செய்து நிற்பது பொருத்த மல்லவே,' என்று வினயமாக விளவினர். அப்போது அந்தச் சேர வீரன் தன் முதுகைக் காட்டி வாளா விருந்தான். அங்குள்ள ஒரு சிறு புதுப்புண் அவன் பரிபவ மனத்தையும் புலவருக்கு விதந்து கூறியது. உண்மை யறிந்த புலவர் வெண்ணும் வெள்கி வருந்திய தன் வீர அரசன் பெருமையைப் பாராட்டிப் பாடியிருக்கின்றார். அவர் பழம் பாட்டா லிக்கதை காணக் கிடைக்கின்றது. கூற்றினுங் கொடிய மாற்றலரையும் அவர் பல்லிய படையும் கண்டஞ்சா நெஞ்சுடைச் சேரன் தன் புறத்தே புண்பட்டபழியஞ்சிப்பதைபதைத் தளகைந் தழிவாளனென்.பாவலரும் தண்டத்தலைவர் பலரும் பரிந்து பல கூறியிரந்தும் பகைவர் முன் னழியாத்தன் மனம்போலவே இளகாத இதய முடையவனுயிருந்தான். பகைவரினும் பகையைப் பழித்தான்: தின்பமெனத் தயிலழித்தான். எதிர்ப்பார் தூசிப்படை எறிய விரையும் தன் தூசைபோலவளரும் விருப்பினாடி மரணத்தை மணந்தான். பகை

...ப்பழி கொன்று, புகழ் வளர வீரர் அறம் வளர்த்து, அறக்
...வுயிர் தரும் தேவிய இவ்வரசன் செயலைச் சிந்தித்திடுக.

தொடரும்.

எஸ். சோமசுந்தர பாரதி, எம். ஏ., பி. எல்.

கண்ணம்மாள் கதை.

220-ம் பக்கத் தொடர்ச்சி.

...ீலாம்பாள் உடனே பெருப்புக் குச்சி எடுத்துக் கீழே மீண்டும் விளக்...ற்றினாள். மீண்டும் சட்டங்கள் எழுத காற்காலியில் உட்கார்ந்தான். ...ழுவலை மையிலெடுத்து யோசிக்க லானாள். ஆனால் எவ்வளவும் பட்டாத ...னவன் கை அடிகளினால் அவள் மண்டைக்குள் எண்ணங்கள் ...ொதித்துக் குழம்பிக் கொண்டிருந்தன. கண்கள் திடீர் திடீரென நீரைச் சொரி...தட்டுகளைப் பற்றிச் சிந்திக்க அவள் மூளை சற்றும் இசையவில்லை. ...ப்படிப்பட்ட கொடிய கணவனிடமிருந்து வாழ்த்தாலென்ன வாழ்த்தாலென்ன! அவனிடத்தில் இனிஎன்ன சம்பந்தம்வைத்துக்கொள்ளுகிற தென்று சட்டத்தை அல்லவா முதன் முதல் தீர்மானிக்க வேண்டும். இனி அந்த வீடு இவ்வீடு இருக்கக் கூடாது. அந்தக் கிழவி, அது சொத்தை இது உடைமை என்று சதா பல்லவி பாடிக்கொண்டிருந்தாலும், எனக்கு ...ந்த புருஷனுடைய அன்பும் ஆதரவும் இருந்தது என்று இந்நேர காலம் ...ந்த வீட்டில் இருக்கோம். அவரே கை நீட்டி அடித்துவிட்ட பிறகு இனி ...ன் இங்கே வாழ்க்கை! ஆனால் எங்கே போகலாம்? இன்றிரவே புறப்...ு சென்றிடலாமா? அண்ணன் வீட்டுக்குப் போய்விடலாமா? ஆனால் அண்...ன் வல்லவன்தான். அவருக்கு வாய்த்தவள் பொல்லாதவளாயிற்றே. ...ாட்டியிருந்தாலென்ன! கான் என்ன தெண்டச் சோறு தின்னப் ...ிறந்தேன்? எனக்குக் கையும் இருக்கிறது, கல்ல மூளையும் இருக்கிறது. ...னைகளுக்கு இரவிக்கை பாவாடை தைக்கக்கேட்கின் றதைத்தைத் தொடர்ந்து ...ரு கூரத்தியாகமாள் வேலை பார்த்தும் என் ஜீவனத்திற்கு வேண்டிய ...ிகமாகச் சம்பாதித்துத் தொடர்ந்தால் அந்தப் பொல்லாத அண்ணி ...ன்னிடம் சண்டைக்கு வரப்போகிறாள்! ஆனால் என்றைக்கு அவளுக்கு ...ுத்தி வந்தாலும், என் சாமர்த்தியத்தைப்பற்றிப் பொறாமைதான் ...ாள். மேலும் கூரத்தியாயிருந்தால் கேலி பார்க்க அண்ணன் ...ிருப்பாரோ என்னவோ? அவர் தூரத்து சொந்தக்காரனடா மனுவன். அடி போ! ...ிக்கச் சம்பாதித்திருந்தால் சொத்தே யிருந்தா லென்ன! என் சிறிய ...ுத்தியைக் கண்டு நான் பெருமை இருந்தாலென்ன? ஆனால் ஊரில் ...ுள்ளவர்கள் பேசுவதைவிட வேறு எதைத்தான் பேசுவது! கணவன்

அன்பு இல்லாத பெண்களுக்கெல்லாம் இந்தத் தொல்லைதான். என்செய்வது? உயிர் போய்விட்டாலும் உத்தமம். உயிர் போவது நமது தீர்மானத்திலா இருக்கிறது! ஆனால் நான் என் கொண்ட கணவன் வீடாகிய என் சொந்த வீட்டைவிட்டு அண்ணன் வீட்டிலும் கமலத்து வீட்டிலும் போய்ச் சேழிய வேண்டும்! இனிக் கணவர் முகத்தை எறெடுத்துப் பார்த்துப்பேசாமல் என் பாட்டைப் பார்த்துக்கொண்டு இந்த வீட்டிலேயே இருப்பேன். இந்த வீட்டில்தான் எனக்குப் பூரண சுதந்தரம். நான்தான் இந்த வீட்டிற்கு ராணி. அவர் அடித்துத் தூரத்தினாலும் இந்த வீட்டைவிட்டுப் போவதில்லை. வேண்டுமென்றால் என் உயிர் போகிற வரையில் என்னை அடித்துக் கொல்லட்டும். அப்படிக் கொல்லப்பட்டு நான் செத்தால் பெண்கள் சங்கம் என்ற பெரிய பொது கல முயற்சிக்காக என் கணவன் அன்பையும் என் உயிரையும் அர்ப்பணம் செய்த புண்ணியமும் புகழும் பெறலாம். ஆம், என்ன கேர்ந்தாலும் பெண்கள் சங்க முயற்சியை உறுதியாகப் பற்றி இந்த வீட்டிலிருந்தே ஊக்கத்துடன் உழைப்பேனுகவும்." என்று பலவாறு சிந்தித்துத் தீர்மானித்துச் சட்டங்கள் எழுத மீண்டும் முயன்றனள். ஆனால் அவள் என்னதான் தீர்மானித்தாலும் சட்டங்களில் மேற்கொண்டு ஒரு வரி கூட எழுத அவளால் முடியவில்லை. காலைக் காலையில் எழுதிக்கொள்ளலாம் என்று எழுந்து ஒரு துப்பட்டியைத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டாள். கெடுநேரம் நித்திரை இல்லாதிருந்து பின்னர் தூங்கினாள். அதிகாலையில் சுமார் நாலு மணிக்கு எழுந்து மேஜைமேல் விளக்கேற்றி வைத்து காற்காலியில் உட்கார்ந்து சட்டங்கள் எழுத முயற்சித்தாள். முந்திய இரவிலும் பலவிதச் சிந்தனைகள் அதிக உக்கிரமாக அவள் மூளையை மூடிக் கொண்டன. பேனுவைக் கையில் வைத்தவாறே கண்ணீரால் காகிதத்தை கனைத்துக்கொண்டு சிந்தனைக் கடலில் மூழ்கியிருந்தாள்.

இனி, செட்டியார் பாட்டைப் பார்ப்போம். தினை மீது படுத்த அவர் சுமார் மூன்றரை மணிவரை, தூக்கமே யில்லாதிருந்தார். தன் மனைவிக்குத் திடீரெனப் பெண்கள் சங்கப் பைத்தியம் பிடித்து, சற்றும் அடங்காத பிடாரியாய்விட்டானே, அவளை எப்படிச் சீர்ப்படுத்துவது, என்ற வாறு அவரும் பெரும் குழப்பமயமான சிந்தனையிலிருந்து மூன்றரை மணிக்குமேல் சற்றுக் கண்ணயர்ந்தார். அவர் தாயார் ஒருத்திதான் அன்றிரவு அந்த வீட்டில்சுவஸ்தமாய் நன்ருய்த்தூங்கிக் காலையில் சுமார் ஐந்துமணிக்கு எழுந்தாள். தன் மருமகள் அறையில் இருக்கும் கோலத்தைப் பார்த்தாள். உடனே மகனைத் தேடிக் காணுமல் கட்டிலாயத்தெருத் திண்ணையில் படுத்துத் தூங்குவதைக் கண்டு அவரைத் தட்டி எழுப்பி, "பாரப்பா, வாசலுக்குச் சாணங்கூடத் தெளிக்காமல் இன்னும் அறையில் கணக்குகள் எழுதி மூடித்தக்கொண்டிருக்கிருள் அந்த கீலி" என்று சொன்னுள். செட்டியார் எழுந்து உள்ளே வந்து அறையில் தன் மனைவி பேனுவும் கையுமாக இருப்பதைப் பார்த்தார். "சாணம் தெளிக்கப் போகவில்லையா?" என்றார். கீலாள்

...டென திரும்ப ஓடிப்போய், சாணக்கோத்து வாசலுக்குத் தெளித்து விட்டு கொடிப்பொழுதில் திரும்பி வந்து கையில் பேனுலோடி கட்டிலின் மீது சென்னுடன் பதித்துக்கொண்டான். "என்னடி! மற்ற கேலகளை எவன் பார்ப்பது?" என்றனர் கணவர். "கேற்று சாத்தினி கீகன் என்னை வந்தியர் வீடுவரைக்கும் போதும் போதும்." என்று மாத்திரம் சொல்லி நீலன் தெம்பித் தெம்பி யழுது தன் முகத்தை மறைத்துக் திரும்பிப் படுத்துக்கொண்டான். பார்த்தார் செட்டியார். அவனை அடக்கத் தன்னால் முடியாது, தெய்வத்தான் வரவேண்டும் என்று எண்ணினார். இந்த எண்ணத்தில், அவருக்கு ஆத்திரம் பொங்கிற்று. முன்தினம் வரையில் ஒழுக்கமாக இருந்த தன் மனைவிக்குத் திடீரென இந்த வக்கிரம் ஏற்பட்டதற்கு ஊர்ப்பெண்கள் தான் காரணம் என்று நிச்சயித்தார். மேஜை மீதிருந்த சுற்றறிக்கடிதத்தை எடுத்தார். அதில் கையெழுத்திட்ட பெண்களின் அக்கிரமத்தை அவர்கள் புருஷர்களுக்குத் தெரிவிக்கலாம் என்று ஒரு யோசனை எழுந்தது. அதை முதல் கையெழுத்தாகவே வரைந்தார். பின்பு பின்வருமாறு சிந்தித்தார் "ஐயலக்ஷ்மி வாத்தியார் பெண்சாதி யல்லவா? வாத்தியார்களைக் கெல்லாம் இங்கிலீஷ் கூலைப்பற்றிப் பெரும் பைத்தியம். அவர் சம்மதமும் பெற்றுத்தான் ஐயலக்ஷ்மி இந்த அக்கிரமக் காரியத்தில் இறங்கியிருப்பான். முதலியாரிடம் சொல்வதில் பிரயோஜனமில்லை. இரண்டாவது கையெழுத்து யாருடையது? கற்பூரவல்லித் தாயார்! பாங்கு காஷ்டியர் பெண்சாதியா! அவன் பெரிய வீட்டுக்காரனாயிற்றே. அவன் வீட்டுக்குள் போவதெப்படி தழைவது! மூன்றாவது யார்? நீலன்! இவன்தான் எம்மால் அடக்க முடியாது போய்விட்டான். அடுத்த கையெழுத்து யாருடையது? ஜனனி போஸ்டாபீசில் வேலைபார்க்கும் அவன் பெண்சாதியா! அவள்தான் பெண்சாதியைத் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டாடுகிறவன்.பே.ஏ. பாஸ் செய்துவிட்டு, என்னென்னவோ பேப்பருக்குத் தன் பெண்சாதி பெயர் வைத்தெழுதுகிறவன் என்ற அன்னாக்குப்பக்கத்தைக்கடை தண்ணீர் தோழனியர் சொன்னார். அவன் எப்படி அவளைக் கண்டிக்கப் போகிறான்! நாலாவது கையெழுத்து யாருடையது. கண்ணம்மாள்! யார்? தாசாசி பெண்சாதியா?! பேஷ்! பேஷ்! இவன்தான் சரியான ஆளாமி! இவனிடம் சொன்னால், இவன் பாங்கு காஷ்டியரிடங்கூடச் சொல்லி ...ண்டி பின்பு இந்த அக்கிரமங்களெல்லாம் ஒழித்துவோம்."

இந்த நிர்மானத்தோடு செட்டியார் வெகு கோபாவேசத்தோடு தனை ...வீட்டுக்கும் போனார். கீழ்நிலையில் விருந்த அவனை எழுப்பி விவரங் ...அவனுக்குச் சொல்லி "என் ...ரா! உன் பெண்சாதி ஊரில் உள்ள ...வரையெல்லாம் கெடுத்து ...சமாக்கி விடுவான்போல் இருக் ...நீயாவது கீ அடக்குகிறாயா, வேறு தான் அடக்கட்டுமா?" என்று ...லித் தற்கடிதத்தை ...காட்டினார். தாசாசியத் ...மூன்றுவிடாது ...சமையலறைக்குச் சென்றான். கண் ...தோசையார்த்தக் ...தான். தான் தரித்திருந்த அங்கவஸ் ...தோசைக் கல்லை ...தாசாமி, அதனால் அவன் முதி ...அவன் புடவை இசிக்கை இரண் ...தோசைக் கல்லைவிட்டமாத் ...னியுடன் கண்ணம்மாள் மேடை வீழ் ...அப்பு. பெரும்பில் புதைத்தி ...பற்றிக் காகவென அவள் ...

(தொடரும்.)

வாணிதாசன்.

30 SEP 1919

ஸ்ரீ சாஸ்வதி சகாயம்.

கதா வருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள்,
ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள்,
இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக
வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின்
ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பருவம். 1. | கலியுகாப்தஸ்ரு 5021. சித்தார்த்தஸ்ரு வைகாசிமீ. கொல்லமாண்டு 1094 ரிஷபமீ. இ. பி. 1919-ம்ஸ்ரு மேமீ. | மலர் 9.

குருநாதன்.

ஸுமார் பத்து வருஷங்களுக்கு முன்னர் எனது பெற்றோர்கள் சந்தைக்குச் சமானமான ஒரு இடத்திற் குடியிருந்தார்கள். அதாவது, இராப் பகல் ஓய்வின்றிக் கட்டை வண்டிகள் போய்க் கொண்டே இருக்கும் பாதை ஒன்று,—கடைத்தெரு இரண்டு—புகைதப் பேட்டைக்குப் போகும் பாதை மூன்று,—ஆகிய இம் மூன்று பாதைகளும் ஒன்று கூடும் சந்தியில் எங்கள் வீடு இருந்தது. இவை போதாதென்று அதன் வலது பக்கத்தில் கொத்த வாற் பேட்டையும், இடது பக்கத்தில் மாரியம்மன் கோயிலும், பின் பக்கத்தில் ஒரு அம்பட்டன் குடிசையும் இருந்தன. சந்தையிலாவது சில வேளை ஸப்தம் இல்லாது இருக்கும்; எங்கள் வீட்டின் பக்கத்தில் எப்பொழுதும் அல்லோலகல்லோலந்தான். வீட்டிற்கு வெளியில் நிகழும் விசேடங்கள் இவை; வீட்டின் உட்புறமோ சொல்லவே வேண்டாம். சதா சண்டையும், சாபமும், அழுகையும் தத்தம் கால அட்டவணை (Time Table) பிரகா

[illegible] கொண்டே வரும். இதனியாதி வைபவங்களுக்கிடை
[illegible] குடியிருந்தேன்.

[illegible] எனக்கும் ஐயாத்துரைக்கும் வெகு தூரம். (ஒருகால் இரண்டு
[illegible] கோத்திரங்கள் ஏக காலத்தில் பாட்டுத் தொடங்கியதைக்
[illegible] முன்னிட்டு பயமடைந்து, அதன் பயனைப் பின் பற்றினோ?
[illegible] ஐயாசாமி வியாதிபாஸ் வருஷம், மூன்றாம் ரூபா செலவு
[illegible] ரூபாய் சுமையுடைய அதி வீர தீர சூரன் பான்.)
[illegible] என்செய்வது; வேறு கதி இல்லை. ஆகவே எனக்கு
[illegible] முழுமை தெரியும் இடையூறின்றிச் செய்துவா என்னல்
[illegible] அதனை ஹிம்ஸைகள் அழையாச் சம்பந்திபோல்
[illegible] தினந்தினம் ஓடி வரும்.

[illegible] அன்பர்களே! ஒருநாட் காலை எட்டு மணி இருக்கும். யாதே
[illegible] எழுதுவோம் என்ற எண்ணத்துடன் மேஜைபின்முன் நாற்
[illegible] உட்கார்ந்தேன். அப்பொழுது பக்கச் சுவரின்மீது இரு
[illegible] பல்லி ஒன்று கல் திசை சொல்லிற்று; அதனை அண்
[illegible] இருந்த மற்றொரு பெண் பல்லி (பெண்டாட்டிப் பல்லி
[illegible] இருந்தாலும் இருக்கலாம்) ஆமோதித்தது. கச்சேரி மணி
[illegible] டாண், டாண் என்று எண்முறை அடிக்கப்பட்டது. வீட்
[illegible] வெளி முற்றத்தில் நின்றுகொண்டு காதிதப் பக்ஷணங்களை
[illegible] சுமபிரமமாகப் புசித்துக்கொண்டிருந்த கழுதையும் பஞ்ச
[illegible] கமபோதி பாடிற்று. அதனும் சிறிது தேக நடுக்கத்
[illegible] அது அதனைப் பொருட்படுத்தாமல் 'இன்று சுகுனம்
[illegible] என்ற நூதனகலத்துடன் செய்யுள் இயற்றத் துணிந்
[illegible] தர்க்கங்களும் தடுத்த தடங்கல் இன்றி அன்று ஒன்
[illegible] ஒன்றாக வெகு சன்னமாய் எனக்குக் கிடைத்தன. ஓரே
[illegible] அருமையும் பெருமையும் கலந்து ஒழுகும்
[illegible] பாடிவிட்டேன். சக்தேசஷமோ பெருக்கெடுத்துப்
[illegible] விட்டது. அக்ஷணமே எழுது
[illegible] மோஹமோஹிய கருதியை
[illegible] பாடலையே பத்துப் பதி
[illegible] பாடி களித்தேன். அப்
[illegible] கேட்கவேண்டுமா?

வீட்டின் வெளி வாசலில் நின்று கொண்டு எல்லோரும் ஏகோபித்து உச்சத்தில் குருநாதன் பாட்டைப் பாடி, 'தாயி பார்வதி பிகைஷ தாயி!' என்று முடிவரை கூறி நின்றனர். அச்சமயம் அண்டையில் நின்ற என் பாட்டனார் 'தாயாவது, தகப்பனாவது! வேலை செய்யச் சக்தி இல்லாத அப்பாணிகளா, குருடர்களா நீங்கள்! வண்டா அநியாயமாகத் தேசப் பெருமையைக்கெடுக்கின்றீர்கள்!' என்று கோபித்துக்கொண்ட அப்பதேசிகளை அதி சாமர்த்தியமாக அடியாமல் அடித்தோட்டினர். நானும், பிச்சை போட மனம் இல்லாவிட்டாலும், அவர்களுடைய,

"மனைவியும் மக்களும் குருநாதா—ஞான
மார்க்கத்திற் கபிபகை குருநாதா;
கனவிலும் உன்பெயர் குருநாதா—நான்
கருதிடக் கிருபைசெய் குருநாதா.

அன்னையும் தந்தையும் குருநாதா—எனக்
கானந்த மணியில்லை குருநாதா;
உன்னையே நம்பினேன் குருநாதா—எனக்
குற்றமுன் பிறப்பொழி குருநாதா.

மனநலம் வேண்டுமென் குருநாதா—அது
மன்னுயிர்க் காக்கமென் குருநாதா;
இனநலம் வேண்டுமென் குருநாதா—அது
எப்புகழுந்தரும் குருநாதா."

என்ற பாடல்களைக் கேட்டுக்கொண்டே அவர்களுடன் ஊருக்கு வெளியே உள்ள 'குடிமடம்' வரை சென்றேன். அம் மடத்தை அடைந்ததும் அவர்களுடைய வேஷங்களும் ஆடல் பாடல்களும் எங்கேயோ மறைந்து விட்டன. கஞ்சாவும், உக்காவும், சாராயப் புட்டிகளும் வெளிப் பட்டன; அதனை யொட்டி அவர்களுடைய பேச்சுகளும் பெரிதும் மாறுபட்டன. உடனே 'இனியிங்கே நிற்பது அழகல்ல' என்று அவ்வாசாஞரனிகளை விட்டுப் பிரிந்து ஆற்றின் பக்கம் போய் விட்டேன்.

ஸ்படிகம் போன்ற களங்கமற்ற ஜலம் மிதமாக இருதரையும் பூண்டோடிற்று. அங்கே நிறைந்த சோக்கும், செவ்விய மேனி

...ரும், இரண்டு புஜங்களும் உடைய வயோதிகர் ஒருவர் ஜலத்தில் ...டகார்த்துகொண்டு நீராடினார்; என்றாலும், உற்று நோக்கின் ...தோ வொரு பெரிய விஷயத்தைப்பற்றி ஆலோசித்துக் கொண் ...டிருப்பதாகத் தெரியாமற் போகாது. அதை வாஸ்தவம் என்று ...திருப்பிக்க அனேக தடவை "பக்தி மிகுந்திடத் தத்துவ முய ...றும்—இதனால்" என்று அவர் வாயினின்றும் ஒருபாட்டின் பல்லவி ...வெளிவந்தது. அந்தக் கேட்டதும் எனக் கொரு பெரிய சந்தே ...கம் உண்டாயிற்று; அதாவது, "பக்தியையும், தத்துவத்தையும் ...உபதேசிப்பது யாது? இதனால் என்றது எதனை?" என்பனவே. ...யோசித்தேன்: ஒன்றும் தெரியவில்லை. உடனே அவரிடம் ...போய்க் கேட்டறிவோம் என்றெண்ணினேன்; அப்பொழுது என் ...மனம் 'மகனே! செல்லுதல் ஒழிக: தனியிடத் தமர்ந்து இதன் ...பொருளைச் சிந்திப்பாயாக' என்றது. சரிதா னென்று அவ் வாற் ...றின் கரையிலேயே உட்கார்ந்து கொண்டு பல நாள் யோசித் ...தேன்; ஒன்றும் தென்படவில்லை. என்றாலும், முயற்சியிற் குன் ...றுதல் கண்ணை மூடிக்கொண்டு, தேக நினைப்பும் அற்று, 'இதனால்' ...என்றதன் பொருளையே சிந்தித்தேன். அப்பொழுது ஒரு நாள் ...மாலை ஒரு ஜோதி மயமான புருஷர் என் பக்கலில் நின்று ...கொண்டு "அப்பா! எல்லாம் தெய்வமயம் என்றெண்ணும் நினை ...வே 'இதனால்' என்பதன் பொருள்" என்று என்னிடம் சொல் ...லாமற் சொன்னர். நானும் அதனைக் கேளாது கேட்டவன் போற் ...கண்களை மூடித்தேன். பக்கத்தில் ஒருவரையும் காணேன். எங்கே ...சென்றார்!

...யோகனே! குருநாதன் பாடல் பாடிய வேஷதாரிகள்— ...இதனால்' என்ற பாட்டின் தோடிய பெரியவர்—'தனியிடத் தம ...ர்ந்து யோசி: தெரியும்' என்ற மனது—தோன்றுமற் றொன்றிக் ...கொள்ளாது சொல்லி மறைந்த மஹோத்தமர்—இவர்களுட் குரு ...நான் யார்! இதனை அறிவதாற் கல்வி கற்பதிற் பயனே இல்லை. ...குருவைத் தேடுங்கள்; வேஷதாரிகளை விட்டு விலகுங்கள். ...உலகம் செழிக்கும்; தர்மம் தழைக்கும்.

...பு. ரே. வி. சுவாமி பாரதி ...சர்மா.

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

(286-ம் பக்கத் தொடர்ச்சி.)

இருவிதச் சக்திகள்:—வஸ்துக்களின் ஸ்திதியை மாற்றுகி ...ற காரணத்திற்குச் சக்தி என்று பெயர் என்று முன்பு கூறி ...னோமல்லவா? அது அளி சக்தி, அழி சக்தி என்று இருவகைப்ப ...டும். அமைதியிலிருக்கும் ஒரு வஸ்துவை அசைவிலிருக்கச் செய்ய முயற்சிக்கும் சக்தி, அல்லது அசைவிலிருக்கும் வஸ்து வின் வேகத்தைப் பெருக்க முயற்சிக்கும் சக்தி. ஆகிய இந்தச் சக்திகளை அளி சக்திகள் என்றழைக்கிறோம். அசைவிலிருக்கும் வஸ்துவை அமைதியடையச் செய்ய முயற்சிக்கும் சக்தி அல்லது அசைவிலிருப்பதின் வேகத்தைக் குறுகச்செய்ய முயற்சிக்கும் சக்தி ஆகிய இவைகளுக்கு அழி சக்திகள் என்ற பெயராயிற்று.

வஸ்துக்களின் ஜடத்தன்மையைச் சார்ந்து விளையும் காரியங் கள்:—வஸ்துக்களின் ஜடத்தன்மை அல்லது தமோகுண விசே ...ஷத்தினால் அசைவிலிருக்கும் எதுவும் தானகவே அமைதியுறாது, அதன் வேகமும் குறுகாது. இத் தன்மையை முன்னிட்டு உல ...கிற் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றிற் சிலவற்றை எடுத் ...துப் பேசி ஆராய்வோம்.

அதிவேகமாக ஒருவன் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென ஒரு கல் தடுக்க அவன் குப்புற விழுகிறான். என்? அவன் ஓடும்பொழுது அவனது உச்சிமுதல் உள்ளங்கால் வரை அவனது சர்வாங்கங்களும் அசைவிலிருக்கின்றன. பின்னர் அவனது பாத ...ங்கள் மாத்திரம் கல்லினால் தடைசெய்யப்பெற்றிட, அப் பாதங் கள் அசைவற்று நிற்கின்றன. அப் பாதங்களைத் தவிர மற்ற உறு ...ப்புக்களின் அசைவோ தடுக்கப்படாமல் மேற்சென்றுகொண்டே யிருக்கிறது. ஆனால் அவ்வுறுப்புக் களாலாகிய சரீர பாகம் அமை ...தியடைந்துவிட்ட பாதங்களோடு பிணைக்கப்பட்டிருப்பதால், அப் பிணைப்பு இழுக்கின்ற அழி சக்தியினால், அசைவில் பாதங்களை விடச் சற்று மேற்சென்ற சரீர பாகத்தின் அசைவும் தடைப் ...பட்டுவிட முனிதன் முகங்குப்புற வீழ்கின்றான். இவ்வாறேதான் குதிரையின்மீது சவாரி செய்கின்றவன் திடீரெனக் குதிரை நிற்

ரத்தில் தளர்ச்சியாகப் படிந்திருக்கிற வஸ்துக்களாகிய தூசிக
ளின் மீழ்நோக்கிய வேகம் மாற்றப்படாமல், அவை அவ்வேகத்
தொடு கீழ்நோக்கியே செல்லுகின்றன. ஆகையால் அவை வஸ்
திரத்தினின்றும் பிரிய வேண்டிய திருக்கிறது.

அடுத்த மழையில் உறழ்ச்சி என்ற ஓர்வித அழி சக்தியைப்
பற்றிப் பேசுவோம்.

பத்திராதிபர்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

---

292 ம- பக்கத்தொடர்ச்சி.

அத்தியாயம் 4.

விசித்திர விசித்திரமான விஷயங்கள் நிறைந்த பூவுலகம் இது. "விசித்திரமா! என்ன விசித்திரம்! விசித்திரமாவது! பசலிக் கீரையாவது!" என்று இகழ்ந்து மறுப்போர் மிகக் குறுகிய சித்தமும் அறிவு முடையவர் கள் என்பது எனது மதிப்பு. விசித்திரங்கள் நிறைந்த உலகம் என்று உணர்ந்து கம்பிளேரே செழிப்புறு சித்தங்கொண்டோர். அன்னேர் எதைப் பற்றிச் சிந்தித்தாலும் கவர்வமாக விசித்திரங்கள் தோன்றிக்கொண்டேயிருக் கும். ஆயினும் மானிட உள்ளம் சித்தம் இவைகளின் தன்மைகளையும் இளர் ச்சிகளையும் ஆராய்ந்து சிந்திப்பதால் தேரும் விசித்திரங்களை ஒரே ஒரு விஷயத்தில் தவிர வான் வேறெந்த விஷயத்திலுங் கண்டதில்லை. அன்பு, வெறுப்பு, உவகை, சோகம், சினம், சாந்தம், பொறுமை, பொருமை முத லிய எத்தனையோ விதக் இளர்ச்சிகள் பிரதிபலித்துக்கொண்டே யிருக்கின் றன சித்தத்திலும் உள்ளத்திலும். இவை காட்டும் விசித்திரங்களில் ஒன்றை மாத்திரம் எனது கதை சம்பந்தமாக இப்பொழுது சாற்ற வேண்டிய திருக் கிறது. என்னவெனில், எப்பொழுது என்ன இளர்ச்சி பிரதிபலிக்கிறதோ, அப்பொழுது சுற்றிலுள்ள எதுவும் அந்தக் இளர்ச்சி மயமாகவே அல்லது அக்இளர்ச்சி சம்பந்தமானதாகவே தோன்றுகிறது. அத்தாட்சி வேண்டுமா? என்னை வண்டியிலேற்றிச் சாவித்திரி வீட்டுக்கு விரு அழைத்துச் செல் லும் பொழுது என் உள்ளத்தில் குதூகலம் குடிகொண்டிருந்தது, என்று முன்னத்தியாய அத்தத்திற் கூறினேனல்லவா. அப்பொழுது வண்டி சென்ற வீதிகளெல்லாம் ஒரு விசேஷ அழகு பொலிந்தனவாய்க் காண்ப் பட்டன, பல வீதிகளைக் கடந்து ஜோதிலிங்கேசுவரர் கோயில் வீதிக்கு வந

தோம். அந்த வீதிதான் எல்லாவற்றிலும் சிறந்ததாக விளக்கிற்று. 61-ம் நம்பர் வீட்டு முன்பு எங்கள் வண்டி நின்றது. அது ஒரு உயர்ந்த மாடிவீடு. அந்த வீதியிலே மற்றும் பல மாடிவீடுகளு முள. ஆனால் இந்த வீடு மாத்திரம் பிரத்தியேகமாக விசேஷ வசீகரமும் கம்பீரமும் பொருந்திய தோற்றமுடையதாக நான் கண்டேன்.

முற்புறம் மரஞ்செடிகள் செறிந்த முற்றமும் அதைச் சுற்றி மதிற் சுவரும் அம்மதிற் சுவரின் நடுவே வாசலும் அமைந்துள்ள தில்லம். உள்ளிருந்து பல கொடிச் செடிகளின் கொடிகள் படர்ந்து சுவரின் மீதேறிக் கவிந்து அதன்மீது ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருந்தன. நல்ல குங்குமத்தின் நிறம் வாய்ந்த ஒருவகைச் சிறிய சிவந்த மலர், கொத்துக் கொத்தாகப் பச்சைக் கொடிகளி னிடையிடையே பதிந்தும், நிமிர்ந்தும், பரவிப் பதிந்தும், பரிதிமிர்ந்தும், நின்றவாறும், அசைந்தவாறும், என்னை நோக்கிப் புன்னகை புரிந்துகொண்டே யிருந்தன. அந்தப் புஷ்பத்தின் பெயர் எனக்குத் தெரியவில்லை. ரோஜாப் புஷ்பத்திலும் கண்ணுக்கு அதிக இனிமையை யூட்டிற்று. வண்டியிலிருந்து இருவரும் இறங்கி வாசலருகே வந்தோம். என் தேகமுழுவதும் ஒரு புதிய புளகிதத்தைப் புருத்திய ஒரு இன்பாட்டுக் குரல் தொனித்தது. செழுமை பசுமை தண்மை மூன்றையும் ஒன்றுறக் கான்று கொண்டேயிருந்த ஒரு வசீகரக் கொடிச்செடிப் பந்தர் வழியாகப் போய் ஒரு தாழ்வாரத்தை நண்ணி அதையுங் கடந்து வீட்டின் முற்கட்டினுள் நுழைந்துவிட்டோம். ஆ! அத்தருணம் என் உள்ளம் உற்ற பேருவகையை ஒருகாலும் என்னால் மறக்க வியலாது. நான் வீட்டினுள் நுழைந்தபொழுதே நான் முன்பு ஒரு போதும் முணர்ந்திராத அற்புதக் கனிவை என் இதயத்திற் பெருக்கி அதி உருக்கமாக இம்மொழிகள் ஒலித்தன:—

"என்னு ளூற்ற உறுதி தன்னில் மின்னு கின்றாள் அன்னையே
என்னு ளூற்ற உவகை தன்னில் மின்னு கின்றாள் அன்னையே
என்னை நோக்கி அன்பி னோடு மின்னு கின்றாள் அன்னையே,

*.....
.....

மின்னுகின்றாள் மின்னுகின்றாள் மின்னு கின்றாள் அன்னையே
என்னு ளூற்ற இன்ப வெள்ளம் என்னை மீறிப் பொங்கியே
பன்னு மிந்தக் கன்னற் பாட்டில் மின்னு கின்றாள் அன்னையே
என்னை நோக்கி அன்பி னோடு மின்னு கின்றாள் அன்னையே.

* விரிவஞ்சி வேண்டிய பாட்டுகள் நீக்கி விடப்பெற்றன. ஆசிரியன்.

மூன்றாவது வரியைப் பாடி முடிக்குந் தறுவாயில் நான் தாம்வாரத்திலிருந்து உட்புகுந்துவிட்டேன். ஒரு பாயின் மீதிருந்து வீணையை மீட்டிப் பாடிக்கொண்டிருந்த பாலிகை பாட்டை நிறுத்தி எழுந்து பாலையாக நின்றனள். அவளது அன்னையும் எழுந்து என்னை உபசரிக்கலாயினள். ஒரு பீடத்தில் அமர்த்தப் பெற்றிருந்த படத்தில் புஷ்பங்களால் அலங்கரிக்கப் பெற்று அற்புத சௌந்தரியத்துடன் ஸ்ரீ சாரதாதேவி என்னையே நோக்கி மின்னுகின்றதைக் கண்டேன். அவ்வம்மணியின் முன்பு சில நிவேதனங்கள் சமர்ப்பித்தப்பெற்றிருந்தன. இரண்டொரு நிமிஷம் சில உபசார உரைகள் வழங்கிய பின்னர் நால்வரும் பாயின்மீ தமர்ந்தோம். சாவித்திரி மீண்டும் வீணையை மீட்டிக்கொண்டு முற்கூறிய பாட்டுகளைப் பாடலா யினள். அப்பாட்டுகள் சாதாரணமான பாட்டுகளாகவே நேயர்களுக்குத் தோற்றலாம். ஆனால் அவைகளைப் பாடிய தன்மையிருக்கிறதே அந்தத் தன்மை அந்தப் பாட்டுகளுக்கு அற்புதமான சக்தி யளிக்கின. அர்த்தசார்ந்த பாட்டுகள் என் மனத்தை உருக்கி, என் சித்தத்தில் நிறைந்திருந்த கொள்கைகளைக் கலக்கிப் பல புதிய எண்ணங்கள் அடியோட் புரண்டு பொங்கச் செய்தன. இவ்விஷயத்தைத் தெளிவாய் விளக்க என் சித்தத்தில் முன்னர் நிறைந்திருந்த கொள்கைகளை விவரிக்கவேண்டும். அதற்காக எனது பழங்கதையைச் சற்றுக் கூறுகின்றேன்.

வாய்மை, அடக்கம், அற்பப் பிராணிகளிடத்திலும் இரக்கம் என்ற குணங்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே என் உள்ளத்தில் ஆழப் பதித்து வளர்த்தனள் என்னம்மாள் என்று முன்னமே கூறியிருக்கிறேன். ஈசுவர பக்தி என்ற குணத்தை அவள் வளர்க்கவில்லையா, என்ற சங்கை சிலருக்குத் தோன்றியிருக்கலாம். உண்மையில் என் அம்மாள், தான் அறிந்த மதத்தையும் ஈசுர பக்தியையும் சிறு பிராயத்திலேயே எனக்குப் புகட்டினள். நமது புராண இதிகாசங்களை யெல்லாம் நான் வாசிக்கும்படி செய்தனள். அவைகளிற் கூறப்பட்ட பல தேவதைகளிடத்து நான் பிரேமையும் பக்தியுங் கொள்ளச் செய்தனள். ஆனால், நேயர்களே! என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளுங்கள். நான் என் சரித்திரத்தை உண்மையாகக் கூறிவிடுகின்றேன். நான் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயின்றதில், அங்கே கற்பிக்கப்படும் சிறந்த நியாயாதாரக் கல்வி (Rational education) என்பால் வளர வளர நான் கடைப்பிடித்திருந்த வைதிகக் கொள்கைகளிலும் ஆசாரங்களிலும் சிறிது சிறிதாக எனக்கு நம்பிக்கை குறைந்து பற்பல விதச் சந்தேகங்கள் எழுந்தன. இந்திரலோகம் முதலிய அநேக லோகங்களும் அவற்றில் சரீரத்துடன் அமர்ந்த பல தேவர்களும் உளர் என்று நான் உறுதியாகக் கொண்டிருந்த நம்பிக்கை நைந்துவிட்டது. உலகம் எவ்வாறு உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று? மானிடன் யார்?

மரணத்திற்குப்பின் வாழ்வு உண்டா? உளதாயின் என்ன வாழ்வு? என்பன வாதியவிஷயங்களைப்பற்றிய சந்தேகங்கள் எனது சித்தத்தை வருத்திக்கொண்டிருந்தன. நான் சந்திக்க நேரிட்ட பண்டிதர்கள் ஒவ்வொருவரிடமும் என் சந்தேகங்களைக் கூறியும் என் சித்தம் தெளிவடையவில்லை. ஈசுரன் சகலவற்றிற்கும் காரணமாய் நின்று சகலவற்றையும் நிகழ்த்துகின்றான், அவன் மனவாக்கிற் கெட்டாதவன், மரணத்திற்குப் பின் கர்ம பந்தத்திற் கிணங்கவாறு ஜன்மம் உண்டு, என்றவாறு அவர்கள் பல விஷயங்களைக் கூறினார்கள். ஆனால் தெளிவான பிரத்தியட்சாசாத்தியமாவது நியாயாதாரத்தையாவது முன்னிட்டு அவ்விஷயங்கள் உண்மைதான்என்று என் சித்தத்தில் நிச்சயமாக நிரூபணஞ் செய்துகொள்ளக் கூடவில்லை. என் செய்வேன்! நானே என்னுள் ஆலோசித்து ஆலோசித்து உழன்றேன். அவ்வாறு ஆலோசித்ததில் கடைசியாக ஒரு நிட்டமான நிர்மானத்தை மாத்திரம் உறுதியாகப் பற்றியது என் சித்தம். அந்நிர்மானமாவது:—

"இவ்வுலகு எவ்வாறு தோன்றிற்று எவ்வாறு நிகழ்கின்றது என்றால் "கடவுளால்" என்கின்றனரும் ஆஸ்திகன். "இயற்கையால்" என்று நாஸ்திகன் சொல்லுகின்றனரும். நிகழ்கின்ற விஷயங்களை நான் காண்கின்றேனேயன்றி ஆஸ்திகனது கடவுளின் தன்மையையும் நாஸ்திகனது இயற்கையின் தன்மையையும் நான் அறிந்துகொள்ளக் கூடவில்லை. அவ்வாறுயின் அவ்விரண்டுக்குமுள்ள வேற்றுமைபாட்டை எவ்வாறு அறிதலியலும்! நிகழ்கின்றது நிகழ்கின்றது. என்? எதை, அதை அறியக் கூடவில்லை. அது கடவுளுடைய விருப்பம், அது இயற்கையின் காரியம், என்று ஏ! ஆஸ்திக நாஸ்திகர்களே! நீங்களாகக் கடவுள் இயற்கை என்ற என்னவோ வார்த்தைகளை வழங்கி ஆஸ்திக நாஸ்திகர் என்ற என்னவோ பட்டங்களைத் தரித்துக் கொண்டு என் கண்டையிடுகிறீர்கள்? நிகழ்கின்றது நிகழ்கின்றது. அதைக் காண்கின்றேன். உங்கள் வார்த்தைகளும் பட்டங்களும் எனக்கு அர்த்தமாகவில்லை.

மரணத்திற்குப் பின்பு வாழ்வு உண்டு என்கிறான் ஆஸ்திகன். இல்லவே இல்லை, மரணம் என்பது கனவற்ற தூக்கம் நிகர்த்த ஒரே தூக்கம் என்றறைகின்றான் நாஸ்திகன். அடபோ! நீ சொன்னதுதான் உண்மையென்று பிரத்தியட்சத்திற் கண்டறிந்தவர் யார்? என்று இருவரில் ஒவ்வொருவரையும் கடாவுகின்றேன். மரணத்திற்குப் பின் வாழ்வு உண்டென்பதும் இல்லையென்பதும் நீக்களாக அமைத்துக் கொள்கிற கொள்கைகளேயன்றி உண்மையை அறிபவரில் யார்? அதையால் ஏ! சித்தமே! இவைகளைப்பார் ஒருகாலும் தெளிவுறவியலாத சந்தேகங்கள். இவைகளை மறந்துவிடு. உனக்குத் தெளிவையும் அமைதியையும் இன்பத்தையும் அளிக்கும் வாழ்வை நாடு. அதற்கு வழி, ஆண்டவனம்மான் நூலின்மையில் உனக்குப்

புகட்டிய உள்ளப் பரிசுத்தத்தையும் நற்குண நல்லொழுக்கங்களையும் உறுதியாகக் கொண்டொழுகுதலே. அவ்வாறொழுகுதல்தான் இவ்வுலகில் இன்பமயமான உன்னத வாழ்க்கையைத் தரும் மார்க்கம். மரணத்திற்குப் பின்பு ஜனனம் உண்டு என்ற ஆஸ்திகக் கொள்கை உண்மையாயிருந்தாலும், இந்த மார்க்கம் மரணத்திற்குப் பின்னும் உன்னைச் சுக வாழ்வுக்கே கூடத்தும். நாஸ்திகன் நம்புகிற பிரகாரம் மரணத்திற்குப் பின் ஒன்றுமேயில்லாமலிருந்தபோதிலும், இந்த மார்க்கத்தால் மரணம்வரை இவ்வுலக வாழ்க்கையில் நீ சுகமடைகிறாய். ஆகையால் இம்மார்க்கத்தை உறுதியாகப் பற்று. கடவுள், இயற்கை, மரணம், ஆஸ்திகன், நாஸ்திகன் இவைகளையெல்லாம் பற்றிச் சிந்தித்து நீ வருந்தலே வேண்டாம். நியாயாதாரத்திற்கும் (reason) பிரத்தியட்சாதாரத்திற்கும் ஒத்திராத எதையும் நீ நம்பாதே."

இத்தீர்மானத்தை நண்ணியது என் சித்தம். இதை யுற்ற பின்னரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் மத சம்பந்தமான அநேக புத்தகங்களை வாசித்தேன். என்ன வாசித்த போதிலும் என் தீர்மானம் ஒன்றையே பற்றியிருந்தேன். மற்றையவாறு கோயில், பூஜை, தேவதை, விக்கிரகம், பக்தி, பஜனை, ஒன்றிலுமே எனக்கு நம்பிக்கை கிடையாது. இவைகளனைத்தையும் உபேட்சித்தேன். இவைகளை ஜனங்கள் அநுசரிப்பது எனக்கு விநோதமாகவும் பரிதாபமாகவு மிருந்தது.

இனிச் சாவித்திரி வீட்டுக்குச் சென்றிருந்த கதையைக் கவனிக்கலாம். இது வரையில் பக்தியும் பாட்டும் விக்கிரகமும் பூஜையும் என் எனத்திற்கும் பரிதாபத்திற்கும் பாத்திரமா யிருந்தன. ஆனால் என்ன விசித்திரம்! என்ன விசித்திரம்! சாவித்திரியின் கண்டத்திலிருந்து ஒலித்த "மின்னுகின்றாள்" என்ற பாட்டும், பீடத்திலிருந்த சரஸ்வதி படத்தின் காட்சியும், என் நெஞ்சை உருக்கி என் சித்தத்தில் ஒரு அற்புதமான பிரேமையும் உற்சாகமும் எழச் செய்தன. சாவித்திரி வீணையை மீட்டிக்கொண்டே சரஸ்வதியன்னையை உற்று நோக்கியவாறே பாடிக்கொண்டிருந்தாள். அவளது மாதாபிதாக்கள் கைகூப்பியவா றுட்கார்ந்திருந்தனர். மாதாமாத்திரம் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். நானும் மனப்பூர்வகமான விநயத்துடன் கைகூப்பிக்கொண்டு சாரதா தேவியின்பாலும் சாவித்திரியின்பாலும் மாறி மாறி என் பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் ——நேயர்களே! நீங்கள் நம்புவீர்களோ என்னவோ! யார் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விடுகிறேன்.—— சற்று நேரத்தில், சாரதாதேவியை நோக்கிக் கொண்டிருந்த சாவித்திரியின் இரு விழிகளிலிருந்தும் முத்து முத்தாக ஜலம் வழிவதைக் கண்டேன்.

பூஜை நிறைவேறியது. விபூதி குங்குமப் பிரசாதங்களை நால்வரும் பரிசுத்துக்கொண்டு நிவேதனங்களிற் கொஞ்சம் பகிர்ந்து புசித்தோம். பின்

னர் என்னு நும்ப வரலாற்று யோக க்ஷேமங்கள் முதலியவைகளோப்பற்றி விசாரித்தார்கள் சாவித்திரியின் பெற்றோர்கள். மற்றும் எவ்வெவ்வளவோ விஷயங்களோப்பற்றி நாமிருவரும் பேசிக்கொண்டிருந்தோம். அவைகளோ யெல்லாம் இங்கே கூறல் ஆவசிக மன்று. ஆவசிக மானவற்றை மாத்திரம் சொல்லுகின்றேன். வெகுநேரம் மௌனமா யிருந்த சாவித்திரி திடீரென என் முகத்தை நோக்கி "உங்கள் பெயரென்ன?" என்றாள்.

நான் ஒரு கங்கையைப்போல் லஜ்ஜையுற்று, "ம்ம்ம்! என் பெயரா! ஜனகம். இல்லை, ஜனகாஜன். ஆனால் ஜனகம் ஜனகம் என்று எல்லோரும் என்னை அழைப்பார்கள்." என்றேன்.

"பாடத் தெரியுமல்லவா உங்களுக்கு?" என்று அடுத்த பேச்சு சாவித்திரியின் அதரங்களில் புன்னகை அலரப் புறப்பட்டது. பதினயிரம் பெண்கள் சூழ்ந்து கைகொட்டி என்னைப் பரிகசித்தாலும் நான் சகித்துக் கொள்வேன். இந்த ஒரு பெண்ணின் இந்த ஒரே வினாவினால் என் மனம் என்ன பாடுபட்டதம்மா! என்ன பாடுபட்டும் என்செய்வது. கேட்ட கேள்விக்கு உத்தரவு கூறியாகவேண்டும். 'தெரியாது' என்ற வெட்கங்கெட்ட பதிலையும் மௌனமாகச் சொல்லிவிட்டேன். "என், உங்கள் காந்திமதி பாடுவாளோ" என்றனள். "ஆமாம் காந்திமதி பாடுவாள்" என்று நான் சொல்வதின்னதென்று மறியாமல் இளிப்பின்னோவைப்போல் கூறினேன். "ஆமாம் காந்திமதி மிக அழகாய்ப் பாடுவாள். அவள் வீணை வாசிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். நான் கற்றுக்கொடுக்கிறேன். நீங்கள்கூடக் கற்றுக்கொள்ளலாம். ஒன்றும் தெரியாத எனக்கே சுலபமா யிருந்தது. நன்றாய்ப் படித்த நீங்கள் வெரு சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம்" என்று வார்த்தைகளோத் தாராளமாக அடுக்கினாள். முன்பு நான மௌனஞ் சாதித்திருந்த சித்திரப்பேதை, சங்கீத சாஸ்திரியங்களோ எப்பொழுதும் பழித்துச் சிரித்துக்கொண்டிருந்த எனக்குப் புதிதாக அவற்றில் மதிப்பும் ஆர்வமுமுண்டாயின. என்? அதுதான் எனக்குத் தெரியாது. அது மனம் என்ற சூக்கும வஸ்துவில் நிகழும் விசித்திரங்களில் ஒன்று என்றுதான் சொல்லலாம்.

சங்கீதப் பேச்சு வளர்ந்தது. கடைசியாக, காந்திமதி வீணை வாசிக்கக் கற்பதாகத் தீர்மானமாயிற்று. மற்றும் பல விஷயங்களோப்பற்றி யுரையாடினோம். அன்றிரவு நான் அவ் வகத்திலேயே தங்கிவிடும்படி மன்றாடினர்கள் மூவரும். எங்கள் வீட்டுக்கு மீண்டும் போய் இவ் விஷயத்தை என் பெற்றோர்களுக்கு அறிவித்து வருவதாகவும் சொன்னேன். சாவித்திரியின் தந்தை. ஆயினும் நான் இணங்கவேயில்லை. அவர்கள் அதிக வருத்தமுற்றார்கள். ஆனால் என் ஆண்டாளம்மாளுக்கு நான் இன்னும் செல்லக் குழந்தையா யிருக்கும் உண்மைத் தன்மையை அவர்கள் அறிந்திருந்தால் அவ்வளவு

வருத்த மடைந்திரார்கள். பின்னர் நான் ஒன்று வேண்டினேனேன். சாவித்திரியை, என் அம்மாள் பார்த்து அவள் வீணைவாசிப்பதையும் கேட்கவேண்டுமென்றும், அவள் தன் வீணை சகிதம் எங்கள் வீட்டிற்கு வந்து அன்றிரவு தங்கவேண்டுமென்றும் கோரினேன். இதற்கு அவள் பெற்றோர்கள் முதலில் சற்று மனமில்லாதர்களா யிருந்தார்கள். ஆனால் சாவித்திரி பூரண விருப்பங்கொண்டிருந்தாள். ஆகையால் அவர்களும் சம்மதித்துவிட்டார்கள். சற்றுநேரத்தில் சாவித்திரி, அவள் வீணை, அவள் தந்தை, நான் ஆகிய நால்வரும் வண்டியிலேறி எங்கள் வீட்டுக்கு வந்தோம். என் தந்தையும் சாவித்திரியின் தந்தையும் மித்திராயினர். புதிய கட்பேயாயினும் இருவர் அகத்திலும் விட்ட குறையைத் தொட்டதுபோல "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்" என்ற மெய்மறைப் பொருள் பிரத்தியட்சமாகத் துலங்கலாயிற்று. சுமார் ஒன்பது மணிவரையில் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். பின்பு சாவித்திரியின் தந்தை மாத்திரம் அகன்று போயினர். போஜனத்திற்குப் பிறகு அர்த்தராத்திரிவரையில் என் அம்மாள், சாவித்திரி, வீணை, காந்திமதி, நான் ஆகிய ஐவரும் குலாவினோம். சாவித்திரி பல பாட்டுகள் பாடினாள். காந்திமதியும் பாடினாள். என்னென்னவோ விஷயங்களைப் பற்றிப் பேசினோம். அவைகளையெல்லாம் இங்கே விவரிப்பானேன்.

(தொடரும்.)

ஸ்ரீ ஜப்தன்.

சீதா கல்யாணம்.

ஸ்ரீ ராமசரான் சீதாபிராட்டியைக் காணல்.

'மாடுதின்னும் பறையா—உனக்கு—மார்கழித் திருநாளா" என்ற மெட்டு.

63. மேனகை கண்வலையில்—சிக்கு—மகரிஷி மைந்தருடன்
கானகி வாசசுபம்—நிறைந்த—மிதிலை புகுந்தனரே.

64. பசிய பயிர்க்கதிர்கள்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
நசிவறு நகைமுகங்கள்—பணிந்து—நலமாய் மகிழ்ந்தனவே.

65. பங்கயப் பூக்களெலாம்—பரிந்து—பார்த்திட ராமர் முகம்
மங்கள மாகவெழில்—பரப்பி—மலர்ந்து மகிழ்ந்தனவே.

66. படர்ந்த பசும்பொழில்கள்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
இடந்தொறும் நறுமணங்கள்—கமழ்ந்து—இனிது மகிழ்ந்தனவே.

67. பனிமலர் வண்டுபல—பரிந்து—பார்த்திட ராமர் முகம்
இனிப்புறு மதுவைமிக—மாந்தி—இசைந்து மகிழ்ந்தனவே.

68. பறவை யினம்பலவும்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
இறைவனே மங்களமென்—றிசைத்து—இனிது மகிழ்ந்தனவே.

69. பரந்த மணிக் கொடிகள்—பரிந்து—பார்த்திட ராமர்முகம்
புரவல வருகவென்றே—அழைத்துப்—போற்றி மகிழ்ந்தனவே.

70. தையலர் மாடங்களில்—கையில்—தாங்கிய யாழிசைத்துச்
செய்யதேன் இன்குரலில்—கீதம்—செப்பி மகிழ்ந்தனரே.

71. நிழல்தரு கன்மாங்கள்—தாங்கு—கீள்கயி றூஞ்சலாடி
குழல்குலந் திருநங்கையர்—இனிது—குலாவி மகிழ்ந்தனரே.

72. மகரிஷி கௌசிகரும்—மன்னர்—மைந்தராம் சீடருக்கு
நகரத்தின் நல்வளங்கள்—நலமாய்—நவின்று மகிழ்ந்தனரே.

73. ஊனமில் வேள்விமுடி—முனிவர்—ஒப்பிலா வீரருடன்
ஜானகி கன்னிமாடம்—அருகே—சார்ந்து மகிழ்ந்தனரே.

74. செப்பரும் வண்ணமமை—எங்கள்—ஸ்ரீராமர் திருமுகத்தை
உப்பரி கையிருந்தே—சீதை—உற்றுநோக் கிட்டனளே.

75. மன்னிய பேரழகை—மண்ணு—மங்கையாம் ஜானகியின்
கன்னிமா டத்தைநோக்கி—ராமர்—கண்ணெளி நிலவியதே.

76. கயலெனு மீன்கடித்த—சீதை—கண்களோ ராமருற்று
வியந்திட்டு நோக்கிடவே—சீதை—வியாகுல மாய்மகிழ்ந்தாள்.

77. மேனகை கண்வலையில்—சிக்கு—மகரிஷி சீடர் ராமர்
ஜானகி கண்வலையில்—சிக்கி—சஞ்சல மாய்மகிழ்ந்தார்.

78. எண்ணி லருந்தவஞ்செய்—முனிவர்—எதிர் மைந்தருடன்
தண்ணிடை ஜானகியும்—தனித்து—நொந்தகம் வாடினளே.

கோகிலத்தோணி.

காயம் பிணி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

உடற் கூறுபாடு.

309-ம் பக்கத் தொடர்ச்சி.

இம்மழையில் பிரசுரிக்கப்படும் பாகத்தில் வழங்கும் சாஸ்திரார்த்தமான பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

மாமிசம், சதை, இறைச்சி, வயிண், தசை, பேசி.	Muscles.
மாமிசத்தந்தி, தசைநார், வன்னரை, அல்லது கண்டரம்.	Tendon.

ஆரம்ப முனை.	Origin.
இணைந்து போகிற முனை.	Insertion.
மனதுக்கைக்கிய சதைகள் அல்லது ஸ்வதந்திரப் பேசிகள்.	Voluntary muscles.
மனதுக் கைக்கிய மில்லாத சதைகள், அல்லது பரதந்திரப் பேசிகள்.	Involuntary muscles.
நரம்பு மண்டலம்.	Nervous system.
ஐக்கிய நரம்புகள் அல்லது ஒற்றுணர் வுள்ள நரம்புகள்.	Sympathetic nerves.
வெளியடக்குக் கவுரச் சில்லி.	Superficial Fasciae.
உள்ளடக்குக் கவுரச் சில்லி.	Deep Fasciae.
கொழுப்பு அல்லது மேதம்.	Adipose tissue, Fat.

மாமிசம். பிரதி பதங்கள்:—சதை, இறைச்சி, ஊன் தசை, பேசி. மனிதன் தேகத்தி லிருக்கிற மெதுவான சிவப்பு வர்ண முள்ள தசை இழைகள் அநேகம் ஒன்று சேர்ந்து தேகத்திலுள்ள மாமிசம் ஆகின்றன. இவை தேகத்தில் நடந்தேறும் சகல விதமான அசைவுகளுக்கும் ஆதாரமான கருவிகளா யிருக்கின்றன. தசைகளில் சில அகலமாயும் சில நீண்டு மிருக்கும். சில இடங்களில் ஐந்து ஆறு அடுக்குகள் சேர்ந்து ஒரு விரிபடலப் போலவும் சில பகுதிகளில் ஒரு அடுக்காயும் வைக்கப் பட்டிருக்கின்றன. எலும்போடு ஒட்டிக் கொண்டிருக்கிற மாமிச முனைகள் வெளுத்துப் பல ரூபங்களா யிருக்கும். சில, நரம்புகளைப் போல் நீண்டும், சில அகலமாயு மிருக்கும். இந்த முனைக்கு, மாமிசத்தந்தி, அல்லது வன்னரை, அல்லது கண்டரம் என்று பெயர். பேசிகள் பெரும்பாலும் நடுவில் பெருத்தும் இரண்டு முனைகளில் குறுகியும் கயிறுகளைப்போல் வன்மை யுள்ளவைகளாயு மிருக்கும். மாமிசத்தின் துவக்கத்திற்கு ஆரம்ப முனை என்றும், முடிவுக்கு இணைந்து போகிற முனை என்றும், மத்திய பாகத்திற்கு உடல் என்றும் சொல்லப்படும்.

நமது சரீரத்தில் இரண்டு ஜாதி சதைகளுண்டு; (1) மனதுக்கேற்றபடி அசையும், மனதுக்கைக்கிய சதைகள், அல்லது ஸ்வதந்திரப் பேசிகள் (2) தற்செயலாய் அசையும் மனதுகைக்கிய மில்லாத சதைகள் அல்லது பரதந்திரப் பேசிகள். மனதுக்கு வசப்படாத இப் பரதந்திரப் பேசிகள் இரைப்பைக் குடல்களின் சுற்றுத்தசைகள், சுவாசக்குழாய்கள், இரத்தக் குழாய்கள் ஆகிய இவைகளிலும், இரத்தாசயத்தில் விசேஷ வடிவுடனும் காணப்படும். இவை நாம் விழித்தக்கொண்டு சுறுசுறுப்பாகக் காரியங்கள் செய்துவரும் போதும் நித்திரைசெய்யும் போதும் நமது உயிர் வாழ்க்கைக்கு அவசியமான வேலைகளை நமக்குத் தெரியாமலே ஒழுங்காக நடத்திவருகின்றன. இந்த

மாமிசப்பேசிகளை ஒழுங்காக நடத்திவருவதற்கென்று நாம்பு மண்டலத்தில் சில பாகம் தனியாக ஏற்பட்டிருக்கிறது. பின் சொல்லப்போகும் ஜக்கிய நரம்புகளின் முறையில் இதைப்பற்றிப் பேசுவோம்.

மனிதன் அறிவுக் குட்பட்ட பரதந்திரப் பேசிகள் பெரும்பாலும் தலை, கழுத்து, கால், கை, உடல் முதலியவைகளின் வெளிப்புறத்தில் தசைகளின் மூலைகளிலுள்ள வண்ணசைகளின் மூலமாய் எலும்புகளுடனும், அல்லது வேறு சில பேசிகளோடும் பலமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பேசிகள் ஒன்றோடொன்று சேரும்படி வலைபோலொத்த கவுசிலில்லி என்ற உறுமான சவ்வினால் மூடப்பட்டிருக்கின்றன. இது தோலை யடுத்திருக்கையில் வெளியடுக்குக்கவுசிலில்லி என்றும், பேசிகளுக்கு மத்தியிலிருக்கையில் உள் அடுக்குக் கவுசிலில்லி என்றும் சொல்லப்படும். சிறிது மஞ்சள் நிறமுள்ள கொழுப்பு அல்லது மேதம் பேசிகளைச் சுற்றிலும், இடை வெளிகளிலு மிருக்கின்றது. இக்கொழுப்பு அதிகப்பட்டிருந்தால் சரீரப் புஷ்டியைக் காண்பிக்கும். இது மானிட தேகத்தில் பள்ளமாயிருக்கிற ஸ்தானங்களைத் தூற்றிக்கொண்டு சருமத்துக் கடியில் இருக்கும். குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் கொழுப்பு அதிகமாயிருக்கு மாகையால் இவர்கள் சரீரம் திரண்டு பருத்துக் காணப்படும். வயது சென்றவர்களில் கொழுப்பு மெத்தக் குறைந்திருக்கும். தேகம் பல விதங்களில் அசைவதற்கேற்றவாறு இந்தப் பேசிகளுக்குச் சுருங்கவும் மீண்டும் நீளவும் சக்தியுண்டு. கண் சிமிட்டுதல், நாக்கை மீட்டுதல், கை கால்களை அசைத்தல், அபிநயம் செய்தல், சம்மட்டியடித்தல் இவை முதலிய சலனங்கள், மாமிசங்களால் உண்டாகின்றன.

உதாரணம்.

1. நெற்றிச் சதை சுருங்கினால், புருவங்கள் மேலுக்குப் போகும்.
2. கண் குழிகளைச் சுற்றிக்கொண்டிருக்கிற சதைகள் சுருங்கினால் கண்கள் மூடிக்கொள்ளும்.
3. மூக்கடியிலிருக்கிற சதைகள் சுருங்கினால், மேலுதடு உயரும்.
4. உதடுகளின் சதைகள் சுருங்கினால், வாய் மூடும்.
5. கழுத்தை முன்புறத்தைச் சதைகள் சுருங்கினால், தலை முன்னுக்குவளையும்.
6. பிடரிச் சதைகள் சுருங்கினால், தலையை நிமிரச் செய்யும்.
7. சரீர முன்புறத்துச் சதைகள் சுருங்கினால், உடம்பு முன்னுக்கு வளைந்து, விலாவெலும்புகள் கிழிறங்கும்.
8. முதுகுச் சதைகள் சுருங்கினால், முதுகு நிமிரும்.

9. புஜத்தின் முன்பக்கத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கை மடங்கும்.
10. புஜத்தின் பின்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கை நிமிரும்.
11. தொடையின் முன்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கால் நிமிரும்.
12. தொடையின் பின்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கால் மடங்கும்.
13. கெண்டைச் சதைகள் சுருங்கினால், பாதம் பின்னுக்கு வளைந்து, விரல்கள் வளையும்.

சோமங்களின் அடிப்பாகம் பேசிகளின் இழைகளினால் மூடப்பட்டிருக்கிறது; இவைகள் சுருங்குவதினாலேதான் மயிர்க்கூச்சல் உண்டாகிறது.

பேசிகளைச் சுற்றிலும் ஓடித்த நாடிகள் ஓடிப்பேசிகளைப் போஷிக்கச் செய்கின்றன.

(தொடரும்.)

ரே. கோவிந்தசாமி நாயுடு.
மெடிக்கல் பிராக்டிஷனர்,
தூத்துக்குடி.

ஐரோப்பாக் கண்ட சரித்திரம்.

307-ம் பக்கத்தொடர்ச்சி.

கிரேக்கர்கள் சீர்குலைவதற்கு முன்பே கிரீஸுக்கு மேற்கில் உரோமாபுரி பலத்துக்கொண்டிருந்தது. உரோமர்கள் கிரேக்கர்கள் வமிசத்தைச் சார்ந்தவர்களே. கிரேக்கர்கள் மனோபாவத்தால் உலகிற்கு நன்மை பயந்தார்கள். உரோமர்களோ தங்கள் செய்கைகளால் நன்மை விளைத்தார்கள். உரோமர்களும் சிற்ப முதலிய சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் தத்வஞானத்திலும் சிறந்திருந்தாலும் அச்சிறப்பு கிரேக்கர்களிடமிருந்து அடைந்ததே. இராணுவ முறைகளிலும், இராஜ்ய முறைகளிலும், சட்டதிட்டங்களிலும் உரோமர்கள் உலகத்திற்கு மிகவும் உழைத்திருக்கிறார்கள். கிரேக்கர்கள் சமூக வாழ்க்கையில் சுயேச்சையையே பிரதானமாகக் கருதினார்கள். உரோமர்களோ ஜனசமூகத்திற்கும் இராஜாங்கத்திற்கும் ஜனங்களும் குடிகளும் ஒற்றுமையுடன் சகோபித்து உழைக்கவேண்டுமென்று கருதினார்கள். ஒற்றுமை, விடாமுயற்சி, விசுவாசம், கீழ்ப்படிதல் முதலிய குணங்கள் நிறைந்திருந்தார்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற

தற்ஞானையப் பெற்றோர்களே மரித்துவந்தபடியால் உரோமர்கள் இராஜ்ய பரிபாலனத்தைத் தங்கள் கையில் எல்லாவற்றிலும் பிரதான வகிப்பதாக வைராக்கியத்தை நிலைநிறுத்தினார்கள். உரோமாபுரிக்கு நிக்கலியா என்ற தேசம் கிரிகைக் காட்டிலும் வளப்பத்திற் சிறந்த மலைகள் அவ்வளவு அதிகமில்லாததாயிருக்கிறது. ஆனால் இத்தாலியில் கீளத்தில் இருந்து கரைக்குச் சமீபமாக அபினைன்ஸ் என்ற மலைத்தொடர் ஓடுகின்றபடியாலே போன்ற ஒரு சிறு நதிகள் மற்ற நதிகள் யாவும் மேற்கேநோக்கிப் பாய்கின்றன. அந்நதிகளில்லேகமாய்ப் பாயும் சுவர்ண நிறமான டைபர் என்ற ஆற்றின் முகத்துவாரத்தினின்று காத வழித் தூரத்தில் உரோமாபுரி ஓங்கி வளர்ந்தது. அரண்கள் போல ஏழுமலைகள் அந்நகரைக் காத்தன. ஆற்றை எதிர்த்து உரோமாபுரி வரையிலும் கப்பல்கள் சென்றன; ஆகையே பலமான வியாபாரஸ்தலமாக விளங்கிற்று. மத்தியதரைக் கடலின் கடலிலுள்ள இத்தாலியாவின் நிரிருகயம் போன்ற உரோமாபுரி, சகாதியத்தை ஸ்தாபிக்க, தகுந்த ஸ்திதியி லிருந்தது. இத்தாலியில் பல வருப்பினர் வசித்தார்கள். வடக்கில் 'காலர்' களும் மத்தியில் 'லாடினர்' களும் தெற்கில் கிரேக்கர்களுமாகப்பலர் வசித்தனர். ஆதியில் உரோமாபுரியில் கிரேக் நகரங்களில் நடந்த வண்ணம் அரசன், சபை, கூட்டம் என்ற மூன்று அங்கத்தினருடைய இராஜ்யபாரம் நடந்தது. உரோமாபுரியில் சப்த அரசர்கள் ஆண்டார்கள். ஆனால் 510. கி.மு. இல் உரோமர்கள் அரசர்களைத் தள்ளிவிட்டுக் குடியரசை ஸ்தாபித்தார்கள். உரோமர்கள் சரித்திரம் இரு பாகுபாடுகளாகின்றது; அவர்கள் சிறிது சிறிதாக இத்தாலியை முழுவதும்வென்றது ஒன்று, மற்றது நகர அரசாட்சியை ஒழுங்கு படுத்தி, சச்சரவு செய்து கொண்டிருந்தவர்களைச் சரிப்படுத்தியது.

முதலில் உரோமர்களின் உள்நாட்டுச் சரித்திரத்தைக் கவனிப்போம். அரசர்களைத் தள்ளியதும் அரசனுடைய அதிகாரங்களை அதிகாரிகளிடம் பகிர்ந்து கொடுத்தார்கள். 'கான்சல்ஸ்' என்ற அவ்வதிகாரிகளை வருடந்தோறும் தேர்ந்தெடுத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்தில் அக் கான்சல்களே தளகர்த்தர்களாயும் நியாயாதிபதிகளாயும் அமைந்தார்கள். பழைய சபை முன்போலவே நின்றது. ஆனால் காலனில், 'சினேட்' என்ற அப்பெரியோர் சபை சகல அதிகாரத்தையும் கிரகித்து விட்டது. ஜனங்களின் கூட்டம் இரண்டு மூன்று வகையாகக் கூட்டப்பட்டது. கூட்டத்தாராகவோ, சதகத்தாராகவோ, 'பிளபியன்' என்ற வருப்பினராகவோ ஜனங்களைக் கூட்டுவார்கள். உரோமாபுரியில் ஜனங்கள் இருவருப்பினராயிருந்தார்கள். "பெட்டிரீவியன்ஸ்" என்ற பூர்வீகமுதல் செல்வாக்குடையவர்களும், 'பிளபியன்ஸ்' என்ற சாதாரண ஜனங்களுமே. இருநூறு ஆண்டுகளுக்கு இவ்வருப்பினர் சச்சரவே பிரதானமாக விருந்தது. இம்மாதிரிச் சச்

சரவுகள் கிரீஸிலோ தற்காலத்து இராஜ்யங்களிலோ உண்டாயிருந்தால் இராஜ்யப் புரட்சிகள் நிகழ்ந்திருக்கும். ஆனால் அரசாங்க முறையில் பிறந்த உரோமர்களோ ஒரு பொட்டு இரத்தம் சிந்தாமல் சட்டமுறையில் சகல விஷயங்களையும் சீர்ப்படுத்திக் கொண்டார்கள். 494 கி. மு. இல் கடன் சட்டத்தின் கொடுமைக் கஞ்சி பிளபியன்ஸ், பக்கத்திலுள்ள மலைப் பிரதேசத்திற் குடியேறத் தீர்மானித்தார்கள். அவர்கள் நகருக்கு ஆவசியகமாயிருந்தபடியால் 'பெட்டிரிவியன்ஸ்' அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்துத் திரும்ப அழைத்துக்கொண்டார்கள். பிளபியன்ஸ் வகுப்பினருக்கு 'இட்டைல்ஸ்' என்ற அதிகாரிகள் வழங்கப்பெற்றனர். அவ்வதிகாரிகள் இரு வகுப்பினருக்கும் மத்யஸ்தர்களாயும், பிளபியன்ஸ் வருப்பினர்களுக்கு நியாயாதிபதிகளாயும், கூட்டத்தாரின் சங்கங்களை அழைப்போராயும் பல சாதகமான அதிகாரத் தொழில் நடத்தி வந்தார்கள். பிறகு 'பிளபியன்ஸ்,' சட்டங்களை எழுதிவைக்க வேண்டுமென்று வற்புறுத்த, பத்து அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் பன்னிரண்டு சட்டப் புஸ்தகங்கள் எழுதி வைத்தனர். பல முறையும் கிளர்ச்சிசெய்து பிளபியன்ஸ் பல அதிகாரங்கள் பெற்றனர். ஆயினும் பெட்டிரீவியன்ஸ் அவர்களுடன் கலியாணஞ்செய்து கொள்வதில்லை. முடிவில் 'கான்ஸல்' உத்தியோகத்தைக்கூட 'பிளபியன்ஸ்' வகிக்கலாமென்று தீர்மானமாயிற்று. இக்கிளர்ச்சிகளுடன் அலுக்காமல் சுற்றிலுமுள்ள காட்டார்களை ஜயித்து இத்தாலியா முழுவதையும் வென்று விட்டார்கள். அதைப் பிறகு கவனிப்போம்.

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

லக்ஷ்மி தேவி.

"லக்ஷ்மீ! குழந்தைகளுக்கு அன்ன மிட்டாயா? கிருஷ்ணன் எங்கே சென்றிருக்கிறான்? ஸ்ரீநிவாசன் என் அழுகிறான்?"

"ஏ ஐயா! வீட்டில் அரிசி யில்லாதது உங்களுக்குத் தெரிந்ததானே. அறிந்திருந்தும் அறியாதவர்கள்போல் சோதனை செய்யலாமா? தாங்கள் வரும்பொழுது தின்பண்டங்கள் வாங்கி வருவீர்களென்று சொல்லிக் குழந்தைகளைத் தேற்றினேன். தாங்கள் வருகிற வழியைப்பார்த்துக் கிருஷ்ணன் தலைவாசலில் நின்றுகொண்டிருந்தானே. தாங்கள் வருவதைக் கண்டு ஓடிவந்து சங்கதியைக் கட்டிக்கொண்டு எதிர்வரும்படியாகச் சொல்லித் தங்களுடன் கூடவே வருவானென்று எதிர்பார்த்தேன். ஒருவேளை அடித்ததைத்துப் பின்னோகளுடன் விளையாடிக்கொண்டிருக்கிறானோ என்னவோ, தேடி யழைத்து வரட்டுமா? எதிரில்லத்தில் மஞ்சள் குங்குமத்திற்கு

அழைத்தார்கள். அவர்கள் கொடுத்த சுண்டலைத் தங்களுக்குப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறேன். இதோ அதைப் புசியுங்கள்."

"எனக்கு வேண்டாம்."

"நீங்கள் சிரமப்பட்டு வந்திருக்கிறீர்கள். நான் வீட்டிலேயே இருக் கிறபடியால் எனக்குப் பசியில்லை. இந்தத் தெளிந்த தீர்த்தத்தைப் பருகுங் கள். இன்று நீங்கள் சென்றிருந்த காரியம் பலித்ததா? கடவுள் திருவை யால் நாம் நற்கதியையே யடைவோம். இப் பலகையின்மீது சாய்ந்திருந்து சற்றுச் சிரமத்தை பரிகாரம் செய்துகொள்ளுங்கள்."

"பெண்ணே! உனது ஆதரவில்லாவிட்டால் அன்றே உயிரைத் துறந்திருப்பேன். எனது விதிதானே, அல்லது காலக்கதிதானே, என் மனக்கு ஒன்றும் புலப்படவில்லை. எனக்காக நான் ஒன்றும் கவலைப்பட வில்லை. உன்னைப் பார்க்கும்பொழுது, எனது ராமன் திருவுள்ளம் இவர் களைப்பற்றி நினைக்கும்பொழுது, ஒருபக்கம் துக்கம் குமுற,மற்றொரு பக் கத்தில் கால வித்தியாசத்தால் ஸ்கூல் பைனல் மட்டும் படித்த ஒரு பார்ப் பனச் சிறுவனுடைய நிர்க்கதியைக் கண்டு அதற்குக் காரணமான எற்பாடு களை, நினைக்குந்தோறும் ஒரு தீராக் கோபம் விளைகிறது. ஐயோ! மற்றத் தேசங்களி லில்லாதபடி இத்தேசத்தில்மட்டும் ஜாதிக்கட்டுப்பாடுகள்ஏற்பட வானேன்! அப்படியே அக்கட்டுப்பாடுகள் ஏற்பட்டு ஒவ்வொரு வகுப்பி னருக்கும் மற்ற வகுப்பினரோடு முரண்படமேல் பிழைக்கும் வழிகளைச் செவ்வனே பிரித்துவைத்திருக்க, அவைகள் முழுவதும் சீர்குலைந்து தட் டுக்கெட்டித் தடுமாறும்படி தெய்வந்தான் விட்டுவைப்பானேன்? அப்படியே சீர்குலைந்த காலத்திலும் காலவித்தியாசத்தைப் பற்றி மேற்ப புதிய ஏற்பாடுகளைச் சமயத்தில் தீர்மானித்து அவைகளுக் கிணங்கப் பழையதை தருமத்திற்கும் இடைஞ்ச லில்லாமல் நடந்துகொள்ளக்கூடாதா? முற்காலங்களில் அன்ன மலிந்த இத்தேசத்தில் ஜனங்கள் பாலிய விவாகம் செய்துகொண்டதால் யாதொரு தீங்கும் விளையவில்லை. இக்காலத்திலோ ஒரு குழந்தைக்குத் தேடி யுழைப்பதே சிரம சாத்தியமா யிருக்கக் கஷ்டங்களை யெதிர்க்கக்கூடாத சிறிய வயதுள்ள பெண் ஒருத்திக்கும், மற்றும் குழந்தைகள் உண்டானால் அவை களுக்கும் எப்படி யுழைத்துக் காப்பாற்றப் போகிறான்! அந்தோ! கால் களுக்குக் கட்டை யடித்தால் போலும், கைகளுக்கு விலங்கு பூட்டியது போலும், கண்மூடிக் கட்டப்பட்ட குதிரைகள் போலவும், பாரவண்டி யில் பூட்டப்பட எருதுபோலவும்,வான்னைன் சுழை வற்றப்பட்ட கோவேறு கழுதை போலவும், பனம்பழத்தைச் சுமக்கும் குருவிபோலவும், பாலியத் திலேயே,சமுசார சாகரத்தில் தள்ளப்பட்டுக் கரை ஏறத்தெரியாமல் விழித் துத் தத்தளித்து, அவஸ்தைப்படும்படியான இக்காலத்திலுங்கூடப் பாலிய

விவாகம் எதற்காக? பாலிய விவாகம் செய்தும் அதன் தீங்குகளை வெல் லக்கூடிய ஆர்வம் நமது தலைமுறையில் யாரிடத்திலாவது தென்படா? மேனாட்டு ஆசாரத்திற் கொப்ப, நமது தேசத்திலும் கூடிய சீக்கிரத்தில் தற்காலம் கூலிவேலை செய்து பிழைத்துவரும் எளிய ஸ்திரீகள், இராஜாங்கத்தாரு டைய குணத்தை யறிந்து, ஆங்கிலப் படிப்புக் கற்று,தந்தி,தபால் முதலிய உத்தியோகத்தை வகிப்பார்கள். ஆனால் ஒரு சாண் வயிற்றைக் கஞ்சியால் கழுவ ஸ்திரீகள் சென்று பொது ஸ்தலங்களில் பல எஜமானர்களுக்குட் பட்டுப் பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற கருத்தே கீழ் நாட்டாருக்கு முற்காலத்திலும், தற்காலத்திலும், வெறுப்பையும் அருவருப்பை யும் விளைவித்திருக்கிறது. பிற்காலத்தில் எப்படி யாமோ யானறிந்தி லேன். மேனாட்டார்களின் இராச்சியங்கள் உலக முழுவதும் பரவியவண் ணமே அவர்களுடைய கொள்கைகளும்,கருத்துக்களும்,செயல்களும், உலக முழுவதும் பரவும்போல் காண்கிறதே. ஆனால் யாது நேரினும், எவ்வகை வினையினும் நமது தேசம் கடவுளின் கருணைக்குட்பட்டு, அதன் சமூக வாழ்வுகள் ஒழியப் பெற்றுச் சீக்கிரத்தில் தகுந்த நிலையை அடைய மென்று நினைக்கிறேன். ஐயோ! பரிதவன் பழங்கணைக்குப் பார்த்தாற் போல் நான் எனது எண்ணங்களைத் தடுமாற்றமாக வெளியிடலானேன். கண்மணீ!தீயும், ஒயாது எனது முகத்தைப்பார்த்துக்கொண்டே யிருக்கின் றாய். ஆயிர மெண்ணமிட்டாலும், செயலில் ஒன்றுங் காணேனே. உனது முகம் சாலவும் வாடியிருக்கின்றதே. நான் என்னசெய்வேன்!"

"நாதா! தங்களுடைய மொழிகளே எனக்கு அமிர்தம் வார்த்தாற்போ லிருக்கின்றன. நீங்கள் வெளியே சென்றிருக்கும்பொழுது என்ன கஷ்டப் படுவீர்களோ என்று மனது உருகிக் கசிந்து சஞ்சலம் என்ற சாகரத்தில் மூழ்கி கரை ஏறத் தெரியாமல் தவித்துக்கொண்டிருப்பேன்.உங் கள் முகத்தைக் கண்டவுடன், சூரியனைக் கண்ட தாமரைபோல் எனது மனம் மலர்ந்து,தன்படியே ஆனந்தத்தை யனுபவிக்கிறது. உங்கள் கால்மாட் டிலேயே கிடக்கிறேன். என்னை அப்பால் போகும்படி உத்தரவிடலாகாது.

"குணபூஷணி!உன்னைத் தகுந்தஸ்திதியில்வைத்துக் காப்பாற்றச் சக்தி யற்ற நான் உன்னை என் வருத்தப் போகிறேன்.கதவை யார் தட்டினார்கள்? திருவுள்ளம்! என் கண்மணீ!கையில் என்ன கொண்டுவருகிறாய்.எனக்கா தந்தி! ஆ! கடவுளே! யார் உனது திருவுள்ளத்தை அறியக்கூடும்! எக்காலம் ஆயி னும்என்ன!பக்தவத்சலனுடையகிருபையைக் கட்டுப்பாடுசெய்யமுடியுமோ! பெண்ணே! இன்றுடன் நமது கவலைகள் ஒழிந்துவிட்டன. மைசூர் சமஸ் தானத்தில் தர்பார் குமஸ்தாவாக நியமனக் கட்டளையை இத்தந்தி அறிவிக் கிறது. ஆகவே, நீ சொல்லுகிற வழக்கப்படி நம்மைப் போன்ற எளியவர் களுக்குக் கடவுளே துணை நின்று உதவி புரிவார். எப்பொழுதும் உத்தம

ணத்தையே கைப்பற்றி ஒழுகுவோம். கடவுளது திருவையால் நடந்தன டபெறட்டும்.

அயலகத்துப் பெண்.

தமிழ்.

'தமிழ்' என்ற மொழிக்கே 'இனிமை' பொருள்; னிமை கெழுமிய ஒரு சிறந்த பாஷைக்கு அஃது சிறப்புப் பெய யிற்று. "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" என்ற எல்லைக் ட்பட்ட இத் தேசத்தின் சுப மொழியே அத்தமிழ் மொழி. ம் மொழியினின்றும் தோன்றினவே கன்னடமும், தெலுங் ும், துளுவும், மஹாபாளமும் என்பது பாஷா தத்துவம் உணர் த பல பெரியோர்களுடைய அபிப்ராயம்: அதனை "கன்னடமும் னிதெலுங்கும் களின்மலேயா எமும்துளுவும், உன்னுகரத் துறித் தமுந்தே ஒன்றுபல ஆயிடினும்" என்ற நம் திருவனந்தைச் ந்தரக் குரிசில் செந்தமிழ் உரையே நன்கு வலியுறுத்தும்.

இவ்வாறு பற்பல பாஷைகட்குத் தாய் மொழியாக விளங் நம் நம் தமிழ் மொழியின் அருமை பெருமை அளவிட்டற் பால தாகா. மதத்துவ மிகுத்த அகத்திய முனிவர், ஒல்காப் பெருமை புகழ்த் தொல்காப்பியனர், பாரதி வடிவச் சங்கப் புலவர்கள். உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க் கினியர், கலிமகள் வடிவ னை முதாட்டியார், தெய்வப் புலமைத் திருவள்ளுவனர், முத் தமிழ் நாட்டு முதுபி வேந்தர் ஆதிய பற்பல பேர்பெற மணிகளாற் பொன்னே போற்றி ஆகரிக்கப் பெற்றது இத் தமிழ் மொழி: தீருக்கும், நெருப்புக்கும், செல்லுக்கும், 'இராமபாணம்' என்ற தூக்கெட்கும் இரையாகாது எஞ்சி நின்றது இத்தமிழ் மொழி: Dr. போப், பெர்சிவல், கால்டுவெல், சர்ண்டெர், பெஸ்கி ஆதிய பல மேஞ்ட்டார்தம் மனதைக் கவர்ந்தது இத்தமிழ் மொழி. மேலும், இன்று இக்காவருவினி வாயிலாக நுங்கள் அனைவரையும் மகிழ் விக்கச் செய்வதும் இத்தமிழ் மொழியே.

இத்தகைய மேம்பட்ட பெருமையும், மேதகு நிலைமையும் வாய்ந்த நம் தமிழ் மொழியின் தற்கால நிலைமை யாதாயிற்று? அன்பார்கள்! அரியாசனத் தமர்ந்து, மணிமுடி தரித்துச் செங்

கோல் ஒச்சிய அரிச்சந்திர பூபதியின் இடை நிலையை இதற்கு ஒப்பிடலாம். அந்தோ! அடியேன் 'பேனு' என்ற ஆங்கிலத் திரிபு மொழியே யன்றி 'எழுதுகோல்' என்ற தமிழ்ச் சொல்லைக் கேட்பதே இல்லை. இது மட்டுமா? இல்லை, இல்லை. கேட்டாம்: ஸ்கூலாம்: ஷாப்பாம்: மீட்டிங்காம்: பேப்பராம்: பென்சிலாம்: ரப் பராம்: சாலாப். இவை விந்தையினும் விந்தையே! இதுபற்றி நாம் குறை கூறத் தலைப்பட்டால் அப் பேதை மாக்கள் "பழை யன கழிதலும் புதியன புகுதலும் காலவழுவில்" என்று மேற் கோளுடன் உபதேசஞ் செய்ய முன் வந்துவிடுவர்!

அன்பர்களே! இத்துடனும் ஒழிந்த பாடில. ஆசீர்வாத மும், நமஸ்காரமும் அடியோடழியத் தலைப்பட்டன; 'குட் மார் னிங்' தலையெடுத்தது. வித்தியாசாலைகளில் இம்மொழி பிரதம பாடமாக ஆக்கப் பெறுதுபோயிற்று. 'கன்னூல்' என்றால் 'அது ஒரு பட்டை யென்ன விலை? அமெரிக்கன் மேக்கா அல்லது, ஜப் பான் மேக்கா?' என்று கேட்கும் மாணவர்களை நான் தினந் தோறும் சந்திப்பதுண்டு. இன்னும், தமிழ் இலக்கணம் ஆங்கில மொழி உதவிகொண்டே பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட வேண்டுமாம். இவ்விதம் கற்பிப்பதில் ஓர் விசேடம் தோன்றி யிருக்கின்றது. அஃது என்னை? இம் முறையைப் பெரிதும் பின் பற்றி இலக்கணம் கற்பிக்கப்பட்ட ஒரு கலாசாலையிலுள்ள ஐந் தாவது வகுப்பு மாணவர்களுடைய தமிழ்ப் பரீக்ஷைக் கடிதங் களை இவ்வருடம் நான் திருத்த நேர்ந்தது: 'இராமன்' என்ற சொல்லுக்கு எட்டு வேற்றுமையும் கூறுமாறு கேள்வி கேட்கப் பட்டிருக்கின்றது: பத்து அல்லது பதினைந்து பையன்கள் 'சீதா ராமன், வெங்கட்டராமன், கோதண்டராமன், பரசுராமன், தச ரத ராமன், அனந்தராமன், ஜானகிராமன், இராமன்' என்று விடை எழுதுகின்றனர். இஃது கட்டுக்கதையல்ல: உண்மை யாகவே நடந்த ஒரு செய்தி. இன்னும் சில பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் 'தமிழ் வியாஸம்' என்று சொல்வார்களாகில் அவர் கள் தலைகளிற் பேன் பார்க்கப்படும்: 'டமில் காம்போஸிஷன்' என்றே சொல்ல வேண்டுமாம். நம் நாட்டில் ஆத்திசூடி தெரியா தார் அறுபதினாயிரம் பேர்கள் இருப்பார்; கொன்றைவேந்தன்

அறியாதார் கோடானுகோடியிருப்பார்: 'முதுமை தெரியுமா?' என்றால் 'மார்கழி மாதம் திருவாதிரை வரும்: அன்று வீதியிற் சுவாமி வரும். வீட்டில் வெல்லச்சோறு உண்டு' என்பாரும் அநேகர் உளர். ராமாயணமும் பாரதமும் வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழியில்லாத கவிராயர்களே பார்த்துச் சுகிக்கத் தக்க நூல்களாம். அந்தோ! பாபம், பரிதாபம்! இவற்றிற்குக் காரணங்கள் யாவை? கூறுதும்:—

நம்மவரது அபிமானக் குறைவே முதற்காரணம். செல்வவான்களும், ஜமீன்தார்களும் நம் தமிழ் மொழியை ஆதரிக்க முன் வருவதில்லை. சேவற்சண்டை, ஜல்லிக்கட்டு, தெருக்கூத்து, பாட்டுக்கச்சேரி முதலியவற்றை ஆதரிக்க முன்வருவர் அழையாச் சம்மந்திகளாகி விட்டனர். எனினும், ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார், இராமநாதபுரம் மஹாராஜா முதலானோர் போன்ற சிலச் சிலர் தமிழ் நாட்டில் தற்சமயம் இருப்பதன் பயனாகவே நம் தாய் மொழியாம் தமிழ் மொழி இன்னும் அடியோடழியாது குற்றுயிருடன் ஆகிலும் இருந்து வருகின்றது என்பதை இவ்வமயம் என்னாற் சொல்லாதிருக்க முடியவில்லை.

இனி இரண்டாவதாகத் தமிழ் பேசும் தாய் தந்தையர்களுக்குப் பிறந்து தமிழ் மொழியையே இகழக் கலைப்பட்டு விட்டனர் சில ஆங்கிலம் படித்த கோடரிக் காம்புகள். இவர்கள் வாயைத் திறந்தால் பல்லோர் தாப்பன் 'டமில், டமில். வாட் லாங்குவேஜ்! யுன்லெஸ் டமில்லெட் அவர் கொண்டி மதர் ஸ்பீக் இட்' என்று மணிப்பிரவாள நடையில் பிரசங்கமாரி பொழிவதோடும் நின்று விடாமல், அம் மொழியின் அழிவிற்கே வேண்டிய சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தி விடுகின்றனர்.

இது போன்ற காரணங்கள் இன்னும் பலவுள. சிலர் இவற்றை அறியாத் திறமையின்றி அவமேகம் அரசாங்கத்தார் மீது குறை கூறுகின்றனர். அஃது அத்துணைச் சிறப்புடைத் தன்று. தாயைத் தனயர்களே வெறுக்கத் தலைப்பட்டால் பிறர் என் செய்வார்! வாளா இருப்பதே ஸகஜம்: ஆனால், நம் காருண்ய ராஜாங்கத்தார் பொருளின்றிக் கஷ்டப்பட்ட யுத்த காலத்திலும் கூட நம் தமிழ் மொழியின் அபிவிருத்தி கருதி வெகு பொருள்

விரயஞ் செய்து பேரகராதி ஒன்று வெளிவரப் பெரிதும் உழைத்ததை அறியாதார் யார்? அவர்கள் முயற்சி முற்றிலும் நன்மை பயக்க நம் ஈசன் கிருபை செய்வாராக!

அன்பர்களே! தமிழ்மொழியின் விருத்தி கருதி நாம் அனைவரும் பேதமின்றி ஒத்துழைத்தல் வேண்டும். அதுவே நம் முதற் கடமை. அதனைச் செய்யாது ஒழிந்தால் நமக்கும், நம் நாட்டிற்கும் பெருங் கேடே. ஆகலான் செய்ய வேண்டுவன வற்றைச் சுருங்கக் கூறுகின்றேன்: கேட்டு, அவ்விதமே செய்மின்:—

தமிழ் மொழியிலுள்ள அரிய பெரிய நூல்களின் கருத்தை யாபேரும் அறியுமாறு அவற்றிற்குப் புதிய ஜீவன் அளித்து, எளிய செய்யுள் நடையிலோ, அல்லது சிறந்த வசன நடையிலோ இயற்றிப் புத்தக ரூபமாகச் சொற்ப விலைக்கு வெளியிட வேண்டும். இதன் பொருட்டுத் தக்க வித்வான்களும், பணக்காரர்களும் ஒன்று சேர்ந்து உழைத்தல் வேண்டும்.— அபிமானமற்ற மனோதர்மத்துக்குத் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை யெல்லாம் பன்முறை எடுத்துக் கூறி அவர்களை அபிமான சிலர்களாக்க முயல வேண்டும்: வாசாலகத் தன்மையுள்ள பண்டிதர்களே இக் காரியத்தைச் செய்து முடிக்க வல்ல ஆற்றல் உடையவர்கள்.— சென்னைச் சர்வகலா சங்கத்தினரைக் கலாசாலைகளில் தமிழ் மொழியைப் பிரதம பாடமாகச் செய்யுமாறு யாபேரும் ஒற்றுமையுடன் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.—இன்னும், கூடுமானால் ஆங்கிலம் ஒழிந்த ஏனைய பாடங்களை யெல்லாம் தமிழிலேயே கற்பிக்குமாறு வித்தியா இலாகாவை வேண்டிக் கொள்வோமாக.—ஒவ்வொரு ஊரிலும் சங்கங்கள் நிறுவி, அங்கே தமிழ் மொழியின் அபிவிருத்தி கருதிச் சிறியோரும் பெரியோரும் ஒற்றுமையுடன் ஆராய்ச்சிகளும், பிரசங்கங்களும் செய்து வருதல் வேண்டும்.—இது போன்ற தமிழ்ப் பத்திரிகைகளை யாபேரும் ஆதரிக்க வேண்டும்.

இது போன்ற காரியங்களை நம்மவர் ஒற்றுமையுடனும், உலோபமுயற்சியுடனும் செய்வார்களாயின் நம் தாய் மொழியும் மீண்டும் அரிச்சந்திர மன்னனை போல் பொன்முடி சரித்து,

உலகம் உவகை பூக்க ஆனந்திக்கக் கலிமொழி ஆகும் என்பது நிச்சயம்.

அன்பர்களே! 'லொரைன்' மாகாணத்தார் நம் தாய் மொழி அடியோடழிய நேர்ந்த ஞான்று அதற்கு உயிர் கொடுத்தவள் ஓர் ஏழை வாலாஞ் சிறுமியே. இவளை பனதில் கல்மேல் எழுத்தாய்ப் போற் பதிய வைத்துக்கொண்டு உழைத்த முன்னவரெனோர் வருக; அந்நான் மின்றி இடித்திடித்துக் கட்டிலை கூறினும் அவற்றைச் செவிக்கொளா நெட்டுயிர்ப்போடிற்ற பிணங்கள் எனினுமாக வேறும் ஒன்றும் செய்யாது இருக்க நாம் அவர்களைக் காழ்த்து வேண்டுகின்றோம்.

நம் எண்ணம் முடிவுபெறக் கமழாய் நிருபை பாலிப் பாளாக!

ப. ரே. விஸ்வநாத பாரதி.

சாத்தூர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வளர்ச்சி.

நமது மாகுமை பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது இன்னைந்து வருஷச் சண்டையில் கொஞ்சங்கூடத் தளர்ச்சி அடையாமல் முன்னின்று ஜெர்மானியரை முறியடித்து வெற்றிக்கொடி நாட்டி எதிரிகளைச் சமாதானத்திற்கு ஒப்புக்கொள்ளச் செய்து, ராஜ்ஜியப்படையின் தைரியத்தால்அயல் தேசத்தவர்களின் பலத்தை அமமித்துக்கொண்டிருந்த ஜெர்மனி தன் சுய நிலைமையை உணரும்படி செய்திருக்கிறது. இப்பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது எப்படி உண்டாயிற்று, இதை ஸ்தாபிக்கக் காரண பூதர்களா யிருந்தவர்கள் யார், அவர்களால் இவ்வேகாதிபத்தியம் எப்படி நிலநாட்டப்பட்டது, இதை ஸ்தாபிப்பதற்கு ஏற்பட்ட மத்திய இடையூறுகள் யாவை, அவ்விடையூறுகள் யாரால் ஏற்பட்டன, யாரால் எப்படி நிவர்த்திக்கப்பட்டன, என்ற பல கேள்விகளுக்கு நாம் உத்தரம் சொல்ல வேண்டும். இக்கேள்விகளுக்கு நாம் கொடுக்கும் மறுமொழிகளிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஏற்பட்ட சீரும், அது காலொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ப் படிப்படியாக வளர்ந்து இ.பி. இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவ்வுலகின் 1/5 ன் ஒரு பாகத்தை அடக்கிக் கொண்டிருக்கிற மகிமையும் கண்கூடாய் விளங்கும். நமது இந்த தேசமும் இப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் சேர்ந்த ஓர் பகுதியே. நமது ஐக்கியரின்

முன்னோர் ஆதியில் ஐரோப்பாக்கண்டத்தில் பால்டிக் கடலில் மேற்கு பாகத்திலிருக்கும் செல்ஸ்விக், ஹால்ஸ்டீன் என்ற இரண்டு மாகாணங்களில் ஆதியில் வசித்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒரேகூட்டத்தினரல்லாமல் மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவ்வகுப்பார் பெயர் ஜூட்ஸ், ஆங்கிள்ஸ், சாக்ஸன்ஸ் என்பவைகளே. இம்மூன்று பிரிவுகளில் ஜூட்ஸ் வகுப்பின் தொகை மிகக்குறைவு. ஆங்கிள்ஸ் வகுப்பில் ஜனத்தொகை மூன் வகுப்பைவிடக் கொஞ்சம் அதிகம். மூன்றுவது வகுப்பாகிய சாக்ஸன்ஸ் கூட்டம் ஏறக்குறைய வடக்கு ஜெர்மனி பூராவாகப் பரவி இருந்தது. இவர்களெல்லோரும் ஒரே பாஷை பேசினார்கள். இப்பிரிவுகளின் இரண்டாவது அங்கத்தினராகிய ஆங்கிள்ஸ் மூலமாய் அவர்கள் குழைந்த பிரிட்டன் தேசத்திற்கு இங்கிலாந்து என்ற பெயர் ஏற்பட்டது. இங்கிலாந்து என்ற பதத்திற்கு "ஆங்கிள்ஸ்" தேசம் என்று பொருள்.

இம்மூன்று வகுப்பினரும் தங்கள் சுயதேசங்களைவிட்டு அன்னியநாடுகளுக்குச் செல்லப் பல காரணங்கள் ஏற்பட்டன. அவர்கள் முன்னுல்வசித்து வந்த தேசமானது சீதோஷ்ணத்தில் அதிக ஏற்றத்தாழ்வுள்ளதாயும் அதிக குளிர்ச்சியுடையதாயும் நிலவமைப்பானது உழுது பயிர்செய்யப் பயனற்றதாயு மிருந்ததல்லாமல் அவ்விடம் பாயும் நதிகள் வருஷத்திற்கு எட்டுமாதம் பனிக்கட்டிக் குறைவிடமா யிருந்தமையால் ஜனங்கள் குடி இருக்கப் பிரயோஜனப்படவில்லை. இன்னும் இவ்வகுப்பினரின் ஜனத் தொகை நாளுக்கு நாள் விருத்தியாய்க் கொண்டிருப்பதற் கேற்ப அவர்கள் வசித்து வந்த தேசத்தில் தானிய விருத்திக்கும் நாட்டின் செழிப்பிற்கும் வழி இல்லாமலிருந்தபடியால் அநேக ஜனங்களுக்குக் குடி இருக்க இடமில்லாமலும் காலக்ஷேபத்திற்கு வழி இல்லாமலும் தங்கள் சுயதேசத்தை விட்டு அயல் நாடு செல்லக் கட்டாய மேற்பட்டது. இதல்லாமல் ஜெர்மனிக்குச் சுற்றுப் பிராந்தியங்களிலுள்ள ஓர் வகை ஜாதியார் நாகரீகத்திற்குப் பேர்போன ரோமர் ஏகாதிபத்தியத் தலைநகராகிய ரோமாபுரியின் மேல் படை எடுத்துச் சென்றது மேற்சொல்லிய மூன்று வகுப்பிற்கும் திரைகட லோடியும் திரவியம் தேடி என்ற முதுமொழியின் உண்மையை விளக்கிக்காட்டுவதுபோ லிருந்தது. அவர்கள் ரோமைத் தாக்கப் புறப்பட்டதுபோல் ரையின் நதிக்கரை வாசிகளான ஆங்கிள்சும் பிரிட்டன் மேல் படையெடுக்கக் காரணமாயிற்று.

இவர்கள் படையெடுத்த சமயம் பிரிட்டன் நாட்டின் நிலைமை மிகப்பரிதாபப்படத் தக்கதாயும் பயங்காரமாயு மிருந்தது. உள் நாட்டில் கிராமங்களில் வசித்து வந்த, ரோம நாகரீகத்திற்கு வசப்படாமல் தங்கள் புராதன பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு பயிர்த் தொழிலை ஜீவாதாரமாய்க்கொ

ண்ட பிரித்தானியர்களுக்கும், பட்டணங்களில் வசித்து ரோமர் அரசாங்க பாஷையான லத்தீனைப் பேசிக்கொண்டும் நடை உடை பாவனைகளில்ரோ மனைப்போலிருக்கப் பிரிய முற்ற நாகரீகத்தில் சிறந்த பிரித்தானியர்க்கும் கொஞ்சங்கூட ஒற்றுமை இல்லை. இவர்களுக்கு ஸ்காத்லாந்தின் மலை யடர்ந்த காடுகளில் சுற்றித் திரிந்த பிட்ஸ் என்ற மிலேச்சர்களால் அடிக் கடி தொந்தரவேற்பட அவர்களைத் தூரத்தி காட்டை ஐக்கியப் படுத்தப் போதுமான பல மில்லாதிருந்தது. ரோம ராஜாங்கத்தின் கீழ் எல்லாவித கடின ஜீவனத்தையும் திரஸ்கரித்து சண்டை சச்சரவில்லாமல் ஐக்கிய வருஷம் நிஷ்களங்கமையாய் வசித்ததின் பயனுகப் பிரிட்டன் தேசத்தவர் சண்டை செய்யும் தன்மையை இழந்து பேதிக ளாயினர். ஆனதபற்றி பிட்ஸ் ஜாதி யார் வடக்கே யிருந்து தூரத்தினபோது இன்னது செய்வதென்று தெரி யாமல் தியங்கி முடிவாக பால்டிக் கடற்கரை வாசிகளாயும் பிரிட்டன் மேல் கண்ணோக்கம் வைத்துச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந் தவர்களுமான ஜூட்ஸ் ஜாதியாரின் உதவியை நாடினர்.

அக்காலம் பிரிட்டனில் அரசாண்ட வீரனின் பெயர் வார்ட்டிஜன். அவன் ஜூட்ஸ் ஜாதியாரின் தலைவரான ஹெறன்ஜிஸ்ட் ஹோர்சா என்ற போர்வீரர்களோடு தன் சகாயத்திற்கு அழைத்துக்கொண்டு மிலேச்சர்களான பிட்ஸை எதிர்த்து அவர்களோ முறியடித்தான். இச்சண்டையை வெற்றி பெறச் செய்தது ஜூட்ஸ் சகோதரர்களே. சண்டை முடிவடைந்து சமா தான மேற்பட்டவுடன் உதவிக்கு வந்த போர்வீரர்க ளிருவரும் தங்கள் நாடு செல்வார்களென்று வார்டிஜன் எதிர்பார்த்திருந்தான். நடந்த காரியம் அவன் எண்ணத்திற்கு முற்றும் மாறுகவே இருந்தது. அவ்விருவரும் தங்கள் நாடு செல்லப்பிரியப்படாம லிருந்ததோடு மல்லாமல் பிரிட்டன் அரசன்மேல் தங்கள் படைகளோ எழுப்பி அவனைக் கொன்று அவன் ராஜ்ய மான 'கென்ட்' மாகாணத்தைத் தங்கள் கைவசப்படுத்திக்கொண்டனர்.

இவர்கள் வெற்றிக்குப் பிரிட்டனின் இயற்கை அமைப்பு மிகவும் ஒத் தாசையா யிருந்தது. தேனட் என்ற தீவில் ஜூட்ஸ் ஜாதியார் முதல் முதல் வந்திறங்கிய பொழுது அத்தீவானது பிரிட்டன் தேசத்திலிருந்து ஒரு சிறு வாய்க்காலால் பிரிக்கப்பட்டு பிரிட்டானியர் தகவலில்லாமல் அவர்கள் நாட்டில் புகுந்தது வாயிற்று. மேலும் வட கடலில் விட்டுவைத்திருக் கும் மீதப்படைகளைத் தங்களுக்கு வேண்டியபோது சிரமமில்லாமலும் பிரி ட்டானியர் சந்தேகத்திற் இடங்கொடுக்காமலும் வரவழைத்துக்கொள்ளச் சௌகரியமாயு மிருந்தது. இவ்வீரர்கள் அன்னிய நாட்டின்மேல் யாருக்கும் தெரியாமல் திடீரென்று படையெடுத்து ஜனங்களோ துன்பம் செய்யப் பெயர் பெற்றவர்கள். சமுத்திரங்களில் தண்டு வலிப்பதானாலும் சரி, கத்தி கேடயங்களுடன் சண்டைசெய்வதானாலும் சரி, இந்த ஜனங்களுக்குக் குழ

ந்தைகளின் விளையாட்டை ஒத்திருந்ததால் ஒருகனம் பொருந்திய ரோம மகாகவி இவர்கள் குணத்தைப்பற்றி அடியில் வருமாறு தெரிவித்திருக்கி றார். "மற்ற எதிரிகளைக் காட்டிலும் குரூர சிந்தனை உடையவர்களாயும் குரூரத்திற் கேற்ற தந்திரமுள்ளவர்கள். கடலே அவர்கள் படித்த பள்ளி. புயல் காற்றே அவர்கள் அன்பார்ந்த தோழன். உலகத்தை அழிக்கப் பிறந் திருக்கும் கடல் ஒலையை னாவார்."

நமது ஆங்கிலேயரின் முன்னோர் தங்கள் சுயதேசத்தில் எப்படி வசித் தனர், எந்த அரசாங்க முறையைத் தழுவினர் அவர்கள் நாகரீகம் எப்படிப் பட்டது, அவர்கள் எம்மதத்தைச் சேர்ந்தவர்கள், என்ற விஷயங்களைப்பற்றி காம் நிச்சயமாய் நிர்ணயிக்க முடியாதென்றாலும் சரித்திர சாஸ்திர விற் பன்னனான டாசிடஸ் என்ற ரோம கனவான் நமக்கு வேண்டிய சமாசாரங் களைத் தன்னுடைய "ஜெர்மானிகா," என்ற நூலில் தெரிவித்திருக்கிறார். இம்மூன்று வகுப்பினரும் கிராமங்களில் தனித்தனி குடிசைகள் கட்டிக் கொண்டு ஒரு குடும்பத்திற்கும் மற்றொன்றிற்கும் யாதொரு சம்பந்தமும் கலப்பு மில்லாமல் அவர்கள் தங்கள் காரியங்களைக்கவனித்துக்கொண்டு சுயே ச்சையாயும் அச்சுயேச்சைக்கு மற்றவர்களால் தீங்கு வராதபடி மிருந்த ஜாக ரதையாய்க் காப்பாற்றிக் கொண்டு மிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் ரோமர்களைப்போல் அல்லாமல் பெரிய ஜன. நெருக்கமுள்ள நகரங்களில் வசிப்பதை வெறுத்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் அதன் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி குடும்பங்கள் அமைக்கப்பெற்றன. அக்கிராம நிர்வாகத்துக்கு அவர்கள் சுயபாஷையில் "டன்" என்றபெயர் ஒவ்வொரு டன் னிலும் மூன்று விதமான நிலங்கள் பிரதியேகப்படுத்தப்பட்டு ஜனங்களு டைய உபயோகத்திற்கென்று விடப்பட்டன. அக்காலத்தில் இவ்வகுப்பா ருடைய முக்கிய கைத்தொழிலானது விவசாயமா யிருந்தபடியால் கிராமவ் களி லிருந்த மிக நல்ல நிலங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்றத்தாழ்ச்சி இல்லாமல் பகுந்து கொடுக்கப்பட்டது.

(இன்னும்வரும்.)

வி. சுப்புகேஷய்யர். பி. ஏ. எல். டி.

சுகாதாரம்.

ஓர் விஞ்ஞை அட்சரப் பொருத்த வியாசம்.

நான் கல்வியில் வல்லவனு மல்ல. கற்றுவல்ல அறிஞர்களோடு மிகப் பழகி நல்ல கேள்வியாவது உடையவனு மல்ல. ஆகையால் சிறந்த பண்டி தர்களால் எழுதப் பெற்றுவரும் அரிய விஷயங்களைப் பூண்டுவரும் கதா வருஷிணிக்கு விஷயமெழுத அருகனு மல்ல. எனினும் "சுகாதாரம்"

என்ற விஷயத்தின் பல அங்கங்களோ, "சுகாதாரம்" என்ற மொழியில் உள்ள எழுத்துக்களைக்கொண்டே ஒருவாறு விளைதமாக விளக்கலாம் என்று எனக்குத் தோற்றியதால் இதை எழுதலானின்றேன். குற்றங்குறை களை அறிஞர் பொறுப்பார்களாக.

முதன் முதல் சுகம் என்பதைச் சரீர சௌக்கியமாகக் கொண்டு, அந்தச் சௌக்கியத்திற்கு ஆதாரம் என்ன வென்று ஆராய்வோம். சரீர சுகத்திற்கு ஆதாரம் நான்கு. அவை, "சுகாதாரம்" என்ற மொழியின் நான்கு உயிர் மெய்யெழுத்துக்களாகிய, சு, கா, தா, ர என்பவைகளையே குறிக்கின்றன.(ம்,என்பது தனி ஒலியில்லாத மெய்யெழுத்தாகையால் அதை விலக்கி விடுவோம்.) அவையாவன:—

(1) சுத்தம், (2) காற்றோட்டம், (3) தாட்டிகம், (4) ரவிப்பிரகாசம். (சூரிய வெளிச்சம்.) சுத்தம் வேண்டும் என்பதால், சரீரத்தை ஸ்நானம் முதலியவைகளால் சதா சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் என்பதும் உண் உடை பானங்களில் எப்பொழுதும் சுத்தமானவற்றையே கொள்ள வேண்டும் என்பதும் பிறவும் பெறப்பட்டன. எவ்வளவுதான் சுத்தத்தை அநுசரித்தாலும் நல்ல காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் இல்லாத இடத்தில் நாம் வசித்துப் பழகியிருந்தால் தேக சௌக்கியம் கெடும். ஆகையால் காற்றோட்டமும் ரவிப்பிரகாசமும் அவசியமானது என்று சுகாதாரம் என்ற மொழியின் இரண்டாவது, நான்காவது அட்சரங்கள் குறிக்கின்றன. எப்பொழுதும் சூரிய வெளிச்சத்திலும் நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலும் கெடுங்கால மிருப்பதால், நீராத வியாதியாகிய க்ஷய ரோகமும் நீருகின்றது என்பதும், சாளரங்கள் இல்லாமல், போதிய சூரிய வெளிச்சமும் நல்ல காற்றோட்டமும் புகுதற் கில்லாத இருண்ட புழுக்கமுள்ள வீடுகளில் வசிப்பது மிகக் கெடுதி என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கன. இனி, உண் உடை பானங்களில் எவ்வளவுதான் சுத்தமாக இருந்தாலும், நல்ல காற்றோட்டத்திலும் ரவிப்பிரகாசத்திலும் எவ்வளவுதான் இருந்தாலும், தேகத்திற்குத் தாட்டிகம் (பலம்) இல்லையாஞல் நல்ல சுகம் ஏற்படாதாகையால், தாட்டிகம் அல்லது தேகபலத்தை அடைதற்குரிய தேகப்பயிற்சி, தேகாப்பியாச விளையாட்டுகள், உழைப்பு, மனச் சந்தர்ப்பத்தியோடு பந்து மித்திரர்களுடன் பழகியிருத்தல், முதலியவையும் சுகாதாரத்திற்கு இன்றியமையாதவையாம். தேகப் பயிற்சியையும், விளையாட்டுகளையும் பலரும் அசட்டை செய்வதும், எப்பொழுதும் மூதேவிபோல் முகத்தை வைத்துக் கொண்டு கண்பார்களோடு நகைத்துப் பழகியிராதவர்கள் நிலைமையும், வேலையை வெறுக்கிற நித்திரைப் பிரிய சோம்பேரிகளாயிருத்தலும் முற்றும் வெறுக்கத்தக்கன.

சுக ஆதாரங்களைப் பின்பற்றிப் பயனெய்தும் நான்கு உதாரணங்கள் காட்டுகிறேன். அவை (1) சுரும்பு, (வண்டு) (2) காகம், (3) தாமரை (4) ரம்பம் என்பனையே. நாம் சுரும்புபோல், சுகந்த வாசனையும் கல்ல காற்றோட்டமுள்ள சோலை வாசத்தைக்கொள்ளவேண்டும்.சோலைவாசம் என்று பொதுவாகக் கூறியதால், நல்ல மரஞ்செடிகள் உள்ள தோட்டங்களும் நல்ல காற்றோட்டமும் உள்ள விசாலமான வீடுகளில் வாசம் என்பதும், சாவகாச நேரங்களில் சோலைகள் முதலிய காற்றோட்ட முள்ள இடங்களில் உல்லாசமாகச் சென்றிருப்பதும் பெறப்பட்டன. ஆனல் துர் நாற்றத்தை விரும்பி அசுத்தங்களில் இடத்தறையும் வண்டுகளும் தற்காலம் உண்டு. அவைகளைப்பற்றி நான் பேசவில்லை. இரண்டாவது, காகத்தினிடம் இருக்கும், காலையில் துயிலெழல், சதா சுறுசுறுப்புடன் இருத்தல், இனத்தோடு அளவளாவி யிருத்தல், நீராடுதலில் பிரியம் முதலிய தன்மைகளைப் பின்பற்றவேண்டும். தாமரையைப்போல் சூரிய வெளிச்சத்தை மிகவும் விரும்பி, அதைப்போல் எப்பொழுதும் சந்தர்ப்பத்தியாக நகை முகத்தோடிருக்கவேண்டும்.ரம்பம்(வாள்)முறைப்படி எப்பொழுதும் வேலை செய்துகொண்டிருந்தால்தான், அது சரியான நிலையோடு பளபளவென்று இருக்கும். யாதொரு வேலையும் செய்யாது மூலையிலே தூங்கிக்கொண்டிருந்தால் அது துருப்பிடித்து ஒன்றுக்கும் உதவாமல் சீக்கிரத்தில் கெட்டுப்போகும். அதுபோல நாம் ஒழுங்காகத் தேக பயிற்சியைக் கொண்டிருந்தால்தான் நம் தேகம் தாட்டிகம் கொண்டு சுகத்தோடிருக்கும். இல்லாவிட்டால் ரம்பம் துருப்பிடித்துக் கெடுவதுபோல், பலகுன்றி, பல வியாதிகள் கொள்ளத் தூரியதாகும். ரம்பம் மரத்தை அறுக்குமே யன்றி அதைக்கொண்டு ஒருசுவரை அல்லது இரும்பை அறுக்க முயன்றுல்என்ன வாகும்? ரம்பம் மழுங்கிக் கெட்டுப்போகும். ஆகையால் தேகப்பயிற்சியும் அவரவர்கள் தேக நிலைக்கும் சக்திக்கும் தக்கவாறு அளவோடு செய்தல் வேண்டும்.படிப்படியாக அதனை அதிகரித்துக்கொள்ளலாம். திடீரெனப் பீமசேனனுய்விடவேண்டுமென்று முரட்டுத்தேகப்பயிற்சிகளைச் செய்யத் தொடங்கினுல் ரம்பம் மழுங்குவதுபோல் தேகத்திற்குக் கெடுதி யுண்டாகும்.

சுகாதாரத்தை விரும்புவோர் அவசியம் விலக்கவேண்டியவை நான்கு. அவை, சுருட்டு, காமம், தாயம், ரம், என்பனையாம். சுருட்டு என்பதால் அதையும் அதைப்போன்ற பொடி, புகையிலை, அபினி, கஞ்சா, முதலிய லாகிரிவஸ்துக்களையும்விலக்கவேண்டும்என்றுயிற்று.காமம் என்பதைவிலக்குவதின் அவசியத்தைப்பற்றி இங்கே மேற்கொண்டு விவரிக்கவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கிறேன். காமத்தினுல் வரும் பெருங் கெடுதிகள் பலருக்கும் வெளிப்படை. தாயம் என்பதால் எவ்விதமான சூதாட்

டத்தையும் விலக்கவேண்டு மென்பதும், ரம் என்பதால், ரம், பிராந்தி, விஸ்கி, கள் முதலிய எவ்விதமான மதுவையும் பானஞ்செய்தல் கூடாது என்பதும் குறிக்கப்பட்டன. தாய ஆட்டம் காயித ஆட்டம் ஆகிய எவ்விதமான சூதாட்டமும் சோம்பலை வளர்த்துத் தேசத்திற்கும் வாழ்க்கைக்கும் பல கெடுதிகள் உண்டாக்க கூடியவை. மதுபானத்தால் வரும் கேடுகளும் சாதாரண மாக யாவரும் அறிந்தவையே.

இனி, சுகாதாரம் என்பதில் மூன்றாவது எழுத்தாகிய ர என்பது ரமிப்பு (சுகம்) என்பதைக் குறித்து, அது நான்காவது எழுத்தாயிருப்பதால் சாதாரணமாகத் தேக சுகத்தைத் தவிர வேறு மூன்று ரமிப்புகள் உண்டு என்பதையும் குறிக்கின்றது. அவை, கல்வி ரமிப்பு, இல்லற ரமிப்பு, துறவற ரமிப்பு, என்பனவாம். கல்வி ரமிப்பு, பிரமசரிய ஆச்சிரமத்திற்கும், இல்லற ரமிப்பு கிருகஸ்தாச்சிரமத்திற்கும், துறவற ரமிப்பு, வானப்பிரஸ்த சந்யாச ஆச்சிரமங்களுக்கும் உரியன என்னலாம். இந்த ஒவ்வொரு ரமிப்புக்கும் வேண்டியனவற்றை, "சுகாதாரம்" என்ற மொழியில் சு, கா, தா, என்ற முதல் மூன்று எழுத்துக்களே குறிக்கின்றன என்று காட்டுகிறேன்,

கல்வி ரமிப்புக்கு வேண்டியன, சுவடியாராய்ச்சி, காதாராய்ச்சி, தாகம், என்பனவாம். சுவடி யாராய்ச்சி என்பதால் பல அரும்பெரும் நூல்களைக் கற்றல்வேண்டு மென்பதும், காதாராய்ச்சி என்பதால் கற்றுவல்ல பல அறிஞர்களிடம் பாடங்கேட்டுத்தெளியும் கேள்வி வேண்டும் என்பதும், எவ்வளவுதான் கற்றபோதிலும் மீண்டும் மேன்மேலும் கற்றல் வேண்டும் என்ற தாகம் அல்லது ஆசை இருக்கவேண்டு மென்பதும் அவசியம் என றேற்படுகின்றது. ஆகவே சுவடி யாராய்ச்சி, காதாராய்ச்சி, தாகம் என்ற மூன்றும் ஒருங்கு இருந்தாற்றான் உண்மையான கல்வி ரமிப்பைப் பெறலாம். இவ்வுண்மையை முக்கியமாய் மாணவர்கள் கண்டு கவனித்துக் கடைப்பிடித்துக் கொள்வார்களாக.

இரண்டாவது இல்லற ரமிப்புக்குத் திரும்புவோம். அந்த ரமிப்புக்கு வேண்டியன, (1) சுயார்ஜிதம், (2) காதலி, (3) தானம். இம்மூன்றும் முறையே பொருள், இன்பம், அறம் என்பனவற்றைக் குறிக்கின்றன. இல்லற ரமிப்புக்கு வேண்டியவைகளில் ஒன்று பொருள். அந்தப்பொருள், தன் தகப்பனார் அல்லது மூன்றாமவர் தேடிச் சேமித்து வைத்திருந்த பித்ரார்ஜிதமாக இருந்தால் அதனால் சரியான இல்லற ரமிப்பு ஏற்படாது. ஆகவே, தானே தேடி பொருளாகிய சுயார்ஜித முடையவனே இல்லற ரமிப்புக்கு அருகனாவான். அதாவது பொருள் சம்பாதிக்கச் சக்தியற்றவன் இல்லற ரமிப்புக்கு ஏற்றவனாகான். நமது நாட்டில் பொருட்செல்வம் கொண்ட சீமான்கள் தங்கள் பிள்ளைகளை முழு மூடர்களாக வளர்த்து, வீட்

டில் பொம்மைகள்போல் வைத்து அவர்களுக்கு விவாகமும் செய்வித்து அழகு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்னே அந்தத் தம்பதிகள் இல்லற ரமிப்பு! மற்றும் பல வாலிபர்கள், தங்கள் பித்ரார்ஜிதத்தை வைத்துக் காலக்ஷேபஞ் செய்துகொண்டு வீட்டைச் சுற்றிக்கொண்டும் ஊரைச் சுற்றிக்கொண்டும் தூங்கி விழுந்துகொண்டும் காலந்தள்ளி வருகிறார்கள். என்னே இவர்கள் நிலைமை! இல்லறவாசியானவன் இருப்பதைக் கொண்டு திருப்தியோடு ஒரு மூலையில் நிம்மதியாகக் காலந்தள்ளி வருவது உத்தமம் என்பது நமக்குள் சாதாரணமாய்ப் பரவியிருக்கிற கொள்கை. இந்தக் கொள்கைதான் பொருளாதார நிலைமையில் நமது நாடு மிக கூனிக்குறுகிறதற்கு ஒரு முக்கிய காரணம். ஆனால், இருப்பதைக் கொண்டு திருப்தியடைந்து நிம்மதியாய் எங்கேனும் ஒரு மூலையில் வசிக்கும் வேதாந்தம் துறவறத்தாருக்கு ஏற்பட்டதே யொழிய இல்லறத்தார் அப்படி யிருக்க வேண்டும் என்று நமது நூல்கள் சொல்லவே யில்லை. ஆனால் அதற்கு மாறாக, கல்வ வழியில் இல்லறத்தான் பொருள் தேடி மேன்மேலும் பெருக்கவேண்டும் என்றும், பொருள் மனித வாழ்க்கையின் லக்ஷியமான சதுர்வித புருஷார்த்தங்களி லொன்று என்றும், நமது தொன்னூல்கள் வற்புறுத்திக் கோஷிக்கின்றன. "அஃகமும் காசும் சிக்கெனத் தேடு," "திரைகட லோடியுந் திரவியந் தேடு", "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல இல்லை பொருள்" என்ற தெய்வத் திருமொழிகளே, தருக்த இல்லற வாழ்க்கைக்கு ஆதலின் தருந்த சமூக வாழ்க்கைக்கு அன்றும் இன்றும் என்றும் இன்றியமையாதனவாம். ஆதலின் ஒவ்வொரு இல்லறத்தானும் கூடியவரை மிகுதியாகப் பொருளீட்ட முயலவேண்டும். அப்படி ஈட்டுவதில் விவசாயம் கைத்தொழில் வர்த்தகம் இவற்றுள் பொருள் சம்பாதித்தலே சாலச் சிறந்தது. இவைகளே பொருளே மிகுதியாகத் தருவனவும், தேசத்தின் பொருளாதார நிலைமையைச் செழிக்கச் செய்வனவு மாகும். ஆனால் இந்நாட்டில், பெரும்பாலோர் சம்பளத்திற்கு வேலை பார்ப்பதையே கௌரவமாகவும் உயர்ந்த சுயார்ஜிதமாகவும் கருதுகிறார்கள். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந் தொழுதுண்டு பின்செல் பவர்" என்ற திருவாக்கின் போக்கிலிருந்தே உழுதல் முதலிய தொழில்களின் உயர்வும் சம்பள உத்தியோகங்களின் இழிவும் தெளிவாகும்.

சுயார்ஜிதத்தைத் தவிர இல்லற ரமிப்புக்கு வேண்டிய மற்றொரு விஷயம் காதலி. வெறுமனே மனைவி என்னாமல் காதலி என்றமையால், தான் உளபூர்வமாக உருக்கமாகக் காதலிக்கும் பெண்ணையே, தன்னையும் அவ்வாறே காதலிக்கும் பெண்ணையே இல்லறத் துணைவியாகிய மனைவியாகப் பெறவேண்டும் என்றாயிற்று. அப்பொழுதுதான் இல்லறம் ரமிக்கும். பண்டைக் காலத்தில் தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர்

கண்டு காதலித்துக் கருத்தொருமித்த பின்னர் மணமியற்றிக் கலந்து களித்து மகத்தான இல்லற நடாத்தி மணிகள் போன்ற மக்கட்போப் பெற்று நாட்டை நலம்பெறச் செய்தனர். பண்டை நூல்களைப் பாடுதட ஞாயிறு வாருக்கு இது தெள்ளிதாய் விளங்கும். ஆனால் ஐயோ! கலியாண மாகிற கணம் வரையில் கண்ணுற் காணாத கன்னியரை மணக்கும் புதுமையும், செப்பு விளையாட்டுச் செங்கீரை விளையாட்டுச் செல்லிகளோத் தொப்புத் தொப்பெனத் தள்ளாடும் கொஞ்சு கிழவர்க்கு மணஞ் செய்யும் புதுமையும், கருத்துப் பொருத்தத்தை வெருட்டித் தள்ளிவிட்டுப் பல குருட்டுப் பொருத்தங்களை மாத்திரம் நெருக்கி ஆராய்ந்து பார்த்து மணஞ் செய்யும் புதுமையும், மற்றும் பல புதிய புதிய புதுமைகளும் பொன்னேபோற் போற்றிப் புரக்கப்படும் இக்காலத்தில் எவ்வாறு மெய்யான இல்லற ரமிப்பு சாதாரண மாக ஏற்படும்! தான் கண்டு காதலித்து மனங்கனிந் தொருமித்து மணந்த காதலியோடு பெறும் இல்லற வின்பந்தான் இம்மை இன்பம் என்னப்பட லாம். மற்றவை வெறுந் தின்பமே. இல்லற ரமிப்புக்கு வேண்டிய மற்றொரு விஷயம் தானம் என்பதாம். தானம் என்பது எல்லா அறங்களுக்கும் தலையற மாகும். அஃது எல்லா அறங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. தானம் என்பது கொடுத்தல் என்று பொருள்தரும். மனம், வாக்கு, காயம், பொருள் முதலிய எதனையும் பிறர் நன்மையின்பொருட்டுக் கொடுத்தல் தான மாகும். ஆகையால் சகல அறங்களும் அதன்பாற் படும் என்பதில் யாதொரு ஆக்ஷேபனையு மில்லை. அப்படிப்பட்ட அறமாகிய தானம் அவசியம் என்று கூறிவிட்டதால் பொதுவாக அறத்தை உறுதியாகப் பற்றியிருந்தால்தான் சரியான இல்லற ரமிப்பு ஏற்படும் என்றுமிற்று. இரண்டு பொருள் தேடி யிருந்தாலும், இடைத்தற் கரிய காதலியைப் பெற்றிருந்தாலும், அறத்தின் வழி ஒழுகா விட்டால் இல்லறம் ரசிக்காது. ஆனால் நற்போது ஜனங்கள் எவ்வாறேனும் கொஞ்சம் பொருள் சம்பாதித்துவிடுவதையும், மனைவி மக் களுக்குச் சகல இதமுஞ் செய்வதையுமே தங்கள் முக்கிய கடமையாகக் கொண்டு, தங்கள் அயலார்க்கு, சுற்றத்தார்க்கு, சமூகத்திற்கு, தேசத்திற்கு, தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிச் சற்றுஞ் சிந்திப்பதில்லை. புத்திமான்கள் எத்தனைதரம் தான் அவர்கள் மொழி உபேட்சிக்கப்படு கின்றது.

முற்கூறியவாறு, கல்வழியில் தேடி சுயார்ஜிதம், கருத்தறிசைந்த காதலி, கலையறமாகிய தானம் ஆகிய இவைகளே இம்மை யின்பமாகிய இல்லற ரமிப்புக்கு வேண்டிய புருஷார்த்தங்கள், என்று ஔவையார் அரு ளிச் செய்த

"நூலறந் தீவினைவிட்டீட்டல் பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்தல்—தானது

பட்டதே யின்பம் பரனேநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்ற அரிய செய்யுளில் அமைந்திருப்பது காண்க. திருக்குறள் என்ற திருநூலின் திரண்ட கருத்தும் இதுவே யாகும்.

அடுத்ததாக, துறவற ரமிப்புக்கு வேண்டுவன, சுருதிஞானம், கானம், தாரணை, என மூன்றும். சுருதி என்றால் வேதம் என்று பொருள். ஈண்டு சுருதிஞானம் என்பதால் வேத சாரங்களாகிய உயர்ந்த அரிய மத உண்மை களே அறிந்திருத்தல் துறவறத்திற்கு அவசியம் என்று குறிக்கப்பட்டது. கானம் என்பது பாட்டு எனப் பொருள்படும். அஃதாவது கடவுள் திரு வடிகளின்பாற் பக்தி செய்து வழிபடுகின்ற தேவாரம், திருவாசகம், திரு மொழி, முதலிய தெய்விகப் பாசுரங்களை உருக்கமாக முறையாகப் பாடி மனங்கசிதலில் பிரியமும் ஆற்றலும் கொண்டிருக்கவேண்டும். தாரணை என்பதற்கு நிலைநிறுத்தல் என்பது பொருள். மனத்தை அடக்கிக் கடவுளி டத்தில் லயப்படுத்தியிருத்தலே ஈண்டு அம்மொழியாற் குறிக்கப்பட்டது.

நான்காவது புருஷார்த்த மாகிய வீடு அடைவதற்கு, கர்மம், ஞானம், பக்தி, யோகம், ஆகிய நான்கு மார்க்கங்கள் உள. அவைகளில், விஷயாந் தரங்களில் பற்றற்ற உளத்தோடு இல்லற முதலியவற்றிற் குரிய கருமங் களைப் புரிந்து கொண்டிருக்கும் கர்ம மார்க்கம் முக்கியமாய் இல்லறத்தா ர்க்கே யுரியது. மற்று, முக்கியமாய்த் துறவறத்தார்க் குரிய வனைய மூன்று மார்க்கங்களில் சுருதிஞானம் என்பது ஞானமார்க்கத்தையும், கானம் என்பது பக்தி மார்க்கத்தையும், யோகத்தின் எட்டு அங்கங்களில் ஒன்றாகிய தாரணை என்பது யோக மார்க்கத்தையும் குறிக்கின்றன. இவற்றை விரி த்து விளக்கின் மிகப் பெருகு மாதலால் இத்துடன் நிறுத்துகின்றேன்.

தொகுத்துக் கூறின், சுகம் என்பதை, தேக சுகம், இல்லறச் சுகம், கல் வித் சுகம் துறவறச் சுகம் எனநான்கு வகையாய்ப் பிரித்து, தேகசுக ஆதாரம் சுத்தம், காற்றோட்டம், நாட்டிகம், ரவிப்பிரகாசம் என்றும், இவை நான்கை யும் மேற்கொள்வதில் நாம் சுறும்பு, காகம், தாமரை, ரம்பம் இவைகளைப் போல் இருக்கவேண்டு மென்பதும், சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை யும், காமத்தையும், தாயம் முதலிய சூதாட்டங்களையும், ரம் முதலிய மதுக் களின் பானத்தையும் விலக்கவேண்டியது என்பதும், கல்வி ரமிப்புக்கு, வி டியாராய்ச்சி யாகிய கல்வியும் காதாராய்ச்சி யாகிய கேள்வியும் மேன் மேலும் கற்றல் வேண்டும் என்ற தாகமும் அவசியம் என்பதும், இல்லற ரமிப்புக்கு, பொருள், இன்பம், அறம் ஆகிய மூன்று புருஷார்த்தங்களைக் குறிக்கும் சுயார்ஜிதம், காதலி, தானம் இவை மூன்றும் வேண்டும் என் பதும், துறவற ரமிப்புக்கு, சுருதிஞானம், கானம், தாரணை ஆகிய மூன்

லும் வேண்டும் என்பதும், அவை மூன்றும் முறையே ஞானம், பக்தி, யோகம், ஆகிய மூன்று வீடடை மார்க்கங்களாக் குறிக்கின்றன என்பதும் இவ்வியாசத்தின் சங்கிரகமாம்.

சு. அ. சிதம்பரம்.

சந்தேக விஞ்.

நமது வருஷிணியின் 3வதுபழையில் "சதுரங்கம்" என்ற தலைப்பில் "ஈராசர்களும் அடுத்தடுத்த கட்டங்களிலிய ஒருபொழுதும் நிற்கமாட்டார்கள்" என்றிருப்பது சில நிபந்தனைகளுக் குட்பட்ட விதியல்லவா? ஒவ்வொரு அரசனும் (Check) பின்பலத் தோடு நின்றால் அடுத்தடுத்த கட்டங்களில் நிற்கலாமல்லவா? இச் சந்தேகத்தை விஷயதானம் செய்தவராவது இதர நேயர்களாவது நிவர்த்திக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஓர் உபக்கிரமவாசி.

சதுரங்கம்.

கதா வருஷிணியில் இரண்டாம் மூன்றும் மழைகளில் இவ்விஷயத் தைச்சற்று விவரித்தோம். பிறகு இடையில் நிறுத்தப்பட்டது. மற்றும் சில அபிமானிகள் வேண்டியதாகக் கேள்வியுற்று இம்மழையில் பழைய விஷ யத்தின் தொடர்ச்சியை எழுதுகிறோம்.

பூர்வ விஷயச் சுருக்கம். சதுரங்கமானது இருவரோ இரு கக்ஷிக் காரரோ ஆடுகிற ஆட்டம். ஒரு பலகையில் 64 கட்டங்கள் வரைந்து, ஒன்றுவிட்டொரு கட்டத்திற்குக் கரி பூசவேண்டும். ஆகவே 32 வெள் ளைக் கட்டங்களும் 32 கறுப்புக் கட்டங்களும் உடைய பலகையில் ஆட வேண்டும். ஆடும்பொழுது கறுப்புக் கட்டமானது இடதுகைப்புறம் ஆகும் படி பலகையை அமைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் ஓரரசன், ஒரு மந்திரி, 2 யானைகள், 2 குதிரைகள், 2 தேர்கள், 8 ஆட்கள் ஆக 16 படைக ளுண்டு. இருவருக்கும் மொத்தம் 32 படைகள். ஒன்றைச் சிவப்பாகவும் மற்றதைப் பச்சையாகவும் வைத்துக்கொள்வது வழக்கம். ஆதியில் 79-ம் பக்கத்தில் குறித்த பிரகாரம் படைகளை அமைத் துக்கொள்ள வேண்டும். ஆட்டத்தின் கருத்தையும், அரசன், மந்திரி, யானை, தேர், குதிரை, ஆள் இவற்றின் ஆட்ட முறைமையையும் குறித் தோம்.

இனி ஆட்டங்களை எழுதிவைத்துக் கொள்ளலாம். முன்பே கட்டங் களின் பெயரைச் சொல்லியிருக்கிறோம். ஆட்டத்தைக் குறிக்குங்கால்

இரண்டு கட்டங்களின் பெயரைச் சொல்வார்கள். அதன் அர்த்தம் முதற் சொல்லிய கட்டத்திலுள்ள காயைப் பின்சொல்லப்பட்ட கட்டத்திற்கு நகர் த்தவேண்டும் என்பதாம். உதாரணமாக உ2 உ4 என்றால் உ2ல் உள்ள காயை உ4க்கு நகர்த்தவேண்டும். மற்றவையும் அவ்வண்ணமே. முதற் கக்ஷியின் ஆட்டத்தை ஒரு கோட்டுக்கு மேலும் மற்ற கக்ஷியின் ஆட்டத்தை அக்கோட் டுக்குக் கீழுமாகக் குறிக்கவேண்டும். அப்படியே ஒரு சிறு ஆட்டத்தை இப் பொழுது குறிப்போம். அதை ஆடிச் கண்டுகொள்ளவும்.

1. உ2 உ4 / இ7 இ5 2. எ1 ஊ3 / ஆ8 இ6 3. ஈ2 ஈ4 / இ5 X ஈ4

4. ஊ3 X ஈ4 / உ7 உ5 5. ஈ4 ஊ5 / எ8 உ7 6. ஊ5 ஈ6 ±

இதில் இ5 × ஈ4 என்பது இ5ல் உள்ள காய் ஈ4ல் உள்ள காயை வெட்டி அக்கட்டத்தில் ஏறுகிறது என்பதின் அடை யாளம்.

ஊ5 ஈ6 ± என்பது ஊ5ல் உள்ள காய் ஈ6க்குச் சென்று மாற்றரசனைக் கட்டிவிட்டது என்பதின் அடையாளம். × என்பது வெட்டுவதற்கும், ± என்பது கட்டுவதற்கும், + என்பது அரசு என்பதற்கும், ? என்பது கெட்ட ஆட்டமென்பதற்கும், ! என்பது நல்ல ஆட்டமென்பதற்கும், o—o என்பது வலக்கைக் கோட்டை யென்பதற்கும், o—o—o என்பது இடக்கைக்கோட்டை யென் பதற்கும் சங்கேதங்கள்.

இனி ஆட்டமத்தியில் ஒரு நிலையைக் குறிக்க ஓரேற்பாடு உண்டு. அதாவது பலகையின் உச்சியிலிருந்து ஒன்றுமுதல் துவக்கி வரிசையாகக் கட்டங்களுக்கு எண்ணல் பெயரிட்டு வைத்துக் கொள்ளுவார்கள். உதாரண மாக:—

1—2—3—4—5—6—7—8
9—10—11—12—13—14—15—16
17—18—19—20—21—22—23—24
25—26—27—28—29—30—31—32
33—34—35—36—37—38—39—40
41—42—43—44—45—46—47—48
49—50—51—52—53—54—55—56
57—58—59—60—61—62—63—64

என்று பெயரிடுவார்கள். பிறகு ஒன்று தொட்டுக் காலிக் கட்டங்களைத் தொகையாலும் காய்களைப் பெயராலும் குறித்துக் கொள்ளுவார்கள். உதார

ணமாக 5. சிஅ. கது. 3. கஅ. கம. 4. பொ. 9. கதே. 7. சிஆ. 29. இதன் அர்த்தம் முதல் ஐந்து கட்டங்கள் காலி, ஆறாங் கட்டத்தில் சிவப்பு அரசன், ஏழாங் கட்டத்தில் கறுப்புக் குதிரை, பிறகு மூன்று கட்டங்கள் காலி, பதினோராங் கட்டத்தில் கறுப்பு அரசன், பன்னிரண்டாங் கட்டத்தில் கறுப்பு மந்திரி, பிறகு நாலு கட்டங்கள் காலி, பதினேழாங் கட்டத்தில் சிவப்பு யானை, ஒன்பது கட்டம் காலி, இருபத்தியேழாங் கட்டத்தில் கறுப்புத் தேர், ஏழு கட்டம் காலி, முப்பத்தைந்தாங் கட்டத்தில் சிவப்பு ஆள், இருபத்தொன்பது கட்டங்கள் காலி.

இதையே பலவகையாலுங் குறிக்கலாம். உதாரணமாக:—

சிவப்பில்—அரசன் ஊ 8, யானை அ 6, ஆள் இ 4. கறுப்பில் அரசன் இ 7, மந்திரி ஈ 7, தேர் இ 5, குதிரை எ 8, என்றும் குறிக்கலாம்.

ஆகவே எதாவது ஒரு சங்கேதப்படி ஆட்டத்தையோ நிலையையோ குறிக்கலாம், நாம் இங்கே குறித்த வகையே இனியுங் குறிப்போம்.

(தொடரும்.)

ரா. கே. சுப்பாமண்டி ஐயர், எம். ஏ. எல். டி.

ரசிகை.

ஓர் நவீன நாடகம்.

அங்கம் 3, காட்சி 2.

271-ம் பாகத் தொடர்ச்சி.

(சரஸ்வதிபுரத்து அரசரது அந்தரங்கக் கொலு. அந்தரங்க மந்திரிகளில் மூவர் வீற்றிருக்கின்றனர். மற்றொரு அந்தரங்க மந்திரி சகிதம் அரசர் விஜயம் செய்கின்றார். உடனே மந்திரிகள் மூவரும் எழுந்து கை கூப்பித் தலைவணங்கி நிற்கின்றார்கள். அரசர் சிம்மாசனத்தில் அமர்ந்தும், மந்திரிகள் நால்வரும் சாஷ்டாங்கமாக அரசரை நமஸ்கரித்து எழ அரசர் அவர்களே ஆசனங்களில் வீற்றிருக்கப் பணிக்கின்றார்.)

அரசர்:—நமது குலதெய்வமாகிய ஸ்ரீ சாரதை யன்னையின் திருவருளால் கலைமுற்றுமுணர்ந்து இயங்கிவரும் இவ்வாசிற்குக் கண்களாய் ஒளிரும் அமைச்சர் திலகர்களே! இன்று ஏழாம் நாழிகைக்குக் கூடுவதாக இருந்த இந்த அந்தரங்கக் கொலுவிற்கு வரக் குறிப்பிட்ட நாழிகைக்கே நாம் சித்தமாயிருந்தனம். நமது கனந்தங்கிய முதன் மந்திரியார் சகிதம் நமது பெருமை தங்கிய விருந்தினர் விஜயஞ்செய்யச் சற்றுத் தாமதமாயினமையின் குறிப்பிட்ட நாழிகையில் நாம் கொலு கூடுவதற்கில்லாமலாயிற்று. இப்பொழுதுதான் நமது அரண்மனைக்கு விஜயம்செய்திருப்பதாகத் தெரிவித்த பெருமை தங்கிய வீரமாபுரத்து ராஜதூதர், சாமவல்லபரை அழைத்து வரும்படி

கனந்தங்கிய நமது முதன் மந்திரியாருக்குத் தெரிவிக்குமாறு மந்திரியார் தருமதத்தர் தயை செய்வாராக.

தருமதத்தர்:—மாட்சிமைதங்கிய மகாராஜர் ஆணையே எனது பாக்யம். (எழுந்து சென்று முதன் மந்திரியாரையும், வீரமாபுரத்திலிருந்து வந்தள்ள சாமவல்லபர் என்ற ராஜ தூதரையும் அழைத்து வருகிறார். அரசர் உட்பட யாவரும் எழுகின்றனர். முதன் மந்திரியார் அரசரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறார். ராஜ தூதர் கைகூப்பிச் சிரம்பணிந்து வணங்குகின்றனர். அரசர் அவருக்குக் கைலாகு கொடுத்து அருகேயுள்ள ஓர் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து தானும் சிம்மாசனத்தில் அமர்ந்து மந்திரிகளும் அனைவரும் அவரவர்கள் ஆசனங்களில் அமரப் பணிக்கின்றனர்.)

அரசர்.—பெருமை தங்கிய சாமவல்லபரவர்களே! நமது நாட்டுக்கு உற்ற உயிர்த்துணைச் சகோதரியாய் இலங்கும் வீரநாட்டைப் பரிபாலனம் புரியும் மாட்சிமை தங்கிய மகாராஜர் நம்பாற் பேரன்பு கொண்டு விழைந்து விடுத்த தூது ஏற்று தாங்கள் நமது அலைக்கு அழகுற விஜயஞ் செய்திருப்பது, நமக்கும், நமது அமைச்சர்களுக்கும், நமது குடிஜனங்களுக்கும் பெரு மகிழ்வைத் தருவதைப்பற்றித் தாங்கள் இங்கர்க்கு விஜயஞ் செய்த வன்றே அறிவித்துள்ளோம். மாட்சிமை தங்கிய வீரநாட்டு மகாராஜர் ஓர் அந்தரங்க காரியார்த்தமாகத் தங்களை ஈண்டு அனுப்பியுள்ளதாகவும் அக்காரியத்தை அந்தரங்கமாகவே நமக்கறிவிக்க மாட்சிமை தங்கிய மகாராஜரிடமிருந்து கட்டளை பெற்றிருப்பதாகவும் தாங்கள் உணர்த்தியதை முன்னிட்டு இவ்வந்தரங்கக் கொலு கூட்டப்பட்டிருக்கின்றது. நமது அரசமுறை சம்பந்தமான எவ்விதமான அந்தரங்கத்தையும் அறியப் பூரணஉரிமை பூண்டுள்ள நமது அந்தரங்க அமைச்சர்கள் நிறைந்துள்ள இக்கொலுவில் மாட்சிமை தங்கிய தங்கள் மகாராஜர் நமக்கு அனுப்பிய அந்தரங்கச் செய்தியை இப்பொழுது அறிவிக்கத் தங்களை வேண்டுகின்றோம். தங்கள் வருகையினின்றும், தாங்கள் அறிவிக்க விருக்கும் அந்தரங்கச் செய்தியினின்றும், சரஸ்வதி தேசம், வீர நாடு ஆகிய இரு ராஜ்யங்களுக்கும் தற்போது இருக்கும் கட்புமுன்னிலும் பன் மடங்கு முதிர்ச்சி யடையும் என்று நம்புகிறோம். யாவும் வல்ல இறைவியுள் அவ்வாறே அருள் பாலிப்பாளாக.

சாமவல்லபர். (எழுந்து நின்று) மாட்சிமை பொருந்திய மகாராஜ! குறித்தவாறு இன்று ஏழாம் நாழிகைக்கு ஈண்டு வர இயலாமற் போனது பற்றித் தங்கள் சமூகத்துக் கருணை மிகுந்த கூமிப்பையும், மகிநல மதிகளாயிலங்கும் தங்கள்சமூகத்துக் கனந்தங்கிய அமைச்சர்கள் கூமிப்பையும் முதன்முதற் கோருகின்றேன். அவைக்குப் புறப்படும்பொழுதெதரட்

ச்சியாகத் தோன்றிய சில சகுனச் தடைகளினால் காலதாமத மாயிற்று. அதனைக் கனக்கங்கிய முதன் மந்திரியார் நன்கு அறிவர். இனி, சிறப்புற் றேங்கும் தங்கள் சமுகத்திற்குத் தூரதாக வந்துள்ள விஷயத்தைத் தொடங் குமிடத்து, மாட்சிமை தங்கிய மகாராஜ! தங்கள் சமுகம் சிருவாய் மலர்ந்தருளியவாறே சாஸ்வதி நாட்டிற்கும் வீர நாட்டிற்கும் உள்ள அற் புப் பாசம் முன்னிலும் முதிர்ச்சியடையும் ஒரு மங்கள காரியார்த்தமாகவே மாட்சிமை தங்கிய வீரமாபுர மகாராஜரால் நான் அனுப்பியருளப்பெற் றேன். அந்த மங்கள காரியம் ஓர் வகையில் அரசுமுறையைச் சார்ந்ததே யாயினும் முக்கியமாய்த் தங்கள் சமுகத்தைக் குறிப்பக் காரியமாகும். அந் தகையதை, அரசுமுறை சம்பந்தமாகக் கூட்டப்பெற்றதாய் எனக்குத் தோன்றுகிற இவ்வந்தரங்கக் கொலுவில் வெளியிடுவது எவ்விதத்திலும் உசிதமற்ற தாகாதென நம்புகின்றேன்.

அரசர்:—நண்டு விஜயஞ் செய்துள்ள அமைச்சர்கள் நமது அந்தரங்க மந்திரிகளே யன்றி நமது பிராண மித்திரரு மாவார். ஆதலின் எத்தகைய விஷயத்தையும் இக்கொலுவில் யாதொரு சங்கையுமின்றித்தெரிவிக்கலாம்.

(அடுத்த மழையில் இக்காட்சி முடிவுற, ரதிகைக்கும் அவன் நண்பர் களும் நிகழும் சம்பாஷணையைக் கூறும் அடுத்த காட்சியையும் முடித்து, மேலும், வருஷிணி இடம் கருமாரால், வீரமாபுரத்திலிருந்து பெண்கேட்டு வந்ததைப்பற்றி, ரதிகை வசிகரி ஆகிய இரு சகோதரிகளுக்கும் நிகழ் சம்பா ஷணையைக் கூறும் அடுத்த காட்சியும் தொடர்ந்தப்பெறும்)

பத்திராதிபர்.

ஓர் சிறு வேடிக்கைக் கதை.

"திண்டுக்கல்லிற்குப் போய் இருந்து ஆறுமாத காலம் கேலை பார்க்க வேண்டும். யார் போகக்கூடும்?" என்று ஒரு எஜமான் தன் குமாஸ்தாக் களைக் கேட்டார். "திண்டுக்கல்லில் இப்போது பிளேக் நோய் கடமாடுகிறது. ஆகையால் ரூபாய் ஆயிரம் சம்பளம் கொடுத்தாலும் போகமுடியாது" என்று ஒவ்வொருவரும் சொல்லிவிட்டார்கள். கடைசியாக, நடராஜ ஐயர் என்பவர் "நான் போகிறேன், எனது சம்பளத்தை மாத்திரம் இரட்டிப் பாக்கவேண்டும்" என்றார். "உமக்கு பிளேக் பயமில்லையா?" என்றார் எஜ மானர். "பிளேக் எங்கள் வீட்டையே அணுகாது." என்றார்." ஐயர். "ஏன்" என்று வினவ, "எலிகளால்தான் பிளேக் நோய் உண்டாகின்றது. ஆனால் என் பிரிய மனைவி ருக்மணி அழகிய பூனைக்கண் உடையவள். ஆகையால் அவளையும் அவளோடு பழகும் என்னையும் கண்டாலே எலிகளும் அவை காரணமாக வரும் பிளேக்கும் நடுக்கங்கொண்டு காதவழி அப்பால் போய் விடும்" என்றார் நடராஜ ஐயர்.

CENSORED 20 NOV 1919

உ

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதா வருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள், ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள், இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக லௌகிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பருவம். 1.	கலியுகாப்தஞ 5021. சித்தார்த்தஞ ஆனிமீ. கொல்லமாண்டு 1095, மிதுனமீ. இ. பி. 1919-ம்ஞ ஜூன்மீ.	மலை 10.

சுகாதாரம்.

சுகாதார மென்பது சவுக்கியத்திற்கு அநுசரணையான மார்க்கமெனல் வெளிப்படை. சவுக்கிய மில்லாதவன் சௌபாக்கிய மில்லாதவனென்றும் நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வமெனவும் கேள்விப்பட்டிருக்கிறோம். தற்காலம் இங்கியாவில், கல்வியபிவிருத்தியைப் பற்றி எத்தனை சிரத்தை எடுக்கவேண்டி யிருக்கிறதோ அத்தனை, சுகாதாரத்தைப் பற்றியும் நாம் கவலை யெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நமது தயாள குணம் பொருந்திய மாஜி ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ஜ் அவர்கள் சுகாதாரத் தைத் தமது நேத்திரம்போல் பாவித்துத் தாம் போன இடமெல்லாம் சுகா தாரத்தை விருத்தி பண்ணக்கூடிய வகைகளையே போதித்து வந்தார். இப்போ திருக்கிற வயிசிராய் அவர்களும் சுகாதாரத்தின் மேல் மிகக் கண் ணுங் கருத்துமாய் இருந்து வருகின்றனர்.

சுகாதாரத்தைக் கவனியாத ஜீவியம் ஒரு ஜீவியமல்ல; சுகாதாரத் தைக் கைக்கொள்ளாத சிருகமும் ஓர் சிருகமல்ல. சுகாதாரத்தைச் சுமுத்தி ரையாய் அநுசரிக்கிறவர்கள் விடியற்காலையில் அருணோதயத்திற்கு முன் தங்கள் நித்திரை தெளிந்து எழுந்து விடுகின்றனர். "அதிகாலையில் என் னைக் கண்டடையுங்கள்" என்பது தேவவாக்கிய மாதலின், சுகாதாரப்பிரியர்

கள் படிக்கை விட்டெழுந்ததும் கடவுளுக்கு நன்றியறிந்த தோத்திரம்பண்ணிக் காலைக்கடன் முடித்துத் தேகப்பயிற்சி அனுஷ்டித்துத் தம் படுக்கைத் துணிதோயும் கிட்டியிருந்த உடைகளோயும் சலவை செய்து ஸ்நானம் பண்ணிக்கொண்ட பின்னால் மாத்திரம் போஜனம் அருந்தித் தமக்கேற்பட்ட அன்றாட அலுவலை ஆரம்பிக்கின்றனர். அதிகாலையில் படுக்கை விட்டெழுதல் சுவாதினபுத்தியுடைத்தான மானிடர்க்கு மட்டுமல்ல; கடவுளே பிரேரேகணபிரந்து நடாத்தும் விலங்கினங்களுக்கும் பகலி ஜாதிகளுக்குங்கூட ஏற்பட்ட சுபாவமாயிருக்கிறது. அதிகாலையில் நித்திரை தெளிகின்றவர்கள் மிகுந்த அறிவாளராய்ப் பெரும்பாலும் நெடுங்காலம் ஜீவித்து வருகின்றவர்களாய் இருந்துவரா நாமே பார்த்துவருகிறோம்.

நமது குடும்பப் பெண்கள் அதிகாலையில் தம் படுக்கை விட்டு எழுகின்றவர்களா யிருப்பார்களானால் அங்கே தெருக்களில் இத்தனை குப்பை கூழங்கள் வாயில்கடோறும் குவிந்திருக்க இடமிராது. குப்பை வண்டிக்காரனை முனிசிப்பல் வேலைக்காரன் காலை 6-மணிக்கே தன் வேலையைத் தொடங்கத் தெருக்களில் வருகின்றான்; அவனுக்கு வேலை கொடுக்கின்ற குடும்பத் தலைவியோ 8-மணி மட்டும் தூங்குகின்றனள். வண்டிக்காரனும் தன் வேலையொழிந்து வீடுபோய்ச் சேர்ந்தபின் வீட்டெஜமாட்டி அல்லது இவள் பணிப்பெண், குப்பையைப் பெருக்கி, வீட்டு வாசலண்டையிலேயே லொதுக்கெனக் கொட்டுகின்றனள். மறுநாள் வண்டிக்காரன் வருகிற வரையில் இந்தக் குப்பை அவள் வீட்டு வாசலிலேயே கிடக்கும்படி நேரிடுகின்றது. இதனால் சுகத்திற்கு ஆதாரம்? குப்பை முற்றத்தில் கிடக்கிறதும் அதே குப்பை வீட்டுவாசலில் கிடக்கிறதும் ஒன்றுதானல்லவா?

சுகாதாரத்திற்குத் தேகப்பயிற்சி எத்தனை அத்தியாவசியமென்பதையும் அதுவே சுவாசிய சன்மார்க்கத்திற்கு மூல காரணமென்பதையும் அனேகர் அறிகின்றார்களில்லை. தேகப்பயிற்சியானது சில மதஸ்தர்களுக்கு அதேமாய்த் தங்கள் வேதாநுஷ்டானங்களுடன் ஒன்றித்துப்போயிருக்கின்றது. திருட்டாந்தமாக, மகம்மதியர்களுக்கு அவர்கள் தொழுகையால் பெற்றுக் கொள்ளுகிற தேகப்பயிற்சியும் இந்துக்களுக்கு அவரது உடுபுடவைகளோ அடிக்கடி சலவை செய்துகொள்வதில் உண்டாகக்கூடிய தேகப்பயிற்சியும் அவர்களைச் சுத்தேகிகளாக்கிவைக்க வறக்குறையப் போதுமானது. பிறிது சில மதஸ்தர்களுக்கோ வென்றால் தேகப்பியாசங்கள் வேறு வேதாநுஷ்டானங்கள் வேறு யிருக்கின்றன.

சுகாதாரப் பிரியர்கள் தமது உடுபுடவைகளைச் சலவைசெய்து சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறார்களென்றோம். நம்மில் அனேகர் தாமே சலவைசெய்துகொள்ளுவதில் உண்டான ருட்சை மறியாமல் தொட்டதற்கும்

பட்டதற்கும் வண்ணானையே எதிர்பார்க்கின்றனர். சிலர் பொதுக்கிணறுகளில் ஸ்நானம் பண்ணும்போது வெகு அயோக்கியமாய் நடந்து வருகின்னர். கிணற்றோரத்தில் நின்றுகொண்டு ஸ்நானம் பண்ணும்போது தம் உடலில் வழிகின்ற தண்ணீரில் முக்கால் பாகம் கிணற்றுள் விழுந்துவிடுவதால் ஜலம் முழுவதுமே அசுத்தமாய்ப் போகிறதென்பதை இவர்கள் கொஞ்சங் கூடக் கவனிக்கிறதில்லை.

சுகதாரச் செல்வர்கள் ருசியான உணவைப் பார்க்கிலும் குணமான உணவையே பெரிதும்பாராட்டுகின்றனர். பேருண்டி சுகாதாரத்திற்கு நிரம்பவும் தூரமானதால் போஜன அளவில் மிதமாகவே இருந்துவரவேண்டும். அரை வயிறு ஆகாரமும் கால் வயிறு ஜலமும் கால் வயிறு ஆகாயமும் இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். உண்பதற்குப் பசிக்கணக்கேயொழிய மணிக்கணக்கல்ல. கிடைத்தநேரமட்டும் சாப்பிடுகிற ஏழைகள் நினைத்த நேரமெல்லாம் கவளமிடுகின்ற தனவந்தர்களைக் காட்டிலும் திடசரீரிகளாய், சுகதேகிகளாய் இருக்கக் காண்கின்றோம். ஒருபொழுது உண்பவன் யோகி, இருபொழு துண்பவன் போகி, மூன்று பொழு துண்பவன் ரோகி, யென்றிருக்க, விரும்பிய தருணமெல்லாம் விம்மிப் புடைக்க விழுங்குபவரும் மெய்ப்நிலில்லாதவருக்கு வியாதிக்குமேல் வியாதி வரக் கேட்பானேன்? உயிரோடிருக்கச் சாப்பிடுவது உசிதமே யொழிய, சாப்பிடுகிறதற்காக உயிரோடிருத்தல் அறிவாளிகளுக்கு கேற்றதல்ல. பட்டினியால் சாகிற ஜனங்களைப்பார்க்கிலும் நின்ற பேருண்டி ஜீரணியாமல் சாவுக்கு இரையாகிற ஜனங்கள் அநேகம். உணவிற்கு மச்ச மாமிசத்தைப் பார்க்கிலும் மாக்கறி வகையே நிரம்பவும் விசேஷம். மரக்கறிகளோயும் பழ வர்க்கங்களோயும் வேண்டாமென்கிறவர்கள் வியாதிகளே வாருங்களென்று அழைக்கின்றனர். அநேக ஞானமுடைத்தான கடவுள் வாயின் மேல் மூக்கும் கண்களும், பொருந்த வைத்திருப்பது நாம் வாய்க்குள் செலுத்துவதை மோப்பத்தாலும் பார்வையாலும் அறிந்து கொள்வதற்கே யன்றி மற்றப்படியல்ல.

சுகாதாரத்தை விரும்புகிறவர்கள் பானம் பண்ணுகிறதற்குச் சுத்த ஜலமே மெத்த கலமெனக் கண்டிருக்கின்றனர். அவர்கள் பானமாக மதுபானத்தை மறந்தேனும் கொள்ளமாட்டார்கள். பறவை வர்க்கமும் மிருக வர்க்கமும் தாபவர்க்கமும் சுத்த ஜலத்தையே ஆதாரமாய்க் கொண்டிருக்கின்றன. நன்றாய்க் காய்ச்சி வடிகட்டிய தண்ணீரே சுத்த ஜலமாகும். சுனைவாயில் கிடைக்கும் அருவி ஜலம் மிகவும் உத்தரிஷ்ணமானது.

சுகாதாரத்திற்கு நித்திரை எப்படியிருத்தல்வேண்டுமென்பதைச் சிறிது எடுத்துக்காட்டி இவ்வியாசத்தை முடித்துக்கொள்ளுதல் உசிதமெனநினைக்

கின்றோம். நித்திரைக்கு இராக்காலம் நல்லதேயொழிய, பகற்காலம் பொருத்தியதல்ல. இரவில் நேரத்தோடே அதாவது 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக நித்திரைபோகப் பழகவேண்டும். முன் சாமத்தில் எதுவித காரணத்தைக் கொண்டேனும் நித்திரைக்குப் பங்கம் விளைவித்தல் கூடாது. இடதுகைப்பக்கம் உயரேயிருக்க ஒருக்கணித்துப் படுத்திருக்கவேண்டு மன்றி மல்லாந்து படுத்தல் ஒருபொழுதும் ஏற்றதல்ல. குளிர்காலத்தில் உடல் முழுவதும் போர்த்திக்கொள்ளுதல் கல்லதே யென்றாலும் காலத் தவாரங்களை எவ்வேதுபற்றியேனும் மூடிவைத்தல் கூடாது. சுவாசத்தை காதியாலேயே வாங்கவேண்டும். வாயால் வாங்குவது மிகவும் கெட்டது. தூங்குமிடம் சாணமெழுகிய தலை அல்லது தரைக்குமேல் இரண்டடி யுயர்ந்த கட்டிலா யிருத்தல் விசேஷம். படுக்கையறையில் அதி பிரகாசமான வினக்கு வைப்பதும் காற்று வாடாடாமல் கதவுகளை மூடிவைப்பதும் பொருத்தமற்றது. நித்திரைவரும் நேரத்தில் மாத்திரம் படுக்கைக்குப்போக வேண்டும். படுத்துக்கொண்டு நித்திரையை யெதிர்பார்த்து உருண்டு புரண்டு படுக்கையிலேயே சோம்பிக் கிடப்பது உடற்சோர்வைத் தீர்ப்பதற்கு உரிய தல்ல. விடியற்காலே விழிப்பு வந்ததும் உடனே படுக்கையைவிட்டு எழுந்து விடவேண்டும். சுகத்திற்கு ஆதாரமா யிருக்கக்கூடிய எத்தனையோ விதி களை இங்கு எடுத்துச்சொல்லலாமாயினும் அவ்வனைத்தையும் இப்போதுஒரு சோக் கூறுதல் முடியுந்தாமல்ல வாகலின் இவ்வியாசத்தை இம்முடன் முடிக்கின்றோம்.

எம். பி. மஸ்கான்ஹாஸ்,

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

மூன்றும் பாடம்.

327-ம்பக்கத் தொடர்ச்சி.

உறழ்ச்சி:—மழமழப்பாக இழைக்கப்பெற்ற ஒரு மரமேஜை. அதன் ஒருபுற ஓரத்தின் நடுவில் சுமார் முக்கால் அங்குலம் ஆழமுள்ள ஒரு கப்பி யுருளை. மேஜைமேல், அடிப்புறம் மழமழப்பாக இழைக்கப்பெற்ற ஒரு மரப்பெட்டி. அப்பெட்டியின் கைப்பிடியில் கட்டப்பெற்ற ஒரு கயிற்றின் மற்றொரு நுனி கப்பிமேல் சென்று கீழ்ப்புறமாகத் தொங்க, அந் நுனி யோடு ஒரு தராசுத் தட்டு அல்லது என்னவேனும் ஒரு தட்டு கட்டப்பட்டி ருக்கிறது. பெட்டிக்குள் சில வஸ்துக்கள் இருக்கின்றன. அவ் வஸ்துக்க ளோடு பெட்டியின் எடை 100 அவுன்ஸ். இப்பெட்டியை மேஜைமீது தள் ளவேண்டுமாஞல் கயிற்றின் நுனியில் தொங்குகிற தட்டின் கனத்தை அதி கரிக்கவேண்டும். அதற்காக அத்தட்டின்மேல் எடைக் கருவிகளை வைப்

பேரம். தட்டும் அதன்மீதுள்ள எடைக் கருவிகளும் சேர்ந்து மொத்தத்தில் சுமார் 50 அவுன்ஸ் ஆஞல்தான், 100 அவுன்ஸ் பெட்டி மேஜைமீது நக ரும். பெட்டியின் மொத்த எடை 300 அவுன்ஸாக இருந்தால் அதை நகர்த்து வதற்கு, தட்டின் மொத்த எடை சுமார் 150 அவுன்ஸாக வேண்டும்.

ஆஞல், மொத்த எடை 100 அவுன்ஸ் உள்ள பெட்டியின் அடிப்பாக மும் மேஜையின் மேற்பரப்பும் சலவைக் கல்லினுல் ஆக்கப்பட்டிருந்தால் அந்த 100 அவுன்ஸ் பெட்டியை நகர்த்த, தட்டின் மொத்த எடை சுமார் 30 அவுன்ஸாக இருந்தால் போதும்.

முதலில் 100 அவுன்ஸ் மொத்த எடையுள்ள பெட்டியை நகர்த்த 50 அவுன்ஸ் சக்தி வேண்டியிருந்தது. இரண்டாவது அதே 100 அவுன்ஸ் எடை யுள்ளதை நகர்த்த 30 அவுன்ஸ் போதும். இரண்டாவது முறை நகர்த்தலே விட முதன் முறை நகர்த்தலில் அதிக சக்தி வேண்டும். என்? இதற்கு நாம் என்ன பதில்தான் சொல்லலாம்! நகர்த்தும் முயற்சிக்கு, இரண்டாவது முறையில் இல்லாத ஒருவித தடங்கல் ஒருவித எதிர்ப்பு முதன் முறையில் அவசியம் இருக்கிறிருக்கவேண்டும் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அந்தத் தடங்கலே, அந்த எதிர்ப்பை மேற்கொள்ளத்தான் இரண்டாவது முறையைவிட முதல் முறையில் அதிக எடை வேண்டியிருந்தது. அது என்ன தடங்கல், என்ன எதிர்ப்பு, என்று ஆலோசித்தால், அது மேஜையின் மேற்பாகமும் பெட்டியின் அடிப்பாகமும் அமைந்திருக்கிற மழமழப்பைப் பொறுத்ததாயிருக்கிறது என்று தெளிவாகத் தெரிகிறது. அதிக மழமழப் பிருந்தால் தடங்கல் குறையும். மழமழப்புக் குறைந்தால் தடங்கல் அதிகரிக் கும். இந்தத் தடங்கல் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் வஸ்துக்களிலெல் லாம் இயற்கையாக இருக்கிறது. இதைத்தான் உறழ்ச்சி என்று நமது நூலில் அழைக்கிறோம். நிட்டமாகவும் சுருக்கமாகவும் வரையறுத்துக் கூறின், வஸ்துக்களின் புறப்பரப்பின் சொரசொரப்பான தன்மை யினுல் அசைவிற்கு நேர்கீழும் அழிசக்தியே உறழ்ச்சி என்னப்படும்.

பூரண மழமழப்பான வெளிப் பரப்புடைய வஸ்து இல்லவேயில்லை. மிகுந்த மழமழப்பான வெளிப் பரப்பினும், கண்ணுற் காணக்கூடாதபடி ஸ்பரிசத்தால் உணரக்கூடாதபடி சொரசொரப்பு இருக்கவே இருக்கிறது. எலி பிடிக்க உதவும் பொறிக் கத்திரியின் இரண்டு பல் வரிசைகளும் பொருந்தியிருப்பதுபோல, ஒன்றையொன்று சார்ந்திருக்கும் வஸ்துக்களின் சொரசொரப்புக்கள் பொருந்தி யிருக்கின்றன. வஸ்துக்கள் அசையும் பொழுது அவ்வாறு சொரசொரப்புக்களைத் தாண்டித் தாண்டி அல்லது உடைத்துடைத்துச் செல்லச் சக்திகள் அடிக்கடிக்காக வேண்டியதிருக்கின் றன. இவ்வடிக்கடிக்கான சக்திகள் வஸ்துவை முதன்முதல் அசையச்செய்த அளிசக்தியினின்றும் எடுக்கப்பெற எடுக்கப்பெற, அந்த முதல் அளி

சக்தி குறைந்துகொண்டே வந்து கடைசியில் முற்றும் அற்றுவிடும். இதுதான் ஒரு வஸ்துவை அசையச் செய்யும் அளிசக்திக்கு உறழ்ச்சி அழிசக்தியாகி அவ் வளிசக்தியைக் குறைத்துக் குறைத்துக் கடைசியில் முற்றும் அழிக்கும் நியதி. ஆகையினால்தான் பூமியில் உருட்டப்பெற்ற ஒரு பந்து வரவர வேகங் குறைந்து கடைசியாக நின்றுவிடுகிறது.

உறழ்ச்சி, நகருறழ்ச்சி, உருளுறழ்ச்சி என இருவகைப்படும். ஒரு மேஜையில் பெட்டி நகரும்பொழுது அல்லது தரையில் ஒரு பெட்டி நகரும்பொழுது அது நகருறழ்ச்சி. உரல் உருளும்பொழுது அல்லது வண்டிச் சக்கரம் உருண்டு செல்லும் பொழுது அது உருளுறழ்ச்சி.

கொழுப்பான பதார்த்தங்களோ அவற்றை உறிஞ்சுகொள்ளாத வஸ்துக்களில் தடவினால் அவ்வஸ்துக்களின்மீது உறழ்ச்சி குறைகிறது. எண்ணெயும் ஈரமும் மாத்தின் உறழ்ச்சியை அதிகரிக்கின்றன. மரம் அவைகளை உறிஞ்சுகொள்ளுந் தன்மை அதற்குக் காரணம் என்னலாம். கொழுப்பும் சவர்க்காரமும் மாத்தின் உறழ்ச்சியைக் குறைக்கின்றன. எண்ணெய், பித்தளை முதலிய உலோக வஸ்துக்களின் உறழ்ச்சியைக் குறைக்கின்றது. சாதாரணமாக உருளுறழ்ச்சி நகருறழ்ச்சியைவிடக் குறைவு. ஆகையால்தான் சில நாற்காலிகள் பெரிய பெட்டகங்கள் முதலியவைகட்கு அடியில் சிறு சக்கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் உருளுறழ்ச்சி நகருறழ்ச்சியைவிட எப்பொழுதும் குறைவன்று. குளிர்தேசங்களில் தரையைக் கவிந்துகொண்டிருக்கும் பளிக்கட்டியில் சக்கரங்கள் பதிந்துகொள்வதால் அச் சக்கரங்களின் அடிப்பாகத்தைத் தவிர பக்கங்களிலும் உறழ்ச்சி உண்டாவதால் மொத்த உறழ்ச்சி அதிகமாயிருக்கும். அச் சந்தர்ப்பங்களில் சக்கரமில்லாத நகர்கின்ற வண்டிகளின் நகருறழ்ச்சியே உருளுறழ்ச்சியைவிடக் குறைவு.

(தொடரும்.)

பத்திராதிபர்.

உற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

338-ம் பக்கத் தொடர்ச்சி.

அன்று முதல் எங்கள் குடும்பத்திற்கும் சாவித்திரியின் குடும்பத்திற்கும் அத்தியந்த கட்டி முறிந்து வளர்ந்தது. யாதாமொரு அத்தியாவசியகமான காரியத்திற்கன்றி அயலகத்தக்குக்கூடப் போகாத என் அம்மான்

வாரத்திற்கு மூன்று நான்கு முறை சாவித்திரியின் வீட்டுக்குப் போய் வாலாயினள் என்னுரும், குழந்தைகளாகிய நாங்கள் மூவரும் எவ்வளவு அடிக்கடி சந்தித்திருப்போம். சாவித்திரியின் வீணையும் அவள் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் ஊசலாடிற்று. என் தங்கைக்கும் எனக்கும் வீணை வாசிக்கும் ஞானம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகிற்று. நான் ஒரு புதிய ஜனகளுக மாறிவிட்டேன். சங்கீதத்திலே எனக்குப் பெரும் பைத்திய முண்டாயிற்று. குழந்தைப் பருவத்திலேயே எனக்குச் சங்கீதத்தில் விசேஷ பிரியமுண்டு. என் மூன்றும் வயதில் என் அம்மாள் கற்றுக்கொடுத்த பாட்டுகளையெல்லாம் உடனுக்குடனே கற்றுக்கொண்டு, தலையையசைத்தசைத்து நான் பாடியதும் பாட்டுக்குத் தக்கவாறு நான் ஆடியதும் இன்னும்நன்றாய்என் ஞாபகத்திலிருக்கின்றன. ஆனால்நான்பாடசாலைக்குப் போன சில வருஷங்களுக்குப்பின், சங்கீதம், பஜனை, பாட்டு இவைகளில் என் உபேட்சையும் அவமதிப்பும் கொண்டேன் என்பது மாத்திரம் சரியாகத் தெரியவில்லை. அது என் ஜாதகப் பலன் என்றுதான் சொல்ல வேண்டும்.

சங்கீதப் பிரேமை யுற்றதால் மாத்திரம் நான் புதிய ஜனகளுக மாறிவிட்டதாகச் சொல்லவில்லை. அது என் குழந்தைப் பருவத்திலிருந்த பிரீதிதானே. மற்றுஞ் சில விஷயங்களினால்தான் நான் புதியவனுயினேன். சாவித்திரியின் உருவம், அவள் வீணை, பாட்டு, பேச்சு, இவைகள் நீங்காத என் சித்தத்தில் உலாவிக்கொண்டே யிருந்தன. அவ்வாறிருந்தமை, நான் முன்பு என்றும் உணர்ந்திராத ஓர் இன்பத்தை இறைத்துக்கொண்டே யிருந்தது அந்தச் சித்தத்தில். பந்து விளையாட்டு, தோழரோடு சேர்ந்து சங்கீதத்தையும் சகல மதங்களையும் பரிகசித்துப் பேசுதல் முதலிய காலக்ஷேபங்களிலெல்லாம் பற்று திடீரென இற்று வீழ்ந்தது. படிப்பிற்கூடப் பற்றுக் குறைந்துகொண்டே வந்தது. சாவித்திரியோடு பேசிக்கொண்டிருப்பது, சாவித்திரியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது, சாவித்திரியும் அவளோடு பேசிய அவளைச் சார்ந்த கணக்கற்ற விஷயங்களும் அடிக்கடிக்காகச் சிந்தையிற் சுழல விழித்துக்கொண்டு கனவு கண்டுகொண்டிருப்பது, இம் மூன்றையுந்தான் சதா நாடினேன். கனவற்ற நித்திராகாலந்தவிர, அநேகமாக எப்பொழுதும் இம் மூன்று நிலைமையிலொன்றிலேயே இருந்தேன்.

சத்தியம், பொறுமை, ஜீவகாருண்யம் முதலிய நற்குண நல்லொழுக்கங்களில் எனக்கு மதிப்பும் பற்று மிருந்ததேயன்றி, மதம், தெய்வம், பக்தி முதலிய விஷயங்களில் எனக்கு நம்பிக்கையே யிடையாது; அவைகளைக் கடைப்பிடித்தவர்களிடம் நான் பரிதாபங்கொண்டேன்; எத்தனை புத்தகங்களோ வாசித்தும், பல பண்டிதர்களிடம் பேசியும் எனக்கு அந்த கம்

பிக்கையும் பிறக்கவில்லை, அத்தப் பரிதாபமும் என்னை அலவில்லை என்று முன்னமே விளக்கிக் கூறியிருக்கிறேன். ஆனால் சாவித்திரியைச் சரஸ்வதி பூஜைக் கோலத்தில் நான் முதன் முதல் பார்த்தபொழுது மாத்திரம் நான் பிரேமையுற்றவனும் மனப்பூர்வகமான விசயத்துடன் சரஸ்வதி படத்தின் முன்புகைகூப்பிக்கொண்டிருந்தேனென்றும் முன்புசொல்லியிருக்கிறேன். எனினும் இரண்டொரு தினங்களில் அத்தப் புதிய பிரேமையும் விசயமும் பறந்துவிட்டன. பக்தியென்றும் பஜனையென்றும் பூஜையென்றும் கொண்டு திரிவார்பா லுண்டானும் பழைய பரிதாபமே சாவித்திரியின் பாலும் சார்ந்தெழுந்தது. தங்கப்பதுமைபோல் காந்தியும், தாமரை மலரிலும் முக வசீகரமும் வாய்ந்து விளங்கும் அவ்வளவு அசாதாரண அழகுடைய அத்தப் பெண், பாலோடு தேன்கலந்தவாறு, வீணையின் இசையோடு சரியாய் இயைந்தொலிக்கும் அவ்வளவு இனிமையான குரலுடைய அத்தப் பெண், கோபமென்பதே உணர்ந்திராத அத்தப் பெண், தங்கமென் றெருவிரும் ஒளிப் பிழம்பன்ன பரிசுத்தம் படித்துள்ள அத்தப் பெண், அறிவை விசாலிக்கச்செய்யும் போதிய கல்வியில்லாமையினாலல்லவா ஐயோ! இல்லாத விஷயங்களோ இருக்கின்றனவாகக் கருதிப் பல குருட்டுக் கொள்கைகளைக் கொண்டு அவஸ்தைப்படுகின்றாள் என்று எண்ணி எண்ணி வருந்தினேன். இவ்வாறு எண்ணி எண்ணி வருந்துவதாற் பயனென்ன, அவள் அறிவுக் கண்ணைச் செவ்வனே திறக்குஞ் சக்தி வாய்ந்த திறந்த கல்வியை அவள் பெறச்செய்ய வேண்டுமென்று தீர்மானித்தேன். நான் பெற்ற படிப்பை அவளுக்குப் புகட்டத் தொடங்கினேன் அன்றியும் அவளது சரஸ்வதி படம் பூஜை முதலியவைகளின் வெறுமையையும், பயனிலாமையையும் ஸ்பஷ்டமாக அவளுக்குப் பேசிக் காட்டவேண்டுமென் றெண்ணியிருந்தேன். அதற்குத் தக்கவாறு ஒரு சந்தர்ப்பம் சேர்ந்தது. அவள் குருட்டு நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் அத்தருணமுதல் களைக்கக் கருதி முயற்சித்தேன். ஆனால் அம்மவோ! சர்வ சக்தி சாந்த சரஸ்வதி தாய் என்பாற் கொண்ட கருணையே கருணை! என் முயற்சி நான் முற்றும் எதிர்பார்த்த காரியங்களோ நிகழ்த்திவிட்டது. என்ன காரியங்கள்? நான் சாவித்திரியின் நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் தைக்க வெண்ணிய கருத்துப் பலிதமாகாமற்போயினதும் அக்கருத்தே என்னிடமிருந்து தைவற்று, புத்தகங்களாலும் பண்டிதர்களாலும் சற்றேனும் அசைக்க வியலாத எனது நாஸ்திகக் கொள்கைகளனைத்தும் என் சித்தத்திலிருந்து பெயர்த் தொழிக்கப்பெற்று நான் முற்றும் புதிய ஜனகனாக மாறியதுமே. நான் இவ்வாறு முற்றும் புதிய ஜனகனாயின விசித்திரத்தை விளக்குவது எனது சரித்திரத்தை நான் எழுதுவதின் முக்கிய கருத்துக்களில் ஒன்றாகும். இவ்வொரு பீடிகையோடு அந்த விசித்திரத்தை விவரிக்கத் தொடங்குகின்றேன்.

(ஆசிரியனுரை:—முழு நாஸ்திகனாயிருந்த கதாநாயகன் முற்றும் புதிய ஜனகராஜனாக மாறிய விசித்திரத்தை அவன் விவரிக்க வரைந்திருப்பதை, சில வரிகளில் மிகச்சுருக்கித் தருகின்றோம்.)

கதாநாயகன் கூற்று:—

புத்தகமொன்று சாவித்திரியின் கரத்திலிருந்து கவறி அவள் காலிற் பட்டது ஒரு தினம். உடனே வெகு ஜீவிதமாய் அதை எடுத்துத் தன்னிரு கண்களிலுற்றிமுத்தமிட்டுக்கொண்டாள். அவள் கொள்கைகளைக் கலைக்கத் தொடங்க அதுதான் தக்க தருணமென்று கருதினேன். கேவலம் அஃறிணைப் பொருளாகிய புத்தகத்தைக் கண்ணிலொற்றி முத்தமிட்டது சுத்த அஞ்ஞானச் செய்கை என்று சொல்லி, மற்றும் அவளது அஞ்ஞானச் செய்கைகளையும் கொள்கைகளையும் நான் பழைய ஜனகனுக எடுத்துக்காட்டிப் பழித்துப் பிரசங்கிக்கத் தொடங்கினேன். சாவித்திரிக்கு ஆவேசமும் ஆத்திரமும் பொங்கிவிட்டன. ஆத்திரமும் ஆவேசமும் முடையவர்களுக்குக் கோபமல்லலோ வரும். ஆனால் கோபம் வரவில்லை அந்த கவீனப் பெண்ணுக்கு. தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தினுள். அதைப் பார்த்தேன். என்னுற் சகிக்கக்கூடவில்லை. "ஐயோ சாவித்திரி! எனம்மா அழுகிறாய்? நான் உனக்குச் சில் உண்மைகளைத்தானே சொன்னேன். இதற்காகவா இவ்வளவு துக்கம் உனக்கு? அழாதே. இனி நான் உன்னிடம் இந்தப் பேச்சைப்பற்றிப் பேசவதே யில்லை" என்றேன். அவள் தன் கண்களைத் துடைத்துக்கொண்டே மெல்ல மெல்லத் தன் கண்ணீர்க் கிளர்ச்சியை அமர்த்தினுள். "நீங்கள் இப்படிப் பேசுவீர்களென்று நான் இதற்குமுன் நினைக்கவேயில்லை; திடீரென நீங்கள் இப்படிப் பேசியதால், என்ன காரணமோ தெரியவில்லை! எனக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது....." என்று மிகப் பேதைமையாக ஒரு பீடிகையிட்டுக்கொண்டு, சாவித்திரி, சர்வ நாயகியாகிய சரஸ்வதியைப்பற்றியும் அந்த அன்னையிடம் தான் கொண்டுள்ள சம்பூரண நம்பிக்கையையும் குழந்தைப் பருவத்திலிருந்து அந்த அம்மணி தனக்குப் பிரிய தாயாய் அருள்செய்த சம்பவங்களைப்பற்றியும் சாற்றினுள். "சரஸ்வதி தாய் யார்? எங்கே யிருக்கிறுள்? காட்டு, இருக்கிறுள் என்று நிச்சயமாகச் சொல்ல நியாயமென்ன? என்றவாறு குயுக்தியான கேள்விகளைக் கேட்டாலோசிப்பதனால் அந்தத் தேவியின் மகிமையை உணர முடியாது; அவளை முற்றும் நம்பி நம்மை முற்றும் அவளிடம் ஒப்புவித்து சித்தங்கொண்டு கூடியகரையில் அனவரதம் அவளையே தியானித்துக் கொண்டிருக்கப் பழகிப் பக்தி செய்துகொண்டிருந்தால், படிப்படியாக அவள் நமது சித்தத்தில் அற்புதமான இன்பமும் தெளிவும் பிறங்கச்செய்து சகல சந்தேக நிவாரணமும் அதிசயிக்கத்தக்கவாறு உண்டாகும்படி செய்

வாள்" என்றவாறு அநேக விஷயங்களோ உருக்கமாகக் கோவித்தனள் அக் கோதை. காலும் அவள் கூறியவைகளோ எதிர்த் தெதிர்த்துப் பேசி வாதித் தேன். இவ்விஷய வாதம் பலமுறை எங்களிருவருக்கும் நிகழ்ந்தது. என் சந்தேகங்கள் சிலவற்றிற்கு நான் என்றும் கேட்டிராத உத்தரம் கூறினாள். இவ்வுத்தரங்களும், சரஸ்வதி என்ற வார்த்தையைக் கூறினவுடனே அவள் அகத்திலெழும் ஆர்வக் காரணமாக அவள் முகத்திலெழும் அற்புத மான அதிசௌந்தரியமான தேஜசும் என் வியப்பைக் கவர்ந்தன, மதிப்பை யும் கவர்ந்தன. "பேச்சை வளர்த்திக்கொண்டே போவதால் என்ன பயன்? உங்கள் நாஸ்திகக் கொள்கைகளையும் சந்தேகங்களையும் மறதி என்ற சமுத்திரத்திற் கொட்டிவிட்டுச் சரஸ்வதியன்னையை முற்றும் நம்பி நான் சொல்லுகிறபடி பக்திசெய்து பாருங்கள்; நீங்கள் சமுத்திரத்திற் கொட்டிய பிசாசக் கொள்கைகளும் சந்தேகங்களும் பின்பு தலையெடுத்து வாவே வரா; நீங்கள் முற்றும் புதிய ஜனகராய்விடுவீர்கள்; அப்படி யானால் நான் எவ்வளவு திருப்தி யடைவேன்!" என்றன் சாவித்திரி ஒரு முறை. அவளுடைய கடைசி மொழிகள் என் நெஞ்சத்தை-நெகிழ்த்தி விட்டன – உருக்கிவிட்டன – குழைத்துவிட்டன – கழற்றிவிட்டன– பிசைந்துவிட்டன – திரித்துவிட்டன – குலுக்கிவிட்டன – ககதகவெனக் கொதிக்கச் செய்தன – படபடவெனப் பதைக்கச் செய்தன – ஐயோ! இப் பதங்களெல்லாம் சரியாய் இயைந்தனவல்ல என் நெஞ்சில் எழுந்த கிளர்ச் சியை உண்மையாய் உணர்த்துவதற்கு. என்னவோ ஒரு அதனமான கிளர்ச் சி இன்பமயமாகப் பொங்கிற்று.

* * * * * * *

அவள் திருப்தி யடைவது எனக்கு இன்பமாகத் தோற்றியது. ஆகை யால் அவளைத் திருப்தி செய்வதற்காக நான் முதன் முதல் அவள் சொன் னவாறு சரஸ்வதி பூஜை புரியத் தொடங்கினேன். அதனால் சாவித்திரி திருப்தியுற்றதுமன்றி என்னிடம் விசேஷ பிரியமுங் கொண்டாள். அவள் திருப்தியும் பிரியமும் எனக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்தன. ஆகை யால் என் பூஜைகளின் ஆர்வமும் அதிகரித்தது. கடையாக மூன்றே மாதத்தில் நான் எதனாலும் பிறழாத உறுதியான பக்தியுடைய சரஸ்வதி தாசனாக மாறிவிட்டேன். சாவித்திரி எனக்குப் போதித்த உண்மைகளெல் லாம் தெளிவாகத் தலைகின. என்ற பழைய கொள்கைகளின் மடமை யெல்லாம் விளங்கின.

* * * * * * *

சாவித்திரியும் நானும் சரஸ்வதி தாயின்பால் உலையாத அன்பும் நம் பிக்கையுங் கொண்ட அரிய கட்டாள ராயினோம். ஆகையால் அவளோ என் வாழ்க்கைத் தலைவியாகக் கொள்ளும் விருப்பம் எனக்குண்டாயிருக்கலாம்

என்ற எண்ணம் தோன்றுகிறதுமுண்டு. ஆம், உண்மையே. அந்தச் சித் தனை எனக்கிருந்தது என்னைப்போல் பாக்யவான் இதுவரையில் ஜனிக்கவு மில்லை இனி ஜனிக்கப்போகிறதுமில்லை என்றுகூட எண்ணி இறுமாந் திருந்தேன். ஐயோ அம்மா! திடீரென என் நெஞ்சத்தில் இடி வீழ்ந்துவிட் டது. ஒருநாள் அவள் அன்னையோடு பேசிக்கொண்டிருந்தேன். சாவித்திரி அருகேயில்லை. பற்பல விஷயங்களைப்பற்றிய பேச்சு, கடைசியாக, "பெண் களின் விவாகப் பருவம்" என்ற விஷயத்திற்கு இழுத்தது. அந்தச் சந்தர்ப் பத்தில் நான் "ஆமாம் மெய்தான், நமது சாவித்திரிக்குக்கூடப் பதினேழு பதினெட்டு வயதுக்கு மேல்தான் கலியாணஞ்செய்யவேண்டும்" என்று புன்னகையோடு கூறினேன். சாவித்திரியின் தாயின் முகம் உடனே வெளுத்தது. கண்ணீர் சிந்தி எங்களுள். "என் என்?" என்று விசாரித் தேன். "ஐயோ! உங்களுக்கு இதுவரையிலும் தெரியாதா! சாவித்திரியின் கதியை நினைத்தால் என்னை யறியாமல் எனக்குத் துக்கம் பொங்குகிறது; என்ன செய்வேன்! சாவித்திரிக்குக் கலியாணமாயிற்று; காலாவது வயதி லேயே புருஷனை இழந்துவிட்டாள்." என்று தேம்பித் தேம்பிக் கூறி யழ லாயினள் என் சாவித்திரியின் மாதா.

அத்தியாயம் 5.

பார்க்கப் பசுங்கிளிபோ லிருக்குங் குழந்தை, நல்ல விற்பனமுடைய குழந்தை, தன் கண்ணுக்குக் கண்ணைக் கருதி அன்பு செலுத்திவந்த தன் சொந்தக் குழந்தை கடுங்ஙீ என்ற கொடிய சப்தம் காதைத் துளைக்க, திடீ ரெனக் கிணற்றில் விழுந்தால் தமிழ் நாட்டுத் தாய் ஒருத்தி தன் நெஞ்சத் தில் என்ன உணர்ச்சி யுறுவாள்! அதே கோரந்தான் என் நெஞ்சத்தில் துண் ணெனக் குதித்தது. 'ஆ!' என்ற ஒரே தொனியோடு என் இதழ்கள் ஒன்றையொன்றுவிலகியிருந்தவாறே நின்று ஜன்னியில் அவஸ்தைப்படுகிற வர்களைப்போல் மருண்டு விழித்துக்கொண்டேயிருந்தேன். சாவித்திரியின் தாய் தேம்பிக்கொண்டே யிருந்தாள். ஆயினும், கூவாதிருந்து கூவினாம் மாற்றம் என்ற மாற்றமற்ற தெய்விகக் கட்டிலல்லவா உலகம் இயங்கிவரு கின்றது. ஆகையால் சற்று நேரத்தில் அவள் தேம்பலும் சிறிது நின்றது. எனது போலி ஜன்னி விழிப்பும் போயிற்று. இருவரும் மீண்டும் பேசலா யினோம். இடைக்கிடையே நான் விடுத்த விஞாக்களையெல்லாம் விடுத்து அந்த அம்மாள் கூறியவற்றை மாத்திரம் கூறுகிறேன்:—

"என் தம்பி யொருவன் இந்த ஊரிலேயே தெற்கெருவில் வசிக் கிறான். அவனை நீங்கள் இதுவரையில் பார்த்ததில்லை. அவன் எப்பொழு தாவது ஆடிக் கொருமுறை அமாவாசைக் கொருமுறைதான் இவ்வே வரு

வான். எங்களுக்கும் அவனுக்கும் மலைந்தாபம் ஒன்றுமில்லை. அவன் வழக்கமே அதுதான். அவனுக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணுமுண்டு. சகோதரி மூன்று வயதுக் குழந்தையாயிருக்கையிலே அவன் மருமகன் நிரந்தரமாகத் தன் சுமைப்புத்தோடு புறப்பட்டான். கூடவருமபடி எங்களையும் அழைத்தான். விதியின் பயனால் எங்களுக்கு அச் சமயம் பிராணம் சற்று அசௌகரியமாகத் தோற்றிற்று. முடியாதென்று மறுத்தோம். "ஒன்றும் குழந்தையையாவது அழைத்துக்கொண்டுபோகிறேன். அதற்கு நீங்கள் ஆக்ஷேபம் செய்யும்பொருட்டு, நீங்கள் தடைசொல்லவேண்டாம்" என்று ஒருவாறு அன்பாகவும் புறுத்திக் கேட்டுக்கொண்டான். தன் முன்னத்தில் அவன் பதித்திருந்த வஞ்சகச் சூழ்ச்சியை நாங்கள் அறிந்தோமா என்ன! ஆகையால் சரி என்று சம்மதித்தோம். குழந்தையையும் கொண்டுபோய்விட்டான்.

திருப்பதியிலிருந்து என் தம்பி நாலைந்துக்குத் திரும்பி வருகிறானென்ற செய்தி இன்றைக்கு எங்களுக்கு ஒரு கடிதம் மூலமாகத் தெரிவித்தது. அந்தக் கடிதத்தில் அவன், பலர் வற்புறுத்தியதால் தன் மகனுக்கும் நமது குழந்தை சாவித்திரிக்கும் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் சன்னிதி முன்பாக நல்ல சுபமுகூர்த்தத்தில் கலியாணஞ் செய்வித்துவிட்டதாகத் தெரிவித்து, "என்னவோ நடக்க வேண்டியது நடந்துவிட்டது. இனி யாரை கொன்று என்ன பயன்! அல்லாமலும் நிறையேறிய காரியம் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல்தானேயிற்று. நெருங்கிய உற்றார்களுக்குள்ளேயே பின்னலிடப்பட்டதுபோல் விவாக சம்பந்தங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் பாக்யம் எல்லோருக்கும் கிடைக்காது. இந்தச் சுபகாரியம் தெய்வ சங்கற்பத்தினால் நிகழ்ந்ததே தவிர, எவ்வித மனித எத்தனத்தினாலும் நிகழ்ந்ததல்ல. இதற்கு நான்தான் உத்தரவாதியென்றும் நான் செய்யத் தகாத காரிய மொன்றைச் செய்துவிட்டேனென்றும் உங்களுக்குத் தோற்றினாலும், அதற்காக என்னை மன்னிக்கும்படி எவ்வளவு பணிவாகக் கேட்கவேண்டுமோ அவ்வளவு பணிவாகக்கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றபடி என்னென்னவோ சமாதானங்கள் சொல்லி நாலு முழ நீளம் எழுதியிருந்தான். அதைப் பார்த்ததும் எனக்கும் சாவித்திரியின் தகப்பனாருக்கும் மனம் எப்படி இருந்திருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். அவரோ, ஒருநாளும் என்னைப் பார்த்து 'நீ' என்று ஒரு வார்த்தை சொல்லாதவர், அன்றைக்கு அவருக்குப் பொங்கின ஆத்திரத்தினால், "உன்னாலேதானடி இவ்வளவுவிபரீதங்களும் வந்தன" என்று வாய் வந்தபடி கடிந்து விட்டனர். இரண்டொருநாளாக இருவருக்கும் சரியான வாணுறக்கம் இடையாது.

திருப்பதி யாத்திரைபோன சிருட்டுப்பாதகர்கள் திரும்பிவருகிறசமயத்தில் அவரே ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனார். அவர்கள் வந்திறங்கியவுடன் அங்கேயே மீண்டும் தன் ஆத்திரத்தை யெல்லாம் கொட்டி ஒரு பேரமளி

செய்துவிட்டுக் குழந்தையை மாத்திரம் வீட்டுக் கழைத்துக்கொண்டு வந்து விட்டார். குழந்தையைப் பார்த்தேன் நான். பாம்பு சுற்றிக்கொண்டிருப்பது போல் அவள் கழுத்தில் மாங்கல்யம் கோத்த மஞ்சள் கயிறு கிடப்பதைக் கண்டேன். கோவென்றழுதேன். குழந்தையும் கூடக் கதறினாள். ஒரு வருஷங் கழித்துக் கொண்டாட வேண்டியிருந்த இழவை அன்றைக்கே கொண்டாடித் தீர்த்தோம். ஐயோ! அந்த அவலக்ஷணத்திற்கு அநுசரணையாக, பிதற்றம் பிடித்தவர்போலிருந்த அவளுடைய தகப்பனார் "காலிக் கயிறுவது! தரித்திரக் கயிறுவது! இதோ அதை அறுத்தெறிந்துவிடுகிறேன் பார்" என்று தொல்லிக் கத்தி யொன்றைக் கையிலெடுத்து வந்தார். "வேண்டாம், வேண்டாம், என்ன இருந்தாலும் தேவ சன்னிதானத்தில் கட்டிய மாங்கல்ய மல்லவா!" என்று கூவிக்கொண்டே குழந்தையை மார்போடணைத்துக்கொண்டேன். அவர் என் இரண்டு கன்னங்களிலும் இரண்டு மூன்று அறை அறைந்து "ஆகியும் இதற்கு உடன்பாடையாயிருந்து இப்போது மாய அழுகை அழுகிறாய்" என்று தன் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக் குழந்தையை என்னிடமிருந்து பற்றி யிழுத்தார். நான் என்ன செய்வேன்! கத்தியால் அறுத்தெறிவதை விட, கழற்றி யெறிவதே நல்லது என்றெண்ணி அந்தப் பாழும் தாலிக் கயிற்றைத் தலைவழியாகக் குழந்தையின் கழுத்திலிருந்து கழற்றித் தோட்டத்திற் கோடினேன். கூரைமேல் அதை எறிந்துவிட்டேன்.

பொழுது போகப்போக அவருக்குப் புத்தி தெளிந்தது. நடந்துபோன விஷயங்களைப்பற்றிச் சாவதானமாகச் சிந்தித்ததனால், "நடந்தது நடந்தாயிற்று. இனி யாரை கொன்று என்ன பயன்!" என்று என் தம்பி எழுதின வேதாந்தமே அவர் மூளையிலும் தட்டிற்று. இனி என்ன செய்வது! தாலியை அறுத்து நெருப்பில் போட்டுப் பொசுக்கிவிட்டாலும் கலியாணம் கலியாணமாகாமற் போகுமா! அல்லது இனி எப்போழுதேனும் இந்தப் பெண்ணை மறு கலியாணஞ் செய்துகொள்ளுகிறேனுக் துணிந்து வருவார்களா! அப்படி வந்தாலும் அப்படிச் செய்வதுதான் ஒழுங்காகுமா! ஆதையால், இனித் தாலிகட்டிய பையனை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவர முயற்சிப்பதுதான் நமது குழந்தையின் பாக்யத்தைத் தேடுவதாகும் என்று பேசித் தீர்மானித்து, தாலிக்கயிறெங்கே என்று விசாரித்தார். அது அவர் கோபாவேசத்திற்கு அஞ்சி ஓடி யொளித்திருந்த இடத்தைச் சொன்னேன். உடனே ஒரு கோலினால் அதைக் கோதி யெடுத்து மீண்டுங் குழந்தையின் கழுத்தில் விட்டோம். உண்மையில் அவள் தகப்பனார் பித்தாபித்தாயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நடக்கிறவர். ஆனால் சற்று மூன்கோபி. அந்த மூன் கோபங்கூட என்னை நோக்கிப் பிரசன்னமாகும்படி அதற்கு முன்பு ஒரு சந்தர்ப்பமும் நேரிடவில்லை.

இவ்வளவுக்கும் காரணமிருந்த என் தம்பி, ரெயில்வே ஸ்டேஷனிலேயே தன் மைத்துனரிடமிருந்து எவ்வளவு பூசிவாதங்களோடு பெற்றிருந்தபோதிலும், காலக்கிரமங் கழிந்ததும் தன் மனோநிலையை யழைத்துக் கொண்டு வலிய இங்கே வந்தான். அப்போதுதான் இவர் அவனுக்கு மீண்டும் திருப்பாட்டுக்கள் குட்டாவிடினும் சரியாக அவனுடைய முகம் கொடுத்துப் பேசவில்லை. அன்றுமுதல் இன்றுவரையில் அவர் அவனோடு நேரடியற்றுக் கலகலவெனப் பேசியிருக்கவேயில்லை."

பின்பு தன் மருமகனுக்குச் செய்யவேண்டிய நிபாவரி உபாதிகளும் சக்கராந்தி உபசாரம் முதலிய கட்டுகளோயெல்லாம் செய்து தொலைத்தார். அவன் கல்வியில் நல்ல அபிவிருத்தி யடைவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தார். ஆனால் திருப்பதியிலிருந்து வந்த அதிக வருமானம் திடீரென எட்டுநாள் விருந்தாளியினால் அந்தக் கடன்காரன் கைவிட்டுப் போய்விட்டான்."

என்று கூறி முடித்து மீண்டும் எக்கித் தேம்பலாயினள் சாவித்திரியின் அம்மாள்.

இன்னும் ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் அந்த அம்மாளோடு பேச விரும்பினேன். அஃதாவது, விதவையாயிருந்தபோதிலும் சாவித்திரியின் நெற்றியில் எப்பொழுதும் அழகாகக் குங்குமப் போட்டு இலங்கிக் கொண்டிருப்பதைப்பற்றியே.

(தொடரும்.)

ஓர் அப்நன்.

வீட்டுக் கணக்கு.

ஈஸ்வர சாபமோ, என்னவோ, ஜையற்காரனுக்கு, பல ஓட்டுத் தையற்கார சட்டையும் சமையற்காரனுக்கு ஆறி உலர்ந்த போனமுந்தான் கிடைக்கின்றன. இதுமாத்திர மல்ல, எல்லாத் தொழிலாளிகளும் பிறருக்கு வேலை செய்திருக்களேயல்லது தங்களுக்கு அத்தொழிலை உபயோகப்படுத்தவதில்லை.

கடைக்கணக்கனே எடுத்துக்கொள்ளுவோம். அவன் முதலாளியின் கணக்கு களோ விடாமலும் ஒழுங்காயும் வைத்துக்கொள்ளுகிறானே யொழிய தன்வீட்டுக்கணக்கு எழுதுவதில்லை. வியாபாரிக்கு எப்படிக் கணக்கு முக்கியமோ அப்படியே கணக்கனுக்கும் தன் சொந்த வரவு செலவுகளைத் தெரிந்து கொள்ளுதல் நல்லது. ஒருவனுடைய வரவு ரூபாயை மட்டாயிருந்தாலும் செலவுகளை எழுதிவைப்பது என்ற பழக்கத்துக்கு வந்தால் அனாவசியச்

செலவுக்கு மனம் சம்மதிக்க மாட்டான். இதுவே கொஞ்சம் கொஞ்சமாய்ப் பணம் சேர்ப்பதற் கொரு வழியாகும். ஒன்றொன்றாய் தூறே ருமிக்க தூறே, என்பது பழமொழி. உலக நடவடிக்கை எப்படி என்றால் கணக்கு வைக்காத வர்த்தகனைப் பரிஹாஸம் செய்வார்கள். ஆனால் அடிக்கடி வீட்டுக் கணக்கெழுதும் ஒரு மனிதனைக் கண்டாலும் ஏளனமாக நினைப்பார்கள். இஃதிப்படியிருந்தாலும் கணக்கு மாத்திரம் ஒருவன் விடாமல் எழுதிவந்தால் கடனுளியாகவும் ஆகவேண்டாம், சம்பாதிக்க முடியாமற்போன காலத்திலும், மனம் தட்டாமலிருக்கும்.

தினம், பத்து நிமிஷந்தான் பிடிக்கும். இரண்டே கணக்குப் புத்தகங்கள்தான் வைக்கவேண்டும். அவையாவன: ஒன்று ரொக்கக்குறிப்பு, இரண்டு லாபநஷ்டக் குறிப்பு. வரவை யெல்லாம் ரொக்கக் குறிப்பில் வரவு பத்தியிலும் லாபநஷ்டக் குறிப்பில் லாபப்பத்தியிலும் எழுதவேண்டும். செலவையெல்லாம் ரொக்கக் குறிப்பில் செலவு பத்தியிலும் லாபநஷ்டக் குறிப்பில் நஷ்டப் பத்தியிலும் எழுதவேண்டும்.

ஒவ்வொரு வகைச் செலவுக்கும் தனித்தனிச் சிட்டைகள் வைத்துக் கொள்ளுதல் நலந்தான். அதாவது "ரயில்சார்ஜ் சிட்டை," என்ற தனிச் சிட்டையில் பிரயாணத்துக்கு அடிக்கடி செலவான தொகையைப் பதிவு செய்ய வேண்டும். அது போலவே "காபி கிளப் சிட்டை" "தர்மச்செலவு சிட்டை" முதலியன.

வரும்படியிலும் ஒருவனுக்குப் பலவகை யிருக்குமானால், அதாவது சாயங்காலவேலை, கமிஷன், பாட்டுக்கற்பித்தல், முதலியன ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச்சிட்டை வைத்துக்கொள்ளலாம்.

தனிச்சிட்டைகளின் மொத்தத்தை லாபநஷ்டக்குறிப்புக்குக் கொண்டு போக வேண்டும்.

சாமான்களைக் கடனுக்கு வாங்கும் பக்கத்தில், லாபநஷ்டக் குறிப்பில் நஷ்டப்பத்தியில் எழுதிவிட்டு "கடன் கொடுத்தவர்கள்" என்ற பேரேட்டுப் புஸ்தகத்தில் பதியவேண்டும். அக்கடன்களைத் தீர்க்கிற காலத்தில் ரொக்கக்குறிப்பில் செலவுப்பத்தியிலும் பேரேட்டுப் புஸ்தகத்தில் பற்றுப் பத்தியிலும் எழுதவேண்டும்.

ஒரு பாக்கெட் ரொக்கக்குறிப்பு எப்பொழுதும் கூடவே இருத்தல் நலம். வரவு செலவு செய்த காலத்தில், உடனே எழுதிவிடலாம். இல்லாவிட்டால் மறந்துபோகக்கூடும்.

மேற்கூறியபடி ஒருவன் தன் வீட்டுக் கணக்குகளைச் சிரமமின்றியே வைத்துக்கொள்ளலாம். ஆனால் பிரதினமும் கணக்குப் பதியவேண்டும். அப்படி எழுதிவருவதால் வரவு செலவுகளில் ஏமாறவில்லை என்ற ஒரு

இருப்பினும் கணக்கு ஒழுங்காய் வைத்திருக்கிறோம் என்ற சந்தோஷமும் உண்டாகின்றன. கணக்கு வைக்கும் விதத்தைக்குறித்து, பிறருக்கு எடுத்துச் சொல்லியும் தன்மட்டில் உபயோகப்படுத்தாமலிருப்பானேன்?

ஒரு திருஷ்டாந்தம்: என் சிநேகிதர் ஒருவர் அடிக்கடி பணம் சரளமாய்ப் புழங்கும் இடத்தில் போக்கு வரத்தாய் இருந்தார். அங்கு இவரல்லாமல் மற்றவர்களும் போய்வருவதுண்டு. ஒருவன் அந்தயாரோ பணத்தைக் களவாண்டி போய்விட்டார்கள். எனது நண்பரிடத்தில் அதிகப் பணப் பழக்கம் இருந்தபடியால் இவர் எடுத்திருப்பாரென்று எல்லோரும் சந்தேகித்தார்கள். ஆனால் இவர் ஒவ்வொரு நாளும் எழுதிவந்த சோக்கக் குறிப்பு வாபகஷ்டக்குறிப்பு இவைகளைக் காண்பித்து, அவர்கள் சந்தேகத்தை அறவே தீர்த்தார். ஆகவே வீட்டுக் கணக்கு வைப்பது எவ்வளவு பிரயோஜனமென்று பாருங்கள்.

ஏ. பாலசுப்பிரமணிய ஐயர்,
பிரின்சிபல், வர்த்தக வித்தியாசாலை, தூத்துக்குடி.

ஐரோப்பாக்கண்ட சரித்திரம்.

339-ம் பக்கத் தொடர்ச்சி.

உரோமாபுரி முதலில் 'எட்ரூரியம்' என்ற பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பிறகு 'டைபர்' நதிக்கு அப்பால் வசித்த 'எட்ரஸ்கன்ஸ்' என்றவர்களின் தேசத்தைப் பிடித்துக்கொண்டது. ஆனால் 390 கி. மு. இல் 'காலர்கள்' படையெடுத்து உரோமாபுரியையே முற்றுகையிட்டனர். ஆனால் அவர்கள் சுற்றுப் பிரதேசங்களைக் கொள்ளையடித்துத் திரும்பி விட்டார்கள். மேன்மேலும் உரோமாபுரியின் ஆதிபத்யம் வளர்ந்தது. தென்னித்தாலியில் வசித்த கிரேக்கர்களோடும் அவர்களுடைய தினைவருனை மாதிரி தோன் அரசனுன 'பிர்ரஸ்' என்பவனோடும் ஒன்றும் முடியவில்லை. உரோமர்கள் பல காலங்களோ ஜயித்தது மல்லாமல் அக்காலங்களோ இழக்காமல் சரிவர ஆண்டு வந்தார்கள்.

உரோமர்கள் கட்டுப்பாட்டுக் கமைந்து யுத்தம் புரிவார்கள். படைக்கலங்களோடு மண்வெட்டியையும் எடுத்துச்சென்று சண்டைக்கு முன்பும் ஜயத்திற்குப் பின்பும் சைனியத்தைச் சுற்றிப் பாதுகாப்புக்காக வேண்டிய தளக்கள் போட்டுக்கொள்வார்கள். ஜயித்த நாடுகளில் பலமான பாட்டைகள் ஏற்படுத்திக் கொள்வார்கள். அப்பாட்டைகள் வழியாகச் சைனியங்களோச் செலுத்திக் கலகங்களோ தீர்த்துவார்கள். முக்கியமான ஸ்தலங்களில் ஒரு சிறு சைனியத்தைக் குடியேற்றுவார்கள்.

மேலும் ஜனங்களைப் பிரித்து வைத்து ஆளுவதில் கைதேர்ந்தவர்கள். தயாள குணத்துடனேயே ஆண்டு வந்ததால் அவர்கள் ஆதிபத்யத்திற் குட்பட்டவர்கள் வெகுவாகத் திருப்தியுடனே வாழ்ந்தார்கள். உரோமாபுரி இத்தாலியா முழுவதும் ஜயிக்க அதனில் வட ஆபிரிக்காவில் இருந்த கார்தேஜ் என்ற நகரத்துடன் பலமான யுத்தஞ்செய்ய நேர்ந்தது. கார்தேஜிலுள்ள ஜனங்கள் இஸ்ரவேட்டர்களைப்போல் பல வெற்றிகளோத் தொழுவார்கள். அந்நகரத்தில் பல சுதந்திரக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் சைனியத்தில் சம்பளக்காரர்களே சண்டைக்கு நியமிக்கப்பட்டார்கள். 264 கி.மு. முதல் 201. கி. மு. வரை இரு நாட்டார்களும் இக்காலங்களைத் தவிர்த்தன. முதல் யுத்தத்தில் உரோமர்கள் கார்தேஜுக்குச் சொந்தமான சிசிலித் தீவைப் பிடிக்க முயன்று கார்தேஜின் வலிமையான கப்பற்படையைத் தோற்கடிக்கப் புதிதாகத் தங்களும் கப்பற்படை ஒன்று ஏற்படுத்தி முடிவில் சிசிலியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இவ்யுத்தத்தில் உரோமர்கள் ஆபிரிக்காவைப் படையெடுத்தார்கள். முதலில் ஜயமடைந்தாலும், பிறகு சைனிய முழுவதையும் இழந்து விட்டார்களாயினும் அக்காலத்தில் கார்தேஜ் தளகர்த்தனுன ஹாமில்கார் பார்க்கர் என்பவன் வெகு சாமர்த்தியமாய்ப் போர் புரிந்தும் உரோமர்களிடம் பலிக்கவில்லை. 242. கி. மு. இல் சிசிலி உரோமாபுரி வசமாய்விட்டது. உரோமாபுரி மேன்மேலும் ஜயித்துக்கொண்டே சென்றது. கார்தேஜும் சிசிலியை இழக்கவும், அதைநினைப்படாமல், ஹாமில்கார் பார்க்கரையும் அவனது மகன் ஹானிபாலையும் அனுப்பி ஸ்பெயின் தேசத்தை வசப்படுத்திக்கொண்டார்கள். அப்பொழுது உரோமாபுரி ஆதிக்கத்தின் கீழிருந்த "சாகுண்டம்" என்ற பட்டணத்தை ஹானிபால் எதிர்த்தான். இது காரணமாக உரோமுக்கும் கார்தேஜுக்கும் இரண்டாம் யுத்தம் தொடர்ந்தது. இவ் யுத்தம் ஸ்பெயினில் நடக்கும் என்று நினைத்து உரோமர்கள் அத்தேசத்திற்குச் சைனியம் அனுப்ப முயன்றார்கள். ஆனால் ஹானிபாலோ இவ்வுலகில் பிறந்துள்ள தளகர்த்தர்களுள் தீவிர புத்தியும் செயலும் ஒருமிக்க வாய்ந்தவன். எதிரியை வலியத் தாக்குவதே தற்காப்பு என்ற கருத்தையுடன்கொண்டவன். ஆகவே உரோமர்கள் ஸ்பெயினுக்குப் படையனுப்புமுன் அத்தேசத்தினின்றும் புறப்பட்டு 'பிரனீஸ்' என்ற மலைகளையும் 'கால்' தேசத்தையும் 'ஆல்ப்ஸ்' மலைகளையும் கடந்து இத்தாலியில் வடபாகத்தில் பிரவேசித்து உரோமப் படைகளை இரண்டிடங்களில் தோற்கடித்து அபினைன்ஸ் மலைகளைக் கடந்து டிராஸ்மீன் என்ற இடத்தில் மற்றொரு உரோமன் படையைத் தோலைத்து மறு வருஷத்தில் கானே என்ற களத்தில் உரோமர்களின் மூலபடையை அழித்துத் தென்னித்தாலியில் நிக்குவிஜயம் செய்து நின்றான். உரோமர்கள் ஹானிபாலுடன் நேரில் போர் புரியாமல் ஆகார மார்க்கங்களை இடைஞ்சல் படுத்தினார்கள். கார்தேஜ் ஹானி

பாலுக்கு உபகாரஞ்செய்யவில்லை. நாராயிபாவின் சகோதரன் நாஸ்டி பால் சமையன் உதவிக்காக இரண்டு வாரத்துக்கு முன்னே ஓரோமர்க் பழங்குடி சண்டையில் கொன்று விட்டனர். 'பிரெஸ்பீரியா' என்ற உரோம சக்கர்த்தன் கார்தேஜை எதிர்த்தபோது உரோமர்களுக்குத் துப்பாக்கி ஒரு லைசென்சியத்துடன் ஆயிரிக்கா சென்றான். கார்தேஜ் உயிசெல் முனிசிபாலிட்டி தாலியினின்றும் வரும்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்வண்ணமே அங்கும் சென்றும் "சாமா" என்ற இடத்தில் 202. கி. மு. இரண்டாம் போரில் தோல்வியடைந்தது. உரோமாபுரியை மத்தியதரைக்கடலில் பிரதானமாயிருந்து ஸ்பெயின், சார்டினியா, கார்சிகா என்ற நாடுகளிலும் உரோமர்கள் உரிமை விட்டன.

ரா. சே. சுப்ரமணிய ஐயர், எம். ஏ. எல். டி.

காட்டுப்பெண் குட்டி.

10-ம் அதிகாரம்.

அன்பு.

அன்பே உயிர்நிலை, அன்பே உள்நிலை,
அன்பே உலகியல் ஆதிமன்றே!
அன்பே அருள்மூலம் அன்பே அறமூலம்;
அன்பே சிவம்என் றறிந்தோமே. 1

அன்பின் இயலே யல்லாரும் உணர்வீர்!
ஆண்டவன் மக்கட்பேற்றைஅமைத்தார்
அன்பின் உளவை முகங்காட்டும் அதின்
ஆற்றலை ஆர்எடுத் தோதவல்லார் 2

அன்பெனும் ஆர்த்த ஆழியின் போழு
தள்ளி உள்ளார அருந்தினைர்
இன்ப முணர்ந்தவர் எவரையர் தம்பொருள்
என்பயன் கொண்டு நுகர்ந்தாரே? 3

அன்பெனும் தீங்கனி ஒன்றை அருந்தியே
ஆர்ந்த மாதி அகம்குழைந்தார்
இன்பமே இன்பம்; மற் றென்பொரு ளாயினும்
இத்துணை இன்பம் அளிப்பதின்றே. 4

பரபரன் பார்முதல் யாவும் படைத்தும்
பராமரிக் கின்றதும் அன்பாலே

சராசர வஸ்துக்குள் சத்தும் இடத்திலே
தாபரிக் கின்றதும் அன்பாலே. 5

கண்ணுக் தெவ்லமும் கண்ணுக்குத் தோன்றியே
கட்டுப் படுவதும் அன்பாலே
வாழ்வளிலேலைய வாழ்க்கையும் வண்மையும்
வாய்ப்பது சொன்னமெய் யன்பாலே. 6

எல்லிலே ஊன்புகுந் தெங்கும் உலாவியே
எல்லாம் உயிர்மய மாவதுபோல்
அன்பிலே மன்னுயிர் தாம்விளங்கும் அந்த
அன்பொழிந் தால்உயி ரும்ஒழியும். 7

அன்பு பலவித மாஞலும் உயர்
ஆண்பெண்ணின் அன்புபே ரன்பாகும்
இன்பம் பலவித மாஞலும் காதல்
இல்லற இன்பமே மேலாமே. 8

உள்ளன்பில் லாதவள் வாழ்க்கையும் வாழ்க்கையோ
ஊர்ப்பன்றி குட்டிகள் போட்டதுபோல்
கள்ள மனத்தவள்-பிள்ளைபெற் றென்பயன்
காட்டு மிருகத்தின் கூட்டமேவே. 9

தேகம் இரண்டாயிருந்தாலும் உள்ளே
தேவரும் உயிர்கள்ஒன் றாய்விளங்கும்
பாகு மொழியினள் காதலினுல் வரும்
பாக்கியம் பேரின்ப வாழ்வாமே. 10

11-ம் அதிகாரம்.

விருந்து.

பூமியில் மானிடர் கூடி யிருத்தலே
புண்ணிய லோகத் திருப்பாகும்
சாமி இதற்கென்றே ஆணையும் பெண்ணையும்
சம்சார வாழ்வில் அமைவைத்தார். 1

பத்துப்பேர் வீட்டில் வருவதும் போவதும்
பத்தினி யாள்நற் குணத்தாலே
செத்தபின் மக்கள் மனிதரை வண்டரை

வாரா விருத்தல்கள் வந்தாலும் தன்
மனதிற் கலிக்கவே மாட்டாளாம்
ஆனாலும்வரு வார்கள்எந்நெண்ணியே
ஆழாக்கேனும் கூடப் போடுவாளாம். 3

பொய்யுப சாரங்கள் செய்யாளே வெறும்
போலியா சாரங்கள் காட்டாளே:
"அய்யர்க் கழுஸ்..." என்று சொல்லுமுன்னே குறிப்
பாய்ந்தவர் வேண்டும் வகைபடைப்பாள். 4

வாயுப சாரங்கள் செய்யாளே வெறும்
வாயிலுல் பாயசம் வார்க்காளே:
தாயுட்டும் தன்மைபோல் சாரசன் மியப்படி
தான்உண் உணவையும் தந்திடுவாள். 5

சொல்லேச் சுருக்கமெய் பண்புடன் செய்கையால்
தூண்டும் விருந்தே சுவிருந்தாம்:
புல்லேச் சமைத்தும் பொருந்தியுள் ளன்புடன்
போகும் விருந்தே பெருவிருந்தாம். 6

"உண்ணும் உண்ணுக்" என்னும் உரைப்பதிலும் ஒரு
உபசாரசெய் முறை பார்த்தனிலோ,
கண்ணீர் கொடுப்பதும் காய்கனி செய்கையில்
தான்போய்ப் பழைதலைத்தும் பார்ப்பதுமே. 7

பாத்திரம் அறிந்திடல் பார்க்கும் பெண்ணைக்
கோத்திரம் பார்த்துக் கொடுப்பதுபோல்
யாத்திரை செய்பவர் எவே, ரந்தியாகிகள்
யாராயி னும்அவர்க் கிட்டென்கவே. 8

12-ம் பிரகாரம்.

இன்சொல்.

இன்சொல் தமிழுக் கியல்பெனினும், நயம்
வற்ற கருத்தனை யாள்தமையும்;
புன்சொல் தவிர்சல் பொருள்கயம் பேணல்
பொருந்திடும் அன்பக மாதருக்கே. 1

அந்தியன் உன்னே மதித்துப் புகழ்ந்தன்பால்
அன்பாகப் பேச விரும்புவையேல்

முன்னீ அவ்விடம் அவ்விதம் பேசுதல்
முக்கிய மான உபாயம்அம்மா. 2

வெடுக்கென் றுரைத்தலும் ஆகாதே பெண்கள்
வீம்புகள் பேசலும் ஆகாதே:
துடுக்காகப் பேசலும் ஆகாதே; வெளித்
தூற்றல் ஒருகாலும் ஆகாதே. 3

இனிய குரலுடன் பக்தி விநயமாய்
ஏற்கும்படி செவிக்கின் னமுதாய்ப்
பனிமலர் போலும் முகத்தொடு பேசுதல்
பத்தினிப் பெண்ணுக் கழகாமே. 4

காசு பணந்தால் எலாத போதிலும்
கையால் இயலாத காலத்திலும்
மாசிலா மென்மொழி பேசுதற் கென்றடை
மற்றது செய்யின் மகிழ்விக்குமே. 5

இன்சொற் பெருமை என்னென்று சொல்வேன்வல்
இடும்பரையும் சற்றே சீர்ப்படுத்தும்
வன்கொலை செய்ய வருபவன் தன்னையும்
மாற்றி மனதைத் திருப்புமன்றே. 6

இக்கும்மியை முதன் முதல் அணிந்து வெளிவந்த "அமிர்த வசனி" சஞ்சிகைகளில் சில கிட்டாமையால் இடையில் சில அதிகாரங்கள் விடப் பட்டன.

மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை,
அன்பகம்.

இரட்டைப் பிராஹ்மணன்.

அந்தோ! நெற்றி வியர்வை நிலத்திற் ருக்க, சென்ற ஐந்து மணி நேரமாக அக் கிழவன் அம்மரத்தை விடாது வெட்டிக்கொண்டே இருகிறான்! கபால மோக்ஷம் எற்பட்டுவிடுமோ என்று எண்ணத் தகும் நிலைமையில் கதிரவன் தனது ஆயிரங் கொடிய கிரணங்களையும் பரப்பி உலகை யெரிக்கும் இவ்வேளையில் அடிமண் பாதத்தோடு ஒட்டிக்கொள்ளும் இப் பொல்லாத வெயிலில் இதோ காலேத்து கூலிக்காரர்கள் (கடவுள் கிருபை யால் மனிதப் பிறப்பில் பிறந்தும்) கேவலம் பகுத்தறிவற்ற மாடு, குதிரை, கழுதை யாதிய மிருகங்களின் தொழிலை மேற்கொண்டு இப்பளுவான மூட்டை வண்டியைத் தள்ளிக்கொண்டு செல்கின்றனர்! அதுதான் போகட்

டும் என்றால், ஐயோ பெரும் பாவம்!, இரு கண்களும் இரு கால்களும் கிரி
தும் உபயோகமற்ற நிலையில் இருக்கும் இந்தக் குடலும் தூக்க கொண்டி
யும் ஒரு உயிரினையை மற்றொருவராகக் கொண்டு ஒவ்வொரு கடைக்கும்
சென்று 'ஐயா பிச்சை! அம்மா பிச்சை! சாமி பிச்சை!' என்று எத்கின்ற
னர். மணி பதினொன்று ஆயிற்றும்: நியூஸ்பேப்பர் வந்து விடுவார் சென்ற பயத்
துடன் வக்கீல் குளிராமையர் தலைப்பாகையைக்கூட கன்னுக்கு கட்டிக்
கொள்ளாமல், பத்திரக் கட்டையும் கையில் எடுத்துக்கொண்டு, கக்கிக்களத்
களுடன் போட்டி போட்டுத் தெருவில் உள்ளோர் நலக்க நடுகின்றார்!
இதோ, உயர்ந்த குணங்களுக்குக் காயக மாகிய பெரிய பெண் பிறவியிற்
பிறந்த இம்மங்கையர்க்கரசும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய
நாற்குண நிதிகளையும் வழிதே பேணுகித்தற்சமயம் பிலமாதர்க் கென்ற
தெமை மலிந்த திருகாமத்துடன் வருவார் போவாரை எதிர்பார்த்துக்
கொண்டே நின்ற நிலையில் தவஞ்செய்கின்றனரே! இவர்கள் ஒவ்வொருவர்
அண்டையிலும் சென்று 'ஐய! (அல்லது) அம்ம! இக்காந்தம் உக்கருக்
கேன்?' என்று நாம் கேட்போமாகில், அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து
பேசினவர்களோப்போல் எக காலத்தில் எக் நிலையில் 'வயிற்றின் பொருட்டுத்
தான்' என்று சொல்வார்கள்: இதற்குச் சம்தேகமில்லை.

ஆஹா! வயிற்றின் கொடுமை இத்தகைத்தா! நேற்று ஒளவை முதாட்டி
அன்று நீ 'கல்வழி' என்ற தலையலங்காரு ருட்டி அதன் மீழ் எழுதிய நாற்ப
தது கவிகளுள் அறிறைந்த "ஒருநா ளுணவை ஒழி யென்றால் ஒழியாய்"
என்ற பாட்டின் மெய்ப் பெருளின் அருமை பெருமையை இன்றான்
தெரிந்தேன்! அச்சோ! சோறிடும் அருத்தி வழிப்பட்ட இம்மாதுடைப் பிற
வியும் ஒரு பிறவியா! சீச்சி! மோசம், மோசம்! காரி யாரிக்கும் இம்மங்கள்
புனையும் வேஷங்கள் எத்தனை! அவர்கள் பேசும் பொய்கள் எத்தனை!
செய்யும் சூதுவாதுகள் எத்தனை! பகீம் கஷ்டங்கள் எத்தனை! அம்ம, அம்ம!
பொறுக்க முடியாது! சகிக்கமுடியாது! வாட்டில் எழுதமுடியாது! எண்ணால்
தொலை[illegible]யற்றை யெல்லாம் நினைக்கும்போது நிறைவறம் பூண்ட
சரு[illegible] ஆகியவற்றைப் புசித்தற் நிரிவதே நன்று: அதனையே பெரி
யே[illegible]லகம் தர்மமார்க்கத்தில் சென்ற முன்காலத்தில் மேற்கொண்டு
வ[illegible]க்கத் தெரியாருன்றது' என்று ஒரு வேளை நினைப்பேன்:
மறியான தெழுந்து 'அப்பா படிகேன்! நில்லதக்கதீர்ந்து, நிறைவறம்
பும், காட்டை விட்டுக் காட்டிற்கே சென்றும், பெரியோர்களாகிய நீ
ரிந்தும் இவ்வயிற்றின் பாடு வன்னையிட்ட நினைவாடியே! பின்
னும் சோறுக்குப் பதில் சருகு, நீரலம், காற்றையுண்டுதை தேவர்கள்
நீனையே!' என்று உபதேசிக்கத் தொடங்கினும், அம்மாற்மேல் புந்தி செல்

நீதியில் மீனே கோடானுகோடி எண்ணிக்கருக்கு இடங்கொடுத்து இடர்ப்
படுவதே நாளதுவரை நான் கண்ட பிறவிப் பயன் ஆயிற்று. ஆனால், ஒரு
விசேஷம், கவலைகொண்டவர்களுக்கு உணவு வேண்டியிரா தென்று உலகிற்
பல சாமானியர் கூறுவதுண்டு. அப் பெரு ஊன வாக்கு என் சம்பந்தப்பட்ட
மட்டிலும் முற்றிலும் பொய்யே. எனினின் எவ்வளவுக் கெவ்வளவு நான்
இந்த வயிற்றின் கொடுமைகளைப்பற்றி நினைக்கத் தொடங்கி அவ்வயிற்றை
வெறுத்தேனோ அவ்வளவுக் கவ்வளவு என் ஆகாரமும் அதிகப்பட்டது.
வேளை ஒன்றுக்கு முக்கரைப் படிக்கு முக்காற் படிக்குக் குறைந்தால் நம்
கைவேத்யம் சரியாக நடக்கமாட்டாது.

ஒருநாள் மாலை சுமார் மூன்று மணி இருக்கும். வீட்டில் அரிசி
இல்லை: கடன் கொடுப்பார் யாரும் இல்லை: வயிற்றின் தொல்லைக்கோ
எல்லை யில்லை; கடைகளிலும் அரிசி கிடையாது. என்ன செய்வேன்!
தெய்வமே கதி யென்று முழங்கையைத் தலைக்கு ஆதாரமாக வைத்துக்
கொண்டு படித்தேன். 'அப்பா, மகனே!' என்று ஸ்ரீமதி நித்யாதேவி
உடனே என்பாற் போந்து கட்டிக்கொண்டனள். தன்னை மறந்து இரண்டு
மணி நேரம் அயர்ந்து தூங்கி விட்டேன்: அப்பொழுது யாரோ ஒருவர்
'ராஜு! ராஜு!' என்று அழைத்துக் கொண்டே தட்டி எழுப்பினர். எழுந்
திருந்து பார்த்ததும் 'செல்லண்ணா வாருங்கோ!' என்று கல்யாண கூறி
னேன். அவரும் அதற்கு 'ஆம்' என்று சொல்லி, பின் 'கச்சேரியில் அரிசி
போடுகின்றார்களாம், வா போவோம்' என்றார். உடனே நானும் ஒரு சிறு
கூடையும், ஒரு ரூபாயும் எடுத்துக்கொண்டு அவருடன் சென்றேன்!
கச்சேரி வாசலில் கூட்டம் சொல்லி முடியாது! அடியும் மிதியும் அபாரம்
வேஷ்டியை இழந்தவர் பலர்: பல்லுடை பட்டவர் சிலர்: பெட்டியை
இழந்தவர் பலர்: காதறுந்தவர் சிலர். இவர்களோ யெல்லாம் கடந்து நானும்
என் நண்பரும் அரிசி அளக்கப்படும் முகத்திற் போய்ச் சேர்ந்தோம்.
யாரோ ஒரு உத்யோகஸ்தர் எங்களிடம் போந்து 'எவ்வளவுக்கு வேண்டும்?'
என்றார். என் நண்பர் மிகவும் பட்டிக் காட்டு வாஸனை உள்ளவர்: 'நல்ல
அரிசியாக இருந்தால் இரண்டு ரூபாய்க்குக் கொடுங்கள்: நாளை சௌகர்யம்'
என்றார். உத்தியோகஸ்தருக்குக் கோபம் பிறந்து 'உமக்கு இங்கே அரிசி
யில்லை: வெளியே போம்; நல்ல அரிசி நாளை வரும்' என்று சொல்லி
எங்களை ஓட்டினர். நாங்களும் கூசாமல் பல்லைக்காட்டினோம்: செஞ்சினோம்.
சற்றுத் தயவுண்டாகி 'இந்தாருங்கள்' என்று ஆளுக்கு ஒரு ரூபா அரிசி
கொடுத்தார்: வாங்கினதும் கூட்டத்தை விட்டு வெளியே செல்வோம்
என்ற எண்ணத்துடன் புறப்பட்டோம். ஐயோ பாவம்! கைக் கெட்டினது
வாய்க்கெட்டவில்லை! கூட்டத்தில் இடிபடும்பொழுது கைக் கூடையை
விட்டுவிட்டேன்: அரிசியை முற்றிலும் கீழே தொட்டி விட்டேன். குனிந்து

அள்ள இடமில்லை! கண்பனையும் அருகிற் காணேன். என்னசெய்வேன்! சரி யிருக்கட்டும். காலைச் சோற்றுக்கு எனன் வீட்டில் இன்று அரிசி யில்லையோ அவனையே பிராஹ்மணன் என்று சிவதி யாஸ்நுவல்லியர் கூறி யிருக்கின்றார். நம் வீட்டிலோ காலைச் சோற்றுக்கும் அரிசி யில்லை. இன்றையச் சோற்றுக்கும் அரிசியில்லை. ஆகவே, இந்த இரண்டு இலக்ஷணங் களால் நாம் ஒட்டைப் பிராஹ்மணன் ஆனோம்!' என்று ஒருவாறு மன தைத் தேற்றிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

காடிய பொருள் கைக் கெட்டும் வரை ஸௌகர்யம் கூறலாம், கிட்டாது போனால் என்னைப்போல் இவ்விதம் மனச் சாந்தியின் பொருட்டு வீண் கௌரவம் பேசுவதுமே தொழிலெனக் கொண்டோர் இக்கண்ண கன்ற காசினியிற் பலர் இருப்பர். எங்கள் தன்மையும் மாறத் தெய்வ சபை யாரைச் சிக்கிரத்தம் வேண்டி இறைஞ்சி நிற்கின்றோம். எங்கள் கூட்டத் தாரிடம் என்னளவும் அபிப்ராய பேதம் கிடையாது; கேட்பது போற் கொடுத்து விட்டால் உலகமே அழிந்து விடும் என்று நாங்கள் ஒருவரும் சொல்லவே மாட்டோம். இது உண்மை. தெய்வ சபையோரே! எங்கள் கலத்தின் பொருட்டுச் சிறிது கண்ணளி காட்டுங்கள்!

ம. ரே. விஸ்வநாத பாரதி.

சாத்தூர்.

சதுரங்கம்.

சந்தேக விளுவிற்கு விடை.

சென்ற மழையில் "ஓர் உபக்கிரம வாதி" என்ற நிருபர் கேட்டிருந்த விளுவிற்கு விடை வருமாறு:—

விடை.

ஈராசர்களும் அடுத்தடுத்த கட்டங்களில் ஒருபொழுதும் நிற்க மாட்டார்கள் என்ற விதி ஒரு நியதனைக்கும் உட்பட்டதல்ல. அரசனைக் கொண்டு மாற்றாசனுக்கு ஒருகாலும் அரசு வைக்கலாகாது.

உதாரணமாக:—

இ4 இல் வெப்பு அரசன் நின்றால் ஆ3, ஆ4, ஈ5, இ3, இ5, ஈ3 ஈ4, ஈ5 இவ்வெட்டுக் கட்டங்களுக்கும் கலப்பு அரசன் வரக்கூடாது.

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

சுலோசனு.

சூரியகுல திலகனான இராமன் பிதாவ்வாக்கிய பரிபாலனம் செய் யும் பொருட்டுத் தன் தம்பி இலக்குமணனும் இல்லக் கிழத்தியாகிய சீதை யும் பின்தொடர்ந்து தண்டகா வனம் சென்று பஞ்சவடி தீரத்தில் பன்னக் சாலை அமைத்து வசித்து வந்தான்.

இவ்வாறிருக்க, ஒரு நாள் இலங்கையை யாண்டுவந்த அசுரர் தலை வனான இராவணன் வைதேகியின் பேரழகைக் கேள்வியுற்று அவளை யடையக் ஊருகி ஓர் வஞ்சகச் சூழ்ச்சி நெஞ்சகத்தில் கொண்டு இரா மனையும் இலக்குமணனையும் வேறுகப் பிரித்து ஓர் கபட சன்னியாசி வேடம் பூண்டு பன்னகசாலையுடன் அவளை யெடுத்து அசோக வனத்தில் சிறை வைத்திருந்தான். அதை யறிந்த இராகவன் பத்தினியைப் பிரிந்த வியாகுலத்தால் வருந்தி ஏழுபது வெள்ளம் வானர வீரர்களைப் படைத் துணையாகக் கொண்டு இலங்காபுரியை வளைத்துக் கும்பகர்ணன் அதி காயன் முதலாய அரக்கர்களைக் கொன்றான். அதைக் கண்ட அரக்கர் கோமான் தன் புதல்வனுகிய மேகநாதனை அமருக்கனுப்பினன். அவன் இரு முறை சென்று போர்செய்தும் வெற்றி பெறாமல் திரும்பினன்.

தசகண்டன் மறுபடியும் மேகநாதனைச் சமருக்கேகும்படி தூண் டினன். பிதா வார்த்தையைக் கேள்வியுற்ற மேகநாதன் அவனை நோக்கி "என் தந்தையே! இனி என்னால் அமருக்குச் செல்ல முடியாது. இரு முறை சென்று ஆனமட்டும் பார்த்தேன். ஒன்றும் பயன்பட வில்லை. தேவப் பிரசாதத்தாற் கிடைக்கப் பெற்ற நாக பாசம் பிரமாஸ்திர முத லியவைகளோடு மேவினேன். அதற்கும் அவர்கள் தப்பித்துக் கொண்டார் கள். கடைசியாய் இறந்த அரக்கர்களை யெல்லாம் மெழுப்புவதற்காக நிகும் பலையில் அருமையான யாகத்தைச் செய்தேன். அது முடிவெய்வதற்கு முன் உன் பின்பிறந்தவனுகிய விபீஷ்ணன் கெடுத்து விட்டான். இப் பொழுது யான் ஜீவிழந்த புறவைக்குச் சமானமா யிருக்கிறேன். என்னை மறுபடியும் அனுப்பினால் உயிரிழப்பது நிச்சயம். இதுவரை இறந்தவர்கள் போதாதா? இன்னும் என் நானும் நீயும் மற்று முள்ளோரும் அழிவதற் குண்டான வழியைத் தேடுகின்றாய்! கேவலம் ஓர் பெண்ணால் இது வரை யுள்ள புகழைக் கெடுப்பதோடு என்றும் நீங்காத வசையையும் நிலை நிறுத்தப் பார்க்கிறாய். நான் உனக்கு நீதி சொல்லும்படியாக நடந்து கொள்ளலாமா? அசுர மூள்ள விடத்தில் வெற்றி யுண்டாகுமா? வேண் டாம். சீதையை யுடையவனிடம் அனுப்புவதே நலம். உயிர்க்குப் பயந்து சொன்னேனென்று நினையாதே. அவர்கள் சாமானிய மானவர்களாக எனக்குத் தோன்ற வில்லை. அப்பாலன் சித்தம் எப்படியோ அப்படியே நடந்துகொள்ளுகிறேன்," என்றான்.

அவ் வார்த்தையைக் கேட்ட இலக்கையாளி, கண்களில் பெருப்புப் பொறி பறக்க "அடே மடையா! என்ன வார்த்தை சொன்னாய்! எனக்கும் புத்தி சொல்லும்படியாக உனக்குச் சொன்னவர் யார்? நீ வாலைச் சொண்டி கடல் ஆழம் பார்க்கும் மூடன் ஆனாற்போல். உன்னைப்போலப் பயந்தவனல்ல. கையாய வரையை வேரோடு பறித்த என் கைத்தலமும், பனைக்கலமும் மூல பலமும் என்னிட மிருக்கும் வரை நான் ஒருவருக்கும் அஞ்சேன். சிறையை ஒருபொழுதும் விடேன். என் கண்களில் விழிபோதே. அப்பாற் செல்." என்பதாகச் சோபித்தான். அதற்கு மேகநாதன் "பிதா! ஞாயத்தைக் கூறினேன். அது தமக் கொவ்வாது போலுல் தமதிஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று கூறிப் பணிந்து ஆயுதபாணியாய் யுத்தத்திற்குப் புறப்பட்டான்.

அவன் போகும்பொழுது தன் - மனைவியாகிய சுலோசனையைக் கண்டு போகவேண்டி மென்று எண்ணாங் கொண்டவனாய் அவ்விருப் பிடத்தை நாடிச் சென்றான். அவளோ மகா குணவதி. கற்புடையவள். புருஷனுடைய மனம் போலவே நடக்கக் கூடியவள். பர்த்தாவே தெய்வ மென்று நினைக்கக் கூடியவள். பிக்ஷு அருந்தாவள். இப்பேர் பட்ட ஸ்திரியை மறப்பதற்கு இவனால் முடியவில்லை. சுலோசனாவி னிடைய அந்தப்புரம் போய்ச் சேர்ந்தான். அவன் வரவைக் கண்ட சுலோசனா யானவள் எதிரிற் சென்று பணிந்து "நாதா! நீர் போர்க் கோலம் பூண்டு வந்திருப்பதைப் பார்த்தால் மறு முறையும் யுத்தத்திற்குச் செல்வதாகத் தெரிகிறது. என் மனமானது மிகுந்த பீதாநுபவத்தை யடைகிறது. யுத்தமென்றால் வெற்றி தோல்வி என்று இரண்டுண்டு. அதிலேதாவது தோல்வி ஏற்பட்டுத் தங்களுக்கு யாதாவது விக்னங்கள் சம்பவித்தகாலால் நான் என்ன செய்வேன்! நமக்கோ இப்பொழுது ஆகாத காலம். இலங்கையிலேதான் இது வரையும் அபஜெயம் ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. இது தங்களுக்குத் தெரிந்த விஷயம். கலங்காத வீரர்களாயிருந்தாலும் நெடுட்காலத்திற்கு ஒருபோதும் ஜெயம் உண்டா காது. மேலும் மாமா புலஸ்தியனாகிய அந்த ஜானகி தேவியினுடைய கண்ணீரானது வீண் போய் விடுமா? அவள் அழுத கண்ணீர் ஒவ்வொரு துளியும் எமக்குமரும் என்றல்லவா நினைக்க வேண்டும்.

"ஆற்றார் அழுத கண்ணீர் அன்றே
கூற்றமாய் வீழ்த்து விடும்."

என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்கத் தங்களுடைய பிதா வார்த்தையைக் கேட்டு யுத்தத்திற்குப் போவது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை", என்றாள். அதன்பின் அவர்கள் இருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

மேகநாதன் :—பேஷ்! நன்றாயிருக்கிறது. பிதா வார்த்தையை உல்லங்கனம் செய்துவிட்டு உன் வார்த்தையைக் கேட்டு நான் போகாமலிருந்தேனென்றால் ஜனங்கள் என்னை ஒப்புவார்களா? பிதாவுக்கு விருத்தமுண்டாகும். அது நியாயமல்ல. "தாய்சொல் மிக்க மந்திரமில்லை" எனச் சாற்றுவாரன்றோ. இந்நியாயம் தெரிந்த நான் அதற்கு மாறாக நடப்பது உசிதமல்ல. நான் போகத்தான் செய்வேன்.

சுலோசனை:—நாதா! பிதாவுடைய வார்த்தை ஹிதமாயிருந்தால் செய்ய வேண்டியது. அநியாயமில்லாத காரியத்தைச் செய்யச் சொன்னால் எப்படிச் செய்யலாம்! மகா புத்திமானாகிய பிரகலாதன் தன் தகப்பனுடைய வார்த்தை சரியில்லாததினாலே அநிக்கிரமித்துவிடவில்லையா? உம்முடைய சிறிய தகப்பனார் தமையனுடைய நடக்கை சரியில்லாததினாலே ராமனிடம் சரணாகதி யடையவில்லையா? இல்லவா விவேகம். ஆகையினாலே போகவேண்டாம்.

மேக :—அடி பைத்தியமே! என் இவ்வளவு வருத்தப்படுகிறாய்? என்னைச் சாமானிய மானவனென்று நினைத்தாயா? என்னுடைய பலத்தை நீ அறியமாட்டாய். போர்முகத்திலே இந்த இந்திரசித்தானவன் போய் நின்றால் வெற்றிபெற்று வருவானென்று நினைத்தாயா, மாட்டானென்று நினைத்தாயா? பெண் புத்தி பேதமை என்பது சரியாயிருக்கிறதே. வருத்தப்படாதே, தைரியமாயிரு. சீக்கிரம் வந்துவிடுகிறேன்."

என்றிவ்வாறாக மனைவிக்குத் தேறுதல் சொல்லிவிட்டு மேகநாதன் ரதத்திலேறி ஆரோகணம் பண்ணினான்.

சுலோசனை, நாதன் போனால் எப்படியாகுமோ என்று நினைத்து அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டாள். ரதமானது மறைகிறவரையிலும் அப்படியே நின்று பார்த்துக்கொண்டிருந்து பின்பு உள்ளே சென்றாள். சேடியர்களை யழைத்து "சேடியர்காள்! என் நாதனவர் யுத்தகளத்திலே வெற்றி யடைவாரோ இல்லையோ! பிதாவானவர் கட்டாயப் படுத்தி அனுப்பியிருப்பதினாலே வெற்றிபெற்று வந்தாலும், திரும்பிவருவதில்லை யென்றிருப்பாரோ! ஒன்றும் தெரியவில்லையே. என் மனமானது படபடக்கிறது! உடல் நடுக்க மடைகிறது! என்செய்வேன்! என் கண் முன்பாக அனேக கெட்ட சம்பவங்களெல்லாம் நிகழ்கிறதே; இதைக் கண்ணிற் கும்பொழுது என் பிராண நாதருக்கு என்ன ஹானி வந்து சம்பவிக்குமோ!" என்று பரிதபித்தாள். கண்ணீர் பெருகவிட்டாள். "மகா தேவதைகளா! என் நாதனுக்கு யாதொரு இடையூறும் வராதபடி காக்கவேண்டும். எனக்கு மாங்கல்யம் தழைக்கும்படி கிருபை செய்யவேண்டும். என் நாயகன் உங்களுடைய அடைக்கலம்." என்று சொல்லிப் பிரார்த்திப்பாள். ஒருமுறை வெளியே வருவாள். ஒருமுறை உள்ளே போவாள்.

பெருமூச்செறிவாள். விரல்களை நெரிப்பாள். ஒரிடத்திலே நிற்காமல் பித்துப் பிடித்தவள்போல அங்குமிங்கும் அலைந்துகொண்டிருப்பாள். இப்படிதானே, காட்டுத்தீ கதறிய மான் பேடை போலவும், நிருபாடெறி கொள்ளியின் உள்ளெறும்புபோலவும், ஆகாச மினைவென்று அலறிக் கடல் வழுந்தும் நாவாய் போலவும், ஆற்றதனைக்கி, மனம் பதறி, குலைநடுங்கி கொண்டிருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்திலே ஓகாயத்திலிருந்து "பகைவர் கோ ஜெயிப்பேன்" என்பதற் கடையாளமாகக் கல்லை தாரணம் பூண்ட பிரம்மாண்டமான ஒரு கையானது பிடித்த மந்திரவாழுடனே கூடி றங்கிறென்று சுழன்றகொண்டே சுலோசனையின் முன்பாக வீரசலில் வந்து வீழ்ந்தது. சகிமார்க்க ளெல்லாரும் ஓடிவந்து பார்த்தார்கள். சுலோசனும் ஓடிவந்து பார்த்தாள். இந்த மந்திரவாளிலே இந்திரசித்தென்ற நெழுதி யிருப்பதைப் பார்த்தாள். இடி யிடித்தாற்போல் மனக்கலக்கங் கொண்டு அடியற்ற மரம்போலக் கீழே விழுந்தாள். மூட்டினாள். "ஐயா! என்றன் அருமைக் காதலா! என் மனமானது பதறுகிறதே! நீர் இல்லாத இவ்வுலகத்திலே நானிருந்தென்ன சுகத்தை யடைப்போகிறேன்! என்னைப் பிரிந்து ஒரு நிமிஷமாவது இராதவர் தனிமையாய் யுத்தக்களத்திற்குச் சென்று என்னமாய் மாளத் துணிந்தீர்! யாதொரு கசி பிசியாதவளாகிய எனக்கொரு ஆறுதல் வார்த்தைகூடச் சொல்லாமல் உயிர் துறந்தீரே! என்ன செய்வேன்! பிதாவினுடைய நடத்தையைப்பற்றி யாவரும் கேவலமாகப் பேசுவார்கள், அதை நாம் காதாரக் கேட்கக்கூடாது, அப்படிக் கேட்பதைவிட உயிர் விடுவதே மேலென்று கினைத்து உயிர்விட்டீரோ? அல்லாமல் தாம் யுத்தத்திற்கு போகையில் நடந்த என்னுடைய ஞானக்கண் தங்களுக்குப் பொருந்தாமல் இவளோடு கலந்து வாழ்வதைப் பார்க்கிலும் தேவலோகத்திலேபோய் அப்ஸர ஸ்திரீகளோக் கூடி வாழ்வது நல்லதென்று நினைத்து விண்ணுடு சென்றீரோ! இவ்வு நிலையான புஷ்பங்களோப் பரப்பி அதன்மேல் சயனிக்கக்கூடியவர் யுத்தக்களத்திலே போய்ப் படுதரையில் இடக்க என்னமாய் இசைந்தீர்! என் கெடுகாலமே நாயகனே இழக்கும் படி நேர்ந்தது. இந்தச் சிறுவயதில் நாயகனேடு கூடச் சுகானுபோகங்களை அடைவதற்குப் பாக்கியமற்ற பாவியாய்ப் போய்விட்டேன். யாவர்களும் "இவன் மகா பாபி, புருஷனே யிழந்த சண்டாளி" என்று நிந்தை பேசி என் முகத்தில் விழிப்பதற்குங்கூட மனம் பொருந்தாத அபாக்ய நிலைமைக் கல்லவோ உள்ளானேன். இனி இந்தப் பிராணனை வைத்துக்கொண் டிருப்பது சரியல்ல. இனிமேல் அக்னிப் பிரவேசம் பண்ணவேண்டி யதுதா னுசிதம்! அக்னிப் பிரவேசம் செய்கிறதா யிருந்தால் நாதனுடன் செய்யவேண்டும். அதற்கென்ன செய்கிறது! லக்ஷ்மணனுலே தலை வேறு, கால் வேறு, உடல் வேறுகத்தானே சின்ன பின்னப்பட்டுப்போய்க்

கிடக்கும். ஆனால் என் ஜாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்றபடி சிரசுதான் முக்கியம் வேண்டும். ஆனால், என்னுடைய நாதன் என்னிடத் திலே வைத்த அதி வாத்ஸல்யத்தினுலே "ஹா சுலோசனு! நீ பயப் படாதே" என்று ஆறுதல் சொல்லுவதுபோலக் கையைக் காட்டிச் சென் றிருக்கிறரே. இதைக் கைமூலமாகத் தெரிந்துகொள்வோம்". என்று பல வாறு நினைத்தவளாய் எழுத்தாணியும் ஒரு ஓலைச் சுருளும் அதன் முன்பு கொண்டுவந்து வைத்து "என் நாதனுடைய கரமே! நான் நாதனுடைய மனம்போல இதுபரியந்தம் நடந்திருப்பவளா யிருக்கும்பக்ஷத்திலே என் நாதனுடைய சிரமானது எந்த இடத்தி லிருக்கிறதென்று இந்த ஓலை யிலே எழுதவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இவள் கற்பினின்றும் சிறிதும் வழுவாதவ ளாதலால் அந்தக் கையானது எழுத்தாணியைப் பிடி த்து "ஏ உத்தமி! சிரமானது இலக்குமணனுல் கொய்யப்பட்டு இராம னுடைய பாதத்தி லிருக்கிறது" என்று எழுதிற்று. இதை வாசிப்போர்கள் அறு ந்து போன கரமானது எப்படி எழுதுமென்று யோசிக்கலாம். கற்புடைய ஸ்திரீகள் எதை நினைத்தால்தான் முடியாது.

"வேத னுக்குவன் மாலது மோம்புவன்
பூத நாத னழித்திடும் பூவையர்
நீதி மூவினை யுஞ்செயு மாதலால்
மாதர் கற்பை நினைந்து வணங்குவாம்."

சதுர்முகனவன் சிருஷ்டிக்கிற காரியம் ஒன்றே செய்வான். நாரா யணன் சம்ரக்ஷிப்பான். பூதாதிபனுன சங்கரன் சம்ஹாரக் கிருத்தியம் ஒன்றே செய்வான். இந்தக் கற்புடைய ஸ்திரீகளோ நினைத்ததை முடிப் பார்கள். உதாரணமாக, சாவித்திரியானவள் எமனேடு வாதாடி இறந்து போன தன் நாதனே மீட்டினுள். களாயினியோ எழுநாள் விடியாவண் ணம் செய்தாள். அநுசூயை திரிமூர்த்திகளேயும் குழவி யாக்கினுள். இப்படி அனேக கற்புடைய ஸ்திரீகள் அனேக அற்புதங்களைச் செய்திருக் கிறார்கள். அதுபோல இவளும் கற்புடைய ஸ்திரீயாகையால் அறுபட்ட கரம் எழுதிற்று. உடனே சுலோசனு இராமபிரானிடத்திலே போய்ச் சிரசைப் பெற்றுக்கொண்டு அதன்பின் அக்னிப் பிரவேசம் பண்ண வேண்டுமென்று நினைத்தாள். மாமனுகிய இராவணனிடத்திலே விடை பெற்றுக்கொண்டு போவதற்காக அந்தக் கையைப் பல்லக்கிலே வைத்துத் தாங்கிக்கொண்டு வரும்படியாகச் சேடியர்களிடத்திலே சொல்லிவிட்டுத் தான் அழுகையுங் கண்ணீருமாய்த் தலைவிரி கோலமாய்ப் புறப்பட்டுச் சென்றுள்.

அப்பொழுது இராவணன் தன் பத்தினியாகிய மண்டோதரியின் அந் தப்புரத்திலிருந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தான். மண்டோதரியான

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வளர்ச்சி.

349-ம் பக்கத் தொடர்ச்சி

ஆங்கிலோ சாக்ஸன் ஜாதியாரின் தொழில் அல்லது முயற்சிகள்.

சாக்சன் ஜாதியாரின் முக்கிய முயற்சி என்னவெனில் பயிரிடுவதும், பன்றி ஆடு மாடுகள் முதலியவற்றைப் பாதுகாப்பதுமாம். கிராமங்களில் தச்சு வேலை, கொல்லு வேலை, செருப்பு தைத்தல் இதுபோன்ற பல வேலைகள் சிறிது அறிந்த மனிதர்கள் வகித்தார்கள். இத்துடன் சக்கிலியர்கள் தோல் குப்பிகளும், கோப்பைகளும், பாதரக்ஷை குதிரைச்சேணம் முதலியவைகளும் செய்தார்கள். அவர்களின் முக்கிய தானியங்கள் ரை (Rye) ஓட், (Oates) கோதுமை, பீனிஸ், (Beans) பார்லி (Barley) என்பவைகளுமாம். மீன்கள் அதிகமாக வேண்டியிருந்தன. கிறிஸ்துவர்கள் ஆனபிறகு வெள்ளிக்கிழமைகளில் உபயோகப்படுத்த அதிகமாக விரும்பினர்கள். கிராமத்துச் செம்படவர்கள் வலைகளால், ஈல்ஸ், பைக், டிரௌட், என்னும் பல்வகை மீன்களும் பிடித்தார்கள். சில சமயங்களில் அவர்கள் கடலிலும் மீன் பிடிப்பார்கள். ஆனால் அது மிகவும் அபாயகரமான வேலை என்று அவர்கள் நினைத்தார்கள். எனெனில் சில சமயங்களில் திமிங்கிலங்கள் அவர்கள் வலையில் அகப்படுவது உண்டு. அதனால் அவர்கள் அதிகமாகத் தொந்தரவு படும்படி நேரிடும். பானத்திற்கு, தேனும், பீர் என்னும் இரண பதார்த்தமும் உபயோகிக்கப்பட்டன. கிராமங்களில் ஸ்திரீகள் தானியங்களாக்கை வந்திரங்களில் அரைத்து வீகளில் சமைப்பார்கள். பணக்காரர்கள் கோதுமை ரொட்டியும் விசேஷ நாட்களில் சாதாரண ஜனங்கள் பார்லி என்னும் தானியத்தையும் ஏழைகள் ரை, ஓட்ஸ், பீன்ஸ் என்னும் தானியங்களையும் உபயோகிப்பார்கள்.

கிராமத்துக்கு வேண்டிய கைத்தொழில்கள் போதுமான அளவு நடைபெற்று வந்தன. ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்களுக்கு வேண்டிய வற்றைத் தாங்களே செய்துகொண்டார்கள். மற்றவர்களுடன் வியாபாரம் செய்யவில்லை. உப்பு சமீபத்திலுள்ள சந்தைகளில் வாங்கப்பட்டது. அது விச்சஸ்டர் என்னும் உப்பளங்களிலிருந்து வந்தது. பயிர்த்தொழில் செய்வதற்கு வேண்டிய கருவிகள் செய்ய இரும்பு ஸ்பெயின் (Spain) தேசத்திலிருந்து வந்தது. இன்பிரசுக்கல் பிரான்ஸ் (France) தேசத்திலிருந்து வந்தது. சில சமயங்களில் ஊர் ஊராய்ச் சுற்றிவரும் வியாபாரிகள் தெருக்களில், பெரும்பாலும் அன்னிய தேசங்களில் செய்யப்படும் கைகளும், பட்டுகளும், சித்திரவேலை செய்த படங்களும், வாசனைத் திரவியங்களும், இது பேன்ற மற்ற வஸ்துக்களும் தங்கள் தோள்களில் சுமந்து கொண்டு வருவார்கள். இப்படியாகக் கிராமவாசிகள் வசித்து வந்தார்கள்.

ஆங்கிலோ சாக்ஸன் ஜாதியாரின் மதம்.

இங்கிலீஷ் ஜாதியாரின் பொதுவான சுவாமி ஓடன் என்னும் வீரக் கடவுள். இவரே அவர்களுடைய நடத்தையையும் நில விஸ்தீரணத்தையும் பார்த்து வந்தார். இவரே அவர்களுடைய அரசரின் முன்னோரின் முதல் வராக மதிக்கப்படுவார். அவர்களுடைய நாள்கள் அவர்கள் ஆதரித்து வந்த பல கடவுள்களுடைய பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தன. புதன், வியாழன், வெள்ளி, செவ்வாய் முதலிய நாட்கள், ஓடன், மழை, புயல், காற்று, இவைகளுக்குக் கடவுளாகிய நார் என்னும் சுவாமியின் பெயரிலும் சமாதானம், உண்மை, சந்தோஷம் இவைகளுக்குத் தெய்வமாகிய சுவாமியின் பெயரிலும், சாவுக்குரிய கடவுளின் பெயரிலும் தனித் தனியே அழைக்கப்பட்டு வந்தன.

அவர்களின் மதம் சுபாவத்தில் உள்ளதுபோல் தோன்றிற்று. அவர்கள் வெளித்தோன்றலான பூஜைகள் ஒன்றும் செய்யாததால் அவர்களுக்குக் குருக்கள்மார்கள் வேண்டியது அவசியமில்லாமல் போயிற்று. அவர்களுள் குருக்கள் இருந்தபோதிலும் இங்கிலீஷ் கூட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஒவ்வொரு சுதந்தரம் பெற்ற மனிதனும் தானே தனக்கு நியாயாதிபதியாயும் சட்டம் ஏற்படுத்துபவனுமாயும் இருந்தபடியால் அவனே தன் வீட்டிற்குக் குருவாகவும் இருந்தான். அவர்கள் பொதுப் பூஜை பலிகொடுப்பதாய் இருந்ததால் அவன் தன வீட்டுத் தெய்வங்களுக்குப் பலிகொடுத்து வந்தான்.

பழைய ஆங்கிலோ சாக்ஸன் ஜாதியாரின் சட்டம்.

ஒவ்வொரு குற்றத்திற்கும் ரத்தப்பணம் அல்லது அபராதப்பணம் கொடுத்தார்கள். பதிலுக்குப் பதில் செய்வது அவர்களுடைய சட்டம். குற்றம் செய்தவன் பணம் தருவதில்லை. அவனைச் சேர்ந்த கூட்டத்தார்கள் அல்லது பந்துக்கள், குற்றம் செய்யப்பட்ட அவனுடைய கூட்டத்தார்கள் அல்லது பந்துக்களுக்குப் பணம் கொடுத்தார்கள். உத்தரவுகளும், சட்டங்களும் ஒருவன்மீது மட்டும் தீர்ப்புச் செய்யப்படுவதில்லை. அவனைச் சேர்ந்த கூட்டத்தார்கள் அல்லது பந்துக்கள்மீது தீர்ப்புச்செய்யப்பட்டது.

(இன்னும் வரும்.)

வி. சுப்புசேஷய்யர், பி.ஏ, எல்.டி.

நாகரீகம்.

மாலை காலரை மணி யாயிற்று. சந்திரவன் கறுத்த மழை மேகங்களினால் உக்கிரம் குறையப்பெற்று மஞ்சள் வர்ணத்துடன் மனதிற்கு மிகு ரம்

மியமாகப் பிரகாசிக்கின்றன. சென்னைக் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்கள் தத்தம் வருப்புகளிலிருந்து புறப்பட்டுத் தங்கள் உறைவிடங்களுக்குச் சென்றனர். இவர்களில் நாம் இருவரைக் கவனிப்போமாக. சுந்தரம், சீனிவாசன் என்ற இரு பி.ஏ. வகுப்பு மாணவர்களும் அம்மாணவர்களுடன் வெளியில் வந்தனர்கள். வந்தவர்கள் சுதிரவன் தன இயற்கை உக்கிரம் குன்றி சாந்த முகத்துடன் மனதிற் குற்சாகத்தை யுண்டுபண்ணும் இயற்கை யழகைக் கண்டு வியந்து இருவரும் அங்கேயேயோ கடற்காற்று காணாச் சீர்மானித்து விரைந்து தங்கள் விடுதிக் கேகினர். சென்று தங்களது மேல் சட்டை யைக் கழற்றி வஸ்ட் என்ற உட்சட்டையுடன் அங்கவஸ்திரம் அணிந்து கடற்கரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

யாரே இயற்கையின் வல்லமையை யறிய வல்லார். ஆனால் இயற்கை கையின் பாசத்தால் கட்டுப்படாதவர் யாவர். பிறவிக் குருடனும் மலர்ப் பொழிலின் நடுவே மெல்ல மெல்ல அசைந்து வீசும் மந்தமாருதம் தன் பாற் பட்டவுடன் "நான் யாவராலும் புகழப்படுகின்ற சோலையி னடுவே இருந்தும் இதனழகைக் கண்ணாரக் கண்டு களிக்க இப்பிறப்பில் முடியாதா யினும் அவைகளில் மெல்லப் படிந்து வீசும் மந்தமாருதம் என் மனத்தைக் களிப்பிக்கின்றது" எனச் சொல்லுகின்றன். குழந்தைகளுக்குங்கூட மலர்ச் சோலை உற்சாகத்தை உண்டுபண்ணும். ஆகவினால் மானிடரில் இயற்கை யின் தன்மையினால் வசீகரிக்கப்படாதார் யார்? இயற்கையின் தன்மை அள விடற்பாலது. மனோ வாக்குக் காயங்களோச் சுத்தப்படுத்தல நியற்கை; கடவுளின் தன்மையை விளக்க வல்லது இயற்கை; இம்மைத் துன்பத்தை மாற்றுவதும் இயற்கை; மனக் குரங்கை ஒரு நிலைப்படுத்திக் கடவுள் பாற் செலுத்த உதவுவதும் இயற்கை. ஆகவினால்தான் நமது பெரியோர் கடவுள்பால் தமது மனத்தைச் செலுத்த உல்லாசமான வனங்களோ நாடினர் போலும். நம்மை இம்மை யின்பத்தை அனுபவிக்கச் செய்வதும், வீடடை விக்கச் செய்வதும் இயற்கை. இயற்கையின் தன்மையை யிரிக்கிற் பெருகும்.

நிற்க, நமது கதாநாயகர்களோப் பின்தொடர்வாம். சுந்தர சீனிவாசர்கள் டிராம் வண்டியிலேறிக் கடற்கரையை யடைந்தனர். அவர்களின் மனம் இயற்கையி னழகால் பிணிப்பட்டிருந்ததனால் அவ்விடமுள்ள கூட்டங்க ளுக்கு நடுவே இருப்பதில் வெறுப்படைந்து ஜனக்கூட்ட மில்லாத ஏகாந்த மான இடத்தை யடைந்து யமர்ந்தனர். அவ்வமயம் கடலிலிருந்து பொங்கி யெழும் பெரிய அலைகள், ஆயிரம் பணமுடி யுடைய ஆதிசேஷன் அடிக் கடி தன தாயிரம் படங்களோயும் தூக்கி நம்மால் சுமக்கப்படும் உலகம் துன்மார்க்கம் என்னும் அலைகளினால் அடிக்கடி மோதப்பட்டுத் தருமம்

வழியிலிருந்து பிறழாமல் இருக்கின்றதா என்று பார்ப்பதை யொத்தது. நமது நேய நிருவரும் இயற்கையின் தன்மையைப்பற்றி வியந்தனர்.

கப்பற்படை யதிகமா யுள்ள தேசம் கடலதிகாரம் வகித்தது என்று சொல்லும் வாக்கியத்தை நினைத்து, சீனிவாசன் சுந்தரத்தை நோக்கி "சுந்தரம்! கடலதிகாரம் வகித்த தேசங்க ளுளதால் மனிதன் இயற்கை யைக் கட்டும் தன்மையினன் எனத் தோற்றுகிறது," என்றான். சுந்தரம், "அன்று இயற்கையின் சாந்தமான நிலைமையில் மனிதன் அதிகாரம் செலுத்துவதுபோல் தோன்றும். இயற்கை உக்கிரமா யிருப்பின் அதனை எதிர்க்க வல்லார் யாவர்? கடல் கோந்தளிப்புறின் எக்கப்பற்படை அதனை எதிர்த்து நிலைத்து நிற்க முடியும்? இயற்கையால் கட்டப் பெற்றவனே மானிடன். கடலதிகாரம் வகிப்பதெல்லாம் வலியிழந்த மானிடரை அவ மதிப்பன்றி இயற்கையை யவமதிப்ப தன்று", என்றான்.

சீனிவாசன், "நன்று. ஆனால் இயற்கை வளங்கள் நிறைந்த நம் தேசத்தில் மேனாட்டு நாகரீகம் பிரகாசித்துப், பரவியிருப்பதேன்? ஆன தால் அந்த நாகரீகம் உயர்ந்தா யிருக்கும்; மேனாட்டினர் தெய்வ பக்தி யில் சிறந்தவரா யிருக்கலாம்." என்றனன்.

சுந்தரம், "என்னே உனது தர்க்கிக்கும் முறை! கடை கொடி பாவ னைகள்தான் நாகரீகத்தின் உயர்வைக் காட்டுகின்ற தென்றாலும், அவை கள் தேசத்தின் சீதோஷ்ணத்திற்குத் தக்கவாறு ஏறக்குறைய அமையும். இரு நாகரீகத்தின் தன்மையையும் யோசிக்குங்கால், அவர்களது பொருளா யிடிப்படையாய்க் கொண்டது. நம்முடையதோவெனின் வீட்டை யடிப் படையாய்க் கொண்டது," என்றான்.

சீனிவாசன், "நான் கடை கொடி பாவனைகளுக்காகச் சொல்ல வில்லை. சிலர் தற்கால நாகரீகமெனக் கருதப்படும் என்று தலை மயிரைக் கத்தரித்துவிட்டுக்கொண்டு காற்சட்டை முதலிய உடையுடன் இருப்பதை உத்தேசித்து நான் சொல்லுகிறேனென்று நினைக்கவேண்டாம். அவர்கள் நம்மைப்போல் காகம், பாம்பு, மாடு முதலியவைகளோ ஆராதிக்கவில்லை. அவர்கள் உயர்ந்த நிலைமையாகிய மானச வைராக்கியத்தைக் கொண்ட வர்களா யிருக்கின்றார்கள். அதுவுமல்லாமல் ஒரு தேசத்திற் கணிகவங்க ளாக இருக்கும் கல்வி, கைத்தொழில் முதலியவைகளோ யபிவிருத்திசெய்து தங்கள் தேய முன்னேற்றத்தைக் குறி யுழைக்கின்றனர். நாமோ, வேதாந்த நாகரீகம் படித்து நமது தேசத்தை மிகுந்த இழிந்த நிலைமையில் கொணர்ந்துவிட்டோம். கல்வியில் மேனாட்டார், கைத்தொழிலில் மேனாட் டார், யாவற்றிலும் மேனாட்டார் மேல் நாட்டாராகவே யாயினர். ஆக லின் அவர்கள் தேசத்து நாகரீகம் அவர்களோ உயர்த்துதலின் நான் அவர் தன் நாகரீகம் உயர்ந்ததென்று கூறுகின்றேன்," என்றான்.

சுந்தரம், "சகோதரம், இப்பொழுது அவர்களது நிலைமை என்ன நிலைமையி லிருக்கிறதென்று, அவர்கள் நாகரீகம் உயர்ந்த தென்று சொல் லுகின்றாய். நம் தேயம் தலையாய் நின்ற காலத்து நம்மவர்கள் கல்வியி லும், செல்வத்திலும், கைத் தொழிலிலும் சிறந்தவரா யிருந்தனர். யாவ ரும் தேய முன்னேற்றத்தையே கருதியவரா யிருந்தனர். ஆகவே முன்னேற் றத்தைக் கருதாம லிருந்ததால் சில முதலியவாளர் செல்வத்திலேயே அதிக மாகத் தங்களது மனத்தை நாட்டினோர்க்குப் போதிக்கும் முறைப்பிரகாரம் பால பாடமாகிய காகம் கடவுள், பாம்பு கடவுள் முதலியவைகளோடே போதிக்க வாரம்பித்தனர். அதன் உட்கருத்தென்னெனில் கடவுள் எல்லா உருவத்திலும் இருக்கின்ற தொன்றும், அவைகள்பால் நாம் அன்பு செலுத்த வேண்டு மென்பதுமே. இந்நிலைமையை யடைந்தவர்கள் அதற்கு மேல் நிலையை யடையவதற்கான சாஸ்திரங்கள் நமது தேயத்தில் பல வுள. நம் நாட்டினர்கள் இவ்வறிவு ஊட்டப்பெற்றவுடன் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களது பணவாசை முதலியவைகள வெல்லாம் ஒழித்துக் கடவுள்பால் அன்புசெலுத்தும் குணமுடைய ராயினர். இதற்குச் சாகுபியாக நமது தேசத்தில் எத்தனையோ பெரியோர்களும், சந்யாசிகளும் இவ்வுலகப் பொருளே வெறுத்து மோக்ஷ இன்பத்தை நாடினவர்களா யிருக்கின்றார்கள்.

இச்சமயம் மேனாட்டு நாகரீகம் உள்நுழைந்தது. கடவு நிலைமையை உணராத சிலரினால் அது தலையெடுக்க வாரம்பித்தது. நமது கைத்தொழி லும் செல்வமும் குறைந்தது. ஆகவினால் நம் நாகரீகக் குறை நமது நாட்டின் தாழ்ச்சிக்குக் காரணமல்ல வென்று தெரியும். மேனாட்டாரின் மதாசாரக் கொள்கைகள் ஆரம்பத்திலேயே பெரிய தன்மையனவா யிருத் தலால் அதை உணராது அவர்கள் மனம் பூராவாகப் பொருள்பாற் பட்டது. இவ்வைரோப்பிய யுத்தம் நிகழ்ந்ததன் காரணமே ஜெர்மானியர்களின் செல்வச் செருக்கே. ஆகையினால் அவர்கள் தேயத்துப் பெரியோர்களும் மதத்தில் கட்டுப்படவேண்டிய பல முறைகள் போதித்து வருகின்றனர். ஆதலினால் நமது நாகரீகம் அவர்களுடையதற்குத் தாழ்ந்ததன்று என்று உனக்குத் தோன்றும். ஆனால் நம்மவர்கள் கடவுளே கதி யெனக் கருதி அதிலும் தங்கள் மனதைப் பூராவாகவும் செலுத்த வகையறியாது இரு வகையும் கெட்டுத் நின்றாட தோற்றது. ஆதலால் நம் தேயத்தவர்களும் இம்மை யுயர்வாகிய நமது தேயத்தியர்வினைக் கருதி, தங்கள் வாழ்வினில் பயனுடைய மறுமை யின்பத்தையும் அடையுமாறு கடவுளைப் பிரார்த்திப் போமாக," என்றனன்.

(அடுத்த மலரில் இச்சம்பாஷணை முடிவுறும்.)

எஸ். சண்முகசுந்தர நாயனர்,

மதுரை.

ரசிகை.

ஓர் நவீன நாடகம்.

360-ம் பக்கத் தொடர்ச்சி.

சாமவல்லபர்:—சமுகத்தைக் கட்டளையைச் சிரமேற் கொண்டு கழறத் தொடங்குகின்றேன். மாட்சிமை தங்கிய மகாராஜ! கனம் தங்கிய அமைச்சர் பிரான்மீர்! அறிவிலும், வீரத்திலும், செங்கோன்மையிலும், செழுமையிலும், செல்வத்திலும், ஒழுக்கத்திலும், ஏனைய கலங்கள் பலவற் றினும் சரஸ்வதி நாடு, வீர நாடு, ஆகிய இரண்டில் எந்நாடு மேம்பட்டது என்று எடுத்துரைப்பது முற்றும் அரிதாம். நிறைகுடம் இரண்டினுள் அதிகமாக நிரம்பியுள்ளது எதுவென வினவின் உத்தர மென்ன வுரைப் பது! கண்கள் இரண்டில் எக்கண் அதிக அழகுடைத்தென் றியம்பற் றரும்! ஆதலின் நலங்கள் அனைத்தும் நிறைந்து ஒளிரும் பொற் குடங்கள் எனவும் நீலமகட்கு இரு நேத்திரங்கள் எனவும் துலங்கும் சரஸ்வதி நாடு வீர நாடு ஆகிய இரண்டினில் சிறந்த தெதுவெனச் செப்புவதைப்பற்றி யாராய்வதே மடமையாளர் மதிக்குரிய தென்னலாம். இத்தகைய இணைச் சீர் அமர்ந்து விளங்கும் நாடுகள் இரண்டிற்கும் ஏதோ தெய்வ சங்கற்பத் தால் இதுகாறும் ஏற்பட்டிருக்க கோர்த்துள்ள இரண்டே குறைகள் நீங்கப் பெற்று, இருநாடும் எக்கவையு மில்லாத பொன்னுடெனப் பொலிவெய்தி யொளிரத் தெய்வ சங்கற்பமும் தேச சந்தர்ப்பமும் தற்போது இயைந்து வந்திருக்கும் ஒரு மகத்தான மங்கள காரியார்த்தமாகச் சிறியேன் இச்சமு கத்திற்கு வரும் சீர் பெற்றுள்ளேன். மாட்சிமை தங்கிய மகாராஜ! எத் தகைய சிரிலும் இணைந்து நிற்கும் இரு நாடும் தனித்தனி ஒவ்வொரு குறையுற்றிருப்பதிலும் இணைந்து நிற்பதே அக்குறைவையும் ஒருவாறு குறைத்து என்போலிய ஊழியர்கள் உளத்திற்கு ஒருவகைக் குதூகலமே கொடுக்கின்றது. அந்த ஒருவகைக் குதூகலமும் ஒரு மெய்ப்பேருவகை யாருமாறு இரு குறைகளும் நீங்கப்பெறும் காலம் வந்துவிட்டது என்று நினைக்கின்றேன். தனித்தனி ஒவ்வொரு குறை கொண்டிருப்பதிலும் ஒன்றி நிற்கும் இரு நாட்டிற்கும் குறிக்கலாகும் பேதம் அல்லது ஏற்றத் தாழ்வு உளதென்றால், அதுவும் அந்த இரு குறைகளாற்றான் ஏற்படுகின் றது. அப்படி ஏற்படுவதிலும், வீர நாட்டிற்குள்ள ஒரே குறையினால் சரஸ்வதி நாடு மேம்பட்டும், சரஸ்வதி நாட்டுக்குள்ள வேறு ஒரே குறையி னால் வீரநாடு மேம்பட்டும் இருப்பதால், இரு நாடுகளும் பொதுவாகச் சம நிலை யுடைய தென்றே சாற்ற வேண்டும். என் மொழிகளின் பொருள் கன்கு துலங்குதற்காக, முற்கூறிய இரு குறைகள் இன்னவை யென்று எடுத்துச் சொல்லிவிடுகின்றேன். முதன் முதல் இந்த அழகிய சரஸ்வதி

நாட்டிற்குள்ள குறை யாதெனில், பண்டை தொடங்கிப் பல அரச பரம் பரையாக இந்நாட்டின் அங்கமாயும் இந்நாட்டரசுக் குரியதாயு மிருந்த அம்போருகவனம் என்ற சிறு செழிப்புள்ள மாகாணம், சென்ற இரு நூற்றேழு ஆண்டுகளாக இவ்வரசுக் கில்லா திருப்பதே. மாட்சிமை தங் கிய மகாராஜ! வீரமாபுரத்து இப்போதைய மாட்சிமை தங்கிய அரசர் பெருமானது மூன்றும் பாட்டனார் மாட்சிமை தங்கிய ஜய கேசரியின்ர் காலத்து, கால வித்தியாசத்தால் வீரநாட்டிற்கும் சரஸ்வதி நாட்டிற்கும் கேர்ந்த போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கையிலுல் அம்போருகவனம் வீர நாட்டரசுக் குரிய தானமை வெளிப்படை. அம்போருக வனத்தைத் தற்போது கொண்டிருப்பதால்தான் வீரநாடு விஸ்தரணத்தில் சரஸ்வதி நாட்டைவிடச் சற்றுப் பெரிதா யுள்ளது. இந்த அம்போருக வனம் மீண் டும் சரஸ்வதி நாட்டோடு சேர்க்கப்படுமாயின், பின்னர் இருநாடுகளும் விஸ்தரணத்தில் பேதமின்றியே இருக்கும் என்னலாம். குடி ஜனங்கள் விருப்பப்படி அமைச்சர்கள் கூறிய மந்திராலோசனையை அநுசரித்து எங்கள் வீரநாட்டரசர் மாட்சிமை தங்கிய வீரகேசரிப் பெருமான் அவர் கள் அம்போருக வனத்தைச் சரஸ்வதி நாட்டரசுக்குச் சமர்ப்பிக்கத் திரு வுள மிசைந்திருப்பதை, மாட்சிமை தங்கிய மகாராஜ! தங்கள் சமுகத்துக் கறிவிப்பதற்கு எளியேன் தூது அனுப்பப் பெற்றேன். அவ்வாறு அம் போருகவனம் மீண்டும் இந்நாட்டின் அங்கமாகிவிடின் சரஸ்வதி நாட்டிற் குள்ள ஒரே குறை அகலும். இனி, எங்கள் மாட்சிமை தங்கிய அரசர் பெருமான் அவர்கள் அம்போருக வனத்தை இவ்வரசிற்குச் சமர்ப்பிக்க ஒரு சந்தர்ப்பம் அல்லது ஒரு நியதி வேண்டி மன்றே? அச் சந்தர்ப்பம் அல்லது நியதியே, எங்கள் வீரநாட்டிற் குள்ள ஒரே ஒரு பெருங் குறை யை நிவர்த்திப்பதும், சரஸ்வதி நாடு வீரநாடு ஆகிய இரு நாட்டிற்கும் உள்ள அற்புப் பாசத்தை முன்னிலும் அதிக உருக்கமாக்குவதுமாம். அதிக மாய் விரிப்பானேன்? எங்கள் வீர நாட்டிற்கும் அரசுக்கும் உள்ள ஓர் பெருங்குறை இளவரசர் இல்லாமையே யாம். அக்குறை நீங்க இளவரசர் உதிக்க எங்கள் மாட்சிமை தங்கிய அரசர் பெருமான் திருமணமாகிய மங்கள காரியார்த்தமாகவும் சிறியேன் தூது அனுப்பப்பெற்றேன். மாட் சிமைதங்கிய மகாராஜ! தங்கள் சமுகத்து அருந்தவப் புத்திரிகளாகிய மாட்சிமை தங்கிய அரச பெருமாட்டிகளில் ஒரு தேவியரை எங்கள் மாட்சிமை தங்கிய இராணியாகப் பெறும் பெறலரும் பெரும் பேற்றை வீரநாடு அறி வுர்வத்துடன் ஆசிக்கின்றது. அவ்விருப்பத்தை நிறை வேற்றி எங்கள் நாட்டிற் குள்ள ஒரே குறையை நிவர்த்திக்கத் தங்கள் சமுகம் திருவுளங் கொண்டு அம்போருகவனம் என்ற மாகாணத்தைப் பரியமாக ஏற்று மாட்சிமை தங்கிய தங்கள் புத்திரிப் பெருமாட்டிகளில்

ஒருவரை எங்கள் அரசர் மாட்சிமை தங்கிய வீரகேசரி மகாராஜர் அவர்க ளுக்குத் திருமணஞ் செய்து, சரஸ்வதி நாட்டிற்கும் வீரநாட்டிற்கும் அதி உருக்கமான பந்துத்துவ பாசத்தை அமைக்குமாறு மாட்சிமை தங்கிய வீரநாட்டரசர் பெருமான் அவர்களும், அமைச்சர்களும், மகா ஜனங்களும் தங்கள் சமுகத்தை வேண்டுகின்றார்கள். அவ்வேண்டுகோளை அறிவிக்கும் மாட்சிமை தங்கிய எங்கள் மகாராஜர் அவர்கள் தங்கள் சமுகத்திற்கு அனுப்பியள்ள இத்திருமுகம் முதலியவற்றை அங்கீகரிக்கும்படி தங்கள் சமுகத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

(சர்ம வல்லபர் எழுந்து, தாம்பூலாதி மங்கலப் பொருள்களும், திரு முகமும் (கடித ஓலைச் சுருள்) ஓர் விலையுயர்ந்த முத்தாரமும் வைக்கப்பட் டுள்ள ஓர் பொற்றட்டை அரசர் முன்பு ஏந்தி நிற்கின்றார்.)

(அரசர் தட்டைப் பெற்றுக்கொண்டு முதன் மந்திரி முகத்தைப்பார்க்க அவர் எழுந்து வந்து தான் தட்டைப் பெற்றுக்கொள்ள, அரசர் திரு முகத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, சாமவல்லபரை ஆசனத்தில் அம ரும்படி அமர்த்தி, திருமுகத்தைப் பிரித்து வாசித்து முதன் மந்திரியிடம் அதனைக் கொடுத்து அவரையும் அமரும்படி பணிக்கின்றார். பின்னர் அரசர் கட்டளைப்படி அமைச்சர்கள் இவரும் திருமுகத்தை வாசிக்கின்றார் கள்.)

அரசர் :—பெருமை தங்கிய சாம்வல்லபர் அவர்கள், சரஸ்வதி நாடு வீரநாடு ஆகிய இரண்டிற்கும் உள்ள சீர்கள், குறைகள், அக்குறைகள் நீங் கும் நெறிகள் முதலியவற்றைப் பற்றிப் பேசியதற்கு நாம் அவருக்கு வந் தனிக்கக் கடமைப்பட் டிருக்கின்றோம். மாட்சிமை தங்கிய வீரகேசரி மகாராஜர் அவர்கள் அன்புகூர்ந்து அனுப்பிய திருமுகத்திற்கு நாம் அவர் களுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகின்றோம். அத்திருமுகத்திலடங்கிய விஷயங்களைப் பற்றிய நமது முடிவான தீர்மானம் நமது அமைச்சர்கள் முதலியோரோடு நன்கு கலந்தாலோசித்த பின்னரே ஏற்படக் கூடும். இன்னும் ஏழு தினங்களுக்குள் அத்தகைய தீர்மானம் ஏற்பட்டுவிடும் என்று நம்புகிறோம். அதுகாறும் மாட்சிமை தங்கிய சாமவல்லபரைப் பொறுக்க வேண்டுகின்றோம். என்ன முதன் மந்திரியாரே! தங்கள் கருத்து என்ன?

முதன் மந்திரி :—ஆம், மாட்சிமை தங்கிய மகாராஜர் மொழிந்தது முற்றிலும் தக்கதே. அன்றியும் இத்திருமுக விஷயங்களைப் பற்றி மாட்சிமை தங்கிய நமது அரச புத்திரிப் பெருமாட்டிகளோடும் ஆலோ சிக்க வேண்டியது அத்தியாவசியம். யாவற்றையும் முறைப்படி ஆலோ சித்து ஏழு தினங்களுக்குள் ஒரு முடிவான தீர்மானத்தை நண்ணலாம்.

ஆனால் வெகு காலமாக நமது நாட்டிற்கே புரியாத மிருந்த அம்போருவனம் மீண்டும் சாஸ்வதி நாட்டைச் சார்ந்தாரும் ஆலோசனை எழுந்திருப்பதைப்பற்றி என் மனத் தெழும் மகிழ்வை இப்போது தங்கள் மாட்சிமை தங்கிய சமூகத்திற்கு அறிவியா திருக்கமுடியவில்லை.

அரசர்:—சரி. இவ் விஷயங்களைப் பற்றி ஆலோசிக்க காலம் வரும் நாழிகைக்கு நாம் அந்தரங்கக் கொலு கூடி அதில் தீர்மானிக்கிறபடி தீர்மானத்தை நமது புத்திரிசருக்கு அறிவித்து ஆலோசித்துப் பின்னர் எற்படும் தீர்மானத்தை வேறு அமைச்சர்களுக்கு அறிவித்து முடிவான தீர்மானத்திற்கு வருவோம். நாம் காலம் கடந்து இந்த அந்தரங்கக்கொலு தொடங்கினோம். இன்று, சாதாரணக் கொலுவில் கவனிக்க வேண்டிய வேறு பல விஷயங்கள் இருக்கின்றன வாகையால் இத்துடன் இவ்வந்தரங்கக்கொலுவை நிறுத்துகின்றோம்.

(போதிய இடமில்லாமையால், சென்ற மலரில் கூறியபடி, சிகைக்கும் அரசர்க்கும் நிகழ் சம்பாஷணையைக் கூறும் அந்த காட்சியை இம்மலரில் பிரசுரிக்க கூடவில்லை.)

(தொடரும்.)

பத்திராதிபர்.

அறிவிப்பு.

அச்சியந்திர சாலையில் ஏற்பட்ட காரணங்களினாலும், பேரறிவு சந்தாதாரர்கள் இல்லாத ஆதரவுக் குறைவினாலும் இப் பத்திரிகை வெளிவர வேண்டிய காலங்கடந்து மூன்று மாதங்கள் பிந்தி வெளிவரநேர்ந்தமையைச் சந்தா நேயர்களும் மனோ அபிமானிகளும் பொறுக்க வேண்டுகின்றோம். இப்பருவத்து, 11-வது 12-வது மலர்கள் சேர்ந்து 80 பக்கங்கள் கொண்ட ஒரே சஞ்சிகையாக வெளிவரும். இனி இரண்டாவது பருவம் சித்தார்த்த வருஷம் சை மாதம் (1919-ம் வரு ஜூலைமீ) முதல் தொடங்குவதாக வைத்துக்கொண்டு, அப்பருவத்து முதல் மலரைத் தைமாத ஆரம்பத்தில் பிரசுரிப்பதாகக் கடவுள் திருவருளால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அப்படிய பருவத்தினிருந்து பத்திரிகையைக் கிரமஸ் காத்திரத்தில் அச்சிடவும் தீர்மானம். நமது சந்தாதாரர்கள் அனைவரும் தங்கள் பாக்கி பிரதிகளையும் சந்தாதா காருப்படி செய்து பத்திரிகையை வளர்க்குமாறு வேண்டுகின்றோம்.

ஸ்ரீ சாஸ்வதி சகாயம்.

கதா வருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள், ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள், இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்.

பருவம். 1.	கலியுகாப்தவரு 5021. சித்தார்த்தவரு ஆடி-ஆவணி மீ. கொல்லமாண்டு 1095, கடக-சிம்ம மீ. கி. பி. 1919-ம்வரு ஜூலை-ஆகஸ்ட் மீ.	மலர் 11-12

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

நான்காம் பாடம்.

வஸ்துக்களின் வேறு சில லக்ஷணங்கள்:—முதற்பாடத்தில் வஸ்துக்களின் முக்கிய லக்ஷணங்களில் மூன்றைப்பற்றிச் சொன்னோம். இப்பொழுது வேறு சில லக்ஷணங்களைப்பற்றிக் கூறுவது அவசியமா யிருக்கிறதாகையால், அவ்வாறு புரியத் தொடங்குவோமாக.

பகுபடுதன்மை:—வஸ்துக்கள் பற்பல பாகங்கள் அல்லது துண்டுகளாகப் பகுக்கப்படும் இயல்புடையனவா யிருக்கின்றன. இந்த லக்ஷணத்தைத்தான் பகுபடுதன்மை என்கின்றோம். வஸ்துக்கள் மிக நுணுக்கமான துண்டுகளாகப் பகுபடு தன்மைக்குப் பல உதாரணங்கள் காட்டலாம். ஒரு சிட்டிகை நல்ல கஸ்தூரி ஒரு அறை முழுவதும் பல வருஷங்களாக நறுமணங் கமழச்செய்வதை அநுபவத்தி லறியலாம். அதற்குக் காரணம், அக்கஸ்தூரியிலிருந்து பிரிவுபட்ட துகள் அல்லது மிகச் சிறிய பொடிகள் அவ்

வரை முழுவதும் நிரம்பியிருக்கலே. இத்துகள்கள் அறையி
னிருந்து வெளிச் செல்லச் செல்ல, கஸ்தூரியிலிருந்து புதிய துகள்
கள் பரவிக்கொண்டேயிருக்கின்றன. இப்படிப் பல வருஷங்களாக,
சதா, துகள்கள் கஸ்தூரியிலிருந்து வெளிச்சென்றால் எவ்வளவு
லக்ஷக்கணக்கான துகள்கள் வெளிச்சென்றிருக்கவேண்டும்!
ஆனால், எவ்வளவு நுட்பமான தராசைக்கொண்டு கஸ்தூரியை
முச்சுமுகலும், பல வருஷங்களுக்குப் பிறகும் நிறுத்துப்பார்த்
தால், அதன் எடையில் இலவலேசமும் வித்தியாசம் தோன்றாது.
எனினும், உண்மையில் பல துகள் பிரிவுபட்டுப்போயிருப்பதால்
வித்தியாசம் இருக்கத்தான்வேண்டும். அவ் வித்தியாசம் எவ்
வளவு நுட்பமான தராசினாலும் அறியக்கூடாதவாறு அவ்வளவு
மிகச் சொற்பமாயிருக்கிறது. அவ்வளவு மிகச் சொற்பமான
கஸ்தூரிபாகம், பல வருஷங்களாகப் பல லக்ஷக்கணக்கான துகள்
களாகப் பிரிவுபட, அத்துகள்கள் அறை முழுவதும் வாசனை
யினவென்றால், ஒவ்வொரு துகளும் எவ்வளவு நுட்பமாயிருக்க
வேண்டும்! மற்றொரு உதாரணம்.

ஒரு கெல்லிரி யளவு *தூமிர வர்ணக்கட்டி இரண்டு
காலன் தண்ணீரில் கரைய, அத் தண்ணீர் முழுவதும் தூமிர
நிறத்ததாகிறது. ஆகையால் அவ்வளவு சிறிய வர்ணக்கட்டி
கோடி துகள்களுக்குக் குறையாமல் பதுபட்டிருக்கவேண்டு
மென்று அறியப்பட்டிருக்கிறது.

வஸ்து எவ்வளவு நுட்பமான உருவமுள்ளதாயிருக்கலா
மென்பதைக் குறித்து, கடைசியாக ஒரு வேடிக்கையான உதா
ரணம் சொல்லுகிறோம். இரத்தம் இருக்கிறதே, அது என்ன
வென்றால், யாதொரு நிறமுமற்ற ஓர்வகைத் திரவ வஸ்துவில்,
சிவப்பான சிறுசிறு உண்டைகள் மிதக்கின்றன, இவையிரண்டுந்
தான் இரத்தம். மானிட இரத்தத்திலுள்ள முக்கிய சிவப்
பான ஒரு உண்டையின் குறுக்களவு என்னவென்றால், அது ஒரு

* தூமிரவர்ணக்கட்டி:—அமெரிக்காவிலுள்ள ஓர் மரத்திற் படியும்
ஓர்வகைப் பூச்சிகளின் சடலத்தைக்கொண்டு செய்யப்படும் ஓர் கருஞ்
சிவப்புச் சாயம். இதற்கு ஆங்கிலத்தில் கார்மைன் (Carmine) என்று
பெயர்.

அங்குலத்தின் மூவாயிரத்தைந்நூற்றில் ஒரு பாகமே. ஒரு ஊசி
முனையில் தொட்டுக் கீழே விழாமல் தொங்கவிடக்கூடியவளவு
துளி இரத்தத்தில் இவ்வகைச் சிவந்த உண்டைகள் சுமார் பத்து
லக்ஷ மிருக்கின்றன. இவ் வுண்டைகளைவிட அளவிற் சிறிய
கிருமிகளிருக்கின்றனவென்று பூதக்கண்ணாடிப் பரீட்சைகளி
னால் தெரிகிறது. இக்கக் கிருமிகளுக்கு உணவு வேண்டுமே?
ஆகையால் அவைகள் தங்களைவிடச் சிறு கிருமிகளைத் தின்று
கின்றன. இவ்வாறு கிருமிகளுக்கு உணவாகிற சிறு கிருமிகளின்
சரம்புகளிலும் இரத்தம் ஓடுகிறதென்றால், அந்த இரத்தத்தி
னுள்ள சிவந்த உண்டைகளின் அளவு எவ்வளவு நுட்பம்! எவ்
வளவு நுட்பம்!

ஆனால், வஸ்துக்கள் எவ்வளவுதான் பகுக்கப்படும்? அவற்
றின் பகுபடுதன்மைக்கு எல்லையே யில்லையா? எவ்விதப் பரீக்ஷை
களினாலும், அவ்வாறு பகுபடுதன்மைக்கு ஒரு எல்லை கிருமிக்க
முடியவில்லை யென்பது உண்மையே. எனினும் ரசாயன சாஸ்திர
சம்பந்தமான சில விஷயங்களை முன்னிட்டு, வஸ்துக்களின் பகு
படுதன்மைக்கு ஒரு எல்லையிருக்கிறதென்றே கொள்ளவேண்டிய
திருக்கிறது. அஃதாவது வஸ்துக்கள் இனிப் பகுக்கமுடியாத அதி
நுட்பமான துகள்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன வென்
பது கொள்கை. பகுபடாத இக்கத் துகள்களை, பரமாணு என்ற
பெயரால் அழைப்போமாக. ஆனால் பகுபடாத பரமாணுக்க
ளால் வஸ்துக்கள் ஆக்கப்பட்டிருப்பது, ரசாயன சாஸ்திர சம்
பந்தமான சில நிகழ்ச்சிகளுக்குச் சரியான காரணஞ் சொல்லக்
கூடிய ஒரு கொள்கையேயன்றி, எவ்விதப் பரீட்சைகளினாலும்
எவ்விதப் பூதக்கண்ணாடிகளினாலும், பகுபடாத ஒரு பரமாணு
வை ஒருவரும் பார்த்ததில்லை. மூற்கூறிய ரசாயன சாஸ்திர சம்
பந்தமான நிகழ்ச்சிகள் யாவை? அவைகளுக்கும், 'பரமாணு'
கொள்கைக்கும் என்ன பொருத்தம்? என்று விளக்கப்புகின் மிக
விரியும். இந்தப் பௌதிக சாஸ்திரத்தில் அவ் விரிவான விளக்
கம் ஆவசியகமல்ல. ஆகையால் அதனை விடுத்து முக்கியமான
மற்றொரு விஷயத்தைக் கூறத் தொடங்குவோம்.

பத்தியாதிபர்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

374-ம் பக்கத் தொடர்ச்சி.

மஞ்சள், குங்குமம், மாங்கல்யம் முதலியன சுமங்கலியின் மங்களச் சின்னங்கள். குழந்தையேபாயினும் குமரிப்பெயாயினும் கணவனை யிழந்தது முதல் அச் சின்னங்களையும் இழந்து விடவேண்டியது நமது சாம்பிரதாயம் என்று நான் எண்ணி யிருந்தேன். பாலிய விதவைகள் புஷ்பவதிகளாகும்வரை மாங் கல்யமாதிய மங்களங்களைப் பூண்டேயிருக்கலாம், அப் பருவத் திற்குப் பின்புதான் அவர்கள் அலைகளை அகற்றவேண்டும் என்ற கட்டு எனக்குத் தெரியவே தெரியாது. எனது இலௌகிக அறிவு இவ் விஷயத்தில் அவ்வளவுதான். சாவித்திரியோ விதவை என்றறிந்தேன். கழுத்தில் மாங்கல்யமில்லை. நெற்றி யில் மாத்திரம் அழகாகக் குங்குமப்பொட்டிருக்கிறது. யன்? இதற்கு உத்தரமாகத் தோன்றிய என் அழுக்குச் சிந்தனைகளைக் கூறவேண்டியதிருக்கிறதே. என் மனம் மயங்குகிறது. எழு தும் கை கூசி நடுங்குகிறது. ஆனால் உள்ளதை உள்ளபடி உரைக்கும் கருத்தைத் திடமாகப் பற்றியல்லவோ என் சரி தையை எழுதத் தொடங்கினேன்! ஆகையால் உள்ளையையே ஒருவாறு உளறிக் கிறுக்கிவிடுகிறேன்.

"—நாகரிக காலமல்லவோ இது. இன்னும் சாவித்திரியைக் கன்னிகையாகவே பாவித்து மற்றொரு கலியாணஞ் செய்வார் களோ? அவருக்கும் அந்தோக்க மிருக்குமோ! அதனால்தான் அழியாத குங்குமப் பொட்டோ! அப்படிக்காலிருக்கும். நான் எவ்வளவு பாக்யவான்! ஆனால் இப் புதுமைக்கு என் அம்மாள் சம்மதிப்பாளா? என் தகப்பனார்?—யார் சம்மதிக்காவிட்டாலென்ன! சம்மதிக்காவிட்டாலென்ன! சாவித்திரி ஒருத்தி சம்மதம் போதாதா! என்ன வென்னம்! ஐயோ! அம்மா! நான் சற்புத்திரன் அல்லவா!—ஆனால், இந்த வேதனையை, இந்தச் சோதனையை என் னால் சகித்திருக்க முடியாது. நான் செத்துப்போய்விட்டால் வெகு உத்தமம்."

சாவித்திரியின் தாய் முகத்தைப் பார்த்தேன் இச் சிந்தனை களுடன். அல்லங்கோலமாய் என் இதழ்கள் படைத்தன, கண்கள் கலங்கிச் சுருங்கின. "அவள் நெற்றியில் சதா குங்குமப்பொட்டு இருப்பதால் இந்தத் தக்கச் செய்தி இதுவரையில் எனக்குத் தெரியாதம்மா. ஆனால் சென்றதை நினைத்துப் பயனென்ன! இனி எல்லாம் சுகமாக முடியும்" என்று மடையனைக் குழறி னேன்.

"இல்லை. நியாயமாக ருதுவாகும் வரையில் அவள், தாலிச் சாடு குங்குமம் இவைகளை விட்டுவிடக்கூடாதுதான். ஆனால் தாலியை எடுக்கும் தரித்திரச் சடங்கை அவளுக்கு நல்ல வயது வந்த பின் செய்து என் மன்குமுற வேண்டுமென்று, அந்தப் பாவி செத்தவுடனேயே கூட்டோடு கூடாக, அவள் கோத் தாலியையும் எடுத்தெறிந்து தொலைக்கும்படி அவள் தகப்பனார் செய்துவிட்டார். ஆனால் அவள் வளர வளர சரஸ்வதி தாயிடம் ஒரே உருக்கமான பக்திகொண்டு அதன் அறிகுறியாகிய குங்கு மப்பொட்டில் அதிக பிரியங்கொண்டிருந்தாள். அதைத் தடுப் பது கொடுமை என்றெண்ணி, அவள் வாழ்நாள் முழுவதும் குங் குமப்பொட்டுடன் சாரதாம்பாளுக்கு அடியாளாகப் பரிசுத்தமாக இருந்துவிட்டுப் போகிறாள் என்று நாங்கள் சும்மாவிருந்துவிட் டோம்" என்றனள் சாவித்திரியின் அண்ணி.

"சாரதாம்பாளுக்கு அடியாளாகப் பரிசுத்தமாக இருந்து விட்டுப் போகிறாள்" என்ற மொழிகளைக் கேட்டேன். என் மடச் சிந்தனை, அழுக்குச் சிந்தனை உடனே அதிர்ந்து அழியத் தொடங்கிற்று. "என்ன அற்பனுய்விட்டேன்! அடி மிருகமே! பிசாசே! அந்த எண்ணவெறியை விட்டொழி" என்று என்னை நொந்துகொண்டிருந்தேன். சாவித்திரி, மாசு என்பதே இன்ன தென்றறியாத சாவித்திரி, எப்பொழுதும்போல் நகைமலர்ந்த முகத்துடன் அப்பொழுது எங்கள் முன்பு தோன்றி என் மடிமீ தூட்கார்ந்தனள். இருபுறமும் சோர்ந்திருந்த என் சொக்கா யின் முன்தானைகளை இழுத்துப் பொத்தான்களைப் பூட்டத்

தொடங்கினாள். பத்து வயதுப் பாலிகையா யிருந்தபோதிலும் ஒரு குழந்தையைப்போல, தன் தாய் தன்னையர் மடியில் அமர்ந்திருப்பதுபோல, மன் மடிமீதிருந்து பேசுவது அவளுக்குச் சாதாரண வழக்கமாயிற்று. இது உங்களுக்கு விபரீதமாகத் தோற்றலாம். நகைப்பாகவு மிருக்கலாம். எனக்கும் முதன் முதல் பெருத்த லஜ்ஜையாக இருந்தது. ஆனால் அந்தப் பேதையோ, அவ்வாறு, எவ்வாறோ என்னுடி மாசற்றுப் பழகி விட்டாள். பழகப்பழக என்னிடத்தும் அவள் மாசற்ற தன்மை படிந்தது. என் லஜ்ஜையும் தீர்ந்தது.

* * *

ஆசிரிய னுரை:—தான் முன்று வருஷம் எப். ஏ. வகுப்புக்களில் வாசித்து இருமுறை எப். ஏ. பரீட்சையில் தேறுமையால் மனச்சோர்வுற்றுப் படிப்பை நிறுத்தி, தன் தந்தையின் வர்த்தக விவகாரங்களில் ஈடுபட்டிருந்தமை; சாவித்திரி பருவ மடைந்த பின்னரும் அவளோடு தான் கொருங்கிப் பழகிவந்த தன்மை; அவள் கல்வி முதிர்ச்சி, முதலிய பல விஷயங்களை எஸ். தாமாக விளம்பி, அந்தப் பெண்ணின் பதினைந்தாம் பிராயத்தில் அவள் தந்தை தேகவியோக மடைந்தமை, அப்பொழுது அவள் பட்ட துயரம், இவைகளை உருக்கமாகக் கூறியிருக்கிறார் ஜனகராஜன். பின்பு அவள் மாமன் அவ் வீட்டில் தன் குடிப்பதோடு வசித்து வந்தானும். எருமைபோல் பருத்துக் கறுத்த விகார சரீரமும் பன வெறியும் திருட்டு விழியுமுடைய ஒரு கடியன் என்பவாறு, சாவித்திரியின் மாமனை வர்ணிக்கின்றார். சாவித்திரியின் பிதா இற்றை ஐந்தாம் மாதம் அவளது மாதாவும், தன் மகளைப் பெற்ற நாள் முதல் தன் தேகத்தைச் சார்ந்திருந்த வயிற்றுநோயினல் பெருவருத்தமுற்றுச் சாருந்தறுவாயி விருந்தனளாம். இவ் விவரங்களை நமது சப்புத்திரன் விரிவாக வரைந்திருப்பதை விடுத்து முக்கியமான அம்சங்களை மாத்திரம் கூறுகின்றோம்.

அத்தியாயம் 6.

கதாநாயக னுரை:—அத்தகைமைத் தகுதியன் விட்டிலில்லை. அவன் மனைவி உள்ளே சமையலில் கவனமா யிருந்தாள். சாவித்

திரி கட்டிலிற் கிடந்த தன் அன்னையின் அருகே புட்கார்ந்து அவள் விலாப்புறங்களைத் தன் கரங்களினல் பிடித்துப் பிடித்து நோயை ஆற்ற முயன்றனள். நோயாளியோ உருண்டாள், புரண்டாள், தன் வயிற்றைப் பிசைந்தாள். "ஹங்,—ஹங்,—ஹங், ஹாங்,—தாயே!—சர்வேசுவரீ!—இந்தப் பொல்லாத நோயை என்னல் தாங்கமுடியவில்லையம்மா!—என்னை உன் பாதங்களிற் கொண்டுபோய்விடு. ஐயோ! அம்மா! அம்மணீ! தாயே!—" என்று பலவாருகப் பதறுகின்ற பரிதாபகரமான குரலிற் புலம்பினுள். பின்பு "ஜனகம்! ஜனகம்! ஜனகம்!" என்றனள். (தன்னை, அந்த அம்மாள் 'ஜனகம்' என்றழைப்பதும் 'நீ' என்று பேசுவதும் இப்பாயின வகையை முன்னமே சொல்லியிருக்கின்றன் கதாநாயக ஜனகராஜன்.) ஜனகன் அருகிற் சென்றேன். "என்ன அம்மா?" என்று அவள் முகத்தை உற்று நோக்கினேன். பாவம்! கண்ணீர்விட்டழத்தொடங்கினுள். "நான் போகிறேன். சாவித்திரியை விட்டுப் போகிறேன். அவள் கதி என்னவாகுமோ! ஜனகம்! அவளை ஒரு கண் பார்த்துக்கொள். அவள் மாமனிடம் எனக்கு நம்பிக்கையில்லை. என் சொந்தத் தம்பிதான். ஆனல் நான் உன்னைத்தான் நம்புகிறேன். ஒன்றும் அறியாத செல்வக் குழந்தையாய் வளர்ந்தவள் சாவித்திரி. அப்பா ஜனகம்! அவள் துன்பப்படும்படி பார்த்துவிடாதே.—சாவித்திரி! என் கண்ணே! என் கிட்டவா அம்மா!" என்றனள். புத்திரி தன் கண்கள் கலங்கத் தன் தாயின் முகத்தோடு முகம் வைத்தாள். அன்னை அதை அன்பாக முத்தமிட்டாள். "ஏ ஒரு புத்தி சொல்லுகிறேன் உனக்கு. நீ பதினைந்து வயசுப் பாலியப் பெண். பௌவனத்தின் கொடுமையான சோதனைகள் இனிமேல் தான் உனக்குத் தெரியும். எந்தச் சமயத்திலும் நமது அம்மணியை நம்பி, எப்பொழுதும் சுத்தமான கன்னியா யிரு. உன் தலைவிதி அப்படியிருந்தது. கண்ணே! பெண்கள் இரண்டாங் கலியாணஞ்செய்வது நியாயமென்ற புது நாகரிகப் பேச்சுக்களினல் உன் மனம் கலங்கக்கூடாது. நீ புருஷனில்லாத சுத்த கன்னியாயிருக்க—ஐயோ! தாயே! அம்மா அ!" என்று துணென உதித்த குரல்விட்டுத் தன் மார்பின்மீது கைவைத்தனள். "என்ன

அம்மா" என்று நான் பதறினேன். அவள் வாயில் சிவப்பாய் ஒன்று தோன்றியது. அது என்ன? இரத்தம். கண்கள் மூடின. உடன. மகள் "அம்மா! அம்மா! அம்மா! அம்மா!" என்று அழைத்தனள். அம்மாள் பேசவில்லை. சாவித்திரி ஓவெனக் கதறிக் தன் கூந்தலைப் பிய்த்துக்கொண்டு அலறி விழுந்தாள். நான் அழாதிருக்க முடியுமா!

அத்தியாயம் 7.

காயிழந்து கண்கை யிழந்து தனிமையாய் நின்றாள் சாவித்திரி. அவள் அன்னை இறந்த சுமார் பதினைந்து நிமிஷங்களாக நான் அவளைக் காணவில்லை. பின்னர் ஒரு நாள் அதற்காக அவள் வீட்டுக்குச் சென்றேன். அவள் நாய் எனக்குக் கூறிய மொழிகளும், என்னென்னவோ கொர்க்கெனும் என் நெஞ்சை உறுத்தின. அன்றியும் கண்கை யிழந்து காயிழந்து தனிமையாய் நின்ற சாவித்திரியின் நிலைமை என்னாயிருக்கிறது என்று நான் அறியவேண்டியதும் அவசியமன்றோ? ஆகையால்தான் அவளைக் காண நாடிச் சென்றேன்.

அவன் — அந்த மடையன் — அவள் மாமன் — அந்தப் பாதகன் — (அவன் பெயர் இரத்தினசாமி) முற்றத்தைச் சார்ந்த முன்னறையில், ஓர் விறிப்பலகையிலே மன்னர்சாரிபோல் உட்கார்ந்திருந்தான். உள்ளே சென்று நின்றேன். அவன் என்னைப் பார்த்தான். "யார் அது?" என்று உரத்த குரலில் எழுப்பினான். இவ் வியாசரைக்கால் நான் மறியலாகினேன். "என்! நான்தானே!" என்று சாந்தமாகக் கூறினேன். உடனே சாவித்திரி தோன்றினாள். அருகே நின்றாள். அந்த ஏழுமை மாறி அவளோ நோக்கி ஒரு கடும் பார்வை பார்த்தது. "வெட்கம்— மானம் — மரியாதை — லஜ்ஜை கெட்ட செருக்கி! புருஷனைத் தின்றுவிட்டது மல்லாமல் வேறு யாரையாவது தேடி!" என்று சீறி எழுந்தான். அவன் எழுந்ததைப் பார்த்தேன். அருகே நின்ற பெண்மணியைக் காணவில்லை. பின்னல்போல் வந்தாள், இடிபோல் உருட்டினான், பின்னல்போல் மறைந்தாள்.

"வயசுப் பெண்கள் இருக்கிற இடத்தில் உனக்கென்ன போக்கு வரவு! அந்த ஈன வழக்கமெல்லாம் அந்த வெட்கங் கெட்டவளோடு போயிற்று. இனி நான்தான் அதிகாரி. இனி நீ இந்த வீட்டு நடையில் கால் வைப்பாயானால் உன் காலை முறித்துக் கடலுக்கப்பால் எறிந்து விடுவேன். போ வெளியே! —"

இவை யார் சொன்னவை என்றுகூட நான் சொல்லவேண்டுமோ! என் கண்கள் கபகபவென எரிந்தன. என் நெஞ்சு எரிந்தது. என் மூச்சு எரிந்தது. பின்னர் என் மேனி முழுதும் எரிந்தது. யாவும் ஒரு கணத்தில். அந்தக் கடாவின் மூர்க்கக் கண்களும், கபகபவென்றெரிந்த என் கண்களும் நேர்நேராகக் காய்ந்து நோக்கின. தட தட தடவென்று என் சித்தத்தினின்று காண்டிவந்த மொழிகள் என் இதழ்களைப் பிளக்கப் போயின. ஆனால் அவ் விதழ்கள் அகலாது நிடீரெனக் கெட்டியாகப் பொருந்தி நின்றன. ஏன்? அக் கடாவின் கண்களைக் காய்ந்து நோக்கிக்கொண்டிருந்த என் கண்கள் சற்றுப் புரண்டு அறையின் உட்புறச் சுவரிலுள்ள ஒரு ஜன்னலை நாடின. ஏன் அப்படிச் சென்றனவோ! பலகணிக்கப்பால் சாவித்திரியின் முகம் தோன்றிற்று. அவள் கூந்தல் குலைந்திருந்தது. விழிகள் நிறைய வெந்நீர். அதரங்களில் அதிர்ச்சி. மோவாயும் தொண்டையும் எழுந்தெழுந்து பதியும் தேம்பல். முக முழுவதும் செக்கச் செவேல் என்ற நிறம். இத் தோற்றத்தில் அவள் முகத்தைக் கண்டேன். எங்கள் கண்கள் கலந்தன. வெம்பிக் கொண்டிருந்த என் நெஞ்சம் சுரீரென ஒரு உணர்ச்சி பற்றது. எங்கள் கண்கள் அதற்கு முன் ஒருபோதும் அவ்வாறு நின்று கலந்ததில்லை. அந்தப் புனிதமயமான பெண் தன் வலக்கை விரல்களின் உட்புறத்தைத் தன் இதழ்களில் வைத்தாள். "ஒன்றும் பேசாதேயுங்கள்" என்று அறிவித்தாள் என்றறிந்தேன். "போய்விடுங்கள்" என்று பின்பு அக் கையாலேயே சைகை செய்தாள். ஆகையால்தான் என் சித்தத்திலிருந்து கொதித் தெழுந்த மொழிகள் என் இதழ்களைப் பிறி வெளி வரவில்லை. உடனே அவ்விடத்தைவிட்டு மறைந்தேன். வீதியில் வந்தேன்.

பரபரப்பாக நடந்தேன். வீட்டை யடைந்தேன். பாடிக்குப் போனேன். அறைக்குள் நுழைந்தேன். கதவைச் சார்த்திக் தாழிட்டேன். ஒரு நாற்காலியில் வீழ்ந்தேன். என் மண்டைக் குள்ளே பெரும் பிரசங்கங்களும் வாதங்களும் நிகழ்ந்தன:—

ஆசிரியனுரை:—மூற்கூறிய பிரசங்கத்தையும் வாதத்தை யும்பற்றிக் கதாநாயகன் வரைந்திருப்பதைப் படிக்கப் பிரியமா யிருக்கிறது. எனினும் சுருக்கம் கருதி அவற்றை சுவடி விடிக்க வேண்டியிருக்கின்றது. தான் சாவித்திரிபாடு பழகியதையும் அவளது அன்னையின் மரண மொழிகளையும் நினைந்து நினைந்து, தான் இப்பொழுது சாவித்திரி வீட்டுக்குச் சென்றதும் அவள் மாமன் நடத்தையும் சரியல்லவென்றும் சரியென்றும் மாறி மாறி அநேக விதமாகத் தனக்குள் வாதித்துக்கொண்டு, கடைசி யாகத் தான் இனி அவ் வீட்டுக்குச் செல்வதேயில்லை யென்றும் அவளை மறந்துவிட முயற்சிக்கவேண்டுமென்றும் தீர்மானிக் கின்றான் ஜனக ராஜன். அம் முடிவின் பிரகாரம், அவன் சாவித் திரி வீட்டுக்குச் செல்வதில்லை. ஆனால் ஆண்டாளம்மாள் மாத்திரம் சிற்சில சமயம் சென்றாள். அப்படி சென்று கொண்டிருக்கையில், இரத்தினசாமி பரிணியின் மூர்க்கத்தினால் என்னவோ சில காரணங்களோ முன்னிட்டு அவளுக்கும் ஆண்டா ளம்மாளுக்கும் மனஸ்தாபம் விளைந்துவிட்டது. ஆகையால் சற் புத்திரன் தாயும் சாவித்திரியைக் காண்பதில்லை.

அத்தியாயம் 8.

ஆசிரியனுரை:—இது கேள்வியோர் கை யாகையால், கதா நாயகன் உரையால் சாங்கோபாங்கமாகக் கூறப்பெற்றுள்ள பல விஷயங்களை நமது சிற்றுரையில் சிறுசிறு தொடர்மொழிகளாக நறுக்கிச் சுருக்கி எழுதி முக்கிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஜனக ராஜன் வரைந்துள்ள அவனது சொந்த வாக்கையே கரு வோமாக.

ஜனகன் தங்கை காந்திமதிக்கு விவாகம் — அவர்களுக்குச் சற்று நெருங்கிய உறவினனாகிய ஜீவரத்தினம் அப் பெண்ணை மணந்தான் — ஜீவரத்தினம் நல்ல அழகன் — அங்கங்களில்

லாம் தக்க அளவின்படி திரண்டமையப் பெற்றவன் — நல்ல ஆண் உடைகளில் விசேஷ பிரியம் வைத்துள்ளவன் — யாரிட்டத் திலும் தருக்காகப் பேசுந் திறமையுடையவன் — ஆனால் அவ னுக்கு அதிக கல்வியில்லை — அன்றியும் காமி—சூதாட்டத்தில் தேர்ச்சி யுடையவன் — விவாக காலத்தில் அவனுக்குத் தாய் தந்தையர்களில்லை—காந்திமதியை இவனுக்கு மணஞ்செய்ய அவ ளது பாட்டனர் நிச்சயித்தார்—அதற்கு ஜனகன் சம்மதிக்கவில்லை —நந்தகோபாலருக்கும் சற்றுச் சம்மதமில்லை—ஆனால் காந்தி மதியை, அவளது தந்தை அவள் தாயின் வாய்கொண்டு கேட்க, காந்திமதி சம்மதித்தாள் — ஆகையால் பெண்ணின் பெற்றோர் களும் சம்மதித்தார்கள்—பாட்டனர்தான் முன்னமே சம்மதித் திருக்கிறார் — ஆகையால் மணம் நிகழ்ந்துவிட்டது — ஜனக ராஜனது தந்தையின் மரணம் — குடும்பச் சொத்துக்களையும் கடன்களையும் சார்ந்த பெருஞ் சிக்கலான விவகாரங்கள் —குழப்பங்கள்—வர்த்தக நஷ்டங்கள் — இவைகளினால் நந்த கோபாலர் உழன்று, கடைசியில் ஒன்றும் ஒழுங்குசெய்யப் பெறாமல் அவரும் காலஞ்சென்றார்—ஜனகராஜன் தலையில் சகல பாரங்களும் வீழ்ந்தன—ஜீவரத்தினம், சுகபுருஷனாக, யாதொரு தொழிலுமின்றி, தனக்கு விவாகமாயினது முதல் தன் மனைவியின் வீட்டிலேயே வசித்திருத்தல்—அவனுக்கு இரண்டு குழந்தைகள் பிறத்தல் — ஜனகன் கடுஞ் சிரமங்களுக் குட்பட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்காக ஆஸ்திகள் எல்லாவற்றையும் இழந்துவிட, கடைசி யாக வசிக்கிற வீடும் சில பொறுமைசாலிகளுக்குச் சொற்ப கடனுமே அவனது பிதுரார்ஜிதமாக மிஞ்சின — வறுமையின் கொடிய சோதனைகள் — ஜீவரத்தினத்தால் வீட்டில் குழப்பங் கள்—காந்திமதி அவன் கையிற் பட்ட கஷ்டங்கள் — ஜனகன் வர்த்தகத்திற்கு யாதொரு முதலு மில்லாமையால் வேறு உத்தி யோகத்திற்காகப் புரியும் பெரும் பிரயத்தனங்கள் பலிதம் பெற வில்லை—கடைசியாக, சாவித்திரி வீட்டுக்கு அவன் கடைசி முறை சென்ற சுமார் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு நாகபுரம் என்ற நகரில் ஒரு வர்த்தகசாலையில் மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் அவனுக்கு உத்தியோகம் கிடைத்தது —

தன் அம்மாளைப் பிரியாமற் பிரிந்து அவன் நாகபுரம் புறப்பட்டான் — மறுநாட் காலை அவன் விலாசத்திற்கு ஒரு கடிதம் — அக் கடிதத்தை ஆண்டாளம்மாள் பிரித்து வாசித்தாள் — அதை எழுதினவள் யார் — சாவித்திரி.

அத்தியாயம் 9.

கதாகாயகனுரை.

அக் கடிதத்தில் அடங்கிய விஷயமாவது :—

"ஸ்ரீசரஸ்வதி சகாயம்.

நமஸ்காரம். நீங்கள் மிகுந்த அன்பாக்க புத்திமதியும் ஆதரக்கடையாளமான மோதிரமும் பத்திரமா யிருக்கின்றன. அதன்பிரகாரம் இத்தனைநாள் பொறுமையாகத்தா னிருந்தேன். ஆனால், என்னால் சகிக்கக்கூடவில்லை. என் பீஸையே போய் விட்டது. பைத்தியம் கொண்டவளைப்போ லிருக்கின்றேன். இனி என்னாற் பொறுக்கமுடியாது. நான் குறிப்பிட்ட இடத்திற்குப் போகத்தான் வேண்டும். ஆகையால், தயைகூர்ந்து அதன் விவரத்தைத் தெரியியுங்கள். தாமதம் வேண்டாம். பெரிய சுகிர்த்தைக் கட்டிக்கொள்ளுவீர்கள். வழக்கம்போல் மாடத்தைப் பார்த்துவருகின்றேன். நான் வருந்தாமல் தயை செய்வீர்களாக.

சாவித்திரி."

நேயர்களே! இக் கடிதத்தைப்பற்றியும், என்னைப்பற்றியும், சாவித்திரியைப்பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஆனால், ஒரு விஷயம் முன்னமே கூற மறந்துவிட்டேன். அதையுந் தெரிந்துகொண்டு என்னவேனும் எண்ணிக்கொள்ளுங்கள். நான் நாலைந்து வருஷங்களாகப் பொன் மோதிரமொன்று அணிந்திருந்தேன். என் தங்கை பெயர், என் பெயர் இவற்றின் முதலெழுத்துக்களாகிய ந, ஜ, என்ற அட்சரங்கள் ஒன்றின்மேலொன்று அழகாக அமைக்கப்பெற்ற முகப்புள்ளது. அந்த மோதிரத்தைச் சாவித்திரி நன்றாய் அறிவாள். அந்த அழகிய மோதிரம் மாயமாய் என் கையிலிருந்து காணாமற்போய்விட்டது

முன் காட்டிய கடிதம் தோன்றியதற்குச் சுமார் எப்பொழுதிற்கு முன்புதான். அது காணாமற்போனதுகூட ஒரு மாதத்தாள் சொல்லத்தான் எனக்குத் தெரியும். திடீரென என் அம்மாள் "என்ன ஜனகம்! உன் மோதிரத்தை எங்கே ஒரு நாள் மா" என்றாள். கையைப் பார்த்தேன். விரலில் மோதிர காணோம்" "எங்கெங்கேயோ தேடிப்பார்த்தோம். அகப்படவில்லை. அன்றைக்கு எழெட்டுத் தினங்களுக்கு முன்பு நான் கடலில் நீராடச் சென்றிருந்தேன். ஆகையால் அந்த ஆழிதான் என் அழகிய ஆழியை அபகரித்துக்கொண்டதென ஒருவாறு நிச்சயித்தோம். ஆனால், கடல்நீராடி மீண்ட பின்னரும் மோதிரம் விரலிற் கிடந்ததென எனக்குள் ஒரு மயங்கிய நினைவு இருந்தது. எது எப்படி யிருந்தாலும் மோதிரம் மறைந்தது மறைந்ததுதானே.

என் அம்மாள் கடிதத்தை வாசித்தாள். சாவித்திரியின் எழுத்து அவளுக்குத் தெரியும். கடிதத்தை உற்றுற்றுப்பார்த்தாள். திரும்பத் திரும்ப வாசித்தாள். அது சாவித்திரி தன் சொந்தக் கையால் எழுதிய கடிதமே எனக் கண்டாள். அவள் நெஞ்சம் எப்படி எரிந்ததோ! "அடி காந்திமதி! உன் அண்ணன் செய்திருக்கும் வேலையைப் பார்த்தாயா!" என்று அலறி அழுது தொங்கினாள். காந்திமதி வந்தாள். கடிதத்தையும் பார்த்தாள். என் அம்மாள் நெஞ்சில் எரிகிற நெருப்புக்கு நெய் வார்க்க மற்றொரு புண்ணியவதியும் தோன்றிவிட்டாள். அவள்தான் எங்கள் வீட்டுக்கு மூன்றுவது வீட்டுப் பரிபூரணத்தம்மாள்.

"ஐயோ! கேட்டீர்களா அம்மா செய்தி! ஐயோ அம்மா! இவள் இப்படிச் செய்வாளென்று யார் நினைப்பார்கள்! ஐயோ! கலிகாலமென்றால் கலிகாலந்தான். ஐயோ! இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்றிருந்தாளே. என்ன துணிவோ! ஐயோ! என்ன அநியாய மம்மா! ஐயோ! ஐயோ!—" என்று ஓர்விதமான இராகத்தோடு மூக்குமேல் கைவைத்தும், கைகளை விரித்தும், கண்களைச் சுழற்றியும் 'ஐயோ' பல்லவி பாடினாள் பரிபூரணத்தம்மாள்.

"என்ன அம்மா! என்ன! சங்கதியைச் சொல்லுங்கள்" என்றாள் என் தங்கை.

"சாவித்திரி யிருக்கிறாளல்லவா?" என்றாள் பரிபூரணம்.

"ம்ம்ம்? யார்?" என்றாள் காந்திமதி.

"சாவித்திரி, சாவித்திரி, உங்கள் சாவித்திரிதான். திருப்பதிக் காவிகட்டிக் கட்டங்குளத்த சாவித்திரி."

"ஆமாம் அவளுக்கென்ன?"

"என்னவென்று கேட்கிறாய்! மிட்டைவிட்டு ஓடிப்போய் விட்டாள் நேற்றிராத்திரி."

"ஹாக்!" என்று அலறினாள் காந்திமதி. அந்த நேரத்தில், "நேற்று இராத்திரியா! ஜனகமும் நேற்றிராத்திரி ரெயிலில்தானே போனான். ஆமாமம்மா, கலி அதியாயமாய் முற்றி விட்டது. ஜனகனே! சாவித்திரிபா! ஆ! தெய்வமே! இவர்களும் இப்படிச் செய்வார்களா! ஜனகம்! இதற்குத்தானா உன்னை இவ்வளவு காலம் இவ்வளவு பிரியமாக, இவ்வளவு அருமையாக வளர்த்தேன்! மோதிரத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டு ஒன்றும் அறியாதவன்போல் என்முன் நடிக்காயே. அரைகள் தானைசாலிகள்போல் மோதிரம் மாற்றிக்கொண்டீர்களோ! இத்தனைநாள் இவ்வூரில் உனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை யென்றும், காகபுரத்தில்தான் உனக்கு வேலை யமர்ந்தது என்றும் நீ சொன்னது பாசாங்குதானே! ஐயோ! நான் உன் தகப்பனை யிழந்து செல்வ மிழந்து எல்லா மிழந்து சிரமப்பட்டேன். ஆனால், நீ என் சாபத்தின், உலகில் ஒருவரும் அடையாத அவ்வளவு உத்தமமான என் சாபத்தின், இந்தச் சாபத்தின் தான் என் நிறைந்த செல்வம் என்று மகிழ்ந்திருந்தேனே. ஐயோ மகனே! நீயா சாபத்தின்! சாத்தமும் சாபமும் அவதாரஞ்செய்ததுபோல் வெளிக்குத் தோற்றினாயே. என் வயிற்றில் இப்படித் தீயைக் கொட்டுவாயென்று கனவிற்கூட நினைத்தேனே! அட பாவி! இருந்திருந்து கைம்பெண் பாவத்தையா கொட்டிக்கொண்டாய்! கலியாணமாகாதவேலை எந்தப் பெண்ணாயிருந்தாலும் ஒரு மாதிரி ஆறிவிடுவேன். ஐயோ! நினைக்க நினைக்க நெஞ்சு குமுறுகிறதே. இதற்குத்தானா நம்து கௌரவமான வம்சத்தில் நீ உதித்தாய்!—" என்றவாறு பிதற்றித்

கொண்டு குப்புறப்படுத்துக் கண்ணீர் சிந்தி அங்கலாய்த்தனள் என் அம்மாள். காந்திமதியோ "சும்மா இரு அம்மா! சும்மாவிரு. எல்லாம் நீர விசாரிப்போம். பொறு பொறு." என்று தன் அம்மாளைத் தேற்றிக்கொண்டே தானும் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தாள். சாவித்திரி எழுதின அந்தப் பொல்லாத கடிதம் கீழே கிடந்தது. பரிபூரணத்தம்மாள் அதைக் கையில் எடுத்துப் பார்க்கலாயினள். — "இங்கே கொடுங்கள் அதை" என்று காந்திமதி சீறி அதைப் பற்றிப் பிடுங்கப்போனாள். வெறிகொண்ட வகீரப்போலிருந்த என் அம்மாள், "இது என்ன மதியடி காந்திமதி! பார்த்தால் பார்க்கட்டுமே. எப்படியும் எல்லாம் பட்டப் பகலாய்விடும். தூரம்றத்தை எவ்வளவு மூடிப் பொதிந்து வைத்தாலும் அது வெளிப்படாமலிருக்குமா?" என்று என் தங்கையைத் தடுத்துவிட்டாள். பரிபூரணத்தம்மாளும் படித்து முடித்துவிட்டாள். மீண்டும் கடிதம் கீழே கிடந்தது.

"ஐயோ! என்ன துணிவம்மா பெண்ணுப்பிறந்தவளுக்கு! நாமெல்லாங்கூடத்தான் படித்திருக்கிறோம். பெற்ற மாதாவுக்கு, அல்லது பிதாவுக்கு, அல்லது சகோதரனுக்கு யோக க்ஷேமங் கோரப்பற்றி ஒரு எழுத்து நிழுதுவதற்குக்கூட இந்தக் கை கூசி நடுங்குகிறது. இந்த பாதிரி எழுதியிருக்கிறாளே. மோதிரம் பத்திரமாய் இருக்கிறதாம். வெறிகொண்டவளாயிருக்கிறாளாம். அவளால் பொறுக்க முடியாதாம். எங்கேயோ போகத்தான் வேண்டுமாம். என்னத்தைப் பொறுக்கமுடியவில்லையோ! என்ன வெறிகொண்டிருக்கிறாளோ! சித்தசாங்சி!—எனம்மா! "சுகிர்தத்தைக் கட்டிக்கொள்ளுங்கள். வழக்கம்போல் மாடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று எழுதியிருக்கிறாளே, அது என்ன அர்த்தம்?" என்று பரிபூரணம் என் தாய்முகம் பார்த்தாள்.

"அது என்ன பாழாய்ப்போன மாடமோ! என்ன தரித்திரவழக்கமோ!" என்ற உத்தாத்துடன் ஏங்கிக் கோவென அழுதாள் என் அம்மாள்.

"ஏங்கள் எனம்மா அழுகிறீர்கள்! சற்புத்திரனென்றால் அவர்தான் சற்புத்திரன். அவர் என்ன செய்தார் பாவம்!

அவரை நொந்துகொள்ளாதேயுங்கள். அக்கிரமங்களுக்கெல்லாம் பெண்தான் இராணி. வரி நிறுத்திக் கவர்ச்செய்த பெரிய ஞானி விசுவாமித்திரரையே வசிஷ்டர் மயக்கிவிட்டாள். ஒரு கபடமு மறியாத உங்கள் பிள்ளை என்ன செய்வார்! எல்லாம் தர்ம லீலிப்பென்ன செய்தலேயே. ஆனால், அவளைப்பற்றியும் அதிகமாய்க் குறைகூறக் கூடாது. அவள் தாயார் அப்படி அவளை வளர்த்துவிட்டாள். பார்த்தாலவத் நின்ற பாதகிக்குப் படிபென்ன பாட்டென்ன சங்கீதமென்ன வீணையென்ன! தாளியற்றவருக்குத் தையலென்ன பின்னலென்ன தித்திமென்ன! கொண்ட புருஷனைக் குறுனி நாளில் குழுக்கென்று விழுங்கின வருக்குப் புக்குபப் பொட்டென்ன மஞ்சளென்ன குறுக்கென்ன மினுக்கென்ன!" என்றுள் பரிபூரணம்.

"இல்லேயப்பா. அவள் மஞ்சளைக் கொடவேயாட்டாளே. இல்லாததை ஏன் சொல்லவேண்டும்" என்றுள் காஞ்சிமதி.

"மஞ்சள் பூசிக்கொள்ளமாட்டாளோ! ஓ! எனக்குத் தெரியாதம்மா! ஆனால் மஞ்சள் ஏன் பூசிக்கொள்ளமாட்டாள் தெரியுமா? புருஷனுக்கு ஆயுளை வைத்தெள்ளு கினைக்கிறாய்! இல்லே யில்லேயில்லே யில்லேயில்லே. மஞ்சள் மினுக்கு கர்காடகமினுக்கு என்று விட்டெறிட்டாள். ஆதற்குப் பதிலாக, புடவை மினுக்கு, நாகரிக மினுக்குக்கு ஒக்க ஒரு கலருக்கு மாவு இருக்கிறதே, ஒரு கண்ணைம்புக்தான், அதைப் பூசிக்கொள்ளவாள்போலும்" என்று பரிபூரணம் பேச்சைக் காஞ்சிமதி வாக்கை அடக்கிவிட்டு, சற்றுநேரத்தில் விடைபெற்றுக்கொண்டு வெளிச் சென்றுள்.

சாளிக்கிரி வீட்டைவிட்டகன்று செய்தியைப்பற்றி முன்னமே ஊர்முழுவும் பேச்சு. ஆனால் வன் போனுள், எப்படிப் போனுள், எங்கே போனுள் என்ற விஷயம் தெரியாது. அதை வைத்துப் பலர் கதை கற்பித்துக்கொண்டிருந்தார்கள். அப் பொழுது, வரி நிறுத்திக் கவர்செய்த விசுவாமித்திரரை வசிஷ்டர் மயக்கின புராணத்தை அறிந்து சொல்லுவதுபோல், பரிபூரணத்தம்மாள் தான் ஆண்டாளம்மாள் வீட்டுக்குச் சென்று அறிந்த அருமையான இரகசியங்களைத் தன் புத்தி பூர்வத்தையும், வாக்குச் சாதுரியத்தினாலும் அலங்கரித்து, இவ் விஷய

சம்பந்தமான உண்மை யறிய ஆத்திரங்கொண்டு அவதிப்படுகிற வர்கள் ஐயங்களை பெல்லாம் பரிபூரணமாக நிவர்த்தித்து, ஜனகராஜன், சாளிக்கிரியை இழுத்துக்கொண்டு ஓடிய உண்மையைப் பூரணமாக்கிவிட்டாள்.

ஜீவரத்தினம் வீட்டுக்கு வந்தான். சகல சங்கதிகளும் அறிந்தான். "ஆஹா! அவளாகத்தா னிருக்கவேண்டும்; அவ ளாகத்தா னிருக்கவேண்டும்" என்று துள்ளித் தன் மீசையை முறுக்கினான். "எவள்? எவள்? என்ன விஷயம்?" என்று கேட்டாள் காஞ்சிமதி. "நேற்று அவரை அனுப்ப செயிலுக்குப் போயிருந்தேனல்லவா? அப்போது அவரிருந்த வண்டிக்குப் பக்கத்து வண்டியில் அவரிருந்த ஜன்னலுக்குப் பக்கத்து ஜன்னற் புறத்தில் அதி பால்யமான பெண்ணொருத்தி தன் புடைவையால் தலையில் முக்காடிட்டுக்கொண்டு வெகு கம்பீரமாய் உட்கார்ந் திருந்தாள். பதினெட்டு இருபது வயது இருக்கலாம். வேசியோ அல்லது என்னவேனும் நாடகக்கூட்டத்தைச் சேர்ந்தவளோ என்று நினைத்தேன். அனல், அவள் முக்காடுதான் ஆச்சரிய மாயிருந்தது. சற்றுநேரம் அவளையே உற்றுப் பார்த்தேன். உடனே எழுந்து எதிர் ஜன்னலுக்குப் போய்விட்டாள்" என்றுன் என் அருமை மைத்துனன்.

இந்தப் புதிய சமாசாரம் என் அம்மாள் அகத்திற்கு எவ் வளவு குளிர்ச்சியையும் அமைதியையும் அளித்திருக்கும்! அன்று மூழுதும் அவள் உணவு உட்கொள்ளவில்லே. ஆகையால், காஞ்சிமதியும் உபவாசமிருந்தாள். இரண்டு குழந்தைகளுக்குக் கூடச் சரியாகக் கவனிப்பாரின்றிச் சரியான உணவு கிடையாது, ஜீவரத்தினம் மாத்திரம் வழக்கம்போல் சுகமாக உண்டு சுகமாக இருந்தான்.

அத்தியாயம் 10.

ஆசிரியனுரை:—ஜனகராஜன் செயில் யாத்திரை — அவனது சொந்த ஊரிலேயே, அவன் ஏறியிருந்த செயில்வண்டி யறையில் ஒரு செட்டியார் தனது மனைவி இரண்டு குழந்தைகள் சகிதம் வந்தேறியது. செட்டியார் பெஜவாடாவுக்குத் தன்

ராஜரைர் வீட்டுக்குச் செல்லுகிறார் — அவரோடு சாது கதா நாயகன் உரையாடல் — உல்லாசமான பிரயாணம். செல்லும் வழியில் செட்டியாரும் ஜனகராஜனும் வேறு வெயிலில் வருகிறது — பகல் வெயில்வேளை சார்ந்து இவர்கள் ஒவ்வொருவரையும் பல கேள்விகள் கேட்டல். கடைசியாக ஜனகராஜன் நாகபுரம் சேர்ந்தமை — தனக்கு உத்தியோகம் அளித்த ஐசோப்பிய மர்க்கண்டிய நிலையைக் காணச்சென்றமை.

கதாநாயகனுரை:— "நீர்தானே ஜனகராஜன்?" என்றார் அவரை. "ஆமாம் நான்தான்" என்றேன் "எங்கே! நான்கள் உமக்கு அனுப்பிய உத்தரவைக் காட்டும்" என்றார். சட்டைப் பையிலிருந்து அதைச் சட்டென எடுத்துக் கொடுத்தேன். அதைச் சற்றுப் புன்னகையோடு "சரி உம்மோடு கூடவந்த ஆள் எங்கே?" என்றார். "கூடவந்த ஆளா! யார்? என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கொன்றும் தெரியாதே. தயவுசெய்து தெளிவாகச் சொல்லுங்கள்" என்று அங்கில வார்த்தையை கேட்டுத் திகைத்து நின்றேன். "பரவாயில்லை, சற்றுப் பொறுமையோடு கின்றுகொண்டிரும்" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டுப் பேச்சுக் குரல் வந்திருக்கும் டெலிபோனண்டை சென்றார் அவர். மணியடித்தார். "ஹல்லோ! ஹல்லோ! போலீஸ்ஸ்டேஷன்" என்று கூவினார். உத்தரமாக மணியடித்தது. "ஹல்லோ யார் நீ!" என்று அவர் குரல் கூவினார். பதில் என்ன வந்ததோ! எனக்கு எப்படித் தெரியும்! "நீன் அகப்பட்டுவிட்டாய். உடனே புறப்பட்டு வாருங்கள்" என்று சொல்லி மணியடித்துவிட்டு நின்றபடி தன் முனகத்துக்கு வந்துவிட்டார். நான் இவைகளின் அர்த்தம் சிறிதும் அறிந்துகொள்ள இயலாமல் நின்றுகொண்டே இருந்தேன். "நீர் என்ன பரீட்சைகளில் தேறியிருக்கிறீர்? உமது வயதென்ன? உமது தகப்பனாருக்கு என்ன தொழில்?" என்ற வார்த்தை என்னை நோக்கிப் பலவித கேள்விகளாகக் கேட்டார் அவர். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்பொழுதே காற்சட்டை கைச் சட்டை சிவப்புத் தலைக்குட்டை தரித்த ஒரு உயரமான புருஷர் திடீரென எங்கள் முன்பு தோன்ற, அவர் எழுந்து அவருக்குக் கைகளாருகொடுத்து ஒரு நாற்காலியில் வீற்றிருக்கச் செய்து

தாமும் அமர்ந்தனர். புதிதாய் வந்தவர் என்னை உச்சிமுதல் உள்ளங்கால்வரை, இரண்டு மூன்று முறை அண்ணாந்து குனிந்து நோக்கினார். பின்பு, "அவள் எங்கேயிருக்கிறாள்? உண்மையைச் சொல்லும்" என்று ஒரு கொடிய பார்வை பார்த்துக் கூவினார். எனக்கும் வியப்பும் கலந்து என் முகத்தின் நிறத்தையே மாற்றின. "யார்? எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே" என்றேன். "ஒன்றுந் தெரியவில்லையா! சரி, எல்லாந் தெரிவிக்கிறேன்" என்று தன் சட்டைக் கழுத்துக்கொண்டி தன் பாதரட்சையைக் காலால் பூமியை உதைத்து 'ஹேய்' என்று கூவினார். ஒரு போலீஸ் சேவகன் நுழைந்தான். நாகபுரத்தில் வழங்கும் சுதேச பாஷையில் என்னவோ சொல்லிப் பின்பு அந்தச் சிவப்புத்தலைக்குட்டை தரித்தவர் என்னை நோக்கி, "நான் யாரென்று உமக்குத் தெரியுமென்று நினைக்கிறேன், இருந்தாலும் சொல்லுகிறேன். நான் போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டர், நீர் இந்தச் சேவகனோடு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போம்" என்றார். இச் சமயம் எனக்குக் கோபம் பொங்கிவிட்டது. "நானு! போலீஸ் ஸ்டேஷனுக்கா! வன்! காரணத்தைச் சொல்லுங்கள். (துரையை நோக்கி) ஐயா! நீங்களே பாருங்கள், இது என்ன விந்தை! என்ன அக்கிரமம்!" என்று ஆத்திரத்தோடு கூறினேன். "நீர் போகிறீரா? அல்லது இழுத்துக்கொண்டுபோகச் செய்யட்டுமா!" என்றார். "காரணத்தைமாத்திரம் சொல்லுங்கள்" என்று பிடிவாதஞ்செய்தேன். இன்ஸ்பெக்டர் சேவகனுக்குக் கண்ணால் சமிக்ஞை செய்தார். அவன், தூண்டில்முள் இரையைக் கவ்விய மீன் இழுப்பதுபோல என் கையைப் பற்றி ஒரு இழுப்பு இழுத்தான். இனித் தடுப்பது உசிதமல்ல வென்றெண்ணி, "ஆனால், என் பெட்டி! என் பெட்டி!" என்றேன். "பெட்டி வரும், போ" என்று சினந்து அதட்டினார் இன்ஸ்பெக்டர். துரை சிரித்தார்.

சேவகனும் நானும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தோம். என் மண்டைமுழுவதும் எரிந்தெரிந்து சுழன்றது. போலீஸ் சேவகனோடு பேசி, என்னை ஸ்டேஷனுக்குக் கொணர்ந்த காரணத்தை அறிந்துகொள்ள ஆவல்கொண்டேன். ஆனால் எனக்கு அவ் வூர்ப் பாஷை தெரியவில்லை. அவனுக்கு ஆங்கிலம் தெரியவில்லை. என் மூளையையே ஆயிரம் கேள்விகள் கேட்டு அது

பதினுயிரம் விதமான உத்தரங்கள் கூற உழுதிக்கடலில் உரு
டேன். கடைசியாக நெடுநேரம் கழித்து என் கணவர் இ
பெக்டர் வந்தார். என் பெட்டியையும் ஒருவன் கொண்
வைத்தான். இன்ஸ்பெக்டர் என்னை நோக்கிச் சாந்தமாகப்
பேசலானார்.

"இங்கே பாரும் மிஸ்டர் ஜனகராஜ்! நீர் இனித் தப்புவித்
துக்கொள்ளமுடியாது. அவளை எங்கேவிட்டுவந்தீர் என்பதைச்
சொல்லிவிடும். நகைகள் எங்கே? பணத்தில் எவ்வளவு செலவு
செய்தீர்? எல்லாவற்றையும் உண்மையாகச் சொல்லிவிடும். இல்லாவிட்டால் உம்மை நிர்ப்பந்தப்படுத்தி உண்மையைப் பேசும்
படி செய்வோம்."

"ஐயா! என்னை நிர்ப்பந்திக்காதீர்கள். பொறுமையாக
விசாரியுங்கள். நான் என்னவோ குற்றஞ்செய்திருப்பதாகக்
கருதி என்னை இங்கே கொணர்ந்திருக்கிறீர்களென்று நினைக்
கிறேன். நான் இருப்பது ஷண்முகபுரி. நீங்கள் என்னை
சந்தித்த வர்த்தக சாலைத் தலைவர் எனக்கு ஒரு உத்தியோகம்
கொடுத்தார். அதைப்பெற இங்கே வந்தேன். மேலதிகாரியும்
எனக்குத் தெரியாது. நீங்கள் என்னை எப்படி நிர்ப்பந்தித்
தாலும் இதுதான் உண்மை" என்றேன். "உமது பெட்டிச்
சாவியைக் கொடும்" என்று அவர் அதட்டவே, சட்டைப்பை
யிலிருந்து அதை எடுத்துக் கொடுத்தேன். இன்ஸ்பெக்டர் பெட்
டியைத் திறந்து அதிலிருந்தவற்றையெல்லாம் மிகக் கவனமாகப்
பரிசோதித்தார். சில ஸ்திரீகளது புத்திரிகைகள், படங்கள்,
கள், கடிதங்கள், சொற்ப சொக்கம் இவற்றைத் தவிர அதில்
வேறொன்றும் காணப்படவில்லை.

"நீர் வெகு சாமர்த்தியசாலி! பெட்டியிலும் ஒரு அணு
வளவு துப்புக்கூடக் காணோம். இனி, சாவித்திரி என்ற பெயர்
கூட உமக்கு மிகப் பாலஷபாயிருக்கிறது என்று சத்தியஞ் செய்
யிர்போதும்."

நான் காதைத் தீட்டிக்கொண்டு என் நெஞ்சிற் சுமக்கையைப் பாய்ச்
தன இம் மொழிகள். இது வரையில் அத்தனை பயங்கரமான
னர்ச்சியும் மற்றிருந்தது. என்ன சித்திரம்! நான் பலபல

ண்ணங்கள், பலபல சலனங்கள், அடுக்கடுக்காக, மிகக் கசப்
பாக, அதி வெப்பமாக, கடல் நீர்த்திரைபோல் சுருண்டு சுருண்டு
போயின. இப்பொழுது இதயமும் புண்ணாக நொந்தது.

"சாவித்திரியா! என்ன! சாவித்திரியா! சாவித்திரிக்
கென்ன! சொல்லுங்களேன்யா, தயைசெய்து சொல்லுங்கள். சாவித்
திரிக்கென்ன!—அவளைக் காணோமா!—ஓ! அவளை நான் அழைத்
துக்கொண்டு வந்துவிட்டேனென்று என்னைப் பிடித்துவந்திருக்
கிறீர்கள்? (இச்சமயம் என்னைமீறிப் புன்னகையும் என் இதழ்
களைப் பீறிற்று.) ஐயா! உங்களுக்கு ஆயிரம் வந்தனம். என்னை
எப்படி வேண்டுமென்றாலும் நிர்ப்பந்தியுங்கள். சித்திரவதை
செய்யுங்கள். சாவித்திரிக்கென்ன! விவரத்தையெல்லாம் சொல்
லுங்கள்" என்று ஒரே மூச்சாக வார்த்தைகளைச் சிதறிக் கெஞ்சி
னேன்.

என் பேச்சின் தன்மை, நான் நின்ற தோற்றம், என் முகத்
தில் மாற்றம் இவைகளைக் கூர்ந்து கவனித்து இன்ஸ்பெக்டர்
மௌனமாய் நின்றார். "ஐயோ! ஒன்றுஞ் சொல்லமாட்டீர்களா?
இவ்வளவுதானு நீங்கள் என்னிடம் வைத்த இரக்கம்! சரி, இனி
என்னை என்னசெய்யப்போகிறீர்கள். என்! கைதுசெய்து இன்
றைக்கே என்னை ஷண்முகபுரிக்கு அனுப்புங்கள். அங்கே
போயாவது நான் சாவித்திரியின் கதியை அறிந்துகொள்ளு
கிறேன். சீக்கிரம் அனுப்புங்கள்" என்று சற்றுச் சீறிக் கூறி
னேன்.

அப்பால் இன்ஸ்பெக்டர் என்னை ஒரு விசிப்பலகைமீது ஊட்
காரும்படி பணித்துத் தாமும் ஒரு நாற்காலியிலமர்ந்தார். சாவித்
திரியைப்பற்றி நான் அறிந்துள்ளவற்றை யெல்லாம் சொல்லும்
படி கட்டளையிட்டார். சாவித்திரியின் பெற்றோர்களுக்கும் என்
பெற்றோர்களுக்கும் நட்பு என்று தொடங்கி, சாவித்திரியின்
திருப்பதிக் கலியாணம், காலியறுத்த கலியாணம், அவள்
மாமன், அவன் குணம், சாவித்திரியின் தந்தையின் மரணம்,
தாயின் மரணம், அவள் மாமனுக்கும் எனக்கும் விளைந்த மனஸ்
தாபம், இரண்டு வருடங்களுக்கு அதிகமாக நான் அவள்
வீட்டுக்குச் செல்லாதிருப்பது முதலிய எல்லாவற்றையும் கூடிய

வரையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறினேன். இவற்றைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டபின்னர் இன்ஸ்பெக்டர் எழுந்தார். நான் போலீஸ் காவலில் இருக்கவேண்டுமென்று விதித்துவிட்டு வேறொன்றும் சொல்லாமல் வெளியே அகன்றனர்.

(தொடரும்.)

ஓர் ஆப்கன்.

சாகரிகம்.

306-ம் பக்கத் தொடர்ச்சி.

சினிவாசன்:—சுக்தரம்! நீ சொல்வது சரி. ஒரு தேசம் நாகரீகத்தில் சிறந்ததென்று சொல்வதற்கு என்னென்ன அங்கங்கள் வேண்டுமென்று யோசித்தாயா? ஒரு அங்கத்தில் மாத்திரம் குறைவின்றி யிருந்தால் போதுமா? நமது தேசம் மத உயர்வுடையதானாலும் இன்னும் மற்ற அங்கங்களைனக் கருதப்படுகின்றது பெண்களின் உடை உடை பாவனைகள், கல்வி இவற்றைக் கருதினாயா? கைத்தொழில் செல்வம் முதலியனவும் குன்றியிருக்கறது. பின்பு பல காரணங்களால் அவை போயினவென்று சொன்னாய். அது ஒப்புக்கொள்ளற்பாலதே. கல்வியிற் சிறந்த பெண்கள் சிகாமணிகளான ஔவை, உப்பை, உறுவை முதலிய பெண்கள் உற்பத்தியானதும், வீர சிகாமணிகளான பத்மினி, ஸம்யுக்தா தேவி முதலியவர்கள் தங்கள் பெருமையை நிலைநாட்டியதனால், சுற்றுக்காரிகளாயிருந்த காளாயினி, அருந்ததி முதலிய பதிவிரதா சிரோன்மணிகளோ யடையப் பாக்கியம் பெற்றதுமான நம் நாட்டின் பெண்கள் நிலைமைதா னென்ன? ஆங்கில ஸ்திரீகளைப்போல் சுதந்தரமின்றி, கல்வியின்றி அடிப்படுகளை கவரத்தினங்களாகவும், சிறைப்பட்ட பெண்சிங்கங்கள்போலவு முள்ள நம் நாட்டின் பெண்களின் நிலைமையை நோக்கினால் நமது நாகரீகம் தாழ்ந்தது எனப் புலப்படும்.

சுக்தரம்:— நம் நாட்டின் ஸ்திரீகளின் நிலைமையைப் பற்றிச் சற்று ஆராய்வாம். அவர்கள் கல்வியைப்பற்றி நோக்குமிடத்து, பெரும்பாலார் கல்வி அறிவென்பதே இல்லாதிருப்பது

விசனிக்கத்தக்கதே. மாணிக்கம் முதலிய நவரத்னங்களைச் சாணையில் வைத்துத் தீட்டியவுடன் அதன் பிரகாசம் அதிகரிக்கின்றது. பின் அவைகளைத் தங்கத்தில் வைத்துச் சேர்த்துக் கட்டியவுடன் அதனொளி இன்னும் அதிகரிக்கின்றது. ஆகலின் இயற்கை யறிவுடன் கல்வியறிவும் நம் நாட்டுப்பெண்களுக்கு ஊட்டப்பெறின் அவர்கள் உலகத்திலுள்ள எல்லா ஸ்திரீகளைக் காட்டிலும் உயர்ந்து விளங்குவார்கள். பெண்கள் கல்வியில் தேர்ச்சியடைவதற்குக் கலாசாலையில் உயர்ந்த பட்டம் பெற வேண்டியதில்லை. கலாசாலையில் பட்டம் பெறுவது சர்க்கார் உத்தியோகம் பார்ப்பதற் கன்றி வேறெவ்வகையிலும் முக்கிய பிரயோஜனம் சரக்கூடியதல்ல. ஷேக்ஸ்பியர் மகாகவி எவ்விதப் பட்டம் பெற்றவரு மன்று. ஆடவர்களுக்கே அவசியம் வேண்டாத கலாசாலைப்பட்டம் பெண்களுக் கவசியமானதல்ல. அவர்களுக்கு குடித்தனப்பாங்கு, மதாபிமானம், தேசாபிமானம், ராஜாபிமானம் முதலியவைகளைப் புகட்டக்கூடிய கல்வியாயிருக்க வேண்டும். ஆங்கில பாஷையில் கொஞ்சம் தேர்ச்சியிருந்தாலும் பாதகமில்லை. நமது கல்விக ளளுஞ்சியமாகிய ஔவையார் எம். ஏ. எல். டி. முதலிய பரீக்ஷையில் தேர்ந்தவரல்ல. ஆனால் அவர்களைக் கல்வியில் தேர்ச்சியுறும்படி செய்ய முருகக்கடவுளே வந்து சேரும்படி நேர்ந்தது. ஆதலால் உயர்தரக் கல்வி அவசியமின்று. ஆங்கில ஸ்திரீகளிலும் உயர்தரப் பரீக்ஷையில் தேர்ந்தவர் சிலரே. அவர்களும், தேசாபிமானம், மதாபிமானம் புகட்டக்கூடிய கல்வியே படித்து வருகின்றார்கள். அக்கல்வியாலேயேதான் இப்பொழுது நடக்க பெரிய ஐரோப்பிய யுத்தத்தில் அவர்கள் மிகுந்த உதவி செய்தார்கள். முற்காலத்தில் நமது பெண்களும் யுத்தத்திற்குப் போகின்ற தங்கள் ஆடவர்களுக்கு யுத்தக் கருவிகளைக் கொணர்ந்து கொடுத்துச் சந்தோஷமாக அவர்களை யுத்தத்திற்கு அனுப்பினர்கள். இப்பொழுதும் கிராமங்களுள் சண்டை நேர்ந்தால் பெண்கள் கம்பு, கத்தி முதலியவைகளைக் கொணர்ந்து கொடுத்துதவுகிறார்கள். இதனால் அவர்கள் அறிவும் தேசாபிமானம் முதலியனவும் விளங்குகின்றன. ஆகையால் நம் நாட்டின் பெண் கல்வியை அவ்விதமாய் நடத்தி வந்தால் நலம்.

நடையுடை பாவனைகளைக் கவனிக்குமிடத்து நம் தேயத்துப் பெண்களின் கன்னையே மேன்மையாயுள்ளது. சிலர், ஆங்கிலேய ஸ்திரீகளைப்போல் நம் ஸ்திரீகள் உல்லாசமாக உலாவவும் பால் (Ball) முதலியவைகளில் வந்து நர்த்தனம் பண்ணவும், தெருக்களில் உல்லாசமாக நடக்கவும் விரும்புகின்றனர். இது நாகரீகமுற்றுமன்று. சுவாமி விவேகானந்தரே அவர்கள் நாகரிகம் நாகரீகமன்றென விளம்பியிருக்கின்றனர். இன்னும் நமது பெரியோர்

"குஞ்சி யழகும் கொடுந்தாடி கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்துள்
கல்லாமை யென்னும் கடிய விலைமையாற்
கல்வி யழகே யழகு"

என இயம்பியிருக்கின்றனர்.

ஆகையால் நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் நம் தேய ஆடவர்களும், பெண்மணிகளும் மதாபிமானம், தேசாபிமானம், சாஜாபிமானம் விளங்கக் கல்வியிற் சேர்ச்சியுற்று நம் நாடு உன்னத நிலையை யடைய வேண்டிய வழிகளைக் கருணை கூர்ந்து செய்யுமாறும், அதற்குத் தடங்கல் செய்கின்றவர்களின் மனம் மாறுத லடையவும், நம் தேசம் யாவற்றிலும் சிறந்த நன்னலனெல்லு புகழ்பெறவும் நாம் சதா கடவுளைப் பிரார்த்தித்திப் போமாக. நம் தேசம் முன்னுக்கு வர வேண்டுமாயின் நமது பெண்மணிகளையும் நம்முடன் அபிவிர்த்தி மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். நம் தேசம் இவ்விதவழிகளில் உன்னத நிலையை யடைந்தால் போதுமானது. தற்கால நாகரீக ஆஸிகலன்களாகிய பிரங்கிகள், ஆகாயக் கப்பல்கள், சப்மெரைன்கள் முதலிய ஆட்கொல்லிகள் இல்லாதிருப்பதே நமது நாகரிகம் தாழ்வென வெள்ளைப்படுகின்றது. ஆனால் நான் உள்ளபடியாகவே நம் தேசம் அத்தகைய வழிகளில் உன்னத நிலையை யடைய விரும்பவில்லை. ஆகிய சகோதரர்களாகிய நாம் நம் தேசத்தின் முன்னைய நாகரிகத்தைத் திருப்பிக் கொணரவேண்டிய முயற்சி செய்யவேண்டியது. உடனே மஸ்லினே நினைவாக்கவேண்டும். நம் தேசச் செல்வத்தை நிஜமாக்கவேண்டும். நம் தேசம் உன்னத வீரர்களை யுடையதென்பதை நிலைக்கச் செய்யவேண்டும்.

சினிவாசன்:—சுந்தரம்! நீ நம் நாட்டின் பெண்களின் நிலைமையைப்பற்றியும் நாகரிகத்தைப்பற்றியும் பேசியதைக் கேட்டானந்த மடைந்தேன். நம் நாட்டைப்போல் கல்வியிலும், கைத்தொழிலிலும் சாஜவிசுவாசத்திலும், தேசாபிமானத்திலும் இன்னும் சிறந்த நாடிலதென வீற்றிருக்கும்படி எல்லாம் வல்ல கடவுள் அருள்புரிவாராக. நாம் வந்து நாழிகை யாயினதால் நமதுறைவிடம் செல்வோம்.

பின்னர் இருவரும் தமதுறைவிடம் ஏகினர்.

எஸ். சண்முகசுந்தர நாயனூர்,
மதுரை.

நம்பலாகாது.

ஓர் புதிய பாட்டு.

ஆண் தகைமை இல்லா ஆடவரை நம்பலாகாது.

1. ஆடி பாம்பையும் ஆளியும் நம்பலாம்
அதிர்ந்து வீழும் இடியையும் நம்பலாம்
கோடி லாத குளத்தையும் நம்பலாம்
கூழை வால்நரி பேயையும் நம்பலாம்
ஓடும் நீரில் எழுத்தையும் நம்பலாம்
உட்பகைஞர் உறவையும் நம்பலாம்
பீடி லாதஆண் மக்களை நம்பினோர்
பேதிழந்து புலம்பித் தவிப்பரே.

மூட புருஷரை நம்பலாகாது.

2. நாட டாத அரசையும் நம்பலாம்
நள்ளி ராவழிப் போக்கையும் நம்பலாம்
ஆடல் மங்கையர் அன்பையும் நம்பலாம்
அன்று வைத்த சுவசையும் நம்பலாம்

கோடைக் காற்று மழையையும் நம்பலாம்
கோட்சொல் கின்ற குறளினை நம்பலாம்
மூடரான புருஷரை நம்பினோர்
மூழ்கு வார்துய ரக்கடல் திண்ணமே.

மானம் கெட்டவனை நம்பாதே.

3. கானல் நீரையும் காட்டையும் நம்பலாம்
கட்குடித்த வெறியரை நம்பலாம்
ஞானம் ஒன்றும் இலாரையும் நம்பலாம்
நாயின் வாலின் நிமிர்நிலை நம்பலாம்
வான வில்லின் நிலையினை நம்பலாம்
வம்பர் பொய்யர்தம் வாய்மொழி நம்பலாம்
மான மற்ற மனிதனை நம்பினால்
வாழ்விழந்து வருந்துதல் வாய்மையே.

மு. போ. ஈசுரமூர்த்தியா பிள்ளை,
அன்பகம்.

மாப்பிள்ளைப் பஞ்சம்

அரிசிப் பஞ்சம் விறகுப்பஞ்சம் தண்ணீர்ப் பஞ்சம் துணிப் பஞ்சம் என்று கேள்விப்பட்டுக்கொண்டிருக்குங் காலத்தில் இங்கு ஏதோ மாப்பிள்ளைப்பஞ்சம் என்கின்ற தோர் நூதன பஞ் சத்தை யிட்டுச் சொல்லவேண்டியதா யிருக்கிறது. அரிசிமுதல் மற்றவை சந்தையில் வாங்கக் கூடியன; மாப்பிள்ளைகளோ சன் மார்க்கக்குடும்பங்களில் மட்டும் அகப்படக்கூடியவர். அரிசி, விறகு, தண்ணீர், துணி, இவைகளை மழைவளத்தைக் கொண்டும் நிலவளத் தைக்கொண்டும் சகாயமளிப்பெற்றுக்கொள்ளலாம்; ஆனால் மாப் பிள்ளைகளை இவைவளத்திலும் குணவளத்திலும் மாத்திரம் தேடி யெடுக்கமுடியும்; குணவளம் மாப்பிள்ளையை மட்டும் சம்பந்தப் பட்டது. இவைவளமேன் வென்றால் மாப்பிள்ளையின் மூன்றும் நான்

காம் தலைமுறை வரையிலும் பரிசுத்தமாகவேண்டியது. இன் னின்ன பரிசோதனைகள் இதுகாறும் நமது குடும்பங்களில் நடந்து வருவதனால்தான் நம்மிற் பெரும்பாலான குடும்பங்களினது ஒழுக்கமும் தேகாரோக்கியமும் இற்றை ஞான்றும் காப்பாற்றப் பட்டு வருகின்றன. ஒழுக்கமும் சுகமும் ஒரு தலைமுறைக்கு மட்டும் உரித்தான தன்று. அது குறைந்த பக்ஷம் மூன்று நான்கு தலைமுறைகளா யென்கிலும் தொடர்ந்து வரவேண்டியதாகும். அதனாலேதான் கற்றுணர்ந்த மேதாவிகள் குமரனே யறிந்து பெண்ணைக் கொடுவென் றெழுதியாது கோத்திர மறிந்து பெண் ணைக் கொடுவெனக் கோஷித்துப் போந்தனர். கோத்திரத்தை அறிவதென்றால் எப்படி? சந்ததிகளாகத் தெரிந்து கொள்ளப் பட்டவரின் ஒழுக்கமுடைமை வாழையடி வாழையாக வுள்ளதா? அப்படியே அவரது தேகாரோக்கியமும் தகப்பன், பாட்டன், முப்பாட்டனெனியாய்த் தொடர்ந்து வருகிறதா வென்பதைக் கவ னிக்கவேண்டும். கோத்திர மறிந்து கொள்ளாத காரணத்தால் தான் ஒருபொழுது மில்லாத துர்நடத்தைகளும் தொத்துவியாதி களும் ஒரு குடும்பத்திற்கு நினையாத நேரத்தில் திடும்பிரவேச மாய் வந்து சேருகிறது. சந்ததிகளைத் தெரிந்துகொள்ளும் சம் பந்திகள் ஒருவர் மற்றவரை மூன்று நான்கு தலைமுறைமட்டும் தீர விசாரித்து அறிந்துகொண்டவராயின் சன்பார்க்கமும் சீவுக் கிய தேஜஸுமுடைய குடும்பங்கள் இப்போது ஆகாத நடத் தைக்கும் அசாத்திய நோய்களுக்கும் அநேகமாய் அகப்பட்டுக் கொண்டிராது.

மகளிரைப் பெற்ற மாதாபிதாக்கள் அம்மகளிர்க்கு வரன் தேடுகையில் சந்தையில் ஆடுமாடுகளைப் பிடிப்பதுபோலப் பெரு க்தொகை கொடுத்து மாப்பிள்ளைகளை விலைக்கு வாங்கிவிட யத்த னிக்கின்றனர், பெண்ணை விரும்பவேண்டியவரான மாப்பிள்ளை பெண்ணுக்குப் பதிலாய்ப் பொன்னை விரும்பும்படி செய்யப்பார்க் கின்றனர். பெண்ணின் குலகலத்தையும் குணகலத்தையும் கல்வி அறிவு ஒழுக்கங்களையும் பிரதானமாய்க் கவனிக்கவேண்டியதை பொழித்து அவன் கொணரும் சிறீதனமிருநிலையிலேயே மாப் பிள்ளைகள் கடங்கண்ணை யிருக்கின்றனர். வரதக்ஷணையாக இத்தனை

பணத்தை வள் வாரி இறைக்கின்றீர்களெனப் பெண் வீட்டுக்காரரைக் கேட்டால், என்ன செய்யலாம் அரிசிப் பஞ்சத்தை யாவது குறைவாய்ச் சாப்பிட்டுச் சமாளிக்கலாம், மாப்பிள்ளைப் பஞ்சத்தை இக்கையை பெரும்பொருள் கொண்டல்லாது வேறெவ்வாற்றான் நிவர்த்திக்கின்றதென மறுமொழி வழங்குகின்றனர். இதற்குக் காரணமெல்லாம், ஜனசமூகமென்றால் அதில் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த மாப்பிள்ளைமார் அபிசுக்கலைக்காய் இருக்கவேண்டியதிருக்க, அப்பேர்க்கொத்த மாப்பிள்ளைகள் எங்கோ அத்தி பூத்தாற்போல் யாருக்கு ஒன்றிரண்டற்குங்கூடப் பஞ்சமா யிருப்பதேபொழிய வேறில்லை.

எந்த சமுதாயத்தை எடுத்துக்கொண்டாலும் அந்த சமுதாயத்தில் மணவாளி அத்தலத்திற்கு அலங்காரமாயிருக்கும் சன்மார்க்க முடைத்தான பெண்களின் தொகைக்கு அப்பெண்களொத்த நன்னடத்தையுள்ள புருஷன்மார் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தே யிருக்கின்றனர். எந்த சமூகத்திலும் இந்த மாப்பிள்ளைப் பஞ்சம் இருந்துகொண்டே யிருக்கின்றது.

உலகத்திலுள்ள 160 கோடி ஜனங்களுள் பெண்கள் நூறு கோடியும் ஆண்கள் அறுபதுகோடியுமெனக் கணிக்கப்படுகின்றன. ஆகவே பெண்களோடொப்பிடும்போது ஆண்கள் இருமடங்கு குறைந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. மேலுலகங்களில் சரீரத்தில் நடந்த சண்டைக்குப் பின்னால், ஆடவர் தொகைக்கு மகளிர் தொகை மும்மடங்கு வரிவிட்டதெனச் சொல்லுகின்றனர். மேலுட்டி விஷயம் இப்படியிருக்கக் கீழ் நாடுகளிலும் பெண்கள் தொகை இருபங்கிற்கு ஆடவர் தொகை ஒருபங்கு மட்டு மிருப்பது வித்தியாசாலத்திற்கு ஒரு சிறிதும் ஒத்தல்ல. அதிலும், ஆண்பிள்ளைகளெல்லோருமே மாப்பிள்ளைகளாகிவிடமாட்டார்கள். ஆனாற்பிறந்தவர் எல்லோரும் ஆண்பிள்ளைகளைச் சொல்லிக்கொள்வது ஓர் சாதாரண வழக்கம். விஷயத்தை ஆழ்ந்தாழ யோசிப்போமாயின் ஆருக்கிருமையுடையவர்மாத்திரம் ஆண்பிள்ளைகளெனல் பொருந்தும். ஆனால் மாப்பிள்ளை, அதிலும் விசேஷம். மீசையும் தாடியும் மிலுக்கும் தருக்கும் மாத்திரமே ஒருவரை மாப்பிள்ளை அந்தஸ்திற்கு

உயர்த்திவிடாது. இஃதன்றியும், மாப்பிள்ளை, மனிஷிக் கிசைந்த புருஷனுகவிருந்தால்மட்டும் போதாது. இனிப் பெறப்போகிற மக்களுக்கேற்ற தகப்பனுகவு மிருத்தல்வேண்டும். இப்பேர்க்கொத்த ஆடவர் நமது சமுதாயத்தில் கிடைக்கிறவரையில் நம்மில் மாப்பிள்ளைப் பஞ்சம் இருந்துகொண்டே யிருக்கும். இம் மாப்பிள்ளைப் பஞ்சத்தைப் போக்கடிப்பதற்கு நம் ஜனத் தலைவர்கள் இற்றைக்கிருந்தே வேலை செய்தாலொழிய வேறு வழியில் விமோசனம் கைகூடாது. கார்யசித்திக்கு அநுசரணையாக நம் ஆண்மக்கள் தங்கள் 16-வது பிராயத்திற்குமேல் எவ்விதஜீவியம் ஜீவிக்கிறார்களென்பதை முதலில் கவனிக்கவேண்டும். என் மகனல்ல எவர் மகனெனவென வாளாவிருத்தல் ஒருபொழுதும் கூடாது. இன்றைக்கு எவர் மகனுகவோ இருக்கின்ற அந்த ஆடவன் நாளைக்கு நம் புதல்விக்கே மாப்பிள்ளையாய் வரமாட்டானென்பது என்ன நிச்சயம்? ஆகவே எந்தப் பிள்ளைகளையும் நம் சொந்தப் பிள்ளைக்ளைப்போலப் பாதுகாத்துவர முற்படுவோமாஞல் நம் ஜன சமூகத்தைப் பீடித்திருக்கும் இந்த மாப்பிள்ளைப் பஞ்சம் இன்றைக்கே புறங்காட்டி யோடிவிட நேருமெனல் பொய்யல்ல.

எம். பி. மஸ்கரன்ஹாஸ்.

அரபிக் கலசம்.

நமது வெகுமதிக்கதை.

[ஏழாவது மழையில் ஒரு சிறிது பாகத்தோடு பிரசுரிக்கப்பட்ட இக்கதையின் பிற்பாகத்தை, பிரியமுள்ள நேயர்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் எழுதி முடித்து நமக்கு அனுப்பலாமென்றும் அப்படி அனுப்பப்படுவனவற்றில் மிகச்சிறந்ததாகக் கருதும் கதை பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதோடு அதனை எழுதியவர்க்கு ரூபாய் இரண்டு பரிசாக அளிக்கப்படும் என்றும் அம்மழையில் தெரிவித்திருந்தோம். அதற்கு உத்தரமாக, தூத்துக்குடி காஸ்ட்வெல் ஹைஸ்கூல், ஸ்கூல் பைனல் வகுப்பு மாணவர்கள் ஸ்ரீமான் எம். ஜே. செல்லையா, ஸ்ரீமான் எஸ். தனுக்கோடி சேதுபதி என்ற இரண்டு நேயர்கள் தங்களுக்குத் தோன்றியவாறு

கதை முடிபுகள் எழுதி நமக்கனுப்பியிருந்தார்கள். தனித்தனி நோக்குமிடத்து, இரண்டிலும் ஒன்றேனும் பிரசுரத்திற்கேற்றச் சிறந்ததெனக் கொள்ளற்பால நல்லவாயினும், இரண்டிலும், அனுவசியமான விஷயங்களே அதற்றிச் சில முக்கிய பாகங்களே இணைத்து ஒருவாறு சேர்த்து அமைத்துப்பார்த்தால் ஓர் அழகிய கதைப்போக்காக இருக்கின்றமையின் அவ்விதமே செய்து எப்படியும் கதை முடிவைமேல் வரும் தருகின்றோம். குறிப்பிட்ட இரண்டு ரூபாய் வெகுமதி அவ்விரு சேவர்களுக்கும் தனித்தனி ஒவ்வொரு ரூபாயாக அளிக்கப்படுகின்றது. இக்கதை யைத் தொடங்கிய மங்களாகரன் என்ற கல்பனை இவ்வெறு மதியை யளிக்கின்றார். பஸ்.]

கதை முடிபு.

பூதமும் சாம்பசிவமும்.

"நமது எண்ணம் இந்த இல்லற விஷயத்தில் திருப்பினது மிகவும் கஷ்டமான காரியம். தற்சமயம் செய்யவை நோக்குழிக் கனாறவெட்டப் பூதம் புறப்பட்ட கதையாயிருக்கிறதே," என்றெண்ணிச் சாம்பசிவம் பின்னும் பூதத்தை நோக்கி வெகுண்டு "ஏ! பூதமே! என்ன வேலை செய்துவிட்டாய்! நான் என் மனத்திற் நினைத்த பெண் விருப்பினதற்கு எனக்குச் சேர மனப்புண் கொண்டுவந்து விட்டனையே. கழுதையாகத் தன்னை மாற்றின வனுக்கு எவனைவது பெண் கொடுப்பானோ? அல்லது பெண் எடுக்கப்போகிறவன் தன் மாமனைத் தன் வீட்டில் நிறுவி லடைப்பது மனுதர்மத்துக்கு மான்போ?" என்று கூறிக் கன் னிரால் கழுதையை நனைக்க வாரம்பித்தனர்.

பூதம் பணிவுடன் "ஐயா தங்கள் நன்மைக்கே இப்படிச் செய்தேன். என் வார்த்தையையும் தங்கள் வாக்கையும் மறுத் துப் பேசுகின்றதையுடன் பேரிய இவர்மீது எனக்கு முன்கோபத்தால் இவரைக் கழுதையாக்கிவிட்டேன். அதுவும் தங் கள் நன்மைக்கே. நான் இப்பொழுதே இவர் புத்தி ஸ்வர்ணம் பாளைத் தூக்கி வந்துவிடுகின்றேன். தாங்கள் தங்கள் இஷ்டப் படி அவளைக் கலியாணஞ்செய்து சுகித்திருங்கள்" என்றது.

"என்ன தடிப்பேயே! உன் பேய்ப்புத்தியைக் காட்டுகின் றனையே. நாகரிக மானிடர்களாகிய எங்களையும் உங்கள் வர்க்கத் தில் சேர்த்துவிட்டனையா? கலியாணத்திற்கு ஆகாரம் காதலும் பெற்றோர்கள் சம்மதமும் அல்லவா? பித்தாப்பிள்ளை எனக்குப் பெண் கொடுக்கச் சம்மதித்தாலும் ஸ்வர்ணம்பாளுக்கு என்மீது காதல் வேண்டாமா? அப்படிக் காதல் கொஞ்சம் இருந்தபோதி லும் தன் தகப்பனுரை நீசக் கழுதையாக மாற்றினவனுக்கு வாழ்க்கைப்படச் சம்மதிப்பாளா? ஆகையால் நீ என் நன்மையை நாடினால் இப்பொழுதே இக்கழுதையைப் பழையபடி பித்தாப் பிள்ளையாக மாற்றிவிடு" என்று பூதத்தை வேண்டினர் நமது கதாநாயகர். பூதம், "ஐயோ சுவாமீ! நான் கோபத்தில் ஒரு மானிடனை ஒரு மிருகமாக அல்லது பறவையாக மாற்றிவிட்டால் திரும்பப் பழையபடி அதை மானிடனுக்கும் திறமை என்னிடத் தில் இல்லையே. நான் என்ன செய்வேன்!" என்றது.

"அப்படியானால் என் உள்ளத்தைக் கொண்டவளுடைய பிரிய தகப்பனர் ஆயுளளவும் கழுதையாகவேதான் இருக்க வேண்டுமோ?" என்று எங்கினர் சாம்பசிவம்.

"இல்லை, அவர் இஷ்டப்பட்டால் அவரை இப்பொழுதே விமோசன மடையலாம். எப்படியென்றால், என்னுடைய எந்த இஷ்டத்தை நிறைவேற்ற மறுத்ததற்காக நான் ஒரு மானிடனை ஒரு ஜந்துவாக மாற்றினேனே, அந்த இஷ்டத்தை நிறைவேற்ற அந்த ஜந்து எப்பொழுது மனம் வைக்கிறதோ அந்த க்ஷணமே அது பழையபடி மானிடனாய்விடும். மற்றப்படி என்னால் அதற்கு விமோசன மளிக்க இயலாது. ஆகையால், இந்தக் கழு தைக்குத் தன் மகளைத் தங்களுக்கு மணஞ்செய்விக்க எப் பொழுது மனம் வருமோ அப்பொழுதுதான் இது பழையபடி பித்தாப்பிள்ளை ரூபத்தை யடையும்" என்று சொல்லிட்டுப் பூதம் மறைந்துவிட்டது.

இம்மொழிகளைக் கேட்டதும் பித்தாப்பிள்ளைக் கழுதை, தான் ஆயுளளவும் கழுதையா யிருந்தாலும் சாம்பசிவம் பிள் ளைக்குப் பெண் கொடுக்கத் தனக்குச் சம்மதமில்லை என்று தெளிவாக உணர்த்தும்பொருட்டு தன் பின்னங்கால் இரண்டினை

யும் செவ்வனே தூக்கி தமது கதாநாயகர் மேலாயில் கன்றுப்பூசை செய்துவிட்டு ஓடிப்போய் அவர் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்று சுற்றிச் சுற்றித் திரிக்கது. சாம்பசிவம் பிள்ளை தான் கழுதை காற்பட்ட பூசையையும் பாராட்டாது மிக மனம் வருந்தி கழுதையைத் தொடர்ந்து தோட்டத்திற்குப் போய் அதைப் பிடித்து ஓர் மரத்தோடு கட்டித் தூய தண்ணீரும் புல்லும் போட்டனர். அம்மாதா அலைகளோச் சட்டை பண்ணாது கணக்க ஆரம்பித்தது.

அப்புறப்பிள்ளையின் கதி.

இவை யாவும் நிகழ்ந்த வளின் மேற்குத் திசையிலிருந்து வருபவர்க்கு ஓர் பெரிய தடாகம் தோற்றும். இத்தடாகத்தின் மத்தியில் ஓர் பெரிய சிவன் கோவி லுண்டு. அவ்விடத்தில் எப்போழும் பிராமணர் மற்றுளார் தெய்வீகப் பூஜைகள் செய்துகொண்டும் மந்திரங்கள் ஓதியும் நாட்கழித்திருப்பர். இத்தடாகத்தில் மச்சங்கள் துள்ளுவதும், கயல் மீன்கள் புரண்டோடி விளையாடுவதும், நீலோற்பல பொக்குள் மலருவதும், காமனை வாவியிற் படர்ந்து அதன் மலர்கள் சூரிய வெப்பத்தைப் பழிப்பதும் மனதுக்கு மிகக் குதூகலத்தை விளைக்கும்.

இத்தடாகத்துக் கருகில் அதன் அழகையே பழிப்பது போன்று ஓர் பெரிய காவும், அதன் நடுமையத்தில் சூரிய வெளிச்சத்தும் பிரகாசிக்கும் தனது சித்திரங்களாலும் பிற்பாகிய மேன்மையினாலும் பார்ப்போரது கண்களை மயக்குவோர் மாளிகையு முள. இக்காவிலே புன்னை, பலா, புளி, மா, தென்னை, அத்தி, அரசு, ஆல் முதலிய பல விருக்ஷங்களும் பல நிறப் பூஞ் செடிகளும், கள் குளிர்ச்சினையைக் கொடுக்கும் பச்சை நிறப் புல்லும் அதிலே விளையாடும் பற்பல பிராணிகளும் மனோரம் மியத்தைத் தருவன்பதற் கையமில்லை. இவைகளைக் கடந்து மாளிகை வாயிலில் வழியிடின் யாம் இருப்பது மண்ணுலகமோ, வானவர் லோகமோ என்ற ஐயம் எற்படற்பாலது.

இவ்வள வழகு மற்புகழும் பொருந்திய தோர் மிட்டில் மாலி அழுகுரல் கேட்டது. "ஏ நாதாவோ, நாத! நாதவோ,

நாதஇ யானேனே!" என்பதும் "ஆஹா! என்னருமைத் தந்தாய்!" என்பதும், "ஐயோ! மங்கல மிழந்தேனே," என்பதும் ஏக காலத்திற் கேட்டு, கேட்போர் காதுகளை அடைத்து அசுப மெனத் தெரிவிக்காநின்றன. ஆஹா! அழுகை துன்பம் முதலியவற்றிற்கு அவஷ்கம் போன்று தோன்றும் இவ்வகம் அதை யாதரிப்பானேன்! இவ்வீட்டில் அழுகுரல் கேட்பது மாண்போ! உம் ஞான வல்லபத்தை யாம் அறியோம் பராபரமே!

இச்சடுதிக் குரல் காரண மென்னவென வெல்லாங் கூடுகின்றது. அக்கை, நாத்தி முதலியோர் வருகின்றனர். குடும்பத் தலைவி அவளது புதல்வி முதலியோர் கண்ணீர் ஆறுகப் பெருக அழுது கலுழ்வதையும், புதல்வன் சொக்கலிங்கம் ஓர் மூலையி லுட்கார்ந்து அழுவதையும் கண்ணுற்றுப் பெண்டிரது இயல்புப் படி கூட்டம் சேர்ந்து காரணந் தெரியாது ஒப்பாரி வைக்க ஆரம்பித்தார்கள். இவ்வளவு நேரத்தில் பெரியோர் ஒருவர் யாது சமாசார மென்று வினவ, பையன் பக்கு வயதுள்ள சொக்கலிங்கம் எழுந்து நின்று தாழ்ந்த குரலில், தகப்பனார் யாரையோ பார்க்க வென்று அருணேசயத்தில் போனவர்களை யாதோ காரணம் என, பெரியவர், சீச்சீ! இதற்கு இவ்வளவு கூச்சலேன்! போனவர் வந்திடுவார், கூச்சலிடீர் எனத் தடுத்து அப்புறம் சென்று பல விடங்களுக்கும் ஏவலரை யனுப்பித் தேட ஏற்பாடு செய்தார். எங்கெங்கோ தேடியும் ஒன் அகப்படவில்லை.

காணமற்போனவர் யார்? அவர்தான் அந்நகரில் பெரிய கனதனவானகிய பிக்காப்பிள்ளை யென்பவர். இவரன்றி அவ்வூர்த் தட்டாத்தையும் கோவிலையும் ஆதரிப்பவர் யாவர்? ஆகவே ஊர்முழுவதும் பெரியோர் முதல் ஏழைப் பிச்சைக்காரர் வரை துக்கத்தி லாழ்ந்திருந்தனர்.

நல்லாரை எல்லாரும் இப்பாழுலகில் பகைப்பது சகஜம். பகைகாரனுக்கு அதிலும் பகை அதிகம். இதற்குச் சிறிது காட்கனுக்கு முன்புதான் இவர் அகத்தில் பெருங் கொள்ளை. சிரியர் தெட்டாலும் சிரியர் சிரியரே என்றவாறு இவர் மறுபடியும் தனது தான தருமங்களைப் பன்மடங்காக நடத்துபவரானர். எனினும் இப்பொழுது இவருடைய உயிரையே எவனோ எடுத்துவிட்டான் போலும். ஆகா! பெரிதும் பாவம்! நல்லவருக்கு இது காலமில்லை.

காலம் கழிகாலம். வெறுமையாகவா பூமி பாழடைந்து போகிறது! மழையும் பெய்கிறதும் அப்படித்தான். பூமியில் பஞ்சமில்லை. பூமாதேவி உலகுக்கென்னவோ போதும். கிழக்கு,

பித்தாப்பிள்ளையாகத்தினால் வளர்க்கப்பட்டதில் ஒர் அழகியில் அவளது பத்தினி நங்கையை உருவ மெடுத்தது போல வேங்கை யோசித்தல்லள். அவள் பக்கத்தில் பதினாறு பிராயமுள்ள அவள் புத்திரி அற்றைகாட் காலையிலிருந்து உள்ளுக்கு சோர்வால் மெய் சோர்ந்து கண்ணீர்க் கடலில் ஆழ்ந்திருந்தனள்.

அச்சமயம் அவளுடைய தோழி இரத்தினம் அவ்விடம் வந்து அவளுக்கு அன்ன ஆகாரதிகள் அளித்து, அவளது துக்க நிலையை மாற்றும் வண்ணம் அவளை வேறோர் அறைக்கு அழைத்துச் சென்று அவ்விடம் வழக்கம்போல வார்த்தையாடினள்.

உடனே ஸ்வர்ணம்பாள் "தங்கையை யிழந்து யான் எனம் வாடுகின்றனன். நீயோ இன் பேதமையைக் காட்டத் துணிந்தனை. தங்காய்! தங்காய்! தங்காய்! நின் பிரிவினை யாற்றாது வாடுகின்றேனை," எனப் பலவாறு மொழிந்தனள்.

"ஆறா! இன் பேதமையே பேதமை, சொல்லுகிறவன் சொல்லின் கேட்பாருக்கு மதி எக்கே. அவர் எங்கேயாவது அபத்தியம் சென்றிருக்கலாம், மாக்கிகத்தில் நிக அதிபையுடையவரன்றே!" என்று இரத்தினம் விடை தந்தனள்.

"ஆறா! உனக்கப்படிச் செப்பினவர் யார்?" என்று வினவினள் ஸ்வர்ணம்பாள்.

"யாராயிருக்கலாம். சாம்பசிவம்பிள்ளைதான்" என்றனள் தோழி.

"ஆறா! அவர் அப்படிச் சொல்லினரா! அப்படியாயின் நான் அதை நம்பலாம்." என்றனள் நாறு கதாகாயத்.

இப்படி ஸ்வர்ணம்பாள் பேசினதைக் கண்டு, சாம்பசிவம் பிள்ளைபால் அவள் காதல் கொண்டிருந்தனென்று வகுக்கலாம். ஆம், அதுவே உண்மையே. ஒரு நாள் முன்வாயிலினருகே அவள் நின்றுகொண்டிருந்தபொழுது சாம்பசிவம் வழியே போக, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் காதலுற நேர்ந்தது. ஆனால்

ஸ்வர்ணம் தன்னைக் காதலிக்கிறாள் என்று சாம்பசிவம்பிள்ளைக்குத் தெரியாது. சாம்பசிவம் தன்னைக் காதலிக்கிறான் என்று ஸ்வர்ணம்பாளுக்கும் தெரியாது. இவை நிற்க,

பித்தாப்பிள்ளையின் மனைவி வழியில் சற்று நெருங்கிய உறவினனாகிய அண்ணப்பிள்ளை என்ற ஒருவன் உளன். அவன் என்னவோ இன்ஸ்பெக்டர் வேலை பார்த்திருந்தான். பின்பு ஏதோ குற்றத்திற்காக வேலையிலிருந்து தள்ளப்பட்டான். ஆனாலும் ஊரில் அவனைப்பற்றி இன்ஸ்பெக்டர் என்றுதான் பேசுவார்கள். இவன் மிகவும் ஸ்தூலித்த சரீரமும் அயோக்கியத் தன்மையும் உடையவன். இவன் ஸ்வர்ணம்பாளை எப்படியாவது தானே கலியாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று கருதியிருந்தான். ஆனால் பித்தாப்பிள்ளை இவனைச் சற்றும் லக்ஷியம் செய்வதில்லை. அவர் முன்பு தோன்றுவதற்கும் இவனுக்குப் பயம். இப்பொழுது பித்தாப்பிள்ளை காணுமற்போனதால் இந்த அண்ணப்பிள்ளை உள்ளத்தில் உவகையும் வெளிக்குத் துக்கமும் காட்டி, ஸ்வர்ணம்பாளது தாயைப் பல உபசார மொழிகளால் தேற்றி, தானும் அவ்வீட்டில் வசிக்க வந்து பித்தாப்பிள்ளை குடும்ப விவகாரங்களெல்லாம் தானே கவனித்து வருவானாயினன். ஸ்வர்ணம்பாள் தாயும் அவனை நம்பிவிட்டாள். ஏன்ன செய்வாள் பாவம்! அவள் புத்திரன் சொக்கலிங்கந்தான் சிறுவன்.

இரண்டொரு மாதங்களில் தன் அருமைப் புத்திரி ஸ்வர்ணம்பாளை அண்ணப்பிள்ளைக்குக் கலியாணஞ் செய்து கொடுக்கவும் பித்தாப்பிள்ளை மனைவி சம்மதித்துவிட்டாள். ஸ்வர்ணம்பாள் அண்ணப்பிள்ளையை முற்றும் வெறுத்தாள். இப்பொழுது கலியாண ஏற்பாட்டை அறியவே அவளுக்குக் கன வருத்த முண்டாயிற்று. அதை வெளிக்குக் காட்டாமல் "இருக்கட்டும் இன்ஸ்பெக்டர்! உன் கலியாணப் பலிசைப் பார்ப்போம்! சாம்பசிவம் பிள்ளையைத் தவிர வேறு எவனும் என்னை அணுகவும் கூடுமா!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

கலியாணத்திற்கு வெகு சம்பிரமமாக ஏற்பாடுகள் நடந்தன. கலியாண தினத்தன்று காலையில் ஸ்வர்ணம்பாள் எப்படியோ விஷம் சம்பாதித்து அதை உண்ணப்போனாள். அப்பொழுது

கோர ரூபத்துடன் பிடரியைப் பூதம் பலம் முழுவது தோன்றி அவளிட மிருந்த விஷத்தைப் பிடுங்கிக்கொண்டு பலமே வெருட்டி விட்டுப் போயிற்று. ஸ்வர்ணம் மறுபடியும் மூன்று தோன்ற ரூப விசனத்தி லாழ்ந்திருந்தனள். கபாலம் முகர்த்தம் கெருங்கிற்று. வாத்திய கோஷங்கள் முழுங்குன்றன. பாப்பின்னையை அழைத்துவரப் போகிறார்கள். பாப்பின்னையைக் காணும். வீடெங்கும் தேடினார்கள், வயல்களுக்குத் தேடி வந்தார்கள். பாப்பின்னை அகப்படவில்லை. அன்னபூர்ணியின்னை எங்கே? உன்னை வஞ்சனையினால் பூதம் அவளைக் குரங்காக மாற்றிக் குன்றிலுக்கு மேலேயின்மேல் கொண்டு விட்டிவிட்டது.

கழுதையின் பிடிவாதம்.

முற்கூறிய சாம்பவங்கள் நிகழ்ந்து சில தினங்களுக்குப் பின்னர், அல்லூர் வண்ணானது கழுதை யொன்று காணாமற்போயிற்று. எல்லிடங் தேடியும் கிடைக்க வழியில்லை. ஒரு நாள் வண்ணான் தனது சாம்பசிவம் வீட்டு முன்பாகப் போகுங்கால் அவ்விட்டினுள் ஒரு கழுதையின் கனைகுரல் கேட்டு, சாம்பசிவப்பின்னை தனது கழுதையை அபகரித்துக் கொண்டதாகத் தீர்மானித்துப் பிடம் பிரியாது செய்தான். சோம முனிவர் சாம்பசிவப்பின்னையை, "கழுதை உமக்கு எப்படிக் கிடைத்தது?" என்று விசாரிக்க, சாம்பசிவப்பின்னை நிருபநிகரஸ்தான பதில் கூறுதலால் அவர் வீட்டிலுள்ள கழுதையை வண்ணானிடம் சேர்த்து விட்டுச் சாம்பசிவத்திற்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்தார். சாம்பசிவம், அபராதம் கொடுத்ததற்குக் கூடவருத்தமில்லை. தன் காதலியின் பிதாக் கழுதையைப் பிரியமேற்படுத்தினதை யன்றோ கருத்தாயதாக அடலில் விடு சேர்ந்தார்.

இனி, கழுதையின் வாழ்க்கையைக் கவனிப்போம். வண்ணான், அதை வெயிலில் கட்டி, அதன் முதுகில் பெருஞ்சுமை களை ஏற்றி, அடித்து, அழுக்குத் துணிகளும் சுப்பைகளையுமே சுமக்கொள்ளக் கொடுத்தான். தான் சாம்பசிவப்பின்னை வீட்டில் அநுபவித்த சுக உணவும் சொகுசும் நீங்கி, இப்படி வண்ணானிடம் அகப்பட்டதும், பிதாப்பின்னைக் கழுதைக்குச் சாம்பசிவம் பின்னைபால் சற்றும் தயை பிறக்கவில்லை. இவ்விஷயங்களினால்

லாம் பூதத்திற்குத் தெரியவே, அது, "ஆஹா! இந்தக் கழுதையின் கர்வமே கர்வம்! இந்தனை நாள் இது சாம்பசிவம்பிள்ளை வீட்டில் அன்பாகப் பேணப்பட்டு இருந்ததால், நான் அவருக்குப் பயந்து அதை ஒன்றுஞ் செய்யாம லிருந்தேன். இப்போது இது அவரைவிட்டு நீங்கிவிட்டது. இனி இதைப் பல துன்பங்களுக்குள்ளாக்கி, அவைகளைப் பொறுக்க முடியாமல் இது தன் மகளைச் சாம்பசிவத்திற்குக் கொடுக்கச் சம்மதிக்கும்படி செய்து அதனால் இதன் கழுதை ரூபமும் மாற, ஸ்வர்ணத்தையும் என் சாம்பசிவத்திற்கு விவாகஞ் செய்விப்பேன்!" என்று தீர்மானித்து, தான் ஒரு புலியுரு வெடுத்து ஒரு நாள் நள்ளிரவில் கழுதை முன்பு தோன்றிப் பயமுறுத்திற்று. கழுதை வீறிட்டு, கட்டை அவிழ்த்துக்கொண்டு வாயு வேகத்துடன் ஓடத் தொடங்கிற்று. பூதமாகிய புலியும் அதைத் தொடர்ந்தோடிற்று. அவ்வாறு தொடரப்பெற்று அன்றிரவும் மறுநாள் பகலும் காட்டில் பல விடங்களில் ஓடியது. கடைசியாய்த் தன் பின்னல் பார்க்க, புலி காணப்படாதது கண்டு மிக்க களைப்புற்றிருந்ததால் அக்களைப்புத் தீரவும் தாகவிடாய் தீரவும் ஓர் தடாகத்தில் நீர் பருகப் போயிற்று. அவ்வமயம் மாலே 6-மணி இருக்கும். கதிரவன் மேல் கடலில் மூழ்கும் தருண மாயிற்று. கழுதைக்கு எவ்வித இடையூறு நேருகிறதோ வென்று பக்கிகள் கா கூ வென்றலின. சிறிது நேரத்திற் கெல்லாம் அவ்விடம் முழுவதும் புகையால் மூடப்பட்டது. இடைக்கிடையே மின்மினி யொளி போன்று சிறிது பிரகாசம் தோன்றிற்று. அத்தடாகத்தி லுள்ள நீரெல்லாம் வற்றிப் போயிற்று. "ஓஹோ! நான் என்ன செய்வேன்! எங்குச் சென்றலும் எழுத்தும் நிழலும் ஒன்றுபத்தானே வருகின்றன, ஐயோ! நாவு வறண்டு போகிறதே! உயிர் போய்விடும் போலிருக்கிறதே! என்ன செய்வேன்! எப்படி யுய்வேன்!" என்று வங்கியது கழுதை.

"கழுதாய்! நில், எங்கே போகிறாய். அவ்விடத்தே நில், சற்று மசையாதே." என்று பேரொலியுடன் பூதம் அங்கே தோன்றிற்று. கழுதை நிச்சலனம் கொண்டு அங்கேயே நின்று விட்டது. பின்னர் பூதம் தன்னிடத்தி லிருந்த ஓர் டப்பியை எடு

கிய அறிவுள்ள தூளிற் கொஞ்சம் வாயில் விசேஷ அது இரு சொனச் சுடர்விரித்து எரிய ஆரம்பித்தது. கழுதை அச்சுட் டுவேஷ்டிய்து. நீ அதன் நேத்தில் உறைக்கவில்லை, அது துள் ரித்துள்ளி, "லீயோ சுடுகிறதே! சாகிறேன்!" என்று எல்லை னிப் பரிதாபகரமாகக் கனைத்தது. "கழுதாய்! உன்னைக் காப் பாற்றுகிறேன். இப்பொழுதாவது உன் முகஸ்துதி சாப்பிவர்களின் நோக்குக் கொடுக்க மனங்கொள். உடனே நீயும் பழைபடி மனு ஷனாய்." என்றது பூதம். கழுதையோ "நான் செத்தாலும், பேபானாலும், நரகத்தில் விழ்ந்தாலும் சாப்பிலத்திற்குப் பென் கொடுக்கச் சம்மதிப்பதில்லை." என்று எண்ணியது. அவ்வெண் ணம் பூதத்திற்குத் தெரிந்தது. அதற்குக் அக்கழுதையின் மீது வெறுப்பு அதிகரித்தது. அக்கழுதை அப்படியே கெருப்பில் சாகும்படி விட்டிருக்கும். ஆனால் சாப்பிலத்தின்மேல் அதன் மீது பிரியமாயிருந்ததால், அக்கழுதை செத்தால் அவர் மிக வருந்து வர் எனக் கருதி, பூதம் கழுதையைத் தூக்கிக்கொண்டு குற்றால த்தி மலையில் அண்ணாந்பிள்ளைக் குரங்கினருகே, விட்டு "ஏ! பிச்சாப்பிள்ளைக் கழுதை! இதோ இருக்கிறான் உன் பரதேசம் அண்ணாந்பிள்ளைக் குரங்கு. இருவரும் எப்படியாவது இங்கே காசமடையுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது. அக் குரங்கும் கழுதையும் எப்பொழுதும் முன்னைபோன்று கடித்துச் சண்டையிட்டுக் கொண்டு அல்லிடையிருந்தன.

குற்றாலம்.

ஸ்வர்ணாம்பாள் கால் பாகம் தக்தையின் பிரிவு காரணமாக வும், முக்கால் பாகம் சாம்பசிவம் பிள்ளையிடம் கொண்ட காதலா லும் உருகி உருகி உடல் மெலிந்தனள். அவ்வருத்தத்தை அவளுக் குத்தானே அதிகமென்று கருதி அவள் அண்மை டாக்டரை அழைத்துச் சிகிச்சை செய்யச் சொன்னாள். ஸ்வர்ணத்திற்கு இன்ன நோய் என்று டாக்டரால் அறிந்துகொள்ளக் கூடவில்லை. "உடம்பு மிகப் பலவீனமாயிருக்கிறது. இன்னும் முன்று மாதம் குற்றாலத்தில் போய் அருவியில் ஸ்நானம் செய்துகொண்டிருந் தால் இவள் தேறிவிடுவாள்" என்றார். இக்காலத்தில் டாக்டர் கள் தங்களால் சிகிச்சைசெய்யக்கூடாத நோய்கள் இருந்தால்

இப்படித்தான் அங்கே போயிரு இங்கே போயிரு என்று கூறு வது வழக்கம்.

ஸ்வர்ணமும் அவள் தாயும் மற்றுஞ் சிலரும் குற்றாலத்திற் குப் பிரயாணமானார்கள். ஸ்வர்ணத்திற்கு இது திருப்தியைக் தந்தது. எனென்றால், அவள் சாம்பசிவம் தன்னைக் காதலிக்க வில்லை யென்றும், அவரைத் தான் மணஞ்செய்ய முடியா தென் றும், ஆகையால் தான் உயிர் விடுவதே உத்தமம் என்றும் கருதி, குற்றாலத் தருணியில் தான் நீராடுப்பொழுது, கவறி விழுவது போல் அருவிக்கருகேயுள்ள நீர்க்கசத்தில் விழ்ந்து உயிர் துறப் பதெனத் தீர்மானித்தனள்.

குற்றால மலை. இதன் சுகமே சுகம். இம்மலையின் வளத் தைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

இம்மலைத்தொடர்ச்சி பாப விநாசம் என்னும் புண்ணிய ஸ்தலத்திலிருந்து ஆரம்பித்தபோதிலும் இதனுடைய முழு நன்மையைக் கோடைகாலத்தி லநுபவிப்போர் குற்றாலத்தவரே. செல்வர்கள் தரித்திரர்கள் என இரு வகுப்பாளர் உலகி லிருப்பது இயற்கை போன்று குளிர்ச்சி பொருந்திய உயர் சிகரங்களும் சாதாரணமாக மரஞ்செடி வளர்ந்த குன்றுகளு மிருக்கின்றன. "குலமாட்சி இல்லாருங் குன்றுபோல் நிற்பர் நலமாட்சி நல்லா ரைச் சார்ந்து" என்ற முதுமொழிக்கினங்க குன்றும் உயர் சிகர ங்களோ அண்மி அவை களோடு தோன்றியதால் தன் வெறுமைநீக்கி தனிப் பெருமையுற்றது. நல்ல சாந்தகுணமாக்கள் வாழுமிடத் தைக் சோபமுடையார் வாழ்வது போன்று மான் மனை வாழுமிட த்துப் புலிகாடியும், மயிலினம் குயிலினம் வாழ் மஞ்ச கவும் சோலையில் காகங்களும், விசேஷ அழகுபடைத்த சந்தனடவியில் சர்ப்பங்களும் இருப்பனவற்றைப் பார்க்கும் ஒவ்வொருவனும் கட வுளினது சிருஷ்டியின் வல்லமையைத் தெற்றென அறிவன். மற் றும் நம் பிரதேசங்களில் அரவன். அதிகாரம் அதிகரித்து அங் கனுப்பப்பட்ட மனிதர்கள் எவர்தான் வசையின் வனப்புரைக்க வாயெடார்! ஆ! நறுமணத்துடன் பூ கொந்துவிடாதபடி இலேசாக வீசும் மன்றல் கமழ் தென்ற லென்ன தென்றல்! பூக்கூட்டத்தி லிருந்து வருகின்றமைபற்றி, பொழியும் குறுந்தளியும் பூவின்

தேனிலை எள்ள கிணைத்தற் கூடாரா யிருக்கின்றது. மந்தாரநதம் விசுகின்றது. ஸ்தானின் வழி போகுவார்க்கு மலர்மாரி பெய்வித் கின்றது. தேனிலே நீராடி தேனையே வருந்திய களிவண்டுகள் மலர்களைத் தங்களாசனமாகக் கொண்டு 'அசைத்தில் எய்தலும்' பும் காற்றவண்ணம் அருந்தவம் செய்கின்றன. செல்வர் கழுது செழுங்கிளை தாங்குதல் என்பதை மேற்கொண்டு செழுமை யுற்று வாழ்ஞ்சி வளரும் பெரிய நருங்கள் கொடிகளுக் காதார மாகி மிகவும் கம்பீரத் தோற்றத்தை விளங்கிக்கின்றன. கொடிகள் மழையிலும் வெயிலிலும் பிரியாது நட்பின் நிறப்பை காட்டுகின்றன. கொடிகள் ஒற்றுமையுடன் கூடியதால் தங்களை எதிர்ப்பவர்கள் யாரெனச் செடிகளுக் கிடையில் தலைகாட்டிப் பலத்துடன் நிற்கின்றன. கற்றாரைக் கற்றார் காமுறுதல் போல் கையாறு கருதா மேகம், எங்கெலாம் நிற்கா துவரையி னுச்சியிற் சென்று; கொஞ்சிக் குலாவுவது மிகவும் வேடிக்கை. சில மேகங்கள் "ஐ! என் நண்பா! நீ சகாஸ்ரமாக இங்கிருந்து இங்கு மனிதர்களை வரப்பள்ளி எங்களையும் வருபாது எய்தி எனைக்குப் புகழ் நிக்கின்ற உன்னிடம் எக்காலும் நினைத்த நேரமெல்லாம் வரமுடியவில்லையே" என்று நீர் தூவப்ப முறையிடுகின்றன. மலையில் பெருகும் ஜலமானது மலையை நாசத்துப் பிறப்பளித்த தாலத்தால் அதனைத் தேடி ஆங்காங்கிருந்து வந்திருக்கும் மனிதர்களுக்கு என்னையென்ற உதவிபுரிதல் கடமையெனக் கருதி மிகவும் விசைத்து கற்களில் மோதி ஓர் அருவியாய் வந்தவர்களுக்கு ஸ்நானம் செய்விக்கின்றது. மகங்கள் மற்றும் பனிகர்களை வரவழைக்கின்றன தங்கள் அசைவினால். குற்றால மலை ஜனங்களைக் கண்டிடத்தும் காற்றைக் கருவியாகொண்டு நிழுக்கின்றது. குற்றாலத்திற்கு வழி தெரியாத ஒருவனுக்கு மேகங்கள் வழிகாட்டுகின்றன. சாயல் காலத்தில் ஒரு நாள் குற்றாலத்தி லிருப்பது பல நாள் செய்யப் தங்களில் இருப்பதை போக்கும்.

இக்கையை மலையின் வளப்புகளையும் வளங்களையும் பார்த்தாள் ஸ்வர்ணம்பாள். அவளுக்குக் காதலும் அதனால் உண்டாய கடுந் துயரமும் பொங்கி யெழுந்தது. "இக்கையை மகத்தான அழகுள்ள மலை யருவி ஜலத்திலேயே தான் உயிர்விடுவது என்று சந்தோஷமாய் நிச்சயஞ் செய்துகொண்டாள். ஆனால், தான்

சாம்பசிவம்பிள்ளையிடம் கொண்டுள்ள காதலை வர்ணித்து, அவரையும் அவர் காதலையும் பெற முடியாததால் தான் உயிர் விடுவதாகவும் விவரமாக ஒரு கடிதத்தில் எழுதி அக்கடிதத்தைப் பத்திரமாகத் தன் மடியில் வைத்துக்கொண்டாள். தான் இறந்தபிறகு அக்கடிதத்தைச் சாம்பசிவம்பிள்ளையிடம் சேர்க்கும்படியும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. மடியில் இக்கடிதத்துடன் அவள் அருவியில் நீராடிக் கொண்டிருக்கும்பொழுது பிச்சாப் பிள்ளைக் கழுதை அவளைப் பார்த்துவிட்டது. உடனே புத்திர வாஞ்சையினால் ஓடோடி வந்து அவளருகே சென்று தன் முன்னங் கால்களைத் தூக்கி அவள் மீது வைத்து அவள் முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டது. அருகிருந்தவர்கள் எல்லோரும் கொல்லென நகைத்தார்கள். ஸ்வர்ணத்துக்குக் கோபமும் வெட்கமும் பொங்கிற்று. "ஏ! ஒடு கழுதை"! என்று சொல்லித் தன் கையால் கழுதையின் முகத்தில் ஒரு அறை அறைந்தாள். அவள் விரல்கள் கழுதையின் முகத்தில் உடைபட்டு, பல விடங்களில் அம் முகத்தைக் காயப்படுத்திற்று. இரத்தமும் பீறிட்டு வந்தது. கர்த்தபம் கோபத்துடன் கனைத்துக்கொண்டே ஸ்வர்ணம்பாள் மடியைக் கடித்தது. அவள் வஸ்திரத்தின் ஒரு சிறு பாகத்தையும் மடியிலிருந்த கடிதத்தையும் ஒன்றுகப் பிய்த்துக்கொண்டு அப்பால் ஓடி வந்தது. அப்பால்தான் அருவிக்கு வந்த ஒருவர் அக் கழுதையை அன்பாய் அணைத்து முத்தமிட்டு "ஐயோ! என் நேசமே! நான் எங்கெல்லாம் தங்களைத் தேடி யலைந்தேன். என்னைப் பிரிந்து தாங்கள் என்னென்ன கஷ்டங்கள் பட்டீர்களோ!" என்று சொல்லிப் பிறகு அதன் முகம் காயப்பட்டிருப்பதைப் பார்த்துத் தன் ஆடையின் முன்றானையை அருவி ஜலத்தில் நனைத்து அக்காயங்களில் ஒற்றிப் பல உபசாரங்கள் புரிந்தார். அப்பொழுது கழுதை தன் வாயிலிருந்ததைக் கீழே போட்டது. உபசரித்தவர் அது என்னவென்று பார்த்து ஒரு கடித மிருப்பதைக் கண்டு அதை வாசிக்கலானார்.

இவர் யாரென்று நினைக்கிறீர்கள்? சாம்பசிவம்பிள்ளைதான், வேறு ஒருவரும் இல்லை. இரண்டு தினங்களுக்கு முன் இவர் நண்பர் ஒருவர் குற்றாலத்திற்குப் போய்த் திரும்பியவர், "ஓ

சாம்பசிவம்பிள்ளை! நீர் வளர்த்த உமது கழுதை குற்றுலத்து மலையில் நிற்றுகொண்டிருக்கிறது" என்று சொன்னார். இதைக் கேட்டுச் சாம்பசிவம் கழுதையைப் பழையபடி கன்னிட்டிற்குக் கொண்டுவரக் குற்றுலத்திற்கு வந்து முற்கூறியவாறு கழுதையைச் சந்தித்தார்.

ஸ்வர்ணப்பாள் தன் காதலனைக் கண்டாள். அவர் தன் கடிதத்தை வாசிப்பதைக் கண்டாள். "ஐயோ! மோசம் கெட்டவனாய் விட்டேன், இனி ஆசை கூடாமல் உயிர் சேடியிருக்கக் கூடாது" என்று நீர்க் கசத்தில் குதித்துவிட்டாள்.

"ஸ்வர்ணப்பாள்! ஸ்வர்ணப்பாள்!" என்று கூவிக்கொண்டே உடனே சாம்பசிவம்பிள்ளையும் கண்ணீரிற் குதித்தார்.

சாம்பசிவம்பிள்ளையால் அனேக முத்தமிட்டு உபசரிக்கப் பெற்ற பொழுதே கழுதை, "நான் பெற்ற மகள், தன் அருமை மகள்கூட என்னை இகழ்ந்து இடிக்குக் காயப்படுத்தி விட்டாளே, என்மீது அன்புள்ளார் சாம்பசிவம்பிள்ளையைத் தவிர உலகில் ஒருவரு மில்லையே. ஐயோ! நான் என் இவரை வெறுத்தேன்! இவர் சகல சற்குணங்களும் பொருந்தியிருக்கிறாரே. இவருக்கு என் மகனைக் கொடுத்தால் நான் எல்லாவாறும் பாக்கியவான்!" என்று எண்ணியது. உடனே கழுதை ரூபம் போய், பித்தாம்பிள்ளை மானிட உருவத்துடன் நின்றார்.

ஸ்வர்ணம்பாள் உயிரைக் காப்பாற்றி அவளோடு மகிழ்ந்துகொண்டு சாம்பசிவம்பிள்ளையும் கரையேறினார். யாவரும் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தனர். துக்கமும் தொலைந்தது.

இனி, கதையை வளர்ப்பானேன். வெகு கோலாகலத்துடன் சாம்பசிவம்பிள்ளைக்கும் ஸ்வர்ணப்பாளுக்கும் கலியாணம் நிறைவேறிற்று. பூதம் அபிமான கலாசாலைக்குப் பட்டிகளுக்குக் கொடுத்து, அவர்களுக்கு வேண்டும்போது நன்னீர் பனைக்கக் கலசத்தினுள்ள ஓர் எல்லை அழுத்த வேண்டுமென்பதைக் காட்டிச் சென்றது.

ஸ்வர்ணமும் சாம்பசிவமும் தண்ணீரிற் குதித்ததை மலையின் மீது இருந்து பார்த்துக்கொண்டிருந்த அம்மணப்பிள்ளைக் குரங்கு "ஓகோ இனி அவர்கள் இருவருக்கும் கலியாணம் நிகழ்ந்து

விடும். ஆகையால் நான் ஸ்வர்ணத்தைக் கலியாணம் செய்யும் ஆசையை மறந்துவிடவேண்டியதுதான்" என்று எண்ணிற்று. உடனே அதற்கும் குரங்கு ரூபம் நீங்கப் பழையபடி அண்ணப் பிள்ளை தோற்றினான். அவன் நல்ல புத்தி அடைந்து சாம்பசிவம்பிள்ளை கலியாணத்தில் நன்கு உழைத்தான்.

சாம்பசிவம்பிள்ளையும் ஸ்வர்ணம்பாளும் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எஸ். தனுக்கோடி சேதுபதி.
எம். ஜே. செல்லையா.

ஐரோப்பாக்கண்ட சரித்திரம்.

378-ம் பக்கத்தொடர்ச்சி.

கார்தேஜினின்றும் வரக்கூடிய ஆபத்து நீங்கவும், உரோமாபுரி கீழ் நாட்டு விஷயங்களில் பிரவர்த்திக்க நேரிட்டது. அப்பிரதேசங்களில் மகா அலக்சாந்தருக்குப் பிறகு பல மாறுதல்கள் உண்டாயிருந்தன. அவனது இராஜ்யம் சின்னபின்னமாக முறிந்து, மாசிடன், சிரியா, எகிப்த் என்று பல தேசங்களாகப் பிரிந்து தனித்தனி அரசர்களின் கீழிருந்தன. சிற்றாசியாவில் சிற்றரசர்களும், சுய ஆட்சி பொருந்திய நகரங்களும், நாகரீக மற்ற கூட்டத்தார்களும் கலந்திருந்தார்கள். கிரீஸிலோ, ஆதென்ஸ், காரின்த், தீப்ஸ், ஸ்பார்ட முதலிய நகரங்கள் அழியப்பெறுமல் நின்றாலும் அவற்றின் பழைய செல்வாக்கு முற்றிலும் தொலைந்துவிட்டது. இந்த நகரங்கள் முற்காலங்களில்போல் தனித்தனியே தற்காப்புச் செய்துகொள்ள வலிமை யில்லாமல் பல ஒன்றுகச் சேர்ந்து சங்கங்களும் கூடிகளும் ஏற்படுத்திக் கொண்டன. ஈடோலியன் சங்கம், ஏகியன் சங்கம் என்ற இரு சங்கங்களுமே அவற்றில் பிரதான மானவை. ஆயினும் மாசிடோனியாவே இராணுவ பலத்தில் சிறந்து விளங்கிற்று. அத்தேசத்திற்கும் உரோமாபுரிக்குமே மறு சண்டை விளைந்தது. மாசிடோனியர்கள் கார்தேஜுக்கு உதவி புரிந்திருந்ததாலும், அவர்கள் எகிப்தை ஜயிக்கக் கருதியிருந்தாலும் உரோமர்கள் ஏகியன் சங்கத்துடன் கூடிக்கொண்டு மாசிடோனை எதிர்க்கப் பிளா

மினினஸ் என்ற தளகர்த்தரோ 198 கி. மு. இல் அனுப்பினார்கள். அதற்கு முன்னமே கிரேக்கர்களுடைய நாற்கோயும், சாஸ்திரங்களோயும், பயிற்சியையும் ஆராய்ந்து கற்றுக்கொண்ட உரோமர்கள் அவற்றின் வசப்பட்டு அத்தகையே ஒழுகுவாராயினர். பிளாமினினஸ் மாசிடோனியர்களைத் தோற்கடித்துக் கிரேக்க நகரங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுத்தான். ஆயினும் ஈடோலியன் சங்கம் சிரியாவின் அரசனுடன் சேர்ந்து கலகஞ்செய்ய, உரோமர்கள் மற்றொரு சைனியத்தை வரவழைத்து அக்கலகத்தை நிறுத்தி விட்டார்கள். என்றாலும், 168 கி. மு. இல் மாசிடோனியாவும் எபியன் சங்கமும் ஒன்றுசேர, அவற்றையும் தோற்கடித்துத் தங்கள் அரசாட்சிக்கு உள்ளாக்கிவிட்டனர்.

கார்தேஜ் இராஜ்ய பலம் குன்றிப்போயிருந்தும் வியாபாரத்தில் முதன்மையுட னிருந்ததை ஆற்றாத உரோமாபுரி, கேடோ என்ற சினேட் அங்கத்தினரால் தூண்டப்பெற்று அந்நகரைக் கைக்கொண்டு நிலை யழித்துவிட்டார்கள். ஆப்பிரிக்காவும் உரோமர்கள் வசமாகிவிட்டது. அவர்கள் தங்கள் வயப்பட்ட நாடுகளில் ஆயுதச் சட்டங்கள் ஏற்படுத்தி, யுத்தப் பயிற்சிகளை மறக்கடித்து, ஒரு கவர்னரை நியமிப்பார்கள். அக்கவர்னரே வரி வசூல்செய்து, உரோமாபுரியின் சைனியத்தை ஆதிபத்யஞ் செய்து, வழக்குகளில் நியாயமும் தீர்த்து வைப்பான். உரோமர்கள் தேச ஆட்சிக்காக உத்யோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில்லை. ஆகவே கவர்னர்கள் கொள்ளை வழிகளால் பணஞ் சேர்த்தார்கள்.

ஆரம்பத்தில் உரோமாபுரியை மட்டும் ஆள வேண்டி ஏற்பட்ட கான்ஸல்கள், சினேட் குடிக்கூட்டங்கள், பெரிய சாதிபேதத்தை ஆள நேரிட்டபொழுது பல இடைஞ்சல்கள் விளைந்தன. கான்சல்கள் முனிசிபாலிட்டி விஷயங்களைச் சரிவர நடத்துவதுடன் தளவங்களுக்குக் கர்த்தர்களாகவு மிருந்தார்கள். தளங்களோ ஆப்பிரிக்காவிலோ, ஆசியாவிலோ அவர்கள் நடத்தும்பொழுது உரோமாபுரி முனிசிப்பல் விஷயங்களோ யார் கவனிப்பது!

மேலும் ஜன சமூகத்தில் பல கெடுதிகள் உண்டாயிருந்தன. முற்காலத்தில் இத்தாலியில் சிறு குடியானவர்கள் இருந்தார்கள்.

ஆனால் வரவர அவர்கள் சுதீணமடைய, பெரும்பாடான விவசாயம் அதிகரித்துவந்தது. சார்டினியா, கார்சிகா, எகிப்த் என்ற இடங்களிலிருந்து தானியங்கள் வரவே சிறியகுடியானவர்கள் தொழில் பயனற்றதாய்விட்டது. அத்துடன் ஜயிக்கப்பட்ட நாடுகளினின்றும் ஏராளமான அடிமைகள் கொண்டுவரப்பெற்று இத்தாலி முழுவதும் அடிமைகளே விவசாயஞ் செய்துவந்தார்கள். ஆகவே குடியானவர்கள் உரோமாபுரியை அடைந்து ஏழைகளாய் வேலையற்றுத் திரிந்தார்கள். டைபிரியஸ் கிராக்கஸ் என்பவன் உரோமர்கள் ஜயித்த பிரதேசங்களைச் சிறு பங்குகளாக்கி இவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்தான். ஆனால் சினேட்டர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். டைபிரியஸ் என்பவனுடைய தம்பியாகிய கெயஸ் கிராக்கஸ் என்பவன் நிலங்களைப் பங்கிட்டுக் கொடுப்பதுடன் ஏழைகளுக்கு இனமாகத் தானியங்கள் போடவேண்டுமென்று அவர்களுக்காக அந்நிய நாடுகளில் குடிப்பிரதேசங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சட்டங்கள் எழுதிக்கொண்டு சினேட் என்ற உயர்தரச் சட்ட சபையை மதியாமல் ஜனங்கள் சட்ட சபையில் அமுலுக்குக் கொண்டு வந்துவிட்டான். அன்றுதொட்டு சினேட் கக்ஷிக்கும் ஜன சட்ட சபைக் கக்ஷிக்கும் சச்சரவாகி, முடிவில் இருவரும் தங்கள் அதிகாரத்தை இழக்க, சக்காவர்த்தி என்ற ஒருவனுடைய ஆட்சி ஏற்பட்டது. உரோமாபுரியின் சைனியங்கள் எவனுக்கு உதவி புரிந்தனவோ அவனே அரசனனன். 112 கி. மு. இல் நுமிடியா என்ற தேசத்து உள்நாட்டுக் கலகங்களில் உரோமாபுரி தலையிட நேரிட்டது. சினேட்டர்கள் நியமித்த தலைவர்கள் யாவரும் தோல்வி அடைந்தார்கள். பிறகு ஜனங்கள் மெயஸ் என்றவனை நியமிக்க, அவன் நுமிடியாவில் ஜயமடைந்தான். 102 கி. மு. இல் இம்பிரியன்ஸ், டியூடன்ஸ் என்ற நாகரீகமற்ற ஜனங்கள் இத்தாலியைத் தாக்கினார்கள். ஆனால் மெயஸ் ஜனங்களால் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டு இரு கூட்டத்தார்களையும் தொலைத்துவிட்டான். இதனால் தொடர்ந்து ஆறு வருஷங்களுக்குக் கான்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அக்காலத்தில் உரோமாபுரிச் சைனியங்களில் ஒரு பலத்த மாறுதல் உண்டாயிற்று. அதுவரையில் உரோமாபுரிக் குடிகளே சைனியத்தில் சேர்ந்து வந்தார்கள்.

இப்பொழுதோ பல நாடுகளின்மீதும் சாம்ராஜ்யத்தையும் கொள்ளையையும் கருதிப் பலர் சைனியத்தில் சேரத் தொடங்கினார்கள். இவர்கள் உரோமாபுரி ஆட்சிக்காரர்களுக்கு அடங்காமல் தங்கள் தளகர்த்தர்களுக்கு மட்டுமே கீழ்ப்படிந்து நடந்தார்கள்.

90 கி. மு. இல். இத்தாலியாவில் உள்ள ஜனங்கள் உரோமாபுரிக்கு விரோதமாகக் கிளம்பி பல சைனியங்களோடு தோற்கடித்தார்கள். ஆகவே உரோமர்கள் இத்தாலியர்களுக்கு உரோமாபுரி ஆட்சி கருத்தாக்களைக் கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால் உரோமாபுரியில் ஜன சட்ட சபையில் இவர்கள் எப்படிக் கூடுவது? ஆகவே இச்சுதந்தரம் பெயருக்கு மட்டுமே. உரோமில் வசித்தவர்களே இன்னரிமையை அனுபவித்தார்கள். ஆனால் இத்தாலியர்கள் உரோமுக்குப் போனால் உரிமையைச் செலுத்தலாம். ஆகவே கர்ஷல அரசாட்சி ஆயிவிட்டது. 89 கி. மு. முதல் 66 கி. மு. வரையில் உரோமர்கள் கிழக்காட்டு அரசனாகிய மித்ரிடேட்டஸ் என்பவனுடன் போர்புரிய நேரிட்டது. முதலில் சல்லா என்ற தளகர்த்தனும், முடிவில் பாம்பே என்ற தளகர்த்தனும் மித்ரிடேட்டஸின் வல்லமையைக் குலைத்தார்கள். பிறகு உரோமர்கள் வசமாகிவிட்டது

59 கி. மு. இல். ஜூலியஸ் சீசர் என்பவன் தளகர்த்தனாக நியமிக்கப்பட்டு கால் என்ற தேசத்தை ஜயித்தான். 55, 54, கி. மு. இல். பிரிட்டன் தீவு படையெடுத்துச் சென்றான். முன் சொல்லியிருக்கிற மொயஸ், ஸல்லா, பாம்பே, ஸீஸர், என்ற தளகர்த்தர்கள் சினேட்டுக்கும் ஜனங்களுக்கும் நடந்த சண்டையில் தங்களுக்கு இஷ்டமான கட்சிக்கு உதவியிருந்தார்கள். பெரும்பான்மை ஜனங்கள் கட்சிக்காக உழைத்தான். ஆனால் கலகங்களும் தெருச் சண்டைகளும் விளைந்தன. சினேட்டு கட்சியைச் சேர்ந்த ஸல்லா உரோமைப் பிடித்துக் கொள்ளவே, மொயஸ் என்பவனின் செல்வாக்கு தொலைந்துவிட்டது. ஸல்லா டிக்டேட்டர் என்ற பட்டத்தைவகித்து உரோமாபுரியின் அரசாட்சியைச் சீர்திருத்திச்சில அதிகாரத்தையும் சினேட்டு வசமாக்கிவிட்டான். ஆனால் ஸல்லா இறக்கவும் அவனுடைய வம்பாடுகளும் தொலைந்து விட்டன.

ஜனங்கள் மறுபடியும் அதிகாரத்தைக் கைக்கொண்டார்கள். பாம்பே என்பவனைத் தளகர்த்தனாக நியமித்தார்கள். அவன் கீழ் நாட்டிலிருந்து ஜயத்துடன் திரும்பி வரும் பொழுது தன்னை அரசனாக்கிக் கொள்ள முயல்வானென்று சினேட்டர்களும் ஜனங்களும் பயந்தார்கள், ஆனால் அவன் அவ்வண்ணம் செய்யாமல் சினேட்டர்கள் தனக்குக் தகுந்த அதிகாரம் கொடுப்பார்களென்று நம்பித் தன்னு சைனியங்களைக் கலைத்து விட்டான். அந்நம்பிக்கை பயனற்றுப்போகவே செல்வவானாகிய கிராஸஸ் என்பவனுடனும் ஜனங்கள் கட்சிக்குத் தலைவனான ஜூலியஸ் ஸீஸர் என்பவனுடனும் கூடிக்கொண்டு அரசாட்சியை நடத்த முயன்றான். அதன்மூலமாக ஸீஸர் "கால்" தேசத்துக் தளகர்த்தனாகவும் கிராஸஸ் பார்த்தியா தேசத்துத் தளகர்த்தனாகவும் நியமிக்கப் பட்டார்கள். ஸீஸர் பிரிட்டன் ஜர்மனி என்ற தேசங்களைப் படையெடுத்தது மல்லாமல் கால் முழுவதையும் ஜயித்துவிட்டான். கிராஸஸ் பார்த்தியர்களுடன் சண்டை செய்து யுத்தத்தில் மாண்டுபோனான். ஸீஸருடைய கீர்த்தியைக் கண்டு பொறாமைகொண்ட பாம்பே சினேட்டு கட்சியைச் சேர்ந்து கொண்டு அவனுடன் சண்டைசெய்யப் பல சைனியங்களைத் திரட்டினான். ஸீஸரோ தான் ஜனங்கள் கட்சிக்காகச் சண்டை யிடுவதாகச் சொல்லிக்கொண்டான். கிக்கிரத்தில் இத்தாலி முழுவதும் ஸீஸர் வசமாகிவிட்டது. பாம்பே கீழ் நாடுகளுக்கு ஓடி விட்டான். முதலில் ஸைபியினைத் தன் வசமாக்கிக்கொண்டு ஸீஸர் பாம்பேயைத் தொடர்ந்து சென்று 48 கி. மு. இல். பார்ஸேலியா என்ற விடத்தில் முறியடித்தான். சினேட்டு கட்சி தோல்வியடைந்தது. 45. கி. மு. க்குப் பிறகு ஸீஸரை எதிப்பார் ஒருவருமில்லை. சீஸரை முதல் உரோமன் சக்கரவர்த்தி என்று சொல்லலாம். ஆனால் தன்னதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னால் 44 கி. மு. இல். கொலையுண்டு மாண்டுபோனான். அவன் காலந்தொடங்கி உரோமாபுரி ஏகாதிபத்தியத்தை ஒரு மனிதனே ஆண்டுவந்தான். ஸீஸரும் அவனுக்குப் பிறகு ஆண்ட சக்கரவர்த்திகளும் தங்கள் அரசாட்சிக் குட்பட்ட நாடுகளைச் சரிவர ஆண்டுவந்தார்கள். ஸீஸர் கொல்லப்பட்ட

வுடன் அவனுடைய மருமகனாகிய ஆக்டேவியானஸ் என்பவன் ஆண்டனி, லெபிடஸ் என்பவர்களுடன் சேர்ந்துகொண்டு சொந்த எதிரிகளைத் தோற்கடித்து உரோமன் சாம்ராஜ்யத்தை இரு பாகங்களாக்கிக் கீழ்ப்பாகத்தை ஆண்டனிக்கு அளித்து மேல்நாடுகளைத் தனக்கு வைத்துக்கொண்டான். ஆனால் 31 இ. மு. இல். அக்டேவியானஸ் ஆண்டனியை ஆக்டியம் என்ற இடத்தில் தோற்கடித்துத் தானே ஏகச்சக்கராவர்த்தி யானான். பரிசுத்தமாகத் தன்னதிகாரத்தைப் பட்டங்கள் மூலமாக வெளிப்படுத்தாமல் சினேட்டுக்கும் உரோமாபுரி ஜனங்களுக்கும் தான் எவ்வளவுக்கு பாவித்து அதிகாரச் சின்னங்கள் மற்ற ஆடம்பரங்கள் ஒன்றுமில்லாமல் மதசம்பந்தமான, அகஸ்டஸ், என்ற பட்டத்துடன் ஆண்டுவந்தான். ஆனால் சைனியத்தை மட்டும் தன்னதிகாரத்திற்குள் வைத்துக்கொண்டான். இம்மாதிரி அரசாட்சியால் உரோமாபுரிக் குட்பட்ட நாடுகள் நன்மை அடைந்தன. உரோமன் சாம்ராஜ்யத்தில் சமாதானம் ஏற்பட்டது. உரோமன் நாகரீகம் பல நாடுகளிலும் பரவிற்று. முடிவில் கிறிஸ்துவ மார்க்கம் ஏற்பட்டு உரோமன் சக்கரவர்த்திகளால் தங்களுக்குக் கீழ்ப்பட்ட நாடுகளில் போதிக்கப்பட்டது.

(தொடரும்).

ரா. சே. சுப்ரமண்ய ஐயர் எம். ஏ. எல். டி.

காயம் பிணி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

உடற் கூறுபாடு.

337-ம் பக்கத் தொடர்ச்சி.

இம்மாதிரியில் வரும் பாகத்தில் வழங்கும் சாஸ்திரசம்பந்தமான பதங்களுக்குச் சரியான ஆங்கிலப் பதங்கள் வருமாறு:—

அஸ்தி சந்தி, குளை, பூட்டு, எலும்பு பொருத்து, கொளுசு.	Joints.
நித்தாசில்லிச் சவ்வு, அல்லது சந்திக விலேஷ்மச் சவ்வு.	Synovial membrane.
கவசம் அல்லது பை.	Sac.
சந்திக விலேஷ்மம், அல்லது மிணெய், அல்லது நித்தை.	Synovia.
தாடைக்கீல்.	Articulation of the lower jaw.
தோள் மூட்டு.	Shoulder joint.

முழங்கைப்பொருத்து.	Elbow joint.
ப்ரதாரம், அல்லது கீலம்.	Hinge joint.
கவித்தல்.	Pronation.
மலர்த்தல்.	Supination.
மணிக்கட்டு.	Wrist joint.
தொடைச் சந்து.	Hip joint.
உதூகலம்.	Ball and socket.
முழங்கால் பொருத்து.	Knee joint.
கணுக்கால்.	Ankle joint.

அஸ்தி சந்தி, பிரதி பதங்கள், பொருத்து, கீல், குளசு, பூட்டு, கொளுசு என்பனவாம்; இரண்டு அல்லது மேற்பட்ட எலும்புகள் ஒன்றோடொன்று சேரும் இடத்திற்குச் சந்திகள் என்று சொல்லப்படும். எலும்புகள் ஒன்றின்மேலொன்று உழலுகையில் தேய்வுறுவண்ணம் ஒன்றுக்கொன்று அணுகியுள்ள அவ்வெலும்பு முனைகள் வெளிறிய ஊதா நிறமான முருந்து அல்லது குருத்தெலும்பு என்னும் மிருதுவான வஸ்துவால் கவர்ந்து மூடப்பட்டிருக்கின்றன. இவைகளின்மேல் நித்தாசில்லிச் சவ்வு, அல்லது சந்திக சிலேஷ்மச் சவ்வினல் உண்டாக்கப்பட்ட கவசம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இக்கவசமென்னும் பையினுள்ளிருந்து சிலேஷ்மம் (நிணநெய் அல்லது நித்தை) என்னும் ஓர்விதப் பசை வண்டிச் சக்கரங்கள் செவ்வையாய்ச் சுழல்வதற்கு எண்ணெய் உதவுகிறதுபோல நம்முடைய எலும்புப் பொருத்துகள் தேய்வடைந்து சேதப்படாமல் ஆயுள்பரியந்தம் வழவழப்படைந்து எளிதில் உழலும்படி சுரந்துகொண்டே யிருக்கிறது. இக்கவசங்களுக்கு வெளியில் எலும்பு முனைகளை ஒன்றோடொன்று சேரப் பலமாய் இணைத்துக்கட்டுவதற்கு அனேக பந்தனங்களுள்ளன. அவை பலமுள்ளதாம் வெண்ணிறமுமான ஸ்நாயுகள் அல்லது அஸ்திபந்தனங்களாயிருக்கின்றன.

சந்திகளிற் சில அசையாமலும் சில கொஞ்சமாக அசைந்துகொண்டும் சில மெத்த அசைந்துகொண்டும் இருக்கும். மண்டையோடுகளும் பற்களும் அசையாமற் கூடியிருக்கும். மூள்ளெலும்புகள் திரிகஸ்தான எலும்பு ஆகிய இவைகள் கொஞ்சமாய் அசையும்படி கூடி இருக்கும். புஜ எலும்பு தொடை எலும்பு முதலியவை மெத்த அசையும்படி கூடியிருக்கும்.

நாடைக்கீல். கிழ்க்காடை எலும்பின் முட்டிமுடிகளானவை காலிகுழம்பி லிருக்கிற சிறிய பள்ளங்களில் அமைந்து காடைக்கீல் ஏற்படுகின்றது. கிழ்க்காடை எலும்பு காழ்ந்தால் வாய் திறக்கும். உயர்ந்தால் வாய் மூடும். முன்னுக்கு வந்தால் முகவாய் பிதுக்கும். இதில் பக்கவாட்ட அசைவுகளும் உண்டு.

தோள்மூட்டு. தோள்பட்டை எலும்பில் விருக்கிற பள்ளத்தில் புஜ எலும்பின் உருண்டையான தலை சேர்ந்து தோள் மூட்டு உண்டாகின்றது. இதற்கு கீட்டல், முடக்கல், நெருக்கல் அல்லது அணைத்தல், அகற்றல், சுழற்றல் என்ற ஐந்தவித அசைவுகள் உண்டு.

முழங்கைப் பொருத்து. புஜ எலும்புடன் முன்னங்கையின் இரண்டு எலும்புகள் சேர்ந்து முழங்கைப் பொருத்து உண்டாகின்றது. இதற்கு கீட்டல் முடக்கல் ஆகிய இரண்டவித அசைவுகள் மாத்திரம் உண்டு. ஆரை எலும்பின் சிகரம் இரத்தினி எலும்போடு சேர்ந்து உருளுவதால் கை நிருப்பல் உண்டாகின்றது. உள்ளங்கையைக் கீழ் நோக்குப்படி நிருப்புவதற்குக் கவித்தல் என்றும் மேல்நோக்குப்படி நிருப்புவதற்கு மேலாத்தல் என்றும் சொல்லப்படும்.

மணிக்கட்டு. ஆரை எலும்பின் சிகரமானது மணிக்கட்டிலுள்ள முக்கிய முன்று காண்டிகளுடன் சேர்ந்து மணிக்கட்டு ஏற்படுகின்றது. இதற்கு முடக்கல், கீட்டல், நெருக்கல், அகற்றல், சுழற்றல் என்ற ஐந்தவித அசைவுகள் உண்டு.

நாடைச்சந்து. தொடை எலும்பின் கிளையான இடுப்பெலும்பிலுள்ள குழியில் சேர்ந்து தொடைச்சந்து உண்டாகின்றது. இதற்கு முடக்கல், கீட்டல், நெருக்கல், அகற்றல், சுழற்றல் என்ற ஐந்தவித அசைவுகள் உண்டு.

முழங்கால் பொருத்து. தொடை எலும்பின் கிழ் முனையும் கணைக்கால் சிகரமும் சேர்ந்து முழங்கால் பொருத்து ஏற்படுகின்றது. இதற்கு முடக்கல் கீட்டல் என இரண்டவித அசைவுகள் மாத்திரம் உண்டு.

கணுக்கால். நளகம் சரளவும்பு ஆகிய இரண்டு எலும்புகளின் கீழ் முனையுடன் சாரி எலும்பு சேர்ந்து கணுக்கால் ஏற்படுகின்றது. இதற்கு முடக்கல் கீட்டல் என்ற இரண்டு விதமான அசைவுகள் உண்டு. பக்கவாட்ட அசைவும் கொஞ்சம் உண்டு.

சந்திகளில் முக்கியமாய் உதாகலம் பிரதரம் என்ற இரண்டு விதங்களுண்டு. உதாகலம் என்ற சந்தியில் எலும்புகள் உரலும் குழவியும் போலிருந்து எவ்விதமாக வேண்டுமானாலும் உழன்று அசையக்கூடியனவா யிருக்கும். உதாரணம் தோள் மூட்டும் தொடைச் சந்துமாம். பிரதரம் அல்லது கீலம் என்ற சந்தி கீல் கதவுகளைப்போல் அசையக்கூடியது. இவ்வாறு சேர்ந்துள்ள எலும்புகள் வலது இடது புறமாகவோ, அல்லது மேலும் கீழுமாகவோ அல்லது முன்னும் பின்னுமாகவோ மாத்திரம் அசைபக்கூடின. உதாரணம் முழங்கால் பொருத்தும் முழங்கைப் பொருத்துமாம்.

இத்துடன் "உட்கூறுபாடு" என்னும் விஷயத்தை முடித்து விட்டோம். இனி எலும்புத் தகர்ச்சிகள் அல்லது அஸ்தி பங்கங்களைப்பற்றியும் அவற்றின் சிகிச்சைகளுக்குரிய உபசரணைகளைப்பற்றியும் கூறி, பின்னர் சரீரக் கிரியைகளைப் பற்றி விவரிப்போம்.

ரே. கோவிந்தசாமி நாயுடு,
மெடிக்கல் பிராக்டிஷனர்,
தூத்துக்குடி.

சித்ராங்கனை.

கபிலர் வாழ்ந்த குறிஞ்சி நாட்டிலே, தேனுங் தீம்பாலும் பிளிற்றி நிற்கும் மலைச் சாரலிலே, நானும் என் சேவகனும் நாள் முழுதும் வேட்டையாடிக் களைப்புற்று—எனக்குச் சிறிது காயங்கூட—னன வழக்கற்று வாவலும் கானக் குரீஇயும் கூச்சிட்டு கிற்கும் கூடங்களும், அறை

பொருந்திய ஒரு மாளிகையிலுள் புகுந்தோம். மக்கள் வழக்கற்ற அம் மாளிகை, சபிக்கப்பட்டிலையென்றான் அல்லது கவனிப்பாரின்றி விடப் பட்டது என்பதற் கறிகுறியாக ஆங்காங்கு சிறு குரிச்சிலும், கட்டில் களும், கோயாறும் இருக்கையும் சந்தமாகவும், அவற்றின் சொந்தக்கா ரின் வாளமான செல்வத்திற் கேற்றபடி நிறப்பாகவும் அலங்கரிக்கப்பட் டுக் கிடந்தன. காக்கள் மேனிலைக்குச் சென்ற அங்கிருந்த ஒரு பசிக்கை யறையுள் நுழைந்தோம்.

அந்தப் பசிக்கையறையை இவ்வித மிருந்தென்று எம்மால் சொல்ல முடியாது. அங்கிருந்த சாமான்கள் யாவும் மிகவும் கேவலத்திற மைக்க தாகவும், மிக உயர்ந்ததாகவும், அழகுத் தெய்வத்தின் கண்மையை உன்னி யுன்னி யாராய்ந்த கலையறிவாளர்க்கு மிகவும் இன்ப மளிக்கும் வண்ணமாகவும் இருந்தன. கண்மையில் அலை யாவும் உபயோகிப்ப வர்க்கு மெய் யின்பம் அளிப்பனை யாகவும், கண்ணு மனத்துக் காட்சி யின் பம் அளிப்பதாகவும், கொஞ்சம் உழைப்பதாகவும் இருந்தன. சுவரெங் கும் பலவகை வண்ணகளில் கையாய்ந்த ஓவியரால் தீட்டப்பட்ட அழகிய சித்திரங்கள் மாட்டப்பட்டிருந்தன. விதானத்திருந்து மின் கூட்டம் ஒளி செய்தாலென பிற சிறு விளக்குகள் தொங்கி கின்றன. அறையின் நடு வில் ஒரு கொத்து விளக்கு பல கிளைகளுடன் பிழையவைக்கப்பட்டிருந்தது.

நான் மெத்தையும் அணையும் போடப்பட்டுக் கிடந்தகட்டிலிற் சாய்ந்தேன். அணையின் பக்கலில் ஒரு புத்தகம் அங்கிருந்த சித்திரக்களின். பெயரியரும் வரலாற்றையும் தெரிவிப்பது, கண்டது. பொழுது போக் காகவும், கூடுமானால் அங்கிருந்த சித்திரக்களைப் பார்த்துக் கொண்டும், மனமிருந்தால் அவை தெரிவிக்கும் சரிதையைப் படித்துக் கொண்டும், கண்ணயரலாம் என்று நினைத்துக் கொண்டே என் பயற் பிரயோ, பல னிகளோ முடிவிட்டு, அங்கிருந்த விளக்கை எரியவிடக் கட்டளையிட்டேன்.

கொஞ்சம் நான் அந்தப் புத்தகத்தைப் படித்தேன். கொஞ்சம் மூ வத்திடலும் பதியுட்டும் அவ்வருவங்களோ கொஞ்சினேன். கருத்தை வும் சந்தோஷமாகவும் கோரு சென்றது. எனினும் யாயிற்று. என் பயற் சிறுவன் அயர்ந்து தூங்கிவிட்டான். நான் பெரிக்கு கின்ற கடலைச் சிறிது தூண்டினேன்.

இச் சிறு காரியம் எதிர்பாராத தொரு இன்பவிளைவான கிழ்ச்சியை விளைத்தது. கூடின் விளக்கம் இப்பொழுது, நான் முன் கவனிக்காத தொரு சுவரிலே பிருந்த மாடத்தின் மீது பட்டது. அங்கு-சொல்லவா- அழகிய தொரு தருணீனியின் உருவைக் கண்டேன்.

ஓகா! அச்சிறு வுருவம் என் மனத்தில் நேயாளு இன்பம், விளைத்த ன? மிஞ்சிய களியில் கண்களோ மூடிக் கொண்டேன். எதிரிலிருந்த

ரு ஓவியன் தன் கரங்களால் உண்மையில் வரைந்ததாலு அல்லது நித்தி ராதேவி விளையாட்டாகக் கனவிற் நீட்டிய மாயச் செய்தியா? உண்மை விளங்கவில்லை. கண் திறந்தேன். மறுபடியும் அவ் வழகின் உருவம் என் முன் கண்டேன். உண்மையென்று தேர்ந்தேன். என் கண்களாலே அத னழகு முழுவதையும் பருகினேன்.

அது உண்மை என்பதில்—அது சித்திரம் தான் என்பதில் சிறிதே னும் ஐயமில்லை. ஒளி நிறைந்து நின்ற அவ் வறையில் அணிபெற நின்ற அவ் வனிதையின் உரு முதன் முதலில் என் விழியிற்பட்ட பொழுதே ன் கலக்கம், உட்டோர்வு யாவும் மாய்ந்தன. எழுந்து நின்றேன். மீண் டும் அதை உற்று நோக்கினேன்.

வண்ணத்தில் விளங்கிய கட்டழகி அப்பொழுதுதான் தன்னையறியா மலே கழுவிய வாலைப் பருவத்தைக் கையிட்டு யௌவனக் கோலத்தை அவசரமாக வணிந்துகொண்டிருந்தாள். அடடா! வெறும் சிரம், இருபுயங் கள்-அவையும் மந்த மாருதம் வீசினுற் போல மேலாக-இவைதான் அங்கு தீட்டி யிருந்தது. கைகள் மார்பு இவை கரைந்தது போல எழுதாது மனக் கண்ணுக்கு மாத்திரம் புலனும் வண்ணம் விடப் பட்டிருந்தன. பொன்னு லும் மணியாலும் அலங்கரிக்கப்பட்டு அழகாக வட்டவடிவிற் கண்ணுடி யிடப்பட்டு அது விளங்கியது.

அது சிறந்தசொரு சித்திரம். அதை வரைந்த ஓவியன் மிகவும் விதேர்ந்தவன் என்பதில் சந்தேகமே இல்லை. வெரு கோம் அதை வெறித்த வண்ணமாகவே நான் பார்த்து நின்றேன். அந்தப் படத்தில் உயிர்க்களே நன்ருக வாய்ந்திருந்தது. அந்த வட்டவடிவும், உடல் சித்த ரிக்கப்படாதிருந்த தன்மையும், பொன்னுலிட்ட சட்டகமுமே என்னை அதை உயிர்ப் பொருள் எனக் கொள்வதினின்றும் தவிர்த்தன.

மெள்ள விளக்கின் ஒளியைச் சிறிது குறைத்திவிட்டுப் பக்கத்திலிரு ந்த புத்தகத்தை யெடுத்து அதில் வரையப் பட்டிருந்த பின்வரும் சரிதை யைப் படித்தேன்.

அவன் கட்டழகி. பருவ முதிர்ச்சியில் மலர் முகைகள் விரிவதுபோலே அவளகத்தி லிருந்த வின்பப் பெருக்கினுல் அவள் செவ்விய விதழ்கள் எப்பொழுதும் மலர்ந்து காட்டும். பாழ்காளது அவள் இவ்வோவிய வல்லனைக் கண்டு காதலித்து மணங்கொண்ட பொழுது. அவன் வித்தை யில் அர்வம் மிருந்தவன். மனத்தை அடக்கியாளச் சமர்த்தன். தன் வித்தையையே தனிவியுங் காதலியுமாகக் கொண்டவன். இவளோ டழகி. கவியுங் கூத்தும் மிஞ்சி ஞனந்த வெள்ளம் பொழிய

கையினன். தனக்கு மாறுக நின்ற, தன்னன்பன் மனத்தை வசீகரித்த ஒலியச் தொழிலைத் தமிழ்த்து, மின்ற எதனிலும் அன்பு பாராட்டுபவன். தன் காதலன் முகத்தை மறைத்து நின்ற சித்திரப் பலகையையும், இலே கணியையும் மாத்திரம் கண்டு பிரியுறுபவன். தன் காதலியின் உருவத்தை வரைய விரும்பி அவ் யுவகன் அவள் அனுமதியை வேண்டி நின்றபோது அது அவளுக்குப் பொறுக்கமாளாததாக இருந்தது. இருந்தாலும், பொறுமியவன் அவன் சொற்படி வாரம் வாரமாகச் சித்திரசாலையில் உட் கார்ந்துகொண்டே வந்தான். ஓவியச் சிறுவன் மனத்திலே, தன் தொழி லில் மிகவும் ஊக்கமுடையவன் தன் காதலியின் உருவத்தை வரையப் போகிறோம் என்ற பெருமையும் குதூகலமுமே குடிகொண்டிருந்தன. அவன் அந்தச் சித்திரம் வரைவதிலேயே வெறியாயிருந்தான். ஒவ்வொரு காலும் தன் முன்னின்ற உருவம் வண்ண முறவரைக் கவனித்தாலே யொழிய, தன் உயிர்க் காதலி கோயுற்ற இயற்கை உருவத்தைப் பார்க்கக் கூட வில்லை. இருந்தாலும், அவனே அவ்வளவாகக் காதலித்தவன், இனமும் இளைத்து வாடி நின்ற தன்னைச் சித்தரிப்பதில் அவ்வளவு ஆர்வம் கொண்ட அவ் வீணனுன்முன்—அவனுக்கு எல்ல பேரும் உண்டு—புன்னகை தவ ழும் முகத்துடன் தன் இருக்கையில் அமர்வான். உண்மையில் அந்தப் படத்தைப் பார்த்த யாவரும் அந்த உருவ வொற்றுமையைப் பற்றி—இத னின்றுமே அவன் கைவண்மையும் உள்ளன்பும் தெரியலாம்—வெகுவாக வியந்து பேசினுர்கள். சித்தம் தீர்ந்து முடியுந் தருவாயில் அவன் அதைக் குள் ஒருவரையும் விடவில்லை. ஓவியச் சிறுவனுக்குச் சித்த வெறி பிடித்துவிட்டது. தன் மனேவியின் முகத்தைக் கூடப் பார்த்தத் திரும்புவ தில்லை. சித்திரப் பலகையில் வர்ணம் ஏற ஏறத் தன் மனேவியின் முகத்தி லிருந்து இரத்தம் குறைவுறுவதையும், ஒளி குன்றுவதையும் அவன் கவ னிக்கவே இல்லை. கடைசியாக, அரை வாசல் கடந்தபின், கண்ணில் ஒரு புன்னியும், உதட்டில் ஒரு வரியும் மாத்திரம் இடையிருந்திருந்தபோது அவியப்போகும் விளக்குப்போல அவ் வழகியின் உடல் முழுவதும் ஒரே நியாயமாகச் சுடர்விட்டுப் பிரகாசித்தது. ஓவியனும் தன் வரை கோலால் குறையையும் வரியையும் இட்டு முடித்தான். முடித்த தன் சித் திரத்தின் முன் ஒரு கணம் ஆனந்த பரவசனுப் பெருமையுடன் நின் ருன். அவனுக்கு மயிர்க்கூச்செறிந்தது. கைகள்கள் நடுங்க முற்றன. கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிற்று. "இவனல்லோ என் உயிர்க் காதலி!" என்று கூவினுன்.

மறு கணம் தன் காதலியைக் கொன்றோன். அவன் இதற்குமுன்— இறந்துவிட்டான்!

ரா. வாசுதேவ சர்மா, பி.ஏ. (ஹானர்ஸ்).

தீயோர்.

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.—மூதுரை.

பொய்பன், நிருடன், அதிக காமமுள்ளவன், வெகு லோப முள்ளவன், தீர்க்க கோபமுள்ளவன், பிறரைத் தூஷிப்பவன், இவர்கள் தீயோ ராவர்.

குதிரைக்குப் பக்து முழம், ஆடுமாடுகளுக்கு ஐந்து முழம், யானைக்கு ஆயிரம் முழம், துர்ஜனனுக்குக் கண்ணுக் கெட்டாத தூரம் ஒதுங்கவேண்டு மென்பது நீதி. இந்த விஷயத்தையே ஔவை "தீயாரைக் காண்பதுவும் தீதே" என்று கூறியிருக்கி ருள். ஈர்வன, பறப்பன, விலங்கு முதலிய ஜீவராசிகள் ஏதாவது ஒரு அங்கத்தில் விஷம் வைத்திருக்கின்றன. உதாரணமாக, தேளுக்குக் கொடுக்கில் விஷம், ஈக்குக் கலியில் விஷம், பாம்புக் குப் பல்லில் விஷம். துஷ்டனே, பொய் சொல்வதால் நாக்கிலும், திருடுவதால் கையிலும், கோள் சொல்வதால் உதட்டிலும், பிறர் பொருளே இச்சிப்பதால் கண்ணிலும் விஷத்தைக் கொண்டிருக் கிறுன். பிறவியால் உயர்ந்தவனுகிலும் செய்கையால் துஷ்ட ஜந்துக்களிலும் கெட்டவனுகின்றன். ஆகையால் அவைகளைப் பார்க்கவாவது செய்யலாம். இவனைப் பார்ப்பதும் தீங்கு.

துர்ஜனன் ஸத்ஜனரிடத்துள்ள ஸத்குணங்களையும் துர்க் குணங்களாகவே நினைக்கின்றன். எப்படியெனில், லஜ்ஜையுள்ள வனைப் பார்த்து ஜடனென்பான். சிறுத சீலனை டம்பிக னென்பான். ஆசார முள்ளவனைக் கபடி என்பான். சூரனைத் தயையில் லாதவ னென்பான். பிரிய வாதியைத் தீன னென்பான். மௌன வரை மதியில்லாத வனென்பான். அழகுள்ளவனைக் கர்வி யென்பான். பேசுந் திறமுள்ளவனை வாயாடி யென்பான். ஸ்திர ஞான னை அசக்த னென்பான். இதுகாரணம் பற்றியே, மேற்கூறிய வெண்பாவில் 'தீயார்சொற் கேட்பதுவும் தீதே' என்று சொல்லப் பட்டிருக்கிறது.

னர்களுடைய குணத்தை கல்லோர் எடுத்துக் கூறி அவர்களைத் திருத்த முயல்வதைவிட தெடுகிலேயே உயிரைவிடுவதும். ஒரு தாக்கணாங்குருவி, வாசனை ஒன்று மலரில் கலவாதைப் பார்த்துப் புத்தி சொன்னதால் தன் கூட்டையும் பிழந்து கஷ்டப்பட்ட தென்ற கதை எல்லாருக்கும் தெரியும். ஆகவே 'நீயார் குணத்தை நுகைப்பதுமல் நீ' என்று நம் மூதாட்டி கூறியிருக்கிறாள்.

துஷ்டரிடம் சேர்வது எப்போதும் ஆபத்துக் கிடம். துஷ்ட னொருவன் கல்வி கேள்விகளில் வல்லவனாயிருக்கிறானென்று அவனுடன் ஸ்நேகம் செய்வதும் பிழை. கல்வி ஞானங்களிலும் மேலதிகமாகக் கூறப்படும் சாகசத்தினத்தால் மூடிக்கப் பட்டிருக்கிறதென்று எப்பதற்கோ சேர்வாருண்டா? மேலும் துஷ்ட னொருவன் கஷ்டத்தில் விழுந்திருக்கிறானென்று அவனை விடுவிக்க எண்ணுவதும் புத்தியீனம். எனென்றால், அத்துஷ்டன் செய்ந்நன்றி மறக்கும் நடுகாரஞ் செய்தவனையே முன்பும் குரோதத்தோடு வான்.

தேனது நீயில் வீழ்ந்தால் செந்திடா தெடுத்த பேரீச்சம்
மீனையே கொடுத்து நூலே மெய்யுறக் கொட்ட லேபோல்
வானளம் பேசித் திக்குற் றிருப்பதை எதிர்கண் டாலும்
கோளினர் தமக்கு நன்மை செய்வதும் குற்ற மாமே.

விவேகசிந்தாமணி.

தேள் தெருப்பில் விழுந்து சாகிறபோதிலும் என்ற இரக்கத் தோடு ஒருவன் கையினால் எடுத்தால் எடுத்தவனைக் கொட்டும்; அதுபோல, துஷ்டனுக் குபகாரஞ் செய்தால் அவன் உதவியுள்ள வனையே எதிர்ப்பான். ஆனதுபற்றி "அவரோ டினைய யிருப் பதுவுந் தீது" என்று கடையிலே சொல்லப்பட்டுள்ளது.

ஏ: பாலசுப்ரமண்ய ஐயர்.

கண்ணம்மாள் கதை.

320-ம் பக்கத் தொடர்ச்சி.

"எனடி—! (அவன் கூறிய வார்த்தையை கண்டி எழுதக்கடவில்லை) இது உன் கையெழுத்தானே?" என்று துரைசாமி, சற்றுக் கடிதத் தில் கண்ணம்மாள் கையெழுத்தைச் சுட்டிக்காட்டிக் கேட்டனன்: "ஆம்"

என்று ஒப்புக்கொள்ளுவதற்கு அழுதவாறே தலையசைத்தனள் கண்ணம் மாள். திடுமென அவள் மார்பில் ஒரு பலத்த உதை விழுந்தது. பிரக்ஞை யற்று மூர்ச்சித்தவளாய்க் கீழே வீழ்ந்தனள். அதைக் கண்டதும், கோட் சொல்லிய செட்டியார் பயந்துவிட்டார். உடனே தான் அங்கிருப்பது ஆபத்தெனக் கருதி, வந்த வழியே திரும்பி விரைந்து நடந்து தன் வீடு சென்றனர். துரைசாமிக்கோ நெஞ்சில் இரக்கம் என்பதே இல்லை. சர சரவெனச் சமையலறைக்குச் சென்றான். எதற்காக? தன் மனைவியின் மூர்ச்சையைத் தெளிவிப்பதற்காக. மூர்ச்சை தெளிவிப்பதற்கு முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளிக்கலாம் அல்லது வேறு பலவித உபசரணைகள் புரியலாம். ஆனால் துரைசாமி புரிந்த உபசரணை மிக நவீனமானது. சமைய லறைக்குச் சென்றவன் தான் முன்னமே அடுப்பு நெருப்பில் புகுத்தி யிருந்த இரும்புச் சட்டகப்பையை எடுத்து வந்தான். கண்ணம்மாளின் இர ண்டு கால்களிலும் சூடிட்டுவிட்டான். "அம்மா!" என்று அலறி எழுந்திட் கார்த்தனள் நமது பேதை. சூலுக்கிருந்த தன் ஆடைகளைச் சட்டென ஒழுங்காக்கிக் கொள்வதில்தான் முதன்முதல் அவள் கவனஞ் சென்றது. கூச்சல் போடவில்லை. அவள் இருதயம் வெடித்துப் போவது போலவும், சிரம் இற்று வீழ்ந்து விடுவது போலவும் தேம்பித் தேம்பி, தேகமெ லாம் விதிர்விதிர்த்திருந்தாள். அவள் சிந்தை யெல்லாம் தெய்வத்திற்கு அபய மிட்டது.

"உன் கைகளையெல்லாம் கழற்றிக் கீழே வை. இல்லாவிட்டால் உன் உடம்பு முழுவதும் சூடிடுவேன்." என்றனன் துரைசாமி. அவ்வாறே ஒவ் வொன்றாகக் கழற்றிச் சகல கைகளையும் கீழே வைத்துவிட்டாள் மனைவி. தாலிச் சாடி ஒன்று மாத்திரம் அவள் கழுத்தில் இருந்தது.

"உன் தாலியையும் அறுத்துக் கீழே வைத்துவிட்டு நீ தாராளமாய் எங்கேனும் போய் உனக்கிஷ்டமானபடி டிராமா போட்டு ஆடு. உன்னை இன்றோடு ஒழித்துவிடப் போகிறேன்." என்றனன் துரைசாமி.

"நான் செய்த தெல்லாம் பெருங் குற்றமே. இனி நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அப்படியே நடக்கிறேன். அணுவளவு தவறினால் என்னைக் கொன்றுவிடுங்கள். இந்த ஒரு முறை மாத்திரம் மன்னியுங்கள்" என்று கீழே தொப்பென வீழ்ந்து துரைசாமியின் பாதங்களைப் பற்றி கமஸ் கரித்தனள் கண்ணம்மாள்.

"தாலியைத் தருகிறாயா? இல்லையா?" என்று துரைசாமி அவள் கழுத்தில் கை வைக்கலாயினன். கண்ணம்மாள் தன் இருகரங்களாலும் கழுத்தை நன்கு மூடிக்கொண்டாள். கணவன் கூடியவரை முயன்றும் அவளால் மாங்கல்யத்தை நெளிந்துப் பெறமுடியவில்லை. எனவே கொண்டுசென்று

தன் இரண்டு கைகளினாலும் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு முழங்கால் மடித்து

"உன் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவேன், உன் கையை விடு" என்றான்.

"அப்படியே செய்யுங்கள். அதனால் எனது மோகம், பின்பு கலியாணம் நீங்கள் தாலியைக் கழற்றிக் கொள்ளலாம்" என்றாள் மனோலி. மூர்க்கனுக்குக் கோபம் அதிகரித்துவிட்டது. தன் கைகளால் அவளுக்குப் பல தண்டப்பிரயோகங்கள் செய்து அவள் எதிர்ப்பதற்கு இழுத்த அவளுடைய நல்லிக் கரணைச் சாய்த்து உள்ளே தாழிட்டுக்கொண்டான். கண்ணம்மாள் எழுந்து வந்த கூடியவரை தன் கோபத்தை நிறுத்த முயன்ற ஒரு பைத்தியக்காரியைப் போல் முன் வாசல் கவுட்டில் உட்கார்ந்திருந்தாள். சமையல் அறை மேலிருந்து தாழிட்டு தாழ்ப்பாள் விட்டிருப்பதை வெளியிலிருந்து கதவைச் சார்த்திப் பூட்டினான். கண்ணம்மாள் மீண்டும் பல பல சொல்லிக் கெஞ்சினாள். தாசைசாமியோ அவளைப் பேசவாது மௌனமாகவே இனி அரை விநாடி அவளை வீட்டில் வைத்துக்கொள்வதில்லை யென்றும் அவள் எங்கேனும் நடந்துபோய் விடவேண்டுமென்றும் சொல்லி விட்டு, தன் கையிலிருந்த சாவியால் அவள் முன்னாலேயே இரண்டு பூமி ட்டு வருமாறு ஒரு அடி அடித்துவிட்டுப் போய்விட்டான். கண்ணம்மாள் தன் புடவையால் இரத்தத்தைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தாள். அது மேலும் மேலும் பொங்கி வரவே ஒரு மண்ணை எடுத்துக் காயத்தில் வைத்து இரத்தம் வருவதைத் தடுத்து, சோர்ந்து தொழுத் திண்ணையில் படுத்தாள்.

சற்று நேரத்தில் எதிர் வீட்டு ஜானகி வந்தாள். பின்னிப் பின்னிப் பார்த்துக் கண்ணம்மாவை மிகவே கேள்விகள் கேட்டு, நடந்த விஷயத்தை ஒருவாறு அறிந்துகொண்டாள். நடந்த விஷயம் மாத்திரம் அவளுக்குத் தெரியாது. பின்னர், தன் வீட்டிற்கு வருமாறு கண்ணம்மாவை மிகவே வேண்டினாள். கண்ணம்மாள் மறுத்துவிட்டாள். மீறியே துன்ன பல வீட்டு ஜனங்களும் பற்பல விதமாக விஷயம் கேட்டு, வேடிக்கை பார்க்கவும், பரிதாபப்படவும், பரிகசிக்கவும், சிரிக்கவும், தேறுதல் கூறவும், பற்பல கருத்துக்களுடன் கண்ணம்மாவை வந்து பார்த்து விட்டுச் சென்றார்கள். கண்ணம்மாள் அவ்வளவையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு தன் கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஜானகி, நீலம்பாள், கற்பூரவல்லியார், ஜயலக்ஷ்மி முதலிய பல ஸ்திரீகளும், அவரவர் ஜானகி வீட்டிற்குப் போய் இருக்கும்படியும் உதவாது உண்ணும்படியும் எவ்வளவோ கூறியும் கண்ணம்மாள் உடன்படவில்லை. ஜானகி மாத்திரம் அவளைப் பிரியாது அவளருகே இருந்தாள். அவள் கணவன் பொழுதிற்கு வந்த

போதுங்கூட "நீங்களே எப்படியாவது இன்றையப் பாட்டுக்கு வழிசெய்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டாள். அவரும் அதற் கிணங்கிவிட்டார்.

கண்ணம்மாள் அன்று முழுதும் உணவு உட்கொள்ளவில்லை. ஜானகியும் அவள் கூடவே உபவாச மிருந்தாள். கண்ணம்மாள் சுற்றுக் கடிதத்தில் கையெழுத்திட்டதற்குத் தான்தான் முக்கிய காரணமா யிருந்ததற்காக ஜானகி மிக வருந்தினாள். தாசைசாமியைப் போலொத்த கணவனிடம் வாழ்ந்தா லென்ன வாழாவிட்டா லென்ன என்றவாறு தனக்குத் தோன்றிய புத்திமதிகள் எடுத்துரைத்தாள். ஆனால் அவைகளெல்லாம் கண்ணம்மாள் கவனத்தைத் தாக்கவில்லை. சாயங்காலம் மாயிற்று, இரவாயிற்று. தாசைசாமி வரவில்லை. கண்ணம்மாள் உணவின்றி, தெருத்திண்ணையிலேயே இருந்தாள். ஜானகியும் அவளை நீங்கவில்லை. தன் கணவன் உத்தரவோடு இரவு முழுவதும் அத்திண்ணையிலேயே கண்ணம்மாள் கூடவே இருந்தாள். ஆனால் கண்ணம்மாள் அன்றிரவு முழுவதும் தூங்கவேயில்லை. ஜானகியோ பட்டினியா யிருந்த களைப்பினால் அயர்ந்து நித்திரை செய்தாள்.

பொழுது விடிந்தது. தாசைசாமி வரவில்லை. ஜானகியோ, கண்ணம்மாளுக்குத் தன் வீட்டில் வந்திருக்க இஷ்டமில்லாததால் அவள் உடனே தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போக வேண்டுமென்றும், தானும் துணைபாக வருவதாகவும் சொல்லி, பல் துலக்கி ஸ்நானம் செய்து உண்ணும் படியும் வற்புறுத்தினாள். கண்ணம்மாளோ, தன் கணவன் வருகிற வரையில் அல்லது தன் உயிர் போகிற வரையில் அத்தத் திண்ணையிலேயே உபவாச மிருப்பது என்பது தன் தீர்மானம் என்று தெரிவித்தாள். அப்பொழுது ஜானகி, "அப்படியானால் கண்ணம்மா! என் தீர்மானத்தைக் கேள். நீ உண்ணும் வரையில், நீ என் வீட்டுக்காவது தஞ்சாவூருக்காவது வாச் சம்மதிக்கிற வரையில் அல்லது என் உயிர் போகிற வரையில் இத்தத் திண்ணையிலேயே நான் பட்டினியா யிருப்பது என் தீர்மானம்." என்றனள். இம்மொழிகளைக் கேட்டதும் கண்ணம்மாள் கண்களில் கண்ணீர் பொங்கிற்று. ஜானகியை இறுகத் தழுவி முத்தமிட்டுக் கொண்டாள். "ஐயோ! இந்த ஜானகி ஒரு ஆணைப் பிறந்து இவளை நான் கணவனைப் பெற்றிருந்தால், அதுவன்றோ ஸ்வர்க்க வாழ்க்கை" என்று பளிச்சென ஒரு எண்ணம் அவளுக்குத் தோன்றியது. பின்பு, "ஆ! நான் என்ன இழிந்த நெஞ்சையினள்! நான் இப்படி எண்ணுப்படி ஒரு பெண்பாலினிடத்தும் பாசங் கொண்டிருப்பது பதிவிரதா தன்மைக்குப் பங்கமல்லவா! எனைப் போல் பாவியும் உண்டா!" என்று அதிர்ந்த நிமிஷமும் என்னலாயினள். கண்ணம்மாள் பரிசுத்தம் நிறைந்தவள். அன்பே உருவானவள். களை

றவள். சிறந்த கல்வியறிவு கொண்டவளாயினும் அவள் பேதையே. தன்னைப் போல், கணவனுக் கடங்காது பிழை செய்த பாதி பாரிலேயே கிடையாதென எண்ணிப் பதறி எக்கினாள். அவள்பாற் பிழை யுளதோ, இல்லையோ, பிழை யுளதாயின் அது சிறு பிழையோ, பெரும்பிழையோ என்பன வாதிய விஷயங்களைப்பற்றி நமது கருத்தைக் கூறத் தனியோம். அவ்விஷயங்களோ நேயர்களது நிர்ணயத்திற்கே விடுகின்றோம்.

கண்ணம்மாள் ஞானபோற் சொல்லின்ன அன்பின் மிருதியினால், தனக்காக அவள் உணவின்றி இருத்தலைச் சகியாது, தான் பல் தலைச் சிறிது உணவருந்த உடன்பட்டாள். ஆனால் தான் ஞானை வீட்டுக்கு வர மறுத்து, உணவைத் நிண்ணையிலேயே கொணரும்படியும் அங்கே வைத்து உண்பதில் தனக்குச் சற்றும் லஜ்ஜை யில்லை யென்றும் கூறினாள். ஆனால் ஞானை, அவ்வாருயின் தானும் நிண்ணையின்மீதே கண்ணம்மாவோடு உண்ணுவதாகச் சொல்லவே, அதனை யாற்றாது கண்ணம்மாள் ஞானை வீட்டினுட் செல்ல அங்கு இருவருமாகச் சிறிது உணவு அருந்தினர். பின்பு கண்ணம்மாவைத் தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போகச் சம்மதிக்கப் பல வாறு அவளுக்கு உபதேசிக்கலாயினள் ஞானை. கண்ணம்மாவோ, தான் இருந்த நிலைமையில் தன் சகோதரர் அகத்திற்குச் செல்லச் சம்மதமில்லை யென்று தெரிவித்தாள். ஆனால் ஞானை தன் கணவனைக்கொண்டு கண்ணம்மாள் சகோதரர் ருக்மாங்கதரைப் புறப்பட்டு வரும்படி தந்தி கொடுக்க ஏற்பாடு செய்திருந்தாள். ஆகையால் அன்றிரவே ருக்மாங்கதர் கூடலூர் வந்து சேர்ந்தார். ஞானையின் கணவன் ரெயிலுக்குச் சென்று அவரை அழைத்துவர அவர் வந்து தன் பிரிய தங்கை இருக்கும் கோலத்தைப் பார்த்து நிகழ்ந்த விஷயங்களையும் அறிந்து பட்ட வருத்தத்தை விவரியாது விடுகின்றோம். பின்பு கண்ணம்மாள் விருப்பப்படி தனைசாமி எங்கே யிருக்கிறான் என்று ருக்மாங்கதர் கூடியவரை விசாரித்தும் அவனைப் பற்றிய தகவல் ஒன்றும் தெரியவில்லை. கடைசியாய் அவர் கண்ணம்மாவை யிகவும் நிர்ப்பந்தித்து அவளைத் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றார். ஞானையும் கண்ணம்மாவைப் பிரியாமற் பிரிந்தாள்.

அத்தியாயம் 7.

கண்ணம்மாள் தஞ்சாவூரி லிருக்கிறாள். அவள் சகோதரர் ருக்மாங்கதரால் வழக்கம்போல் அன்போடும் ஆதரவோடும் பாராமரிக்கப்பட்டு வந்தும் அவள் சித்தம் சதா பல சிந்தனைகளிற் தெறித்தோடிக் கலக்க மெய்தியிருந்தது. அவள் தஞ்சாவூருக்கு வந்த அன்றே தனைசாமி கூடலூரிலுள்ள தனது வீட்டிற்கு வந்ததாகத் தெரிகிறது. ருக்மாங்கதர் அவனுக்குப் பல கடிதங்க ளெழுதியும் பதில் வரையாது. அவன் பெண்டாட்டி

பைப் பேயனாக வெறுக்கிறவ ளாகையால், தான் அவனுக்குக் கடிதம் எழுதுவது அவனது துவேஷத்தைத்தான் அதிகரிக்கு மென்று கண்ணம்மாள் அவனுக்குக் கடிதமே எழுதவில்லை.

கணவன் வீட்டுக்கு வாழச் செல்வதற்கு முன்பு தன் சகோதரர் வீட்டில் வசித்துவந்த கண்ணம்மாள் வாழ்க்கையைப்பற்றி முதல் அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம். ஆனால் அதே வீட்டில் இப்பொழுது அவள் வாழ்க்கை பெரிதும் வேறுபட்டிருந்தது. அப்பொழுது எப்பொழுதும் அகமலர்ச்சியோடு, முகமலர்ச்சியோடு பல பொறுப்புக்களை வகித்துச் சந்தோஷ்டியாக, சுறு சுறுப்பாக, பம்பரம்போற் சுழன்று பல வீட்டு வேலைகளையும் புரிந்திருந்த கண்ணம்மாள் ஸ்திதி என்ன? இப்பொழுது சதா அகத்தில் அல்லலும் முகத்தில் வாட்டமுங் கொண்டு மெலிந்த மேனியளாய்ச் சோர்வெய்தி, இணற்றிலிருந்து ஒரு சிறு தோண்டி ஜலம் சேந்துவதற்குள் கூட மூச்சுத் திணறுந் தன்மையளாய்விட்ட கண்ணம்மாளின் கதியென்ன! முன்பு தனது சகோதரரோடும் அண்ணியாரோடும் வீட்டுக்கு வரும் வேண்டிய பெண்களோடும், வீட்டு விஷயங்கள் நாட்டு விஷயங்கள் முதலியவற்றைப் பற்றி அழகாக விவகரித்தும் விவரித்தும் அமிர்தமயமாகக் கலகலவெனப் பேசியிருந்த கண்ணம்மாள்-இப்பொழுது பிறர் தன்னைக் கேட்கும் விஷயங்களுக்கு மாத்திரம் இரண்டொரு வார்த்தைகளில் உத்தரங் கூறுவதைத் தவிர பேசுவதே யற்றவளாயினள். தனிமையாக ஓரிடத்திருந்து சிந்திப்பதையே பெரிதும் விரும்பினாள். கண்ணீரும் கம்பலையும் அவள் தோழிகளாயின. பகவத் கீதையும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசங்களையும் சிற்சில சமயம் வாசிப்பதைத் தவிர வேறு ஒரு எட்டையும் அவள் தொடுவதே யில்லை. ருக்மாங்கதர் கூடியவரையில் அவளைத் தேற்ற முயன்றும், பயன் பெறவில்லை. அப்படி அவர் தேறுதலுரை கூறுங் காலத்து மாத்திரம், தான் சிறிது தேறுதல் அடைந்தவள்போல் அவர் முன்பு பாவனை செய்வாள். அவளுடைய பழைய அருமையான வீணைதான் எங்கெங்கோ போய்த் திருவிந்திபுரம் என்ற ஊரிலுள்ள ஓர் பெண்வசம் சேர்ந்துவிட்டதாகையால், அவளுக்கு வேறு ஒரு வீணை வாங்கித் தருவதாக ருக்மாங்கதர் கூற, அவள் தனக்கு அது வேண்டவே வேண்டா மென்று சொல்லி விட்டாள். அவளுக்கென்று விடப்பட்டிருந்த நிச்சப்தமான அறையில் தனிமையைத் தழுவி கேத்திரங்கள் நிறைய நீரும் நெஞ்சம் நிறைய நெடுமூச்சுப்புங் கொண்டு கொதிப்புற்ற சிந்தனைகள் செய்வதும் சில சமயங்களில் அச்சிந்தனைகளை, எழுது கோலினால் ஒரு குறிப்புப் புத்தகத்தில் கொட்டுவதுமே அவளது பிரிய பிரவிர்த்திகளாயின. கூடலூரிலிருந்து அவள் தஞ்சாவூருக்கு வந்த பிறகு அவள் மனோ நிலைமையையும் வாழ்க்கையையும் பற்றி இதற்குமேல் நம்மால் விவரிக்க முடியாது. அவைகளைப்பற்றி வேலை.

ஒருவர்பாலொருவர் ஒப்பற்ற உயரிய காதற் பாசத்தாற் பிணிப்புற்று ஈஸ்வர சேவையிலும் அடியார்கள் தொண்டிலும் ஒரே போது ஆர்வங் கொண்டிருந்தார்கள். எனக்கு அந்தப் பாக்யம் இல்லையே. ஐயோ! இப்படிக் கூறுவது நான் கற்புநெறி பிறழ்ந்தவள் என்பதை நிரூபிக்கிறதோ? நான் என்ன பரிசுத்தவதியாயிருந்தும் பயனில்லையோ? என் மனம் தியங்குகிறது. என் புத்தி குழம்புகிறது. எனக்கொன்றும் தெரியவில்லை. இந்த ஜன்மத்தில் நான் என் கணவருக்குக் காதகியாய் விட்டேன். ஆகையால் நான் பரிசுத்தவதியாயினும் பாதகியே. இந்நிலையில் இந்தச் சடலத்தைத் தாங்கக்கூட வில்லை; மன வேதனையைச் சகிக்கக் கூடவில்லை. ஆகையால் இந்த என் ஜன்மத்தையே மாற்றும்படி உன்னை வேண்டுகிறேன். எனக்கு அதைக் கொடு இதைக் கொடு என்று கடவுளைக் கேட்பது மெய்ப்பக்தர்கள் காரியமன்று; இதுகாறும் நான் அவ்வாறு உன்னை வேண்டினதில்லை. என்றாலும் என் நிலைமையைப் பொறுக்க மாற்றாது இந்த வேண்டுகோள் வேண்டுகிறேன். நின தருளைத் தவிர்த்து எனக்குப் புகலேது! என் ஈஸ்வரீ! என்னை ஒப்புக்கொள்."

* * *

என் ஏக நம்பிக்கையே!

அவாவனைத்தையும் அறுத்துச் சதா நின் திருவடிகளைத் தியானித்து நின் திரு நாமங்களைத் துதித்துப் பக்தி செய்து கொண்டிருந்தலே பிறவியால் அடையும் பேரின்பமும் பெரு வாழ்வுமாம் என்ற உண்மையை நான் நன்கு அறிவேன். எனினும் இவ்வுண்மையே பழம் பெரும் பூமியாகிய இந் நாட்டிலிருந்து மறைந்து போவதற் குரிய நாஸ்திகமும் நவையும் புன்மையும் பொருந்திய மார்க்கங்களும் வாழ்க்கை யியலும் நாட்டிற் பரவிப் பிரகாசத்தடிக்க வேண்டியது அத்தியந்தை அறிகிற ஒவ்வொருவருடைய கடமை என்று எனக்குத் தோன்றுகிறது. நான் அத்தியந்தைத் தெளிவாய் அறிந்தேன். பகவத் கீதையும் விவேகானந்தர் உபதேசங்களும் எனக்குக் கிட்டின. பகவத் பக்தி யொன்றைத் தவிர்த்து வேறு பற்றற்ற உள்ளத்தோடு பார்க் கடமைகளைப் பதறாது புரியும் முயற்சியோ டிருக்க வேண்டும் என்ற பிரவிர்த்தி மார்க்கத்தை அந்நூற்கள் எனக்குப் போதித்தன. நாடு வேற்போது நண்ணி யிருக்கும் நிலைக்கு அத்தகைய பிரவிர்த்தி மார்க்கத்தை அநுசரிக்க வேண்டியது அவசியம் என்று எனக்குத் தோன்றிற்று. இயன்றவரை அவ்வழி நின்றேன். இதற்காக என் கணவரால் முற்றும் நிராகரிக்கப்பட்ட காதகி யானேன். இதை என்னுற் பொறுக்க முடியவில்லை. இந்த வேதனையைச் சற்று நீக்கும் பொருட்டு என் ஜன்மத்தை மாற்றிவிடு. கணவனால் வெறுத்து நிராகரிக்கப்பட்ட பெண்களுக்கு, பின்னர் வாழ்க்கையும் வேண்டுமா! காரைக்கா லம்மையார் கணவர் தன் மனைவியின் பாதங்

நுந் சற்று அமிய வேண்டுமா? அப்படியானால், அவன் தன் இவ்விட வெற்றி உத்திரு வழுதும் கடித ரூபமாக, தன் சிநேகிதனுக்கு விஸ்தாரமாகக் கோட்டியிருக்கிற அவன் குறிப்புப் புத்தகத்திலிருந்து நீ பாகங்களை அடியில் தருகின்றோம்.

"கருணாகரமே! என் நிலைமை!

இன்னும் எத்தனை நான் இந்த மனவேதனையைச் சகிப்பேன்! கான் என்ன பிழை யிழைத்துவிட்டேன் கொன்று இவ்வாறு என்னை வதைக்கிறாய்! ஆ! பிழையா! நான் பிழையா இழைத்தேன்! மானிட சமூகத்தின் உயிரான விளக்கும் பெண் சமூகம், மானிட சமூகத்தின் கண்மணியாய் அனைக்கும் இயல் வாய்ந்த பெண் சமூகம் இச்சிப்பாகிய காட்டில் சிக்கிப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறபோதாவது இதி லேலை அகற்றி அச் சமூகம் பிரகாசமான பழைய காலத்தில் உற்றிருந்த மகத்தான நிலையை அடையவேண்டும் என்ற விஷயத்தில் நான் ஆர்வம் கொண்டிருந்ததும் பிழையாகுமா! அது ஓர் சிறந்த உத்தம ஆர்வ மல்லவா, என்ன உத்தம ஆர்வமா யிருந்தாலும் என் கணவருடைய நோக்கங்களில் முற்றும் மாறான நோக்கம் கொண்டிருக்கும் விஷயத்தில், அவர் முற்றும் வெறுக்கும் விஷயத்தில் நான் அவ்வாறு ஆர்வம் கொண்டிருந்தது கற்பு நெறி கடந்தமை யாகு மென்று சொல்லுகிறாய்? நான் கற்பு நெறி கடந்தவள்! என் நெஞ்சத்தை நீ அறியாயா? பரிசுத்தமற்ற எண்ணம், இழிந்த எண்ணம், அருக்கச் சிந்தனை, எப்பொழுதாவது என் மனத்தில் உதித்த தென்று நீ சொல்லக் கூடுமா! நெறி தவறுக்கு முன்பேதான் நீ உலகப் பற்றுக்களின் இழிவையும் வெறுமையையும் தெளிவாக என மனத்திற் பதித்து விட்டாய் பக்தியையும் எனக்களித்து உலகப் பற்றுக்களை அறவே என் மனத்திலிருந்து ஒழித்து விட்டனையே. அத்தகைய னேது கருணை பெற்ற நான் கற்பு நெறி கடந்தவள்? ஐயோ! நான் பற்றுக்களை யகற்றி எல்லாவு பரிசுத்த மான ஹிருதயத்தோ டிருந்தாலும், "கற்பொப் பலவகு சொற்றிறம் பாமை" என்று கூறப்பட்டிருக்கிறபடி நான் என் கணவருடைய விருப்பத்தைத் திறம்பினவ ளாய்விட்டேனே! தம் காதரது விருப்பமே மோக்ஷமென்கொண்ட ஒரே ஆர்வம் கொண்டி, இயற்பகை காயனார், கபிர் தாஸ் என்ற பக்த சிலர்கள் பத்தினிமார்கள் தத்தம் கணவர் கட்டளையைச் சிரமேற் கொண்டு நினைக்கவே மெய்யெலாம் கம்பங்கொடி செய்யும், அம்பிய புருஷனைத் தொடரும் ஒரு காரியத்திற்கும் இணங்கினார்களே! அவர்களன்றோ மெய்க் கற்பாகினர்! மெய்த் தூயவிகள்! அவர்கள் பாத தூளிக்குக்கூட நான் சமான மாவேனோ? ஐயகையால் நான் கற்புநெறி கடந்தவளே யாவேன். அதற்குத் தண்டனையாகத்தான் இந்த மன வேதனை யடைகிறேன். ஆனால் பிரானேஸ்வரீ! முற்கூறிய பத்தர்களும் அவர்கள் பத்தினிமார்களும் இல்லை.

அற்புத தெய்வ பக்தியைக் கண்டு அன்னையருக்குக் கணவனுயிருக்கத்தான் அருளல்ல வென்ற சருதி விநாயத்தினுல் அவரைப் பிரித்து வித் தலையே அவ்வம்மையார் விரும்பலாற்றது, "என் கணவர் பொருட்டன்றே இந்தச் சரீரம் கொண்டிருந்தேன். இனி என் எனக்கு இச் சரீரம்! எனக்குப் பேருருவைக் கொடு" என்று இறைவனே வேண்டி அவ்வரு செய்தனன். காளை என் கணவரால் கவலையாக வெறுத்துப் புறக்கணிக்கப் பட்டும் இன்னும் இச் சரீரத்தில் உயிர் வைத்துக்கொண்டிருக்கிறேன். என் தேவி! எனக்கு இந்த வாழ்க்கை வேண்டாம்."

* * *

என் இன்னுயிர்த் தோழி!

நின்னைத் நியானிக்கத் நியானிக்க, என் வேதனை சற்றுத் தணிந்து வருகிறது. நான் முன்பு கொண்டிருந்த பிரமித்தி மாய்ந்து சித்தமே முற்றும் இற்று விட்டது. இனி அம்மாய்க்கத்திற்கு இந்த ஜன்மத்தில் நான் அருகனல்லேன். இப்பொழுது நான் தனி நிலைத்தி மாய்க்கத்திற் செல்லு கிறேன். என் திருப்திக் கிளைய என் சரீரமும் மெலிந்து வருகிறது, என் முகத்த வாட்டம் அன்று வருகிறது, அன்றிரவு கண்ட கனவு முதல் என் சித்தம் தெளிந்து வருகிறது. நீ சென்றபின் எனது இந்த ஜன்மத்தை அகற்றி, இதில் நான் என் கணவருக்குச் காதலியானதை முழு மறதியால் மறைத்து என் மன வேதனையும் முற்றும் நீங்கி விடுவாய் என்ற முற்றும் நம்புகிறேன். என் மங்கலச்செல்வி, யாவற்றிலும் விருப்பு வெறுப்பற்ற உபசாந்த முற்ற முத்தி யெய்துவதே பிறவியின் பெரும் பேறு என்பதை நான். நானே மிக அறிவிலி. மிகச் சிறியவன், முத்தியின் தன்மையே அறி யாதவன். ஆனல் யாண்டும் நின்னையே சித்தத்தில் வைத்திருக்கும் இன்ப கனவில் முழ்கி நின்னைப் பக்தி செய்து கொண்டிருந்தலே பிறவிப் பெரும் பேறு என்று எனக்குத் தோன்றுகிறது. இச்சில முத்தியா யிருப்பி ரும் அல்லது வேறு யாதாயிருப்பினும் இதுவே எனது முக்கியகோரிக்கை. எனினும் இனி எனது மற்றொரு கோரிக்கையும் உண்டு. அதாவது இச்சரி தன் பழைய உன்னத நிலையை யெய்த வேண்டு மென்பதே. எனது இவ்விரண்டே அபீஷ்டங்களுக்கும் இயைந்தவாறு இனி என் ஜன்மங்களோ அமைக்குமாறு நின்னைப் பிரார்த்திக்கிறேன். அவ்விரண்டு அபீஷ்டங்களும் நிறைவேறுவதற்கு நான் என்ன காரணங்களோ அது பலிக்க வேண்டு மென்றும் அவைகளைச் செய்ய இன்பங்களைக் கொண் வேன். இந்த என் ஜன்மந்தான் காதலையும் பாழாயும் போய்விட்டது. இதனடியில் அன்று இனி வரும் பிறவியாவது தக்கவாறு அமைய, என் தேவி! நின் கருணையையே நம்பி யிருக்கின்றேன்."

நேயர்களே! நமது கதையின் முடிபுக்கு வந்து விட்டோம். அதனை விவரித்துக் கூறுவதற்கு மனம் இசையவில்லை. ஆதலின் சுருங்கச் சொல்லி விடுகின்றோம். கடைசியிற் கூறிய கண்ணம்மாள் சித்தனையின்படி அவள் தேகம் வரவர மெலிவுற்றது. தஞ்சாவூரி லுள்ள தருந்த பெரிய வைத்தி யர் ஒருவர் அவளுக்குச் சிகிச்சை செய்யும்படி கொணரப் பெற்றார், அவர், அவள் இருதயம் மிக கூர்மைத்து ருகிறதென்றும், நான் தரும் ஒரு மரு ந்தைத் தினமும் உட்கொண்டு மலைப் பிராந்தியமான ஒரு ஊரில் ஆறு மாத காலம் சென்றிருந்து மனதில் யாதொரு கவலையும் வைக்காமல் அமைதி யாய் வசிக்க வேண்டு மென்றும் சொன்னார். அவ்வாறு புரியச் சம்மதிக்கும் படி ருக்மாங்கதர் கண்ணம்மாளை எவ்வளவோ நிர்ப்பந்தித்தும் அவள் மறுத்து விட்டாள். அவள் தேகம் மெலிவுற மெலிவுற முகம் மாத்திரம் பொலிவுற்றுப் பிரகாசித்து வந்தது. கடைசியாய் ஓர் ஆதிவாரத்தன்று பகல் சுமார் 12 மணிக்கு, தெய்வத் தியானத்தினளாய் இம்மையைத் துறந்தனள். இச் சந்தர்ப்பத்திற்குச் சற்று முன்பும் துரைசாமிக்குப் பல கடிதங்களும் தந்திகளும் அனுப்பியும் அவன் வரவில்லை. ஜானகி மாத்திரம் தந்திச் செய்தி தெரிந்ததும் உடனே புறப்பட்டு வந்தாள். கடைசியில் கண்ணம்மாள் அவள் மடியில்தான் படுத்திருந்தாள். "ஜானகி! கண்ணம்மாளின் கதி அவ்வளவுதான். அண்ணு! என்னை மன்னிக்கும்படி கடைசி முறை வேண் டினதாக உங்கள் மைத்துனருக்குச் சொல்லுங்கள்" என்று முற் கூறிய ஆதி வாரம் பகல் சுமார் 10 மணிக்குக் கண்களில் நீருடன் கடைசி முறை தெளிவாகப் பேசினளாம் நமது கதா நாயகி. அவளது குறிப்புப் புத்தகத்தி லிருந்து நமக்குத் தெரிகிற அவளது இரண்டு மனோபீஷ்டங்களும் நிறை வேறுவதாக. ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

ருக்மாங்கதர் ஒரு குழந்தையைப் போல் "கண்ணம்மா! கண்ணம்மா!" என்று வாயை அங்காந்து நிறந்து பெருங் குரலிட்டுக் கதறி யழுதமை, ஜானகி தன் கூந்தலைப் பிய்த்துக்கொண்டழுததால் ஒரு கொத்துத் தலை மயிர் உதிர நேர்ந்து அவள் தலையும் காயமுற்றமை முதலிய கோரங்களை யெல்லாம் விரியாது விடுகின்றோம்.

கதையில் வந்த சிலரைப் பற்றிக் கடைசியாய் இரண்டொரு வார்த்தை கூறி முடிப்போம். துரைசாமி மீண்டும் தன் சிற்றப்பன் பேச்சில் மயங்கி அவனெடு உறவாடி யிருந்து, அவன் சொற்படி எங்கோ தெற்கே யிருந்து காட்டேரி போன்ற ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான். இக் கலியாணத்தை முடித்ததால் சிற்றப்பனுக்குப் பெண் வீட்டிலிருந்து கொஞ்சம் பணம் கமிஷனுகக் கிடைத்தது. துரைசாமி தன் வீட்டையும் சிற்றப்பனுக்கு இழந்து தன் இரண்டாவது மனைவியினல் பட்ட அவஸ்தை களைச் சகிக்க லாற்றது கடல் கடந்து எங்கேயோ ஓடிப்போய் விட்டான்.

பின்பு அவனைப்பற்றி தன்றுக் தெரிய வில்லை. கிளம்பான் எடுத்த பெண் கள் சக்க முயற்சி கண்ணம்மாள் தஞ்சாவூருக்கு வந்த வன்றே ஆகவில் லாமல் கைவிடப்பட்டது. [illegible]ம்பான் இப்போது கடிய கரை கணவரு க்குத் திருப்கரமான மனைவியாய் [illegible]டக்கை வருகிறாள். அவன் கணவரையே செட்டியார் என்னவோ ஒரு கரும கோயினால் அவஸ்தைப்பட்டுக் கொண் டிருக்கிறார். கர்ப்பகவல்லி யம்மாள் குழந்தைகளுடனும் கணவருடனும் சௌக்கியமா யிருக்கிறாள். ரூபா வைப்பாயின் கணவன் 12 வருஷத்துக்கு க்கிகமாக உபாத்தியாயராயிருக்கும் இன்னும் 35 ரூபாய் சம்பளத்திலேயே இருக்கிறார். அவரோடு வறுமையில் வாழ்ந்த ஜயலக்ஷ்மி, ஒழிந்த வேளை களில், பெண்கள் ஸ்கூல்கேட் போவதையும் புது மாதிரியாகக் கூந்தலில் பின்னல் போவதையும் மற்றும் பல விஷயங்களையும் புதிக்கப் பேசி சௌக்கியமாய்க் காலக் தள்ளி வருகிறாள். ரூனாவின் கணவர் கந்தசாமி ஜில்லாவில் ஒரு வரிசில் 150 ரூபாய் சம்பளத்தில் போஸ்ட் மாஸ்டராகத் தன் மனைவியுடன் கூடித்து வாழ்கிறார். ரூனாவை ஒரு காலும் கண்ணம்மாவை மறக்கவே யில்லை. கண்ணம்மாள் தஞ்சாவூரில் எழுதிய குறிப்புப் புத்த கத்தை ருக்மாங்கதரிட மிருந்து கேட்டு ரூனாவையே வாங்கிக்கொண்டாள். அதை ஒரு உயர்ந்த பொக்கிஷமாக வைத்துக் கொண்டிருக்கிறாள்.

மானிடர் உயிர் நீத்தபின் அவர்கள் சுக்கும சரீரத்துடன் தோன்றி உலகில் நிகழ்பவைகளை அறிகிறார்கள் என்பதாகக் கூறப்படும் விஷயங் களில் ருக்மாங்கதருக்கு முன்பு நம்பிக்கையே கிடையாது. இப்போது நம் பிக்கை யிருக்கிறதோ என்னவோ? ஆனால் அவர் மனைவி, கண்ணம்மாவை ருக்மாங்கதர் பல முறை செய்து வரும் பூவாடைக்காரி பூஜைகளை அவர் மீது நம்பிக்கையுடன் ஆராதித்து அச் சந்தர்ப்பங்களில் வைக்குப்பிடம் புடவை விக்கிரகங்கள் முன்பு தன் குழந்தைகளைச் சாஷ்டாங்கமாக நமஸ் கரிக்கும்படி செய்து வருகிறார்.

இனி இக்கதையைப் பற்றிய நமது அபிப்பிராயத்தைச் சற்று கீண்ட நேரம் முடிவுரையாக எழுதக் கருதினேம். ஆனால் இம்மாதமுடனே இக் கதை முடிவுற வேண்டுமென்ற நிர்மாணத்தினால் இப்பொழுது அதை பக்கங்கள் எடுத்துக் கொண்டலமையால், அபிப்பிராயத்தை எழுதாமல் இத் துடன் நிறுத்துகின்றோம். ஒருகால் இக்கதை புத்தக ரூபமாக வர நேர்ந் தால் அப்பொழுது வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாமே. சபமன்று.

வாலிதாசன்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வளர்ச்சி.

393-ம் பக்கத் தொடர்ச்சி.

நமது ஆங்கிலேயர்களின் முன்னோர் பிரிட்டன் நாட்டிற்கு வந்து குடியேறியபின், ரோமர் ஆளுகைக் குட்பட்டிருந்தபோது, அத்தேசம் அடைந்த கன்மைகளை யெல்லாம் நாசப்படுத்தி அதனை ஒரு பாலவனமென மாற்றினர். ஆனதுபற்றி, ரோமர் அரசாட்சியின்கீழ் பிரிட்டன் அடைந்த பெருமை, அதற்குப் பிற்பாடு இல்லாமற்போனது மிகவும் விசனிக்கத் தக்கது. காளடைவில் நமது ஆங்கிலேயரின் முன்னோர் சமாதானமாய் இருப்பதின் பெருமைகளைக் கொஞ்சங் கொஞ்சமாய் உணர்ந்து, தாங்களும் ஒரு நாகரீகமுள்ள ஜாதியாரெனப் பெயரெடுக்க முயன்றனர். இப்படி அவர்கள் நாகரீகம் அடைவதற்குக் கிறிஸ்து மதமே முக்கிய காரணமாக விருந்தது. இக் கிறிஸ்து மதம் முதல்முதல் கென்ட் மாகாணத்தில் அரசு புரிந்து வந்த எதல்பர்ட் என்ற அரசனால் தழுவப்பட்டுப் பிற்பாடு அவ் வரசனுடைய உற்சாகத்தினாலும், அவன் மனைவியான பேர்தா சீமாட்டி யின் முயற்சியாலும், அம்மாகாணம் முழுமையும் பரவிற்று. இச் சீமாட் டிக்கு ஒரு புத்திரி யிருந்தாள். அப்பெண்ணை, வடக்கு மாகாணமான நார் தம்பிரியா அரசன் எட்வின் என்பவருக்குத் திருமங்கல்ய தாரணம் செய் வித்து அவளுக்குச் சேனமாக பலாலியஸ் என்ற ஒரு கிறிஸ்துவப் பாதிரி யாரைக் கூட அனுப்பினன். இப்பாதிரியாரால் அம் மாகாணம் கிறிஸ்து மத ஸ்தாபனம் பெற்றது.

தற்காலம் இங்கிலாந்து இவ்வுன்னத ஸ்திதியை அடைந்திருப்பதற்கு அது ஆதியில் கிறிஸ்து மதத்தைத் தழுவியதே முதல் காரண மாகும். ஆதி ஆங்கிலேயர் கிறிஸ்து பிறந்த ஆறாவது நூற்றாண்டில் அச் சமயத்தைத் தழு வாமல், கொஞ்சம் தாமதப்பட்டிருந்தால், அவர்கள் பலநாள் அநாகரீகர் களாய் இருந்து தேசத்தின் கேமத்தைக் கருதாம லிருந்திருப்பார்க ளென் பதற்கு ஐயமில்லை. மேற்சொல்லிய அசம்பாவிதங்கள் யாதேனும் எற்பட் டிருந்தால் பிரிட்டன் தற்காலம் அடைந்திருக்கும் நிலைமையை அடைய எறக்குறைய இன்னும் இரண்டு நூற்றாண்டிற் கதிகம் அவசியமா யிருந்திருக்கும்.

இங்கிலாந்து கிறிஸ்து மதத்தைத் தழுவியதால் அது அடைந்த நன்மை களைக் கவனிப்போம். இம்மத மாறுதலானது இங்கிலாந்தை நாகரீகத்தில் முன்னேற்றத்தை அடையச் செய்தது. முதல்முதல் ஐரோப்பாக் கண்டத்தி லிருந்த மற்ற நாகரீக ஜாதியார்களுக்கும் இங்கிலாந்திற்கும் நூதன சம்பந்த மேற்பட்டு, இதர தேச நடை உடை பாவனைகள் இத்தேச ஜனங்களையும் தொடர ஆரம்பித்ததுபற்றி, ஜனங்கள் நாகரீகத்திலும், கொழை

நிலப்

பின்பு முற்றிலுமே தக்கதுமான புதுச் சட்டங்களை உண்டாக்குவதிலும், வியாபாரத் தொழில்களிலும் விருத்தி யடைந்தனர். இம்மதக் குருக்கள்மார், சமாதானத்தை நாடியே சென்றமையால், எவ்விடம் தம் எண்ணம், கெட்ட கடபடிக்கை, கொடிய செய்கைகள் அதிகமாய்க் காணப்பட்டனவோ அவைகளை வேருட னறுக்க முயற்சித்தனர். தாழ்மை, பொறுமைப் பேணல், தான தருமம், முதலான சன்மார்க்க வழிகளை ஜனங்களுக்குப் போதித்தனர். இக் கிறிஸ்துவக் குருக்கள்மார்களின் போதனையால் அநாகரிகமான ஆங்கிலேயர்களின் குணம் முழுவதாக மாற்றப்பட்டு ஒரு சாஸ்திரத்தை சுவை, இரக்கம், பச்சாத்தாபம் முதலான நற்குணக்களுடன் பரிபாலிக்க, ஒரு வழி ஏற்பட்டது.

இரண்டாவது நன்மை யாதெனில், இக் கிறிஸ்து மதம் இங்கிலாந்தில் பரவிய பொழுது, ஐக்கியபத்தியமே யில்லாமல் ஒருவருட னொருவர் பகைமையைக் கூட்டிப் போர்புரிந்த ஜனங்களுக்குள் முதல்முதல் ஒரு ஒற்றுமை ஏற்பட்டது. எல்லா ஜனங்களும், எந்த சிறிய சாம்பத்தைச் சேர்ந்தவரா யிருப்பினும், ஒரே மதத்தவரென்ற மதாபிமானம் விருத்தி யடைந்து அடிக்கடி பொதுக்கூட்டங்கள் கூடலாயினர். இக் கூட்டங்களில் கிறிஸ்துமதக் கொள்கைகளை விருத்தி செய்வதைப் பற்றியும், அம்மதத்தைச் சார்ந்த ஜனங்களின் நன்மையைப்பற்றியும் முயற்சிக்க வேண்டுமென்று நிர்மானிக்கப்பட்டன. இக்கூட்டங்கள் ஜனங்களின் ஒற்றுமையை விருத்தி செய்தது மல்லாமல், ஜனங்களுக்கு மதாசாரியர்களிடத்து ஒருவிதமான கௌரவமும் மதிப்பும் உண்டாகச்செய்தது. இவ்விதமாகவே நன்கறிந்த ஆங்கிலேயருக்காகப் பாடுபட்டவர் தி மோர்டர் என்ற கிறிஸ்தவ பிரதம குரு. இவருக்குக் கென்ட் மாகாணத்தி லிருந்த கான்டர்பரி என்ற நகரம் முக்கிய வுறைவிடம். இம்மகான் இங்கிலாந்தைப் பல பரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு சிறிய பிராமத்திற்கும் ஒரு கிறிஸ்துவ போதகரை நியமித்து, அப்பிராமத்து ஜனங்களின் ஞேயத்தை அவரிடம் ஒப்புவித்தார். இப் போதகர்களோ மேற்பார்வை பார்க்க, படிப்படியாய் உதவியோகஸ்தர்களை நியமித்து, கிறிஸ்துவமத சம்பந்தமான கோயில்கள், பள்ளிக்கூடங்கள், ஆதரவு மடங்கள் யாவையும் ஒரு பிரதம குருவின் அதிகாட்சியின்கீழ் சேர்த்து மிக அதிசயமான சீர்திருத்தையும் புகழையும் பெற்றார்.

மூன்றாவது சீர்திருத்தமானது மேற்சொல்லியவைகளிலிருந்து மிகவும் முக்கியமானது. இங்கிலாந்து தேசம் கிறிஸ்து மதத்தை அனுசரித்தது அதன் படிப்பு அபிவிருத்திக்கு முக்கிய காரணமாய் இருந்தது. கிறிஸ்து சமயக் குருக்கள்மார் அதேகமாய் லத்தின் பாஷா ஞானம் பெற்றவர் முதல்லாமல் அவர்கள் அக்காலத்தில் வழக்கிலிருந்த ஞானசாஸ்திரங்

விற்பன முள்ளவர்களாதலால் தங்களுடைய அறிவை ஆங்கிலேயரின் முன்னேற்கட்குப் புகட்ட அவர்கள் பின்வாங்கவில்லை. பல இடங்களில் பாதிரி மடங்களுக்குள் பள்ளிக்கூடங்க ளேற்பட்டுப் படிப்பு விருத்தியடைந்தது. இதல்லாமல் குருக்கள்மார் ராஜாங்க விஷயங்களில் தலையிட்டு ஜனங்களுக்குப் பலவித நன்மைகள் செய்தனர். அவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர் டன்ஸ்டன் என்ற போதகர். அக்காலத்தில் இவர்களுக்கே சட்டங்களும், தேச பரிபாலன சக்தியும் அதிகம் உண்டு. இக் குருக்கள்மாரின் முயற்சியால் சித்திர வேலை, கட்டடவேலைகள், பாட்டு, அநேகவித மான கைத்தொழில்கள், இவை முன்னேற்றமடைந்து, ஜனங்கள் ஜீவிக்கப் போதுமான ஆதாரங்களை ஏற்படுத்தினது பற்றி இவர்களிடம் பொது ஜனங்களுக்கு ஒருவிதமான பயமும் நன்மதிப்பும் ஏற்பட்டது. இதையே ஆங்கிலேய முன்னேரின் காவியகாலத் துவக்கம் என்று கூறலாம். இக் காலத்தில் ஜாரோ வாசியான பீட் என்ற விற்பன்னர் "ஆங்கிலேயரின் மதசரித்திரம்" என்ற ஒரு காவியத்தை எழுதினார். கீட்மன் என்ற கவிவாணர் "பிறப்பின் துவக்கம்" என்ற அருமையான கிரந்தத்தை அரங்கேற்றினர்.

நாம் ஆங்கிலேயரின் முன்னேர் தங்கள் நாடுகளை எவ்வாறு ஒன்று சேர்த்துத் தற்காலம் "இங்கிலாந்து" என்று சொல்லப்படும் ஒரே நாடாகச் செய்தனர் என்று சற்றுக் கவனிப்போம். இவர்கள் ஆதியில் பிரிட்டனுக்கு வந்தபோது ஏழு மாகாணங்களைத் தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டனர். அவையாவன:— 1. கெண்ட், 2. சஸ்ஸெக்ஸ், 3. எஸ்ஸெக்ஸ், 4. வெஸ்ஸெக்ஸ், 5. கிழக்கு ஆங்கிலியா, 6. வடக்கு அம்பிரியா, 7. மெர்சியா அல்லது மத்திய நாடுகள். இவைகளில் நான்கு பிரதேசங்கள் மிகச் சிறியவையாயும், காடு மலைகளடர்ந்த மேட்டு நிலங்களாயு மிருந்தமையால் ஜனங்கள் அதிக இடங்களைப் பிடித்து அரசாள முடியாதவ ராயினர். இதல்லாமல் "எளியோரை வலியோர் ரடிப்பர்" என்ற பழமொழிக் கேற்ப இம்மாகாணங்களுக்குப் பக்கத்திலிருந்த ஜனத்தொகையிலும், காகரீகத்திலும், நீர்வள நில வளப் பெருக்கினும் மிகுந்து செல்வச் செருக்கடைந்த மாகாணங்கள் இச்சிறிய பிராந்தியங்களை அதிக சிரமமில்லாமல் தங்களாட்சிக் குட்படுத்திக்கொண்டனர். கிறிஸ்து பிறந்த ஏழாவது நூற்றாண்டுத் துவக்கத்தில் இங்கிலாந்தானது மூன்று பெரிய பாகங்களாகமட்டும் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகள் மேற்கு சாக்ஸானியரின் பிரதேசம், மத்திய நாடுகள், வடக்கு அம்பிரியா என்பவைகளே. நாளாவிர்த்தியில் இம்மூன்று ராஜ்யங்களும் ஒன்றோடொன்று போர்புரிய, அவர்களில் யார் பலிஷ்டர், யாரால் இங்கிலாந்து பூராவாகவும் அரசாளப்படவேண்டும் என்ற போட்டி ஏற்பட்டது. ஏழாவது நூற்றாண்டில் வடக்கு ராஜ்யமும், ஐ[illegible]தில்

மத்திய ராஜ்யமும், முன்னேற, ஒன்பதாவதின் ஆரம்பத்தில் தெற்குப் பிராந்தியத்தி லுள்ள சாக்ஸன் ஜாதியாரே இங்கிலாந்தை ஒன்றுகூட்டி ஒரு குடையின் கீழ் அரசாட்சிசெய்ய யோக்யதை பெற்றவர்களென்று ஐயமறத் தெரிய வந்தது. எக்காரணங்களினால் மற்றசண்டி ராஜ்யங்களும் முன்னுக்கு வாவில்லை என்று நாம் கவனிக்கவேண்டும். அவ்விரண்டு பிரதேசங்களிலும் ஒற்றுமையைத் தடுக்கக்கூடிய முகாந்திரங்கள் பல உள. வடக்கு மாகாணம் பெர்னீஸ்யா, டேரியா என்ற இரண்டு பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் வசித்த ஜனங்களுக்கு ஒற்றுமை என்ற பதத்திற்கு அர்த்தம் தெரியவில்லை. ஜன சங்யபத்யமில்லாத ராஜ்யம் மற்ற இடங்களை ஜயித்து அரசாட்சி செய்வது முடியாத காரியம். இதல்லாமல், வடபாகத்து நிலத்துக்கு, பயிர் பச்சைகளை விருத்தி செய்யப் போதுமான வளமில்லாததாலும், டேனிஷ் கொள்ளைக்காரர்கள் முதல் முதல் தொந்தரவு செய்து அழிக்க மிகவும் சமீபமா யிருந்தபடியாலும், நார்தம்பிரியா ராஜ்யம், இங்கிலாந்தை ஒன்றுகூட்டி அரசாள முடியவில்லை. மேற் சொல்லிய காரணங்களே, மத்திய மாகாணத்தையும் மீளாத துன்பத்திற் குள்ளாக்கி விட்டன. நார்தம்பிரியாவிலோ வென்றால் இரண்டு பிரிவு ஜனங்களுக்குள் ஒற்றுமை யில்லாமலிருந்தது. மத்திய மாகாணத்திலோ, எவருக்குள்ளும் ஒற்றுமை யென்ற பிறப்பே கிடையாது. மேலும், மேற்குப் பக்கத்தி லிருக்கும் மலைவாசிகளான வெல்ஷ் ஜாதியார் தக்க சமயத்தை முன்னிட்டு சாக்ஸானியரின்மேல் அடிக்கடி படையெடுத்து மிகவும் தொந்தரவு கொடுத்ததால், மத்திய ராஜ்யத்தின் பலமும் குறையத் தொடங்கியது. இக்காட்டு அரசர்களில் முதன்மையான ஆபா என்பவர் தன் தேசத்துக்கும், வெல்ஷ் மலை காட்டிற்கும் எல்லையாய், இக்காட்டு மிராண்டிகள் தன்னை ஹிம்சை செய்யாதபடி ஒரு மதில் சுவர் கட்டினார். என்ன சுவரெடுத்த போதிலும், அதற்குப் பக்கத்தில் கோட்டைகளை வெடுப்பித் தகுந்த பாதுகாப்பில் வைக்க அவருக்குப் போதுமான சக்தியில்லாதால் அந்த ராஜ்யமும் சீக்கிரம் சீர்குலையத் தொடங்கியது. முக்கிய வைரிகளாகிய இரண்டு ராஜ்யங்களும் சங்கோசத் தொடங்கியதால் மேற்கு சாக்ஸன் நாடு அதி சீக்கிரத்தில் இவ்விரண்டையும் தோல்வி யடையச் செய்து, தானே இங்கிலாந்தை ஒன்றுபடித்தி ஆளத் தலைப்பட்டது. இதற்குத் தெய்வ சகாயம் மனித சகாயம் இரண்டும் குறையில்லாமல் கிடைத்தன. இங்கிலாந்தில் இம்மாகாணத்தை விடச் செழிப்பான பூமி கிடையாது. தெம்ஸ் நதி பாயும் சமவெளி இதற்குச் சொந்தமானது. மேலும் இது தென்திசைக்குக் கடற்கரையை அடுத்திருப்பதால் ஐரோப்பிய நாகரிகமும் இவ்விடம் சீக்கிரம் பரவவும், இங்கிலாந்து மற்றத் தேசங்களுடன் ஸ்நேகம் செய்யச் சாதனங்களும் பல அமைந்தன. மேலும், இவ்விடம் வசி

க்கும் ஜனங்கள் மற்ற ராஜ்யக்காரரைப் போலல்லாமல், ஒரு விதமான ஒற்றுமையும் அமைதியு முள்ளவர்கள். இதல்லாமல், நாகரீகம், படிப்பு, ராஜ்ய தந்திரம், ஐஸ்வர்யம் முதலியவைகளுக்கு உறைவிடமான மத சிரேஷ்டத்தானத்தையும் பலமும், செல்வாக்கும் இந்நாட்டின் நன்மையை உத்தேசித்தும் செலவிடப்பட்டபடியாலும், கிறிஸ்துமத பிரதம குருவின் தலைமைக்கு உட்பட்டதனது இந்த ராஜ்யத்திலேயே அதிர்ஷ்டவசமாய் அமைந்தபடியால், இவ்விதமான சாதகங்களைக் கட்டி ஆளப் போதுமான பலம் ஏற்பட்டது. இதற்கேற்றபடி இவ்விராஜ்யத்தை மிகப் பூஷிதையாய், தைரியமும், பராக்கிரமமும் படைத்தவர்களுடைய நன்மதிப்பும் பெற்ற அரசர்கள் ஒரே கோர்வையாய், தடங்கலில்லாமல் மைனர், குழந்தைகள் ஆட்சி இடையூறின்றி ஆண்டு வந்தபடியால், இவ்விராஜ்யம் அதி சீக்கிரமாய் இங்கிலாந்தின் மற்றப் பிரதேசங்களையும் தன் வயப்படுத்தத் தொடங்கிற்று.

(தொடரும்)

வி. சுப்புசேஷ ஐயர், பி.ஏ. எல்.டி.

சதுரங்கம்.

முன் மழைகளில் ஐரோப்பிய ஆட்டத்தைக் குறித்தும், இனி மொகலாய ஆட்டத்தையும் கர்நாடக ஆட்டத்தையும் தெளிவாக விளக்குவோம்.

மொகலாய ஆட்டத்தில் ஐரோப்பிய ஆட்டத்தைப்போல் காய்களை ஆரம்பத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அநேகமாக ஐரோப்பிய முறை போலவே. ஆனால் அரசனுக்கு முன்னால் கோட்டை கட்டுகிறார்கள். சிலர் அதற்குப் பதிலாக அரசனுக்கு முன் குதிரையடி வைத்துக் கொள்ளுகிறார்கள். ஐரோப்பிய காய்கள் ஆட்டத்தில் ஒரே கட்டம் தான் அவைகளை நகர்த்தலாம். ஆனால் அவைகள் எட்டாங் கட்டம் ஏறினவுடன் அவ்வகக்கட்டத்தில் அவைகள் உருப்படிகளாகத்தான் மாறவேண்டும். முதலில் தனது பலகையில் மூன்று ஆட்டங்கள் ஆடுவது வழக்கம். பலகை சதாரணக் கட்டைப் பார்க்கிலும் ஆள்கான் அரசனுக்கு எதிரி மென்று வைத்துக்கொண்டு அதற்கு ஆங்கிலப் விலகவும் தைத் தழுவி, பேதாமாற்று என்று செ விஷயத்தில் சில சப்பு அபிப்பிராயர்

...வி வருகின்றன. மஸ்து என்று எதிரி காய்களில் ஒன்
...வேண்டுமாம். அதில் ஜீவன் மஸ்து என்று பெரிய காய்களுக்
...ஆள் மஸ்து என்று ஆள்களுக்கும் சொல்வதுண்டு. சிலர்
...னறு ஆள் மஸ்து விடவேண்டு மென்றும், சிலர் ஒரு ஆள்
...ஸ்து போதுமென்றும் வைத்துக்கொள்வார்கள். மஸ்துக்குக்
...ரணம் யாதென்றால் பேகா விட்டு அரசு வைப்பதற்கு முன்
அரசன் முட்டில் நிற்கிறான். அப்பொழுது அவனுக்கு
...பகற்காக ஒரு மஸ்து கொடுப்பதுண்டு. அதை நோக்கி
...க் காயை எப்படியும் ஆடலாமென்று ஆடுவது விஞ்ஞையி
...விந்தை. ஆட்டச் சட்டங்களுக்கு உட்பட்டே மஸ்துக்
...யை ஆடவேண்டும். மஸ்து கொடாமல் பேதாமாற்று தாராள
...ச் செய்யலாம். மஸ்து கொடுக்கவேண்டிய அவசியமில்லை.
..., தர்ம யுத்தமா, ஆட்ட முறையா, என்று தர்க்கிப்பார்கள்.
...ஆட்ட முறையே. தர்ம யுத்த மென்றால் யுத்தம் செய்வா
...ன்? ஒரு காயையும் வெட்டலாகாது, மஸ்துக்காய் சம்பந்தப்
...மட்டும் தர்மம் என்னே?

...பிறகு காயை அனுவசியமாக வெட்டலாகாது, அது என்ன
...ம் என்று சிலர் கோபிப்பார்கள். வெட்ட இஷ்டமிருந்
...தையும் வெட்டலாம். இலாபமோ நஷ்டமோ வெட்டு
...டைய இஷ்டம். எதிரி அதை ஆக்ஷேபித்துத் தடுப்பது
...ஆட்ட முறைக்குத் தகுந்தபடி இஷ்டமான ஆட்டத்தை
...ம். வெட்டுவதால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள
...ண்டியிருந்தாலும் வேறு எந்தக் காரணத்தினாலும் வெட்ட
...டமிருந்தால் வெட்டலாம். அதற்கு எதிரி கோபிப்பதைத்
...டியும் வெட்டினதினாலேயே வெட்டினவனுக்கு இடைஞ்
...லிளைக்க வேண்டும்.

...லர் ஒரே ஆட்டத்தை ஆறு மாதம் ஆடிக்கொண்டிருப்பது
...சாலித்தன மென்று கருதுகிறார்கள். அது அவர்
...தைப் பொறுத்தது. ஒருவருக்கு இஷ்டமிருந்
...தில் எதிரி காய்களை ஆட்டமுறையில் வெட்
...முடித்துவிடலாம். இதில் யாதொரு

கர்நாடக ஆட்டத்தில் அ1, எ1, இக்கட்டங்களில் தே
...ஆ1 எ1, இவற்றில் குதிரைகளையும் இ1, ஈ1, இவற்றில் யானை
...களையும் ஈ1ல் மந்திரியையும் உ1, ல், அரசனையும் வைத்து
...ஆடுவார்கள். குதிரை, ஆள் இவற்றிற்கு மொகலாய ஆட்டம்
போலத்தான். தேர்கள் குறுக்கில் ஒரு கட்டம் விட்டு அடுத்த
கட்டந்தான் பாயும். இஷ்டப்படி குறுக்கில் செல்லலாகாது.
மந்திரியோ குறுக்கில் ஒரு கட்டந்தான் போகும். மற்றப்படி
ஐரோப்பிய ஆட்டம் போலவே.

இனி ஐரோப்பிய ஆட்டத்தில் சில விஷயங்களைக் குறிப்
போம்.

அரசனே எல்லாக் காய்களிலும் சிறந்தது. அவனை வைத்
துத்தான் ஆட்டம். அணிக்குள் இருந்து தனது ஆள்களுக்கு
உதவிசெய்து தன்னைப் பத்திரப்படுத்திக் கொண்டு எதிரி காய்
களை எதிர்த்து ...ண்டும். தன்னை ஆபத்துக் குள்ளாக்கலாகாது.
மந்திரி ஒன்பது ஆள் பலமுடையவன். நடுக்கட்டங்களில் இருக்
கும்பொழுது 27 கட்டங்களைப் பார்க்கிறான். யானை ஐந்து ஆள்
பலமுள்ளது. எங்கு நின்றாலும் 14 கட்டங்களைப் பார்க்கிறது.
இரண்டு யானைகள் மந்திரியைக் காட்டிலும் சிறிது கூட பல...ள்
ளன. தேர் மூன்று ஆள் பலமுள்ளது. நடுவில் நின்றால் 13 கட்
டங்களுக்குப் போகலாம். குதிரை இரண்டரை ஆள் பலமுள்
ளது. நடுவில் நின்றால் எட்டுக் கட்டத்தைப் பார்க்கிறது.

முட்டு என்றால் தன் ஆட்டத்தின் பொழுது ஒரு காயையும்
ஆட இடமில்லாம லிருப்பது. அப்பொழுது இரு கக்ஷிக்கார
ரும் சரி ஜோடி யாகிவிடுகிறார்கள். ஒருவரும் ஜயிக்க வில்லை,
தோற்கவுமில்லை.

இரட்டை அரசு என்றால் ஒரே ஆட்டத்தில் இரண்டு காயி
னால் அரசு வருவது. சிறந்த அரசு என்றால் ஒரு காயை விலக்
குவதால் மற்றொரு காயால் அரசு வருவது. கவட்டை அரசு
என்றால் குதிரையாலோ மற்ற ஜீவனாலோ அரசு வைத்து எதிரி
காய்களில் மற்றொன்றையும் பிடித்து நிற்பது. அரசு விலகவும்
எதிரி காயை வெட்டி விடலாம்.

டை பிடிப்ப தென்றல் ஒரு எதிரி காயை இரண்டு காயால் எதிர்ப்பது. இரட்டிக்க ஆள்க ளென்றல் ஒரு வரிசையில் இரண்டு ஆள்கள் ஏறி நிற்பது. இது ஆள்களுக்குப் புலக் குறைவு.

அரசை மூடிக்கொண்டிருக்கிற காய் விலக முடியாதபடியால் அதன் வாயில் காய்களைத் தாராளமாக நிறுத்தலாம். இரண்டு தேர்கள் இரண்டு குதிரைகளைக் காட்டிலும் பலமுள்ளன. யானை நிறந்த வரிசையில் நின்றல் பலம் அதிகரிக்கிறது. குதிரையை 64 கட்டங்களிலும் வரிசையாகப் போடலாம். இதை அநேகர் புதிதாக ஆடக் கற்றுக்கொள்ளுகிறவர்களுடன் சொல்லி மிரட்டுவதுண்டு. குதிரை அடி 64-ம் தெரிந்துகொண்டு என்னுடன் ஆட வாரும் பிள்ளாய் என்று பரிகசிப்பார்கள். அது பெரிய விஷயமல்ல. பலவிதங்களில் 64 கட்டங்களுக்கும் ஆடலாம். என்ன செய்ய வேண்டுமென்றல் நடுக் கட்டங்கள் நாலுக்கும் முதல் பிரகாரக் கட்டங்கள் 28-க்கும் முதலில் போட வேண்டும். பிறகு மற்றக் கட்டங்களுக்குப் போட்டால் வந்து விடும். கர்நாடக முறையில் இதற்கு ஒரு பாட்டு உண்டு. அதன் பிரகாரமே கர்நாடக வித்வான்கள் போடுவார்கள்.

இனி ஒரு ஆட்டமும் சில கணக்குகளும் குறிப்போம். ஆட்டத்தை முன் விளக்கிய பிரகாரம் ஆடிப் பார்க்கவும்.

1. உ 2 — உ 4 / உ 7 — உ 5

2. எ 1 — ஊ 3 / ஈ 7 — ஈ 6

3. ஈ 2 — ஈ 4 / இ 8 — எ 4

4. ஈ 4 × உ 5 / எ 4 × ஊ 3

5. ஈ 1 × ஊ 3. / ஈ 6 × உ 5.

6. ஊ 1 — இ 4 / எ 8 — ஊ 6

7. ஊ 3 — ஆ 3 / ஈ 8 — உ 7

8. ஆ 1 — இ 3 / இ 7 — இ 6

9. இ 1 — எ 5 / ஆ 7 — ஆ 5

10. இ 3 × ஆ 5 / இ 6 × ஆ 5

11. இ 4 × ஆ 5 + / ஆ 8 — ஈ 7

ஈ 1 — ஈ 8 ‡

12. 0—0—0 / அ 8 — ஈ 8

13. ஈ 1 × ஈ 7 / ஈ 8 × ஈ 7

14. எ 1 — ஈ 1 / உ 7 — உ 6

15. ஆ 5 × ஈ 7 + / ஊ 6 × ஈ 7

16. ஆ 3 — ஆ 8 / ஈ 7 × ஆ 8

கணக்குகள் 1. சிவப்பு: அரசன் உ 2; யானைகள் எ 7; குதிரைகள் உ 6ம் எ 6. கறுப்பு அரசன் ஊ 6.

2. சிவப்பு: அரசன் ஊ 8; யானைகள் ஊ 4ம் எ 6; குதிரைகள் எ 4ம் எ 6. கறுப்பு அரசன் எ 5.

3. சிவப்பு: அரசன் ஆ 3. யானைகள் ஊ 5ம் எ 7; குதிரைகள் ஊ 6 எ 6. கறுப்பு அரசன் எ 6.

இம்மூன்றிலும் கறுப்பு அரசனை மூன்றே ஆட்டத்தில் கட்டவும். இவைகளுக்கு விடை பின்னர் பிரசுரஞ் செய்யப்படும்.

ரா. செ. சுப்ரமண்ய ஐயர், எம்.ஏ. எல்.டி.

ஓர் சிறு வேடிக்கைக் கதை.

இராவண சம்மாரம் செய்த ஸ்ரீராமபிரான் இலங்காபுரியில் வானரப் படையுடன் வீற்றிருக்குங் காலத்து ஓர் நாள் ஒரு சிறு குரங்கினம் தனக்கு கப்பட்ட மொச்சைக் கொட்டையின் தோலைப் பிரிப்பதற்காகப் பிதுக்கிற்று. உள்ளிருக்கும் பருப்பு அமுக்கின வேகத்தில் உயர எழும்பிக் கீழே விழுந்தது. அப்பருப்பு மேலே போனபொழுது அதைப் பிடிக்க அக்குரங்கு தாவிற்று. இதைப் பக்கத்திலிருந்த ஒரு குரங்கு கண்டு அச்சிறு குரங்கு மொச்சைக் கொட்டையைப் பிடிக்கத் தாவின தறியாமல் அது கர்வங் கொண்டு தாவினதென்று நினைத்து அதற்குமேல் தான் தாவ நினைத்து அதற்குமேல் தாவிற்று. இதைக் கண்ட மற்றொரு குரங்கு அதற்குமேல் தாவிற்று. இவ்விதமாக வானரப் படை முழுவதும் எதாவது மற்றொரு மூலபலம் எங்கிருந்தாவது புறப்பட்டதோ வென்றெண்ணி கீக் கீச் சென்ற சப்தத்துடன் உயர உயரத் தாவித் தாவி விழுந்தன. வானரப் படை வீரர்களாகிய சுக்ரீவன், அநுமான், அங்கதன், ஜாம்பவான் முதலியோர்கள் எதிரி வந்துற்றனரென் றெண்ணித் தங்கள் தங்கள் ஆயுதங்களுடன் உங்கார சப்தம் செய்து தங்கள் விசுவ ரூபத்துடன், பிரானது ஆஞ்ஞைக்குக் காத்திருந்தனர். இளைய பெருமாளும் தனது வில்லை வளைத்து நாணேற்றி நாணித்தொனி செய்து முன்னவனது ஆக்கினையை யுன்னி அவரைப் பார்த்தார்.

பரந்தாமன் இவ்வளவு ஆர்ப்பாட்டங்களையும் கண்டு அவற்றின் காரணங்களைத் தமது ஞான திருஷ்டியா லறிந்து புன்னகை புரிந்து முன்பு சித்திர கூட பர்வதத்தி லவர்க ளிருக்குங்கால், இவர்களை அயோத்

எதி... த பரதாழ்வார் ராமண்ணுவைக் கொல்லத்தான் வருகிறா...ண்ணி, அவரைக் கொல்வதற்காக அண்ணுவினது முகத்தைப் பார்த்தபொழுது புன்சிரிப்புடன் தாமரையிதழ் போன்ற அதரம் மலர, "பொறு, பொறு, லட்சமணு, அறிவாய்," என்று சொன்ன பிரகாரம் தம்பியைக் கையமர்த்தி ஆஞ்சநேயரை விளித்துக் காரணம் விளவ, அவர் ஜாம்பவான் தாவினதாகச் சொல்லி அவரை அழைத்துவர, அவர் அங்கதனைச் சுட்ட, அங்கதன் மற்றொருன்றைக் காண்பிக்க, இவ்விதமாகக் கடைசியில் மொச்சைக்கொட்டை பிதுக்கிய குரங்கு வந்தது. அதை ஸ்ரீராமர் பார்த்துத் தாவினதின் காரணத்தை விளவ அது மிகு பயபக்தியுடன் "நான் மொச்சைக்கொட்டை தின்றபொழுது ஒரு மொச்சைக் கொட்டை பிதுக்கும்பொழுது துள்ளினதைப் பிடிக்கத் தாவினேனே யொழிய வேறொன்றும் எனக்குத் தெரியாது. தாங்க ளிருக்கும்பொழுது எதிரி இங்கு வருவனே!" என்றது. இதைக் கேட்ட யாவரும் நகைத்து, காரணம் தெரியாது தாம் செய்த ஆர்ப்பாட்டங்களுக்கு வெட்கி வாளா விருந்தனர்.

இக்கதை வேடிக்கைக்காக உண்டான தென்று தோன்றும். ஆழ்ந்து கவனிப்பின் அதி லடங்கிய நீதி கண்கு புலப்படும். அற்ப காரியங்களுக்காகப் பெரிய படாடோபம் செய்கிறவர்களைப் பரிகசிப்ப தன்றியும் உன்னத நிலையி லிருப்பவர்கள் தாசு போன்று யாவற்றையும் சமமென நினைத்து, மனநிலை தவறவிடாமல் சமயோசிதம்போல் நடத்தலும், இன்னும், யுத்த காலத்தில் தளகர்த்தர்கள் நடந்துகொள்ளும் விதமும் தெற்றெனப் புலப்படுகின்றன. யுத்த காலத்தில் எதிரி செய்யும் மாயா ஜாலங்களுக்கு மயங்காமல், சிறிய காரியங்களில் பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்யாமல் மனதைத் தளரவிடாது நிறுத்திப் போர்புரியாத பக்ஷத்தில் அவர்கள் எவ்வளவு கெடுதலுக் காளாகிறார்கள். இவ்வளவு பெரிய நீதி இச் சிறு கதையில் அடங்கியிருத்தலால், அற்பமெனக் கருதாமல் ஒவ்வொன்றையும் ஆழ்ந்து கவனித்துப் பல நீதிகளும் அறிந்து கொள்வோமாக.

எஸ். சண்முகசுந்தர நாயனார்.

ர சி கை.

ஓர் நவீன நாடகம்.

(400-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 3—காட்சி 3.

(அரசரது அந்தரங்க ஆஸ்தான மண்டபம். அரசர் தன் புத்திரியின் வரவை எதிர்ப்பார்த்துத் தனியாக வீற்றிருக்கின்றார். அவர் கட்டளைப் வருகின்றாள்.)

ரசிகை:—(தனக்குள்) ஏது! இன்று என்றைக்கும் இல்லாத புதியிருக்கின்றது! என்னை என் அந்தரங்க ஆஸ்தான மண்டபத்திற்குத் தந்தையவர்கள் அழைத்திருக்கிறார்கள்? நான் இருக்கும் புதிய நிலைமையைப் பற்றி வசிகரி அவர்களுக்குத் தெரிவித்துவிட்டாளோ? என்னிடம் முன்னதாக அறிவியாமல் அவள் ஒன்றுஞ் சொல்ல மாட்டாளே. இப்பொழுது அவளைக் கேட்டு அவள் ஆலோசனையையும் அறிந்து போவோமென்றாலும் அதற்கு நாழிகையில்லை. உடனே வரவேண்டுமென்று கட்டளையனுப்பியிருக்கிறார்கள். தந்தையவர்களைக் கண்டன்றி எனக்கு விஷயம் தெரியு வேறு மார்க்கமில்லை. ஆனால் வசிகரியின் முன்பு நான் ஒரு வீபத்தியக்காரியைப்போல் மயங்கி மயங்கி, வெருண்டவளாக, புதுமையாக, பேசியதுபோல் தந்தையவர்கள் முன்பும் நடந்துகொள்ளாமல் சகல கலாவல்லீ! நீதான் துணை நிற்கவேண்டும்.

(ஆஸ்தான மண்டபத்தினுள் நுழைந்து பிதாவை நமஸ்கரித் தெழுந்து தலை தாழ்த்தி நிற்கின்றாள். அரசர் அவளை அன்போடு உச்சியில் முத்தமிட்டு, தான் இருந்த ஆசனத்தில் அருகே வீற்றிருக்கச் செய்கிறார்.)

அரசர்:—(தன் புத்திரிக்கு எதிர் முகமாகத் திரும்பி, முன் பக்கத்தில் சற்றுக் குலைந்திருந்த அவள் கூந்தலைத் தன் வலக்கரத்தால் ஒழுங்காக்கிக் கொண்டே,) கண்மணீ! ரசிகே! என் இப்படி ஒருவாறு முகம் வாடி வந்திருக்கிறாய். நான் உன்னுடு கலந்து பேச உத்தேசித்திருக்கும் விஷயம் இன்ன தென்று அறிந்திருக்கிறாயோ?

ரசிகை:—இல்லை. எனக்கெப்படித் தெரியும்? அழைத்து வரும்படி தாங்கள் கட்டளையிட்டதாக இப்பொழுதுதான் ராதை சொன்னாள், உடனே வந்தேன்.

அரசர்:—வசிகரி எங்கே?

ரசிகை:—வசிகரியா? —எனக்குத் தெரியாது—இல்லை—கந்தவனத்தில்தானிருந்தாள்—கிளிகளோடு விளையாடிக்கொண்டிருப்பாள்.

அரசர்:—(தனக்குள்) ஐயோ! இந்த விளையாட்டுக் குழந்தையையா தேச காலத்திற் கென்று அர்ப்பணஞ் செய்வது! என்ன சங்கடமான நிலைமை! (வெளிப்படையாய்) வசிகரிக்கு இன்னும் விளையாட்டுத் தன்மை தான் அதிகமாயிருக்கிற தல்லவா? தனக்கு மணம் நிகழ்ந்தால் தன் கணவராடு ராஜ்ய நிர்வாக பாரங்களை வகிக்க வேண்டுமே என்ற ஒரு யோசனை கூட அவளுக்குத் தோன்றவ தில்லை யல்லவா?

ரசிகை:—இல்லை. அவள் ராஜ்ய நிர்வாக விஷயத்தில் அதிக... கொண்டிருக்கிறாள், நமது நாட்டைப் பற்றியும், அந்த யா...

நாடாகக் கொண்டிருவதைப் பற்றியும் அவளிடம் பேசினால் பேருவகையினால் அவள் முகம் பிரகாசிக்கிறது. தான் எவ்வளவு சிரமங்களுக்கு உட்பட்டாயினும் நமது நாட்டின் மகோன்னத பதவிக்கு உழைப்பதுதான் தன் முக்கிய கோரிக்கை என்கிறாள்.

அரசர் :—அப்படியா! அது மிகவும் நன்றே. நமது ராஜ்யத்தின் க்ஷேமத்தைப்பற்றிய ஒரு விஷயத்தைப் பற்றி நமது அந்தரங்க மந்திரிகள் கூறும் ஆலோசனையை அவளுக்கு அறிவிக்கும்படி உனக்குச் சொல்லுவதற்கே உன்னை அழைத்தேன்.

ரசிகை:—யாருக்கு? வசிகரிக்கா?

அரசர்:—ஆம் வசிகரிக்குத்தான்.

ரசிகை:—என்ன விஷயத்தைக் கூற?

அரசர்:—வசிகரிக்கு என்ன விஷயத்தைத் தெரிவிக்க நமது அந்தரங்க மந்திரிகள் ஆலோசித்திருக்கலாமென்று உனக்குத் தோன்றுகிறது? சொல் பார்க்கலாம். (தொடரும்)

(இந் நாடகக் கதையை மூதற் பருவத்திலேயே முடித்துவிட ஆசையிருந்தும், பல கல்வியாளர் அன்புகூர்ந்து அனுப்பிய விஷயங்களை அப்போதைக்கப்போது பிரசுரிக்க வேண்டியிருந்தமையின் ரசிகைக்கு ஒவ்வொரு மழையிலும் போகிய இடமில்லாமையால் இம்முதற் பருவத்திலேயே கதையை முடிக்கக்கூடவில்லை. அடுத்த பருவத்தில் கூடிய விரைவில் முடிப்போமாக. ரசிகைக்கும் அரசர்க்கும் நிகழ் சம்பாஷணை முடிந்தவுடன், ரசிகைக்கும் வசிகரிக்கும் நிகழ் உருக்கமான சம்பாஷணையும், ரசிகை கந்தவனத்தில் கண்ணனுடன் ரகசியமாகப் பேசுவதைத் தூர இருந்து வசிகரி பார்த்துவிடுவதும், அதனால் அவள் சிந்தனையும், பின்பு வசிகரி, வீரமாபுரத்திலிருந்து தூது வந்திருப்பதைப் பற்றிக் கடுங் கோபமுற்றுத் தன் தந்தைக்கும் தெரியாமல், சாமவல்லபர் என்ற தூதரை அர்த்தபுரத்திற்கு அழைத்து வந்து அதி ஆவேசத்துடன் பேசி அவரையும் அவரது வீரமாபுர அரசரையும் மிக ஏளனஞ் செய்தனுப்புவதும், மற்றும் பல உருக்கமான, ரசமான, ஆச்சரியமான விஷயங்களுக்கும், கடைசியில் கதையின் மங்களமான முடிவும் அடுத்த பருவத்தில் வர விருக்கின்றன.

பத்திராதிபர்.

மதிப்புரை.

கற்பகம்.—இஃது புதுச்சேரியில் நடைபெறும், வருடத்திற்கு ஒரு ரூபாயாகிய குறைந்த சந்தா அமைந்துள்ள ஓர் இனிய தமிழ் மாதப்பத்திரிகை. இதில் நீதி வாக்கிய விளக்கங்களும் நல்ல வியாசங்களும், கதைகளும், கவிதைகளும் வெளி வருகின்றன. ப-ர்.

கதாவருஷிணி.

முதற் பருவத்திற்கு உள்ளுறை.

(பத்திரிகையின் புறப்பக்கங்களுக்கு, அவைகளின் முன்னே யுள்ள அகப் பக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பு. ப. 40 என்றால் 40ம் பக்கத்திற்குப் பக்கத்திலுள்ள புறப்பக்கங்கள் என்று கொள்ள வேண்டும்)

	பக்கம்.
காப்பு ...	1
முகவுரை ...	2
என் மணவினை, ஓர் சிறு கதை ...	5, 44
நாட்டுப் பெண் கும்மி ...	12, 41, 378
சரித்திரத் துவக்கம் ...	17, 60, 89
சுகவழி ...	19, 91
ஸ்ரீமத் மத்வாசாரிய சுவாமிகள் சரிதம் ...	25
தமிழ்ப் பெண்கள் தகைமை. ஓர் புதிய பாட்டு	28
ரசிகை. ஓர் நவீன நாடகம்	30, 48, 94, 124, 163, 227, 273, 358, 397, 476
கண்ணம்மாள் கதை	36, 64, 84, 140, 175, 210, 318, 456
விதைகளைகள் விடைகள்	பு.ப 40, பு.ப 80, பு.ப 120, 160, பு.ப 200, பு.ப 240, பு.ப 280, பு.ப. 320, பு.ப 360, பு.ப 400
காயம் பிணி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை	56, 99, 146, 185, 220, 307, 334, 448
அகந்தை. ஓர் குழந்தையின் பாட்டு	67, 116
பௌதிக சாஸ்திர பாடங்கள்	70, 111, 262, 281, 325, 364, 401
பாம்பின் சாபம்	78, 107, 137, 277
சதுரங்கம்	76, 117, 158, 356, 471
மதிப்புரை	80, 160, 478
சிறு வேடிக்கைக் கதைகள்	பு.ப 80, 199, பு.ப 240, 360, 475
வருஷிணி வாழ்த்து	81
அருளாளர் இருப்பிடம். ஓர் கனவு ...	82
வர்ணனை	89
மகளிர் வீரம் ...	104
குழந்தை கலியாணம் ஓர் குடும்ப சம்பாஷணை	121, 204, 241
கடலும் கதிர்மதியும். ஓர் புதிய வர்ணனை	131
பன்னாட்டு மனிதர்கள்... ...	134
வீரதன வதமும் ராகவன் தியம் ...	150
நமது சக்கரவர்த்தினியின் குடும்ப நமை ...	

வரும்போர் முடிவு ... 162
புது மாதிரிப் பாட்டுகள். காதல் ... 184
ஐரோப்பாக் கண்ட சரித்திரம் 190, 265, 305, 337, 376, 443
வேளிற் கள்வன். ஓர் புதிய பாட்டு
நாகப்பட்டணம் உருக்குப் பெட்டி. ஓர்சிறு கதை 224, 257, 309
சேதா கல்யாணம் 225, 269, 296, 333
பத்திரிகை 235
பல திரட்டு ... 237, 277
ஆங்கிலச் செங்கோல் ... 249
சற்புத்திரன் சஞ்சலம். ஓர் சோகக் கதை 251, 286, 327, 346, 404
சந்திர லோகம். ஓர் மனோரத யாத்திரை 255
அரபிக் கலசம். நமது வெகுமதிக் கதை, 266, 429
பின்னுகள் ... 271
பாழ்ங் கிணறு ... 293
விருந்தோம்பல் ... 298
தேச தேசம் ... 304
பெண் கல்வி ... 310
ரோம் சகாதாரம் ... 313
நலமிக வுடைய சில பழங் கதைகள் ... 317
வைத்தியக் குறிப்புகள் ... பு. ப. 320
குரு நாதன் ... 321
லக்ஷ்மி தேவி ... 339
தமிழ் ... 342
பிரான்சில் எகாதிபத்திய வளர்ச்சி 346, 392, 467
சகாதாரம். ஓர் விஞ்ஞான அட்சரப் பொருத்த வியாசம் 349
சந்தேக விஞ
சகாதாரம் ... 361
வீட்டுத் தணக்கு ... 374
இங்லேட்டுப் பிராஹ்மணன் 381
கதாநாயகம் சந்தேக விஞவிற்கு விடை ... 384
சுலோசனை ... 385
நாகரீகம் ... 393, 422
நம்பலாகாது. ஓர் புதிய பாட்டு ... 425
மாப்பின்னைப் பஞ்சம் ... 426
ராங்கனை ... 45
ர் ... 45

161291
ECO CC0.